புதிய புத்தகம் பேசுது

தமிழ் நூல் தொகுப்பு வரலாறு

சங்ககாலம் முதல் சமகாலம் வரை



வீ. அரசு | பெருமாள்முருகன் | பொ. வேல்சாமி | கி. நாச்சிமுத்து| ந.இரவீந்திரன் | எஸ். பாலசந்திரன்
அ.அண்ணாமலை | ஸ்டாலின் ராஜாங்கம் | மு. சுதந்திரமுத்து | செ. ரவீந்திரன்| முருகேச பாண்டியன்
பழ. அதியமான் | மே. து. ராசுகுமார்| இரா. சீனிவாசன் | வெ. ராஜேஷ் | சு. சுஜா | வெ. பிரகாஷ் | கல்பனா சேக்கிழார்
மு. வளர்மதி | த. செந்தில்குமார்| அ. ஜெகநாதன் | தி. இராஜரெத்தினம் | மு.நஜ்மா | ஜ. சிவக்குமார் | ஊ. பிரபாகரன்
ம. மணிமாறன் | சி. இளங்கோ | கு. சுதாகர்| கழனியூரன் | இரா. வெங்கடேசன் | மு. காமாட்சி | கு. கலைவாணன்

தமிழ் நூல் தொகுப்பு

வரலாறு

சங்ககாலம் முதல் சமகாலம் வரை

தொகுப்பு:
முத்தையா வெள்ளையன், பா. இளமாறன், ஜ. சிவகுமார், கோ. கணேஷ்.

புதிய
புத்தகம் பேசுது

THAMIZH NOOL THOGUPPU VARALARU
SANGAKALAM MUTHAL SAMAKALAM VARAI
Published : 2010

Published by

PUTHIYA PUTHAKAM PUSUTHU
im print of Bharathi Puthakalayam
421, Anna Salai,
Teynampet, Chennai - 600 018
Email: thamizhbooks@gmail.com
www.thamizhbooks.com

தமிழ் நூல் தொகுப்பு வரலாறு

சங்ககாலம் முதல் சமகாலம் வரை
தொகுப்பு: முத்தையா வெள்ளையன், பா. இளமாறன், ஜ. சிவகுமார், கோ. கணேஷ்,
பதிப்பு: 2010
வெளியீடு
புதிய புத்தகம் பேசுது

421, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018
தொலைபேசி : 04424332424, 24339024

வெளியிடுபவர்:
க. நாகராஜன்
ஆசிரியர் குழு:

இரா. நடராசன் (ஆசிரியர்:)
ச. தமிழ்ச்செல்வன், கமலாலயன், அ. வெண்ணிலா, இரா.தெ. முத்து,
ஆதவன் தீட்சண்யா, வெ. ராஜேஷ், எஸ்.வி. வேணுகோபாலன், ரமேஷ் பாபு, கீரனூர் ஜாகிர்ராஜா
நிர்வாகம்
சிராஜுதீன், உத்திரகுமார்
அட்டை வடிவமைப்பு:
ஓவியர் மணிவண்ணன்
வடிவமைப்பு:
ஞா. கென்னடி

விற்பனை நிலையம்
7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018 தொலைபேசி: 24332924,

பாரதி புத்தகாலயம் கிளைகள்

திருவல்லிக்கேணி: 48, தேரடி தெரு **திருவான்மியூர்:** 1, 100அடி சாலை, தரமணி | **பெரம்பூர்:** 52, கூக்ஸ் ரோடு
ஈரோடு: 39, ஸ்டேட் பாங்க் சாலை | **கோவை:** 566, 2 வது தெரு விரிவு, காந்திபுரம் **திண்டுக்கல்:** 3சி18, எல்.பி.ஜி. காம்பவுண்ட்
நாகை: 1, ஆரியபத்திரபிள்ளை தெரு | **திருப்பூர்:** 447, அவினாசி சாலை | **திருவாரூர்:** 35, நேதாஜி சாலை
சேலம்: 1, திருநாவுக்கரசர் தெரு, அத்வைத | ஆஸ்ரமம் சாலை | **மயிலாடுதுறை:** 141, பட்டமங்கலத் தெரு
அருப்புக்கோட்டை: 31, அகமுடையார் மகால் **புதுக்கோட்டை:** வடக்கு ராஜா வீதி | **மதுரை:** 37A, பெரியார் பேருந்து நிலையம்
மதுரை: சர்வோதயா மெயின்ரோடு, மகபூப்பாளையம் | **குன்னூர்:** N.K.N வணிகவளாகம் பெட்போர்ட்
செங்கற்பட்டு: 1 டி., ஜி.எஸ்.டி சாலை | **விழுப்புரம்:** 26/1, பவானி தெரு | **திருநெல்வேலி:** 25A, ராஜேந்திரநகர் முதல் தெரு,
விருதுநகர்: 131, கச்சேரி சாலை | **கும்பகோணம்:** 352, பச்சையப்பன் தெரு |**வேலூர்:** S.P. Plaza 264, பேஸ் II , சத்துவாச்சாரி
நெய்வேலி: பேருந்து நிலையம் அருகில், சிஐடியு அலுவலகம் | **தஞ்சாவூர்:** காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை
(LIC கோட்ட அலுவலகம் எதிரில்) தஞ்சாவூர் - 613001. | **தேனி:** 12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு
கடலூர்: பஜார், ஜீவா மார்க்கெட், பழைய அண்ணா பாலம்

ரூ. 195/-
அச்சு: மணி ஆப்செட், சென்னை - 5

சமர்ப்பணம்

தொகுப்பு மரபை உருவாக்கிய முன்னோடிகளுக்கு

உள்ளே...

மரபிலக்கியத் தொகுப்புகள்

இருபதாம் நூற்றாண்டுத் தொகுப்புகள்

தனிநபர் தொகுப்புகள்

இயக்கம் சார்ந்த தொகுப்புகள்

நாட்டார் வழக்காற்றுத் தொகுப்புகள்

தொகுப்பு மரபிலிருந்து சமூக வரலாற்றைத் தேடி...

புதிய புத்தகம் பேசுது இதழ் ஆண்டுதோறும் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டு வருகிறது. இந்த வகையான மலர்கள் தமிழியலையும் தமிழ்ச் சமூகத்தையும் புரிந்துகொள்வதற்கான / மீள்வாசிப்பு செய்வதற்கான ஆவணங்களாகத் திகழ்கின்றன. கடந்த ஆண்டு 'தமிழ்ப் பதிப்புலகம் (1800-2009)' எனும் மலர் வெளிவந்தது. இம்மலர் கல்வியாளர்கள் மற்றும் தமிழ்ச் சமூக வரலாற்றில் அக்கறை கொண்டவர்களிடையே பரவலாக வாசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அந்த வரிசையில் இன்னொரு சமகால வரலாற்று ஆவணமாக 'தமிழ் நூல் தொகுப்பு வரலாறு' (சங்ககாலம் முதல் சமகாலம் வரை) என்னும் இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் தமிழ்நூல் தொகுப்புப் பாரம்பரியம் குறித்து பன்முகப்பட்ட நிலையில் விவாதிக்கிறது.

தமிழ் இலக்கியங்களுள் தொன்மையானதும் தமிழ்ச் சமூக வரலாற்றைக் கட்டமைப்பதில் முக்கியப் பங்கு வகிப்பதுமான சங்க இலக்கியங்களே ஒரு தொகுப்பு நூல்தான். 'சங்க இலக்கியம்' எனும் பெயர் பரவலாக அறியப்படுவதற்கு முன்னர் 'பாட்டும் தொகையும்' 'பதினெண்மேற்கணக்கு நூல்கள்' எனும் பெயர்களே வழங்கப்பட்டன. இவை தொகுக்கப்பட்டவை எனும் தன்மையை உணர்த்தும் வகையிலான பெயர்கள். தமிழில் மட்டுமல்லாமல் உலகின் பல மொழிகளிலும் - குறிப்பாக தொன்மையான மொழிகளில் - இவ்வாறான தொகுப்புப் பாரம்பரியம் செம்மொழிகளுக்கிடையேயான பொதுமைக் கூறுகளுள் தொகுப்பு மரபும் முக்கியமானது. இம்மரபு தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் எல்லாக் கட்டங்களிலும் இருந்துள்ளது; இன்றும் தொடர்கிறது.

இலக்கியம் என்பது மொழியும் உணர்வும் மட்டுமேயல்ல. அது ஒரு குறிப்பிட்ட காலகட்ட மக்களின் உளவியல் மற்றும் வாழ்வியலின் புனைவு மயப்படுத்தப்பட்ட / பொதுமைப் படுத்தப்பட்ட பதிவுகள். இப்பதிவுகள் தமிழ்ச் சூழலில் தொகுப்பு மரபினூடாகவே அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கையளிக்கப்பட்டன. எனவேதான் பண்டைக் காலத்திலேயே ஆய்வுப் பாரம்பரியம் இருந்துள்ளது எனக் குறிப்பிடும் ஏ.வி. சுப்பிரமணியன் அவர்கள் அதனைத் தொகுப்பு மரபுகளிலிருந்தே அடையாளம் காண்கிறார். தொகுப்பு மரபு, ஒரு காலகட்டத்தின் பதிவுகளை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கடத்துகிறது என்பது எந்த அளவிற்கு உண்மையானதோ, அதே அளவிற்கு அந்தக் காலகட்டத்தின் அனைத்துப் பதிவுகளையும் கடத்துவதில்லை என்பதும் உண்மை. தொகுப்பில் 'தெரிவு' நிகழும்போதே அதன் உடன்விளைவாக விலக்கலும் நிகழ்கிறது. இதற்கு இலக்கிய நயமும் உணர்வும் மட்டும் காரணமில்லை. தொகுப்போரும் தொகுப்பிப்போரும் எவ்விதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனரோ அதற்கு மாற்றான பதிவுகள் விலக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம். இத்தகையப் புரிதல்களோடே தொகுப்பு மரபு குறித்தான விவாதங்களை முன்வைக்கும் கட்டுரைகள் அடங்கிய நூலொன்றை உருவாக்கும் முயற்சியைத் தொடங்கினோம்.

சங்ககாலம் தொடங்கி சமகாலம் வரையிலான தொகுப்பு மரபுகள் குறித்த முழுமையான தரவுகளையும் விவாதங்களையும் உள்ளடக்கிய நூலாக வெளிவரவேண்டும் எனத் திட்டமிட்டோம். மரபிலக்கியத் தொகுப்புகள், இருபதாம் நூற்றாண்டுத் தொகுப்புகள், இயக்கம் சார்ந்த தொகுப்புகள், நாட்டார் வழக்காற்றியல் தொகுப்புகள் ஆகிய வகைப்பாடுகளின் கீழ் நாற்பது தலைப்புகளைத் தேர்வு செய்தோம். ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் இலக்கணத் தொகுப்புகள், இசைநூல் தொகுப்புகள், ஈழத் தொகுப்புகள், மானுடவியல் தொகுப்புகள், விளிம்புநிலைத் தொகுப்புகள், புதுமைப்பித்தன் மற்றும் குபரா. தொகுப்புகள் உள்ளிட்ட பல தலைப்புகளில் கட்டுரைகளைப் பெறமுடியவில்லை. இந்நூல் தொகுப்பு மரபு குறித்த 'முழுமையான' நூல் அல்ல என்று உணர்கிறோம். அதேசமயம் சங்ககாலம் தொடங்கி சமகாலம் வரையிலான தொகுப்பு மரபை ஆவணப்படுத்துவதில் முன்கை எடுத்திருக்கிறோம். இம்முயற்சியின் நிறை குறைகள் குறித்து கல்வியாளர்களும் அறிஞர்களும் வாசகர்களும் விவாதித்து எங்களைத் தொடர்ந்து இயங்கச் செய்வார்கள் என்று நம்புகிறோம். தமிழ் இலக்கியத் தொகுப்பு மரபு குறித்து தொடர்ச்சியான விவாதங்களையும் முழுமையான ஆவணத்தையும் உருவாக்கும் முயற்சியில் இந்நூல் ஓர் ஆரம்பப்புள்ளி.

■



மரபிலக்கியத் தொகுப்புகள்



சங்க இலக்கியப் புரிதல்: தொகுப்புக் குறிப்புகள்

சு. சுஜா

இனக்குழுச் சமூகம் வேட்டைத் தொழிலை விடுத்து `உற்பத்தி' என்ற மையத்தை அடிப்படையாகக்கொண்டு உழவினைச் செயல்படுத்திவந்த காலத்தில் தொடங்கி எழுதப்பட்ட சங்கப் பாடல்கள், இயற்கைக்கும் ஆண்,பெண் என்ற இருபாலினத்திற்கும் உள்ள உறவு குறித்த பதிவுகளாக அமைந்துள்ளன. சமூகப் பண்பாட்டு எச்சங்களை எழுத்துப் பூர்வமாகக் காட்டும் ஆவணங்கள், அவை இலக்கியமாயினும் இலக்கணமாயினும் அதன் படைப்பு நிலையில் தொடங்கிப் பல்வேறு பரிமாண மற்றும் பரிணாம வளர்ச்சி பெற்று வேறுபட்ட தளங்களில் பயணிக்கின்றன. மனித சமூகத்தின் ஒவ்வொரு அசைவியக்கங்களும் அப்பரிமாண வளர்ச்சியை மாற்றுத் தளத்திற்குக் கொண்டு செல்லும் காரணிகளாக அமைகின்றன. அவ்வியக்கம் அச்சமூகத்தின் கலை இலக்கியப் படைப்புகளையும் அச்சமூகம் என்னும் மூலத்திலிருந்தே உருவாக்கிக்கொள்கின்றது. இந்த விளக்கம் சங்க இலக்கியம் மற்றும் அதன் உள்ளீட்டு வளர்ச்சிப்படிநிலைகளை அடிப்படை யாகக் கொண்டு உருவான வகைமைகளுக்கும், கூறுகளுக்கும் சாலப் பொருந்தும்.

தனிப்பட்டவரின் உணர்வு வெளிப்பாடாக விளங்கிய பாடல்கள் ஒரு தொகுப்பாகத் தோற்றம் பெற்றதையும் மேற்குறிப்பிட்டது போன்ற ஒரு பரிமாண வளர்ச்சியாகத்தான் கொள்ளமுடியும். தொகைகளின் காலம் போன்றே தொகுக்கப்பட்ட காலம் குறித்தும் மாற்றுக்கருத்துகள் உள்ளன. எனினும்

இத்தொகைகள் உரையாசிரியர்களின் காலத்திற்கு முன்போ அல்லது உரைப்பாரம்பரியம் தோற்றம் பெற்ற காலத்திலோ (கி.பி.8 முதல்) தொகுக்கப் பட்டிருக்க வேண்டும்.

இத்தொகைகள் இக்குறிப்பிட்ட காலத்தில் தொகுக்கப்படுவதற்கான தேவை ஏன் ஏற்பட்டது என்னும் கேள்வி இங்கு அவசியப்படுகிறது. களப்பிரர் ஆட்சிக்குப்பிறகு தமிழகத்தின் சில பகுதிகள் (வடபெண்ணை தென்பெண்ணை ஆற்றிற்கு இடைப்பட்ட காஞ்சிபுரம், மாமல்லபுரம், மண்டகப்பட்டு முதலான பகுதிகள்) பல்லவர்களின் ஆட்சியின் கீழ் வருகின்றன. தெற்கே (கொற்கை, மதுரை, தஞ்சாவூர் உள்ளிட்ட பகுதிகள்) பாண்டியர் ஆட்சி அமைகிறது. கலை, இலக்கியங் களின் மீது ஆட்சியாளர்களுக்கு நாட்டம் இருந்தமையையும் இலக்கியப் படைப்பாளர்கள் அரசர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தமையையும் புறச்சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. சமணத்தின் `அரசு வழிச் செல்வாக்கு' மகேந்திரவர்மப் பல்லவனோடு நின்றுவிடுகிறது. இந்தக் காலகட்டத்தில் சைவமும், வைணவமும் தலை தூக்கத் தொடங்கு கின்றன. கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கடந்து கிரந்த தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இப்படியான அரசியல் பின்னணியே தொகுப்புகளின் தோற்றத்திற்குத் தலைமைக் காரணமாக இருந்திருக்க முடியும்.


மேலும் `தொகுப்பு' என்னும் செயல் மனித இயல்பூக்கத்தின் காரணமாக[1] நிகழ்கிறது என்ற கருத்து சொல்லப்படுகிறது. அன்றியும், மறைந்து போன தமது பழமையை, வளமையை மீட்டெடுக்கும் எண்ணமும் தனக்கான அடையாளத்தைப் பிறருக்கு, அறியாதவர்களுக்குப் பிரகடனப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவும் தொகுப்பு முயற்சிகளைக் கொள்ள முடியும். கலைப்படைப்பு நிலையில் ஒரு இனம் தனக்கிருக்கும் அறுதிப்பெரும்பான்மையை நிறுவும் முயற்சியாகவும் தொகுப்புப் பணியை எண்ணுவதற்கு வாய்ப்புகள் உண்டு. இறையனார் களவியல் உரையில் நூல் எழுந்தமைக்கான காரணம் குறிப்பிடப்படும்போது `பன்னீராண்டு வற்கடத்தின் பின்னர் பொருளிலக்கணம் கிடைக்காமல் அரசன் கவன்றான்' என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. இக்களவியல் தோற்றத்திற்கான தொன்மத்தை மேற்குறிப்பிட்ட காரணங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சங்க இலக்கியங்கள் தோன்றிய காலமும் நடைபெற்றியலும் காலமும் வேறுவேறாகையால் கால இடைவெளியின் காரணமாக ஏற்பட்டுள்ள இடைவெளிகளைச் சரிசெய்யும் பொருட்டும், தனித்தனியே சிதறிக்கிடக்கும் பாடல்களை ஒரு சேரத் தொகுக்கவேண்டும் என்ற எண்ணமும், இலக்கணநிலைக்குட்பட்ட நூலாகச் சங்க இலக்கியப் பாடல்களைக் கட்டமைக்க வேண்டும் என்ற எண்ணமும், புலவர், புரவலர்கள் தங்கள் புலமை, புரவன்மையைப் பிறர் அறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் முதலான காரணிகளும் தொகுப்புகளின் தோற்றத்திற்கு ஊக்கிகளாகச் செயல்பட்டிருக்கலாம்.

தொகைகள், அகம் (ஐந்து), புறம் (இரண்டு), அகப்புறம் (ஒன்று) என்று பாடுபொருள் அடிப்படையில் பாகுபாடு செய்யப்படுகின்றன. முதலில் தொகுக்கப்பட்ட நூலாகக் குறுந்தொகை குறிப்பிடப்படுகிறது. ஆசிரியப்பாக்களாலியன்ற தனிப்பாடல்கள் அடியளவால் மூன்றாகப் பகுக்கப் பட்டு குறைந்த அடியளவு கொண்ட தொகைக்குக் குறுந்தொகை என்று பெயரிட்டுள்ளனர். (இவை ஐங்குறுநூறைக் காட்டிலும் சிற்றெல்லையில் ஓரடி அதிகம் பெற்றிருப்பினும் இப்பெயர் பெற்றமை இம்மூன்று (குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு) தொகுப்புகளும் ஒரு பாடல் தொகுப்பிலிருந்து இணைக்கப்பட்ட தொகுப்பிலிருந்து பிரித்து உருவாக்கப்பட்ட தொகுப்புகள் என்பதையும் ஐங்குறுநூறு இதனினின்று வேறுபட்டது என்பதையும் வலியுறுத்துவதாக உள்ளது.)

4-8 அடியெல்லை கொண்ட பாடல்களடங்கிய இத்தொகுப்பினுள் 9 அடிப் பாடல்களும் அமைந்துள்ளன (307, 391). இவை முறையே கடம்பனூர்ச்சாண்டிலியன், பொன்மணியார் பாடிய பாடல்களாகும். உ.வே.சா. தனது குறுந்

சு. சுஜா: சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் 'சங்க இலக்கிய தொகுப்பு வரலாறு' எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்தி வருகிறார். மொழி அறக்கட்டளையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செம்மொழி நூல்கள் பதிப்பு வரிசையில் பேரா. பா.ரா. சுப்பிரமணியன் அவர்களின் திட்ட உதவியாளராகப் பணியாற்றியுள்ளார்.



தொகை முகவுரையில் குறிப்பிடும்போது[2] 391ஆம் பாடல் சில பிரதிகளில் பாடபேதங்களுடன் 8அடிகளைக் கொண்டுள்ளதால் அதனை எட்டடிப்பாடலாகக் கொண்டு 307ஆம் பாடலைக் குறுந்தொகையுள் சேராதது என்று விலக்குவது 400 என்ற வரையறைக்குள் குறுந்தொகையைக் கொண்டுவருவதற்கு ஏதுவானது என்று குறிப்பிடுகிறார். ஒரு தொகைக்குள் இடம் பெற்றுள்ள பாடலை அத்தொகையில் சேராதது என்று நீக்குவதில் மாற்றுக்கருத்துக்கள் இருப்பினும் தொகைநூல்கள் பற்றிக் குறிப்பிடும் போது இறையனார் அகப்பொருள் `குறுந்தொகை நானூறும்' என்று குறிப்பிடுவதும் கடவுள் வாழ்த்தொழிந்த 401 குறுந்தொகைப் பாடல்களுள் இவ்வொன்பது அடிப் பாடல் இடைச்செருகலோ என்ற எண்ணம் தோன்ற இடமளிக்கிறது. ஆசிரியர் பெயர், ஆசிரியரின் ஊர் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு பாடலில் இடம் பெற்றிருக்கும் சொற்களை ஆய்வு செய்வது இந்த ஐயத்தினை விளக்க வாய்ப்பாக அமையும். அல்லது மர்ரே பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடப்படுவது போன்று இதுவரையில் கிடைக்கப்பெறாத நற்றிணையின் 234 ஆம் பாடலாகக் கருதவும் வாய்ப்பு உள்ளது.

மேலும் குறுந்தொகையுட்பட அகத்தொகை நூல்கள் அனைத்திலும் கூற்றினைத் தலைப்பு போலக் கொண்டுள்ளனர் (நற்றிணை பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் திணையைத் தலைப்பு போலக் கொடுத்துள்ளார்). பதிப்பாசிரியர்கள் இந்தக் கூற்றுக் குறிப்புகளைத் தருவதற்கு ஏதுவாக அமைந்த துறைக் குறிப்புகள் சிலபாடல்களுக்கு இரண்டாக/ மயக்கத்துடன் தரப்பட்டுள்ளன. இந்த மயக்கமுடைய அல்லது இருவகைப்பட்ட துறைக்குறிப்புகள் குறுந்தொகையில் மட்டுமல்லாது அகநானூறு, புறநானூறு நூல்களிலும் உள்ளன. துறைக்குறிப்புகள் பாடலின் எல்லையற்ற பொருண்மையைச் சுருக்கிவிடுகின்றன என்ற கருத்தை முன்வைக்கும் ஆய்வாளர்களுக்கிடையில் குறிப்பிட்ட பாடலை அந்தச் சூழலில் மட்டுமன்றி வேறுபட்ட சூழலிலும் வைத்துப்பார்க்க இடமுண்டு என்று கூறும் தொகுப்பாசிரியர் குறிப்பாகவே இதனைக் கொள்ளமுடிகிறது. தொல்காப்பிய விளக்கத்திற்கு உரைமேற்கோள் களாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சங்கப் பாடல்கள் சில பிற பதிப்புகளிலிருந்து வேறுபட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது[3].

நற்றிணையில் அதனைத் தொகுப்பித்த பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியின் பாடலும் (301 - குறிஞ்சி) இடம்பெற்றுள்ளமை தொகுப்பிக்கும் ஆர்வம் கொண்டவர்களுக்குத் தங்களது புலமையையும் அத்தொகுப்பில் புகுத்தும் எண்ணம் இருந்துள்ளது என்று சிந்திக்க இடம் தருகின்றது. நல்லந்துவனார் கடவுள் வாழ்த்துப் பாடி, தனது பாடல்களையும் (நெய்தல்) சேர்த்துத் தொகுத்ததாக ஒரு கருத்து நிலவுவதும் இங்கு நோக்கத்தக்கது[4]. மருதத்திணைப் பாடல்கள் (216ஆம் பாடல் தவிர) அனைத்தும் 10,20, 30 என்று பத்தின் மடங்குகளுடைய எண்ணிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. அகநானூறைப் போன்ற திட்டமிடப்பட்ட ஒரு தொகுப்பினைச் செய்யும் முயற்சி இருந்தமையை இதன் மூலம் அறிய முடிகிறது. ஆனால் 110, 130, 140, 160, 190 எண்களில் மருதத்திணைப் பாடல்கள் அமைய வில்லை. அவை முறையே பாலை, நெய்தல், குறிஞ்சி, குறிஞ்சி, பாலைப் பாடல்களாக உள்ளன. மேற்குறிப்பிட்ட முயற்சி பின்னர் கைவிடப் பட்டமையை இஃது காட்டுகிறது.

அகநானூறு திட்டமிடப்பட்ட ஒரு தொகுப்பு நூல். இதனை அதன் பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள நூதனமான எண்ணிக்கை முறையைக் கொண்டு கூறமுடியும் (1,3,5,7,9-பாலை, 2,8,12,18-குறிஞ்சி, 4,14,24,34 முல்லை, 6,16,26,36- மருதம், 10,20,30,40-நெய்தல்). மேலும் களிற்றியானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக் கோவை என்னும் மற்றுமொரு பகுப்புமுறையும் அகநானூற்றில் கூறப்படுகிறது.

இப்பகுப்புமுறைக்குப் பொருண்மை அடிப்படையிலான விளக்கம் தரப்படுகின்றதேயன்றி அவற்றிற்கான காரணங்கள் பாடலிலோ அல்லது உரையாசிரியர்களாலோ விளக்கப்படவில்லை. இப்பகுப்புமுறை அகநிலைப்பட்டதா? அல்லது புறநிலைப்பட்டதா என்பதும் அறியப்படவில்லை. 'காரணத்தாற் பெற்ற பெயர்' என்று பாட்டும் தொகையும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது[5]. நச்சினார்க்கினியர் தனது தொல்காப்பிய உரையில் அகநானூற்றுப் பாடல்களை எடுத்தாளும்போது இப்பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார்[6].


ஐங்குறுநூறு ஐந்து புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல். ஒவ்வொரு திணையும் பாடலின் சொற்றொடராலோ, பொருண்மையாலோ அல்லது இரண்டாலுமோ பெயர்பெற்ற பத்துப்பத்துகளைப் பெயராகக் கொண்டுள்ளன. சில பத்துகளில் அப்பெயர் தவிர்த்த வேறு சில ஒற்றுமைகளையும் பாடலின் உள்ளே காணமுடிகிறது. சேரர்களின் நூறு, நூறு பாடல் தொகுப்பு மரபிற்கு (பதிற்றுப்பத்து) இதுவும் ஒரு காட்டு நூல். மேலும் இங்கு உற்று

நோக்கப்படவேண்டியது என்னவெனின் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு இரண்டு தொகைகளிலும் அந்தாதித் தொடையில் ஒரு பத்து (அம்மூவனார்- தொண்டிப்பத்து, பதிற்றுப்பத்து நான்காம் பத்து) அமைந்துள்ளது என்பது. மேலும் இவ்வைங்குறுநூற்றுப் பாடல்கள் பல ஒரே துறைவிளக்கக் குறிப்பினைக் கொண்டுள்ளன. பாடலாசிரியர்களின் குறிப்பிட்ட துறையில் பாடலினை அமைக்க வேண்டும் என்ற எண்ணத் தொடர்ச்சியை இவை காட்டுவதாக ஊகிக்கலாம். பதிற்றுப்பத்து - சேர அரசர்களின் வீரத்தினையும், வள்ளன்மைத்தன்மையையும் விளக்கி அதன் வழி அவ்வரசப் பெருமக்களை வாழ்த்துகின்றது. ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எந்த அகப்பொருள் தொகையிலும் காணப்படாத மன்னர் வாழ்த்தினை 'வாழி ஆதன் வாழி அவினி' (வேட்கைப்பத்து 1-10) முதன்மைப்படுத்துகின்றது. பாடலினுள்ளும் குட்டுவனின் தொண்டிச் சிறப்பு (178:3) குறிப்பிடப்படுகின்றது. இந்தமரபு சிலப்பதிகாரத்தில் பின்பற்றப்பட்டுள்ளது என்பதும் இங்கு வேண்டத்தக்கது.

ஐந்திணைப் பகுப்புடன் தொகுக்கப்பட்ட இரு தொகைகளுள் ஒன்றாகிய இவ்வைங்குறுநூற்றின் திணை வைப்புமுறை/ அமைப்புமுறையும் வேறுபடுகிறது. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை முல்லை என்ற இத்திணை வைப்பு முறைக்கு இத்தொகையைத் தொகுத்தவர் தொகுப்பித்தவரின் அடிப்படையில் / பின்னணியில் முறையான காரணங்கள் சாமிநாதையரால்[7] எடுத்துக்கூறப் படுகின்றது. அதே போன்று கலித்தொகையின் (பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல்) திணைவைப்பு முறைக்கும் அதன் பதிப்பாசிரியர் இ.வை.அனந்தராமையரால்[8] பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ் ஐங்குறுநூற்றுப் பத்துகள் ஒவ்வொன்றும் தம்முள் தொடர்புடையன வாகவே உள்ளன. சில பத்துகள் தமக்குள் தொடர்பற்று இருப்பினும் திணையுடன் தொடர்பு கொண்டவையாகவே விளங்குகின்றன.

சான்றாக, பாலைத் திணையுள் செலவு அழுங்குவித்த பத்து, செலவுப் பத்து, இடைச்சுரப் பத்து, தலைவியிரங்கு பத்து, இளவேனிற் பத்து, வரவுரைத்த பத்து, முன்னிலைப் பத்து, மகட்போக்கியவழித் தாயிரங்கு பத்து, உடன் போக்கின்கண் இடைச்சுரத்துரைத்த பத்து, மறுதரவுப் பத்து எனப் பத்துப் பத்துகள் உள்ளன.

தலைவன் தலைவியைப் பிரியக் கருதியவழி தோழி செலவழுங்குவித்தல்



1. ஐம்பத்தேழன
2. சனந்நோற்ற
3. சந்திரநந்திஆ
4. சிரிகர்நிசிநிகை

செலவு பற்றிய வருத்தம்

தலைவன் இடைச் சுரத்து தலைவியை நினைத்தல்

தலைவன் பிரிவினை தலைவி நினைத்து வருந்துதல்

தலைவன் குறித்துச் சென்ற இளவேனில் பருவம் வந்தும் தலைவன் வாராதது கண்டு தலைவி வருந்துதல்

தலைவன் வரவினைப் பிறர் உணர்த்தல், தலைவனின் மீட்சியினைத் தலைவனே தலைவிக்கு உணர்த்தல்

உடன்போக்கு சென்றவழி தாய் இரங்குதல்

தலைமக்கள் மீளத் தாய் பரவுக்கடன் செலுத்துதல், அவர் வரவைப் பிறர் உணர்த்தல்

என ஒரு தொடர்ச்சியை இப்பத்துகள் கொண்டுள்ளன. அகப்பொருள் நிகழ்வுகளைத் தொடர்ச்சியாகத் துறைகளாக வகுத்துப் பாடப்பட்ட கோவை இலக்கியமாகிய பாண்டிக் கோவைக்கு முன்னோடியாக ஐங்குறுநூற்றுத் துவைப்புமுறைகளை வைத்துப் பார்க்க இடமுள்ளது.

கலித்தொகையின் தொகுப்பு மரபில் கவனிக்கத்தக்க ஒன்று தொகுப்புக் குறிப்பு/ சூழலமைவுக் குறிப்பில் தொல்காப்பிய நூற்பாக்கள் குறிப்பிடப்பட்டு விளக்கம் அளிக்கப்படும் முறை[9]. இந்த எடுத்துரைப்பு முறைக்கான தேவை/ அவசியம் ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி இங்கு எழுகிறது. தொல்காப்பியர் கூறிய யாப்பினைப் பின்பற்றி இன்பத்தைப் பாடிய கலித்தொகை

(கலிப்பா மற்றும் அதன் வகைகளாகிய ஒத்தாழிசைக்கலி(61), கொச்சகம்(49), கொச்சகவொருபோகு (1), கலிவெண்பாட்டு (34), உறழ்கலி(5))க்குத் தொல்காப்பியம் என்ற அக்காலத்துச் சிறந்து விளங்கிய இலக்கண நூலின் அங்கிகாரம் தேவை என்ற எண்ண முனைப்பினால் இவ்வாறு துறைக்குறிப்புகள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதே அதன் விடையாக அமைகிறது. சங்க இலக்கியப் புரிதல் தொல்காப்பியத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், இதுவரை எந்த இலக்கிய இலக்கணத்திலும் எடுத்துக் கூறப்படாத திணை வைப்புமுறை இதனுள் பின்பற்றப் பட்டுள்ளது. அகநானூறு முதலான தொகை நூல்களுள் அதிகம் இடம் பெற்ற பாலைத்திணையை முன்வைத்து அதன் பின்னர் அடுத்த இடமுடைய குறிஞ்சியையும் வைத்திருக்கலாம்[10] என ஒருவாறு எண்ணலாம்.

> சங்க இலக்கிய வாசிப்பில் வலுவாகக் கால்கொண்டுள்ள இத்திணை, துறை, சூழலமைவுக்குறிப்புகள் சங்க இலக்கிய வாசிப்பிற்குத் துணைபுரிகின்றதா? அல்லது பாடலின் பொருண்மையையோ அல்லது பிற கூறுகளையோ மௌனப்படுத்துகின்றதா? துறைக்குறிப்புகள் அனைத்தும் அந்தந்தப் பாடல்களுக்குப் பொருந்துவதாக உள்ளதா? அல்லது விலகல்கள் உண்டா? முதலான கேள்விகள் இங்கு அவசியப்படுகிறது.

கலித்தொகை பற்றிக் குறிப்பிடும்போது அதன் தொகுப்பாசிரியர் பற்றிய கேள்வியும் முக்கியமா கிறது. நல்லந்துவனாரால் விரவாமல் தொகுக்கப் பட்ட, இக்கலித்தொகையைப் பாடியவர் ஐவர் என்ற கருத்தும்; நல்லந்துவனாரே பாடி, கடவுள் வாழ்த்தும் எழுதித் தொகுத்தவை என்ற இருவகைக் கருத்துகள் நிலவுகின்றன. எவ்வாறாயினும் தொகுத்தவர் நல்லந்துவனாரே என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. இதற்கு வலுவான ஆதாரமாக நச்சினார்க்கினியரின் கடவுள் வாழ்த்து உரை[11] உள்ளது.

புறம் – அகப்புற நூல்கள்

அகத்திணைப் பாடல்களின் துறைக்குறிப்பு/ பழமையான குறிப்பு அப்பாடலுடன் தொடர்பு உடையதாக அகப்பொருளை ஒரு குடும்ப உறவுடையதாகக் கட்டமைப்பதாக உள்ளது. ஆனால் புறத்திணைப் பாடல்களுக்கு உள்ள திணைக்குறிப்புகள் அல்லாத பிற பழமையான(?) குறிப்புகள் அப்பாடலுக்கு உரியவைதானா என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றன. சான்றாக புறநானூற்றின் 74ஆம் பாடலைக் குறிப்பிடலாம்[12]. தண்ணீர் தர மறுத்ததனால் சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடியதாகக் கூறப்படுகிறது இப்பாடல் (சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயில் கோட்டத்துச் சிறையில் கிடந்து, 'தண்ணீர் தா' என்று பெறாது, பெயர்த்துப் பெற்று, கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ் சிய பாட்டு). இச்செய்தி அக்குறிப்பு தவிர பாடலுள் எந்த இடத்திலும் இடம்பெறவில்லை. இந்த வரலாற்றை விளக்கும் முகமாக எந்த ஒரு ஆதாரமும் பிற (அகநானூறு முதலான) தொகைகளிலும் இல்லை.

இந்தப் பழமையான குறிப்புகள் நூல் முழுமைக்கும் இல்லை என்பதும் அவையும் பாடல் முழுமையும் விரவிக் காணப்படவில்லை என்பதும்[13] சிந்திக்க வேண்டியதாக உள்ளது. பாட்டுடைத் தலைவர்கள் இல்லாத பாடல்களுக் கான சூழல்களை விளக்க இக்குறிப்புகள் தரப்படவில்லை. மன்னர் பெருமக்களின் வீரம்/ வெற்றிச் சிறப்பு, புலவர் பெருமக்களின் சந்து செய்வித்தல் முறைமை, பரிசில் கடாநிலை முதலானவற்றைக் குறிப்பிடும் பாடல்களுக்கு இம்மாதிரியான குறிப்புகள் தரப்பட்டிருப்பதும் ஒருவிதமான அரசியல் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் களமாகப் புறநானூற்றுத் தொகுப்பினைத் தொகுப்பாசிரியர்கள் ஏற்படுத்திக் கொண்டமையை / பயன்படுத்திக் கொண்டமையைக் காட்டுகின்றது.

புறநானூற்றுப் பாடல்கள் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் என்றவாறு படிநிலை அமைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது என்ற கருத்தும் பரவலாக உள்ளது. புறநானூற்றுத் தொகுப்பாசிரியர்களுக்கு ஐங்குறுநூறு, அகநானூறு போன்று வரையறைகளுடன் கூடிய தொகுப்பினைச் செய்யவேண்டும் என்ற எண்ணமும் இருந்துள்ளது எனலாம். பாடப்பட்டவர் மற்றும் திணைத் துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை

ஒருங்கு சேர்த்துக்கொடுக்கும் போக்கினை இதற்குச் சான்றாகச் சுட்டலாம். (பொருண்மொழிக் காஞ்சி -185-193; கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் பாடியமை, கோப்பெருஞ்சோழன் பாடிய பாடல், பிசிராந்தையாரைப் பொத்தியார் பாடிய பாடல், கண்ணகனார் பிசிராந்தையாரைப் பாடிய பாடல், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதனார் கோப்பெருஞ்சோழனைப் பாடிய பாடல், பொத்தியார் கோப்பெருஞ்சோழனைப் பாடிய பாடல்கள் (212-293) தொடர்ச்சியாகத் தொகுக்கப் பட்டுள்ளன. ஒரே புலவரின் பாடலும் ஒருசேரத் (சில இடைவெளிகளுடன்) தொகுக்கப் பட்டுள்ளன.

சில புலவர்களின் பாடல்கள் திணை/துறை அடிப்படையில் தனித்தனியேயும் கோர்க்கப் பட்டுள்ளன. அரிசில் கிழாரின் பாடல் குறுங்கலிப் பாடல் தொகுக்கப்பட்ட இடத்திலும்146, மற்றொன்று கையறுநிலை / பொதுவியல் திணைப் பாடல்கள் தொகுக்கப்பட்ட இடத்திலும் மற்றுமிரண்டு தும்பைத் துறைப் பாடல்களோடும், மற்றொன்று மகட்பாற்காஞ்சி தொகுத்த இடத்திலும் கோக்கப்பட்டுள்ளன. இவர் பாடிய 7 பாடல்களுள் (146,230,281,285,300,304,342) ஆறுபாடல்கள் இதுபோன்று இடத்திற்கேற்றவாறு தொகுக்கப்பட்டுள்ளன. இந்த முறைமை தொகுப்பு எளிமை கருதியோ அல்லது பயன்பாட்டு எளிமை கருதியோ கைக்கொள்ளப்பட்ட முறைமை என்று கருத இடமுள்ளது.

அடுத்ததாகப் பதிற்றுப்பத்து. இதில் திணை பற்றிய நேரடி விளக்கம் இல்லை எனினும் பாடாண் திணையிலேயே அனைத்துப் பாடல்களும் அமைந்துள்ளன என்ற கருத்து ஆய்வாளர்களுக்கிடையே வழங்கிவருகிறது[14]. இத்தொகுப்புள் துறை, வண்ணம், தூக்கு, பெயர் முதலியன ஒவ்வொரு பாடலுக்கும் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றுள் 'பெயர்' குறிப்பிடத்தக்க வொன்றாகும். ஒவ்வொரு பாடலினுள்ளும் இடம் பெற்றுள்ள சிறந்த தொடரை அவ்வப் பாடல்களுக்குப் பெயராக அமைக்கும் மரபு பதிற்றுப்பத்தில் உள்ளது. இதே பெயரமைக்கும் மரபு (தெய்யோப் பத்து, வேழப் பத்து, மஞ்ஞைப் பத்து) ஐங்குறுநூற்றிலும் காணப்படுகின்றமை இரு தொகைகளுக்குமிடையே நெடிய தொடர் புள்ளமையை மேலும் மேலும் எடுத்துக் காட்டுகின்றது. மேலும், வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ முதலான துறைகளில் பாடல் இடம்பெறாமையைக் கொண்டு பாட்டுடைத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்குவதோ, இடித்துரைப்பதோ புலவர்களின் நோக்கம் இல்லை என்பதும், அவன் இயல்பை வாழ்த்துதல், போர்க்களத்தில் அவன் பெற்ற செல்வம், அவன் காவல் சிறப்பு, படைக்குத் தலையளி செய்வது, தலைவனுடனான வீரர்களின் கூத்து, பாணர் விறலியை ஆற்றுப்படுத்துவது முதலிய பொருண்மையில் அமைந்த இப்பாடல்கள் பரிசில் கேட்பதையே மைய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டமையைக் காட்டுகின்றன[15]. சேர மரபினர் தம் குலப்பெருமையை விளக்கும் இத்தொகுப்பு போன்றதொரு பிற நூல் மற்ற மரபினர்களுக்கு ஏன் தோன்றவில்லை? அல்லது தோன்றி அழிந்ததா? முதலிய வினாக்களை இத்தொகுப்பு கிளப்புகிறது.

மேலும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று என்னவெனில் இப்பாடல்களுக்கு வண்ணம், தூக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பரிபாடலுக்கும் இவை தொடர்பான குறிப்புகள் உள்ளன. எனின் ஏகார இறுதி கொண்டு முடியும் அகவல்களும் விளித்துப் பாடப்பட்டவையே. இவற்றுக்கான பண்/தூக்கு முதலிய குறிப்புகள் ஏன் வழங்கப்படவில்லை? ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் செய்யுள் நடையில் பதிகமும் பாடியவர் பெற்ற பரிசிலும் பெயரும் தொகுத்துக் கூறப்பட்டு அரசனின் ஆயுட்காலமும் செய்யுளும் உரையுமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இப்பதிகங்கள் உரைப்பிரதிகளில் மட்டும் காணப்படுவதால் தொகுத்தவரல்லாத பிறரால் இவை இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்கிறார் உ.வே.சாமிநாதையர்[16]. குறுந்தொகை, நற்றிணை நூல்களுக்குப் பிற்காலப் பதிப்பாசிரியர்களான தி.சௌரிப்பெருமாளரங்கன், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆகிய இருவரும் திணைக் குறிப்பு எழுதியுள்ளனர். இவ்விரண்டு நூல்களுக்கும் பழைய உரை இல்லை என்பது சிந்தனைக்குரியது. கிடைக்கின்ற பழைய உரைகள் எளிய முறையில் உள்ளுறை, இறைச்சி முதலான கூறுகளை விளக்குவனவாக உள்ளன. தொகைகளுக்கு உரை எழுதப் புகுந்தோர் தங்களது சொந்த புரிதலுக்காகத் திணைக்குறிப்பு எழுதினார்களா? என்ற ஊகத்திற்கு மேற்கண்ட இக்குறிப்புகள் இட்டுச் செல்கின்றன.

தனிப்பாடல்கள் அனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு அவை பொருள் அடிப்படையில் அகம், புறம் என்று பிரிக்கப்பட்டு அடிவரையறை அடிப்படையில் தனித்தனியே தொகுக்கப்பட்டவை என்ற கருத்து பெரும்பாலும் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்தக் கருத்தினை முழுவதுமாக எல்லா அகத்தொகைகளுக்கும் பொருத்திக்காண்பது தவறு. குறுந்தொகை (4-8), நற்றிணை (9-12), அகநானூறு (13-31), புறநானூறு என்னும் நான்கு தொகைகளையும் மேற்குறிப்பிட்ட கருத்துடன் பொருத்திப்பார்க்கலாம். பிற, ஐங்குறுநூறு (3-5), கலித்தொகை (11-80),

பரிபாடல் (32-140), பதிற்றுப்பத்து (8-87) என்னும் தொகைகள் திட்டமிட்ட பாடல் இயற்றுமுறையும் தொகுப்பு அமைப்பும் கொண்டவையாக விளங்குகின்றன. திணை அடிப்படையில் பகுக்கப்பட்டு அடிவரையறை அடிப்படையில் பிரித்துத் தொகுக்கப்பட்டதாகக் கொண்டால் இத்தொகுப்பு முயற்சி தனிப்பட்ட புலவர் மற்றும் புரவலரால் கைக்கொள்ளப்பட்டது என்னும் பொருளாகிவிடும். எனின் இதனை எவ்வாறு புரிந்துகொள்வது எனின், அடிவரையறை அடிப்படையில் பாடல் பகுக்கப்பட்டது வரை தனிப்பட்ட ஒரு புலவரின்/ புலவர் குழுவின் முயற்சியாக இருந்திருக்கவேண்டும். பின்னர் சுவடிக்குறிப்பில் உள்ளமை போன்று குறிப்பிட்ட புலவரால் திணை, துறைக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

ஏ.வி. சுப்பிரமணியஅய்யர் இத்தொகை நூல்கள் பாரத வெண்பா பாடிய பெருந்தேவனாரால் இறுதியில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார்[3]. ஐங்குறுநூறு (ஐந்து திணைகளுக்குப் பத்துப்பத்தாக நூறு பாடல்) கலித்தொகை (கலிப்பா யாப்பு), பதிற்றுப் பத்து (சேர அரசர்களைப் பத்துப்பத்துப் பாடல் களால் பாடிய மரபு), பரிபாடல் (பரிபாடல் யாப்பு) என்னும் இந்நான்கு தொகைகளும் குறிப் பிட்ட வரையறைகளைப் பெற்றிருப்பதால் அதன் மூலமாகவே ஒரு தொகுப்பமைப்பையும் பெற்றுள்ளன. இவை தவிர்ந்த பிற நான்கு தொகைகளுக்கும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து[4] பாடியிருப்பதும் அடிவரையறை நிலையில் இத்தொகைகள் தமக்குள் ஒரு தொடர்ச்சியைப் பெற்றிருப்பதும் முன்னர் குறிப்பிட்ட கருத்தினை நிறுவுவதற்குச் சான்றா தாரங்களாக விளங்குகின்றன.

தொகுப்பாசிரியர்கள் சங்கப் பாடல்களைத் தொகையாகத் தொகுத்துத் தரும் முயற்சியில் பல குறிப்புகளை / கூறுகளைப் பாடல்களுடன் சேர்த்துள்ளனர். அவை திணை, துறை, சூழலமைவுக் குறிப்புகள், பண், இசை, வண்ணம், தூக்கு முதலியன. இவற்றுள்,

திணை என்பதன் அடிப்படைப் பொருள் ஒழுக்கம். இஃது பாடலுள் பொதிந்திருக்கும் முதற் பொருளையோ கருப்பொருளையோ உரிப் பொருளையோ அல்லது மூன்றையுமோ அடிப்படையாக வைத்து வகுக்கப்படுகிறது. முதற்பொருளோ, கருப்பொருளோ மயங்கிப் பாடலுள் இடம் பெற்றிருப்பின் அப்பாடலைத் திணைமயக்கத்திற்குச் சான்று காட்டுவதுண்டு. இத் திணைமயக்கத்திற்கான இலக்கணத்தினைத் தொல்காப்பியம் குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கது. புறநூல்களைப் பொருத்தவரையில் அகத்திணைகள் ஏழிற்கும் புறனாகிய புறத்திணைகள் அதனோடு தொடர்புடைய துறைகள், இம்மன்னனை இப்புலவர் பாடியது சில (புறம். 65,162)பாடல்களில் பாடப்படும் சூழல்/ அந்தப்பாடலில் பாடப்பட்டவர் பற்றிய சிலாகிப்புகள் என்றவாறு அமைகின்றன.

துறையாவது குறிப்பிட்ட பாடல் எந்தச் சூழலில் பாடப்படுகிறது என்பது பற்றிய விளக்கம் நம்பி அகப்பொருள் சொல்பவர் கேட்பவர் இல்லாமல் புலவன் தானே கூறுவது துறை என்கின்றது[16]. இதன்மூலம் கவியின் பாடல் படைப்பதற்கான முன்முடிவு என்பதாக துறையானது விளக்கம் பெறுகிறது.

கூற்றாவது அப்பாடல் எந்தச் சூழலில் யார் யாரிடம் கூறுவதாக அமைந்துள்ளது என்பது பற்றியான விளக்கம்.

பண் குறிப்பிட்ட பாடலின் இசை தொடர்பான குறிப்பு.

இசை என்பது குறிப்பிட்ட பாடலுக்கு இசைவடிவம் கொடுத்தவரின் பெயரைக் குறிக்கும் இடத்தின் சுருக்கம்.

வண்ணம், தூக்கு இரண்டும் பாடல் யாப்பின் அடிப்படையில் பெறும் ஓசை பற்றிய குறிப்பு.

தண்டியலங்காரம் செய்யுள் வகைகளுள் ஒன்றாகத் தொகைகளைச் சுட்டுகின்றது. இந்நூலில் பாடியோர் எண்ணிக்கை, பாடலின் பொருள், இடம், காலம், தொழில் முதலியனவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகைநிலைச்செய்யுள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பாடலை/ செய்யுளை எவ்வாறு படைக்கவேண்டும் என்பதற் கான வரைமுறைகளை/ பொருத்த விதிகளைப் பட்டியலிட்டுக் காட்டும் நூல் பாட்டியல். இந்நூல் செய்யுளியலில் நால்வகைக் கவிகள் மற்றும் இலக்கிய வகைமைகள் பலவற்றையும் எடுத்துக்காட்டுகின்றது. பாட்டியல் நூல்கள் செய்யுள் வகைகளுள் ஒன்றாகத் தொடர்நிலைச் செய்யுளைக் (பெருங்காப்பியம், காப்பியம்) குறிப்பிட்டுள்ளன. மேலும், தொகை இலக்கியங் களின் பெயர் பற்றியும் கூறுகிறது[17].

தமிழின் தலைமை இலக்கண நூலாகிய தொல்காப்பியம் செய்யுளியலின் முதல் சூத்திரத்தில் செய்யுளுறுப்புகளைத் தொகுத்துக் கூறுகின்றது. இந்நூற்பாவினுள் யாப்பிலக்கணக் கூறுகளும் திணைப்பாடல்களுக்கான கூறுகளும், செய்யுள் வகைகளும் நுட்பமாகக் கூறப்பட்டுள்ளன.இன்று தொகை இலக்கியங்களுள் காணப்படும் பாடல் தவிர்ந்த பிற கூறுகள் அனைத்தும் திணைப்

பாடல்களுக்கானவையாக விளக்கப்பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கது. தண்டியலங்காரம் தொகைகளைச் செய்யுள் வகைகளுள் ஒன்றாகக் கூற, தொல்காப்பியம் திணைப் பாடல்களுள் இடம்பெறவேண்டிய கூறுகளை வரையறை செய்துள்ளது. அகப்பாடல்கள் மற்றும் புறப் பாடல்கள் இத்திணைப்பாடல்களுக்கான கூறுகளைக் கொண்டு தொகுப்புகளாக்கப்பட்டன என்று இதன் மூலம் துணியலாம். தொகை பற்றிய இலக்கண எடுத்துரைப்புகள் இவை.

சங்கத் தொகைகள் தொல்காப்பியத்தை அடிப் படையாகக் கொண்ட திணை, துறை முதலியன வற்றை அடிப்படையாகக் கொண்டும் அகத்திணை இலக்கியங்களின் வகைமாதிரிப் பாத்திரங்களான தலைவன், தோழி, தலைவி, செவிலி, நற்றாய், பாங்கன் முதலானோர் உள்ளிட்ட குடும்ப உறவுகளிலிருந்தும் உள்வாங்கப்படுகின்றன/ வாசிக்கப்படுகின்றன. இதனை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சான்றாக, 'சங்கப் பாடல்களை விளங்கிக் கொள்வதற்குத் தொல்காப்பியத்தையே ஆதாரச் சுருதியாகக் கொள்வதனால்... தமிழின் உரைப் பாரம்பரியம் தொல்காப்பியத்தையே சங்க இலக்கிய விளக்கத்துக்கான திறவு கோலாகக் கொண்டுள்ளது'[20] என்ற சிவத்தம்பியின் கருத்தைக் குறிப்பிடலாம்.

நச்சினார்க்கினியர் புறத்திணையியலில் 'தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும், அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டுமென்றறிக'[21] எனக் குறிப்பிடுகிறார்.

தொகை நூல்களுக்குத் தொல்காப்பியமே இலக்கணம் கூறும் நூல்; அதுவே சங்கப் பாடல்களை விளங்கிக்கொள்வதற்கான கருவி நூலாகவும் செயல்படுகிறது என்ற கருத்தை இவை உணர்த்தி நிற்கின்றன.

- சங்க இலக்கிய வாசிப்பில் வலுவாகக் கால்கொண்டுள்ள இத்திணை, துறை, சூழலமைவுக் குறிப்புகள் சங்க இலக்கிய வாசிப்பிற்குத் துணைபுரிகின்றதா? அல்லது பாடலின் பொருண்மையையோ அல்லது பிற கூறுகளையோ மௌனப்படுத்துகின்றதா?

- துறைக்குறிப்புகள் அனைத்தும் அந்தந்தப் பாடல்களுக்குப் பொருந்துவதாக உள்ளதா? அல்லது விலகல்கள் உண்டா?

முதலான கேள்விகள் இங்கு அவசியப்படுகிறது. துறைக்குறிப்புகள் - வகைமாதிரிப் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட வாசிப்புகள் பாடலைக் குறிப்பிட்ட பொருண்மைக்குள் நிறுத்தி விடுகிறது. பாடலின் எல்லையற்ற பொருண்மை என்ற தளத்திற்கு இவை இட்டுச் செல்வதில்லை என்ற கருத்து ஆய்வாளர்களால் முன்வைக்கப் படுகிறது. ஆனால் கவிதையின் சிறப்புக்கு இவ்வகைமாதிரிப்பாத்திரங்கள் உள்ளுறை உவமம், இறைச்சி என்ற பின்னணியில் வளம் சேர்க்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை. இத்தொகுப்புக் குறிப்புகளுள் பல அக்குறிப்பிட்ட பாடலுடன் தொடர்பின்றி இருப்பதைச் சங்க இலக்கிய வாசிப்பாளர் பலர் உணர்ந்திருக்கக்கூடும்.

சான்றாக,

நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன
வயலைஅம் சிலம்பின் தலையது
செயலைஅம் பகைத்தலை வாடும் அன்னாய்
(ஐங்.211)

(குறிஞ்சி, தலைமகன் ஆற்றாமை கண்டு கையுறை ஏற்ற தோழி தலைமகன் தலை ஏற்க வேண்டிக் கூறியது.)

> தனிப்பாடல்கள் அனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு அவை பொருள் அடிப்படையில் அகம், புறம் என்று பிரிக்கப்பட்டு அடிவரையறை அடிப்படையில் தனித்தனியே தொகுக்கப்பட்டவை என்ற கருத்து பெரும்பாலும் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்தக் கருத்தினை முழுவதுமாக எல்லா அகத்தொகைகளுக்கும் பொருத்திக் காண்பது தவறு.

தொல்காப்பிய அறிமுகமின்றி இப்பாடலை வாசிப்பவர்களுக்குத் தலைவன், தோழி என்பவர் யார்? தலைமகனின் ஆற்றாமைக்குக் காரணம் என்ன? 'கையுறை' என்பது என்ன? கையுறையை ஏற்ற தோழி யாருக்காக அதனை ஏற்றாள்? முதலான வினாக்கள் எழும். ஆனால் பாடலின் நேரடிப் பொருண்மை' நெய்யொடு பிசைந்து கலந்த உழுந்த மாவினை நூற்றுப் பரப்பி வைத்தாற் போல படர்ந்துள்ள ஒன்றற்கொன்று மாறுபட்ட வயலைக் கொடிகளும் அழகிய

மலையின் உச்சியில் வளரும் அழகிய அசோகந்தழை களும் வாடிவிடும்'. இங்கு கையுறை என்ற சொற்பயன்பாடு குறிப்பிடத்தக்கது[22]. கூற்று விளக்க அடிப்படையில் இலக்கணம் கூறும் தொல்காப்பியம் கையுறை என்ற சொல்லையோ அவை தொடர்பான கிளவிகளையோ குறிப்பிடவில்லை. 'தோழியைக் குறையுறும் பகுதியும்' என்று அந்த இடத்தைச் சுட்டுகின்றது. ஆனால் தொகுப்பாளர்கள் சங்கப் பாடல்களிலிருந்தே[23] இச்சொல்லை எடுத்துத் துறைவிளக்கங்களில் கையாண்டுள்ளனர். தொகுப் பாசிரியர்கள் தொல்காப்பியத்தைப் பின்பற்றியதோடு தனது அறிவுத் தோற்றவியலையும் (Epistemology) செயல்படுத்தியுள்ளனர் என்பதை அறிதற்கு இஃது ஒரு சான்றாக அமைகின்றது.

புறத்திணைப் பாடல்களுக்கும் இந்தச் சிக்கல்கள் உள்ளன. பாடலையடுத்துள்ள பழமையான

> தனிப்பட்டவரின் உணர்வு வெளிப்பாடாக விளங்கிய பாடல்கள் ஒரு தொகுப்பாகத் தோற்றம் பெற்றதையும், ஒரு பரிமாண வளர்ச்சியாகத்தான் கொள்ளமுடியும். தொகைகளின் காலம் போன்றே தொகுக்கப்பட்ட காலம் குறித்தும் மாற்றுக்கருத்துகள் உள்ளன. எனினும் இத்தொகைகள் உரையாசிரியர்களின் காலத்திற்கு முன்போ அல்லது உரைப்பாரம்பரியம் தோற்றம் பெற்ற காலத்திலோ (கி.பி.8 முதல்) தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்புகளுக்கும் பாடலுக்கும் பல இடங்களில் தொடர்பு இருப்பதில்லை. தொகைக்கு அகத்தியமும் தொல்காப்பியமுமே நூல் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதிலிருந்து புறப்பொருள் வெண்பா மாலையும் புறநானூற்றிற்குத் துறை வகுக்க இலக்கணமாகக்கொள்ளப்பட்டது என்பது வெளிப்படை. மேலும், பதிற்றுப்பத்து குறித்து 'இப்பதிற்றுப்பத்து நூறும் இவ்வாறே வருதலிற் பாடாண்டிணையேயாயிற்று' என்று சுட்டுகிறார். ஆனால், முன்னரே குறிப்பிட்டது போல பதிற்றுப் பத்துத் துறைகள் புறப்பொருள் வெண்பாமாலை யோடு ஒப்பிடும்போது வெவ்வேறு திணையுடையன வாக உள்ளன. இவைபோன்று தொகுப்புகள் கிளர்த்தும் சிக்கல்கள் ஏராளம் உள்ளன.

பழைய (?) உரைக்குறிப்புகளுடன் கூடிய சுவடிகள் கிடைக்கப்படாத நற்றிணை, குறுந் தொகை நூல்களின் பதிப்பாசிரியர்கள் முன்னோடி நூல்களைப் பின்பற்றித் திணை முதலான குறிப்புகளைத் தாமே இயற்றியுள்ளனர். சில பதிப்பாசிரியர்கள் பெண் உடல் சார்ந்த சொற்களை இடக்கர்சொல்லென்று செய்யுளினின்றே நீக்கமும் செய்துள்ளனர். ஆண்-பெண் உறவு குறித்த பதிவுகளில் இம்மாதிரியான சொற்கள் இடம்பெறுவது இயல்பு எனினும் 'முலை' என்பதனை 'முல்லை என்பதன் இடைக்குறை' என்று வழங்கியமையைச், சொற்கள் மற்றும் அதன் பொருண்மை அவற்றை எதிர்கொள்ளும் மனிதமனம் ஆகியவை குறித்த பதிவாகத்தான் கொள்ளமுடிகின்றது.

தனிமனித அனுபவப் பகிர்தல்களாக விளங்கும் இயற்கைசார்ந்த ஒரு செவ்வியல் பிரதியின் உள்ளே இலக்கணத்தை நுழைப்பதற்கான தேவை ஏன் ஏற்பட்டது? என்ற கேள்வி இங்கு எழுகிறது. தொகுப்பாளர்கள் சங்க இலக்கியத்தை விளங்கிக் கொள்வதற்காக அல்லது விளங்கவைப்பதற்காக செய்த இடையீடாகவே இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சமூகத்தைச் சார்ந்து இயங்கும் காரணிகள் யாவும் இந்த இடையீட்டினைத் தெரிந்தோ தெரியாமலோ தனதாக்கிக் கொள்ளும். இப்படியான இடையீடுகள் அந்த இலக்கியம் வழங்கிவரும் சமூகத்தில் அதற்கான இருப்பின் காலத்தை ஏதோ ஒருவகையில் நீட்டிப்பவையாக அமைந்துவிடுகின்றன.

குறிப்புகள்

1. *தனிப்பாடல் திரட்டு ஓர் ஆய்வு, ஈரோடு தமிழன்பன், ப.16, 2003.*
2. *குறுந்தொகை, பழைய உரை, முகவுரை, ப.5.*
3. *தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியரின் உரைமேற்கோள் பாடல்களைச் சங்க இலக்கியப் பதிப்புகளோடு ஒப்பிடும்போது அவற்றின் திணை (புறநானூறு), துறை விளக்கக்குறிப்புகள் மாற்றம் பெறுகின்றன.*
4. *"... உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியார் புரிவுண்ட புணர்ச்சி யென்றற் தொடக்கத்து நெய்தற்கலியின் கீழ்ச் 'சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்' என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தாரெனக் கூறியமையானும் இஃது*

அவ்வாசிரியரராற்றாமே இயற்றப்பட்டமை தெள்ளிதின் விளங்கக் கிடந்ததெனக் கூறி மறுக்க".

நல்லந்துவனார் கலித்தொகை, பதிப்புரை, செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு, ப.192, 2009.

5. பாட்டும் தொகையும், அகநானூறு பாயிரப்பாடல், ப.1371, 1940.
6. 'இக்களிற்றியானை நிரையுண், முல்லைக்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது'
   'இம்மணிமிடைப்பவளத்துட், குறிஞ்சிக்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது'
   தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, ப.7, 1970.
7. இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் மலைநாட்டுப் புலவரும் மலைநாட்டரசருமாதலால் ஆதனவினியென்னும் சேரனை முதலாகப்பெற்ற முதற்பத்தையுடைய (வேட்கைப்பத்து) மருதம் முதலிலும், மலைநாட்டரசர்களைப் பாடி மலை நாட்டிற் பெரும்பாலும் வதிந்து மலைவளம் பாடுதலிற் புகழ்பெற்ற கபிலர்பாடிய குறிஞ்சி நெய்தலின் பின்னும் தொண்டிப்பத்தினையுடைய நெய்தல் மருதத்தின் பின்னும் நோக்கப் பெற்றன வென்று இம்மூன்றற்கும் முறை கூறலாமெனினும் பாலையும், முல்லையும் இவற்றின் பின்னர் முறையே அமைக்கப் பெற்றதற்குக் காரணம் ஒருவாற்றானும் விளங்கவில்லை. உ.வே.சாமிநாதையர், ஐங்குறுநூறு, முகவுரை, ப.8, 1980.
8. இங்ஙனம் தொகுத்ததில் ஐந்திணையும் விரவிக் கோக்கப் பெற்ற நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, போலாது, விரவாது கோக்கப்பெற்ற ஐங்குறுநூறு, அகப்பொருள் பற்றிய கீழ்க்கணக்கு நூல்கள் இலக்கண நூல்கள், இவற்றுள் ஒன்றிலேனும் முதலிடம் பெறாத பாலைத்திணையை இவர் முதலில் நிறுவியதற்குக் காரணம், யாவரும் இத்திணையை முதலில் வைக்காமையால், இது முதலில் வருமோ வராதோவென்று ஐயுற்று மயங்கி வாராதென்று திரியவுணர்வார்க்கு அத்திரிபுணர்ச்சியை நீக்கல் கருதிப்போலும்; அன்றி, பாலை நானிலப் பொதுவாதலின், பொதுவை முற்கூறிச் சிறப்பைப் பிற்கூறுவதும் மரபென்பது பற்றி எனினுமாம்; வேறு பொருந்துவன உளவேனுங் கொள்க'

   கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், இ.வை. அனந்தராமையர், ப.7, 1984.
9. 1, 2, 7, 11, 12, 15, 17, 18, 20, 24, 26, 37, 39, 42, 43, 46, 50, 51, 55, 56, 57, 58, 62, 64, 65, 73, 76, 79, 82, 83, 84, 86, 89, 90, 91, 93, 94, 95, 96, 97, 101, 104, 108, 109, 114, 122, 124, 133, 142, 143, 144, 145, 146, 147, 148 ஆகிய கலித்தொகையின் 55 பாடல்களில் தொல்காப்பிய நூற்பாக்களும் 129 ஆம் பாடலில் இறையனார் அகப்பொருள் நூற்பாவும் துறை - விளக்கக் குறிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

10. திணைப் பாடல்கள் பட்டியல்

	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்	பாலை
நற்றினை (400)	130	33	29	101	105
குறுந்தொகை	146	44	47	72	91
ஐங்குறுநூறு	100	100	100	100	100
அகநானூறு	80	40	40	40	200
கலித்தொகை	29	17	35	33	35
	485	234	251	346	531

= 1847 / 1850

(கடவுள் வாழ்த்து - 1 நற்றிணை 234 பாடல் கிடைக்கப் பெறவில்லை, 324 குறிஞ்சி அல்லது பாலை)

11. .....' என நால்வகை நிலத்திற்குங் கொண்ட உரிப்பொருட்கிடையே பிரிதலும் உரிப்பொருளாக ஆசிரியர் கொண்டார்; அப்பிரிவு நான்கு நிலத்திடையும் பொதுவாய் மயங்கிவருமென்று கருதி. ஆதலான் ஈண்டுப் பாலைத் திணையும் திணையாக ஆசிரியர் ஃ நல்லந்துவனார் கோத்தாரென்று கூறுக'

    கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், இ.வை. அனந்தராமையர், ப.11, 1984.
12. குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்

ஆள் அன்று என்று வாளின் தப்பார்

தொடர்ப் படு ஞமலியின் இடர்படுத்து இரீஇய

கேள் அல் கேளிர் வேளான் சிறுபதம்

மதுகை இன்றி வயிற்றுத்தீ தணிய

தாம் இரந்து உண்ணும் அளவை

ஈன்மரோ இவ் உலகத்தானே? - புறம். 74

13. பழமையான குறிப்புகள் உள்ள பாடல்களின் எண்கள்: 13, 17, 35, 38, 43, 44, 45, 46, 47, 50, 62, 63, 65, 74, 80, 93, 113, 114, 125, 162, 163, 164, 165, 191, 197, 200, 201, 202, 207, 208, 209, 215, 216, 217, 221, 222, 223, 229, 236, 237, 245 246, 247

14. `இப்பதிற்றுப்பத்து நூறும் இவ்வாறே வருதலிற் பாடாண்டி ணையேயாயிற்று.'

தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, ப.7, 1970.

15. பாடாண் திணை மட்டுமல்லாமல் தும்பை (34, 83,56) வாகை (39,84,89) வஞ்சி (30), பொதுவியல் (81) திணைப்பாடல்களும் உள்ளன. (உழிஞை அரவம், குரவை .நிலை, செந்துறைப் பாடாண்பாட்டு, வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு, வாகைத்துறைப் பாடாண்பாட்டு முதலிய துறைகள் புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறவில்லை.

16. *சொல்லிய அல்ல ஒன்றினும் அவற்றோ*

டொல்லும் வகைதேர்ந் துணர்த்தியல் வழாமல்

உரைப்போர் கேட்போர் உண்மையின்றி

உரைக்கும் கவியே உரைப்பது துறையே

அகப்பொருள் விளக்கம், நூ.234, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 2001.

17. ஆய அகப்பொருண்மே லாசிரியப் பாவினுள்

மேயசீர் வஞ்சியடி மேவாது - தூய

அகப்பொருண்மே லன்றி யருங்கலிகள் வாரா

தொகப்பெறா வஞ்சி தொடர்ந்து

தொடர்ந்து, பெயர்கள் தொழிலளவு காலம்

இடம்பொருள் பாவுறுப்போ டெல்லை நுடங்கிடையாய்

பாடினான் பாடுவித்தான் பாடப் படுபொருள்

நீடும் பிறவு நிறைந்து

வெண்பாப்பாட்டியல், நூ.67-68,

18. `... பாரத வெண்பா பாடிய பெருந்தேவனாரே முடிவாக ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும் என்று கூற இடமுள்ளது'.

ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.80, 2008.

19. `தாமரை புரையும் காமர் சேவடி....எய்தின்றால் உலகே', குறுந்., கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார்.

`கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்.... தவிர்ந்தன்றால் உலகே' அகம். கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார்.

`மாநிலஞ் சேவடி யாக தூநீர்...திகிரி யோனே', நற்., கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார்.

`கண்ணி கார்நறுங் கொன்றை காமர்....அருந் தவத்தோற்கே' புறம்., கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார்.

20. தொல்காப்பியம் கவிதையும் கருத்தும், தமிழ்க் கவிதை வரலாற்றிலே தொல்காப்பியக் கவிதையியல் சில வினாக்களும் சிக்கல்களும், ப.30, 2007.

21. தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல், நச்சினார்க்கினியர் உரை, ப.277, 1970.

22. கையுறை: `தலைவிக்கு அன்பு பாராட்டித் தலைவன் கொடுக்கும் தழை முதலிய நன்கொடை, Customary love token consisting of a bunch of tender leaves.'

தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், தொகுதி இரண்டு, 1982.

23. `கள்ளும் கண்ணியும் கையுறை யாக', அகம். 156:13.

`மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து', கலி.82:12.


`தத்தங் கலங்களும் கையுறை யென்றிவர்', கலி.84:16.

`கயலே ருண்கட் கணங்குழை மகளிர்

கைபுனை யாக நெய்பெய்து மாட்டிய', குறு. 398:3-4 (பாடவேறுபாடாகக் கையுறை என்ற சொல் உள்ளது)

இங்கு இச்சொல் காணிக்கை என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

■



கணபதி துணை.

எட்டுத்தொகையு ளொன்றாகிய

புறநானூறு மூலமும்
உரையும்.

இவை

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பல பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

சென்னை:

வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1894.

Copyright Registered.

விலை—ரூபா [illegible]

புறநானூறு: தொகுப்பும் கடவுள் வாழ்த்தும்

பெருமாள்முருகன்

சங்க இலக்கியத் தொகுப்பு முறை இன்னும் முழுதுமாகத் தெளிவாகவில்லை. தொகுக்கப்பட்ட காலம், தொகுப்பு வரிசை, தொகுப்பின் தன்மைகள் ஆகியவை பற்றித் தர்க்கம் சார்ந்த பல்வேறு ஊகங்கள் நிலவுகின்றன. எக்கருத்தும் முடிவானதல்ல. மேலும் ஊகங்களுக்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன. விருப்பு வெறுப்புகள், ஆசைகள் சார்ந்த கருத்துக்களைவிடத் தர்க்கம் சார்ந்தவற்றிற்கு முக்கியத்துவம் கிடைக்கிறது. சான்றுகள் வழியிலான தர்க்கத்தை விரிவாக்குவதன் மூலம் தொகுப்பு முறை பற்றிய சில தெளிவுகளை எட்ட முடியும்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் தொகுப்பு முறையில் எண்ணிக்கைக்கும் குறிப் பிடத்தக்க முக்கியத்துவம் இருந்துள்ளது. எட்டுத் தொகை நூல்களில் பலராலும் பிற்காலத்தவை என்று கருதப்படும் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டையும் தவிர மற்ற ஆறு நூல்களின் தொகுப்பு முறையிலும் எண்ணிக்கை சிறப்பிடம் பெறுகிறது. பதிற்றுப்பத்து நூலின் முற்பத்தும் பிற்பத்தும் கிடைக்கவில்லை எனினும் பப்பத்தாக நூறு பாடல்கள் என்னும் எண்ணிக்கை இந்த நூல் தொகுப்பு முறை அடிப்படைகளில் ஒன்று. ஐங்குறுநூற்றின் தொகுப்பு முறையில் ஐந்திணைகள் முக்கியத்துவம் பெறுவது போலவே திணைக்கு நூறு என்னும் எண்ணிக்கையில் ஐந்நூறு பாடல்கள் என்பதற்கும் ஓர் இடம் உள்ளது.

இவ்விரண்டையும் தவிரப் பிற நூல்கள் நான்கும் 'நானூறு' எண்ணிக்கையைப் பெற்றவை. நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, அகநானூறு, புறநானூறு என எண்ணிக்கையை நூல் தலைப்பிலேயே இவை கொண்டிருக்கின்றன. முதல் மூன்று நூல்களும் அகப்பொருள் அடிப்படையில் ஒற்றுமை கொண்டிருப்பதைப் போலவே தொகுப்பு முறையிலும் ஒற்றுமை கொண்டுள்ளன. மூன்றிலும் கடவுள் வாழ்த்து புறத்தே அமைகின்றது. கடவுள் வாழ்த்தைத் தவிர்த்து 400 பாடல்கள் இந்நூல்களில் உள்ளன. குறுந்தொகையில் 401 பாடல்கள் என ஒன்று மிகைப்பாடலாக அமைந்துள்ளது. அம்மிகைப் பாடல் ஒன்பது அடியை உடைய 307ஆம் செய்யுளாக இருக்கலாம் எனவும் அதை விலக்கிக் கணக்கிட்டால் நானூறு என்னும் எண்ணிக்கை சரியாகிவிடும் எனவும் உ.வே.சாமிநாதையர் கருதுகின்றார். நற்றிணையில் 234ஆம் பாடல் கிடைக்கவில்லை. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், களவியல் காரிகை ஆகிய நூல்களின் உரையில் காணப்படும் நூல் பெயரில்லாத இரண்டு பாடல்களில் ஒன்று நற்றிணைப் பாடலாக இருக்கலாம் எனக் கருதி நானூறு என்னும் எண்ணிக்கை கணக்கிடப்படுகின்றது. அகநானூற்றில் கடவுள் வாழ்த்துத் தவிர நானூறு பாடல்களும் கிடைத்துள்ளன.

ஆனால் புறநானூற்றில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்துத்தான் 400 பாடல்கள் அமைந்துள்ளன. கடவுள் வாழ்த்து நூலுக்குள் அமைகின்றது. நானூறு என எண்ணிக்கை கொண்ட நான்கு நூல்களில் இந்நூலில் மட்டும் இத்தகைய வேறுபாடு காணப்படுவதன் காரணம் என்னவாக இருக்கக் கூடும்? பதிற்றுப்பத்திலும் கடவுள் வாழ்த்து புறத்தேதான் அமைந்திருக்கக்கூடும்

எனக் கருதுகின்றனர். தொல்காப்பிய உரையிலிருந்து நூல் பெயர் அறியமுடியாத ஒருபாடலைக் காட்டி அது பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலாக இருக்கலாமோ என ஐயம் எழுப்புகிறார் ச.வையாபுரிப்பிள்ளை. ஐங்குறுநூற்றிலும் நூலுக்குப் புறத்தேதான் கடவுள் வாழ்த்து அமைகின்றது. புறநானூற்றில் மட்டும் வேறுபாடு காணப்படுவதற்குக் காரணம் புலப்படவில்லை.

இதைப் பற்றிப் புறநானூறு மர்ரே பதிப்பின் முன்னுரை கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது:

இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட 400 பாடல்கள் உள்ளன. நூற்றைம்பது கலியுள் கடவுள் வாழ்த்தும் உட்பட்டிருத்தல் போல, புறப்பொருள் பற்றிய இத்தொகை நூலில் கடவுள் வாழ்த்தும் நூலின் அங்கமாய் அடங்கியுள்ளது. ஆராய்ச்சியாளரில் ஒருசிலர் கடவுள் வாழ்த்தைத் தவிர்த்து 400 பாடல்கள் இதில் இருந்திருத்தல் கூடும் என்று கருதுகின்றனர்.

கலித்தொகை பிற்காலத்தைச் சேர்ந்தது என்பது பொதுக்கருத்தாகவே உள்ளது. ஆகவே புறநானூற்றைக் கலித்தொகையின் அமைப்போடு இணைத்துப் பார்ப்பது பொருந்தாது. கலித்தொகை தொகுக்கப்பட்ட காலத்தில் கடவுள் வாழ்த்து நூலுக்கு உள்ளே அமைவது என்னும் கருத்து உருவாகிவிட்டிருக்க வேண்டும்.

'வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று'

எனத் தண்டியலங்காரமும்

'வழிபடு தெய்வ வணக்கம் செய்து மங்கல
மொழிமுதல் வகுத்து'

என யாப்பருங்கலக் காரிகையும் கடவுள் வாழ்த்தை நூலின் அங்கமாகச் சொல்கின்றன. ஆனால் பத்துப்பாட்டும் கலி, பரிபாடல் தவிர்த்த எட்டுத்தொகை நூல்களும் தொகுக்கப்பட்ட காலத்தில் இந்த இலக்கணம் இருந்திருக்க வாய்ப்பில்லை எனவும் இவற்றின் கடவுள் வாழ்த்து பிற்காலத்தில் இயற்றிச் சேர்க்கப்பட்டது எனவும் கருதும் க.கைலாசபதி,

"பத்துப்பாட்டிலுள்ள நெடும்பாட்டுக்களும் கடவுள் வாழ்த்து முன்வர நடவாமையால் அவ்வாறு வருதல் வேண்டுமென்ற இலக்கிய மரபு அவை எழுந்த காலப்பகுதியில் இருக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. தொகை நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பனவற்றுக்குப் பிற்காலத்திலேயே கடவுள் வாழ்த்துச் சேர்க்கப்பட்டது" (அடியும் முடியும், ப62) எனக் கூறுகின்றார்.

புறநானூற்றின் கடவுள் வாழ்த்து பற்றிச் சுந்தர சண்முகனாரின் கருத்துக் கீழ்வருமாறு:

"நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய மூன்று நூல்களிலும் கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு பாடல்கள் வீதம் உள்ளன. ஆனால் புறநானூற்றிலோ பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடல் உட்பட நானூறு பாடல்கள் உள்ளன. மேற்கொண்டு இருக்க

வேண்டிய இன்னொரு பாடல் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இந்த நானூறு பாடல் களுக்குள்ளேயே 267ஆம் பாடலும் 268ஆம் பாடலும் கிடைக்கவில்லை.இந்த இரண்டுடன் இன்னும் ஒரு பாடல் கிடைக்கவில்லை எனக் கூறிக் கிடைக்காத பாடல்களின் எண்ணிக்கையை மூன்றாக்கலாம். ஒருவேளை இயற்கையாகவே பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடலையும் சேர்த்துத்தான் நானூறு பாடல்களாகத் தொகுத்தார்களோ என்னவோ! கடவுள் வாழ்த்து அகத்திணையாகாது; புறத்திணையைச் சேர்ந்ததே யாகும். எனவே மற்ற மூன்று அகப்பொருள் தொகை நூல்களில் நானூறு பாடல்களுள் ஒன்றாகக் கடவுள் வாழ்த்துப் பாடலை அடக்காமல் அதனைத் தனியாக முன்னால் அமைத்தனர். ஆனால் புறநானூறு புறப்பொருள் நூல் ஆதலின் நானூறு பாடல்களுக்குள் ஒன்றாகக் கடவுள் வாழ்த்தினையும் சேர்க்க முடிந்தது." (ப.275)

எட்டுத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை என்னும் கருத்து சரியெனக் கொண்டால் புறநானூற்றின் கடவுள் வாழ்த்து நூலுள் அமைந் திருக்க முடியாது. அல்லது நானூறு பாடல்களில் ஒன்றை நீக்கிவிட்டுக் கடவுள் வாழ்த்தை உள்ளே சேர்த்திருக்க வேண்டும். எல்லா நூல்களுக்கும் கடவுள் வாழ்த்தை நூலுக்கு வெளியே வைத்திருக்கும் போது இந்நூலில் மட்டும் ஒருபாடலை நீக்கியிருப் பார்கள் என்பது பொருந்தவில்லை.

ஒருவேளை கடவுள் வாழ்த்து எழுதிச் சேர்க்கப் பட்ட காலத்தில் புறநானூற்றின் பாடல் ஒன்று கிடைக்காமல் போயிருக்கக் கூடுமோ? அதனால் கடவுள் வாழ்த்தை நானூறுக்குள் அடக்கியிருப் பார்களோ? கடவுள் வாழ்த்து புறப்பொருள் சார்ந்தது என்பதால் நூலுக்குள் அடக்கினர் எனக் கொண்டால் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் சார்ந்த நூல்தானே. அதன் கடவுள் வாழ்த்தாகக் கருதப்படும் பாடல் நூலுக்குப் புறத்தேதான் அமைந்திருக்கக்கூடும். இவ்விதம் பல கேள்விகள் தோன்றுகின்றன.

இந்தச் சிக்கலை வேறொரு கோணத்தில் சிந்தித்துப் பார்க்கலாம். கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அனைத்தும் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை எனக் கொள்வதில் பொருளுண்டு. நூல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் தொகுக்கப் பட்டவை அல்ல. ஆனால் அனைத்து நூல்களுக்கும் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' என்னும் புலவர் ஒருவரே கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். ஆகவே பிற்காலத்தில் ஒருவரே எழுதிச் சேர்த்திருக்கக்கூடும் எனக் கருதலாம். அப்படியானால் தொகுக்கப்பட்ட காலத்தில் நூலின் முதல் பாடலாக வைப்பதற்குப் பொருத்தமுடைய பாடலை எவ்விதம் தேர்ந் தெடுத்திருப்பர்? பிற பாடல்களை முன்பின் வைப்பதில் அவ்வளவாகக் கவனம் கொள்ளாமல் இருப்பினும் முதல் பாடல் எது என்பதில் நிச்சயம் கருத்தைச் செலுத்தியிருப்பர். முதல் பாடலை முடிவு செய்ய வரன்முறை ஒன்றைப் பின்பற்றியிருக்கலாம்.

குறுந்தொகையின் முதல் செய்யுள் இது:

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டி யானை
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே

இச்செய்யுளில் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகன், அவனது செயல்கள், இயல்புகள், அவனுக்குரிய குன்றம் ஆகியவை போற்றப்படுகின்றன.

அகநானூற்றின் முதல் பாடல் இவ்விதம் தொடங்குகின்றது:

வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டுப் யானைப் பொதினி...

இவ்வரிகளிலும் முருகன், அவனது செயல்கள், அவனுக்குரிய பொதினி என்னும் குன்றம் ஆகியவை சிறப்பிக்கப்படுகின்றன.

ஐங்குறுநூறு 'வேட்கைப் பத்து' என்னும் தலைப்பில் தொடங்குகிறது. அதன் முதல் பாடல்:

வாழி ஆதன் வாழி அவினி
நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டோமே.

இப்பாடல் 'வாழி' என மங்கலமாகத் தொடங்கு கின்றது. பாடல் முழுதுமே வாழ்த்துத்தான். வேட்கை எனில் விரும்புதல் எனப் பொருள். இங்கு வேட்டல் என்பது வேண்டுதல் எனவும் பொருள்படுகின்றது. பாடல்கள் அனைத்தும் 'என வேட்டோமே' என முடிகின்றன. விளைக வயலே, பால் பல ஊறுக, பகடு பல சிறக்க, அறம் நனி சிறக்க, மாரி வாய்க்க, வளம் நனி சிறக்க என முதல் பத்துப் பாடல்கள் முழுக்கவும் வாழ்த்து இடம்பெறுகின்றது.

நற்றிணையின் முதல் பாடல் இது:

நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்
என்றும் என்தோள் பிரிபு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போல
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின்றி யமையா உலகம் போலத்
தம்மின்றி யமையா நம்நயந் தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பு அறியலரே.

இப்பாடலின் மூன்று அடிகள் கவனத்திற் குரியன.

முதலடி: நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்

ஐந்தாம் அடி: புரைய மன்ற புரையோர் கேண்மை

ஆறாம் அடி: நீரின்றி அமையா உலகம்

உயர்ந்தோர் இயல்பு, அவரோடு கொள்ளும் தொடர்பு, இயற்கையின் சிறப்பு என இவ்வடிகள் அமைகின்றன. இவ்வடிகள் மட்டுமன்றிப் பாடல் முழுவதுமே மேன்மைகளைப் போற்றும் வகையில் அமைந்துள்ளது.

பெருமாள் முருகன் : நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டைச் சேர்ந்தவர். நிழல்முற்றம், ஏறுவெயில், கூளமாதாரி, கங்கணம் ஆகிய பல நாவல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். காலச்சுவடு இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவர். தற்போது நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்.



பதிற்றுப்பத்தின் முதல் பத்து கிடைக்காமையால் அதன் முதல் பாடல் பற்றி அறிய முடியவில்லை. ஆனால் இரண்டாம் பத்திலிருந்து ஒன்பதாம் பத்து வரையுள்ள அனைத்திலும் முதல் பாடல் கடவுளைக் குறிப்பிட்டும் வாழ்த்தும்

தன்மையோடும் அமைந்திருப்பதால் முதற்பத்தின் முதல் பாடலும் நிச்சயம் அவ்விதமே அமைந்திருக்கக் கூடும் எனக் கருதலாம்.

இனிப் புறநானூற்றைப் பார்ப்போம். கடவுள் வாழ்த்தை அடுத்து அமையும் புறநானூற்றுப் பாடல் இப்படித் தொடங்குகிறது:

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல

பஞ்ச பூதங்களின் சிறப்பைக் கூறித் தொடங்கும் இப்பாடல் முழுவதும் போற்றுதல்தான். சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் வாழ்த்தும் இப்பாடல் பாடாண்திணை சார்ந்தது. 'செவியறிவுறூஉ; வாழ்த்தியலுமாம்' என இரண்டு துறைகள் கொடுக்கப்பட்டிருப்பினும் வாழ்த்தியல் என்பதே மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.


ஆகவே ஒவ்வொரு நூலும் தொகுக்கப்பட்ட போது ஏதோ ஒருவகையில் கடவுள் அல்லது இயற்கையைச் சிறப்பிக்கும் போற்றும் பாடலை முதலாவதாக வைக்கும் முறை பின்பற்றப்பட்டுள்ளது என்று கருதமுடிகிறது. நூலுக்குப் புறத்தே அல்லாமல் நூலுக்குள்ளேயே முதல் பாடலாக வாழ்த்தோடு தொடர்புடைய ஒன்றை வைப்பதே சங்க இலக்கியத் தொகுப்பில் பின்பற்றப்பட்டிருக் கிறது. கடவுள் வாழ்த்து நூலின் அங்கம் என்னும் இலக்கணம் தோன்றுவதற்கு முந்தைய காலத்து நூல்கள் இவை. நுவல்பொருளே முதன்மை பெற்றிருந்தபோதும் தொகுத்தோர் வாழ்த்துத் தன்மை கொண்ட பாடலை முதலாவதாக வைத்துள்ளனர். அது தொகுத்தோர் விருப்பம் சார்ந்து நிகழ்ந்திருக்கலாம். எனினும் பிற்காலத்தில் கடவுள் வாழ்த்து நூலின் அங்கம் என்னும் மரபு உருவாவதற்கு இந்த முதல் பாடல் வைப்புமுறை தொடக்கமாக அமைந்திருக்கிறது. மரபு உருவானபின் அதற்கேற்ப இந்நூல்களுக்கும் நுவல்பொருளோடு தொடர்பற்ற தனித்துவமான கடவுள் வாழ்த்துச் சேர்க்கப்பட்டுள்ளது. நூல்களின் பெயர்கள் நானூறு எனஎண்ணிக்கையைக் காரணமாகக் கொண்டிருப்பதால் அதைச் சிதைக்காமல் நூலுக்குப் புறத்தே கடவுள் வாழ்த்து வைக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் புறநானூற்றின் முதல் பாடல் 'மண்திணிந்த நிலனும்' என்னும் பாடலாகத்தான் இருக்க வேண்டும். கடவுள் வாழ்த்தை முதல் பாடலாகப் பிற்காலத்தில் சேர்த்திருக்கக் கூடும். அப்படியானால் நானூறு என்னும் எண்ணிக்கைக்கு ஏற்ப இன்னொரு பாடல் எங்கே? என்னவாயிற்று அது? கடவுள் வாழ்த்துச் சேர்க்கப்பட்ட காலத்தில் அவ்வொரு பாடல் கிடைக்காமல் போயிருக்கலாமா? சங்க இலக்கியங்கள் பெரிதும் பயிற்சியில் இருந்த காலமாகவே அதைக் கருத வேண்டும். ஆகவே பாடல் கிடைக்காமல் போயிருக்க வாய்ப்பில்லை. கடவுள் வாழ்த்தைச் சேர்த்தவர்களுக்கு அவ்வொரு பாடல் நீக்க வேண்டிய பாடல் என்று தோன்றியிருக்கலாம். அவர்களது கருத்துக்கு முரணான பாடலாகவோ அவர்களுக்கு எதிரான பாடலாகவோ அது இருந்திருக்கலாம். இத்தகைய நீக்கத்தின் காரணமாகவே புறநானூற்றில் கடவுள் வாழ்த்தையும் உள்ளடக்கி நானூறு என்னும் எண்ணிக்கை சமன் செய்யப்பட்டிருக்கிறது.

பயன்பட்ட நூல்கள்:

1. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள், மர்ரே பதிப்புகள், 1981, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், இரண்டாம் பதிப்பு.
2. உவே. சாமிநாதையர் (ப.ஆ.), குறுந்தொகை, 1983, அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
3. எஸ். வையாபுரிப் பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள் முதல் தொகுதி, 1989, சென்னை, பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்.
4. சுந்தர சண்முகனார், தமிழ் நூல் தொகுப்புக்கலை, 1972,
5. க. கைலாசபதி, அடியும் முடியும், 1996, சென்னை, பாரி நிலையம்.

■



சங்க இலக்கிய மரபு உருவாக்கம்

வெ. ராஜேஷ்

நவீன வரலாற்று எழுது முறையில் மூல ஆதாரம் ஒரு பிரதான பங்கை வகிக்கிறது. வரலாற்று ஆசிரியர்களால் அடிக்குறிப்பாகப் பயன்படுத்தப்படும் இம்மூல ஆதாரம் வரலாற்றுப் பாதைக்கு அப்பாற்பட்டதன்று. சமூகப் பொருளாதார மற்றும் கருத்தியல் அடிப்படையில் வரலாற்று மூல ஆதாரங்களை ஆராய்தல் அவசியமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பின்பகுதி தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபது வருடங்களுக்குள் தமிழரின் அடையாள இலக்கியமான பாட்டும் தொகையும் முதன்முதலில் அச்சில் வெளிவந்தன. இதே காலப்பகுதியில் நவீன வரலாறு எழுது முறையும் வளர்ந்து வந்ததை நாம் அறிவோம். சங்க இலக்கியமான பாட்டும் தொகையும் பதிப்பிக்கப்பட்ட காலம் தொடங்கி, இன்று வரை இவ்விலக்கியம் பண்டைய தமிழர் வரலாற்றை அறிந்து கொள்ள ஒரு முக்கியமான மூல ஆதாரமாக வரலாற்று ஆசிரியர்கள் மத்தியில் விளங்கி வருகிறது. சங்க இலக்கியத்தை அடிக்குறிப்பாகவும், மூல ஆதாரமாகவும் கொண்டு பண்டைய தமிழர் வரலாற்றை எழுதிய வரலாற்று ஆசிரியர்கள், அவ்விலக்கியம் வரலாற்று சக்திகளால் உருவாக்கப்பட்டன. அவ்விலக்கியம் உருவாகி வளர்ந்து வந்ததற்கும் ஒரு வரலாறு உண்டு என்பதை நினைவில் கொண்டு ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. இலக்கியம் வெறும் வரலாற்று மூலாதாரமன்று. இலக்கியத்திற்கும் ஒரு வரலாறு உண்டு ஆனால் அதை இலக்கிய வரலாறு என்றும் சுருக்கிவிட முடியாது. பண்டைய தமிழர் வரலாற்றை

எழுத முற்பட்ட வரலாற்று ஆசிரியர்கள், 'இலக்கியம்' தொடர்பான கேள்விகளை இலக்கிய அறிஞர் களிடமும், இலக்கிய ஆசிரியர்களிடமும் விட்டு விட்டனர். 'இலக்கியக் கேள்வியும்' ஒரு வரலாற்றுப் பிரச்சனை என்று கொண்டதாக தெரியவில்லை.

'சங்க இலக்கியம்' தொகையாக்கம் குறித்த இக்கட்டுரை 'இலக்கியக் கேள்வியை' உள்ளடக்கிய ஆய்வாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றின் மூலம் சங்க இலக்கிய மரபு உருவாக்கம் பற்றி ஆராய்வதற்கு இங்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. பண்டைய தமிழ் வரலாற்றை மறுகட்டமைப்பதற்கு வரலாற்று ஆசிரியர்களால் அவை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. தெற்காசிய இலக்கிய கலாச்சாரங்களின் மரபு உருவாக்கப் பிரச்சனை குறித்து ஆராயும்போது, வேறுபாடுகள் எதுவுமின்றி அறிஞர்கள் அனைவரும் நவீன காலத்தின் மீதே கவனம் செலுத்தியுள்ளனர். நவீன காலத்திற்கு முந்தைய இலக்கிய கலாச்சாரங்களின் இயங்கியல் விதிகள் பற்றியும், நவீன காலத்தில் அவற்றின் தொடர்ச்சி மற்றும் மாற்றம் பற்றியும் கிட்டத்தட்ட கவனமே செலுத்தவில்லை.[1] இலக்கிய மரபை வரலாற்று ஆய்வுக்கான பொருள் என்று கேள்வியின்றி எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, மரபு உருவாக்கப் போக்கைப் புரிந்து கொள்வது அவசியமாகும். வேறு வார்த்தைகளில் கூறினால், ஒரு இலக்கிய படைப்பு தத்துவ நூலாக்கப்படுவது குறித்து ஆராய வேண்டும். இலக்கியப் படைப்பு தத்துவ நூலாக்கப்படுவது ஒரு நீண்ட கால வரலாற்று நிகழ்வாகும்; அதில் தேர்வு செய்தல், தொகுத்தல், சுருக்குதல், விதிகள் வகுத்தல், பாதுகாத்தல் மற்றும் மாற்றுதல் (transmission) ஆகியவை சம்பந்தப்பட்டதாகும். நாம் ஆராய்ச்சி மேற்கொள்ளும் காலம் நமது யுகத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் துவங்கி ஆரம்ப மத்திய காலம் வரை (பத்தாம் நூற்றாண்டு) நீடிக்கும். தமிழ் இலக்கிய மரபில் சங்க இலக்கியத்தைப் பாதுகாப்பதற்குச் சில வரலாற்றுக் காரணிகளே காரணம் என்றும், அப்படி இல்லை என்றால் சமூக அக்கறை எதுவுமின்றி அவை காணாமல் போயிருக்கும் என்றும் நான் வாதிடுகின்றேன். வரலாற்றுக் காரணிகள் என்று சொல்லும்போது, நாங்கள்தான் கடந்த காலத்தின் நியாயமான வாரிசுகள் என்று கூறிக்கொண்டு ஆளும் மேட்டுக் குடியினரின் தோற்றம் பற்றியும், நில உரிமைகள், வேலைப் பிரிவினை மற்றும் பன்முக வேலைகள் உருவாக்கப்படுதல் ஆகியவற்றின் விளைவாகச் சமூகம் அடுக்குகளாகப் பிரிக்கப் படுதலின் தோற்றம், வர்க்கங்களின் உருவாக்கம், அதன் விளைவாகச் சட்டபூர்வமான அங்கீகாரத் தையும், அதிகாரத்தையும் கைப்பற்றுவதுடன் நேரடியாகத் தொடர்புடைய வர்க்கப் போராட்டம் மற்றும் வர்க்க முரண்பாடுகள் ஆகியவற்றையே குறிப்பிடுகின்றேன்.

கையெழுத்துப் பிரதி (ஓலைச்சுவடி) வடிவில் இருந்த தமிழ் இலக்கியங்களை மீட்டெடுக்கவும், அவற்றை அச்சு வடிவத்திற்கு மாற்றவும் முயற்சிகள் எடுக்கப்பட்ட 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டு காலனியாதிக்க காலகட்டத்தை நான் என்னுடைய துவக்கப்புள்ளியாக எடுத்துக் கொள்கின்றேன்.[2] பத்துப்பாட்டுக்கும், எட்டுத் தொகையின் சில தனித்தனியான செய்யுள் திரட்டுகளுக்கும் பதிப்புரை எழுதும்போது சி.வை. தாமோதரம் பிள்ளையும், உ.வே. சாமிநாதையரும் அந்தக் கையெழுத்துப் பிரதிகளின் மீட்பில் இருந்த தற்செயலான தன்மைபற்றி சுருக்கமாக விவரித்தனர். அவற்றை அளித்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங் களைப் பற்றி விசுவாசத்துடன் பதிவு செய்தனர். தாமோதரம் பிள்ளையும், சாமிநாத அய்யரும் ஆவணப்படுத்தியுள்ள தனிநபர் களாலும், நிறுவனங்களாலும் கையெழுத்துப் பிரதி வடிவில் சங்க இலக்கியங்கள் பாதுகாக்கப்பட்டு வந்தது, அடுத்த தலைமுறையினரிடம் மாற்றிக் கொடுக்கப் பட்டு வந்தது, மற்றும் அவற்றின் இருப்பு ஆகியவை, சங்க இலக்கியப் பிரதிகள் மீட்கப்பட்ட நிகழ்முறையை நாம் அடிக்கடி சொல்வது போல் அவை மீள் கண்டுபிடிப்பு (Rediscovery) என்பது சரியா என்கின்ற கேள்வியை எழுப்புகின்றன. 1926ஆம் ஆண்டு சாமிநாத அய்யர் சென்னையில் ஆற்றிய உரையொன்றில், நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பாரம்பரியமான கல்வி முறையில் பயிற்றுவிக்கப்பட்ட வெகு சிலர் மட்டுமே சங்க இலக்கியம் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டிருந்தனர் என்றும், மற்ற பெரும்பாலோருக்கு சங்கம் என்கிற வார்த்தை மட்டும்தான் தெரியும் என்றும், அவர்கள் அவற்றில் என்ன இலக்கியம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவோ அல்லது அதன் அர்த்தத்தை அறிந்து கொள்ளவோ அலட்டிக் கொள்ளவில்லை என்றும் கூறினார்.[3]

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சங்க இலக்கியத் தொகுப்பு மறு உருவாக்கம் செய்யப் பட்டதை மீள் கண்டுபிடிப்பு (Rediscovery) என்று கூறும் கருத்துக்கு அதீத அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது என்பது எனது வாதம். அச்சடிக்கப் படுவதற்கு முன் அந்தப் பிரதிகள் எப்படிப் பாதுகாக்கப்பட்டு, அடுத்தடுத்து கைமாற்றப்பட்டன என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். இந்த நிகழ்முறையை நீண்ட கால வரலாற்று ரீதியாகப்

புரிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்; அது மரபு உருவாக்கம் மற்றும் தொகுத்தல் ஆகியவை குறித்த ஆய்வை அவசியமாக்குகின்றது. அத்திசை வழியில் பின்வரும் பக்கங்களில் நான் ஒரு பணிவான முயற்சியை மேற்கொள்கிறேன்; சங்க இலக்கியங்களைப் பாதுகாக்கவும், கைமாற்றவும் தேவையான நிலைமைகளை எப்படி சில குறிப்பிட்ட வரலாற்றுக் காரணிகள் உருவாக்கின என்பதை நிரூபிக்கவும் முயற்சிக்கிறேன்.

1


சங்க இலக்கியம் என்பது கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்த எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகியவற்றால் ஆனது. பத்துப்பாட்டைச் சங்க இலக்கியத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்வதைச் சில அறிஞர்கள் எதிர்க்கிறார்கள். ஏனெனில், பண்டைய மரபே அவற்றை இணைப்பதை அனுமதிக்கவில்லை.[4] என்பது அவர்கள் வாதம். சங்கம் என்றால் சபை என்று பொருள். தமிழ் மரபில் புலவர்களின் சபை, அவர்களின் படைப்புகள் இருந்ததற்கான விரிவான விளக்கம் 8ஆம் நூற்றாண்டில் 'இறையனார் அகப்பொருள்' என்கின்ற இலக்கண நூலுக்கான உரையில் தோன்றுகின்றது. புலவர்கள், கடவுளர்கள், துறவிகள் ஆகியோர் பங்கேற்று, செய்யுள்கள் படைத்தளித்த மூன்று சங்கங்களைப் பாண்டிய மன்னர்கள் நிறுவினார்கள் என்று அந்த உரை கூறுகின்றது. ஒவ்வொரு சங்கத்தின் ஆயுட்காலம் குறித்து கூறிக் கொள்ளப்படும் வருடங்களின் எண்ணிக்கை அளவற்றதாகவும், நவீன வரலாற்றுப் புரிதலால் கிரகித்துக் கொள்ள முடியாததாகவும் இருக்கின்றது. முதல் இரண்டு சங்கங்களின் படைப்புகள் காணாமல் போய்விட்டன என்று கூறப்படுகின்றது. மூன்றாவதின் படைப்புகள் என்று அந்த விளக்கவுரை பின்வருபனவற்றைக் குறிப்பிடுகின்றது.

நெடுந்தொகைநானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணைநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல்.

இங்கு தொல்காப்பியம், மற்றும் தனிப்பட்ட செய்யுள் திரட்டுக்களான எட்டுத்தொகை மட்டுமே மூன்றாம் சங்கப் படைப்புகள் என்று குறிப்பிட்டது, பத்துப்பாட்டை சேர்த்துக் கொள்ள வில்லை. எட்டுத்தொகை செய்யுள்களில் சிலவற்றை இயற்றிய ஆசிரியர்கள் சிலர் பத்துப் பாட்டிலும் சில செய்யுள்களை இயற்றியுள்ளனர். இந்த அர்த்தத்தில், அந்த 8ஆம் நூற்றாண்டு உரை ஏன் எட்டுத்தொகையை மட்டும் மூன்றாவது சங்கப் படைப்புகள் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும், பத்துப்பாட்டை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதும் புரியாத புதிராக இருக்கின்றது. 8ஆம் நூற்றாண்டு உரையாளருக்குப் பத்துப்பாட்டு கிடைக்க வில்லையா? இறையனார் அகப்பொருளுக்கான உரை வாய் மொழியாகவே பத்துத் தலைமுறை களுக்கு மாற்றப்பட்டுவந்தது என்றும், உண்மையில் முசிறியைச் சேர்ந்த நீலகண்டன் என்பவர்தான் 8ஆம் நூற்றாண்டில் அதை எழுத்தில் கொண்டுவந்தார் என்றும் கே.என். சிவராஜபிள்ளை கூறுகின்றார்.[5] தனிப்பட்ட செய்யுள் திரட்டுகளின் பெயர்கள் சங்க இலக்கியத்தின் பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அந்தத் திரட்டுகளில் உள்ள செய்யுள்களில் எங்குமே புலவர்களின் சபைக்கான ஆதாரமோ, அவர்கள் ஒருங்கிணைந்து இலக்கியம் படைத்தார்கள் என்பதற்கான குறிப்போ கிடைக்கவில்லை. கிபி 470ல் சமணர்களால் மதுரையில் அமைக்கப்பட்ட திராவிட சங்கம் என்பதிலிருந்து சங்கம் என்கிற சொல் எடுத்தாளப்பட்டுள்ளது என்று சுவெலபில் வாதிடுகின்றார்.[6]

தொகை என்றால் திரட்டு என்று பொருள்; அதற்கு முன்கூட்டியே தேர்வு செய்தலும், சேகரித்தலும், தொகுத்தலும் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாக எட்டுத்தொகை என்றால் எட்டுத் திரட்டுகள் என்று பொருள். எட்டுத்

வெ. ராஜேஷ்: சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) மானுடவியல் மற்றும் சமூகவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ச் செவ்வியல் இலக்கியப் பாடமீட்பு, அச்சுவழி மறு உருவாக்கம் குறித்த தமிழ்ச் சமூக வரலாற்றினை முனைவர் பட்ட ஆய்வேட்டில் ஆராய்ந்துள்ளார். இவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்று "The Making of Sangam Literary Canon and Tamil Identity", in R.Cheran, Darshan Ambalavanar and Chelva Kanaganayagam, (Eds), New Demarcations: Essays in Tamil Studies, Scholar's Press, Toronto, pp.133-147. தற்போது, ஐதராபாத் மத்திய பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் கௌரவ விரிவுரையாளராக உள்ளார்.



தொகையின் ஒவ்வொரு தொகுப்பையும் ஒரு செய்யுள் திரட்டாகப் புரிந்து கொள்ளலாம். குறுந்தொகையில் உள்ள தொகை என்பதன் பொருள் நானூறு சிறு செய்யுள்களின் திரட்டு என்பதாகும். இவ்விதம், குறுந்தொகையில் 203 புலவர்களால் ஆசிரியப்பா வடிவில் இயற்றப்பட்ட காதல் பாடல்கள் இருக்கின்றன. செய்யுள்களை இயற்றிய புலவர்களின் பெயர்களுடன், தொகுத்தவர்கள், மற்றும் புரவலர்களின் பெயர் களையும் சேர்த்து மரபு பாதுகாத்து வந்திருக் கின்றது.[7] அவ்வாறாக, பூரிக்கோ குறுந்தொகையைத் தொகுத்தார்; செய்யுள்கள் அவற்றின் வரிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டன என்பதையும் மரபு நமக்குத் தெரிவிக்கின்றது. எடுத்துக்காட்டாக, நான்கிலிருந்து எட்டு வரிகள் வரை உள்ள செய்யுள்கள் மட்டும் குறுந்தொகையில் தொகுக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை செய்யுள்களின் நீளத்திற்கும், அகநானூறு செய்யுள்களின் நீளத்திற்கும் இடையிலான அளவுள்ள, அதாவது 9 முதல் 12 வரிகள் உள்ள செய்யுள்களால் ஆனது நற்றிணை. இந்த செய்யுள் திரட்டின் தொகுப்பாளர் பெயர் தெரியவில்லை. ஆனால், பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதியின் உத்தரவால் இயற்றப்பட்டது என்று மரபு தெரிவிக்கின்றது. அகநானூறு என்றால் அகம் பற்றிய நானூறு பாடல்கள் என்று பொருள். பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் ஆதரவுடன் உருத்திரசன்மர் இதைத் தொகுத்தார். இந்த செய்யுள்களின் நீளம் 13 லிருந்து 31 வரிகள் வரை உள்ளது.

சங்கப் பாடல்கள் மூலத்தில் எழுதப்பட்டவையா அல்லது வாய்மொழியாகப் பாடப்பட்டவையா என்றொரு விவாதம் அறிஞர்கள் மத்தியில் இருக்கின்றது.[8] கி.பி முதலாம் நூற்றாண்டிலிருந்து எழுதி பாடப்பட்டு வந்த சங்கப் பாடல்கள் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வாக்கில் தொகுக்கப்பட்டன. 'சில செய்யுள்கள் உண்மையில் இயற்றப்பட்ட காலத்திற்கும் அவை தொகுக்கப்பட்ட காலத்திற்கும் வேறுபாடு இல்லாமல் இருக்கலாம்; இரண்டுமே ஏககாலத்தில் நிகழ்ந்திருக்கலாம்' என்று கமில் சுலவபில் கூறுகின்றார்.[9] புறநானூறு தொகுக்கப் பட்டது குறித்து நம்மிடம் தகவல் எதுவுமில்லை. பதிற்றுப்பத்து பிரத்யேகமாக சேர மன்னர்களின் புகழ் பாடக் கூடியதாகும்.[10] சேர மன்னர்களின் ஆதரவில் அவை தொகுக்கப்பட்டிருக்கும் சாத்தியம்தான் அதிகம். கலித்தொகையும், பரிபாடலும் எட்டுத்தொகையின் பகுதிகள் என்று மரபு கூறியபோதும், இரண்டுமே சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் ஒரே ஆசிரியர்களால் இயற்றப்பட்டவை என்பது அறிஞர்கள் வட்டாரத்தில் நன்கு நிறுவப் பட்டுள்ளது. அறிஞர்கள் இந்த செய்யுள் திரட்டுகள் பிந்தைய காலத்தைச் சேர்ந்தவை என்று கருதுவதற்குக் காரணம், அவை இந்தோ ஆரிய மொழியில் இருந்து இரவல் பெறப்பட்ட வார்த்தைகளைக் கொண்டிருப்பதும், மற்ற செய்யுள் திரட்டுகளில் இல்லாத அந்நிய சிந்தனைக் கொள்கைகளைக் கொண்டிருப்பதுதான்.[11] இவ்வாறாக, எட்டில் ஆறு செய்யுள் திரட்டுகள் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வாக்கில் தொகுக்கப் பட்டிருக்க வேண்டும். இந்த ஆறு செய்யுள் திரட்டுகளின் மொழி, வடிவம், சிந்தனை உள்ளடக்கம், பாடு பொருளின் ஒற்றுமை ஆகியவை இத்திரட்டுகள் ஒரே காலத்தில் இயற்றப்பட்டு, தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

மரபு தெரிவிக்கும் செய்யுள் திரட்டுகளின் புரவலர்கள் மற்றும் தொகுப்பாளர்களின் பெயர்களை நாம் எவ்வளவு தூரம் நம்புவது? இந்த மரபின் நம்பகத்தன்மை குறித்து கருத்து கூறும்பொழுது, 'இத்தகைய பாரம்பரியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அந்த மன்னர்கள் வாழ்ந்த காலத்தில் இந்த செய்யுள்கள் தொகுக்கப்பட்டன என்ற முடிவிற்கும், இந்த அகப்பாடல்களின் மூன்று தொகுப்புகளிலும், புறநானூற்றிலும் இடம் பெற்றுள்ள நபர்களின் வாழ்நாளிலேயே கூட தொகுக்கப்பட்டிருக்கலாம் என்ற முடிவிற்கும் அது நம்மை இட்டுச் செல்லும்' என்று ஜே.ஆர்.மார் குறிப்பிடுகின்றார்.[12] இந்த மரபு நம்பத்தக்கது என்று கருதப்பட்டாலும் இந்த செய்யுள்களைத் திரட்டாகத் தொகுப்பதற்கான காரணங்கள் பற்றி ஆராய்வது பொருத்தமாக இருக்கும்.

வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்தைச் சேர்ந்த இந்த வம்சாவழி மன்னர்களுக்கு இந்த செய்யுள்கள் தொகுப்பாகத் திரட்டப்படுவதை ஆதரிக்க வேண்டிய அவசியம் என்ன இருந்தது? பழங்குடியின ஆட்சி மரபின் மறைவும், அதன் பலனாகக் கடந்த காலத்தின் இலக்கிய ஆதாயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளலும் செய்யுள்கள் தொகுக்கப்பட்டதற்குக் காரணம் என்று சிவத்தம்பி கூறுகின்றார். சங்கப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்கள் என்பதால், எழுத்தறிவு பரவியபோது, அழியும் நிலையிலிருந்த வாய்மொழிப் பாடல்கள் தேர்வு செய்யப்பட்டு, தொகுத்து, எழுதப்பட்டன என்று அவர் மேலும் வாதிடுகின்றார்.[13] ஆரம்ப காலத் தமிழகத்தின் வேந்தர்கள் மற்றும் அரசர்கள் ஆகிய உச்சபட்ச அரசியல் அதிகாரம் படைத்தவர்களே செய்யுள் களைத் தொகுத்து செய்யுள் திரட்டுகளாக ஆக்கும்படி ஆணையிட்டார்கள் என்பதை

வலியுறுத்திக் கூற வேண்டியிருக்கின்றது. ஆரம்பகால தமிழகத்தில் இருந்த அரசியல் அமைப்பை ஆராய்ந்தால் பல்வேறு விதமான அரசியல் தலைமைகள் ஏககாலத்தில் இருந்தன என்பது தெரிய வருகின்றது. கீழிருந்து மேலாக இறை, கோ, கிழவன், வேளிர், மன்னன், வேந்தர் மற்றும் அரசர் என்கின்ற வரிசையில் அத்தலைமைகள் இருந்தன. இவற்றில் ஒரே அளவு அதிகாரத்திற்கு வெவ்வேறு பெயர்களும் கொடுக்கப்பட்டிருப்பதும் உள்ளது. இந்த அரசியல் ஏற்பாட்டின் காரணம் பொருளாதார வளர்ச்சியும், சமச்சீர் அற்ற தன்மையுமே ஆகும். அதற்கு மாறாத்தன்மையும், சம்பிரதாயமான வழக்கங்களும் கொண்ட திணைக் கோட்பாடே எடுத்துக் காட்டாக இருக்கின்றது.[14]

ஆரம்ப காலத் தமிழக வரலாற்றை ஆய்வு செய்து கொண்டிருக்கும் அறிஞர்கள் மத்தியில் அக்காலத்திய தமிழக அரசியல் அமைப்பின் தன்மையை வகைப்படுத்துவதில் ஆழமான வேறுபாடுகள் இருக்கின்றன. நில உடமைகள் இல்லாத, அரசு என்பதற்கு முந்தைய இனக்குழுத் தலைமை கொண்டதாகவே ஆரம்பகாலத் தமிழக அரசியல் அமைப்பு இருந்தது என்று வாதிடப் படுகின்றது; அதன் பலனாக, சங்கப் பாடல்களை மதிப்பிடுவதற்கு அதுவே அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்பட்டது. 'வீரயுகப்பாடல்களின் மொழி பாண்டித்தியம் மிக்கதாகவும், மிக உயர்வானதாகவும் பெரும்பாலும் கருதப்படுகின்றது. வாய்மொழிப் பாடல்கள் விஷயத்தில் இந்தக் கண்ணோட்டம் அர்த்தமற்றதாக இருக்கின்றது' என்று சங்கப் பாடல்களின் மொழி பற்றிக் குறிப்பிடும்போது ராஜன் குருக்கள் கூறுகின்றார்.[15] பொருள் உற்பத்தியின் வளர்ச்சிக்கும் கலை உற்பத்தியின் வளர்ச்சிக்கும் இடையில் சமமற்ற உறவு இருப்பது சாத்தியமே என்று கிரேக்க செவ்வியல் கலை மற்றும் இதிகாசங்கள் குறித்து மார்க்ஸ் கருதியிருக் கின்றார். ஆரம்ப காலத் தமிழகத்தின் பொருளியல் நிலைமைகள் குறித்த தங்களது புரிதலின் அடிப்படையில் சங்கப் பாடல்களின் இயல்பைக் கேள்வியின்றி ஏற்றுக் கொண்ட சமூக அமைப்பின் மாதிரிக்கு ஏற்பவே கலை இலக்கியம் இருக்கும் என்கின்ற கோட்பாட்டை ஆதரிப்பவர்களின் மனதில் இந்த உண்மை தோன்றவேயில்லை. கிரேக்க செவ்வியல் கலை மற்றும் இதிகாசத்தின் சக்தி குறித்தும், அழகியல் குறித்தும் கருத்து கூறும்பொழுது, '...கிரேக்க கலையும், இதிகாசமும் சில குறிப்பிட்ட சமூக வளர்ச்சி வடிவங்களுக்கு உட்பட்டதே என்பதைப் புரிந்து கொள்வதில் அல்ல சிரமம் இருப்பது. இருந்தும் அவை நமக்கு கலாபூர்வ ஆனந்தத்தை அளிக்கின்றன என்பதிலும், ஒரு குறிப்பிட்ட வகையில் அவை ஒரு தர மாதிரியாகவும், அடைய முடியாத முன்மாதிரி யாகவும் கருதப்படு வதில்தான் சிரமம் இருக்கின்றது' என்று மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.[16]

மார்க்சின் குறிப்பறிந்து கொண்டு, ஆரம்பகாலத் தமிழகத்தில் உற்பத்தி சக்திகள் வளர்ச்சி அடைந்திராத நிலையில், அளவைவிட தரத்திற்குக் கூடுதல் அழுத்தம் கொடுத்த இலக்கிய தளத்தில் உற்பத்தி அன்றைய பொருளியல் நிலைமைகளை விட மிகவும் உயர்ந்திருந்தது என்பதையும், அதன் பலனாக அவை தமிழ் இலக்கிய மரபில் ஒரு தர மாதிரியாகவும், அடைய முடியாத முன்மாதிரி யாகவும் கருதப்பட்டது என்பதையும் வலியுறுத்த வேண்டியது அவசியமாகும். சங்கப் பாடல்களை 'சான்றோர் செய்யுள்' என்று மத்திய கால அறிஞர்கள் எவ்விதம் தொடர்ந்து உறுதியாகக் கூறிவந்தார்கள் என்பதைக் கைலாசபதி எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது சங்கப்பாடல்களை இயற்றியவர்களுக்கு மத்திய கால உரையாளர்கள் மிக உயர்ந்த மரியாதை அளித்து வந்ததை மிக அழுத்தமாக கோடிட்டுக் காட்டுகின்றது.[17]

> சங்க இலக்கியம் என்பது கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்த எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகியவற்றால் ஆனது. பத்துப்பாட்டை சங்க இலக்கியத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்வதை சில அறிஞர்கள் எதிர்க்கிறார்கள்.

சங்கப் பாடல் திரட்டுகளில் உள்ள அக, புற இலக்கிய மரபினை புலவர்கள் திட்டமிட்ட வகையில் தன்வயமாக்கிக் கொண்டனர். பின்னர், வாய்மொழியாகப் பாடும் மரபிலிருந்து தெளிவாக வேறுபட்ட ஒரு குழுவாக அமைந்துகொண்ட இந்தப் புலவர்கள் குழு பாடல்களில் வர்ணிக்கப் படும் உள்ளூர் சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை அப்படியே பதிவு செய்தனர். புலவர் களால் இயற்றப்பட்ட இந்தச் செய்யுள்கள் சங்க காலத்தின் முடிவில் திரட்டுகளாகத் தொகுக்கப் பட்டது இந்த உள்ளூர் சடங்குகளைப் பலப்படுத்தி, அவற்றுக்கு ஒரு வடிவம் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட திட்டமிட்ட முயற்சியாகும்; அப்படி ஒரு திட்டவட்டமான வடிவம் கொடுப்பது

அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்கான முன்தேவையாகும். இந்தப் பாடல்களைத் தொகுக்குமாறு உச்சபட்ச அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் உத்தரவிட்டார்கள் என்கிற உண்மையே, இப்பாடல்களில் வர்ணிக்கப்படுகின்ற சமூகங்களின் வித்தியாசங்கள் நிறைந்த உள்ளூர் சடங்குகளின் மீது ஆதிக்கமும், கட்டுப்பாடும் செலுத்த வேண்டும் என்கின்ற அம்மன்னர்களின் ஆசைக்குச் சாட்சியாக இருக்கின்றது. செய்யுள்கள் தொகுக்கப்பட்டதற்கான நோக்கம் குறித்து கருத்து தெரிவிக்கும்போது, 'இவ்விதத்தில், சங்கப் பாடல்கள் தொகுக்கப் பட்டதானது இலக்கிய வரலாற்று ஆர்வத்திற்குரிய விஷயம்' என்று சிவத்தம்பி கூறுகின்றார்.[18] செய்யுள்கள் தொகுக்கப்பட்டது வெறும் இலக்கிய வரலாற்று ஆர்வத்தினால் மட்டுமல்ல என்பதையும், அதைவிட செல்வாதாரங் களின் மீது ஆதிக்கம் செலுத்துவது குறித்த விஷயம், அல்லது, வேறு வார்த்தைகளில் கூறினால், பொருளியல் தேவையே அந்தச் செய்யுள்களைத் திரட்டுகளாகத் தொகுக்கும்படி தூண்டியது என்பதை அழுத்தமாகச் சொல்ல வேண்டும்.

சரியாக என்ன பொருளியல் தேவை ஆரம்ப கால தமிழகத்தின் உச்சபட்ச அதிகாரம் படைத்தவர்களைச் செய்யுள்களைத் தொகுக்குமாறு புலவர்களுக்கு உத்தரவிடும்படி தூண்டியது? புலவர்களுக்கும் புரவலர்களுக்கும் இடையில் ஆரம்பகாலத் தமிழகத்தில் ஒரு குறிப்பான உறவு இருந்தது. புரவலர்கள் புலவர்களுக்குப் பரிசளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது; புரவலரால் அப்படிச் செய்ய முடியவில்லை என்றால், அவர்கள் புலவர்களால் சபிக்கப்படு வார்கள். நாணம், அறம், பழி போன்ற பண்பாட்டுக் கோட்பாடுகளைப் புலவர்கள் உதவிக்கு அழைப்பது ஒழுங்கை நிலைநாட்டவும், சில சமயம் புரவலர் களின் மத்தியில் அச்சத்தையும் உண்டாக்கியது. புலவர்களுக்கு அளிக்கப்படும் பரிசுகளில் யானை, தங்கம், விலை மதிப்புள்ள வைரம் போன்ற கற்கள், ஆடைகள் மற்றும் உணவு ஆகியவை அடங்கும். கவிதைகளில் காணப் படும் கவிஞர்களுக்குச் செய்யப்பட வேண்டிய கடமைகள் என்று பொருள்படும் 'பாண்கடன்' என்கிற சொல், புலவர் களுக்குப் பரிசளிக்க வேண்டியது புரவலர்களின் கடமை என்பதை அழுத்தமாக கோடிட்டுக் காட்டுகின்றது. செல்வாதாரங்கள் கொள்ளையடிப் பதன் மூலம் திரட்டப்பட்டன; புலவர்களுக்குப் பரிசளிப்பதன் மூலம் அவை மறுவிநியோகம் செய்யப்பட்டன.

ஆரம்பகாலத் தமிழகத்தில் முறையான அதிகார வர்க்க இயந்திரம் உருவாகியிருக்கவில்லை. இத்துடன் நிலவுடைமையும் இருக்கவில்லை. இவையிரண்டும் அரசு என்பது உருவாவதற்கு முந்தைய இனக்குழு சமுதாயத்திற்கு உரிய பண்புகள் என்று சரியாகவே வலியுறுத்தப்படு கின்றது.[19] இந்த வம்சாவழிக் குலத் தலைவர்கள் மத்திய தரைக்கடல் பகுதிகளுடனான வர்த்தகத்தில் பங்கேற்கவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் முயற்சித்தார்கள் என்பது அவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட அவர்கள் முயற்சித்ததிலிருந்து தெளிவாகின்றது.[20] இத்தகைய சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் நதிப்படுகைகளைச் சேர்ந்த வம்சாவழிக் குலத்தலைவர்கள் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் செல்வாதாரங்களைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது தவிர்க்க முடியாததாக ஆகின்றது. அவர்கள் கொள்ளையடிப்பதற்காகப் படையெடுப்பதன் மூலம் இதைச் செய்தார்கள். குறுநில மன்னர்கள் பெரும்பாலும் வேந்தர்களுக்குச் சேவை புரிந்தார்கள்.

குறுநில மன்னர்களுடன் திருமண பந்தம் உருவாக்கிக் கொள்வதும் கொங்கு போன்ற சுற்றுவட்டாரப் பகுதிகளின் செல்வாதாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட மற்ற வழிமுறைகளாகும். பாணர்களுக்கும், புலவர் களுக்கும் பரிசளிக்க வேண்டும் என்றால் நதிப்படுகைகளையொட்டிய செல்வாதாரங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை வம்சாவழிக் குலத்தலைவர்களுக்கு இருந்தது. பாணர்களுக்கும் புலவர்களுக்கும் புரவலர்கள் பரிசளிக்கவில்லை என்றால் அது அவர்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறியதாகக் கருதப்படும். பாணர்கள், புலவர்கள் ஆகியோருக்கு அவர்கள் பட்டிருக்கும் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியதாகவும் கருதப்படும். அதன் விளைவாக அவர்கள் நம்பகத்தன்மை இழந்தவர்களாக ஆவார்கள். சங்கப் பாடல்களில் உள்ள காதல் மற்றும் வீரப் பாடல்கள் இந்தப் போக்குகளைப் பிரதிபலிக்கின்றன. ஆரம்ப காலத் தமிழகத்தில் வளர்ந்துவந்த உச்சபட்ச அரசியல் அதிகாரம் படைத்த மன்னர்கள் போர்த் தத்துவமும், வீரமும், காதலும் நிறைந்த பாடல்களைச் செய்யுள் திரட்டுகளாகத் தொகுக்குமாறு தங்களது புலவர்களுக்கு ஆணையிட்டார்கள்.

களப்பிரர்களின் படையெடுப்பு அச்சத்தின் காரணமாகச் செய்யுள்கள் திரட்டுகளாக தொகுக்கப்பட்டன என்று இதற்கு மாற்றாக வாதிடுவது சாத்தியம்தான். தமிழ்நாட்டில் களப்பிரர்களின் ஆட்சிக் காலம் மற்றும் அதன் தன்மை பற்றி அறிஞர்கள் மத்தியில் பல்வேறு

விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.[21] வம்சாவழி இனக்குழுத் தலைவர்களுடைய அரசியலுடன் இலக்கிய உற்பத்தி நெருக்கமாகப் பிணைக்கப் பட்டிருந்ததால் செய்யுள்கள் திரட்டுகளாகத் தொகுக்கப்பட்டதற்கு அந்நிய படையெடுப்பு குறித்த அச்சம் ஒரு காரணியாக இருந்திருக்கலாம். நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி இறையனார் அகப்பொருளுக்கான உரை சங்கப் பாடல்களின் திரட்டு வடிவத்தைத் தெளிவாகக் கூறுகின்றது. நாம் மரபை ஏற்றுக் கொண்டால் அந்த செய்யுள்கள் தொகுக்கப்பட்ட காலத்தை கி.பி நான்காம் நூற்றாண்டிற்கு அப்பால் கொண்டு செல்ல முடியாது.

இவ்வாறாக, மூன்றாம் நூற்றாண்டின் இறுதி வாக்கில், நெடுந்தொகைநானூறு, குறுந்தொகை நானூறு, நற்றினைநானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து ஆகியவை தொகுக்கப்பட்டன. பதிற்றுப்பத்தின் பதிகங்கள் அதே காலத்தில் இயற்றப்பட்டனவா என்பது சந்தேகத்திற்கு உரியது. பதிற்றுப்பத்திற்கான பதிகங்கள் செய்யுள் நடையும், உரை நடையும் கலந்தவையாக இருக்கின்றன. சேர மன்னர்கள் புலவர்களுக்கு நிலதானம் வழங்கியதையும் பதிவு செய்துள்ளன. பதிகங்கள் சங்க காலத்திற்குப் பிந்தைய காலத்தில், அதாவது, கி.பி மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுதப்பட்டிருக்க வேண்டும். சேர மன்னர்களின் வீரதீரச் செயல்கள் குறித்த கதைகளும், அவர்களைப் புகழ்ந்த புலவர்களின் பெயர்களும் பொது மக்களின் நினைவில் இருந்திருக்கும்; பதிகங்களை எழுதும்போது, மரபைப் பதிவு செய்யும் தனிநபர் ஓரளவு புனைவையும் சேர்த்திருக்கக் கூடும். புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்து ஆகியவற்றைத் தொகுத்தவர்களின் பெயர், தொகுக்கும்படி உத்தரவிட்ட புரவலர்களின் பெயர்கள் குறித்து மரபிடம் நமக்கு எந்தத் தகவலும் இல்லை. அநேகமாக சேர மன்னர்களே பதிற்றுப்பத்தைத் தொகுக்குமாறு உத்தரவிட்டிருக்க வேண்டும்; பாண்டிய/சோழ மன்னர்கள் புறநானூற்றைத் தொகுக்குமாறு உத்தரவிட்டிருக்க வேண்டும். தனிப்படைப்புகளான பத்துப்பாட்டும் கூட இக்காலத்தில்தான் இயற்றப்பட்டிருக்க வேண்டும்; திருமுருகாற்றுப்படை தவிர. எனினும், இக்காலத்தில் தனித்திரட்டுகளாக செய்யுள்கள் (கலித்தொகை, பரிபாடல் தவிர) தொகுக்கப்பட்டன என்பதையும், பிந்தைய நூற்றாண்டுகளில் அவை எட்டுத்தொகை எனும் பெருந்திரட்டாக மீண்டும் தொகுக்கப்பட்டன என்பதையும் வலியுறுத்த வேண்டியிருக்கின்றது.

2

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இறையனார் அகப்பொருளுக்கான 8ம் நூற்றாண்டு உரையில்தான் சங்கம் இருந்தது பற்றிய விரிவான விவரங்களைப் பெறுகின்றோம்.[22] அந்த உரையின்படி, இலக்கணத்தை உருவாக்கியது சிவபெருமான்தான். தமிழ் மண்ணில் சைவ, வைணவ பக்தி ஊக்கம் பெற்றிருந்தபோது இந்த உரை எழுதப்பட்டது. மேலும், இந்த காலகட்டத்தில் தான் ஜைன, பவுத்த மதங்களுக்கு எதிரான வாதங்கள் பரவியிருந்தது. இந்த உரை 'ஜைன, பவுத்த சங்கங்களைக் கைப்பற்றி, அவற்றுக்கு இந்து வடிவமும், உள்ளடக்கமும் கொடுக்க முயற்சிக்கின்றது' என்று காசிவத்தம்பி கூறுகின்றார்.[23] என்றாலும், அத்தகைய முயற்சிகளில் உள்ளுறை யாகப் பொதிந்துள்ள மதச்சார்பற்ற அர்த்தத்தைப் புரிந்து கொள்ள இங்கு நாம் முயற்சிக்கின்றோம்.

நெடுந்தொகைநானூறு, குறுந்தொகைநானூறு, நற்றிணைநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பதுகலி, எழுபது பரிபாடல் ஆகிய தனித்திரட்டுகள் இருந்ததை மட்டும் அந்த உரை குறிப்பிடுவது, அவை இன்னும் சேகரிக்கப்பட்டு எட்டுத்தொகை எனும் பெருந்திரட்டாகத் தொகுக்கப்படவில்லை என்கிற உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது. கலித் தொகையும், பரிபாடலும் இக்காலத்தில் எழுதப் பட்டன என்பது இந்த உரையிலிருந்து நிச்சயமாகத் தெரிகின்றது.

சங்கப் பாடல்களைத் திரட்டுகளாகத் தொகுத்ததற்கும் அடையாளத்தை வலியுறுத்தும் அரசியலுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. எனவே புதிதாக தோன்றிக் கொண்டிருந்த ஆளும் மேட்டுக்குடிகளின் நியாயபூர்வ அங்கிகாரம் தொடர்பான பிரச்சனைகளைப் பரிசீலிப்பது பொருத்தமாக இருக்கும். எட்டில் முதல் ஐந்து திரட்டுகளின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் நியாயபூர்வ அங்கிகாரம் பெறும் நிகழ்முறையுடன் தொடர்புடையவையாக இருக்கலாம் என்பதால் அவற்றுக்குக் கணிசமான கவனம் தேவைப் படுகின்றது. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகியவற்றில் பாரதம்பாடிய பெருந்தேவனார் எழுதிய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இருக்கின்றன. இந்த கடவுள் வாழ்த்துப் பாடல்களின் பாடுபொருள் திரட்டுகளில் உள்ள மற்ற பாடல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அகநானூற்றிலும், புறநானூற்றிலும் சிவனைப் புகழும் கடவுள் வாழ்த்துப் பாடல் உள்ளது. நற்றிணையிலும் ஐங்குறுநூறிலும் விஷ்ணுவைப் புகழும் கடவுள் வாழ்த்துப் பாடல்

உள்ளது. குறுந்தொகையில் மட்டும்தான் முருகனைப் புகழும் கடவுள் வாழ்த்துப் பாடல் இருக்கின்றது. திரட்டுகளில் உள்ள மற்ற பாடல் களிலிருந்து கடவுள் வாழ்த்துப் பாடல் கருத்து உள்ளடக்கத்தில் அந்நியமாக இருக்கின்றது என்பதை ஜான் ரால்ஸ்டன் மார் காட்டியுள்ளார்.[24] பதிற்றுப்பத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலைக் காணவில்லை; அது இந்தத் திரட்டிற்காகவும் எழுதப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம். கலித்தொகை, பரிபாடல் ஆகிய எஞ்சியுள்ள திரட்டுகளில் பெருந்தேவனார் எழுதிய கடவுள் வாழ்த்துப் பாடல் எதுவும் இல்லை.

மற்ற திரட்டுகளுக்கு பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எழுதியபோது, கலித் தொகையும், பரிபாடலும் தொகுக்கப் பட்டிருந்தனவா இல்லையா என்பது சந்தேகத்திற் குரியது. ஆனால், ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்த இரண்டு படைப்புகளும் மற்ற திரட்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்டவையே என்பதில் அறிஞர்கள் மத்தியில் பொதுவாக ஒத்த கருத்து இருக்கின்றது. பெருந்தேவனார் 9ஆம் நூற்றாண்டு நந்திவர்ம பல்லவனின் சமகாலத்தவராக அல்லது பிந்தைய காலத்தவராக இருக்க வேண்டும் என்று மார் ஏற்கத்தக்க வகையில் வாதிட்டுள்ளார்.[25] சங்க காலத்தில் இருந்த வேத, சாஸ்திர, புராணக் கூறுகள் பற்றி குறிப்பிடும்போது இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்களை மூலத் திரட்டுகளின் பகுதியாக எம்.ஜி.எஸ்.நாராயணன் கருதுவது காலக் கணிப்புப் பிழையே.[26] சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களுக்கு மத்திய கால தமிழகத்தில் மத அடையாளம் கொடுக்கப்பட்டது என்கின்ற உண்மை அவருக்குத் தோன்றவில்லை.

செய்யுள் திரட்டுகளுக்குப் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இயற்றப்பட்டது ஆரம்ப மத்திய கால தமிழகத்தில் பக்தி இயக்கத்தின் ஆதிக்கம் இருந்ததைப் பிரதிபலிக்கின்றது. தமிழ் பக்தி மதத்தின் வரலாற்றியல் ஏதேனும் ஒரு வகையில் ஆழ்வார், நாயன்மார் கவிதைகளுக்கும், சங்கக் கவிதைகளுக்கும் இடையில் அவற்றை இயற்றும்போது பிரயோகிக்கப்பட்ட உருவகங்கள், உவமைகள் விஷயத்தில் தொடர்பு இருந்ததை வலியுறுத்துகின்றது.[27] செவ்வியல் காலத்தின் அகம், புறம் மரபுகளை அடிப்படையாகக் கொண்டு பக்தி இயக்கப் புலவர்கள் தங்கள் பாடல்களை இயற்றியிருந்தனர். எனினும், சிந்தனை உள்ளடக்கம் மிகவும் வேறுபட்டிருந்தது. பக்திக் கவிஞர்களில் சிலரேனும் செவ்வியல் மரபில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். இது அவர்கள் வாழ்ந்த காலத்தில் செவ்வியல் இலக்கியங்கள் இருந்தது பற்றிய கேள்விக்கு நம்மை மீண்டும் அழைத்து வருகின்றது.

தேசியவாத வரலாற்றியலில் தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் இருண்ட காலம் என்றொரு வாதம் இருக்கின்றது. (3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 6ஆம் நூற்றாண்டு பிற்பகுதி வரை). களப்பிரர்கள் சமணத்தை ஆதரித்தார்கள். பாண்டிய நாட்டில், செவ்வியல் மரபை ஆதார மாகக் கொண்டிருந்த இலக்கியங்களின் உற்பத்தியில் தடை ஏற்பட்டது. அமைதி, நற்குணம், ஒழுக்கம் ஆகிய பண்புகளை வலியுறுத்திய அறநூல்கள் இக்காலத்தில் இயற்றப் பட்டன.[28] சமணர்களின் ஆதரவு பெற்ற களப்பிரர் ஆட்சிக் காலத்தில் வாய்மொழிக் கவி பாடும் மரபில் தொடர்ச்சியின்மை ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இசையும், பாடல்களும் சமணர்களால் நிந்திக்கப்பட்டது. பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் வாய்மொழிப் பாடல் மரபு தடைபட்டதை மு.அருணாசலம் எடுத்துக் காட்டியுள்ளார்.[29]

மதுரையில் பொருள் விளக்கம் கூறுவதில் தனித்திறன் பெற்றவர்கள் இல்லாத காரணத்திலேயே இலக்கணத்தைச் சிவபெருமானே எழுதினார் என்று கூறும் கதை ஒன்று இறையனார் அகப் பொருளுக்கான உரையில் இருக்கின்றது. ஆரம்பகாலப் பக்திக் கவிஞர்கள் பாண்டிய நாட்டிற்கு வெளியிலிருந்து வந்தவர்கள். அங்கு சொல் மற்றும் யாப்பில் பாண்டித்தியம் பெற்ற கவிஞர்கள் இருந்தனர் என்கின்றது அந்த உரை. தொல்காப்பியம் இருக்கும் பொழுது இறையனார் களவியலைக் குறிப்பிடுவதற்கு காரணம் என்ன? இறையனார் களவியல் உரையை இயற்றுவதற்கு ஆரம்ப மத்தியகால (early medieval) பாண்டிய மன்னர்கள் ஆதரித்தனர். அவ்வுரையில் உள்ள கதையின்படி, மன்னரின் அரண்மனையில் சிவபெருமான் தானே எழுதிய இலக்கணத்தைக் கண்டுபிடித்தது ஒரு பிராமணர் என்பதை சொல்ல வேண்டும். வேறு வார்த்தைகளில் சொன்னால், புதிதாக எழுந்து கொண்டிருந்த மேட்டுக்குடியினர் மரபை தன்வயமாக்கிக் கொண்டிருந்தனர் என்பதை பிரதிபலிக்கிறது.

புதிதாக தோன்றிக் கொண்டிருந்த மேட்டுக் குடியினர் மரபைத் தன்வயமாக்கிக் கொண்டதன் பொருளியல் பின்னணியைக் கிரகித்துக் கொள்வது அவசியமாகும். களப்பிரர் ஆட்சிக் காலம் நிலவுடமையின் தோற்றத்தைக் கண்டது; கி.பி 5ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டு ஒரு பிராமணருக்கு நிலமும், அநேகமாக ஒரு கோவிலும் தானமாக அளிக்கப்பட்டதைப் பதிவு

செய்திருப்பதிலிருந்து இது தெளிவாகின்றது.[30]

களப்பிரர்கள் பிராமணத்துவத்திற்கு எதிரானவர்கள் என்று வரலாற்றுப் பதிவுகளில் அடிக்கடி சித்தரிக்கப்படுகின்றது. களப்பிரர் காலத்தைச் சேர்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டதானது அத்தகைய அனுமானத்தின் மீது சந்தேகத்தை எழுப்புகின்றது. எனினும், களப்பிரர் ஆட்சிக்காலத்தில் வணிக சமுதாயம் செழிப்படைந்தது என்பது சமண, பவுத்த மதங்களின் எழுச்சியிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. களப்பிரர் காலத்தில் வஜ்ரா நந்தியால் மதுரையில் திராவிட சங்கம் நிறுவப்பட்ட உண்மை அனைவரும் அறிந்ததுதான்.[31] வணிக சமுதாயத்தின் ஆதரவைப் பெற்ற களப்பிரர்கள் சங்க காலத்தின் வம்சாவழி இனக்குழுத் தலைவர்களை வென்றடக்கினர். முதல் மூன்று நூற்றாண்டுகளில் வம்சாவழி இனக்குழுத் தலைவர்கள் இடைவிடாமல் கொள்ளையடிப் பதற்காக நடத்திய படையெடுப்புகள் வணிக நடவடிக்கைகளுக்கு விரோதமான நிலைமைகளை உருவாக்கின. சமணத்துறவிகளுக்குக் குகை படுக்கைகளையும், மற்ற பரிசுகளையும் வணிக சமுதாயம் கொடையாக வழங்கியது மதுரையிலும், மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குகைகளில் உள்ள கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கிபி இரண்டாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்த தமிழ் பிராமி கல்வெட்டுகளிலிருந்து தெளிவாகின்றது. அதற்குப் பதிலாக சமணத் துறவிகள் அகிம்சையையும், அறநெறியையும் போதித்தனர். அவை மோதல்கள் நிறைந்த சங்ககாலச் சமுதாயத்தின் கருத்துக்களுக்கும், விழுமியங்களுக்கும் விரோதமானவை.

மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்களின் படையெடுப்பு வம்சாவழி இனக்குழுத் தலைமையின் அடிப்படையிலான வீரயுகச் சமுதாயத்தின் முடிவைக் கண்டது. அந்தக் காலகட்டம் சமுதாயத்தில் சமண, பவுத்த சிந்தனைகளின் செல்வாக்கு வளர்ந்து வருவதைக் கண்டது. களப்பிரர் காலத்தில் ஒரு புதிய சமுதாய அமைப்பின் தோற்றம் பூலாங்குறிச்சி கல்வெட்டுகளில் காணப்பட்டது போன்ற நில உடைமைகளின் தோற்றத்திலிருந்து தெளிவாகின்றது. இருப்பினும், நிலவுடமை வர்க்கம் வேகமாக வளர்ச்சி அடைந்து வந்ததன் பலனாக அதன் நலன்களுக்கும், சமண, பவுத்த மதத்தை ஆதரித்து வந்த வணிக சமுதாயத்தின் நலன்களுக்கும் இடையில் முரண்பாடு உண்டானது. சமண, பவுத்த மதக் கருத்துக்களுக்கு எதிர்க்கும் வழிமுறையாக நிலவுடமை வர்க்கம் பக்தி அல்லது கடவுள் மீது தனிப்பட்ட பக்தி சிரத்தை எனும் கருத்தை நாடியது. நகர்ப்புறங்களில் சமண, பவுத்த மதங்கள் செழித்தோங்கியது இந்த மதங்கள் வணிக சமுதாயத்தினரின் ஆதரவைப் பெற்றிருந்ததிலிருந்து தெளிவாகின்றது. கடுங்கோன் என்கிற பாண்டிய மன்னன் மற்றும் சிம்மவிஷ்ணு என்கிற பல்லவ மன்னன் ஆகியோரால் ஆறாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் களப்பிரர்களின் ஆட்சி தூக்கி எறியப்பட்டதானது நிலவுடமை நலனுடைய புதிய ஆளும் மேட்டுக்குடியினரின் வளர்ச்சிக்கு ஆரம்பப் புள்ளியாக ஆனது.

பிரம்மதேயம் என அழைக்கப்படும் பிராமணர்களுக்கு நிலதானம் செய்வது, தேவதானம் என அழைக்கப்படும் கோவில்களுக்கு நிலதானம் செய்வது ஆகியவை அதிகமானது புதிய விவசாய ஒழுங்கமைப்பின் பண்பாக ஆனது. பிரம்மதேயம் என்கின்ற பெயரில் பிராமணர்களுக்கு நிலதானம் வழங்கப்பட்டதைப் பதிவு செய்திருக்கும் பூலாங் குறிச்சி கல்வெட்டுதான் நமக்குக் கிடைத்திருக்கும் மிக ஆரம்பகால ஆவணம்.[32] பிரம்மதேயங்களும், தேவதானங்களும் அதிகரித்த புதிய விவசாய ஒழுங்கமைப்பே ஆரம்ப மத்திய கால பாண்டியர்களின் பொருளாதார அடித்தளமாக இருந்தது. பிராமணர்களுக்கும், கோவில்களுக்கும் நிலமான்யம் வழங்கப்பட்டதுடன் கூடவே காராண்மை மற்றும் மீயாட்சி என்றழைக்கப்படும் நில உடைமையும், தெளிவான வகையில் சமூகம் அடுக்குகளாகப் பிரிக்கப்படுவதும் தோன்றியது[33] நிலத்தையும், கோவிலையும் மையமாகக் கொண்டிருந்த ஒரு பொருளாதாரத்தின் பண்பம்சங்களில் ஒன்றாக வேலைப்பிரிவினையும், உழைப்பு பல்வகையாக பிரிக்கப்படுவதும் இருந்தது.

இறையனார் அகப்பொருள் உரையில் மரபை தன்வயமாக்கிக் கொள்வதை அதன் பொருளாதாரப் பின்புலத்தில் வைத்துப் பார்த்தால் மட்டுமே புரியும். பக்தி மார்க்க இறை வழிபாட்டிற்கு ஏற்பவே இறையனார் அகப்பொருளுக்கான உரை அக மரபின் செவ்வியல் இலக்கணத்தை மறு வியாக்கியானம் செய்கின்றது என்று வாதிடப் படுகின்றது. பக்தி கோட்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்கவே இறையனார் அகப்பொருளிற்கு உரை எழுதியவர் மரபை தன்வயமாக்கிக் கொண்டார்; பக்தி மார்க்கத்தைப் பரப்புவதற்கு ஒரு ஊடகத்தை அளித்தார். இறையனார் அகப்பொருளை முதல்நூல் அல்லது சிவனே எழுதியதாக உரையாளர் குறிப்பிடுகின்றார்.[34]

செவ்வியல் திரட்டுகளுக்கு கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எழுதியது, சங்கம் எனும் பழங்கதையை

உருவாக்கியது, அந்தத் திரட்டுகளிலிருந்து சில பாடல்களை வேண்டுமென்றே நீக்கியது ஆகியவை ஆரம்ப மத்திய காலத் தமிழகத்தில் புதிதாக எழுந்து வந்து கொண்டிருந்த மேட்டுக்குடியினர் மேற்கொண்ட சில முயற்சிகளாகும். சமணர்களையும், பவுத்தர்களையும் புதிதாக எழுந்துள்ள ஆளும் வர்க்கம் எதிர்த்தது. பவுத்தர்களும் சமணர்களும் இந்த எதிர்ப்பைச் சகித்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, மரபுகளைக் கண்டுபிடித்து அவற்றை எதிர்கொண்டனர். உதாரணத்திற்கு வீரசோழியத்தில், அவலோகிதரே தமிழை அகத்தியரிடம் கொடுத்ததாக உள்ளது.[35]

சைவ, வைணவக் கவிகள் எழுதிய பாடல்களில் தமிழ்மொழி மற்றும் அதன் பெருமையைப் புகழும் எண்ணம் ஆக்கிரமித்திருந்தது. சமணர்களையும், பவுத்தர்களையும் விமரிசித்த பக்தி மார்க்கத் துறவிகள் மக்களின் இதயத்திற்கு நெருக்கமான மொழியைப் பிரயோகித்தார்கள். 'தமிழ்', 'தமிழ் மொழி', 'சங்கத் தமிழ்' ஆகியவற்றை மேலும் மேலும் அதிகமாக செய்யுள்களில் உதவிக்கழைத்தது சமண, பவுத்த மதங்களை எதிர்ப்பதற்காக ஒரு பக்தர்கள் சமுதாயத்தை உருவாக்குவதன் பொருட்டு மேற்கொண்ட முயற்சியாகும். பொருளாதாரத் தளத்தில் பிரம்மதேயங்களும், தேவதானங்களும் பல்கிப் பெருகிய புதிய விவசாய அமைப்பு கண்கூடான சமூக அடுக்குகளை உருவாக்கியது; தத்துவார்த்த தளத்தில் இந்தப் பிரிவினைகளை ஒருபடித்தான சைவ/வைணவ அடையாளத்தின் மூலம் மூடி மறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருபடித்தான சைவ/வைணவ பக்தி சமுதாய அடையாளத்தை உருவாக்குவதற்காகப் பக்தி மார்க்கத் துறவிகள் தமிழ், தமிழ் மொழி, சங்கத் தமிழ் ஆகியவற்றைத் தங்களது செய்யுள்களில் உதவிக்கழைத்தனர்.[36]

புதிய விவசாய அமைப்பை நிறுவியதும், வளர்த்ததும் சுலபமான காரியமாக இருக்கவில்லை. பாரம்பரியமாக அந்த இடத்தை ஆக்கிரமித்திருந்தவர்களிடமிருந்து எதிர்ப்பைச் சந்தித்தது. ஆரம்ப மத்தியக்காலப் பாண்டியர்களின் செப்பேடு சாசனங்கள் இந்த எதிர்ப்பை எடுத்துக் காட்டுகின்றன.[37] ஆரம்ப மத்தியகாலப் (early medieval) பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்களில் சங்கத்தை உதவிக்கழைப்பது, தமிழுக்கு ஆதரவு, பாண்டிய மன்னர்கள் மகாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தது போன்றவை குறிப்பிடப் பட்டிருக்கின்றது; இதை புதிய விவசாய அமைப்பின் விரிவாக்கத்திற்கு எதிர்ப்பு என்கின்ற வடிவில் தோன்றிய விவசாயிகளின் நிர்பந்தத்திற்கான எதிர்வினையாகக் கருதலாம். 'தமிழ்', 'தமிழ் மொழி', 'சங்கம்' ஆகியவற்றின்பால் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் ஆரம்ப மத்தியகாலப் பாண்டிய மன்னர்களின் ஆட்சி உற்பத்தி செய்யும் வர்க்கத்தின் அங்கிகாரத்தைப் பெற முயற்சித்தது. ஆரம்ப மத்தியகாலப் பாண்டிய மன்னர்களின் தளவாய்புரம் செப்பேடு சாசனத்தின் தமிழ்ப்பகுதியில், பாண்டியர்களின் முன்னோர்கள் 'சங்கம்' அமைத்தது பற்றிய குறிப்புகளைக் காண முடிகின்றது.[38] அதைவிடப் பெரிய சின்னமனூர் செப்பேட்டில், பாண்டியர்கள் சங்கம் அமைத்தது பற்றிய குறிப்பும், மகாபாரதம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட குறிப்பும் இருக்கின்றது.[39] ராமநாதபுரம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டு, சென்னை கல்வெட்டியல் அதிகாரியின் அறிக்கையில் (எண்:334) இடம் பெற்றுள்ள ஒரு கல்வெட்டில் சங்கம் பற்றிய குறிப்பு உள்ளது.[40]

8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த மாறவர்மன் பராங்குசன் என்கின்ற பாண்டிய மன்னனின் மகத்துவத்தைப் பாராட்டும் பாண்டிக் கோவை எனும் இலக்கியப் படைப்பு, செவ்வியல் அகம் மரபுகள் குறித்த நெருக்கமான ஞானத்தை வெளிப்படுத்துகின்றது. செப்பேடுகளில் சமஸ்கிருதத்தை மட்டுமே பயன்படுத்திய காஞ்சியைச் சேர்ந்த பல்லவ மன்னர்கள், அவர்கள் ஆதரவில் உருவாக்கப்பட்ட ஒரு இலக்கியப் படைப்பில் தமிழைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.[41] நந்திவர்மன் எனும் பல்லவ மன்னனின் நற்குணங்களைப் போற்றும் இலக்கியப் படைப்பான 'நந்திக்கலம்பகம்' மன்னனைத் தமிழுடன் ஒப்பிடுகின்றது, தமிழின் பெருமையின் மீது கவனம் செலுத்தியதற்காக அவரைப் புகழ்கின்றது. இதுவும் செவ்வியல் மரபுகள் பற்றிய நெருக்கமான ஞானத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆரம்ப மத்திய காலத் தமிழகத்தின் இலக்கியப் படைப்புகள் மற்றும் கல்வெட்டுகளில் 'தமிழ்', 'தமிழ் மொழி', 'சங்கத் தமிழ்' ஆகியவை ஆக்கிரமித்திருக்கும் போக்கு தெளிவாகக் காணப்படுகின்றது. அது எவ்வளவு கவனிக்கத்தக்கதாக இருக்கிறது என்றால், சங்கப் பாடல்கள் ஆரம்ப மத்தியக்கால பாண்டியர்களின் கண்டுபிடிப்பு என்று வாதிடுகின்ற அளவிற்கு ஒரு நவீன கால அறிஞரை அது இட்டுச் செல்கின்றது.[42] ஆரம்ப மத்தியகாலத் தமிழகத்தின் பொருளாதார அடித்தளத்தையும், மரபை உதவிக்கழைத்தும், அதைத் தன்வயமாக்கியும் ஆளும் வர்க்கம் தன் ஆட்சிக்குப் பெற விழைந்த அங்கீகாரத்தின் இயங்கியல் விதிகளையும் புரிந்து கொள்ள முடியாமையே இதற்குக் காரணம், ஆரம்ப மத்திய காலத் தமிழகத்தின் இலக்கியமும்,

கல்வெட்டுகளும் சிந்தனை உள்ளடக்கத்திலும், கோட்பாட்டிலும் செவ்வியல் தமிழ் இலக்கியத்தி லிருந்து வேறுபட்டு இருந்தாலும் வடிவ அளவில் ஒரு உறவைக் கொண்டிருந்தது.[43]

3

தமிழ் வரலாற்றில் ஆரம்ப வரலாற்று கால மற்றும் ஆரம்ப மத்திய காலகட்டங்களில் சங்க இலக்கியங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், அடுத்த தலைமுறைக்குக் கைமாற்றப்படுவதற்கும் எப்படி சில குறிப்பிட்ட வரலாற்றுக் காரணிகள் காரணமாக இருந்தன என்பதைப் பார்த்தோம். ஒரு இலக்கிய மரபை உருவாக்கும் விஷயத்தில் தமிழை ஒரு கூட்டு உணர்வாக உதவிக்கழைப்பது ஆரம்ப மத்தியகாலத் தமிழகத்தில் புதிதாகத் தோன்றிய பாண்டிய நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் தங்களது ஆட்சிக்கு அங்கீகாரம் பெறும் அரசியலுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. ஆரம்ப மத்திய காலகட்டம் நிலம் பிரதானமான உற்பத்திச் சாதனமாக இருக்கும் ஒரு முற்றிலும் வேறான ஒரு சமூக அமைப்பைக் குறிக்கின்றது. சமூகம் கண்கூடான வகையில் அடுக்குகளாகப் பிரிக்கப்படுவதைக் கல்வெட்டுக்கள் சுட்டிக் காட்டும் அதே வேளையில் அது நேரடியாகத் தமிழை ஒரு பொது அடையாளமாகப் பிரயோகிக்கின்றது. கல்வெட்டு களில் தமிழ் ஒரு பொது அடையாளமாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பது எந்த அளவிற்கு கீழிருந்து வந்த விவசாயிகளின் நிர்ப்பந்தந்திற்கான எதிர்வினையாக இருந்தது? கல்வெட்டுக்களைச் சமூக ஆவணங்களாக நாம் கருதினாலும் அவை பெரும்பாலும் நில மான்யங்கள் அல்லது நிலவுடமை மாற்றங்களையே ஆவணப்படுத்தியிருக் கின்றன; ஆதலால், அவை சமூகத்தின் மேல்தட்டு மக்களின் ஆசாபாசங்களையே மிக அதிகமாக எடுத்துச் சொல்கின்றன. கராஷிமா கூறுவது போல் கல்வெட்டுக்கள் கிசுகிசுப்பதைக் கேட்பதன் மூலம் அல்லது சந்தேகத்துடன் அவற்றைப் படிப்பதன் மூலம் மட்டுமே கீழிருந்து வந்த எதிர்வினையை உணர முடியும்.[44] தமிழ், சங்க இலக்கிய மரபு ஆகிய இரு கலாசாதனங்களின் மூலம்தான் ஆரம்ப மத்திய கால தமிழகத்தில் அரசாட்சிக்கான அங்கீகாரம் பெறப்பட்டது.

தமிழில்: அசோகன் முத்துசாமி

End Notes:

1. The collection of papers in Sheldon Pollock's edited work on South Asian literary cultures is an exception although some of them in it are not directly related to the question of canon formation. See Sheldon Pollock, ed. Literary Cultures in History: Reconstructions from South Asia, University of California Press, Berkeley, 2003; In Tamil context, R. Champakalakshmi's article on the relation between ritual singers of saiva devotional hymns and the making of Saiva literary canon and Kathigesu Sivathamby's historiographical analysis of the literary history in Tamil is also an exception. See R. Champakalakshmi, "Patikam Patuvar: Ritual Singing as a Means of Communication in Early Medieval South India", Studies in History, Volume 10, Number 8, 1994, pp. 199-215; K. Sivathamby, Literary History in Tamil: A Historiographical Analysis, Tamil University, Tanjavur, 1986. For an exclusive focus on nineteenth century context emphasizing the complete break from pre-modern period see the articles in the special issue of Indian Economic and Social History Review, Volume 42, Number 4, December 2005.

2. For a comprehensive account of such a view in Tamil see Mayilai Seeni Venkatasamy, Pattampotam Nurrantut Tamil Illakiyam, 1962; Ma.Cu.Sampandhan, Accum Patippum, 1980; K.Kailasapathy, Navalar Parri Kailasapathy, 2005; K.Sivathamby, "Tamilil Illakiya Pata Mitpu" in Perumal Murugan, ed. U. Ve. Sa. Panmuka Alumayin Perruvam, 2005, pp. 103-139. However the writings in English rarely acknowledge this larger effort but rather start the narrative with the recovery of Sangam corpus as though it represent a distinct and unique moment in the 19th century literary history. See A. R. Venkatachalapathy, "'Enna Prayocanam' Constructing Canon in Colonial Tamilnadu", Indian Economic and Social History Review, Volume 42, Number 4, 2005, pp. 535-553.

3. The lectures delivered by U.V. Swaminatha Iyer in the months of November and December 1927 at Chennai Sarvakala Sangam are compiled and brought out as Sanga Tamilum Pirkala Tamilum, 1929. See the first lecture "Tamil Sangam", pp. 1-22.

4. John Ralston Marr, The Eight Anthologies: A Study in Early Tamil Literature, Institute of Asian Studies, Madras, 1985, p. 7.

5. K.N. Sivaraja Pillai, Chronology of Early Tamils, University of Madras, 1932, p. 19.

6. Kamil V. Zvelebil, The Smile of Murugan: On Tamil Literature of South India, Leiden, E.J. Brill, 1973, p. 48.

7. By tradition we mean the information or accounts provided by the texts themselves as it came down to us. Thus, each of the anthologies at the end contains the names of the patrons and compilers which the early editors of the anthologies retained while printing them.

8. For a substantive account of this view and the critique of historiography see V. Rajesh, "The Written and the Oral in Early Tamil Society", Proceedings of the 66th session of the Indian History Congress, Santiniketan, 2007, pp. 102-110.

9. Quoted in K. Sivathamby, Literary History in Tamil. A Historiographical Analysis, Tamil University, Tanjavur, 1986, p. 32.

10. For an account of the compilation of Patirruppattu and its Patikams see Ti. Vai. Sadasivapaṇḍarathar, Illakiyamum Kalvettukkalum, Manivasagar Pathipagam, 2003, pp. 117-126.

11. Kamil Zvelebil, op. cit., 1973, pp. 121-130.

12. John Ralston Marr, op. cit., 1985, p. 331.

13. K. Sivathamby, op. cit., 1986, p. 32.

14. K. Sivathamby, Studies in Ancient Tamil Society: Economy, Society and State Formation, Chennai, 1998, pp. 1-57.
15. Rajan Gurukkal, "Writing and Its Uses in Ancient Tamil Country", Studies in History, Volume 12, Number 1, 1996, p. 71. For an assessment and critique of the various views on the question of the basis on which the early Tamil polity has been characterized see Ganapathy Subbiah, "Daksinapatha: Where Does the Path Lead Us?" Sectional Presidential Address, Ancient India Section, Indian History Congress, Calicut, 2007.
16. See Introduction to Grundrisse, Karl Marx, Harmondsworth, 1973.
17. For more analysis of the word canror and canror ceyyul see K. Kailasapathy, Tamil Heroic Poetry, 1968, pp. 229-230.
18. K. Sivathamby, op. cit., 1986, p. 33.
19. Rajan Gurukkal, "Forms of Production and Forces of Change in Ancient Tamil Society", Studies in History, volume 5, number 2, August 1989, pp. 159-175.
20. R. Krishnamurthy, Sangam Age Tamil Coins, Madras, 1997; R. Champakalakshmi, Trade, Ideology and Urbanization: South India 200 B.C. to A.D. 1200, Oxford University Press, 1996.
21. For a historiographical assessment of the Kalabhra period see Mayilai Seeni Venkatasamy, Kalapirar Atchiyil Tamilakam, 1975, pp. 9-16.
22. The commentary is dated to around 8th century CE because it allude to the verses of Pandikovai, a text extolling the virtues of early Pandyan King Maravarman Parankusan who ruled Madurai around 770 CE.
23. K. Sivathamby, op. cit., 1986, p. 35.
24. John Ralston Marr, op. cit., 1985, p. 71.
25. Ibid. p. 72.
26. M.G.S. Narayanan, 'The Vedic-Puranic-Sastric Element in Sangam Society and Culture', Proceedings of the Indian History Congress, 36th Session, Aligarh, 1975, p. 78.
27. A.K. Ramanujan and Norman Cutler, 'From Classicism to Bhakti' in Vinay Dharwadkar (ed.), The Collected Essays of A.K. Ramnujan, Oxford University Press, 2001, pp. 232-259; Indira V. Peterson, Poems to Siva: The Hymns of the Tamil Saints, Princeton University Press, Princeton, 1989, p. 84; Friedhelm Hardy, Viraha-Bhakti: The Early History of Krsna Devotion in South India, Oxford University Press, Delhi, 1983, p. 276.
28. The eighteen kilkanakku though contains ethical texts also include literary works following the Akam conventions of the classical period. Kar Narpatu, Aintinai Aimpatu, Aintinai Elupatu, Tinai Mozhi Aimpatu, Tinaimalai Nurraimapatu and Kainilai are some of the literary works in the kilkanakku anthology which follow the classical Akam conventions.
29. M. Arunachalam, The Kalabhras in the Pandya country and Their Impact on the Life and Letters There, University of Madras, 1979, pp. 84-90.
30. R. Nagaswamy, "An Outstanding Epigraphical Discovery in Tamil Nadu", Proceedings of the 5th International Conference Seminar on Tamil Studies, Madurai, 1981.
31. Mayilai Seeni Venkatasamy, op. cit., 1975, p. 76.
32. The word Pirammataya resemble the one used in the Patikams of Patirruppattu which leads one to think that Patikams must have been written in the post-Sangam period when land grants to Brahmins started as a practice by the beginning of early medieval period.
33. For an excellent account of the material basis of early Pandyas see Rajan Gurukkal, The Agrarian System and Socio-Political Organisation Under the Early Pandyas c – A.D. 600-1000, Unpublished PhD thesis, Centre for Historical Studies, Jawaharlal Nehru University, New Delhi, 1984.
34. Mayilai Seeni Venkatasamy, op. cit., 1975, pp. 155-170.
35 K. Sivathamby, op. cit., 1986, p. 36.
36. For the details of the praise of Tamil and invocation of its glory in the verses of Bhakti saints see Pa. Krishnan, Tamil Nulkalil Tamil Mozhi Tamil Inam Tamil Nadu, Chidambaram, 2000, pp. 153-178.
37. Rajan Gurukkal, op. cit., 1984, pp. 99-100.
38. Dalavaypuram Copper Plates, Tamil Portion V. 97-98 in K.G. Krishnan, Inscriptions of the Early Pandyas c 300 B.C to 984 A.D, Indian Council of Historical Research, 2002, pp. 74-75.
39. Cinnamanur Plates V. 102-104, Ibid. p. 102.
40. Kamil V. Zvelebil, Tamil Literature, Leiden, E.J. Brill, 1974, p. 59.
41. Pa. Krishnan, op. cit., 2000, pp. 177-194.
42. Herman Tieken, "Old Tamil Cankam Literature and the So-Called Cankam Period", Indian Economic and Social History Review, 40, 3, 2003, pp. 247-278.
43. 'Sense of Belonging' and 'Alienating Distanciation' are the hermeneutical concepts employed by Paul Ricoeur in understanding texts and its relation to human action, see Paul Ricoeur, Hermeneutics and the Human Sciences, edited and translated by J. Thompson, Cambridge University Press, 1981, p. 131.
44. Noboru Karashima, 'Whispering of Inscriptions' in Kenneth Hall (ed.), Structure and Society in Early South India, Oxford University Press, New Delhi, 2001, pp. 44-58.


பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் – தொகுப்பும் கருத்தாடலும்

தி. இராஜரெத்தினம்

இலக்கிய வகைகள் அதிகமாகக் காணக்கூடிய மொழியே செழுமைமிக்க மொழியாக விளங்க முடியும். சமூக மாற்றங்களும் இலக்கிய வகை மாற்றமும் ஒன்றிற்கொன்று நேர்விகிதப் பொருத்தம் உடையவை. தமிழ் இலக்கிய வரலாறு பல்வேறு காலகட்டங்களாகப் பிரித்து நோக்கப்படுகிறது. ஒவ்வொரு காலகட்டமும் ஒவ்வொரு இலக்கிய வகையை உடையதாக அமைகிறது. பாட்டும் தொகையும் 'சங்க காலம்' என்கிறோம். பதினெண்கீழ்க்கணக்கு சங்கம் மருவிய காலம் என்கிறோம். இவை போன்றே பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், முதலியவையும் அமைகின்றன. சமூக மாற்றம் என்பது அரசியல் மாற்றங்களைக் குறிப்பதாகும். காலந்தோறும் எழுதப்பட்ட இலக்கியங்களைப் பிற்காலத்தில் தொகுத்துள்ளனர். பதினெண்கீழ்க்கணக்கு தொகுப்புப் பணிபற்றி இக்கட்டுரை ஆராய முயல்கிறது.

தொகுப்புப்பணி:

ஒரு காலகட்டத்தில் எழுதப்பட்ட செய்யுள்கள் தொகுக்கப்பட வேண்டும். தொகுக்கப்படாத இலக்கியம் அடுத்த காலகட்டத்திற்கு இடம்பெயராது போய்விடும் அபாயம் உண்டு. பாட்டும் தொகையும் தொகுக்கப்படாமல் போயிருந்தால் அவை இன்று நம் கைகளுக்கு எட்டாமலே போயிருக்கும். இலக்கியத்தின் வழி நாம் மீட்டெடுத்த வரலாறும் பெருமையும் இல்லாமல் ஆகியிருக்கும். தொகுப்பு நூல்கள் உலகின் முக்கிய மொழிகள் அனைத்திலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதனை "Anthology" என்று ஆங்கிலத்தில் அழைப்பர். மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பின் 'புறத்திரட்டு' என்பது ஒரு முக்கியமான தொகுப்பு முயற்சியாகும். 'தனிப்பாடல் திரட்டும்' குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் சிறுகதை, புதுக்கவிதைத் திரட்டுகள் சில வெளிவருகின்றன. திரட்டு நூல்களின் தேவை, திரட்டுபவரின் வர்க்கச் சார்பு, சமயச் சார்பு முதலியவை திரட்டுப் பணியை வேறு சில தளங்களுக்கு இட்டுச் செல்கிறது. திரட்டு நூல்களை மட்டும் வைத்துக் கொண்டு நம் சமூக, அரசியல், இலக்கிய, இலக்கண வரலாற்றை எழுத முயல்வது முழுமையை நோக்கிய பயணமாக அமையுமே அன்றி முழுமையடையாது. தொகுப்பில் விடுபடும் இலக்கியங்கள் எல்லாம் தரமற்றவையாயிருக்க வேண்டிய அவசியம் இல்லை. தொகுப்பவரின் விருப்பத்திற்கு உட்படாமல் இருந்தாலும் அவை தள்ளப்படலாம். திரட்டில் சேர்பவை, கழிபவை, திருத்தப்படுபவை, மாற்றப்படுபவை முதலியன 'திரட்டு அரசியல்' எனப்படும்.



தி. இராஜரெத்தினம்: கேரள பல்கலைக்கழக பேராசிரியர் கி. நாச்சிமுத்துவின் மாணவரான இவர் அகப்பொருள் விளக்கம் – செம்பதிப்பு என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்தவர். இலக்கணம், ஓலைச்சுவடி, மொழியியல், நாட்டுப்புறவியல் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இவரின் நூல் சிதம்பர அந்தாதி கதைப்பாடல் (2005).

திரட்டு உருவாக்கம்:

இலக்கிய உருவாக்கம், இலக்கண உருவாக்கம் முதலியவை பற்றி இன்று பேச ஆரம்பித்து உள்ளோம். (செ.வை. சண்முகம், இரா. அறவேந்தன்) அந்த வரிசையில் 'திரட்டு உருவாக்கம்' பற்றியும் நாம் ஆராய முயலலாம். உருவாக்கம் என்பது, ஓர் இலக்கியம் அல்லது இலக்கணம் இயற்றப்படத் தேவையான புறக்காரணிகளை ஆராய்வது ஆகும். புறநெறி ஆய்வு நல்ல இலக்கியத் திறனாய்வாக ஒத்துக் கொள்ளப்படாவிட்டாலும் (ரெனிவெல்லக், ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, 1966) இலக்கியத்தைக் கொண்டே சமூக, சமய வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்யும் நிலையிலுள்ள நாம் புறநெறி ஆய்வு முறையை ஊக்குவித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எனவேதான் ரோஜாப்பூவை அணு அணுவாக ரசிக்கும் வேலையை விட்டு விட்டு, அது எந்த நாட்டில் இருந்து வந்தது. எந்த நூற்றாண்டில் வந்தது... அதற்கு முன் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம். என்று நம் ஆய்வைத் திசைமாற்றி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறோம்.

திரட்டு நூல்கள் பற்றி இவ்வாய்வும் அழகியல் (or) முருகியல் சார்ந்ததாக அன்றி அதன் உருவாக்கம் பற்றி அமையும் காரணமும் இதுவேயாகலாம்.

சங்ககாலம்:

பாட்டும் தொகையும் உருப்பெற்றதாகக் கருதப் படுகின்ற காலகட்டம் இனக்குழு வாழ்வு மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியில் குடும்பம், அரசுருவாக்கம் முதலியவை உருப்பெற்ற காலகட்டம் ஆகும். குடும்பமும் அரசும் நிறுவனமாக உருவாகிக் கொண்டிருந்த காலம் ஆகும். ஆனால், சமய நிலையில் நிறுவனமயமாகியிருக்கவில்லை. அரசுருவாக்கம் நிகழ்ந்து பேரரசுருவாக்கத்தை நோக்கி முன்னகர்ந்து கொண்டிருந்தது தமிழகம்.

பேரரசுருவாக்கமும் தொல்காப்பியப் புறத்திணையியலும் :

தொல்காப்பியம் புறத்திணையியலை நாம் உற்றுப்பார்த்தால் பேரரசு உருவாக்கத்திற்கான தயார்படுத்தல் நிரம்பிக் கிடக்கின்றமையினைக் காணலாம். பாட்டும் தொகையும் புறத்திணையியலும் காட்டும் சமுதாயம் வேட்டைச் சமூகம் என்னும் நிலையைத் தாண்டி, ஆனிரை கவர்தல் என்பதைப் போருக்கான தொடக்க நிலை உத்தியாக மட்டுமே கையாண்ட ஒரு சமுதாயமாக அரசர்கள் நின்றமையின் காரணம் விளங்கவில்லை. மனிதனுக்கே உரிய 'ஆக்கிரமிப்பு' மனத்தின் மிக உச்சகட்ட 'காதலையும்' வீரத்தையும் இரு கண்ணெனப் போற்றினர் என்பது வழக்காறு. மானம் பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளமை புலனாகிறது. (இந்த மான உணர்ச்சி பிற்காலத்தில் எங்கே போயிற்றென்று தெரியவில்லை) பேரரசு உருவாக்க முயற்சியில் போர் வீரர்கள் மூளைச் சலவைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். போரில் இறப்பதைப் பெருமையாகக் கருதுதல், யானையை எதிர்த்துப் போரிடுதல் முதுகில் புண்படாமல் காத்தல் (போரில் பின்வாங்கி ஓடுவதைத் தடுக்கும் முயற்சி) சிறிய காயமே ஆனாலும் அதனைப் பெரிதாகத் தன் கையால் கிழித்து இறத்தல், எத்தனை வீரர்கள் எதிர்த்து வந்தாலும் தான் தனி ஒருவனேயாயினும் அப்படையை ஆற்றுநீரைப் பெரிய கல்லணை தடுப்பது போலத் தடுத்தல் முதலிய பல செயல்கள் புறத்துறைகளில் கூறப்பட்டுள்ளன. இதனைப் போர் நிகழ்ச்சிகளாக மட்டும் கருதாமல், பேரரசு உருவாக்கத்தில் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட மூளைச் சலவையாகத் தான் கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்டவை எல்லோருக்கும் பொது என்பது போலத் தோன்றினாலும், போரில் உயிரைவிடப் போகும் வீரர்களுக்கே சொல்லப்பட்டது. இறந்து போகும் எந்த வீரனும், மற்றொரு வீரனைப் பலவீனப் படுத்தாமல் இருக்கவும், போர்புரிகின்ற வீரன் எந்தச் சூழ்நிலையிலும் பின்வாங்கும் எண்ணத்தைத் தவிர்ப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டவை இவை.

ஆண்டான் அடிமை என்னும் கருத்தாக்கத்தை நாம் புறத்திணையியலுக்கும் பொருத்திப் பார்க்க முடியும். உயிர் பற்றிய அக்கறை சிறிதும் இல்லாத சமுதாயம் அது. போரில் உயிர் துறப்பதைப் பெருமையாக எண்ணவைக்கப்பட்டனர். சங்ககாலம் 'பொற்காலம்' என்பர். அந்தப் பொற்காலத்தின் இருண்ட பக்கங்களைக் கேள்விக்குட்படுத்தியவையே அற இலக்கியங்கள். கொலை, பொய், அழுக்காறு, ஒழுக்கமின்மை, கள்ளுண்ணல், கொடுங்கோன்மை, பெண்வழிச் சேறல், (இற்கிழத்தி, காமக்கிழத்தி, பரத்தையர்) என பொற்காலத்தின் இருண்ட பக்கங்கள் தொடர்ந்தன. மகண் மறுத்தல் என்னும் துறை கண்ணில் கண்ட பெண்களையெல்லாம் அந்தப்புர நாயகிகளாக்க முயன்ற நம் முன்னோரின் இழிவான பதிவாகும்.

நிறுவன சமயங்கள்

நிறுவனப்படாமல் இயங்கிய சமயச் சூழலில் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என நம் அரசர்களெல்லாம் அரசாட்சி செய்து கொண்டிருந்த வேளையில் பௌத்தமும் தமிழகத்திற்குள் நுழைந்தன.

'உயிர்' பற்றிய புரிந்துணர்வோடு தமிழகம் புகுந்தவை இச்சமயங்கள். எந்த உயிருக்கும் துன்பம் செய்யக்கூடாது என்பதைப் போதித்தது சமணம். தமிழ் வடித்த சமணர்களும் பௌத்தர் களும், சங்க காலத்திற்கெதிரான பிரச்சாரத்திற்குப் பிரதான ஆயுதமாகக் கையில் எடுத்தது இலக்கியத்தையே ஆகும். திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு முதலான அறநூல்களும், திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலிய மருத்துவம் சார் (உடல் மருத்துவம், உள மருத்துவம்) நூல்களையும் சங்கமரபின் தொடர்ச்சி யாக சில அக நூல்களும், ஒரு புறநூலும் இக்காலகட்டத்தினவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருக்குறள், நாலடியார், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, பழமொழி நானூறு முதலிய நூல்கள் பாட்டும் தொகையும் நூல்களுக்கெதிராக அறன் வலியுறுத்தல், அறிவுடைமை, அன்புடைமை, இன்னா செய்யாமை, ஈகை, ஒழுக்கமுடைமை, கல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, கூடா ஒழுக்கம், கூடா நட்பு, கொடுங்கோன்மை, சூது, துறவு, நிலையாமை, பெண் வழிச்சேறல், பெரியாரைப் பிழையாமை முதலிய கருத்துருவாக்கங் களை முன்வைத்தன. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு (தொல். 1041) என்று தொல்காப்பியர் கூறுவதனை வள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்று வரிசை மாற்றம் செய்துள்ளார்.

மேலும் இக்காலகட்டத்தில் 'விருந்து' என்னும் செயல் விழுமியப்படுத்தப்பட்டது. விருந்தும், துறவும் இக்காலத்தில் தொடர்புடையனவாக விளங்கியமை அறிய வேண்டியது. விருந்து என்பது முன் பின் அறியாதவர்களுக்குக் கொடுப்பது. விருந்தளிப்பது ஒரு சமூகக் கடமை யாக்கப்பட்டது. ஏனெனில் சமணமும், பௌத்தமும் துறவினை ஆதரித்தன. துறவுநிலையில் தத்தம் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இவர்களை ஆதரிக்க மக்கள் தேவைப்பட்டனர். புதியவர்களான சமயத்துறவிகள் ஊர்களுக்குள் வரும்போது அவர்களின் தேவையறிந்து ஆதரிக்கும்படியாக விருந்தளித்தலைக் கட்டாயமாக்கினர். துறவு என்பது இக்காலகட்டத்தில் நிறுவனப்படுத்தப்பட்டு விட்டது. இதன் விதையை நாம் தொல்காப் பியத்திலேயே காண்கிறோம். (காமம் சான்ற கடைக்கோட் காலை.. சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே தொல். கற்பியல். 190)

கல்வியும் இக்காலத்தில் நிறுவனப்படுகிறது. சங்ககாலச் சமுதாயம் கற்றல் கற்பித்தல் பற்றி எதுவும் வெளிப்படையாகக் கூறாத நிலையில் கீழ்க்கணக்கில் கல்வியின் முக்கியத்துவம் பலவாறாக வற்புறுத்தப்படுகிறது.

கீழ்க்கணக்கு நூல்களின் உருவாக்கத்தில் சங்க காலத்தின் சில நடைமுறைகளுக்கு எதிரான குரலும், விருந்து, துறவு, கல்வி, முதலியவற்றின் நிறுவனப்படுத்தலும் தொழிற்பட்டுள்ளமையினை உணர்கிறோம்.

கீழ்க்கணக்கு நூல்களின் உருவாக்கத்தின் புறக்காரணங்களாக நாம் இவற்றை விரிவுபடுத்தி ஆராயலாம். சமண, பௌத்த சமயப் பரவலாக்கம் இங்கு அடிப்படையாக விளங்குகின்றது.

பதினெண்கீழ்க்கணக்கு பற்றிய செய்திகள்

'பதினெண்கீழ்க்கணக்கு' என்னும் வழக்கு களப்பிரர் கால நூல்கள் எவற்றிலும் காணப் படவில்லை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டின் எண்ணிக்கை குறித்த பழம்பாடல் ஒன்று காணப்படுகிறது. அது பிற்காலத்தது ஆகும். அதன்காலம் பற்றித் தெரியவில்லை.

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு'

என்பது அப்பழம்பாடல் ஆகும்.

இலக்கண உரையாசிரியர்களான பெருந்தேவனார் (வீரசோழியம், 143 உரை) பேராசிரியர் (தொல்காப்பியம், பொருளதிகாரம், சொல். 158, 235 உரை) மயிலைநாதர் (நன்னூல், 387 உரை) நச்சினார்க்கினியர் (தொல்காப்பியம், பொருளதிகாரம். சொல். 235 உரை) முதலியோர் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் வழக்கினைக் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் மூலம் பதினொன்றாம் நூற்றாண்டு முதல் இது பெருவழக்காக இருந்திருக்கலாம் என்று எண்ணலாம்.

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டினுள் 11 நூல்கள் அறம் பாடியவை. அகப்பொருள் பற்றி 6 நூல்கள், ஒரு நூல் புறம் பற்றியது. அறம், பொருள், இன்பம் இவற்றின் நோக்கமாகும். அகநூல்கள் சங்க அகமரபின் நீட்சியே ஆகும். ஆனால் பெருமைப்படமுடியாத நீட்சி. அறக் கருத்தைப் பாடும் செப்பலோசையைக் கொண்ட வெண்பாவினால் அகச் செய்தியைக் கூறுவது பொருத்தமாகப்படவில்லை. சங்கப்புற நூல்களில் போர்க்களத்தின் நேரடிக்காட்சி இடம் பெறுவதில்லை. அதன் கூற்று அமைப்பு அதற்கு இடமளிப்பதும் இல்லை. ஆனால், களவழி நாற்பது போர்க்களத்தை, அதன் நிகழ்வுகளை வர்ணிக்கிறது. இந்நூல்களுள் நாலடியார் தவிர பிறயாவும் ஒவ்வோர் ஆசிரியரால் பாடப்பட்டவை

என்று நம்பப்படுகின்றன. நாலடியார் 400 சமண முனிவர்களால் பாடப்பட்டு பின் தொகுக்கப்பட்ட நூல் என்று செவிவழிச் செய்தி சொல்கிறது.

கீழ்க்கணக்கு என்னும் சொல் பயன்பாடு முதன் முதலில் திருநாவுக்கரசர் பாடல் ஒன்றில் (தேவாரம் 5, 21, 8) இடம்பெற்றுள்ளது. அச்சொல் இங்கு கீழ்க்கணக்கு நூல்களைக் குறிப்பதாக இல்லை. கீழ்க்கணக்கு நூலின் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் கூறியுள்ளது.

'அகவலும் கலிப்பாவும் பரிபாடலும்

பதிற்றைந்து ஆதி பதிற்றைம்பது ஈறாக

மிகுத்துடன் தொகுப்பன மேற்கணக்கு எனவும்

வெள்ளைத் தொகையும் அவ்வகை எண் பெறின்

எள்ளறு கீழ்க்கணக்கு எனவும் கொளலே (346)

'அடி நிமிர்வு இல்லாச் செய்யுள் தொகுதி

அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்

திறம்பட வருவது கீழ்க்கணக்கு ஆகும்' (348)

அடிநிமிர்வு இல்லாமல் ஐம்பது, ஐந்நூறு என்னும் சிற்றெல்லை பேரெல்லைகளில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் அடங்கா. எனினும், அடிநிமிர்தல் இன்றிக் கீழ்ப்பட்ட கணக்கில் வெண்பாவினால் பாடப்பெறுதலினால் கீழ்க்கணக்கு என்றும் கொள்ளப்படுகின்றன.

கீழ்க்கணக்கு நூல்களின் விவரம் பற்றி 1885-ஆம் ஆண்டு தொடங்கி சி.வை.தா., கோ. ஸ்ரீனிவாசராகவாச்சாரியார், முதலியோர் ஆராய்ந்து எழுதித் தெளிவுபடுத்தினர்.

பிரபந்த தீபிகை என்னும் நூலில் (வேம்பத்தூர் முத்து, வேங்கடசுப்ப பாரதியார், 1849) கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களும் தொகையும் குறிப்பிடப் பட்டுள்ளன.

திணைமாலை நூற்றைம்பது பதிப்பில் (ரா. ராகவையங்கார் பதிப்பு) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அதன் ஆசிரியர் பெயரோடும் பாடல் விவரங்களோடும் வரிசைப்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன. (ஏட்டில் உள்ளபடி). இவ்வரிசைமுறை கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிக் குறிப்பிடும் தனிப்பாடல் வரிசை முறையோடு ஒத்துள்ளது. ஆனால், பிரபந்த தீபிகை காட்டும் வரிசை வேறாகவும், பேரா. வையாபுரிப்பிள்ளை ஒரு வரிசை முறையைக் கொடுத்துள்ளார். அது வேறு வரிசையாவும் உள்ளது. (பதினெண்கீழ்க்கணக்கு, பதிப்புரை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பக். 8) வையாபுரிப்பிள்ளை இந்நூல்களின் காலத்தை கி.பி.600இலிருந்து கி.பி. 850 வரை கொண்டு செல்கிறார். பதினெட்டு நூல்களையும் ஒன்றடக்கிய ஓலைச்சுவடி என்றும் அகப்படவில்லை என்னும் செய்தியும் கிடைக்கிறது. இந்நூல்கள் பாடுபொருள் அடிப்படையில் அறம், அகம், புறம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவாக சங்க நூல்களுக்குப் பின்னும் காப்பிய காலத்திற்கு முன்னுமாக இந்நூல்களின் காலம் வரையறுக்கப்படுகிறது. திருக்குறள் காலத்தால் முந்தியதாகவும் ஆசாரக்கோவை காலத்தால் பிந்தியதாகவும் இருக்கலாம்.

ஆசாரக் கோவை சைவ நூலாகப் பேசப்படுகிறது. சமஸ்கிருதத் தாக்கம் மிகுந்த நூலாகும்.

புறத்திரட்டு என்னும் நூல் கீழ்க்கணக்கு நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த செய்யுட்களின் தொகுப்பாகும்.

கீழ்க்கணக்கு உரைகள்

திருக்குறள் பல உரைகளைப் பெற்றுப் பொலிவு அடைந்துள்ளது. தருமர் முதலிய பதின்மர் பழைய உரைகாரர்களாவர். இக்காலத்தும் புத்துரைகள் பல எழுந்த வண்ணம் உள்ளன. அயல்நாட்டார் இதன் சிறப்புணர்ந்து மொழிபெயர்த்துள்ளனர். பரிமேலழகர் உரை பலராலும் போற்றப்படுவது ஆகும். நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, திரிகடுகம் முதலிய நூல்களுக்கும் பழைய உரை உள்ளது. ஏலாதி தவிர பிற நீதி நூல்களுக்குப் பழைய உரைகள் கிடைத்துள்ளன.

இன்னிலை - கைந்நிலை

பதினெட்டு நூல்களுள் பதினெட்டாவது நூல் எது என்பதில் பெரிய விவாதம் நடைபெற்றுள்ளது. அது 'நாலடி' நான்மணி— என்னும் தனிப்பாடலை முன்னிறுத்தியது ஆகும். ஒரு சாரார் அது இன்னிலை என்னும் நூல் என்றும் ஒரு சாரார் அது கைந்நிலை என்னும் நூல் என்றும் வாதிடுகின்றனர். தனிப்பாடலின் ஈற்றடியை

'..................... என்பவே கைந்நிலைய வாங் கீழ்க்கணக்கு' எனப்படித்து சிறிய அளவான கீழ்க்கணக்கு நூல்கள் நாலடியார் முதல் ஏலாதிவரை என்று கொள்வர். கைந்நிலையை நூலாக ஏற்கார்.

ரா. இராகவையங்கார் அவர்கள் 'நூல் நாற்பதைந்திணை' என்பதில் நூல் என்பதை ஐந்திணை என்பதோடு கூட்டாமல் ஐந்திணை என்றால் ஐந்து நூல்கள் - அஃதாவது திணைபற்றிக் கூறும் ஐந்து நூல்களே ஐந்திணை எனப்பட்டன என்று கொண்டு முன்பு கூறிய திணை நூல்கள் நான்குடன் கைந்நிலை என்பதையும் சேர்த்து 'ஐந்திணை - அஃதாவது ஐந்து திணை நூல்கள் எனப் பொருள் கூறியுள்ளார். இவர் இறுதியடியை

"நன்னிலையதாகும் கணக்கு" எனப் பாடம் கொண்டுள்ளார். இது வலிந்து பொருள் கொள்வதாகவே உள்ளது.

இவை அனந்தராமையர் இன்னிலையை விலக்கி கைந்நிலையை ஏற்றுக்கொள்கிறார். அவர்

'இன்னிலைய காஞ்சியென டேலாதி யென்பதூ உம்

கைந்நிலையும் ஆகும் கணக்கு'

என்று படிக்கிறார்.

இதனோடு உடன்பட்டே வையாபுரிப்பிள்ளையும்

'இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி யென்பவும்

கைந்நிலையு மாம் கீழ்க் கணக்கு'.

என்று படிக்கிறார்.

பிரபந்ததீபம் காட்டும் இலக்கணத்தில் இன்னிலை என்னும் சொல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது மேலும் அது கைந்நிலையில் 60 பாடல்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இன்னிலையை ஏற்போர் மறுப்போர் என இரு பிரிவினர் உள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

தி.சு. பாலசுந்தரம், நமு.வே. நாட்டார், மகாதேவ முதலியார், த.மு. சொர்ணம்பிள்ளை. வ.உ.சி, செல்வக் கேசவராய முதலியார், சுந்தராசமுதலியார் முதலியோர் இன்னிலையை ஏற்பர்.

புசி. புன்னைவனநாத முதலியார், அ. நடராசப் பிள்ளை, களத்தூர் வேதகிரி, த. கனகசுந்தரம்பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, ரா. ராகவையங்கார், உவேசா, இவை அனந்தராமையர் எஸ். வையாபுரிப் பிள்ளை. வேம்பத்தூர் முத்து வேங்கடசுப்ப பாரதியார் (பிரபந்ததீபம்) முதலியோர் இன்னிலையை மறுத்துக் கைந்நிலையை ஏற்றுக்கொள்வர்.

மு. அருணாசலம் அவர்கள் தம் இளம்பூரணர் என்னும் நூலில் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1981) இன்னிலையை எழுதியவர், சொர்ணம்பிள்ளை அவர்கள் என்றும் இவர் தாம் எழுதும் நூல்களைப் பண்டைக்காலத்து நூல்கள் என நம்பும்படிச் செய்து உள்நுழைத்துவிடும் ஆற்றல் பெற்றவர் என்றும் கூறியுள்ளார் வ.உ.சி.யிடம் தான் எழுதிய இன்னிலையைக் கொடுத்து அது கீழ்க்கணக்கு நூலென்று நம்பும்படிச் செய்து வ.உ.சியைக் கொண்டே உரைஎழுத வைத்து ஏமாற்றியவர், சொர்ணம் பிள்ளை என்று கூறியுள்ளார் (மேற்கண்ட நூல் பக்கம் 40;115 காண்க) மு. அருணாசலம் இன்னிலையை ஒரு போலி நூலென்றே கொள்கிறார்.

முடிவுரை:


கீழ்க்கணக்கு நூல்கள் ஒரு காலகட்டத்தின் இலக்கியங்களாகும். 'இருண்டகாலம்' என்று வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் இக்காலகட்டம் இலக்கியத்தைப் பொறுத்தவரை மிகச் செழிப்பான கால கட்டமாகவே உள்ளது. மேல்கணக்கு கீழ்க்கணக்கு இரண்டு தொகை நூல்களுமே ஒரே காலகட்டத்தில் தொகுக்கப் பட்டிருக்கலாம். எனினும் கீழ்க்கணக்கு நூல்களின் சமணப் பின்னணிக்கும். சமயப் பின்னணிக்கும் பங்கம் வராத ஒரு தொகுப்பாகவே உள்ளது.

இந்தத் தொகுப்பிற்குட்படாமல் வேறு நூல்களும் இக்காலகட்டத்தில் இருந்திருக்கலாம். அவை எங்கே போயின தொகுப்பாளரால் விடப் பட்டனவா? களப்பிரர்களின் அடக்கு முறைக்கு ஆளாயினவா? என்பது கேள்விக்குறியாகும் கீழ்க் கணக்கு நூல்தொகுப்பினால் உலகம் புகழும் திருக்குறளும் நாலடியாரும் உலகிற்குக் கிடைத்தன என்பதே உண்மை.

துணை நூல்கள்

1. பதினெண்கீழ்க்கணக்கு, 1981, NCBH
2. தமிழ் இலக்கியக் கொள்கை - ஓர் அறிமுகம் - 1 - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1975.
3. இளம்பூரணர், மு. அருணாசலம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1981
4. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம் - 1984.
5. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, சேவியர் தனிநாயகம் அடிகள், மாற்று. 2009
6. இலக்கணமும் சமூக உறவுகளும், கா. சிவத்தம்பி, NCBH, 1999
7. சமணமும் தமிழும், மயிலை சீனி. வேங்கடசாமி, நாம் தமிழர் பதிப்பகம் - 2006.
8. பாட்டும் தொகையும், NCBH, 1981
9. புறத்திரட்டு எஸ். வையாபுரிப்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம், மறுபதிப்பு - 2001.
10. தொல்காப்பிய அகராதி; சென்னைப் பல்கலைக்கழகம் - 2004.
11. திருக்குறள் - தெளிவுரை, மு. வரதராசன், கழகம் - 1992
12. தமிழ் வரலாற்றிலக்கணம், ஆ. வேலுப்பிள்ளை. குமரன் புத்தக இல்லம், 2002
13. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், கே.கே. பிள்ளை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் - மறுபதிப்பு 2002

■



பன்னிரு திருமுறை

சோழப் பேரரசு – பெருங்கோயில் – பெருந்தத்துவங்களின் இணைவு

ஜ. சிவகுமார்

தமிழின் தொன்மையான இலக்கியமாக நமக்குக் கிடைத்துள்ள பதினெண்மேற்கணக்கு நூல்கள் முதற்கொண்டே தமிழ் இலக்கிய மரபில் வளமான தொகுப்பு மரபு வினைபுரிந்துள்ளதை அறியலாம். இவற்றுள்ளும் நூல்களின் தொகுப்பான தொகை நூலும் தனிப்பாடல்களின் தொகுப்பான தொகைநூலும் உள்ளன. எட்டுத்தொகை பல பாடல்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட எட்டு தொகை நூல்களின் தொகுப்பாகும். பத்துப்பாட்டு பத்து தனிப்பாடல்களின் தொகுப்பாகும். மேலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள், சித்தர் பாடல்கள், தனிப்பாடல் திரட்டு, புறத்திரட்டு எனத் தொடர்ச்சியாகத் தொகுப்புநூல்கள் உருவாகியுள்ளன.

இப்பின்புலத்தில் கி.பி. ஆறு முதல் பதினோராம் நூற்றாண்டு வரையிலான பக்தி இலக்கியங்கள் திருமுறை, திவ்வியப் பிரபந்தம் என இருவகைத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கடந்தகால இலக்கியங்கள் தொகுக்கப்படுவதற்கு இலக்கிய ஈடுபாடும் உணர்ச்சியும் மட்டுமே காரணமாக இருக்க முடியாது. பாடப்பட்ட காலத்தில் அவ்விலக்கியங்கள் பெற்ற முக்கியத்துவத்துக்குச் சற்றும் குறையாமல்

தொகுக்கப்படும் காலத்திலும் அதன் தேவை இருந்திருக்கவேண்டும். சேர, பாண்டியர்கள் தங்கள் தொன்மையையும் தமிழ்நிலப் பரப்போடு தங்களுக்குள்ள உறவையும் உரிமையையும் நிறுவ பதினெண்மேற்கணக்கு நூல்களைத் தொகுத்தனர். தற்காலத்தில் அயோத்திதாசர் சிந்தனைகளின் தொகுப்பு தலித் கருத்தியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகிற உந்து சக்தியாகவும், 19 ஆம் நூற்றாண்டுத் தலித்துகள் குறித்த ஆவணமாகவும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, கடந்தகால இலக்கியங்களின் தொகுப்புக்கு ஆவணம் என்பதைத் தாண்டிய நிகழ்கால அர்த்தமொன்று இருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்தக் கருதுகோளோடு பன்னிரு திருமுறை தொகுக்கப் பட்டதற்கான அரசியலையும் அதன் முறைவைப்புக் கான காரணங்களையும் இக்கட்டுரை ஆய்ந்தறிய முற்படுகிறது.

பன்னிரு திருமுறை

நம்பியாண்டார் நம்பி சோழ அரசனான ராஜராஜ சோழனின் வேண்டுகோளால் / உதவியால் பதினொரு திருமுறைகளைத் தொகுத்ததாகத் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுகிறது. (புராணங்கள் மிகைப்படுத்தப்பட்ட கற்பனையோடும் புனிதத்துவத்தோடும் இருந்தாலும் அவற்றுள் சிறு அளவேனும் உண்மை வரலாற்றுக் குறிப்புகள் இருக்கும்.) முதலாம் ராஜராஜ சோழன் சோழப் பேரரசு மற்றும் சைவ சமய வளர்ச்சியின் உச்சத்திற்கான குறியீடு. இவன் காலத்தில்தான் தஞ்சை பெரியகோவில் கட்டப்படுகிறது. சோழர் காலத்தில் கோவில் என்பது வழிப்பாட்டுத் தலமாக மட்டும் செயல்படவில்லை. அப்பிரதேச மக்களின் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகள் எனப் பல்வேறு அசைவியக்கங்களிலும் பங்குபெறும் நிறுவனமாகவும் செயல்பட்டது. இத்தகைய கோவில்களில்தான் தொகுக்கப்பெற்ற திருமுறைகள் ஓதப்பெற்றன; திருக்கைக்கோட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பெற்றன.

திருமுறைகள் தொகுக்கப்பெற்றதற்கான காரணங்களாக...

- சைவ சமயத்தை அரச மதமாக ஏற்றுக் கொண்ட சோழர்கள் தமக்கும் சைவத்துக்குமான தொன்மையான, தொடர்ச்சியான உறவினை அடையாளப்படுத்தல்.

- நம்பியால் திருமுறைகள் தொகுக்கப்படுவதற்கு முன்பே சில கோவில்களில் திருமுறைகள் ஓதப்பெற்றன; அதற்கான தானங்களும் நிரந்தரமாக அரசர்களால் அளிக்கப்பட்டன. அவற்றைப் பெரிய அளவில் முறைப்படுத்தி செயல் படுவதற்காக.

- உயர்சாதியினருக்கு மட்டுமே வேதங்கள் உரிமையாயிருந்தன. எனவே பிறரும் கற்கும் விதத்தில் / தெரிந்துகொண்டதாக அமைதியுறுவதற் காகவாவது வேதங்களின் விளக்கமான திருமுறைகள் தேவைப்பட்டமை.

- சோழர்களின் அரச மதமான சைவ சமயத்தின் வரலாற்றை, வளர்ச்சியை அடையாளப்படுத்தவும், அதற்கு வித்திட்ட அடியார்களின் பாடல்களை அழிவிலிருந்து மீட்கவும் முனைந்தமை

- சைவ வழிபாட்டின் பன்முகத் தன்மைகளை ஒற்றைமையப்படுத்தி 'பெருநெறியில்' கரைத்தல்

- நிலவுடைமையின், அரச அதிகாரத்தின் பெரும் குறியீடாய் இருந்த கோவில்கள் மீது மக்களுக்கு ஆத்மார்த்தமான ஈடுபாட்டையும் மதிப்பையும் ஏற்படுத்த கலை அழகியலோடு கூடிய கட்டட அமைப்பு மட்டுமல்லாது அவர்கள் மனத்துள்ளே இருக்கக்கூடிய தோத்திரப் பாடல்களும் அவசியப்பட்டமை.

தொகுப்பும் வகுப்பும்

பொள்ளாப் பிள்ளையாரின் உதவியுடன் மூவர் முதலிகளின் பாடல்கள் தில்லையில் இருப்பதாக அறிந்து அங்குச் சென்று நம்பியாண்டார் நம்பி தேவாரப் பாடல்களைத் தொகுத்தார் எனத்

ஜ. சிவகுமார்: சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் 'தமிழியல் ஆய்வு வரலாறு: சங்க இலக்கிய ஆய்வுகள் (1887–1940) எனும் தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார். மாற்றுவெளி, புதிய புத்தகம் பேசுது இதழ்களின் ஆசிரியர் குழுவில் உள்ளார். 'சென்னை நூலகங்கள்', 'செவ்வியல் இலக்கிய ஆய்வுகள் – செந்தமிழ் இதழ்க் கட்டுரைகள் (1902–1935)' ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியர்.



திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுகிறது. இதிலிருந்து நம்பி தேவாரப் பாடல்களைத் தேடிக் கொண்டிருந்தபோது தில்லைக் கோவிலில் கண்டறிந்து தொகுத்தார் என அவதானிக்கலாம். பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளாக இவை உள்ளன. கால வரிசைப்படி தொகுக்கப்படின் நக்கீரர், காரைக்கால் அம்மையார், திருமூலர் முதலானோரின் பாடல்களே முதலில் அமைந்திருக்க வேண்டும்; ஆனால் அப்படி அமையவில்லை. எனவே பன்னிருதிருமுறை காலமுறைப்படி வகுக்கப்படவில்லை என அறியலாம். அதேபோல் சாதி அடிப்படையிலும் வகுக்கப்படவில்லை. பன்னிரு திருமுறையை மேலோட்டமாகப் பார்த்தாலே அதிக அளவிலான இசைப்பாடல்களைப் பாடியவர்களின் பாடல்கள் முதல் எட்டுத் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளதனை அறியமுடியும். (சம்பந்தர் - 1, 2, 3; நாவுக்கரசர் - 4, 5, 6; சுந்தரர்-7; மாணிக்கவாசகர்-8) இவற்றுள்ளும் காலத்தால் முற்பட்ட சம்பந்தர், நாவுக்கரசர் பாடல்கள் முதலிலும் சுந்தரர், மாணிக்கவாசகர் பாடல்கள் பின்பும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் சம்பந்தர், அப்பர் பாடல்களை முதலில் வைப்பதற்கு இதுமட்டுமே காரணமில்லை. இவர்கள் சமண, பௌத்த மதங்களை எதிர்த்து, அழித்துச் சைவத்தை வளர்த்தவர்கள்; சம்பந்தர் பாண்டிய அரசனையும் அப்பர் பல்லவ அரசனையும் சைவத்திற்கு மதம் மாறச் செய்தவர்கள். மேலும் சுந்தரரே இவர்களின் பாடல்களை 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி, ஏத்துகப்பானை' என ஏற்றிப் போற்றுகிறார்.

இவர்களுள்ளும் அப்பர் சம்பந்தருக்கு வெகுகாலத்துக்கு முன்பே பிறந்தவர்; சம்பந்தரை விட சிவபெருமான் மீது அதிகமான பாசுரங்களைப் பாடியவர். இருப்பினும் இவரது பாடல்கள் சம்பந்தருக்குப் பிறகே வைக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணமாக அப்பருக்கு முன்பே சம்பந்தர் 'சிவபதம்' (இறையருள்) அடைந்ததைக் குறிப்பிடுவர். ஆனால் சம்பந்தர் பாடல்கள் முதலில் வைக்கப்படுவதற்கு இது மட்டுமே காரணமில்லை. அப்பர் சமண மதத்துக்குச் சென்று சைவத்துக்கு மாறியவர்; சம்பந்தரோ சுத்த சைவர். அப்பர் இறுதிவரை துறவியாகவே (சமணம்) வாழ்ந்தார். சம்பந்தர் திருமணம் செய்துகொண்டு (சோமாஸ்கந்த உருவம்) இறைவனுடன் கலந்தார். அப்பர் தன்னை வருத்தி சைவம் வளர்த்தார். சம்பந்தர் தன்னை வருத்திக் கொண்டதோடு அனல்வாதம், புனல்வாதம் புரிந்து எண்ணாயிரம் சமணர்களையும் அழித்தார். ஐந்து வயதிலிருந்தே ஒரு குழந்தை ஊர் ஊராகச் சென்று இறைவனைப் பாடியமை இயற்கை மீறிய (தெய்வச்) செயலாக நம்பப்பட்டது. சிவபெருமான் மீது சம்பந்தரைவிட அப்பரே அதிகமான பாடல்களைப் பாடியிருந் தாலும் நம்பிக்கு கிடைத்த பாடல்களுள் சம்பந்தர் பாடல்களே அதிகம். எல்லாவற்றுக்கும் மேலாக இத்திருமுறையைத் தொகுத்த நம்பி அப்பரைக் குறித்து ஒரு நூல் மட்டும் பாடியிருக்க, சம்பந்தர் பற்றி ஆறு நூல்களைப் பாடியுள்ளமை சம்பந்தர் மீது இவர் கொண்ட மரியாதைக்கும் பற்றுக்கும் சான்றாகின்றன. எனவே சம்பந்தர் பாடல்களை முதலிலும் அப்பர் பாடல்களை அடுத்தும் வைத்திருக்கலாம்.

திருமுறைத் தொகுப்பு மரபில் பண்முறை, தலமுறை என இரண்டு முறைகளுள்ளன. இவற்றுள் நம்பி பண்முறை அடிப்படையிலேயே திருமுறைகளைத் தொகுத்துள்ளார். மூவர் தேவாரத்திலும் உள்ள பண்களை வகைப்படுத்தி, ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய பதிகங்களை வரிசையாக அமைத்துள்ளார். நம்பிக்கு தேவாரப் பண்முறை தெரியாத நேரத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண்தான் தேவாரங்களுக்கான பண்ணை வகுத்தளித்தார் என்பதைத் திருமுறை கண்ட புராணம் கூறும்.

சம்பந்தரின் 'தோடுடைய செவியன்' பதிகம் முதல் பதிகமாக அமைந்ததற்கு 'மறைமுதலெழுத்தாகிய 'ஓம்' என்பதிலுள்ள ஓகாரத்தினைத் 'தமிழ்' என்பதன் முதலெழுத்தாக அமைந்த தகர மெய்யுடன் இணைத்துத் தொடங்கிய சிறப்பு 'தோடுடைய செவியன்' எனும் இத்திருப்பதிகத்துக்கு உண்மையால்..... முதற்றிருமுறையில் முதற்றிருப் பதிகமாக முறைபடுத்தப் பெற்றது" (க. வெள்ளை வாரணர், 1994;பக்.398) என வெள்ளைவாரணர் குறிப்பிடுகிறார். இந்தப் பண்ணோடு தொடர்புடைய பண்கள் அடுத்தடுத்து என மூன்று திருமுறை வரையிலும் வகுக்கப்பட்டது.

அப்பர் பாடிய பாடல்களுள் தன் பிணி தீர்க்க பாடிய 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் பதிகம் முதலில் வைக்கப்பட்டது. இதனோடு தொடர்புடைய பண்ணமைந்த பாடல்கள் அனைத்தும் நான்காம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டன. இதனையடுத்து திருக்குறுந்தொகைப் பதிகங்கள் அனைத்தும் ஐந்தாம் திருமுறையாகவும் திருத்தாண்டகப் பதிகங்கள் அனைத்தும் ஆறாம் திருமுறையாகவும் வகுக்கப்பெற்று தொகுக்கப்பட்டன.

சுந்தரர், மாணிக்கவாசகர்

ஆறு திருமுறைகளையடுத்து அதிகமான இசைப் பாடல்களைக் கொண்ட சுந்தரர் மற்றும்

மாணிக்கவாசகர் பாடல்கள் முறையே இடம் பெற்றுள்ளன. அதிகமான இசைப்பாடல்களைக் கொண்ட சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடியவற்றைத் தேவாரமாகத் தொகுத்தவர்கள் சுந்தரருக்குச் சமமாகப் பாடல்களைப் பாடிய மாணிக்கவாசகரை அதனுள் சேர்க்காதது ஏன் எனும் கேள்வி எழுகிறது. நம்பிக்கு தில்லையில் மூவர் பாடல்களே கிடைத்தன. எனவேதான் அதனைத் தேவாரமாகத் தொகுத்தார்; மாணிக்கவாசகர் பாடல்களைத் தொகுக்கவில்லை எனக் கூறலாம். நம்பி தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியிலும் கூட மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. எனவே அவர் மாணிக்கவாசகரைப் பற்றி அறிந்திருக்கவில்லை. எனவேதான் மூவர் தமிழோடு இதனையும் இணைத்துத் தொகுக்கவில்லை என அமைதி கூறலாம். ஆனால் நம்பி தாம் பாடிய கோயிற்றிருப் பண்ணியர் விருத்தத்தில் 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' (58) என மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதேபோல் சேக்கிழார் காலத்துக்கு முன்னமே மாணிக்கவாசகர் வரலாறும் அவருடைய திருவாசகமும் தமிழ் மக்களிடையே பரவியிருந்தன. கோயில்களில் திருவாசகம் ஓதப்பட்டது. இருப்பினும் சேக்கிழார்கூட மாணிக்கவாசகர் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்தில் சேர்க்கவில்லை. சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பாடிய அறுபது நாயன்மாரோடு சுந்தரர் மற்றும் அவரது தாய், தந்தையரையும் இணைத்து அறுபத்துமூன்று நாயன்மார் வரலாற்றைத் திருத்தொண்டர் திருவந்தாதியுள் நம்பி பாடினார். இதனை அடியொற்றியே சேக்கிழார் திருத்தொண்டர் திருப்புராணம் பாடியதால் மாணிக்கவாசகர் குறித்துப் பாடவில்லை என அறிஞர் சிலர் கூறுவர். இது ஒரு வகையில் ஏற்கத்தக்கதே. ஏனெனில் பன்னிரு திருமுறை பாடிய 27 புலவர்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமூலர், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் ஆகிய ஏழு புலவர்கள் மட்டுமே பெரியபுராணத்துள் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் சுந்தரரால் குறிக்கப்பட்டோர் ஆவர். இருப்பினும் சமயக் குரவர் நால்வருள் மாணிக்கவாசகர் தவிர்த்த மற்ற மூவருக்கும் உள்ள ஒற்றுமை அவர்களனைவரும் சோழ நாட்டினர் என்பதே. மாணிக்கவாசகர் பாண்டியநாட்டு அமைச்சர்; பாண்டியநாட்டு அரசதிகாரத்தோடு நெருங்கிய தொடர்புள்ளவரான மாணிக்கவாச கருக்குச் சோழ அரசியலால் உரிய அங்கீகாரத்தைத் தரமுடியவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. பாண்டிய நாட்டரசனால் புரக்கப்பெற்ற பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய 'திருவாலவாயு டையார் திருவிளையாடலில்' தான் வாதவூரரைப் பற்றி நான்கு படலங்களில் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர் மதுரை, திருச்சிற்றம்பலம் முதலானவற்றுக்கு வணக்கம் கூறுவதோடு தருமி, நக்கீரர், சம்பந்தர், பாணபத்திரர் கதைகள் என மதுரையோடு தொடர்புடையவர்களின் கதைகளையும் குறிப்பிடுகிறார். (சம்பந்தர் சோழநாட்டாராயினும் கூன்பாண்டியனையும் பாண்டிய நாட்டையும் சைவ சமயத்துக்கு ஆதரவாகச் செயல்பட வைத்தவர்.) இவ்வாறு பாண்டியர் எழுச்சியினோடு மாணிக்கவாசகருக்கு முக்கியத்துவம் தரப்படுவதும் அதற்குமுன் அவர் பற்றிய குறிப்பு இல்லாதிருத்தலும் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியது.

அப்பர் சம்பந்தருக்கு வெகுகாலத்துக்கு முன்பே பிறந்தவர்; சம்பந்தரை விட சிவபெருமான் மீது அதிகமான பாசுரங்களைப் பாடியவர். இருப்பினும் இவரது பாடல்கள் சம்பந்தருக்குப் பிறகே வைக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணமாக அப்பருக்கு முன்பே சம்பந்தர் 'சிவபதம்' (இறையருள்) அடைந்ததைக் குறிப்பிடுவர். ஆனால் சம்பந்தர் பாடல்கள் முதலில் வைக்கப்படுவதற்கு இது மட்டுமே காரணமில்லை. அப்பர் சமண மதத்துக்குச் சென்று சைவத்துக்கு மாறியவர்.

எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் (இசைப்பாவும் இயற்பாவும்) இணைத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் பன்னிரு திருமுறையுள் ஓர் அடியாரின் பாடல்களை ஒருங்கே தொகுத்துள்ளனரே தவிர பிரிக்கவில்லை. முழுதும் இயற்பாவைக் கொண்ட பதினோராம் திருமுறையில்தான் காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (இசைப்பாக்கள்) இடம்பெற்றுள்ளன. அதேபோல் மாணிக்கவாசகரின் பாடல்கள் பெரும்பான்மை (இசைப்பா) கருதி ஒருங்கே எட்டாம் திருமுறை யாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருவாசகப் பதிகங்களின் முறைவைப்பில் பெரும்பற்றப் புலியூர் நம்பியும் கடவுள் மாமுனிவரும்

வேறுபடுகின்றனர். ஆனால், தற்பொழுது இருக்கும் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரையிலான வைப்புமுறை இவையிரண்டிற்கும் வேறுபட்டது. இதற்கான காரணம் விளங்கவில்லை. இருப்பினும் மாணிக்கவாசகருக்குப் பின்புதான் இவை வகுத்துத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என உணர முடிகிறது. 'திருவாசகத்தில் உள்ள தலைப்புகள், பிற்காலச் சான்றோர் ஒருவரால் நன்கு ஆராய்ந்து குறிக்கப் பெற்றிருக்க வேண்டும் எனக் கொள்ளும் படியாக உள்ளது. பழைய திருவாசக ஏட்டுச் சுவடிகளில் இத்தலைப்புகள் காணப்பெறவில்லை' (குவைத்தியநாதன், 1992; பக். 32). திருச்சிற்றம்பலக் கோவையிலுள்ள நானூறு பாடல்களுக்கும் கருத்துரை சொல்லும் விதத்தில் நானூறு கொளுக்கள் அமைந்துள்ளன. இவற்றின் அடிப்படையிலேயே இப்பாடல்களுக்குத் துறை வகுக்கப்பெற்றுள்ளன.

ஒன்பதாம் திருமுறை

பிரபலமாய்த் தெரிந்த பாடல்களும் பெரிய தொகை கொண்ட பாடல்களும் தேவாரம், திருவாசகம், திருமந்திரமாகத் தொகுக்கப்பட்டன. இவ்வாறு பிரபலமாய் அறியப்படாமலும் சிறிய தொகையும் கொண்டுள்ள இசைப்பாக்கள் ஒன்பதாம் திருமுறையாகவும் இயற்பாக்கள் பதினோராம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டன. கிடைத்த சைவ நூல்களையெல்லாம் தொகுத்து பாதுகாத்துவிட வேண்டுமென்ற எண்ணமே ஒன்பது, பதினோராம் திருமுறைகளின் தொகுப்புக்குக் காரணம்.

திருமந்திரமும் பெரிய தொகையிலான பாடல்களைக் கொண்டிருந்தும் அவற்றை ஒன்பதாம் திருமுறையாக வைக்கவில்லை. இதற்கு ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள திருமுறைகள் இசைப்பாக்களாகவும், பத்து முதல் பன்னிரண்டு வரையுள்ள திருமுறைகள் இயற்பாக்களாகவும் வகைப்படுத்தப்பட்டமையே காரணம் ஆகும். (இவற்றுள் திருக்கோவையாரும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களும் விதிவிலக்கு) இசைப் பாக்கள் ஏன் முதன்மையுடையதாக இருக்கிறது எனும் கேள்வி எழலாம். திருமுறைகள் தொகுக்கப் படுவதற்கு முக்கிய காரணம் கோவில் வழிபாடே. அதற்கு இசைப்பா வடிவமே மிகப் பொருத்தமானது. எனவேதான் இசைப்பாக்கள் முதன்மை பெற்றன. பொதுவாகக் கோவில்களில் திருமுறைக்கு ஒரு பாட்டு ஓதுவதே முறை. அது இயலாதபோது ஐந்து பாடல்கள் (பஞ்ச புராணம்) பாடுவர். தேவாரத்திலிருந்து ஒரு பாடல், திருவாசகத்திலிருந்து ஒரு பாடல், ஒன்பதாவது திருமுறையிலிருந்து இரண்டு பாடல், பெரியபுராணத்திலிருந்து ஒரு பாடல் எனப் பஞ்சபுராணம் பாடுவர். இவற்றுள் பெரியபுராணம் தவிர்த்து மற்றவை இசைப்பாக்கள். பெரிய புராணமும் 'தோடி' ராகத்திலேயே பாடப்பெறும். இவ்வாறு கோவில் வழிபாட்டில் இசைப்பாக்கள் முக்கியத்துவமும் முதன்மையும் பெற்றன.

தனித்தன்மைகள்

பன்னிரு திருமுறைகளிலும் ஒன்பதாம் திருமுறையே அளவில் சிறியது. பாடல்தொகை கூறுகின்ற பழம்பாடல் 365 என்று கூறும். ஆனால் நமக்குக் கிடைத்தவை 301 பாடல்களே. முதல் எட்டுத் திருமுறைகளும் இசைப்பாக்களாக இருப்பினும் தேவாரம், திருவாசகம் என்றே குறிக்கப்படுகின்றன. இத்திருமுறைக்கு மட்டுமே திருவிசைப்பா என்ற பெயர் அமைந்துள்ளது. திருப்பல்லாண்டும் இத்திருமுறையில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. பஞ்சபுராணம் பாடும்போது 8256 பாடல்களையுடைய தேவாரத்திலும் 1056 பாடல்களையுடைய எட்டாம் திருமுறையிலும் 4286 பாடல்களையுடைய பெரியபுராணத்திலும் ஒரு பாடல் வீதமே பாடப்படுகின்றது. ஆனால் 301 பாடல்கள் மட்டுமே உடைய ஒன்பதாம் திருமுறை யிலிருந்து இரண்டு பாடல்கள் பாடப்படுகின்றன. பத்து வரையிலுமான திருமுறைகள் சிவனைப் போற்றுவன. பதினோராம் திருமுறையில்தான் முருகர், விநாயகர், திருத்தொண்டர் முதலானோரைப் போற்றும் நூல்கள் உள்ளன என்று ஏவிசு. கூறுவார். ஆனால் ஒன்பதாம் திருமுறையிலேயே முருகன் மீது சேந்தனார் பாடிய திருவிசைப்பா ஒன்று உள்ளது.

சோழர் – சைவத் தலங்கள்

ஒன்பதாம் திருமுறையுள் பாடல்பெற்ற பதினான்கு தலங்களுள் திருப்பூவனம் தவிர்த்த மற்ற தலங்கள் அனைத்தும் சோழநாட்டுத் தலங்களாகும். அவற்றுள்ளும் திருப்பூவனம் உள்ளிட்ட ஆறு தலங்கள் தேவார பாடல்பெற்ற தலங்களாகும். மீதமுள்ள எட்டில் நான்கு தலங்கள் சோழ அரசர்களால் கட்டப்பெற்றன. (களந்தை ஆதித் தேச்சுரம் - முதலாம் ஆதித்தன்; திரைலோக்கிய சுந்தரம் - திரைலோக்கிய மாதேவி; தஞ்சை இராசராசேச்சுரம் - முதலாம் இராசராசன்; கங்கை கொண்ட சோழேச்சுரம் - முதலாம் இராசேந்திரன்) இந்நான்கு தலங்களுக்கும் இராசராசனால் ஆதரிக்கப்பெற்ற கருவூர்த்தேவர் பதிகம் பாடியுள்ளார். நம்பி இவரது சமகாலத்தவர் என்பதால் அவரே இத்திருமுறைகளையும் தொகுத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால்

கருவூர்த்தேவர் நம்பிக்குப் பிற்பட்டவர். எனவே கருவூர்த்தேவர் பாடல் இடம்பெற்றிருக்கும் ஒன்பதாம் திருமறையை நம்பி தொகுத்திருக்க வாய்ப்பில்லை என்று க.வெள்ளைவாரணர் முதலான அறிஞர்கள் கூறுவர். இதனை,

“ஒன்பதாம் திருமுறையைப் பொறுத்தவரையில் கங்கை கொண்ட சோழேச்சுரத்துக்கான திருவிசைப்பாவே காலத்தால் பிந்தையதென நாம் கருதலாம். இராசராசன் 985-1014 வரையிலும், அவன் மகன் இராசேந்திரன் 1012-1044 வரையிலும் ஆட்சி புரிந்தனர். தந்தை கட்டிய இராசராசேச் சுரத்திற்கும் மகன் கட்டிய கங்கைகொண்ட இராசேச்சுரத்திற்கும் கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடியிருக்கிறார். பிந்தியது பாடிய காலம் சுமார் 1035 ஆக இருக்கலாம். ஆகவே இக்காலம் வரையுமேனும் நம்பி இருந்து அவர் பாடல்களையும் தொகுத்தனர் என்று நாம் கருதவேண்டும்”. (2005;பக். 248) என மு. அருணாசலம் குறிப்பிடுவதனோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

திருமந்திரம்

இயற்பாக்களாலான அதிகமான பாடல்களைக் கொண்ட திருமந்திரம் இசைப்பாக்களையடுத்து பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டது. இந்நூல் ஆகமங்களைப் பற்றிக் கூறுவதாக உள்ளது. இறைவழிபாட்டின் பன்முகத் தன்மைகளைப் பற்றிக் கூறாமல் அதிகாரம் மிக்க நிறுவனமாக இயங்கிய கோவிலின் நடைமுறைகளை ஆகமங்கள் முறைப்படுத்தித் தந்தன. திருமந்திரம் இவ்வகையான பங்களிப்பையும் செய்தது. ஆயினும் இந்நூல் பல்வேறு பொருண்மைகளையும் கருத்தாக்கங் களையும் கொண்டுள்ளது. சைவம், சாத்தம், சரியை, கிரியை, ஞானம், யோகம், உடற்கூறு, கலவி, குழந்தை உற்பத்தி எனப் பலவற்றையும் இந்நூல் கூறுகிறது. எனவே இதனை ஒருவர் மட்டும் பாடிய நூலாகக் கருதமுடியாது. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு என்று கூறலாம். ஆயினும் இது மிக நுட்பமான ஆய்வுக்குரியது. ‘தமிழ் மூவாயிரம்’ என இந்நூலை அழைத்தாலும் மூவாயிரத்துக்கும் அதிகமான பாடல்களைக் கொண்டுள்ளது. பதிப்புக்குப் பதிப்பு பாடல் எண்ணிக்கையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பதினோராம் திருமுறை

‘பதினோராம் திருமுறையிலுள்ள பாடல்களின் பொருள் சமயச் சார்புடையதாய் இருந்தபோதிலும், இவை பெரும்பாலும் இலக்கிய நோக்குடனேயே தொகுக்கப்பட்டிருக்கின்றன என்பது வெளிப்படை முன்னுள்ள பத்து திருமுறைகளின் பாடல்கள் சிவபெருமானையே நடுநாயகமாகக் கொண்டு பாடப்பெற்றவை. ஆனால் பதினொன்றாம் திருமுறையில் சிவபெருமானுடன் விநாயகர், முருகர் போன்ற தெய்வங்களையும், ஞானசம்பந்தர் போன்ற சமயாசாரியாரையும், திருத்தொண்டர் கூட்டங்களையும், நாயன்மார்களையும் விசேஷமாகப் போற்றி எழுதப்பெற்ற பாடல் களையும் காண்கிறோம். அத்துடன் அவை எல்லாம் அந்தாதி, இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, உலா, ஆற்றுப்படை, நான்மணிமாலை, கலம்பகம் போன்ற பிரபந்த வகைகளில் இயற்றப்பட்டிருக்கின்றன என்பது இத்திருமுறைகளின் இன்னொரு சிறப்பாகும்.’ (ஏ.வி. சுப்பிரமணியன், 2005; பக்.123)

மேற்கண்டபடி இத்திருமுறையில் நாற்பது பிரபந்தங்கள் உள்ளன. அவற்றுள் சிவபெருமான் - 25; விநாயகர் - 3; முருகர் - 1; அடியார்கள் - 11 எனும் எண்ணிக்கையில் பிரபந்தங்கள் உள்ளன. இவற்றுள் சம்பந்தர் குறித்து மட்டும் ஆறு பிரபந்தங்கள் உள்ளன. இவை அனைத்தையும் பாடியவர் நம்பி. பெரியபுராணம் ‘பிள்ளை பாதி புராணம் பாதி’யாக அமைந்ததற்கு இப்பிரபந்தங் களும் காரணமாக அமைந்திருக்கலாம். வைணவ மரபில் திருமாலும் அவரது அவதாரங்களுமே முக்கியத்துவம் பெற, சைவமரபில் சிவபெருமானோடு அவரது அடியார்களும் முக்கியத்துவம் பெறுகின்றனர். கண்ணனே கணவனாக அமையவேண்டும் எனத் திருப்பாவை (ஆண்டாள்) பாட, சிவனது அடியார்களே தங்களுக்குக் கணவனாக அமையவேண்டுமெனத் திருவெம்பாவை (மாணிக்கவாசகர்) பாடுகிறது.

ஒன்பது பேர் பாடியது ஒன்பதாம் திருமுறை யானது போல் பதினொரு பேர் பாடியது பதினொன்றாம் திருமுறையானது எனக் கூறுவர். திருமுகப்பாசுரம் பாடியவர் சிவபெருமான் எனக் கருதி அவரை எண்ணுவதில்லை. இத்திருமுறையில் முதலில் அமைந்திருப்பதும் திருமுகப்பாசுரமே. இதனையடுத்து காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள் உள்ளன. இவற்றுள் திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள் இரண்டும் இசைப்பாக் களாகும். இப்பதிகங்களைச் சம்பந்தர் திருமுறை களுக்கு முன்பு வைக்கும் மரபும் இருந்ததாக மு. அருணாசலம் குறிப்பிடுகிறார். ஆனால் அவை பெருவழக்கில்லை. ஏனெனில் காரைக்கால் அம்மையார் பாடல்களில் சுடுகாட்டில் தலை மாலையணிந்து கையில் கபாலம் ஏந்திப் பேய்களோடு ஆடும் ஆட்டம் பாடப்படுகிறது. இது காபாலிகச் சைவ மரபு. பெருஞ்சமயமாகச்

சைவம் வளர்ச்சியடைந்தபோது பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வாமம், வைரவம், ஐக்கிய வாதசைவம் ஆகிய ஆறு மார்க்கத்தையும் அகப்புறச் சமயங்களாகத் தள்ளிவைத்தது.

காரைக்கால் அம்மையாரின் பாடல்களையடுத்து ஐயடிகள் காடவர்கோன், சேரமான், பெருமாள் நாயனார் ஆகியோரது நூல்கள் இடம்பெற்றுள்ளன. இதனையடுத்து சங்ககாலப் புலவர்களின் பெயர்களைக் கொண்ட நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் ஆகியோரது நூல்கள் உள்ளன. நம்பியும் 'தரணியில் பொய்மை இலாத்தமிழ்ச் சங்கம் அதில் கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத் தொன்பது பல்புலவர்' எனத் திருவந்தாதியில் குறிப்பிடுகிறார். இறையனார் களவியலுரை மூலம் முச்சங்கங்களுக்கும் அகத்திணைக்கும் சைவ முதன்மை தந்ததைப் போல சைவத் திருமுறைகளுக்கும் சங்கப் புலவர் களுக்குமான தொடர்பைக் கூற முயற்சித்துள்ளனர் என்பது தெரிகிறது. சங்கப் புலவர்களுக்கும் பதினோராம் திருமுறை நூல்களுக்கும் (திருமுருகாற்றுப்படை தவிர) எவ்விதத் தொடர்பு மில்லை. இதனையடுத்து இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார் நூல்கள் இடம் பெற்றுள்ளன. இங்கு குறிப்பிடப் படும் பட்டினத்துப் பிள்ளை சித்தரான பட்டினத் தாரிலிருந்து வேறானவர். இத்திருமுறையின் இறுதியாக நம்பியின் நூல்கள் உள்ளன.

நம்பி - திருமுறைகள்

நம்பியின் காலத்துக்குப் பிற்பட்ட கருவூர்த்தேவர் கங்கைகொண்ட இராசேச்சுரத்தைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறையில் உள்ளன. எனவே இத்திருமுறையை நம்பி தொகுத்திருக்க வாய்ப்பில்லை என்பார் மா. இராசமாணிக்கனார். நம்பி மாணிக்கவாசகரைப் பற்றி அறியாததால்தான் திருத்தொண்டர் திருவந்தாதியில் அவரைப் பற்றி குறிப்பிடவில்லை. எனவே அவர் எட்டாம் திருமுறையைத் தொகுத்திருக்க வாய்ப்பில்லை என க.வெள்ளைவாரணர் குறிப்பிடுகிறார். ஏழு திருமுறைகள் வரைதான் நம்பி தொகுத்திருப்பார்; ஏழு முதல் பதினொன்றாம் திருமுறை வரையில் பிற்காலத்தில் வந்தவர்கள் தொகுத்திருப்பர் என இருவரும் குறிப்பிடுகின்றனர்.

'எட்டு முதல் பதினொன்று வரையுள்ள திருமுறைகள், முதல் ஏழு திருமுறைகளுக்கு வெகுகாலத்திற்குப் பின்னால் தொகுக்கப் பெற்றன என்பதற்கு இலக்கியச் சான்றோ சரித்திரக் குறிப்போ அல்லது புராணக் கதையோ இல்லை. சேக்கிழாரின் பெரிய புராணம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் இயற்றப்பெற்று அவர் காலத்திலேயே பன்னிரண்டாம் திருமுறை யாக ஏற்றுக்கொள்ளப் பெற்றது. ஆகையால் சேக்கிழார் காலத்திற்கு முன்பே திருமுறைகள் பதினொன்றாக வகுக்கப் பெற்றிருந்தன. நம்பியாண்டார் காலத்திற்குப் பின்னும், சேக்கிழார் காலத்திற்கு முன்னும் யாரோ சிலர் எட்டு முதல் பதினொரு திருமுறைகளைத் தொகுத்திருக்கக்கூடும் என்பதற்கு ஒருவித ஆதாரமும் இல்லை (மேலது, பக்.107-108) என்று ஏ.வி. சுப்பிரமணியம் இதனை மறுக்கிறார். இவரும் மு. அருணாசலமும் பதினொரு திருமுறைகள் வரையிலும் நம்பியே தொகுத்திருக்கவேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். திருமுறை கண்ட புராணப் பாடலும் இதற்கு வலுசேர்க்கிறது.'

"மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து
பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்று
ஆக்கினார்" (எண். 8)

புராணப் பாடல்களைச் சான்றாக ஏற்பதில் தயக்கமிருந்தாலும் இதற்கு மாறான சான்றுகள் இல்லாததால் வேறு வழியில்லை. நம்பி தன்னுடைய நூல்களைத் தான் தொகுத்த திருமுறைக்குள் சேர்ப்பாரா எனும் ஐயமும் எழுப்பப்படுகிறது. நல்லந்துவனாரே தன்னுடைய பாடல்களைத் தான் தொகுத்த கலித்தொகையுள் இணைத்துள்ளாரே. நல்லந்துவனாரின் பாடல்களும் நம்பியின் நூல்களும் அவரவர் தொகுத்த தொகுப்புகளுள் இறுதியாக இடம்பெற்றுள்ளமையும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது. மேலும் நம்பியின் சமகாலத்தவரான இராசராசன் தான் எழுப்பிய பெரிய கோவிலில் தன்னுடைய சிலையையும் தன் குடும்பத்தினர் சிலையையும் நிறுவியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பன்னிரெண்டாம் திருமுறை

சோழ மன்னனின் முதலமைச்சராக இருந்து இந்நூலைச் செய்தவர் சேக்கிழார். சுந்தரர், நம்பி ஆகியோரின் அடியார் வரலாறு, கள ஆய்வு, கல்வெட்டுச் செய்திகள், திருமுறைகள் ஆகியவற்றை உள்வாங்கி இவர் பெரியபுராணத்தை உருவாக்கினார். இந்நூல் வெவ்வேறு சமூகங் களையும் வெவ்வேறு நிலப்பரப்பையும் சார்ந்தவர் களைச் சைவம் மற்றும் தமிழ் ஆகியவற்றினூடாக ஒருங்கிணைத்துச் சோழருக்கு ஆதரவான பெருந்தேசியத்தைக் கட்டமைப்பதனை அவதானிக்க முடிகிறது. இந்நூல் இவருடைய காலத்திலேயே பன்னிரெண்டாவது திருமுறையாக ஏற்கப்பட்டிருக்கும்.

திருமுறை வழிபாடு

சைவ சமயத் திருமுறைகள் கோவில்களில் வைத்து வழிபடப்பெற்றன; பாதுகாக்கப்பட்டன. 'தேவாரத் திருமுறைகள் திருக்கோயில்களில் வைத்து வழிபடப்பெற்று வந்தன. அத்திருப்பதிக ஏடுகள் சிதையாதபடி அவற்றைப் போற்றிக் காப்பதற்குத் தமிழ்ப் புலமைமிக்க தமிழ் விரகரும் அத்திருப்பதிகங்களைப் பொருளுணர்ந்து இசையோடு இறைவன் முன்னிலையிற் பாடிப் போற்றுதற்கு ஓதுவார்களும் அந்நாளில் திருக்கோயில்களில் நியமிக்கப்பெற்று பணிபுரிந்து வந்தார்கள். அவ்வாறு திருக்கோயில்களில் திருமுறை ஏடுகளைச் சேமமாக வைத்துப் பூசித்தற்கு இடமாக விளங்கிய மண்டபம், திருக்கைக்கோட்டியென வழங்கப்பட்டு வந்தது' (க. வெள்ளைவாரணர், 1994; பக். 52). இந்தச் செயல்பாட்டுக்கு நிவந்தங்களும் அளிக்கப்பெற்றன. தேவாரத் திருப்பதிகங்கள் செப்பேட்டில் எழுதப்பெற்று பாதுகாக்கப் பட்டதனைத் தில்லைக் கோயிற் கல்வெட்டு குறிப்பிடுகிறது. 'கி.பி. 1070 முதல் 1120 வரையில் ஆட்சிபுரிந்த முதற்குலோத்துங்கச் சோழனது படைத்தலைவர்களுள் ஒருவனாகிய மணவிற்கூத்தன் காலிங்கராயன் என்பான் சைவசமயக்குரவர் மூவரும் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் திருக்கோயிலுள் சேமமுற வைத்தான்' (மேலது: பக்.51)

தலமுறைத் திரட்டு

நம்பி பண்முறையில் தொகுத்த தேவாரப் பாடல்களைத் தலமுறையிலும் அமைத்துத் தொகுக்கும், பயிலும் வழக்கமும் பிற்காலத்தில் ஏற்பட்டது. தாம் விரும்பும் தலங்களுக்குச் செல்பவர்கள் அத்தலத்திற்கான பாசுரங்களைப் பாடுவதற்கு உதவும் வகையில் இவ்வகையான தொகுப்புகள் அமைந்துள்ளன. இவ்வகைத் தொகுப்பில் தில்லைக்கோயிலே முதன்மை பெற்றுள்ளது. அதே போல் ஒரு தலத்தை எடுத்துக் கொண்டால் அத்தலம் குறித்து முறையே சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் பாடல்கள் வரிசையாக அமைந்துள்ளன. இம்மூவர் பதிகங்களையும் பண்முறையில் தொகுத்த நூலுக்கு 'அடங்கன்முறை' என்று பெயர்.

திருமுறைத் திரட்டு

'மூவர் தேவாரங்களும் அடங்கன்முறை எனப்பெறும். திருமுறை எனவும் சிறப்பாக வழங்கப்பெறும். மிகப் பழைய காலத்திலேயே இவற்றிலிருந்து இரண்டு திரட்டுகள் தொகுக்கப் பெற்று வழங்கின. இன்று வரை பெரிதும் வழக்கத்திலுள்ளது அகத்தியர் தேவாரத் திரட்டு என வழங்குவது; இது காலத்தால் பிந்தியது. இது பற்றி நாம் பின்னே பார்ப்போம் மற்றொன்று காலத்தால் முந்தியது, உமாபதி சிவாசாரியர் திரட்டியது; திருமுறைத் திரட்டு என்ற பெயருடையது— இந்தத் திருமுறைத் திரட்டானது 99 திருப்பாசுரங்களை உடையது. திருவருட்பயன் பாகுபாட்டைத் தழுவியது..... இப்பகுப்பு, கொற்றவன்குடிப் பெரியாரே செய்த திருவருட்பயன் பகுப்பினைத் தொடர்ந்து செய்யப்பட்டுள்ளமை வெளிப்படை. இதில் சம்பந்தர் பாடல்கள் 26, அப்பர் பாடல்கள் 63, சுந்தரர் பாடல்கள் 10. இப்பாடல்கள் திரட்டில் திருமுறைக் கிரமப்படி தொகுக்கப்பெறவில்லை. கருத்தமைதியும் தொடர்பும் கருதியே தொகுக்கப்பெற்றுள்ளன. .... மிகச் சமீபகாலம் வரையில் இத்திரட்டை சொர்க்கபுரம் ஆதினத்தார் நித்திய பாராயணத்துக் குரிய தொகுப்பாகக் கொண்டிருந்தார்கள் (மு. அருணாசலம், 2005; பக்.113-115).

பிற திரட்டுகள்

மூவர் தேவாரத்தையும் நாள்தோறும் ஓதுவது சாத்தியமற்றது. எனவே அவற்றிலிருந்து சிறந்த சில பாடல்களை மட்டும் தொகுத்துத் தருமாறு சிவாலய முனிவர் அகத்தியரை வேண்டினார். அகத்தியர் இருபத்தைந்து பதிகங்களைத் (சம்பந்தர்-10; நாவுக்கரசர்-8; சுந்தரர்-7) தேர்ந் தெடுத்துத் தொகுத்தாராம். எனவே இந்தத் தொகுப்பு அகத்தியர் தேவாரத் திரட்டு என வழங்கப்படுகிறது. அதேபோல் தேவார மூவர் செய்த அற்புதங்கள் தொடர்பான பதிகங்களின் தொகுப்பு அற்புதத் தேவாரத்திரட்டு எனப்படுகிறது. குறிப்பிட்ட தலங்கள் குறித்து மூவரும் பாடிய பதிகங்கள் தொகுக்கப்பட்டு திருவாலங்காட்டுத் தேவாரப் பதிகங்கள், பஞ்சபூதத்தலத் திருப்பதிகங்கள் எனப் பல தொகுப்புகள் வெளிவந்துள்ளன. திருமுறைகளின் முழு வெளியீட்டு விவரங்களின் அடிப்படையில் இது குறித்து ஆய்வு செய்வது அவசியம்.

சாத்திரங்கள்

சோழப் பேரரசும் சைவப் பெருந்தத்துவமும் பெருங்கோயிலும் இணைந்த செயல்பாடாகப் பன்னிரு திருமுறைத் தொகுப்பைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதன் முறைவைப்புக்கான காரணங்களும் இக்கட்டுரையில் அவதானிக்கப் பட்டுள்ளன. இருப்பினும் பன்னிரு திருமுறை சைவமரபில் 14 சாத்திரங்களாகக் குறைந்ததற்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் படிஉரைகளின்

மூலமாக விரிவடைந்ததற்கும் என்ன காரணம் எனும் ஐயம் எழுகிறது. திருமுறைகளுக்கு உரை வகுக்கக்கூடாது எனும் சைவ மரபு அதற்குக் காரணம் எனில் திருமுருகாற்றுப்படைக்கும் திருக்கோவையாருக்கும் மட்டும் உரை எழுந்தது எப்படி? எனும் கேள்வி எழுகிறது. அதற்கு,

"தமிழில் உரைசெய்யும் மரபு என்பது எல்லாவற்றையும் விரித்துரைத்தலாக மட்டுமே இல்லை. சில நேரங்களில் சாராம்சப்படுத்துவதாகவும் அது தொழிற்பட்டுள்ளது. இந்த அம்சமே சைவத்தில் மேலோங்கியது... இது (சாத்திரங்கள்) பன்னிரு திருமுறைகளிலுள்ள இறையியல் மற்றும் தத்துவவியல் கருத்துக்களை மட்டும் எடுத்து சாராம்சப்படுத்தலாக அமைகின்றது. இந்தச் சாராம்சப்படுத்துகின்ற மரபுகூட உரைமரபின் ஒரு செயல்பாடாகவே அமைகின்றது. வைணவர் களிடமிருந்த குறைவான பாடல்களை அவர்கள் 'படி'களாகவும் வியாக்கியானங்களாகவும் விரிக்க, சைவமரபில் இருந்த மிகுதியான பாடல்களின் காரணமாக இவர்கள் சாத்திர நூல்களாகச் சுருக்கி உருவாக்கினர். இவ்வாறு உருவாக்குவதில் மொழி நிலையில் சிக்கலாக இருக்கின்ற திருமுருகாற்றுப் படைக்குத் (காரணம் மற்ற நூல்களைக் காட்டிலும் இது காலத்தால் முந்தியது) தனியாக உரை எழுத வேண்டிய தேவை உருவானதோ என்ற ஐயம் எழுகிறது. தமிழில் உரை நூல்கள் மிகுதியும் பெருகிய காலத்தில்தான் சாத்திர நூல்களின் உற்பத்தியும் தொடங்கியது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்" (அசதீஷ், 2008; பக். 67-68) எனும் கூற்றைப் பதிலாகக் கொள்ளலாம். 18,000க்கும் அதிகமான பாடல்கள் கொண்ட பன்னிரு திருமுறையை விரித்தால் மும்மடங்காகப் பெருகலாம். அவற்றை ஓதி உணர்ந்து சைவ நெறியில் நிற்பதென்பது சாத்தியமற்ற விஷயம். எனவே, அவற்றின் சாராம்சமாக 14 சைவ சாத்திரங்கள் தோன்றியிருக்கலாம் என்பதை மேற்கண்ட கூற்று மூலம் உணரமுடிகிறது.

மதிப்பீடு

பன்னிரு திருமுறைகளைத் தொகுத்ததற்கான அளவுகோள்கள் குறித்து தெளிவாக அறிய இயலாத சூழலில், கிடைத்த தரவுகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்து அவதானிப்பதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. மேலும் தரவுகளின் அடைப்படையில் விவாதங்கள் நடைபெறும் சூழலில் இக்கருதுகோள் மாறலாம். இக்கட்டுரையில் பக்தி இயக்க வரலாறு, பன்னிரு திருமுறை அட்டவணை, நாயன்மார்கள் கால ஆராய்ச்சி முதலானவை எடுத்துக்கொண்ட பொருண்மைக்கு அவசியப்படாமையாலும், ஏற்கெனவே அறிஞர் பலரின் புத்தகங்களில் அவை உள்ளமையாலும் தவிர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியம் குறித்த ஆய்வுகள் மிக விரிவாக நிகழ்த்தப் பெற்றுள்ளன; நிகழ்கின்றன. ஆனால் பக்தி இலக்கியம், இயக்கம் குறித்த ஆய்வுகள் மிகச் சிலவே வந்துள்ளன. ஏதாவது ஒரு பக்கச் சார்புடனேயே பக்தி இலக்கியங்கள் அணுகப்படு கின்றன. பக்தி இலக்கியம் குறித்து காய்தல், உவத்தல் இன்றி ஆய்வு செய்து தமிழியல் ஆய்வை முன்னகர்த்துவது ஆய்வாளர்களின் கடமை.

துணைநூற்பட்டியல்

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - பத்தாம் நூற்றாண்டு, தி பார்க்கர், சென்னை - 14, திருத்தப்பட்ட பதிப்பு: 2005

2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - பதினான்காம் நூற்றாண்டு, தி பார்க்கர், சென்னை - 14, திருத்தப்பட்ட பதிப்பு: 2005

3. அ. சதீஷ் சங்க இலக்கிய உரைகள், அடையாளம், திருச்சி, முதல் பதிப்பு:2008

4. ஏ.வி. சுப்பிரமணியன் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 1, இரண்டாம் பதிப்பு: 2005

5. க. வெள்ளைவாரணர் பன்னிரு திருமுறை வரலாறு - முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மறுபதிப்பு: 1994

6. கு. வைத்தியநாதன் பன்னிரு திருமுறை வரலாறு, திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடை மருதூர், முதல்பதிப்பு: 1992

■



வைகானசம் x பாஞ்சராத்திரம் உள்முரண்களின் வெளிப்பாடு

வெ. பிரகாஷ்

பக்தி இலக்கியங்கள் பக்தி அநுபவ வெளிப்பாட்டுக்குரிய பாடல்களாக மட்டுமல்லாமல் பக்திச் சமூக உருவாக்கத்துக்கும் காரணமாய் அமைந்தன. மனிதநிலையில் தேவைப்படுகின்ற ஒழுக்கமுறைகளைத் தெய்வங்களின் வழியாக வெளிப்படுத்தி மனிதர்களை நெறிப்படுத்தும் முயற்சியாகவும் பக்தி இலக்கியப் பாடல்களைக் காணலாம். தெய்வங்களை மனித நிலைப்படுத்தி அம்மனித நிலையின் இன்றியமையா உணர்ச்சிப் பாவங்களை அத்தெய்வத்தின் மேலேற்றி முழு மத அநுபவத்தையுமே சமூக அநுபவக் குறியீடுகளில் வெளிப்படுத்தும் முயற்சிதான் பக்திமுறை (கா.சிவத்தம்பி, 2001:44). வைதீகச் சமயங்கள் இம்முறையை வைதீகச் சமூக உருவாக்கத்திற்கு அடிப்படையாய் அமைத்துக் கொண்டன. இம்முயற்சியின் வெளிப்பாடாகத் திருமுறைகளும் திவ்ய பிரபந்தங்களும் உருவாகின.

பக்தி அநுபவ வெளிப்பாடாக இயற்றப்பெற்ற பாடல்கள் வைதீக உருவாக்கத்தின் தேவை காரணமாகத் தொகுக்கப்பட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட வேண்டிய காரணங்களாக,

- சமய/அரசப் பாதுகாப்பு நிறுவனமான கோயில்களுக்கு முறைப்படுத்தப்பட்ட சமய உணர்வுப் பாடல்களின் தேவை

- சமயங்களுக்குள் ஏற்படுகின்ற உள்முரண்பாடுகள் காரணமாகப் பாடல்களைத் தொகுத்து நிலைப்படுத்த வேண்டிய அவசியம்
- வெவ்வேறு கொள்கைகளில் சிதறிக் கிடக்கும் சமூகத்தைக் குறிப்பிட்ட செல்நெறியின் அடிப்படையில் திரட்டுதல்
- சிற்சில கொள்கை வேறுபாடு கொண்டு மாறுபட்டுச் செயல்படுகின்ற சமயங்களை ஒன்றிணைத்துப் பெரும் சமயமாகக் கட்டமைத்தல்

என இவற்றைக் கருதலாம். அவைதீகச் சமயங்களான சமண பௌத்த மதங்களை எதிர்த்து வைதீகச் சமயங்களான சைவ வைணவ மதங்கள் செயல்பட்டன. சமண பௌத்த எதிர்ப்பிற்குச் சமயக் காழ்ப்பு மட்டும் காரணம் அன்று. அதற்கு அடித்தளமாகச் சமூகச் செயல்பாடு/ இயங்குதல் உள்ளது.

வரலாறு என்பது தற்செயலான நிகழ்ச்சிகளின் சேர்க்கை அல்ல; சமுதாயத்திலே ஏற்படும் மாற்றங்கள் சில திட்டவட்டமான விதிமுறைகளுக்கேற்பவே அமைகின்றன (கோ.கேசவன், 2001:127). விதிமுறைகள் சில சமூகங்களின் தேவைக்கேற்ப உருவாக்கப் படுகின்றன. குறிப்பாக அரசதிகாரத்துடன் விளங்குகின்ற சமூகங்களுக்காக, அவர்களது நன்மை கருதி சட்ட திட்டங்கள் கட்டமைக்கப் படுகின்றன. அரசதிகாரத்துடன் தொடர்பு கொண்ட சமூகம் தனிப்பட்ட உரிமைகளையும் பெருஞ்செல்வத் தொகுதியையும் கொண்டுள்ள காரணங்களால் மற்ற சமூகங்களிடமிருந்து விலகி, சமூகங்களிடையே முரண்கள் ஏற்பட காரணமாகிறது. தொடர்ச்சியாக வஞ்சிக்கப் படுகின்ற சமூகம், அரசதிகாரத்துடன் உள்ள சமூகத்தை ஏதோ ஒரு வகையில் எதிர்க்கத் தொடங்குகிறது; தனது உரிமை மீட்புக்காகப் போராடுகிறது. தமிழகத்தில் வணிகச் சமூகம் கொண்டிருந்த சிறப்புரிமைகளையும் செல்வச்செழிப்பையும் சிலப்பதிகாரத்தின்வழி அறியமுடிகின்றது. வணிகச் சமூகம் தனது நலன் கருதி வணிகச் சார்பான பொருளைப் பெருமளவு உற்பத்தி செய்த காரணத்தால் வணிகர்களுக்கும் வேளாளர், சிறுதொழில் செய்வோர் முதலியோருக்குமிடையே முரண்கள் உருவாகின (கோ.கேசவன், 2001:127). வரலாற்றை நிர்ணயிக்கும் அம்சம் பௌதீக வாழ்க்கையின் பொருள் உற்பத்தியும் அதன் மறு உற்பத்தியுந்தான் என்று ஏங்கல்ஸ் குறிப்பிடுவார் (க.கைலாசபதி, முன்னுரை, 2001:12). வைதீக அடிப்படையில் உருவான பக்தி இயக்கத்திற்கும் இதுவே அடிப்படை.

தொடர்ச்சியான வணிகப் பொருள் உற்பத்தியின் காரணமாக உணவு உற்பத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. மணிமேகலை - அட்சயப் பாத்திரம் கொண்டு - பஞ்சத்தைப் போக்க முயன்றதை மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுவதும் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் இறைவனிடம் (திருவீழிமிழலை) காசு பெற்றுப் பஞ்சம் போக்க முயன்றதும் இதைத் தெளிவுறுத்துகின்றன. நிலவுடைமைச் சமூகமாக விளங்கிய வேளாளர்கள், உழவர்கள், சிறுதொழில் செய்வோர் முதலியோர் வணிகர்களால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகினர். நிலக்கிழார்கள் தங்கள் நலன் கருதி, வலிமை வாய்ந்த அரசை நிறுவ முயன்றனர். வணிக வர்க்கத்தினருக்கும் அவர்கள் பின்பற்றிய சமண, பௌத்த மதங்களுக்கும் ஆதரவளித்த அரசர்களை எதிர்க்கத் தொடங்கினர். விவசாயத்திற்கு ஆதரவான அரசை வலுப்படுத்த முற்பட்டனர் (ஆ.பத்மாவதி, 2003:33). இதற்குச் சைவ வைணவ மதங்கள் ஆதரவாக இருந்தன. இம்மதங்களின் எழுச்சியும் மறுமலர்ச்சியும் இதன் அடிப்படையிலேயே அமைந்தன.

II

சமயம், சமூகத்தில் தன்னைத் தகவமைத்துக் கொண்ட பின்பு அது சார்ந்த கொள்கைகள், கோட்பாடுகள், கருத்துக்கள் முதலியவற்றைப் பரப்ப வேண்டிய தேவை அதற்கு ஏற்படுகிறது. கோட்பாடுகள், ஐதீகங்கள், ஒழுக்கநெறிப் போதனைகள், சடங்குகள், சமூக நிறுவனங்கள், மத அநுபவம் தரும் உந்துதல் அல்லது இயக்கப்பாட்டு யிர்ப்பு என்னும் ஆறு பரிமாணங்களைச் சமயம் கொண்டதாக நினியன் ஸ்மார்ட் குறிப்பிடுவார் (கா.சிவத்தம்பி, 2001:38). சமயம் என்பது நம்பிக்கை, சடங்குகள், இவை இரண்டின் மூலமாகப் பெறப்படும் சமூகக் கண்ணோட்டம் என்னும் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. சமயத்தின் இயங்குதளத்தையும் பன்முகத் தன்மையையும்

வெ. பிரகாஷ்: சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையின் ஆய்வு மாணவர். 'தொல்காப்பிய நன்னூல் – இ. சாமுவேல்பிள்ளை' என்ற நூலின் பதிப்பாசிரியர்களுள் ஒருவர். 'திருக்குறள் பன்முக வாசிப்பு' என்ற நூலைத் தொகுத்தவர்.



வெளிப்படுத்த, பரப்ப, நிலைப்படுத்த இலக்கியம் பெரும்பங்கு வகிக்கின்றது. இலக்கிய உருவாக்க மில்லாது சமூக உருவாக்கமில்லை (கா. சிவத்தம்பி, 2001:39). பக்தி இயக்கம் நிலைபேறு கொள்ள இலக்கியம் இன்றியமையாததாக அமைந்தது. பக்திச் சமூகத்தை உருவாக்க இலக்கியமும் அதனோடு தொடர்புடைய இசையும் முக்கியமானதாக இருந்தது. இதனைக் கருத்தில் கொண்டே இசை முதலாகிய கலைகளை வெறுத்த சமண பௌத்த சமயங்களை அவற்றைக் கொண்டே சைவ வைணவம் எதிர்த்தன.

திவ்ய பிரபந்தம்

வைணவ மத நிலைபேற்றிற்குப் பன்னிரு ஆழ்வார்கள் வெளிப்படுத்திய பக்தி அநுபவப் பாடல்களின் தொகுப்பு நாலாயிர திவ்ய பிரபந்தம் என வழங்கப்பெறுகின்றது. பதினொன்றாம் நூற்றாண்டில் நாதமுனி என்பவரால் இப்பாடல்கள் தொகுக்கப்பெற்றன.

நாதமுனிகள் – சில குறிப்புகள்

நாதமுனிகள் வீரநாராயணபுரம் என்ற ஊரில் ஈசுவர முனிகள் என்பாருக்கு மகனாகப் பிறந்தார். திருமால் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட இவர், அவ்வூரில் உள்ள மன்னனார் கோயிலுக்குச் சென்று வழிபடும் பொழுது வடநாட்டு வைணவர் சிலர் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் ஒரு பத்தைப் பாடக் கேட்டதாகவும் அதன் பின்னர் பிரபந்தத்தின் வரலாற்றைக் கேட்டு அறிந்ததாகவும் சொல்லப் படுகிறது. பின்னர் திவ்ய பிரபந்தப் பாடல்களைத் தேடி குருகூருக்குச் சென்று பராங்குசரை அணுகி, அப்பாடல்களைத் தொகுக்கும் முறையறிந்து மதுரகவி ஆழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு ஓதி நம்மாழ்வாரின் அருளால் பாடல்களைப் பெற்றதாகக் குரு பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. ஆனால், நாதமுனிகள் திவ்ய பிரபந்தப் பாடல்களைத் தேடி ஆழ்வார்கள் வாழ்ந்த இடங்கள், அவர்கள் மங்களாசாசனம் செய்த கோயில்கள் முதலிய வற்றுக்குச் சென்று பாடல்களைத் திரட்டித் தொகுத்ததாக ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகிறார் (2005:132).

காலம்

நாதமுனிகளின் காலம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. குருபரம்பரைக் கதைகளின் அடிப்படையில், 'நாதமுனிகள் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (சுமார் கி.பி. 925) பிறந்து இராசேந்திர சோழன் காலத்தில் (சுமார் கி.பி. 1030) கங்கை கொண்ட சோழபுரத்தில் இறந்ததாக' ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகிறார். மாறாக ஒன்பதாம் நூற்றாண்டில் (கி.பி.823 – கி.பி.918) நாதமுனிகள் வாழ்ந்ததாக மு. இராகவையங்கார், மு.அருணாசலம் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். நாதமுனிகள் காலத்தை ஆராய்ந்த பலர், அவர் பிறந்த இறந்த இடங்கள் பற்றிய கருத்தில் வேறுபடவில்லை.

நாதமுனிகளது திவ்ய பிரபந்தத் தொகுப்பு முயற்சிக்கு இராசேந்திர சோழன் ஆதரவளித்திருக்கக் கூடும் என்பது ஐயரின் கருத்தாக உள்ளது. இராசேந்திரசோழன் ஆதரவளித்ததன் காரண மாகவே நாதமுனிகள் தான் பிறந்து வளர்ந்த வீரநாராயண புரத்தை விடுத்துக் கங்கை கொண்ட சோழபுரம் சென்றதாக ஐயர் குறிப்பிடுகிறார். கங்கை கொண்ட சோழபுரத்தில் நாதமுனிகள், தான் தொகுத்து வைத்திருந்த பாடல்களை ஒழுங்கு படுத்தித் தனது மருமக்களின் உதவியுடன் இசை அமைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கருதுகிறார். ஆழ்வார்களின் வழிவந்த இவ்வாசார்ய பரம்பரை பற்றி எழுதிய கா.ர.கோவிந்தராச முதலியார் நாதமுனிகள் வரலாற்றில் நிகழ்ந்ததாகக் கீழ்க்காணும் சில நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறார்.

வீரநாராயணபுரத்திற்கு வந்த சோழ மன்னன் தனது பரிவாரங்களுடன் அங்கிருந்த திருமாலை வழிபட்டு, யோக நிலையில் இருந்த நாதமுனிகளின் சிறப்பை அறிந்து வணங்கி மீண்டு சென்றார். அவர்கள் சென்றபிறகு யோக நிலையிலிருந்து நீங்கிய நாதமுனிகள் வந்துசென்றவர்கள் கிருஷ்ண கோபியர் கூட்டத்தார் எனக் கருதி கங்கை கொண்ட சோழபுரம் வரை சென்று காண முடியாமல் மீண்டு வந்ததாகக் கூறுகிறார். மற்றொரு நாள் சோழன் தன் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்று திரும்பினான். வழியில் நாதமுனிகளைப் பற்றி வினவி காண இயலாமல் வணங்கிச் சென்றான். பிறகு, நாதமுனிகளின் பிள்ளைகள், "இரண்டு வில்லிகள் ஒரு பெண்ணுடனும் ஒரு குரங்குடனும் வந்து தங்களை வினவினர்'' என்று தந்தையிடம் கூறினர். நாதமுனிகள் அவர்களை இராம இலட்சுமணரும் சீதையும் அவரது பரிவாரங்களும் என்று கருதி விரைந்து தேடினர். கங்கை கொண்ட சோழபுர எல்லை வரை சென்று விசாரித்து அவ்வாறு எவரும் வரவில்லை என அறிந்து அந்த ஏக்கத்தினா லேயே இறந்ததாகக் கூறுகிறார். இத்தகைய கதைகளை அடிப்படையாக வைத்து நோக்கும் பொழுது, நாதமுனிகள் இரண்டு முறை இராசேந்திர சோழனைக் காண முற்பட்டு இயலாது அந்த வருத்தத்தினாலேயே இறந்தார் என்று கருதலாம். நாதமுனிகள் அரசனது

ஆதரவைப் பெற பெரிதும் முயன்று பெறமுடியாமல் இருந்ததை இக்கதைகள் காட்டுகின்றன.

மு.அருணாசலம், மேற்கண்ட நிகழ்வுகள் பற்றி வேறு கருத்தைக் கூறுகிறார். நாதமுனிகள், அரசர் கூட்டத்தாரை இராம லட்சுமணர் என்று கருதி அவர்களைப் பின்தொடர்ந்து சென்று காண இயலாமல் ஒரு சிற்றூரில் இறந்ததாகவும் அந்தச் சிற்றூர் பிற்காலத்தில் இராசேந்திர சோழனால் கட்டமைக்கப்பெற்று கங்கை கொண்ட சோழபுரம் என்று பெயர்பெற்றதாகவும் குறிப்பிடுகிறார். குரு பரம்பரை வரலாறுகள் எழுதப்பட்ட காலத்தில், நாதமுனிகள் வாழ்ந்த காலத்தில் நிலவிய ஊர்ப்பெயர்கள் மறைந்து வீரநாராயணபுரம், கங்கை கொண்ட சோழபுரம் என்ற பிற்காலப் பெயர்கள் நிலைத்துவிட்டதாகக் கருதுகிறார்.

திவ்ய பிரபந்தம் - பெயர்க் காரணம்

இப்பெயர் யாரால் இடப்பெற்றது என்பது சரிவரத் தெரியவில்லை. குருபரம்பரை நூல்களில் நாலாயிரம், பிரபந்தம், திவ்ய பிரபந்தம் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. நாதமுனிகள் காலத்திலோ அல்லது அவருக்குப் பின்னரோ இப்பெயர் வழங்கப்பெற்றிருக்க வேண்டும். இறைவனின் திருவருளால் பாடப்பெற்ற பாடல்கள் என்ற காரணத்தால் 'திவ்ய' என்ற பெயர் நிலைபெற்றிருக்க வேண்டும்.

ஆழ்வார்கள் காலம்

பன்னிரு ஆழ்வார்களும் கி.பி. 6 - கி.பி. 9 க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். ஆழ்வார்களைக் காலமுறைப்படி வரிசைப்படுத்துவதில் குருபரம்பரை நூல்கள் வேறுபடுகின்றன. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் என்ற முறையில் ஆழ்வார்களின் காலவரிசை (ஏ.வி. சுப்பிரமணிய ஐயர்) அமைக்கப்பட்டுள்ளது. இவர்களது காலம், பாடல்கள், பிறந்த ஊர் முதலியவை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆழ்வார்கள்	காலம்	பிறந்த ஊர்	நாடு	சமூகம்	பாடிய பாடல்	ஆயிரம் பாடல் இடம் பெற்றுள்ளன
பொய்கையாழ்வார்	கி.பி.6	காஞ்சிபுரம்	தொண்டை நாடு	பார்ப்பனர்	100	3
பூதத்தாழ்வார்	கி.பி.6	மாமல்லை	தொண்டை நாடு	பார்ப்பனர்	100	3
பேயாழ்வார்	கி.பி.6	மயிலாப்பூர்	தொண்டை நாடு	பார்ப்பனர்	100	3
திருமழிசையாழ்வார்	கி.பி.7	மழிசை	தொண்டை நாடு	பார்ப்பனர்	216	1,3
திருமங்கையாழ்வார்	கி.பி.7	குறையலூர்	சோழ நாடு	கள்ளர்	1253	2,3
திருப்பாணாழ்வார்	கி.பி.7,8	உறையூர்	சோழ நாடு	பாணர்	10	1
தொண்டரடிப் பொடியாழ்வார்	கி.பி.7,8	மண்டங்குடி	சோழ நாடு	பார்ப்பனர்	55	1
குலசேகராழ்வார்	கி.பி.7,8	வாஞ்சைக்களம்	சேர நாடு	மன்னர்	105	1
பெரியாழ்வார்	கி.பி.8	வில்லிபுத்தூர்	பாண்டிய நாடு	பார்ப்பனர்	473	1
ஆண்டாள்	கி.பி.8	வில்லிபுத்தூர்	பாண்டிய நாடு	பார்ப்பனர்	173	1
நம்மாழ்வார்	கி.பி.9	குருகூர்	பாண்டிய நாடு	வேளாளர்	1296	3,4
மதுரகவியாழ்வார்	கி.பி.9	கோளூர்	பாண்டிய நாடு	பார்ப்பனர்	11	1

ஆழ்வார்களில் நால்வர் தொண்டை நாட்டையும், மூவர் சோழநாட்டையும், ஒருவர் சேரநாட்டையும், நால்வர் பாண்டியநாட்டையும் சேர்ந்தவராக உள்ளனர். ஆழ்வார்கள் வழிவந்த வைணவம் தமிழ்நாட்டில் வடக்கிலிருந்து தெற்குநோக்கிச் சென்றதை இக்காலமுறை காட்டுகிறது.

தொகுப்பு முறை

திவ்ய பிரபந்தப் பாடல்கள் நான்கு ஆயிரங்களாகப் பகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. முதலாயிரமும் மூன்றாமாயிரமும் ஆழ்வார்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாகவும் இரண்டாமாயிரமும் நான்காமாயிரமும் முறையே திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரது பாடல்களின் தொகுப்பாகவும் உள்ளன. நான்கு ஆயிரமும் தனித்தனியே ஆயிரம் பாடல்களாக அமைக்கப்பெறாமல் குறைவாகவும் மிகுதியாகவும் தொகுக்கப்பெற்றுள்ளன. முதலாயிரத்தில் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ் வார், மதுரகவியாழ்வார், திருப்பாணாழ்வார் ஆகியோரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்றாமாயிரத்தில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. திருவரங்கத்த முதனார், இராமாநுசர் மீது பாடிய 'நூற்றந்தாதி' அமுதனார் காலத்திலோ அவருக்குப் பிறகோ திவ்ய பிரபந்த இயற்பா தொகுப்பில் ஒன்றாக அமைக்கப் பெற்றுள்ளது. திவ்வியப் பிரபந்தத்தை நாலாயிரமாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதியிலும் இந்த இந்தப் பிரபந்தம் இந்த இந்த வரிசையில் இருக்கவேண்டுமென்ற முறையை வரையறை செய்தவர் நாதமுனிகள் என்று சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார் (1983:296). திவ்ய பிரபந்த முதல் பதிப்பில் (1856) இயற்பாப் பகுதியில் நூற்றந்தாதி இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. நூற்றந்தாதியைத் தனியே (திருவாய்மொழிக்குப் பிறகு) தரும்முறை 1865ஆம் ஆண்டு அப்பாவு முதலியார் பதிப்பிற்குப் பிறகு ஏற்பட்டுள்ளது.

திவ்ய பிரபந்தப் பதிப்புகளில் பாடல் எண்ணிக்கையில் வேறுபாடு காணப் பெறுகின்றது. ஆழ்வார்கள் பாடிய மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 3776. (முதலாயிரம் - 947; இரண்டாமாயிரம் - 1134; மூன்றாமாயிரம் - 593; நான்காமாயிரம் - 1102). இவற்றோடு திருநூற்றந்தாதி, இரண்டு மடல்களின் கண்ணிகளைத் தனித்தனியே சேர்க்கும்பொழுது 4000 பாடல் எண்ணிக்கை வருவதாக மு. அருணாசலம் குறிப்பிடுகிறார். (2005:142) பதிப்புகளில் திருநூற்றந்தாதி இல்லாமல் 4000 பாடல்கள் வருமாறு எண்ணிக்கை இடம்பெற்றுள்ளது. 1865ஆம் ஆண்டு பதிப்பில், திருநூற்றந்தாதி இல்லாது இயற்பாவான மூன்றாமாயிரத்தில் 817 பாடல்கள் உள்ளதாகக் கணக்கிட்டு 4000 முழுமையுறுமாறு ஆக்கப் பெற்றுள்ளது. பல பதிப்புகளில் இம்முறையைக் காணமுடிகின்றது. ஆழ்வார்கள் பாடிய பாடல் களின் தொகுதி குறையுடையதாக இருக்கக் கூடாது எனக் கருதியதன் வெளிப்பாடாக இம் முயற்சியைக் கருதலாம். திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பிரபந்தங்களின் எண்ணிக்கையும் பாசுரங்களின் எண்ணிக்கையும் வேதாந்த தேசிகர் காலத்தில் வரையறுத்துக் கூறப்பெற்றவையாகும் என்ற சுப்புரெட்டியார் கருத்தும் குறிப்பிடத்தக்கது (1983:295).

பிரபந்தப் பாடல்கள் 'இயற்பா', 'இசைப்பா' என்ற இரு பொருளமைதியில் பகுக்கப்பெற்றுள்ளது. இசைப்பா, இசையோடு பாடக்கூடிய பாடல்கள் அடங்கிய தொகுப்பின் பெயராகவும் இயற்பா, அவ்வாறு அமையாத பாடல்கள் அடங்கிய தொகுப்பின் பெயராகவும் சொல்லப்பெறுகின்றன. மூன்றாமாயிரம் தவிர்த்த மற்ற மூன்று ஆயிரங்களும் இசைப்பாவினுள் அமைக்கப்பெற்றுள்ளது. மூன்றாமாயிரமான இயற்பாவில் அமைக்கப் பெற்றுள்ள பாடல்களில் பெரும்பாலானவை அந்தாதிகளாக உள்ளன. பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய பாடல்கள் இசைப்பாப் பகுதியில் மூன்றாயிரங்கள் உள்ளன. இவைகள் எல்லாம் பண்ணுடன் பாடப் பெறுவதற்கு உகந்தவை யாதலால் அவ்வாறே பாடப்படவேண்டும் என்ற காரணத்தால்தான் இசைப்பா என்று தனியாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டிருக்கின்றன என்று ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகிறார். (2005:136) இவரது கருத்தை முழுமையாக ஏற்க இயலவில்லை. இசைப்பா எனப் பிரிக்கப்பெற்றுள்ள பகுதியில் நான்காம் ஆயிரம் முழுவதும் அந்தாதியாக உள்ளது. இவை பாடுவதற்கு ஏற்றவகையில் பண்ணுடன் அமைக்கப்பெற்றுள்ளன. இயற்பா பகுதியில் இருக்கின்ற அந்தாதிப் பாடல்கள் பண்ணுடன் பாடுவதற்கு ஏற்றதாக அமைக்கப் பெறவில்லை. அந்தாதிகளைப் பண்ணுடன் பாட இயலும் என்றால் இயற்பா பகுப்பிற்குரிய காரணம் எது என்பது கேள்வியாகின்றது. இயற்பா பகுதியில் திருவிருத்தம், திருவாசிரியம் முதலான இசைக்குரிய பாக்களில் அமைந்த பாடல்கள் உள்ளன. இக்கருத்துக்கள் இயற்பா, இசைப்பா பகுப்புமுறைக்குரிய அடிப்படைகள் எவை என்பதைக் கவனம் கொள்ள வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. இந்தப் பகுப்பு முறையை

நாதமுனி உண்டாக்கினாரா அல்லது பிற்காலத்தவர் உண்டாக்கினாரா என்பது ஐயத்திற்கு இடமளிப்பதாக உள்ளது.

அடிவரவு தரும் முறை

பிரபந்தப் பாடல்களை இசையோடு பாடுவோர், பாடல்களை எளிதாக நினைவில் நிறுத்திக்கொள்ள பாடல்களின் முதல் சொல்லைத் தொகுத்து அமைப்பதை 'அடிவரவு' என்பர். இம்முறையைக் கைக்கொண்டவர் பிற்காலத்தவராக இருக்க வேண்டும். அடிவரவு தரும் முறையில் பதிப்புகளிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. திவ்ய பிரபந்தத் தொடக்ககாலப் பதிப்புகளான ஸ்ரீநிவாஸ முதலியார் பதிப்பு (1861), அப்பாவு முதலியார் பதிப்பு (1865), ஆயலூர் வரதாசாரி பதிப்பு (1889) ஆகியவற்றில் இயற்பாவிற்கு அடிவரவு காணப்பெறவில்லை. 1881 ஆம் ஆண்டு ஸ்ரீநிவாச அய்யங்கார் பதிப்பித்துள்ள திவ்ய பிரபந்தம் முதலாயிரத்தில் 'அடிவரவு' காணப்பெறவில்லை. பெரிய திருமொழிக்கு 1861, 1889 பதிப்புகளில் அடிவரவு தரப்பெறவில்லை. 1895 ஆம் ஆண்டு ஸ்ரீநிவாஸதாதாசாரிய ஸ்வாமிகள் பதிப்பில் பெரிய திருமொழிக்கும் இயற்பாவிற்கும் 'அடிவரவு' தரப்பெற்றுள்ளது. ஒன்றாம் எண்ணுக்குரிய தொடர்ச்சியில் அமைந்த (1, 11, 21, 31, 41...) பாடல்களின் முதல் சொல்லின் தொகுதியாக இயற்பாவிற்கு அமைந்த அடிவரவு உள்ளது. அடிவரவிலிருந்து வேறுபடுத்தி, 'தஸகம்', 'தஸக அடிவரவு' என்று பதிப்புகளில் இம்முறை சுட்டப்பெற்றுள்ளது. நூறு பாடல்கள் கொண்ட அந்தாதிக்கு அடிவரவு அமைப்பில் இம்மாற்றத்தைக் காணமுடிகிறது. ஸ்ரீநிவாஸதாதாசாரிய ஸ்வாமிகளின் பதிப்பிற்குப் பிறகு வெளிவந்த பிரபந்தப் பதிப்புகளில் பிரபந்தம் முழுமைக்கும் அடிவரவு தரப்பெற்றுள்ளது. நாதமுனிகள் அடிவரவு முறையைக் கையாண்டிருந்தால் பதிப்பாசிரியர்களிடையே வேறுபாடு ஏற்பட அவசியமில்லை. அப்பாவு முதலியார் பதிப்பில் காணப்படும் 'பாசுரங்களின் அடிவரவு முதலியவைகளுடன் பரிசோதிக்கப்பட்டு' என்ற குறிப்பும் முக்கியமானது. பதிப்புகளுக்கு முன்னரே அடிவரவு தரும் முறை இருந்ததை இக்குறிப்பின்வழித் தெரியவருகின்றது. பிரபந்தம் முழுமைக்கும் அடிவரவு தரும் முறை இல்லை என்பதற்குத் தொடக்ககாலப் பதிப்புகள் சான்றாக உள்ளன. ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமிகளின் பதிப்பிற்குப் பிறகே திவ்ய பிரபந்தப் பாசுரங்கள் முழுமைக்கும் அடிவரவு தரும் முறை மேற்கொள்ளப்பெற்றதாகக் கொள்ளலாம். பக்தி இலக்கிய மரபில் திவ்ய பிரபந்த பாசுரங்களுக்கு மட்டும் அடிவரவு தரும் முறையைக் காணமுடிகின்றது. பாசுரங்களை நினைவில் நிறுத்தி வைக்க இம்முறை பெரிதும் பயனாக இருந்திருக்கக் கூடும்.

திருமாலை 'சேவித்தல்' என்பது வைணவத்தில் முக்கியமானது. பிரபந்தப் பாசுரங்களை இசையின் மூலமாக அல்லாமல் கூட்டமாகக் கூடிப் பாடும் முறை (சேவித்தல்) வைணவத்தில் உள்ளது. இவ்வாறு பாடும்பொழுது ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுதல் என்பது முக்கியமானது. இதற்குச் சேவிப்பு முறைகள் உருவாக்கப்பட்டன; நிறுத்துமிடங்கள் குறிக்கப்பட்டன. சேவிப்பு பிசகில்லாமல் நடைபெற வழிசெய்யப்பட்டது. பின்னால் சேவிப்புமுறை பலரால் உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்த சவையாபுரிப்பிள்ளையின் கருத்து முக்கியமானது:

பெருமாள் எழுந்தருளும்போதும், பிற விசேஷ காலங்களிலும் கோயில்களிலும் திருமாளிகைகளிலும் இங்ஙனம் பிரபந்த ஸேவை நிகழ்வதாகும். இதனால் பிரபந்தப் பாசுரங்கள் பல பிரதேசங்களிலும் பரக்க ஓதப்பெற நேர்ந்தன. நாளடைவில் ஒவ்வொரு வகையாக நிறுத்துமிடங்கள் அறுதியிடப்பெற்றன. எந்தச் சேவிப்பு முறையைப் பின்பற்றுதல் வேண்டுமெனக் கண்டுகொள்ளுதலில் இடர்ப்பாடு உண்டு. இவை பொருள்செல் நெறியை உணர்த்தின என்று கருதவும் இடமில்லை. (1955: V)

1895க்கு முன்னதான பதிப்புகளில் நிறுத்தற் குறிகள் தரும் முறை பின்பற்றப் பெறவில்லை. ஸ்ரீநிவாஸதாதாசாரிய ஸ்வாமிகளின் பதிப்பிற்குப் பிறகே இம்முறை பதிப்பாசிரியர்களால் மேற்கொள்ளப்பெற்றன. சான்றாக,

கடியார் பொழிலணி வேங்கடவா! கரும்போரேற!* நீயுகக்கும்

குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே போனாய் மாலே!*

கடிய வெங்கானிடைக் கன்றின்பின் போன சிறுக்குட்டச் செங்கமல

அடியும் வெதும்பி* உன்கண்கள் சிவந்தாய் அசைந்திட்டாய் நீ எம்பிரான்!

(1939 பதிப்பு - பெரியாழ்வார் திருமொழி, 3 - பத்து)

என்று இவ்வாறு நிறுத்தற்குறி தரும் முறையைக் காணலாம். அடிவரவு, நிறுத்துமுறை ஆகிய இரண்டுக்கும் தொடர்பு இருக்க வாய்ப்புள்ளது.

தனியன் அமைத்தல்

ஆசாரிய பரம்பரையைத் தொடங்கி வைத்துப் பாசுரங்களைத் தொகுத்த நாதமுனிகள் முதற்கொண்டு பல ஆசாரியர்கள் தனியன் பாடியுள்ளனர். இலக்கண இலக்கிய நூல்களுக்குப்

பாடப்பெறுகின்ற சிறப்புப் பாயிர அமைப்பைப் போன்று ஆழ்வார் பாடல்களுக்குத் தனியன் உள்ளது. பாசுரங்களின் சிறப்பைத் தனிப்பாடல்வழி வெளிப்படுத்தும் காரணத்தால் இவை தனியன் என்று அழைக்கப்பெற்றிருக்கலாம். ஒவ்வொரு ஆழ்வாரது பாசுரத் தொடக்கத்திலும் தனியன் தரப்பெற்றுள்ளது. கிரந்த உருவிலும் அதனைத் தொடர்ந்து கிரந்தத்தின் தமிழ் வடிவும் பின்னர் ஆழ்வாரது சிறப்பைக் கூறுவதாகவும் தனியன் அமைந்துள்ளது. சில தனியன்களில் பாசுரத்தின் பெயர் தரப்பெற்றுள்ளது. நம்பெருமாள், எம்பெருமான், கூரத்தாழ்வான், ஆளவந்தார், பராசரப்பட்டர் முதலிய ஆசாரியர்கள் தனியன் களைப் பாடியுள்ளனர்.

பிரபந்த அமைப்பு முறை

திவ்ய பிரபந்தப் பாசுரங்கள் அமைக்கப் பெற்றிருக்கும் முறை முக்கியமான ஒன்று. திருமுறைகளின் தொகுப்பைப் போலவே பிரபந்தங்கள் தொகுப்பும் ஆழ்வார்களின் கால வரிசைப்படி அமைக்கப்பெறவில்லை. பெரியாழ் வாரது பாசுரங்களோடு தொடங்கி நம்மாழ்வாரது திருவாய்மொழியுடன் நிறைவுபெறுகின்றது பிரபந்தத் தொகுப்பு. மனிதன் சில ஆண்டுகள் தூய்மையான குழவிப் பருவத்தின் இன்பத்தைப் பருகிப் பின்னர் வாலிபம் அடைந்து காதல் வாழ்க்கையில் ஈடுபட்டு உழந்து நின்று, அப்புறம் பகவானிடம் பக்தி கொண்டு, இறுதியிலே ஞானம் பெற்று வளர்வதைக் காட்டும் முறையில் பாடல்களின் அடைவு இருப்பது சிந்திக்கத்தக்கது என்று ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் (2005:145) இவ்வமைப்பிற்கு விளக்கமளிக்கிறார். வைணவ தத்துவார்த்த முறையில் திவ்ய பிரபந்த அமைப்பிற்கு உள்ள கருத்தையும் அவர் குறிப்பிட்டுச் செல்கிறார். தொகுப்பாசிரியர் எந்தக் காரணம் பற்றி இவ்வமைப்பை மேற்கொண்டார் என்பது முக்கியமான ஒன்று. திருமுறைகளின் அமைப்பைப் போன்று இதிலும் பார்ப்பனச் சமூகத்தைச் சார்ந்த ஆழ்வார்களுக்கு முக்கியத்துவம் தரப்பெற்றுள்ளது. முதலாயிரமும் மூன்றாமாயிரமும் இதனை வெளிக்காட்டுவதாக உள்ளது. அந்தக் காலச் சூழ்நிலையை இவ்விரு தொகுதிகளும் தெளிவாகக் காட்டியுள்ளதாகக் கருதமுடிகிறது.

முதலாயிரத்தில் இடம்பெற்றுள்ள ஆழ்வார் களில் மூவர் பாண்டிய நாட்டையும் இருவர் சோழ நாட்டையும் சேர்ந்தவர்களாக உள்ளனர். சேர மற்றும் தொண்டை நாட்டில் இருந்து ஒரு ஆழ்வார் வீதம் இருவர் இடம்பெற்றுள்ளனர். சோழ நாட்டைச் சேர்ந்த நாதமுனிகள் இத்தொகுப்பை உருவாக்கும்பொழுது சில அடிப்படைகளைத் தன்னுள் கொண்டிருந்ததாகக் கருதலாம்.

- இசை அடிப்படை
- நாட்டு அடிப்படை (தொண்டை, சோழ, சேர, பாண்டிய நாடுகள்)
- சமூக அடிப்படை (பார்ப்பனர், வேளாளர், பாணர், கள்ளர்)

நாதமுனிகள் சோழ நாட்டைச் சேர்ந்தவர் ஆகையாலும், சோழ மன்னனது ஆதரவு கிடைப்பதில் இருந்த சிக்கல்கள் காரணமாகவும் தொகுப்பில் பாண்டிய நாட்டு ஆழ்வார்களுக்கு முன்னுரிமை தந்திருக்க வேண்டும்.

முதலாயிரத்தில் இடம்பெற்றுள்ள ஆழ்வார்கள் சில பாடல்கள் மட்டுமே பாடியுள்ளனர். சோழ நாட்டைச் சேர்ந்த திருமங்கையாழ்வாரும் பாண்டிய நாட்டைச் சேர்ந்த நம்மாழ்வாரும் மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளனர். எனவே அவர்களது பாடல்களில் சிலவற்றை மூன்றாம் ஆயிரம் முழுவதும் இயற்பாவாக உள்ளது. இவ்வாயிரத்துள்ளும் தொண்டை, சோழ, பாண்டிய நாட்டு ஆழ்வார்களின் பாடல்கள் உள்ளன. சேர நாட்டைச் சேர்ந்த குலசேகரர் பெருமாள் திருமொழி என்ற ஒன்றை மட்டும் பாடிய / பாடல்கள் முழுமையும் கிடைக்காத காரணத்தால் சேர நாட்டுப் பாடல்கள் மூன்றாயிரத்தில் இடம்பெறவில்லை எனக் கருதலாம். வைணவ நிலைபேறுக்குரிய, ஒட்டுமொத்த மக்கள் இணைப்புக்கான முயற்சியாக இம்முறையைக் கருதலாம்.

ஆழ்வார்களின் பாடல்களுக்கு இடப்பெற்ற பெயர் யாரால் எப்பொழுது இடப்பெற்றது என்பதும் முக்கியமானது. பெரியாழ்வார் திருமொழி, முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாந் திருவந்தாதி, நாச்சியார் திருமொழி முதலிய பெயர்கள் ஆழ்வார்கள் தாமே இட்ட பெயர்களாக இருக்க வாய்ப்பில்லை. தொகுப் பாசிரியர் இட்ட பெயராக இருக்க வாய்ப்பு உள்ளது. பிரபந்தப் பாடல்களுக்கு அமைந்த தனியன்களில் சில ஆழ்வார்களது பாசுரப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. தனியன்கள் பாடப்பெறும் காலத்திற்கு முன்பே சிலரது பாசுரங்கள் பெயரிடப்பட்டுள்ளன. பதிப்பாசிரியர்களும் பாசுரங்களுக்குப் பெயர்கள் இட்டதாகத் தெரிகிறது. 1861, 1865 மற்றும் 1889 ஆம் ஆண்டு பிரபந்தப் பதிப்புகளில் திருமழிசையாழ்வாரின் பாடல்கள் திருவந்தாதி என்றும் நான்காம் திருவந்தாதி என்றும் பெயரிடப் பெற்றுள்ளது. 1895 பதிப்பில் முதல்முறையாக 'நான்முகன் திருவந்தாதி என்ற

பெயரில் திருமழிசை ஆழ்வாரது பாடல்களைக் காணமுடிகிறது. இராசேந்திர சோழன் காலத்தில் திருவாய்மொழி பாட விண்ணகரங்களில் நிவந்தங்கள் அளிக்கப்பெற்றதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. (மு.அருணாசலம், 2005:144) தொகுப்பாசிரியருக்கு முன்னரே இப்பிரபந்தங்களுள் சில பெயரிடப்பட்டு வழக்கில் இருந்துள்ளதை இக்கருத்துக்கள் தெளிவுறுத்துகின்றன.

தொகுப்பு அரசியல்

தொடர்ச்சியான சைவ வைணவ எழுச்சி இவ்விரு சமயங்களுக்குள் போட்டியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சைவம் அரசதிகாரத்திற்குரிய தன்மைகளை உட்கொண்டு அரசதிகார சமயமாக உருக்கொண்டது. அரசதிகாரத்திற்குரிய ஒற்றைத் தன்மையைச் சைவம் விரைவில் பற்றிக் கொண்டது. வைணவம் அரசதிகார மையத்திற்குள் செல்லாமல் மக்கள் இயக்கமாக உருக்கொள்ள முயன்றது. இதன் ஒரு பகுதியாக ஆழ்வார்களின் பாடல் தொகுதிக்குரிய முயற்சியைக் காணலாம். சைவமும் வைணவமும் சமய நிலைபேற்றிற்குரிய வழிவகைகளில் ஒன்றாக இலக்கியத் தொகுப்பைச் செய்திருக்கலாம்.

திவ்ய பிரபந்தத் தொகுப்பு முயற்சிக்குச் சைவ சமய எழுச்சி / வளர்ச்சி மட்டுமல்லாமல் வைணவ சமயத்தில் இருந்த முரண்பாடுகளும் அடிப்படைக் காரணமாக இருந்திருக்க வேண்டும். வைணவத்தில் வைகானசம், பாஞ்சராத்திரம் என்ற இரு பிரிவுகள் உள்ளன. வைகானசம் ரிஷியின் வழிப்பட்டது என்றும் பாஞ்சராத்திரம் வேதவழிப்பட்டதென்றும் கூறப்பெறுகிறது. இப்பிரிவுக்குரிய சமூகக் காரணங்கள் எவை என்பது தெளிவாக இல்லை. வேதங்களைத் தமிழில் செய்வதற்கும், அவ்வாறு செய்யப்பெறும் தமிழ் வேதங்களுக்கு வடமொழியிலுள்ள வேதங்களுக்குள்ளதைவிட அதிகப் புனிதத்துவம் கொடுப்பதற்குமே ஆழ்வார்களை, பரமன் அவதரித்ததாகக் கூறும் குரு பரம்பரைக் கதை (2005:137,138) பாஞ்சராத்திர வைணவப் பிரிவிற்குரிய காரணத்தை வெளிப்படுத்துகிறது. பல்லவர் காலத்தில் வடநாட்டில் இருந்து வேதியர்கள் வரவழைக்கப்பட்டனர். அரசர்கள் தமிழகத்தில் வாழ்ந்து வந்த வேதியர்களைவிட வடநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட வேதியர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர் (ஆ.பத்மாவதி, 2003:56). வடநாட்டில் இருந்து வந்தவர்கள் தங்களைத் தமிழ்நாட்டுப் பார்ப்பனரில் இருந்து வேறுபடுத்திக் காட்ட தங்களை விகானஸ் என்னும் முனிவர் மரபில் வந்தவர்கள் (தொ.பரமசிவன், 2005:34) என்னும் பொருள்பட வைகானசர் என்று கூறிக்கொண்டனரா என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும். கிபி. ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில் சோழ அரசு பேரரசாக உருவெடுத்தபோது வைணவக் கோயில்கள் பெரும்பாலும் வைகானசம் சார்ந்தே அமைக்கப் பெற்றன. பாண்டி நாட்டில் தாமிரவருணிக்கரைக் கோயில்களில் பெரும்பாலானவை வைணவக் கோயில்களே. தொடக்ககாலப் பல்லவர் செப்பேடுகள் அனைத்துமே வைகானசர்களைக் குறிப்பிடுகின்றது என்று தொ. பரமசிவன் குறிப்பிடுவதும் முக்கியமானது (2005:37). பல்லவர் காலச் செப்பேடுகளில் வைணவத்தின் ஒரு பிரிவான வைகானசம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே வைணவத்தின் மற்றொரு பிரிவான பாஞ்சராத்திரம் தொண்டை நாட்டில் இருந்து தொடக்கம் பெற்றதாகக் கருதலாம். தொண்டை நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் வைகானசப் பிரிவுக் கோயில்கள் அதிகமாக இருந்த காரணத்தால் அதிகப்படியான ஆழ்வார்கள் (எண்மர்) இந்த இரு நாடுகளிலிருந்தும் வேத வழிப்பட்ட வைணவத்தைப் பரப்ப முயன்றதாகக் கொள்ளலாம்.

வைகானச, பாஞ்சராத்திர முரண் முக்கியமான ஒன்றாக உருவெடுத்தது. வைகானசர்கள் திருமாலைத் தவிர வேறு எவரையும் பூசை செய்யாதவர்கள். சாதி மேலாண்மை என்பது இவர்களுக்கு முக்கியமானது. சமூக இயங்குதளம் சாதி மேலாண்மையைக் கட்டவிழ்க்க வேண்டிய தேவையை வலியுறுத்தியது. இங்கிருந்த வைணவப் பார்ப்பனர்களுள் சிலர் ஆழ்வார்களாக உருவெடுத்து வைணவ மறுமலர்ச்சிக்கு வித்திடும் பொழுது சமூகக் கட்டுப்பாடுகளில் தளர்வினை ஏற்படுத்த முனைந்தனர். (கீழ்சாதியாரையும் அடியராகக் கொள்ளும் முயற்சி - பழுதிலா வொழுக லாற்றுப் பலசதுப் பேதிமார்கள், இழிகுலத் தவர்க ளேனும் எம்மடி யார்க ளாகில், தொழுமினீர் கொடுமின் கொள்மின் (திருமாலை 42); சடங்காசார விதிகளில் இருந்து கட்டவிழ்க்கும் முயற்சி - குளித்து மூன்றனலை யோம்பும் குறிகொள் அந்தண்மை தன்னை, ஒளித்திட்டேன் என்கண் இல்லை நின்கணும் பத்தனல்லேன் (திருமாலை25)). தொண்டரடிப்பொடியாழ்வார், ஆண்டாள் முதலிய ஆழ்வார்களின் பாடல்களில் இம்முயற்சியைக் காணலாம். திருப்பாணாழ்வாரின் இருப்பும் இம்முயற்சியின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். பிராமணியத்திற்கு உள்ளும் வைதீகம் பிறப்புவழி மேன்மையினைப் பேசி வருகின்றது என்று தொ. பரமசிவன் குறிப்பிடுவதும் முக்கியமானது. (2005:34).

வைகானசர்களுக்குச் சமூகத்தில் இருந்த முக்கியத்துவம், ஆழ்வார்களை முன்னிறுத்திய

பாஞ்சராத்திரர்களுக்குப் பாசுரங்களைத் தொகுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியிருக்க வேண்டும். வைணவக் கோயில்களில் ஆழ்வார்களின் சிலைகளை அனுமதிக்காத வைகானசர்கள் மீது இருந்த வெறுப்பும் பாஞ்சராத்திர வைணவர்கள் தங்களது இருப்பை நிலைப்படுத்த வேண்டிய தேவையும் நாலாயிர திவ்ய பிரபந்தத் தொகுப்புக்கு முக்கிய காரணமாக இருந்திருக்க வேண்டும். வைணவ ஆசாரிய பரம்பரையை உருவாக்கி முதல் ஆசாரியராக விளங்கிய நாதமுனிகள் இப்பணியைச் சிறப்புறச் செய்து முடித்துள்ளார்.

பதிப்புகள்

நாலாயிர திவ்யபிரபந்தப் பதிப்பு முயற்சி 1856 இல் இருந்து தொடங்குகிறது. நேத்திரப்பாக்கம் சின்னையர் என்பவர் பரிசோதிக்கப் பெரிய திருமொழி பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதே ஆண்டில் திருப்புட்குழி கூர்மாச்சார்யர் திருவரங்கத்த முதனாரது நூற்றந்தாதியுடன் இயற்பாவைப் பதிப்பித்துள்ளார். நாலாயிர திவ்ய பிரபந்தப் பதிப்பு வரலாற்றில் முதலாவது பதிப்பாக இவை இரண்டும் கருதப்பெறுகிறது. 1859 ஆம் ஆண்டில் திருப்புட்குழி கூர்மாச்சார்யர் முதலாயிரத்தை மட்டும் தனியே பதிப்பித்துள்ளார். இவரைத் தொடர்ந்து பிரபந்தத்தைப் பலர் பதிப்பித்துள்ளனர். ஸ்ராநிவாஸ முதலியார் (1861முழுவதும்), அப்பாவு முதலியார் (1865முழுவதும்), கோ. இராசகோபாலப் பிள்ளை, ந. திருநாராயணதாசர் (1868திருமாலை), ஈச்சம்பாடி ஸ்ராநிவாச அய்யங்கார் (1881 முதலாயிரம்), ஆயலூர் வரதாசாரி பதிப்பு (1889 பெரிய திருமொழி), ராகவாசாரி (1889இயற்பா), ஸ்ராநிவாஸதாதாசாரிய ஸ்வாமிகள் (1895 முழுவதும்) ஆகியோர் பாசுரங்களைப் பதிப்பித்துள்ளனர். அனைத்துப் பதிப்புகளும் திருவாய்மொழியை நான்காமாயிரமாகப் பதிப்பிக்க 1973 ஆம் ஆண்டு கி.வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பித்து திருவேங்கடத்தான் மன்றம் வெளியிட்ட பிரபந்தத்தில் திருவாய்மொழி மூன்றாமாயிரமாகவும் இயற்பா நான்காமாயிரமாகவும் அமைக்கப் பெற்றுள்ளது. இது அமைப்பு முறையில் ஏற்படுத்தப்பெற்ற முக்கியமான மாற்றமாகும்.


நிறைவாக

அவைதீகச் சமயங்களான சமணமும் பௌத்தமும் (வணிகர் ஆதரவுள்ளவை) சமூகத்தில் நிலைபெற்றிருந்த காரணத்தால் வைதீகம் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளப் பெருமுயற்சி செய்தது. இம்முயற்சியின் வெளிப்பாடாகச் சைவமும் வைணவமும் (வேளாளர் ஆதரவுள்ளவை) மறுமலர்ச்சி அடைந்து சமூகத்தில் நிலைப்படுத்திக் கொண்டன. அவ்வாறு நிலைப்படுத்தப்பட்ட சமயங்களுக்கு வைதீகச் சமூகத்தை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இறை அடியவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு இதற்கு அவசியமாக அமைந்தது. வைணவ சமயத்தில் - வைகானசர், பாஞ்சராத்திரர் ஆகிய இருவருக்குள் - ஏற்பட்ட உள்முரண் மற்றும் வைகானச ஏற்றம் ஆகியவை பாஞ்சராத்திரர்களுக்கு ஆழ்வார்களின் பாடல் களைத் தொகுக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தின. இதன் வெளிப்பாடாகத் திவ்ய பிரபந்தம் என்ற தொகுப்பு உருப்பெற்றது.

துணைநூற்பட்டியல்

1. அருணாசலம் மு., தமிழ் இலக்கிய வரலாறு ஒன்பதாம் நூற்றாண்டுII, தி பார்க்கர், இராயப் பேட்டை, சென்னை 14, 2005 திருத்தப் பட்டபதிப்பு.
2. கேசவன் கோ., மண்ணும் மனித உறவுகளும், சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம், 2001 திருத்திய முதல்பதிப்பு.
3. கோவிந்தராச முதலியார் கா.ர., ஆழ்வார்கள் வழிக் குரவர் வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1950 முதல்பதிப்பு.
4. சிவத்தம்பி கா., தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும், மக்கள் வெளியீடு, சென்னை, 2001.
5. சுப்பிரமணியன் ஏ.வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2005.
6. சுப்புரெட்டியார் டாக்டர் ந., சில நோக்கில் நாலாயிரம், பாரி நிலையம், சென்னை, 1983 முதல் பதிப்பு.
7. பத்மாவதி டாக்டர் ஆ, சோழர் ஆட்சியில் அரசும் மதமும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2003 மறுபதிப்பு.
8. பரமசிவன் தொ., சமயங்களின் அரசியல், கங்கு வெளியீடு, சென்னை, 2005.
9. Arunachalam M., Peeps into the Cultural Heritage of Hinduism, The Kasi Math, Tiruppanandal, 2010 Reprint.

■



பார்ப்பனியம் மைனஸ் பார்ப்பனர் = சைவ சித்தாந்தம்

(சைவ சித்தாந்த சாத்திரநூல் தொகுப்பு வரலாறு)

பொ.வேல்சாமி


மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்து ஓய்வு பெற்ற, சங்க இலக்கியங்களில் பெரும் புலமை பெற்ற தமிழறிஞர் தட்சிணாமூர்த்தி (சங்க நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: மொழிபெயர்த்துக் கொண்டிருப்பவர்) அவர்களிடம் அண்மையில் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தேன். அவரிடம் தமிழாசிரியர்கள் பலர் சோழர் காலத்தைப் பொற்காலமென்றும் களப்பிரர் காலத்தை இருண்ட காலமென்றும் எழுதியிருக்கின்றனர். ஆனால் மேலோட்டமாகப் பார்க்கும்போதுகூட களப்பிரர் காலத்தில் திருக்குறள், நாலடியார் பதினெண் கிழ்க்கணக்கு நூல்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான தமிழுக்கே பெருமை சேர்க்கும் நூல்களும் நீலகேசி, வளையாபதி முதலான இந்தியத் தத்துவங்களை நுட்பமாக விளக்குகின்ற நூல்களும் இறையனார் களவியல் போன்ற இலக்கண நூல்களும் என்று தமிழ்மொழிக்கே அடையாளம் கொடுக்கின்ற பல நூல்கள் தோன்றியிருக்கின்றன. அந்தக் காலத்தில் சமஸ்கிருதத்தில்கூட இவ்வளவு நூல்கள்

தோன்றியதாக ஆதாரங்கள் இல்லை. பாலி, பிராகிருதம் தவிர இன்று இந்தியாவில் பேசப்படுகின்ற எந்த மொழியும் எழுத்துருவம்கூடப் பெறவில்லை. இவ்வாறு தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கின்ற நூல்கள் சோழர்கள் காலத்தில் எவையாவது படைக்கப்பட்டுள்ளனவா என்று கேட்டேன். அவர் சொன்னார். கம்ப ராமாயணம் உள்ளது. ஆனால் கம்பனுக்கும் சோழ அரசனுக்கும் பகைமை என்றுதான் வழக்காறுகள் கூறுகின்றன. தமிழ்மொழியின் அமைப்பையே மாற்றி பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளின் இலக்கண அமைதியைத் தமிழாகக் காட்டிய வீரசோழியம் உள்ளது. ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலா, புகழேந்தியின் நளவெண்பா, ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி, சேக்கிழாரின் பெரியபுராணம் போன்ற நூல்கள் தான் சோழர் காலத்தின் தமிழ்ப் படைப்புகளாக உள்ளன. இதிலும் ஒரு சிக்கல் உள்ளது. இவை அனைத்துமே இராஜஇராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழனின் பெண் வயிற்றில் பிறந்த வேங்கிநாட்டைச் சேர்ந்த தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட குலோத்துங்கச் சோழன் மற்றும் இவனுடைய மகன் (விக்கிரம சோழன்) பேரப் பிள்ளைகள் முதலானவர்கள் காலத்தில்தான் படைக்கப்பட்டன என்றார். அதாவது நாமெல்லாம் பெருமையாக நினைக்கின்ற இராஜ இராஜன் காலத்திலோ அவனுக்குப்பின் நூறு ஆண்டுகளாக ஆட்சி செய்த முன்னோர்கள் காலத்திலோ குறிப்பிடத்தக்க எந்த ஒரு தமிழ்நூலும் தோன்றவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இவர்களுடைய காலத்தில் ஏராளமான சமஸ்கிருதத்தைப் பயிற்றுவிக்கும் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. 'வேங்கட மாதவர்' என்ற பார்ப்பனர் 'ரிகர்த்த தீபிகை' என்னும் வேதத்துக்கு விளக்கம் சொல்லும் நூலை எழுதினார்.[1] இராஜ இராஜனுக்கும் அவனுடைய முன்னோர் களுக்கும் முதலமைச்சர்களாக, இராஜகுருக்களாக, நாட்டின் படைத்தலைவர்களாக இருந்தவர்கள் அனைவரும் பார்ப்பனர்களே. திருமுறைகளை இராஜஇராஜன் தொகுத்தான் என்பதில்கூட கருத்து வேறுபாடுகள் உள்ளன. தகவல்கள் இப்படியிருக்க அந்தத் தமிழறிஞர்கள் ஏன் அப்படிச் சொன்னார்கள்? இங்கேதான் தமிழக வரலாறு என்பதைத் தமிழ்நாட்டுச் சாதிகளின் வரலாறு என்று பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

மெய்கண்ட சாத்திரங்கள் என்று சொல்லப் படுகின்ற சைவ சித்தாந்த நூல்களின் தோற்றத்துக்கும் தமிழ் பேசுகின்ற சூத்திர வர்ணத் தாராகிய வெள்ளாளர், முதலியார், வணிகத்தால் செல்வர்களாக இருந்த செட்டியார்களுக்கும் நெருக்கமான உறவு இருந்தது. சுருக்கமாகக் கூறினால் இந்தச் சூத்திர உயர் சாதியினரின் சமூக அந்தஸ்தை உயர்த்தி நிலைநிறுத்துவதற்காக எழுதப்பட்டவைதான் சைவ சித்தாந்த சாத்திரங்கள். ஆனால் இந்தச் சமூக அந்தஸ்துக்காக இவர்கள் பல நூற்றாண்டுகள் பலநிலைகளில் முயற்சி செய்து வந்தனர். களப்பிரர் காலம் என்று சொல்லப்படுகின்ற காலத்தில் இந்தச் சூத்திர வர்ணம் சார்ந்த தமிழர்கள் (இந்தக் காலகட்டத்தில் நால் வருணப் பாகுபாடு என்பது தமிழ்நாட்டில் வேரூன்றவில்லை. எனவே அக்காலத்தில் இவர்கள் சூத்திரர் என்ற இழிவுச் சொல்லால் அழைக்கப்பட வில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.) நில உரிமை பெற்றவர்களாகவும் சமயத் தலைமை பெறுவதற்குத் தகுதியானவர்களாகவும் பெரும் வணிகர்களாகவும் சிறப்புற்றிருந்தனர். சங்ககாலத் தமிழ் அரசர்களால் பெரிதும் சிறப்புச் செய்து பாராட்டப் பெற்ற பார்ப்பனர்கள் நிலை குலைந்தனர். "களப்பிரர்கள் கொடுங்கோலர்கள் என்றும் அவர்கள் பல அதிராஜர்களை அழித்துவிட்டார்கள் என்றும் பிரம்மதேய உரிமைகள் (பார்ப்பனர்கள் பெற்றிருந்த நில உரிமை) பலவற்றை ரத்து செய்துவிட்டார்கள் என்றும் வெகுவாகத் தூற்றப்படுகிறார்கள்[2]. ஆகவே பார்ப்பனர்கள் நில உரிமையை இழந்ததுதான் 'களப்பிரர் காலம் இருண்ட காலம்' என்று தூற்றப்பட்டதற்கு அடிப்படைக் காரணமாகும் என நீலகண்ட சாஸ்திரி சரியான காரணத்தைக் குறிப்பிடுகிறார்.

நிறுவனமயமாக்கப்பட்ட எந்த அமைப்புமே கால ஓட்டத்தில் செல்வமும் அதிகாரமும்

பொ. வேல்சாமி: புலவர் பட்டம் பெற்றவர். தொழில் நிமித்தம் தஞ்சாவூரிலும் நாமக்கல்லிலும் வாழ்பவர். 'பொற்காலங்களும் இருண்ட காலங்களும்', 'கோவில் நிலம் சாதி' ஆகியவை இவரது ஆய்வு நூல்கள். பழந்தமிழ் இலக்கியம், வரலாறு, பதிப்பு, நவீன இலக்கியம் எனப் பரந்துபட்ட துறைகளில் ஈடுபாடு கொண்டவர். 'நிறப்பிரிகை' இதழின் ஆசிரியர் குழுவில் முக்கியப் பங்கு வகித்தவர்.



பெற்றுத் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட கொள்கை களுக்குத் தானே மிகப்பெரிய எதிரியாக மாறிவிடும் நிகழ்ச்சிகள் உலக வரலாற்றில் ஏராளமாக உள்ளன. இந்தநிலை தமிழ்நாட்டில் பௌத்த மதத்திற்கு ஏற்பட்டது. (சமண சமயத்திற்கு இப்படியான ஒரு பிரச்சனை ஏற்பட்டதற்கான குறிப்புகள் தமிழக வரலாற்றில் கிடைக்கவில்லை.) இதன் விளைவாகப் பௌத்த மதம் சார்ந்த தமிழ்நாட்டுப் பழங்குடிகள் வீழ்ச்சி அடையத் தலைப்பட்டனர். வரலாற்றில் தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்த வைதீகப் பார்ப்பனர்கள் தங்கள் தகுதியை நிலைநிறுத்திக்கொள்ள பல்லவ அரசையும் பாண்டிய அரசையும் பயன்படுத்திக் கொண்டனர். பல்லவர் செப்பேடுகள் முப்பது, பாண்டியர் செப்பேடுகள் பத்து ஆகியவை இதனைத் தெளிவாக விளக்கும் ஆவணங்கள் ஆகும்.[3] இந்த ஆவணங்கள் பெருவாரியான தமிழ்நாட்டுப் பழங்குடிகளின் நிலங்களைப் பாண்டிய அரசர்களும் பல்லவ அரசர்களும் பறித்து எடுத்துப் பார்ப்பனர்களுக்குச் சட்ட ரீதியான ஆவணங்களாகப் பதிவு செய்ததைக் குறிப்பிடுகின்றன. அத்துடன் நில்லாமல் பின்வரும் காலங்களில் நிலத்தை இழந்த மக்கள் பார்ப்பனர் களிடம் இருந்து நிலத்தைப் பறித்து தங்கள் வசப்படுத்திக்கொள்ளாதவாறு 'ஆணத்தி'[4] என்ற பதவியை ஏற்படுத்தி அதன்மூலம் கணகாணிப்பு ஏற்பாடுகளையும் செய்து வைத்தனர். கூடவே இந்த மனித நடவடிக்கைகளுக்கும் மேலாக 'புனிதத்தைத்' துணைக்கழைத்து இந்த நில தானத்தைத் தெய்வீகத்துடன் இணைத்துப் பொது மக்களை உளவியல் ரீதியான அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கிவிட்டனர்.[5] இந்தக் காலகட்டங்களில் தான் நால்வருணப் பாகுபாடு என்பது சாதிகளாக உருவெடுக்கின்றது (ஏழு எட்டாம் நூற்றாண்டுகள்). இராணுவ அதிகாரத்திலும் செல்வத்திலும் பங்கு பெற்றிருந்த தமிழ்ச் சூத்திரர்கள் சாதி அமைப்பில் தங்களுக்கு முதன்மையான நிலை கிடைக்கவேண்டும் என்பதை எண்ணிச் செயல்பட்டதாகத் தெரிகிறது. வைதிகப் பார்ப்பனரான ஞானசம்பந்தருடன் சூத்திரரான திருநாவுக்கரசர் இணைந்துகொண்டு செயல்பட்டவிதம் இதனை நன்கு விளக்குகின்றது.[6] இருப்பினும் இந்தத் தமிழ்ச் சூத்திரர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த அளவில் நில உரிமைகளோ சமூக அந்தஸ்தோ அன்றைய அரசுகளாலும் பார்ப்பனர்களாலும் வழங்கப்படவில்லை என்பதை அந்தக் காலத்துக் கல்வெட்டுகளும் பட்டயங்களும் தெளிவாக விளக்குகின்றன.

பிற்காலச் சோழர்களின் ஆட்சி சுமார் 400 ஆண்டுக்காலம் நடைபெற்றது. இந்தக் காலகட்டம் ஆய்வாளர்களால் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் படும்; அதன் முதல் பகுதியில் அரசு அதிகாரம், சமய அதிகாரம், கல்வி நிலையம் சார்ந்த ஆசிரியர்கள் என்று எல்லாத் துறைகளிலும் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களைக் காண முடியாது. அவர்களில் பெரும்பான்மையோர் வடஇந்தியப் பார்ப்பனர்கள். சூத்திர சாதிகளைச் சேர்ந்த தமிழர்கள் அதிகாரிகளாகவும் நில உடைமையாளர்களாகவும் சோழர்கால இறுதியில் தான் ஆவணங்களில் குறிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் இவர்களுக்கு சமயம் சார்ந்த அதிகாரம் அதாவது மதத் தலைமைப் பொறுப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை. சோழர்கால இறுதியில் 'குகையிடிக் கலகங்கள்' நடைபெற்றதாக ஒரு குறிப்பு உள்ளது. இது சூத்திரர்கள் மடங்களை நிறுவி அதன் தலைவர்கள் ஆனதைப் பொறுக்காத பார்ப்பனர்களால் நிகழ்த்தப்பட்ட கலகங்கள் என்று வரலாற்று ஆய்வாளர்களும் தெ.பொ.மீ. போன்றவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

இக்கலகத்தை அடுத்து வந்த காலங்களில்தான் சிவஞானபோதம் என்ற புகழ்பூத்த சைவ சித்தாந்த முதல்நூல் தோன்றுகின்றது. இதற்குச் சற்று முந்திய காலத்தில் எழுதப்பெற்ற ஞானாமிர்தம் என்ற சைவ சித்தாந்த நூல் பதினான்கு சித்தாந்த சாஸ்திர வரிசையில் இடம்பெறவில்லை. இந்த நூலை "கோளகி மடம்" சார்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இந்தக் கோளகி மடங்கள் சார்ந்த வரலாறு என்பது பெரும்பாலும் வட இந்தியப் பார்ப்பனர்களை மையமாகக் கொண்டதாகக் கருதப்படுகின்றது. இந்த மடம் சார்ந்து வெளிவந்த நூல்கள் பல உள்ளன. அவை யாவும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை. ஞானாமிர்தம் ஒன்றுதான் தமிழில் எழுதப்பட்ட நூல். "வேதாந்தமாகிய உபநிடதப் புலமைக்கும் சித்தாந்தமாகிய சிவ ஆகமப் புலமைக்கும் இடையே நடந்த பூசல் காரணமாகச் சிவ ஆகமங்கள் பல இறந்தன. மெய்ப்பொருள் நாயனார் வரலாறும் இப்பூசலின் தொன்மைக்கு ஓரளவு சான்று வழங்குகின்றது"[7] என்று பெரும்புலவர் ஔவை துரைசாமிப்பிள்ளை கூறுவதைக் கவனிக்க வேண்டும். பார்ப்பனர்களுக்கும் உயர்சாதித் தமிழ்ச் சூத்திரர்களுக்கும் சமயத் தலைமை சார்பாக ஏற்பட்ட பகைமையே உபநிடதப் புலமைக்கும் சிவஆகமப் புலமைக்கும் இடையே நடந்த பூசலாகப் பேராசிரியர் கூறுகிறார். இந்தப் பிரச்சனைகள் முற்றிவந்த காலத்தில் சோழப் பேரரசு வலிமை இழந்து மறையத் தொடங்குகின்றது. அதாவது சோழர் அரசாட்சியின் வீழ்ச்சிதான் தமிழ்ச் சூத்திரச் சாதியினருக்கு சமயத் தலைமை ஏற்படுவதற்கு வழிகோலியது.

பண்டைய நாள்முதல் இருந்து வரும் ஆகமங்கள் பலவற்றையும் ஆராய்ந்து சிவாகமம் தேர்ந்துகொள்ளப்பட்டன. அவை காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். இவற்றின் விளக்கம் குறித்து உபாகமங்கள் பல உண்டாயின. இவற்றின் பொருள் இயல்பு கண்ட அறிஞர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களாக இவற்றைப் பாகுபாடு செய்தனர்.

II

பதினான்கு சாத்திரங்களும் ஆசிரியர்களும் காலமும்

எண்	நூல்	ஆசிரியர்	காலம்
1.	திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்	கி.பி.13ஆம் நூற்றாண்டுக்கு முன்
2.	திருக்களிற்றுப் படியார்	திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்	கி.பி.13ஆம் நூற்றாண்டுக்கு முன்
3.	சிவஞானபோதம்	மெய்கண்டார்	கி.பி. 13ஆம் நூற்றாண்டு
4.	சிவஞான சித்தியார்	அருணந்தி சிவாச்சாரியார்	கி.பி.13 ஆம் நூற்றாண்டு
5.	இருபா இருபது	அருணந்தி சிவாச்சாரியார்	கி.பி.13ஆம் நூற்றாண்டு
6.	உண்மை விளக்கம்	திருவதிகை மனவாசகங் கடந்தார்	கி.பி.13 ஆம் நூற்றாண்டு
7.	சிவப்பிரகாசம்	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
8.	திருவருட்பயன்	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
9.	வினாவெண்பா	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
10.	போற்றிப் பஃறொடை வெண்பா	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
11.	கொடிக்கவி	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
12.	நெஞ்சுவிடு தூது	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
13.	உண்மை நெறி விளக்கம்	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்
14.	சங்கற்ப நிராகரணம்	உமாபதி சிவாச்சாரியார்	கி.பி. 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்

(உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தஅருட்
பண்புவினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று)[8]

இவற்றைத் தனித்தனி எடுத்துரைப்பனவும் ஒரு சிலவற்றை வரைந்து கொண்டு உரைப்பனவும் என ஆகமங்கள் பலவகைப்படுகின்றன. இச்சிவாகமங்கள் பதி, பசு, பாசம் என முன்னர் கூறிய பொருள் மூன்றையும் அறுதியிட்டு முடிவுகட்டிக் கூறுவது பற்றி, சித்தாந்தம் என்று வழங்கின. 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என்றும் 'வேத சாரம், இதம், தந்த்ரம், சித்தாந்தம் என்றும் சான்றோர் கூறுதல் காண்க'[9] என்று சைவ சித்தாந்தக் கருத்தைத் திரட்டிக் கூறுகிறார்

ஔவை துரைசாமிப்பிள்ளை. சைவ சித்தாந்தம் என்பது தமிழ் மக்களுடைய சுயமான சிந்தனையின் விளைவு. அதாவது தமிழரின் தத்துவம் என்று மறைமலை அடிகள் தொடங்கி இன்றுவரை பலர் கூறிவரும் கருத்துக்கு மேற்கூறிய துரைசாமிப் பிள்ளையின் கூற்று முரணாக இருப்பதைக் கவனியுங்கள். இதில் புதுமை ஒன்றுமில்லை. துரைசாமிப்பிள்ளை உண்மையை உள்ளபடியே கூறுகிறார். அந்த உண்மை 'பார்ப்பனர்கள் வேண்டாம்: ஆனால் பார்ப்பனியம் எங்களுக்கு வேண்டும்'. மனுநீதி, தீண்டாமை, சாதியப் பாகுபாடுகள் என்று சமூக இழிவுகளையெல்லாம் தங்கள் தலைமைக்கு உறுதுணையாகப் பார்ப்பனர்கள் கைக்கொண்டனர். இப்பொழுது சூத்திர உயர்சாதியினராகிய நாங்கள் அதனைக் கைப்பற்றிவிட்டோம். எங்கள் கைவசப்பட்ட பார்ப்பனியம்தான் சைவ சித்தாந்தம் என்பது.

மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்களைச் சமூகம் ஏற்றுக்கொள்ளும்படியான செயல்பாடுகள் வேண்டும். அதற்கு இக்கருத்துக்களைத் திரட்டித் தொகுத்துப் புனிதப்படுத்த வேண்டியது கட்டாயம். அந்தப் பணியே சைவ சித்தாந்த நூல்களாகத் தோற்றம் கொள்கிறது. இந்தக் கருத்துக்கள் நிறுவனமயப்படும்போது சூத்திர உயர்சாதித் தமிழர்களின் தலைமையிலான மடங்களாகின்றன. இந்த மடங்களின் செயல்பாடுகள் காலப்போக்கில் சிவன் கோயில்களைப் பராமரிக்கும் பணியாகின்றது. உண்மையில் இந்தப் பணி சிவன் கோயில்களுக்கு உரிமையாக இருந்த பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்களைப் பேணிப் பாதுகாப்பதாகக் கருதப்படுகின்றது. அதுவே அடுத்துவந்த காலங்களில் இந்த மடாதிபதிகளை மிகப்பெரிய நில உடைமையாளர்களாக மாற்றி அமைக்கின்றது. தமிழ்நாட்டு வரலாற்றில் நிலவுடைமை என்பது உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் பணியாகவும் பின்னிப் பிணைந் திருந்ததால் அந்தந்தப் பகுதியின் ஆட்சியாளர் களாகவே மடாதிபதிகள் நிலைகொண்டு விட்டனர்.

நாம் நினைப்பதைவிட எளிதாகவே இத்தகைய சிந்தனையாளர்களால் மக்களை நம்பவைக்கும் பணி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சென்ற காலங்களில் நம்பப்பட்டுவந்த புனிதங்களுடன் சமகால மனிதர்கள் தங்களை இணைத்துக்கொள்வது இந்தப் பணியின் முதன்மையான நோக்கமாகும். சிவஞானபோத நூலின் கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாகத் திரட்டிக்கூறும் ஒரு பகுதிக்கு சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து என்று பெயர். இந்நூலை 'பொல்லாப்பிள்ளையார்' இயற்றினார் என்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நவீன ஆராய்ச்சி திருவாவடுதுறை சுவாமிநாத தேசிகர் இயற்றினார் என்று கூறுகின்றது[10]. இறை, உயிர், தளை (பாசம்) என்று மூவகை இனங்களாக இப்பிரபஞ்சத்தைப் பிரித்துக் கொண்டார் மெய்கண்டார். இதில் 'இறை' என்பது மட்டுமே எல்லாவற்றையும் இயக்கும் ஆற்றல் பெற்றது. இறையின் இயக்க சக்திக்கு உட்பட்டவைகள் உயிரும் தளையும். பாசத்தால் கட்டுண்டு பிறந்து இறந்து உலக பந்தங்களில் உழன்று துயருறும் ஆன்மாக்களின் மீது (பசு) இரக்கம் கொண்டு இறைவனுடைய அருட்சக்தி அவைகளை உய்விக்கும் நிலையே 'முக்தி' இன்பமாகும். இந்த வாய்ப்பு ஞானியருக்கே கிட்டும். அத்தகைய ஞானியர் இறைவன் எனவே கொள்ளத்தக்கவர். எனவே சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனெனவே தேறி வழிபடுக. (சூத்திரராகிய தமிழ் உயர்சாதிகளான வெள்ளாளர் போன்றவர்கள் பார்ப்பனர்கள் போல பூசுரர்கள் என்று சொல்லப்படுகின்ற இவ்வுலகத் தேவர்களாவர்)

இத்தகைய செய்திகளை வலியுறுத்தும் பன்னிரண்டு சூத்திரங்கள் சிவஞானபோதத்தில் உள்ளன. இச்சூத்திரங்களுக்கு விளக்கங்களாக அதிகரணம் என்ற பெயரில் பிரித்து ஆசிரியரே சுருக்கமான பொழிப்புரை கூறியுள்ளார். இதற்கு வார்த்திகம் என்றுபெயர். இவ்விளக்கம் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு என்னும் உறுப்புகளை உடையது. எடுத்துக்காட்டுகள் வெண்பாவினால் ஆகியன. இந்நூலுக்குச் சிற்றுரை, பேருரை என்று இரண்டு உரைகளை சிவஞான முனிவர் எழுதியுள்ளார். இந்தியத் தத்துவங்கள் பலவற்றுடன் ஒப்பிட்டும் முரண்பட்டும் மிக விரிவான தத்துவ விவாதங்களைத் தமிழ்மொழியில் கூறும் ஒரே உரை இதுவாகும். வேறுசிலரும் இதற்கு உரை எழுதியுள்ளனர்.

சிவஞான போதத்திற்கு விளக்கமாகவும் சைவ சித்தாந்தத்துக்கு மாறான கொள்கைகளை உடையன என்று கருதப்படும் பௌத்தம், சமணம், உலகாய்தம் முதலான பதினான்கு தரிசனங்களை மறுத்தும் விரிவாக எழுதப்பட்ட நூல் சிவஞான சித்தியார். இந்நூலை இரண்டு பகுதிகளாக இயற்றியுள்ளார். சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கூறும் பகுதிக்கு 'சுபக்கம்' என்றுபெயர். மற்ற தரிசனங்களை மறுத்து விளக்கும் பகுதிக்கு 'பரபக்கம்' என்று பெயர். சுபக்கத்துக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். பரபக்கத்துக்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், வேலப்ப பண்டாரம், தத்துவப் பிரகாசர் ஆகிய

இம்மூவர்தான் உரை எழுதியுள்ளனர். இப்பொழுது தத்துவப் பிரகாசர் உரை மட்டுமே அச்சில் உள்ளது. அதிலும் திருவாவடுதுறைப் பதிப்பிற்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சமாஜம் வெளியிட்ட பதிப்புகளுக்கும் பல இடங்களில் வேறுபாடுகள் உள்ளன. மிகப் பலவான குறிப்புகள் சமாஜப் பதிப்பிலும் சைவ சித்தாந்தப் பதிப்பிலும் இல்லை. பிற தரிசனங்களைப் பற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ள பல பகுதிகள் இந்திய மொழிகள் எதிலும் இல்லை. தாந்ரீகர்களையும் உலகாய்தவாதி களையும் ஒத்த கருத்துடையவர்கள் என்று காட்டுவதற்குத் தன்னுடைய உலகாய்தம் நூலில் தேவி பிரசாத் சட்டோபாத்யாய பல பக்கங்களை ஒதுக்கி விவாதிக்கிறார். பரபக்கத்தின் 25 ஆவது பாட்டு அதனைத் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றது. தற்காலத்தில் இந்தியத் தத்துவம் பற்றி எழுதக்கூடிய அறிஞர்கள் இந்த நூலுக்கும் பிற்பட்ட காலத்தே தோன்றிய 'சர்வ தரிசன சங்கிரகத்தைப்' பெரிய அளவில் மேற்கோள் காட்டுகின்றனர். தமிழில் மட்டும் உள்ளதால் இந்நூல் வெளி உலகத்துக்குத் தெரியாமலேயே உள்ளது. திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் எழுதிய பேருரை இந்தியத் தத்துவங்கள் பலவற்றையும் விரிவாகப் பேசுவதாக ஆங்காங்கே சிலர் குறிப்பிடுவர். உ.வே.சா. தான் மணிமேகலையில் உள்ள பௌத்தத் தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கு ஞானப்பிரகாசரின் உரை பெரிதும் உதவியதாக மணிமேகலை நூலின் முன்னுரையில் கூறுகின்றார். அத்தகைய உரை இன்றுவரை அச்சில் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"சிவப்பிரகாசம், சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும். ...சிவஞான போதத்தின் கருத்தை மட்டும் கொண்டு 'பொது, உண்மை என்னும் இரு பிரிவினதாய் முன்னைய முதல்நூல் வழிநூல்களில் விளக்கப்படாத பல நுண்ணிய கருத்துக்களைத் தெறித்துக் காட்டுகின்றது. இதனால் அவ்விரு நூல்களிலும் இல்லாத சில மூலாகம, உபாகமக் கருத்துக்களும் இதன்கண் சொல்லப்பட்டன என்பதை ஆசிரியரே தெரிவித்துள்ளார். ...நூறு விருத்தங்களால் ஆயது.[11] இந்த நூலுக்கு மதுரை சிவப்பிரகாசர் எழுதிய உரை மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. தமிழ்மொழியில் இப்பொழுது காணக் கிடைக்காத பல நூல்களைப் பெயர் சொல்லிக் காட்டுகிறது.

'இருபா இருபஃது' மெய்கண்ட தேவரைக் கேள்விகள் கேட்டு விடை பகர்வதாக இயற்றப்பட்ட நூல். 'உண்மை விளக்கம்' சைவ சித்தாந்தத் தத்துவங்களை விளக்கிக் கூறுவது. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் போன்ற நூல்கள் சிவஞான போதத்திற்கு முன்பே தோன்றியவை. ஆனால் சிவஞான போதம்போல கருத்துக்களைத் தத்துவ வடிவில் தரவில்லை. எனவே சிவஞான போதத்துக்குக் கிடைத்த முதன்மை இடம் இந்த நூல்களுக்கு இல்லை. 'திருவருட்பயன்' திருக்குறள்போல சித்தாந்தப் பொருள்களை அடைவுபடத் தொகுத்துக் குறள்வெண்பாக்களால் கூறுவது. 'வினாவெண்பா' இருபா இருபது போன்றது. 'போற்றிப் பஃறொடை வெண்பா' இறைவன் உயிர்களுக்குத் தன் பெருங்கருணையால் செய்யும் கைம்மாறு கருதாத பேருதவியைத் தத்துவ நெறியான் உணர்த்துவது. 'கொடிக்கவி' தில்லைத் திருக்கோயிலில் கொடியேற்றுங்கால் இதன் ஆசிரியரை ஏனைய அந்தணர்கள் வெறுத்து ஒதுக்கியிருந்தமை பற்றி அஃது ஏறாது ஒழிய பின் அசரீரி சொல்லியபடி இதனாசிரியரை அவர்கள் அழைத்துவந்து கொடி ஏற்றுமாறு வேண்ட அக்கொடி தானே ஏறும்படிப் பாடிய ஐந்து திருப்பாட்டுக்களால் ஆயது. 'நெஞ்சுவிடுதூது' ஆசிரியர் தமிழைத் தலைவியாகவும் தம் ஆசிரியர் மறைஞான சம்பந்தரைத் தலைவனாகவும் வைத்து அவரைக் காமுற்று வருந்தி அவர்பால் மாலையை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூதாக விட்டதுபோல் செய்யப்பட்ட தூதுப் பிரபந்தமாகும். 'உண்மை நெறி விளக்கம்' ஞானாசிரியரிடம் உபதேசம் பெற்ற பின்னர் அதைச் சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடும் செயலில் உள்ள பத்து

> சிவஞானபோதம் என்ற புகழ்பூத்த சைவ சித்தாந்த முதல்நூல் தோன்றுகின்றது. இதற்குச் சற்று முந்திய காலத்தில் எழுதப்பெற்ற ஞானாமிர்தம் என்ற சைவ சித்தாந்த நூல் பதினான்கு சித்தாந்த சாஸ்திர வரிசையில் இடம்பெறவில்லை. இந்த நூலை "கோளகி மடம்" சார்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இந்தக் கோளகி மடங்கள் சார்ந்த வரலாறு என்பது பெரும்பாலும் வட இந்தியப் பார்ப்பனர்களை மையமாகக் கொண்டதாகக் கருதப்படுகின்றது. இந்த மடம் சார்ந்து வெளிவந்த நூல்கள் பல உள்ளன. அவையாவும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை. ஞானாமிர்தம் ஒன்றுதான் தமிழில் எழுதப்பட்ட நூல்.

நிலைகளாகிய தசகாரியங்களை மிகவும் சுருக்கமாகக் கூறுகின்றது. 'சங்கற்ப நிராகரணம்' இதன்கண் அகச் சமயங்கள் மறுக்கப்படுகின்றன.[12]

சைவ சித்தாந்தத்துக்கும் வேதாந்தத்துக்கும் நல்ல உறவு இருந்தது. இதன் விளைவாக இந்நூல்கள் எழுதப்பட்ட காலமான 13, 14ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஏராளமான அத்வைத நூல்கள் தமிழில் எழுதப்பட்டன. பகவத்கீதையும் மொழிபெயர்க்கப்பட்டது. பார்ப்பனர் அல்லாத சூத்திர உயர்சாதியினர் இந்த நூல்களைப் படித்தும் படிப்பித்தும் வந்தனர். எனவே மறை மலையடிகள் தன்னுடைய நூலான 'வேதாந்த மத விசாரம்' என்ற நூலில் பக்கம் இரண்டில் "வேதாந்தம் யாருடைய சொத்து? அது யாருக்குச் சொந்தம்? என்பதை அறியாமல் போகார். எமது மதம் வேதாந்தம்" (இந்தக் கருத்துக்களைப் பிற்காலங்களில் அரசியலுக்காக அவரே மாற்றிக்கொண்டுவிட்டார்) இவ்வாறு சூத்திரர்கள் வேதாந்தம் பேசுவதைப் பார்ப்பனர்கள் 'சூத்திர வேதாந்தம்' என்று கூறுவது தவறாகாது. இத்தகைய கருத்துக்களுடன் மெய்கண்டார் , உமாபதிசிவம் போன்றவர்கள் வரலாறாகவும் பிற்காலங்களில் ஆதினத்தில் தலைமை தாங்கியவரின் செயல்களாகவும் பல அற்புத நிகழ்ச்சிகளும் இணைக்கப்பட்டன. இத்தகைய கருத்துக்களும் புனைவுகளும் சமூகத்தில் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த அதிகாரத்தையும் செல்வத்தையும் நாம் புரிந்துகொள்வதற்குப் பெரிதாக ஆராய வேண்டியதில்லை. இன்றைய நிலையிலும்கூட சாய்பாபா, மேல்மருவத்தூர் அம்மா, நித்யானந்தா, கல்கி பகவான், காஞ்சி காமகோடி முதலான பலரும் இறைஞானத்தைப் போதிப்பவர்களாகச் செயல்பட்டு கோடிகோடியாகச் செல்வத்தையும் மறைமுகமான அரசியல் அதிகாரத்தையும் பெற்று விளங்குவதை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இத்தகைய நிலைமையை கடவுளையும் தத்துவங்களையும் கூறித்தான் ஆதீனங்களாக வேண்டுமென்ற அவசியமில்லை. கடவுள் மறுப்பையும் பகுத்தறிவையும் சாதி ஒழிப்பையும் கூறி ஆதீனங்கள் ஆனவர்களையும் பார்க்கிறோம்.

> சைவ சித்தாந்த நூல்களின் தோற்றத்துக்கும் தமிழ் பேசுகின்ற சூத்திர வர்ணத்தாராகிய வெள்ளாளர், முதலியார் வணிகத்தால் செல்வர்களாக இருந்த செட்டியார்களுக்கும் நெருக்கமான உறவு இருந்தது. சுருக்கமாகக் கூறினால் இந்தச் சூத்திர உயர் சாதியினரின் சமூக அந்தஸ்தை உயர்த்தி நிலைநிறுத்துவதற்காக எழுதப்பட்டவைதான் சைவ சித்தாந்த சாத்திரங்கள்.

13ஆம் நூற்றாண்டில் தோற்றம் கொண்ட சைவ சித்தாந்த நூல்கள் அடுத்து வந்த காலங்களில் தொடர்ந்து எழுதப்பட்டு, பேசப்பட்டு வந்ததாக வரலாறு உள்ளது. ஆனால் தொகுப்பாக வெளிவந்தது 1866இல்தான். வெளியிட்டவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த மதுரைநாயகம் பிள்ளை. அடுத்த பதிப்பாக இந்நூல்களுக்கான உரைகளுடன் பொ. சண்முகசுந்தர முதலியார் பதிப்பு என்று 1874இல் வெளிவந்தது.[13] 1900க்குப் பின்னர் காஞ்சி நாகலிங்க முனிவர் பதிப்பு வந்துள்ளது. 1934, 1940, 1994 ஆகிய ஆண்டுகளில் சைவ சித்தாந்தப் பெருமன்றம் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் என்று வெளியிட்டுள்ளது. 1969இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இரண்டு தொகுதிகளாக இந்நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நூல்களில் பெரும்பாலானவற்றைத் திருவாவடுதுறை ஆதீனம் 1950இல் இருந்து 1970வரை மிகச் சிறப்பான பதிப்புகளாக வெளியிட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனப் பதிப்புகள் பலவற்றில் பதிப்பாசிரியராக இருந்த த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை மிகவும் சிறப்பான பாரம்பரியத் தகவல்களைக் கொண்ட முன்னுரைகள் எழுதியுள்ளார். கூடவே முன்னர் வெளியிட்ட பதிப்புகளில் உள்ள பிழைகளையும் ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கித் திருத்தமான பாடங்களுடன் வெளிவர உழைத்துள்ளார். இதே ஆதீன வித்துவானாக இருந்த தே.ஆ.சீனிவாசன் சைவ சிந்தாந்த நூல்கள் பலவற்றுக்கு உரைநடையில் எழுதியுள்ள நுட்பமும் எளிமையும் நிறைந்த நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. சிவஞானபோதம் நூலுக்குச் சிவஞான முனிவர் எழுதிய சிவஞானமாபாடியம் என்ற பேருரையை நம் காலத்தில் உள்ளவர்கள் அதன் சிறப்புக் கூறுகள் அனைத்துடனும் புரிந்துகொள்ளும் விதத்தில் திருநெல்வேலி சி.சு.மணி அவர்கள் பதிப்பித்து எழுதியுள்ள விளக்கங்கள் மிகச்சிறப் பானது. இதே போன்று தற்காலத்தவர்க்கு சிந்தாந்த நுட்பங்களை எளிமையாக புரிந்து கொள்ளும்படி நூல்களை எழுதி வரும் பேராசிரியர் ஆனந்தராசன் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

இந்த நூல்கள் இன்றைய நிலையில் பழைய உரைகளுடனும் செம்மையான பதிப்புக்களாகவும் கிடைப்பதில்லை. சரியோ தவறோ தமிழ்நாட்டின் ஒருவகையான சிந்தனைமுறையைக் கூறும் இத்தகைய நூல்கள் மீண்டும் சிறப்பாக வெளியிடப்பட வேண்டும். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டு வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் அது பேருதவியாக இருக்கும்.

அடிக்குறிப்புகள்

1. தென்னிந்திய வரலாறு, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, பாகம் 2, ப. 46
2. தென்னிந்திய வரலாறு, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, பாகம் 1, ப. 228
3. இதனைப் பற்றிக் கோவில் நிலம் சாதி என்ற என் நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.
4. பல்லவர் செப்பேடுகள் முப்பது, ப. 403 (இராஜாதித்தன் என்பவன் தொடங்கி ஆளுப மன்னன் வரை 25 நபர்கள் ஆணத்திகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர்)
5. தான் அளித்ததோ பிறன் அளித்ததோ எதுவாயினும் அந்தப் பூமியை எவன் அபகரிக்கிறானோ அவன் நூறாயிரம் பசுக்களைக் கொன்ற பாவத்தை அடைவான் (பல்லவர் செப்பேடுகள் முப்பது ப. 290)
6. நம்மாழ்வார்
7. ஞானாமிர்தம், மூலமும் பழைய உரையும், பதிப்பாசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1987, முன்னுரை, ப. XXXiii
8. உந்தி களிறு என்ற வெண்பா 1866இல் வந்த மதுரைநாயகம்பிள்ளை பதிப்பிலிருந்து தான் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. எனவே அந்த வெண்பா பழமையான காலத்ததாக இருக்க முடியாது என்று மு. அருணாசலம் பிள்ளை கருதினார். ஆனால் ஆறுமுக நாவலர் வெளியிட்ட திருக்குறள் பரிமேலழகர் உரை முதல் பதிப்பாக 1861இல் வெளிவந்ததில் 148ஆம் பாட்டுக்கான அடிக்குறிப்பில் "இந்நெஞ்சுவிடு தூது சைவ சித்தாந்தம் பதினான்கனுள் ஒன்று" என்ற குறிப்பு உள்ளதால் மேற்கண்ட வெண்பா மு. அருணாசலம் பிள்ளை சொல்வதுபோல் இருக்கச் சந்தர்ப்பம் இல்லை. இந்தத் தகவலைக் கொடுத்துதவிய தஞ்சாவூர் சேக்கிழார் அடிப்பொடி டி. என். இராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி.
9. ஞானாமிர்தம், மூலமும் பழைய உரையும், பதிப்பாசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1987, முன்னுரை, ப.XV iii
10. மெய்கண்ட சாஸ்திரம் என வழங்கும் சித்தாந்த சாஸ்திரம் பதினான்கு, மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, சைவ சித்தாந்தப் பெருமன்றம், 1994 ப. 215
11. சித்தாந்த வினாவிடை, சி. அருணை வடிவேல் முதலியார், தருமையாதீனம், 2008. பக். 13-14
12. சித்தாந்த வினாவிடை, சி. அருணை வடிவேல் முதலியார், தருமையாதீனம், 2008. பக். 13-15
13. திருவுந்தியார், க. வஜ்ரவேலு முதலியார் உரை, சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டுவிழா மலர், 1996, திருச்சி.

குறிப்பு :

ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போல பார்ப்பனர் - சூத்திரர் கூட்டாக அருள்நந்தி சிவம்-மெய்கண்டார் இணைப்பு இல்லை. இது சைவாச்சாரியார்கள் என்ற குருக்களுக்கும் சூத்திரர்களுக்கும் ஏற்பட்ட கூட்டாகும். உமாபதி சிவாச்சாரியாரும் குருக்கள் வகுப்பைச் சேர்ந்த சிவாச்சாரியார் என்பது கவனிக்கத்தக்கது. சிவாச்சாரியார்களைப் பிராமணர்கள் பார்ப்பனர்களாக ஏற்றுக்கொள்வதில்லை. இவர்கள் சைவக் கோயில்களில் பூசைகள் செய்யும் உரிமை பெற்ற ஆதி சைவ வகுப்பினர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

■



தமிழில் இரண்டாம் பக்திக்காலம்

கி. நாச்சிமுத்து

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் மற்றும் பிற்காலப் பாண்டியர் காலத்தைப் (கி.பி.3-9) பக்திக் காலம் என்பர். காரைக்காலம்மையார், முதல் மூன்று ஆழ்வார்கள் இவர்கள் தொடக்கநிலையிலும் பின் தேவார மூவர் ஏனைய ஆழ்வார்கள் போன்றோர் தொடர்ந்தும் தோன்றுகிறார்கள்.

அரசியல் நிலையில் பழைய சேர சோழ பாண்டியர் ஆட்சி மறைந்து களப்பிரர் எனப்படும் புது மரபும் அதைத் தொடர்ந்து பல்லவரும் ஆட்சிக்கு வருகின்றனர். இவர்கள் காலத்தில் சமணம் பௌத்தம் ஆசீவகம் போன்ற வேத எதிர்ப்பு மதங்களும் பாசுபதம் முதலிய அகச்சமயங்களும் வைதீக மதமும் போட்டிபோட்டுக் கொண்டிருந்தன. சமணமும் பௌத்தமும் வேள்வி மறுப்பு, கொல்லாமை, கடவுள் மறுப்பு, வினைக் கோட்பாடு, பகுத்தறிவு போன்றவற்றை வற்புறுத்தின. இவை பெரும்பாலும் வணிகர் களாலும் ஏனையவை அந்தணர் அரசர் வேளாளர் போன்றவர்களாலும் பின்பற்றப் பட்டன. நால்வருணத்திற்கு அப்பாற்பட்ட மக்கள் சிறுதெய்வம் முதலிய ஆவி வழிபாட்டு நெறியில் நின்றிருந்தனர்.

அரசர்களின் வலிமையைக் காட்டும் அடையாளமாகக் கோயில் பள்ளி விகாரை போன்றவை எழுந்த காலம். எல்லாச் சமய நெறியிலும் உருவ வழிபாடு வளர்ந்து நின்ற காலம். அத்துடன் அரசுருவாக்கம் தெளிவான அமைப்புகளுடன் நடந்துகொண்டிருந்த காலம். வேளாண் வளர்ச்சி, வணிக வளர்ச்சி ஆகியவை காரணமாக நிலஉடைமை

முறைகளில் மாற்றம் போன்றவையும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. பாசன வளர்ச்சி வேளாண் வளர்ச்சி போன்றவற்றாலும் வணிக வளர்ச்சியாலும் சிற்றூர்களும் நகரங்களும் தோன்றி வளரும்போது கோயில் என்ற அமைப்பு அரசின் அடையாள மாகவும் நிலஉடைமைகளின் அதிகார மையமாகவும் சமய நெறியின் பீடமாகவும் ஊர்தோறும் கட்டி எழுப்பப்படுகின்றன.

பல்லவர் காலப் பக்தி இயக்கத்தின் சமூகப் பின்புலத்தை உற்று நோக்கினால் அங்கே சமண பௌத்த சமயஞ் சார்ந்த வணிக வர்க்கத்திற்கும் வைதிக உள்நாட்டுச் சமயஞ்சார்ந்த வேளாண் குடியானவ வர்க்கத்திற்கும் ஏற்பட்ட பொருளாதார ஆட்சிப் போட்டியாகத் தெரிவதாகக் கைலாசபதி எழுதியுள்ளது சரியாகவே தோன்றுகிறது.

போர், தனிமனித சாகசம் இவை மேலோங்கி யிருந்த சங்க காலத்திற்குப் பின் சமய உணர்ச்சி மேலோங்கியதற்கான காரணம் விளங்கவில்லை. அசோகருக்குப் பின் அகிம்சையைப் போதித்த சமண பௌத்தம் மேலாங்கியதன் விளைவா? புறத்திணைக் கோட்பாட்டை வலியுறுத்திய உலகாயத நோக்கு ஆன்மிக வழிக்கு மாறியது அரசியல் போன்றவற்றின் தலைகீழான மாற்றமும் அதனால் விளைந்த இனம் புரியாத சீர்குலைவும் காரணமா? மானுடத் தலைமையின் வெறுமையும் மனிதாபிமானமற்ற அரசியல் சூழலும் காரணமா?

கழிவிரக்கம், நிலையாமை, கையாலாகாமை, உலகியல் வெறுப்பு, எதிர்ப்புணர்வு போன்றவை மேலோங்கி நின்ற அகவய நிலை, மானுடத் தலைமையை விடக் கடவுள் தலைமை ஆறுதலை நல்கிய நிலை. இதற்கு இணக்கமாக இருந்த வைதிகமும் நாட்டு மத நம்பிக்கைகளும் இணைந்த சமய நெறி கோயில் வழிபாட்டின்வழி உருவாகி வந்திருக்கும் என்று தோன்றுகிறது. பள்ளிகளிலும் விகாரைகளிலும் கல்வி சார்ந்த சிந்திக்கும் மரபையும் தலைமுறையையும் சமண பௌத்த மதங்கள் உருவாக்கி வந்ததற்குப் போட்டியாக இது உருவாகியது போலத் தோன்றுகிறது. தொடக்ககாலப் பக்தி இயக்கத்தின் பின்புலமாக விளங்கிய அரசியல் கோயில் வழிபாட்டைப் பரப்ப அரசுடன் சேர்ந்து களமிறங்கியது போன்று தோன்றுகிறது. இது அன்றைய பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் தோதாக ஆண்டான் அடிமை முறையை எதிர்ப்பின்றி இயல்பாக மக்கள் ஏற்றுக் கொள்வதற்குப் பயன்பட்டதா? என்பதையும் நினைத்துப் பார்க்கலாம். சம்பந்தர் நிறுவனச் சமயம் சார்ந்தவர், தம்முடைய பாடல்களில் இறை இயற்கை இசை போன்றவற்றை மையமாக வைத்து அமைத்தாலும் எதிர்ச்சமயத்தைக் கடுங்கோபத்துடனும் வசைச்சொற்களுடனும் தாக்குவதற்கு இந்தப் பக்தி அரசியலே காரணம். இதே காலத்தில் சமணர் பௌத்தர் போன்றோர் கல்வி வளர்ச்சியில் தலைநின்று அறநூல்கள் நிகண்டு காப்பியம் போன்ற இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட்டபோது பக்தி இயக்கத்தைச் சார்ந்த நாயன்மாரும் ஆழ்வாரும் இசை கலந்த இன்னிசைப் பாடல்களைக் கூட்டு வழிபாட்டுக் குரியதாகப் பாடி வந்திருக்கிறார்கள். இவற்றிலுள்ள தொல் இலக்கிய மரபுத் தொடர்ச்சி, புத்தாக்கம் போன்ற இலக்கியப் பண்புகள் சராசரி மனிதனைக் கவரத்தக்க சொல்லினிமை, நாட்டுப்புற வடிவங் களைத் தழுவி எழுந்த இசை நாட்டிய வடிவம், தத்துவச் சிறப்பு போன்றவற்றிற்கு மேலே இருக்கும் பிரச்சாரத் தன்மையையும் நாம் மறந்து விட முடியாது. ஒரு சமயப் போராளியாகக் காட்டப்படும் சம்பந்தர் பாடல்களில் இதை மிகுதியாகவே காணலாம். நாமார்க்கும் குடியல்லோம் என்று பாடிய அப்பர் தொடக்ககாலப் பக்தியின் வேறொருமுகம் நம்மாழ்வாரும் இப்படிப்பட்டவர் தான். சுந்தரர் அகவயப் போராட்டங்களை மிகுதியாகப் பாடும்போது அவர் காலச் சமய அரசியல் சற்றுச் சமநிலை அடைந்துவிட்டது என்று தோன்றுகிறது. மத அரசியல் அதிகம் தலைகாட்டாத திருமூலர் நிறுவன சமய எதிர்ப்பை வெளிப்படுத்தும் சித்தர் மரபைச் சேர்ந்தவர். 'மூவருக்குப் பின் வந்த மாணிக்கவாசகர் பக்தியில் அரசியலை விட அகவயமான பக்திப் பாங்கு



கி. நாச்சிமுத்து: புதுடெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரின் நூல்கள்: இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், தொல்காப்பியக் கட்டுரைகள், தமிழ் தந்த சான்றோர்கள்.

மேலோங்கியிருக்கிறது. இவருடைய பக்தியின் கூறாகப் பெண் வெறுப்பு சற்று மிகுதியாக இடம் பெறுவதும் அது பிற்காலப் பக்தி நெறியினருக்கு முன்மாதிரியாக அமைவதும் இங்கு நினைக்கத் தக்கது. பக்தி வழியில் சென்ற சமயம் கோட்பாட்டு நிலையில் வளர்ச்சிபெற்றுச் சைவசித்தாந்தம் விசிஷ்டாத்வைதம் போன்ற தத்துவப் பிரிவுகள் பொருளாதாரம் அரசியல் போன்றவை வளர்ச்சி பெற்ற சோழர் காலத்தில் தோன்றுகின்றன. சமண பௌத்த மதங்கள் உருவாக்கி வைத்திருந்த காப்பியக் கதை இலக்கிய மரபு பௌராணிக மரபு போன்றவற்றிற்கு இணையாக சைவ வைணவ சமயங்கள் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் போன்ற புதிய பௌராணிக மரபைப் பரப்புகின்றன.

இரண்டாம் பக்தியுகம் (கி.பி.15-18)

தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்திற்குப் பின் சமயம் சாராத இலக்கியங்கள் குறைவுதான். சிற்றிலக்கிய வகைகளில் பரணி (கலிங்கத்துப் பரணி) கலம்பகம் (நந்திக்கலம்பகம் உலா) (மூவருலா) மன்னர்கள் வள்ளல்கள் போன்றவர் களைப் பாராட்டும் மரபும் இருந்திருக்கிறது. பெரியபுராணம் கம்பராமாயணம் போன்றவை சமயக் காப்பியமாகவும் அறியப்படுகின்றன. இவை யெல்லாம் பேரரசுக் காலத்தில் தோன்றியவை.

பேரரசுகள் மறைந்து தமிழகம் தளர்ச்சியுற்றுப் பிறர் ஆட்சிக்காலத்தில் மறுபடியும் அகவயமான நெறியிற் செல்லும் பக்தி இலக்கியங்கள் தோன்றுகின்றன. இந்தக் காலத்தில் தமிழ்ச் சிந்தனையில் அதற்கு முன் வளர்ச்சி பெற்ற தத்துவச் சிந்தனைகளான சைவசித்தாந்தம் வேதாந்தம் விசிஷ்டாத்வைதம் போன்றவற்றின் பாதிப்பையும் காணலாம். முன் பக்திக் காலத்தில் சமண பௌத்தங்கள் வைதிக சமயங்கள் போன்றவை எதிரெதிர் அணியில் இருந்தது போன்று இங்கே சித்தாந்தம் வேதாந்தங்கள் பக்தி ஞானம் போன்றவை எதிர் எதிர் அணியில் அமைந்து கருத்துப் போருக்குரிய களத்தைச் சமைக்கின்றன. இம்மரபுக்குக் கோயில் வழிபாட்டோடு நெருங்கிய நேரடித் தொடர்பு இல்லை. திருமூலரில் தொடங்கிய சித்தர் மரபு கருவூர்ச் சித்தர் வழி தொடர்கிறது.

இக்காலத்தில் தோன்றிய அருணகிரியார், தத்துவராயர், கைவல்லிய நவநீத ஆசிரியர், தாண்டவராயர், குமரகுருபரர், சிவப்பிரகாசர், தாயுமானவர் போன்றவர்கள் இக்காலத் தமிழ் இலக்கியத்தின் முக்கியப் போக்கான சமய பக்தி நெறியின் பண்புகளை வெளிப்படுத்துகிறார்கள். பட்டினத்தார், பரஞ்சோதி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், அதிவீரராம பாண்டியர் போன்றவர் களையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

நாட்டார் இலக்கியம் சமயத்தை ஒட்டியும் பின் வீரசாகசம் சமூக அக்கறை போன்றவற்றை ஒட்டியும் மக்கள் இலக்கியமாக இருந்திருக்கிறது. தென் மாவட்டத்தில் புகழ் பெற்றிருந்த அருதன குட்டிப் புலவர் போன்ற பல நாட்டுக் கதைப் பாடல் ஆசிரியர்கள் இலக்கியத்தை வெறும் தோத்திரமாக மட்டும் அமைக்காமல் பொழுது போக்கோடு சிந்தனையைத் தூண்டும் கதை தழுவிய இலக்கியங்களை வில்லுப் பாட்டு போன்ற வடிவில் படைத்துப் பரப்பிவந்தது இலக்கியப் பெருநெறியை மட்டும் பதிவு செய்த இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் கவனத்தில் கொள்ளப் படவில்லை.

அருணகிரியார், குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்றோர் இக்காலகட்ட இலக்கியத்தை வளப்படுத்தியவர்களில் முக்கியமான பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்கள் நிறுவனச் சமயத்தின் பக்தி நெறி சார்ந்தவர்கள். அருணகிரியார் முருக வழிபாட்டை முதன்மைப்படுத்தியவர். முருக வழிபாடு இக்காலகட்டத்தில் ஓங்கி வளர்ந்ததற்கான காரணம் ஆராயத்தக்கது. ஒன்று இக்காலகட்டத்தில் ஆட்சி புரிந்த தெலுங்கு கன்னட மன்னர்கள் காலத்தில் ஆட்சியாளர்கள் சார்பில் இராமன் கண்ணன் வழிபாடு சிறப்பாகப் போற்றப்பெற்ற போது அதற்கு மாற்றாகத் தமிழ் மண்சார்ந்த இளந்தெய்வமாக முருகன் முன்னிறுத்தப் பெற்றிருக்கலாம். இதற்கு சைவம் சார்ந்த ஆதரவும் கிடைத்திருக்க வேண்டும். இதற்கு அடித்தளமாக ஏற்கெனவே கச்சியப்பரின் கந்தபுராணம் மக்கள் மனதில் முருகனின் சைவம் சார்ந்த கதையைப் பரப்பிவிட்டது. அருணகிரியார் பாடிய ஆயிரத் திற்கும் மேற்பட்ட முருகன் தலங்கள் என்பவை பெரும்பாலும் பாடல் பெற்றதாலோ பிற காரணங் களாலோ புகழ் பெற்ற சைவக் கோயில்களின் பகுதிகள் என்பதை மனதில் கொள்ளலாம். அருணகிரியார் பரப்பிய முருக வழிபாட்டிலிருந்து கிடைத்த அருமையான சந்தப் பாடல்கள் தமிழுக்குப் புதியவை. அவற்றின் சந்த அழகு பக்திச் சுவைக்கு மேலாகக் காணப்படும் அகவயமான உணர்ச்சிப் பெருக்கில் விளைந்த நிலையாமையின் ஒரு கூறாக வெளிப்படும் பெண் வெறுப்பு போன்றவை மாணிக்கவாசகரிடமிருந்து பெற்றவை. அவை அருணகிரியார் மூலம் தாயுமானவர் வள்ளலார் வரை பிற்காலப் பக்தி இலக்கியத்தின் பண்பாக இடம்பெறத் தொடங்கி விட்டன என்று தோன்றுகிறது.

குமரகுருபரரும் நிறுவன சமய நெறியைச் சேர்ந்தவர். அரசு சார்பாக நடைபெற வேண்டிய கல்வி நிலையங்கள் சமய நிலையங்கள் போன்றவை அரசால் புறக்கணிக்கப்பட்டதனாலோ அல்லது அரசு தன் கடமையை நிறைவேற்றாமல் விட்டதனாலோ ஏற்பட்ட குறையை நிறைவு செய்யும் நோக்கில் கல்வி சமயப் பணியாற்றுவதற்கு மடங்கள் நிறுவியும் கல்விச் சாலைகளுக்குத் தேவையான நீதி நூல்கள் இலக்கண நூல்கள் இன்னும் சிற்றிலக்கியங்கள் போன்றவற்றை இயற்றியும் பணியாற்றியிருக்கிறார். சிவப்பிரகாசரும் இத்தகைய பணிகளைச் செய்தவர் எனலாம்.

தத்துவராயர் தாண்டவராயர் காழிக் கண்ணுடைய (ஒழிவிலொடுக்கம்) போன்றவர்கள் தத்துவம் சார்ந்த சிந்தனை நெறியில் நூல்கள் படைக்கின்றனர். தத்துவராயர் தம் பாடு துறையில் நாட்டுப்புற இலக்கியத்தின் பண்பும் உயர்ந்த தத்துவக் கருத்துக்களும் அடங்கிய பாடல்களை இயற்றுகிறார்.

தாண்டவராயரின் கைவல்லிய நவநீதம் வேதாந்தத்தை அழகுத் தமிழில் எடுத்துரைக்கிறது. காழிக் கண்ணுடைய வள்ளல் சைவசித்தாந்த நெறியில் புதிய சிந்தனைகளை எடுத்துரைக்கிறார். இவர் நெறியை ஐக்கியவாத சைவம் என்பர்.

தாயுமானவர்

இந்தச் சூழலில் தோன்றிய தாயுமானவர் சற்று வேறுபட்டவராகக் காட்சி தருகிறார். சித்தர் மரபின் எதிர்ப்புக் குரல் அகவயமான தனிமனிதக் குறைகள் பற்றிய நிலையாமை உணர்வு பக்தியின் கனிவு தத்துவ மரபின் சாரத்திலே சமரசத்தைக் காண்கிற போக்கு என்பவை இவருடைய தனித்தன்மை எனலாம். இது சம்பந்தர் பக்தியில் காணப்படும் எதிர்ச்சமயத்தை இகழும் போக்கிலிருந்து வேறுபட்டது. இவர் அமைச்சர் போன்ற உயர்நிலைப் பதவியிலிருந்து விலகி உலகியலின் நிலையாமை மனிதர்களின் கபடநிலை போன்றவற்றை நன்குணர்ந்து நிறுவன முறையிலமைந்த அமைப்புக்களை நிறுவாமல் தன் அருளுரைகள் மூலம் உலகுக்கு ஒரு சமரச நெறியைக் காட்டிச் சென்றுள்ளார் எனலாம். தேவார மூவர் மாணிக்கவாசகர் பட்டினத்தார் அருணகிரியார் சைவசித்தாந்த மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்கள் சுகர் முதலிய உபநிடதச் சான்றோர்கள் என்று தாயுமானவர் போற்றுபவர்களை ஆராய்ந்தால் மரபின் செழுமையை உணர்ந்து வேண்டியவற்றைத் தழுவிக் கொண்டு ஒரு சமரச நெறியை உருவாக்கியிருக்கிறார் என்று தோன்றுகிறது. இந்தப் பரிணாம வளர்ச்சியை வள்ளலாரிலே நாம் காண்கிறோம். இவருடைய மொழியின் இயல்பை நோக்கும்போது அக்கால இயல்புக்கேற்ற வடமொழி தமிழ் கடந்த நடையை இவர் பின்பற்றுவதிலும் ஒரு சமரசம் காணப்படுகிறது.நடை எளிமை வழக்குச் சொற்களைக் கையாளுவது (கர்மங்கள் போராடுதே பரிபூரணானந்தம் 4.4, அருள் தாகமோ சற்றுமிலை என்பதுவும் வெளியாச்சு, வினையெலாம் வாட்டுதே - எங்கும் நிறைகின்ற பொருள் 6 3 =4) இவருடைய கவிதைப் பண்பு. அதனால் என் தமிழினுக்கு இன்னல் பகராதுலகம் என்பார் தாயுமானவர் (சித்தர் கணம் 8.2). மேலும் பேசுவது போன்ற உரைப்பாங்குடைய வாக்கியங்களாலான நீண்ட ஆசிரிய விருத்தம், கண்ணி, சந்தப் பாடல்கள் இவருடைய கவிதை நடையின் சிறப்பு. இதன் வளர்ச்சியை நாம் இராமலிங்கரிடம் காணலாம்.

சமரசம்

தாயுமானவரின் பக்தி நெறியின் சிறப்பு சமரசம் என்று உறுதியாகச் சொல்லலாம்

> சைவம் முதலா மளவில் சமயமும் வகுத்து மேற்
> சமயங் கடந்த மோன
> சமரசம் வகுத்த நீ உன்னை யான் அணுகவும்
> தண்ணருள் வகுக்க விலையோ
> (சின்மயானந்த குரு 4.2)

என்று பாடும்போது இது தெளிவாகிறது. இச் சொல்லை முதலில் படைத்துப் புழக்கத்திற்குக் கொண்டுவந்தவர் தாயுமானவர் என்று தோன்றுகிறது.

> வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
> விளங்குபரம் பொருளே நின்விளையாட் டல்லால்
> மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
> வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்
> றம்மா = கல்லாலின் 25

என்ற உபநிடதக் கருத்து தாயுமானவரின் அடிப்படைக் கோட்பாடு. மேலும் வேதாந்த சித்தாந்த சமரச நிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே என்று அவர் சித்தர்களை விளித்துப் பாடும்போது சமரசம் என்பது சித்தர் மரபின் அடிப்படைக் கோட்பாடு என்பதை அவர் உணர்ந்திருந்தார் என்று தோன்றுகிறது. சித்தர் சூஃபிகள் போன்றவர்கள் இவ்வாறு சமரச நிலை கண்டவர்கள். மஸ்தான் சாகிபு போன்றவர்களுக்கும் வள்ளலார் பாரதி நாராயண குரு போன்றவர் களுக்கும் தாயுமானவர் இயல்பான வழிகாட்டியாய் அமைந்தது அவர் சித்தர் மரபின் வழியில் கைக்கொண்ட இச்சமரசக் கோட்பாடே காரணம் எனலாம்.

அது போன்றே ஞான நெறியா பக்தி நெறியா என்ற கேள்வியையும் எழுப்பி அவற்றிலும் சமரசம்

காண்கிறார். இவை பற்றி விவாதிப்பது வெறும் வரட்டுப் புலமைதான் என்பது இவர் கருத்து.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி வில்லாத என்
கர்மத்தை என்சொல்கேன் மதியையென்
சொல்கேன்
கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மம் முக்கிய மென்று
நாட்டுவேன் கர்ம மொருவன்
நாட்டினா லோபழைய ஞானம் முக்கியம் என்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வுந் த்ராவிடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே (சித்தர் கணம் 10)

அறிவும் உணர்வும் கலந்த இறை நெறியை அவர் அறிவுறுத்துகிறார் என்று தோன்றுகிறது. அறிவாலே இறையை அறிதல் அன்பாலே உயிர்களைப் பேணுதல் இவர் நெறி. எவ்வுயிர்த் திரளும் உலகில் என்னுயிர் எனக் குழைந்துருகுவது (சிற்சுகோதய விலாசம் 8.1) பற்றியே இவர் கொல்லா விரதம் இக்குவலயம் எல்லாம் ஓங்குக என்றும் எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்றும் பாடுகிறார்.

உருவக அடுக்குகள் தொடர் உருவகம் படிமம்


இலக்கணை சமாதி போன்று வெளிப்படையான உருவக அடுக்குகள் படிமக் காட்சியை எழுப்ப முயல்வதைப் பக்தி இலக்கியத்தில் பரக்கக் காணலாம். தாயுமானவர் இத்தகைய அடுக்குகளைச் சமைத்துக்காட்டுவார். குறிப்பாக இவை விடுகதைப்புதிர் போன்ற ஒருபொருட் பன்மொழியாக அமையும். இவர் கவிதையின் சிறப்புகளுள் ஒன்றாக இது அமைகிறது.

குடக்குகொடு குணக்காதி திக்கினை யுழக்கொடு
கொள்ளல் போல் ஐந்துபூதங்
கூடுஞ்சுருங்கிலைச் சாலேகம் ஒன்பது
குலாவுநடை மனையைநாறும்
வடக்கயிறு வெண்ணரம் பா என்பு தசையினால்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர் செந்நீர்கணீர்
மலநீர்புண் நீரிறைக்கும்
விடக்குத் துருத்தியைக் கருமருந்துக் கூட்டை
வெட்ட வெட் டத்தளிர்க்கும்
வேட்கை மரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ லிருந்து பொய்யாஞ்
சடக்கைக் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானாகி நிற்பதென்றோ
சர்வ பரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே
தாயுமானவர் சச்சிதா னந்தசிவம் 2
இன்னும் ஒப்பு நோக்குக
காமவேள் நாடகசாலை சிற்சுகோதய விலாசம் 1
ஏறுமயிர்ப் பாலம்உணர் விந்தவிட யங்கள்; நெருப் பாறெனவும் நன்றா அறிந்தேன் பராபரமே பராபரக்
கண்ணி 174
ஞான வை வாள் பராபரக் கண்ணி 176
தோற்பாவை நாலாட் சுமையாகும் சீவனொன்றிங்
கார்ப்பால் எடுத்ததெவராலே பராபரமே பராபரக்
கண்ணி 184

சமய பக்தி இலக்கியத்தில் இத்தகைய படிம ஆட்சி தொன்று தொட்டே வழங்கி வருவதுதான். அப்பர் (மனமெனுந்தோணி) மாணிக்கவாசகர் (அர்ச்சனை வயலுள். முன்னிக் கடலைச் சுருக்கி திருவெம்பாவை சிவபுராணம்எதிர்மறைகள்) பாடல்களில் இத்தகைய ஆட்சிகளைக் காணலாம். சித்தர் பாடல்களில் (நந்தவனத்தில் ஓர் ஆண்டி) இத்தகைய படிமக்காட்சிகள் பருப்பொருள் உணர்வைத்தோற்றுவிக்கப் பயன்படு கின்றன(ஐந்துள சிங்கம்திருமூலர்;). இன்னும் தத்துவச் செறிவுடைய நூல்களில் தொடர் உருவகங்களாக அமையும் இன்னொரு வகைப் படிமங்களும் உண்டு. பிரபோதசந்திரோதயம்; பாசவதைப்பரணி மனோன்மணீயம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். தாயுமானவர் இந்த மரபுப் பண்பைக் கடைப்பிடித்து அதை வளப்படுத்தியிருக்கிறார் என்று சொல்லலாம்.

இவ்வாறு இரண்டாம் பக்தி யுகம் என்பது முற்காலப் பக்தி இயக்கத்திலிருந்து ஒன்றுபட்டும் சமரசம் என்ற உணர்வை அறிவு ரீதியாக ஒரு தத்துவமாகவும் வற்புறுத்திச் சமய அரசியல் கடந்து நிற்கும்போது வேறுபட்டும் அமைகின்றது. இந்நெறி உருவாவதற்குச் சமண பௌத்த மதங்களின் பார்வைகளும் உதவியிருக்கக் கூடும். இந்நெறி பிற்காலத்தில் சமரச சன்மார்க்கம் சர்வ மத சமரசம் போன்ற கருத்துகள் வள்ளலார் பாரதி வழி செல்வாக்குப் பெறக் காரணமாக அமைந்தது என்பதும் இங்கு குறிக்கத்தக்கது.

■



ஸ்ரீ புலிப்பானி சித்தர்



ஸ்ரீ அகத்தியர்



பாம்பாட்டி சித்தர்



ஸ்ரீஇடைக்காடர்



ஸ்ரீ போகர்

சித்தர் பாடல்கள் - தொகுப்பு வரலாறு

த. செந்தில்குமார்

சித்தர் பாடல்கள் 19 ஆம் நூற்றாண்டில் இருந்தே தொகுக்கப்பட்டன. அதற்கு முன்பு சித்தர்பாடல்கள் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. ஒவ்வொரு சித்தரின் பாடல்களும் தனித்தனியாகவே சுவடிகளில் எழுதிவைக்கப்பட்டன. அச்சின் வருகைக்குப் பின் அந்தச் சித்தர் பாடல்கள் தனித்தனியாவே அச்சாயின. காலப்போக்கில் இம்முறையில் மாற்றம் ஏற்பட்டது. பல சித்தர்களை ஒன்றாக்கி பதினெண் சித்தர் பாடல் தொகுப்புகள் உருவாக்கப்பட்டன. பதினெண் சித்தர் பாடல் தொகுப்புகள் இன்றுவரை பலரால் பல்வேறு சித்தர்களைச் சேர்த்தும் விடுத்தும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொகுப்பு அரசியலைப் பற்றிய பதிவுகள் குறைவாகவே நமக்கு உள்ளன.

சித்தர் தனிப்பாடல் பதிப்பு வரலாறு

சுவடிகளில் எழுதி வைக்கப்பட்ட சித்தர்களின் பாடல்கள் பதிப்பு 1836 ஆம் ஆண்டுவாக்கில் இருந்து தொடங்குகிறது. 1836இல் இடைக் காட்டுச்சித்தர் பாடல் முதன்முதலில் அச்சுவாகனம் ஏறியது. இதனைப் பதிப்பித்தவர் பாக்குப்பேட்டை பரமாநந்த முதலியார் குமாரர் மதுரை முதலியார் ஆவர். இந்நூல் பதிப்புரை தொடர்பான விவரம் எதுவும் இல்லை. இந்நூல் மொத்தம் 95 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்கு முன் வேறு ஏதும் சித்தர் பாடல் நூல்கள் பதிப்பிக்கப் பட்டதா? என்று ஆராய்கையில் அப்படி எதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில் இதனை முதல் சித்தர் பாடல் பதிப்பு நூலாக நாம் எடுத்துக் கொள்ளலாம். இந்நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்று பதிப்பகங்களால் தனித்தனியாக வெளியிடப்பட்டது. பின்னர் 1903 மற்றும் 1910ஆம் ஆண்டுகளில் மயிலம் சுப்பிரமணிய சுவாமி என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. இப்படியாக இடைக்காட்டுச் சித்தர் பாடல் பதிப்பு வரலாறு அமைகிறது. இது போல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலும் எட்டு சித்தர் பாடல் நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. அச்சித்தர்களின் விவரம் வருமாறு,

1. அகப்பேய்ச் சித்தர்
2. அழுங்கனிச் சித்தர்
3. கடுவெளிச் சித்தர்
4. குதம்பைச் சித்தர்
5. கொங்கன நாயனார் ஞானம்
6. சிவவாக்கியர்
7. பாம்பாட்டிச் சித்தர்
8. பட்டினத்தார்

மேற்கண்ட பட்டியலில் பட்டினத்தார் சித்தராகச் சேர்க்கப்பட்டுள்ளதை அறியலாம். இவர் 1896 இல் தான் சித்தர் மரபுக்குள் கொண்டு வரப்படுகிறார். மற்றவர்கள் ஏற்கனவே சித்தர் மரபில் உள்ளனர்.

திருவேற்றியூர் பரப்பிரம முத்திராக்ஷர சாலை என்ற அமைப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டில் சித்தர் தனிப்பாடல்களை வெளியிட்டது. 1880களில் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் அமைந்திருந்தது. அகப்பேய்ச் சித்தர், கடுவெளிச் சித்தர், குதம்பைச் சித்தர், சிவவாக்கியர் ஆகியோரது பாடல்களை இந்நிறுவனம் தனித்தனியாக வெளியிட்டது. இதனைப் போன்றே பத்தொன்ப தாம் நூற்றாண்டின் இறுதியில் சென்னை புரசை சுந்தர விலாச அச்சுக்கூடம் சித்தர்களைத் தனித் தனியாகப் பிரித்து பதிப்பித்தது. இந்நிறுவனம்தான் பட்டினத்தாரைச் சித்தராகக் கொண்டு முதன் முதலில் பாடல்களை வெளியிட்டது. அது தேர்வு செய்யப்பட்ட நூறு பாடல்களாகப் பட்டினத்துச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய ஞானம் நூறு என்ற தலைப்பில் அமைந்திருந்தது. இவ்வச்சகம் பாம்பாட்டி சித்தர் பாடல்களை 1896இல் பதிப்பித்தது. மேலும் 1896இலேயே சிவவாக்கியர் பாடல்களை வடிவேலு முதலியார் என்பவரைக் கொண்டு பதிப்பித்தனர். மேற்கண்டவைகளில் இருந்து 1896இல் இப்பதிப்பகம் சித்தர் பாடல்களை வெளியிட ஆரம்பித்தது என்பதையும் ஒரே ஆண்டிலேயே மூன்று சித்தர் பாடல்களின் தனித்தனி தொகுப்பைக் கொண்டு வந்துள்ளது என்பதையும் அறியமுடிகிறது. இதுபோல் தொடர்ச்சியாகச் சித்தர் பாடல்களை வெளியிட்ட நிறுவனம் இக்காலகட்டத்தில் இல்லை. இந்நிறுவனம் தான் முதன்முதலில் பதினெண் சித்தர் பாடல் தொகுப்பை வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சித்தர் தனிப் பாடல் திரட்டுகளைத் தொகுத்தவர்கள் தங்களது பெயர்களின் இறுதியில் சுவாமிகள் என்றே சேர்த்துக் கொண்டுள்ளனர். உதாரணமாக, இடைக்காட்டுச்சித்தர் பாடல்களைத் தொகுத்த சரவணபுரம் சண்முக முதலியார் பிற்காலகட்டத்தில் தன் பெயரைச் சண்முக சுவாமிகள் என மாற்றிக் கொள்கிறார். இதுபோல் திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள், சிதம்பரம் கருணானந்த சுவாமிகள், மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள், ஆழ்வார் திருநகரி சாந்தமூர்த்தி சுவாமிகள், திருத்தணி செங்கல்வராய சுவாமிகள் என சித்தர் பாடல்கள் தொகுத்தோர் பெயர் வைத்துக்கொள்ளும் மரபு

த. செந்தில்குமார்: வேலூரில் உள்ள முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறையில் துணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவரின் நூல்கள்: 'சித்தர் பாடல்கள் தொகுப்பு வரலாறு', 'நாட்டார் புழங்குசார் மருத்துவக்கலை'.



உள்ளது. இதுபோல் முதலியார் சமூகத்தைச் சேர்ந்தவர்களே சித்தர் பாடல்களை அதிகம் பதிப்பித்துள்ளனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் மிகக் குறைந்த அளவே செட்டியார்களும் பதிப்பு வேலையைச் செய்துள்ளனர். தொகுப்பு மரபு தொடங்கும் காலத்திய சூழலில் இராமலிங்க அடிகளார் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள் சித்தர் மரபில் இணைக்கப்படுவதை மேற்கண்ட சமூகத்தாரின் செயல்பாடுடன் சேர்த்துப் பார்க்கலாம். இப்படியாக, சித்தர்களின் தனிப்பாடல் பதிப்பு வரலாறு அமைகிறது.

பதினெண் சித்தர்பாடல் தொகுப்பு வரலாறு

பதினெண் சித்தர் என்று சொல்லும் மரபு எந்த நூற்றாண்டில் இருந்து வந்தது என்பது ஆய்வுக் குரிய ஒன்று. மேலும் நவசித்தர்கள், நாற்பதெண் சித்தர்கள் என்று கூறும் முறையும் உள்ளது. இந்த மரபு சரியா? தவறா? என்று விடை பகர்வது கடினம். பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு என்பது போல் இம்மரபு அமைந்திருக் கிறது என்று 'சித்தர் இலக்கியம்' என்னும் நூலில் மீ.ப. சோமு அவர்கள் குறிப்பிடுகிறார். பதினெண் சித்தர்களைப் பழம்பெரும் பாடல் ஒன்று கீழ்க்காணுமாறு எடுத்தியம்புகிறது.

நந்தி, அகத்தியர், திருமூலர், புண்ணாகீசர்,
நற்றவத்துப் புலத்தியர், பூனைக் கண்ணனார்,
இடைக்காடர், போகர், புலிக்கையீசர்,
கருவூரார், கொங்கணர், காலாஞ்சி
எழுகண்ணர், அகப்பேய், பாம்பாட்டி,
தேரையர், குதம்பையர், சட்டைநாதர். பழம் பாடல்[1] (ஞா. மாணிக்கவாசகன். 1955: IV)

இதுமட்டுமல்லாமல் பதினெண் சித்தர்கள் என்று கூறும் மரபை அபிதான சிந்தாமணி, தமிழ்ப் பேரகராதி, கருவூரார் பலத்திரட்டு, Encyclopaedia of Indian Medicine, History of Siddhas Medicine, சித்த மருத்துவ போதம் மற்றும் சித்தர்கள் தங்கள் நூலில் குரு வணக்கம் சொல்லும் போது சித்தர் மரபுகள் பற்றியும் கூறப்படுகின்றன.

சித்தர்பாடல் தொகுப்புகளுக்குத் தலைப்பு கொடுப்பதில் கூட ஒரு வளர்ச்சிப்போக்கு உள்ளது. ஆரம்பத்தில் பதினெண் சித்தர்கள் பெரியஞானக் கோவை என்றும் பின்னர் பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய நூதன பெரியஞானக்கோவை, சித்தர்பெரியஞானக்கோவை, சித்தர்ஞானக்கோவை, சித்தர்ஞானப்பாடல்கள், சித்தர்பாடல்கள் என்ற தலைப்புகளில் அடைந்துள்ள மாற்றங்களைப் பார்க்க முடிகிறது.

பதினெண் சித்தர்கள் பெரியஞானக்கோவை என்ற தொகுப்புகளில் 18 சித்தர்கள் மட்டுமில்லாமல் அதற்குமேல் சில சித்தர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இது எல்லாத் தொகுப்பு நூல்களிலும் கடை பிடிக்கப்படுகிறது. பதினெண் என்பது பெயரளவில் மட்டுமே உள்ளது. இதனால் காலப்போக்கில் பதினெண் என்று சொல்வதைத் தொகுப்பாசிரியர்கள் விட்டுவிட்டு சித்தர் ஞானக் கோவை என்றும், பின்னர் சித்தர் பாடல்கள் என்றும் குறிப்பிட ஆரம்பித்தனர். இவர்கள் இதில் பல புதிய சித்தர்களைச் சேர்த்தனர். மேலும் பழைய தொகுப்புகளில் இடம்பெற்ற பூசை விதிகளை, மந்திரங்களை, தேவாரப் பாடல்களையெல்லாம் நீக்கி வெறும் சித்தர் பாடல்களை மட்டும் தொகுப்பாக்கினர். இதனால் ஞானக் கோவை என்ற சொல்லாட்சி மாறி வெறும் சித்தர் பாடல்கள் என்ற பெயர் புழக்கத்தில் வந்தது.

சுந்தர விலாச அச்சுக்கூடப் பதிப்பு

1896 வாக்கில் சித்தர் தனிப்பாடல் தொகுப்பை வெளியிட்ட சுந்தர விலாச பதிப்பகம் 1899இல் சித்தர்பாடல் தொகுப்புநூல்களை வெளியிட ஆரம்பித்தது.

1899இல் பதினெண் சித்தர்கள் பெரியஞானக்கோவை என்ற முதல் தொகுப்புநூல் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் 4 பதிப்புகளைக் கண்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் உபாத்தியாயர் இராமலிங்க முதலியார் ஆவார். இந்நூல் 3 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (பார்க்க அட்டவணை)

பழம்பாடல் குறிப்பிடும் சித்தர்மரபுக்குள் அடங்காத நாயன்மார்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், பட்டினத்தார், பத்திரகிரியார் ஆகியோருடன் வள்ளலார் பாடல்களும், சிவபஜனை நாமாவளி பாடல்களையும் இணைப்பதன் பின்னணியில் சைவ அரசியலைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்நூல் 1899இலேயே மறுபதிப்பு செய்யப்பட்டது. ஆனால் 1902 இல் இந்நூல் ம.வடிவேலு முதலியாரைப் பதிப்பாசிரிய ராகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டது. பின்னர் 1904இல் உபாத்தியாயர் இராமலிங்க முதலியாரைக் கொண்டு மறுபதிப்பு செய்யப்பட்டது. இந்நிறுவனம் பதிப்பாசிரியர்களை மாற்றி மாற்றிப் பதிப்பித்தது வியாபார நோக்கத்திற்காகத்தான் என்பதை அறிய முடிகிறது.

ஒவ்வொரு பதிப்பிலும் உள்ளடக்க மாற்றம், ஏட்டுப் பிரதிகளைச் சோதித்துப் புதிய பாடல்களைச் சேர்ப்பது, புதிய ஏட்டுச்சுவடிகளில் கிடைத்துள்ளவற்றையும் இதில் சேர்ப்பது, புதிய

முதல் பாகம்	இரண்டாம் பாகம்	மூன்றாம் பாகம்
1. சிவவாக்கியர் - 518	1. அகஸ்தியர் உயர் ஞானம் - 1	1. தேவாரத்திரட்டு
2. பட்டினத்துப் பிள்ளை திருப்பாடல் திரட்டு	2. அகஸ்தியர் தனி ஞானம் - 1	2. சிவபஜனை நாமவாளி
3. பத்திரகிரியார் புலம்பல் - 200	3. அகஸ்தியர் தனி ஞானம் - 2	
4. பாம்பாட்டிச் சித்தர் - 129	4. ஞானசரநூல் சாஸ்திரம் - 51	
5. இடைக்காட்டுச்சித்தர் - 95	5. சிவானந்த போதம் - 100	
6. அகப்பேய்ச் சித்தர் - 90	6. நெஞ்சறி விளக்கம் - 103	
7. குதம்பைச் சித்தர் - 32	7. சேசயோகி ஞானயேத்தம் - 7	
8. கடுவெளிச் சித்தர் - 33	8. ஞானரத்தினக் குறவஞ்சி - 63	
9. அகஸ்தியர் ஞானம் - 9	9. சுப்பிரமணியர் ஞானம் - 32	
10. அழுங்கனி சித்தர் - 32	10. வால்மீகர் வத்திர ஞானம் - 16	
11. நந்தீஸ்வரர் பூஜா விதி - 12	11. அகஸ்தியர் ஞானம் - 16	
12. இராம தேவர் பூஜா விதி - 10	12. திருவருட் பிரகாச	
13. கொங்கனர் வாலைக் கும்மி - 110	வள்ளலார் - 181	
14. உரோம ரிஷி - 12	13. சிவநாமாவளித்திரட்டு - 84	
15. திருமூல நாயனார் ஞானம் - 11		
16. கருவூரார் பூஜா விதி - 30		

புதிய சித்தர்களைச் சேர்ப்பது முதலான உத்திகளைக் கையாண்டு நூலின் முகப்பில் விளம்பரம்போல் போட்டு விற்பனை செய்தனர். ஆனால் முன்பதிப்பில் இருந்து சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்டன. பெரிய அளவில் மாற்றங்கள் செய்யப்படவில்லை என்பதுதான் வரலாறு.

வா. சரவணமுத்துப் பிள்ளை பதிப்புச் செயல்பாடுகள்

சித்தர் பாடல் தொகுப்பு வரலாற்றில் முக்கிய மான இடத்தில் உள்ளவர் வா. சரவணமுத்துப் பிள்ளை ஆவார். இவரது சித்தர் பாடல்கள் பதிப்புச் செயல்பாடு 1903இல் இருந்து ஆரம்பமாகி 1958 வரை தொடர்கிறது. இவர் பதினெண் சித்தர்கள் பெரியஞானக் கோவை என்ற பெயரில் சித்தர் பாடல் தொகுப்பை வெளியிட்டார். இவரது நூலில் புதிதாகப் பல சித்தர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர் என்பதை ஆய்வின்வழி உணர முடிகிறது. இவரது நூலை 9 பதிப்பகங்கள் தொடர்ச்சியாக வெளியிட்டன. இவர் தனது அடுத்தடுத்த மறுபதிப்புகளில் பெரிய அளவில் தொகுப்புகளில் மாற்றங்கள் எதையும் செய்ய வில்லை. இவரது நூலை அதிக அளவில் சென்னை - இரத்தின நாயக்கர் ஸன்ஸ் நிறுவனம் 1924 முதல் 1958 வரை தொடர்ச்சியாக வெளியிட்டது. இக்காலக்கட்டத்தில் இந்நூல் 7 பதிப்புகளைக் கண்டுள்ளது. பிற பதிப்பகங்களும் சேர்த்து மொத்தம் இவரது நூல் 24 பதிப்புகளைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சித்தர் பாடல் தொகுப்பு வரலாற்றில் வா. சரவணமுத்துப் பிள்ளையின் பதிப்புப் பணி இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

இவரது காலகட்டத்திலேயே குப்புசாமி முதலியார், கோபால கிருஷ்ணக் கோனார் ஆகியோர் சித்தர் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டனர். இவர்கள் பாடல் தொகுப்புகளில் பெரிய அளவில் மாற்றங்கள் எதையும் செய்யவில்லை.

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை பதிப்புச் செயல்பாடுகள்

1956இல் சித்தர் ஞானக்கோவை என்ற நூல் இவரது பெயரில் இரண்டாம் பதிப்பாக

சித்தர் பாடல்கள் தனி நூல்கள் பட்டியல்

வ எண்	நூல் பெயர்	பதி. ஆசி. பெயர்	பதிப்பகம்	ஆண்டு
1.	அகப்பேய்ச் சித்தர் பாடல்	திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள்	திருவெற்றியூர் பரப்பிரமமுத்திரா ஷாசரசாலை	1881 ஜுன்
2.	அகப்பேய்ச் சித்தர் பாடல் குதம்பைச் சித்தர் பாடல்	தண்ணீர் குளம் குப்பைபயரால்	புதுவை முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்	
3.	அகப்பேய்ச் சித்தர் பாடல் பழைய புத்தகம் படி புஸ்தகம் என்றுள்ளது			
4.	அகப்பையச் சித்தர் பாடல்	களத்தூர் வேதகிரியார் குமாரர் சுப்பராய முதலியார்	இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம்	ரௌத்திரி புரட்டாசி
5.	அகப்பேய்ச் சித்தர் பாடல்	சரவணபுரம் சண்முக முதலியார்	புரசபாக்கம் விவேக விளக்க அச்சுக்கூடம்	இராக்தாக்ஷி மாசி
6.	அகப்பேய்ச் சித்தர் பாடல்	சிதம்பரம் கருணானந்த சுவாமிகள்	சிந்தாதிரிப் பேட்டை நாராயணசாமி முதலியார் அண்டு சன்ஸ் பிரபாகர அச்சுக்கூடம்	1890
7.	அழுகணிச் சித்தர் பாடல்	மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள்	ஸ்ரீ பத்மராபவிலாச அச்சுக்கூடம் ஆச்சாரப்பன் தெரு, 84வது நெம்பர், சென்னை.	1905
8.	அழுகணிச் சித்தர் பாடல்		சென்னை-ஆளை பெரியநாய சியம்பன் அச்சுக்கூடம்	1924
9.	அழுகணிச் சித்தர் பாடல்		சென்னை திருவெற்றியூர் கலைமகள் விலாச அச்சுக்கூடம்	1927
10.	அழுகணிச் சித்தர் பாடல்		சென்னை-பூமகள் விலாச அச்சுக்கூடம்	1928

11.	அழுகணிச் சித்தர் பாடல் குதம்பைச் சித்தர் பாடல்	பாக்கிய லக்ஷ்மி புத்தக சாலை	மதுரை புது மண்டபம் விவேகானந்தா பிரஸ்	1932
12.	இடைக்காட்டுச் சித்தர் பாடல்	பாக்கு பேட்டை பரமாநந்த முதலியார் குமாரர் மதுரை முதலியார்	பூவிருந்தவல்லி இயலிசை நாடக விலாச அச்சுக்கூடம்	1836
13.	இடைக்காட்டுச் சித்தர் பாடல்	சரவணபுரம் சண்முக முதலியார்	புரசபாக்கம் விவேக விளக்க அச்சுக்கூடம்	சித்திரபானு வருடம்
14.	இடைக்காட்டுச் சித்தர் பாடல்	சண்முக சுவாமிகள்	கல்விப்பிரவாக அச்சுக்கூடம் சூளைபாவையர் வீதி	துந்துபி வருடம்
15.	இடைக்காட்டுச் சித்தர் பாடல்	மைலம் சுப்பிரமணிய சுவாமி	சென்னை-இட்டாஸ்ரீ பத்மநாபா விலாச அச்சுக்கூடம்	1903, 1910
16.	கடுவெளிச் சித்தர் பாடல்	குபப்பேட்டை குருசாமி நாயகர்	ஷையூர் செந்தமிழ் விளக்க அச்சுக்கூடம்	1864
17.	கடுவெளிச் சித்தர் பாடல்	தண்ணீர் குலம் குப்ப வீரனயங்கார்	வளவனூர் முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்	குரோதன வருடம் புரட்டாசி (1865)
18.	கடுவெளிச் சித்தர் பாடல்	திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள்	திருவெற்றியூர் கன்னியப்ப முதலியார் அண்டு பிரதர்ஸ் பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை	1887
19.	கடுவெளிச் சித்தர் அருளிச் செய்ய உடற்கூறு பாடல்	கோகுலாபுரம் அருணாச்சல முதலியார்	கொண்ணூர் மனோண்மணி விலாச அச்சுக்கூடம்	சுபாநு வருடம்
20.	கடுவெளிச் சித்தர் பாடல்	திருவெண்காடு ஆறுமுக முதலியார்	திருவெற்றியூர் பரப்பிரம முத்திராக்ஷர சாலை	பிரமோத தூத மார்கழி
21.	கடுவெளிச் சித்தர் பாடல்	ஆழ்வார் திருநகரி சாந்த மூர்த்தி சுவாமிகள்	திரிசபுரம் சங்கநிதி விளக்க அச்சுக்கூடம் நெ.32, அவதானம் பாவையர் வீதி, சென்னை.	1901
22.	காரைச் சித்தர் கனக வைப்பு	சித்தா ஆசிரமம்		1960
23.	குதம்பைச் சித்தர் பாடல்	திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள்	சென்னை - சூளை பரப்பிரம முத்திராக்ஷர சாலை	1886
24.	குதம்பைச் சித்தர் பாடல்	திருத்தணி செங்கல்வராய சுவாமிகள்	தக்கோலம் ஸ்ரீ லட்சுமி நாராயண விலாச அச்சுக்கூடம்	1891
25.	குதம்பைச் சித்தர் பாடல்	பூ.ரா.அப்பாதுரை முதலியார்	சென்னை - மண்ணடி சரவண பவ அச்சுக்கூடத்தில் நெ.35,பாரிஸ் வெங்கடாசல ஐயர் தெரு	1927

26.	குதம்பைச் சித்தர் பாடல்		சென்னை பூமகள் விலாச அச்சுக்கூடம் நெ.24, தாண்டவராயப் பிள்ளை வீதி	1930
27.	குதம்பைச் சித்தர் பாடல்		திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 154 டிடி.கே. சாலை சென்னை -18.	1987
28.	குதம்பைச் சித்தர் பாடல்	களத்தூர் தமிழ்ப் புலவர் வேதகிரி முதலியார் குமாரர் ஆறுமுக முதலியார்	திருவெற்றியூர் பரப்பிரம முத்திராக்ஷர சாலை	
29.	கொங்கண நாயனார் ஞானம்	தண்டலம் சுப்பராய முதலியார்	போரூர் ஆதி வித்வம ரோரஞ்சனி அச்சுக்கூடம்	பவ வருடம் புரட்டாசி
30.	சிவவாக்கியர் பாடல்	வாலாஜாப் பேட்டை சாமி செட்டியார்	சென்னை கலாரத் நாகரம் அச்சுக்கூடம்	1891
31.	சிவவாக்கியர் பாடல்	மா. வடிவேலு முதலியார்	சென்னை - புரசை சுந்தரவிலாச அச்சுக்கூடம்	1896
32.	சிவவாக்கியம் ஆயிரம் பாடல்	செழுமனவை சித்திரக்கவி தேவேந்திரநாத பண்டிதர்	சிறுமணவூர் சிவகாமி விலாச அச்சுக்கூடம்	1903
33.	சிவவாக்கியர் பாடல் 500 மூலமும்- உரையும்	மா. வடிவேலு முதலியார்	க்ஷ. இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ், சென்னை	
34.	பட்டினத்து சுவாமிகள் திருவாய் திருவாய் மலர்ந்தருளிய ஞானம் நூறு.		சென்னை - புரசை சுந்தர விலாச அச்சுக்கூடம்	1896
35.	பட்டினத்தார் பாடல்கள்	அ.சொ. அண்ணாமலை செட்டியார் மணிவிழா அன்பளிப்பு	காரைக்குடி கற்பகம் அச்சகம் சென்னை - 2	
36.	பட்டினத்தார் பாடல்கள்	ச. மெய்யப்பன்	மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்	1982 (மு.ப)
37.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்	களத்தூர் ஆறுமுக முதலியார்	சர்குணாநிதி அச்சுக்கூடம்	1871
38.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்	ஆறுமுக சுவாமிகள்	திருவெற்றியூர் பரப்பிரம முத்திராக்ஷர சாலை	1880
39.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்	சிதம்பரம் குருநாத சுவாமிகள்	நுங்கம்பாக்கம் அம்பாள் விலாச அச்சுக்கூடம் சென்னை	1893 1896

40.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்	பூவிருந்தவல்லி தங்கவேலு முதலியார்	சென்னை - சூளை சங்கநிதி விளக்க அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது	1896
41.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்	பூவிருந்தவல்லி தங்கவேலு முதலியார்	சென்னை -புரசை நற்றமிழ் விலாச அச்சியந்திர சாலை 37, சரவணப் பெருமாள் முதலி வீதி	1918
42.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்		வித்யாரத்நாகர அச்சுக்கூடம்	1927
43.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்		P. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ் 20, வைத்தியநாத முதலி தெரு,	1927
44.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்		திருமகள் விலாச அச்சியந்திர சாலை, சென்னை.	1927
45.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்	அ. இரங்கசாமி முதலியார்	பூமகள் விலாச அச்சுக்கூடம் சென்னை	1933
46.	பாம்பாட்டிச் சித்தர் பாடல்		இ. இராமசாமிக் கோன் புத்தக வியாபாரம் வடக்காவணி மூலவீதி மதுரை	1938

வெளிவந்தது. முதல் பதிப்பு எந்த ஆண்டு வெளிவந்தது என்ற விவரம் இல்லை. இவரது பதிப்பு ஒரு முன்மாதிரியான பதிப்பாக உள்ளது. சித்தர் பாடல் தொகுப்பு வரலாற்றில் இவரது பதிப்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இவர் சித்தர் பாடல்களில் உள்ள பிழைகளைக் கிடைத்த ஏட்டுச் சுவடிகள் கொண்டு திருத்தம் செய்கிறார். ஏட்டுச் சுவடிகள் கிடைக்காத பாடல்களை எதுவும் செய்ய முடியாது என்ற நிலைக்கு வந்து தமது சித்தர் ஞானக்கோவை நூலை உருவாக்கிப் பதிப்பிக்கிறார். இதனை இவரது நூல் முகவுரையில் சுட்டிக் காட்டுகிறார். மேலும் இதற்கு முன் வெளிவந்த எல்லாச் சித்தர் பாடல் பதிப்புகளும் பிழைகளுடனே வெளிவந்துள்ளன எனக் குறிப்பிடுகிறார்.

இவர் இதற்கு முன் பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை என்ற நூல் தலைப்பைச் சித்தர் ஞானக் கோவை என மாற்றி அமைக்கிறார். இவரது பதிப்பில் இருந்து சித்தர் பாடல் தொகுப்புகளை மே. வீ. வேணுகோபாலப் பிள்ளைக்கு முந்தைய பதிப்பு என்றும் பிந்தைய பதிப்பு என்றும் நாம் பாகுபடுத்தலாம். இவரது நூல் வருகைக்குப் பின் இவரது நூலை அடியொற்றியே பல நூல்கள் வெளிவந்தன. பதினெண் சித்தர் என்று சொல்லும் மரபை இவர் முதன்முதலில் நூல்தலைப்பாக வைப்பதில் இருந்து நீக்குகிறார்.

புதிய சித்தர் பாடல் தொகுப்புகள்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளைக்கு அடுத்து பல சித்தர் பாடல் நூல்கள் வெளிவந்தன. ஏறக்குறைய பத்து பதிப்பாசிரியர்கள் பத்து தலைப்புகளில் சித்தர் பாடல்களை வெளியிட்டுள்ளனர். இந்நூல் அனைத்தும் பழைய மரபான சித்தர் பாடல் தொகுப்பு முறைகளில் இருந்து மாறுபட்டவையாக உள்ளன. இந்நூல் களில் சித்தர் பாடல்கள் அல்லாத மந்திரங்கள், பூசை விதிகள், உபதேசங்கள், நாமாவளிகள் முதலானவை எல்லாம் நீக்கப்படுகின்றன. இதுபோல் புதிய புதிய சித்தர்களையும் உருவாக்கிச் சேர்க்கின்றனர். உதாரணமாக, 1976ஆம் ஆண்டு த. கோவேந்தன் சித்தர் பாடல்கள் என்னும் தொகுப்பில் முன்பு கூறிய பழைய சித்தர் பாடல்களோடு புதிய சித்தர்களாக தன்னையும் தன் நண்பரையும் சேர்த்துப் பதிப்பிக்கிறார். காரைச் சித்தர் என்று தன்னையும் தடங்கண் சித்தர் தங்கப்பா என்று தன் நண்பரையும் சித்தர் மரபில் சேர்க்கிறார். இப்படியான போக்குகள் இன்று அதிகரித்துள்ளன. 1976 - பூம்புகார் பிரசுரம், 1987 - மணிவாசகர் பதிப்பகம், 1995, 1998 - உமா பதிப்பகம் முதலான பதிப்பகங்கள் காரைச் சித்தரையும் தடங்கண் சித்தரையும் சித்தர்களாவே கருதி அவர்களைத் தங்களது தொகுப்புகளில்

சேர்த்து வெளியிட்டுள்ளன. சித்தர்களின் வரலாறு சமகாலத்தில் எப்படி தவறாக உருவாக்கப்படுகிறது என்பதை நமக்கு உணர்த்துகிறது. இது ஆரோக்கியமான போக்கு இல்லை.

1995ஆம் ஆண்டு எஸ். பி. ராமச்சந்திரன் 'நாற்பத்தெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய பெரியஞானக்கோவை' என்ற நூலைத் தாமரை நூலகம் மூலம் வெளியிட்டார். இதில் இவர் முன் உள்ள சித்தர் பாடல் தொகுதிகளில் இல்லாத சித்தர்களின் பெயர்களைத் தருகிறார் அவை வருமாறு,

ஊர்வசி-19, பதஞ்சலியார் ஞானம்-54, வியாக்கிரம பாதர் ஞானம்-13, திரிகோணச் சித்தர்-12, சிவஞானசூத்திரம்-92, பரத்துவாச மகாரிஷி யோகசாதனம்-23, சங்கரர், வரரிஷி, சமதக்கினி, சச்சிதானந்தர் வேதமுனிவர், துவாசமகாரிஷி, வசிஸ்டர், சத்தியநாதர் (ஞானசித்தர்), சுகப்பிரர் மஹிஷி, கூர்மானந்தர், கண்ணானந்தர், அதவனி தேவர், பராசரிஷி, ஜெயமுனிவர், அத்திரி மகாரிஷி, புசுண்டர் மகாரிஷி, வெகுளிநாதர்(மௌனசித்தர்), வால்மீகர் ஆகிய இருபத்து மூன்று சித்தர்களைத் தனது ஞானக்கோவை பதிப்பில் சேர்த்துள்ளார். இச்சித்தர்களை நாற்பத்தெண் சித்தர்கள் என்னும் மரபில் கூறுகிறார்.

ஸ்ரீரங்கம் சித்தர் என்பவர் 1990இல் சித்தர் ஞானப் பாடல்கள் என்ற நூலைத் தொகுத்தளித் துள்ளார். இத்தொகுப்பு முன் உள்ள தொகுப்பில் இருந்து முற்றிலும் மாறுபடுகிறது. உதாரணமாக, முன்பு உள்ள தொகுப்புகளில் அகஸ்தியர் ஞானம் 6, 16, 9, 1, 1, 2 என்று இருக்க, இவரின் தொகுப்பிலோ அகஸ்தியர் பூஜாவிதி 16, அகஸ்தியர் வாதசௌமியம், அகஸ்தியர் பரிபூரணம் 400, அகஸ்தியர் கௌமதி நூல், அகஸ்தியர் தண்டகபக்ஷ்னி, அகஸ்தியர் பரிபாஷை, அகஸ்தியர் கற்பக தீட்சை, அகஸ்தியர் கற்பக மூப்பு குருநூல், யோக ஞான சாஸ்திரத் திரட்டு, கருவூரார் வாதகாவியம், திருவள்ளுவர் நாதாந்த திறவுகோல் இப்படியான மாறுபட்ட பாடல்கள் கொண்டு, இதனோடு வழக்கமாக உள்ள சித்தர்களின் பாடல்களையும் சேர்க்கிறார்.

சித்தர் பாடல் தொகுப்பு நூல்களில் சித்தர்கள் மாறுபட்டு வந்தாலும் பொதுவான சில சித்தர்கள் எல்லா தொகுப்புகளிலும் இடம் பெறுகின்றனர். அவர்கள் பின்வருமாறு,

அகஸ்தியர், அகப்பேய்ச் சித்தர், அழுங்கனி, இராமதேவர், இடைக்காட்டுச் சித்தர், உரோமரிஷி, கடுவெளிச் சித்தர், கருவூரார், குதம்பை, கொங்கணர்,

சித்தர் பாடல் எண்ணிக்கையை மாற்றுவது என வேறுபாடுகள் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. யாரும் தெளிவான ஒரு முறையைப் பின்பற்றவில்லை. ஒரு பதிப்பாசிரியரே தன்னுடைய அடுத்தடுத்த பதிப்புகளில் சித்தர் பாடல்களின் எண்ணிக்கையை மாற்றிக் கொண்டு இருக்கிறார். மேலும் சிலர் புதிய புதிய சித்தர்களைத் திட்டமிட்டே உருவாக்கியும் சேர்க்கின்றனர். இது வியாபார உத்தி எனினும் இதனால் வாசகர்களிடம் குழப்பமே மிஞ்சுகிறது.

சிவவாக்கியர், சட்டைமுனி, சேஷயோகி, சுப்பிரமணியர், பீர்முகமது, திருவள்ளுவர், நந்தீஸ்வரர், பட்டினத்தார், பத்திரகிரியார், பாம்பாட்டிச் சித்தர், வால்மீகர் ஆகியோராவர்.

முடிவாக

இன்று வரும் புதிய புதிய சித்தர்பாடல் தொகுப்புகள் சீர். அசைகளைப் பிரித்து எளிதாகப் புரியும்படி பதிப்பிக்கப்படுகின்றன. மேலும் சிலர் சித்தர் பாடல்களுக்கு உரைகளையும் எழுதுகின்றனர். சித்தர் பாடல்கள் தொகுப்புகளில் சித்தர்களை மாற்றுவது, சித்தர் பாடல் எண்ணிக்கையை மாற்றுவது என வேறுபாடுகள் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. யாரும் தெளிவான ஒரு முறையைப் பின்பற்றவில்லை. ஒரு பதிப்பாசிரியரே தன்னுடைய அடுத்தடுத்த பதிப்புகளில் சித்தர் பாடல்களின் எண்ணிக்கையை மாற்றிக்கொண்டு இருக்கிறார். மேலும் சிலர் புதிய புதிய சித்தர்களைத் திட்டமிட்டே உருவாக்கியும் சேர்க்கின்றனர். இது வியாபார உத்தி எனினும் இதனால் வாசகர்களிடம் குழப்பமே மிஞ்சுகிறது.

துணைநூற்பட்டியல்

1. சித்தர் பாடல்கள் தொகுப்பு வரலாறு, த. செந்தில்குமார்,2008 பல்கலைப் பதிப்பகம், சென்னை - 24.


2. சித்தர் இலக்கியம் தொகுதி, 1, 2, 3, மீ. ப. சோமசுந்தரம், 1988, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

3. சித்தர் பாடல்கள், ஞா. மாணிக்கவாசகம், 1995, உமா பதிப்பகம், சென்னை.

■

தனிப்பாடல் திரட்டு - தொகுப்பு அரசியல்

மு. நஜ்மா


உ

கணபதிதுணை

தனிப்பாடற்றிரட்டு,

இஃது

இராமநாதபுரம்-சமஸ்தானம்

மஹாராஜராஜஸ்ரீ

பொன்னுசாமித்தேவரவர்கள்

அநுமதியினால்

தில்லையம்பூர்ச்

சந்திரசேகரகவிராஜபண்டிதர்

காஞ்சிபுரம்-வித்வான்

கச்சபாலயஐயர்

இவர்களாற் பரிசோதிக்கப்பட்ட

பாடல்களும்,

இப்போது நூதனமாகச்சேர்த்த

பாடல்களும்,

வண்ணாரப்பேட்டை

ஆறுமுகமுதலியாரால்

பாரகோடிப்பிரகாச வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விபவ௵-தைமீ.

தமிழில் இதுவரை எழுந்துள்ள இலக்கிய வரலாற்று நூல்கள் இலக்கியங்களைப் பற்றிய சிறுகுறிப்புகளைப் பட்டியலிடுவனவாகவே உள்ளன. அடிப்படைத் தகவல்களை மட்டும் கொண்டுள்ள இப்பட்டியல் இலக்கியத்தின் வரலாற்றைப் புரிந்துகொள்ள பெரிதாக உதவுவதில்லை. இலக்கிய உருவாக்கம் என்பது இலக்கியத்திற்குள்ளாக மட்டுமன்றி அது மூல ஆசிரியனிடமிருந்து மாணவனுக்கு / படைப்பாளனிடமிருந்து வாசகனுக்கு வந்து சேர்வதற்கிடையில் நிகழும் அனைத்துப் பணிகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. அவ்வாறு நிகழும் செயல்பாடுகளில் ஒன்று 'தொகுப்பு'. இத்தொகுப்பிற்கான அரசியல் இலக்கிய வரலாற்றின் சில பகுதிகளை விளக்குவதாக உள்ளது. தமிழ் இலக்கியங்களை வடிவம், உள்ளடக்கம், காலம் என்று பல்வேறு அடிப்படைகளைக் கொண்டு தொகுத்துள்ளனர்.

காலந்தோறும் வழங்கி வந்த தனிப்பாடல்களின் தொகுப்பு 'தனிப்பாடல் திரட்டு' எனப்பட்டது. தனிப்பாடல்களின் தொகுப்பு அரசியல் தனிப்பாடல் குறித்த பல்வேறு பார்வைகளை விளக்குவதாக உள்ளது.

தனிப்பாடல் என்பது......

தனிப்பாடல் என்ற சொல்லே அதன் பொருளை விளக்குவதாக உள்ளது. சூழலுக்கு ஏற்ப பாடப்பட்ட உதிரிப்பாடல்கள் தம்முள் பொருள் தொடர்ச்சியற்றுக் காணப்படுமாயின் அவற்றைத் தனிப்பாடல்கள் என்பர். தனிப்பாடல்களைத் தொகுத்தவர்கள் "புலவர்கள் அவ்வவ்வமயங்களிற் பாடிய பாடல்கள்'' என்று இவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

புலவர்கள் தாம் செல்லும் இடங்களில் தனக்கு நேரும் அனுபவங்களையும் தமக்கு வழங்கப்படும் சூழல்களையும் பாடல்களாகப் பாடியுள்ளனர்.

இவற்றைப் புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய உதவும் ஆதாரமாகக் காண்கின்றனர். தனிப்பாடல் திரட்டுக்கு முன்னோடியாகக் கருதப்படும் 'தமிழ் நாவலர் சரிதை' இதனை நோக்கமாகக் கொண்டு தொகுக்கப்பட்டதாகும். இதனைத் தொகுத்தவர் யார் என்பதை அறிய முடியவில்லை. இது பதினாறாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்று ச. வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகின்றார். இதனுள் 50க்கும் மேற்பட்ட புலவர்களின் 270 பாடல்கள் உள்ளன. இவற்றின் பெரும்பான்மைப் பகுதி தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றன. தனிப்பாடல் திரட்டைத் தொடர்ந்து தனிச்செய்யுட் சிந்தாமணி, பெருந்தொகை என்று காலந்தோறும் தனிப்பாடல்கள் தொகுக்கப்பட்டு வந்தன.

தொகுப்புப்பணி:

தனிப்பாடல் திரட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னுசாமித்தேவர் இத்தொகுப்பு வெளிவருவதற்கு மூல காரணமாக இருந்தவர். இவர் சேதுபதி இராமசாமித் தேவர் அவையில் அமைச்சராக விளங்கினார். இவரும் இவருடைய இளவல் முத்துராமலிங்க சேதுபதியும் தமிழில் பேரார்வம் கொண்டு பல தொகுப்புப் பணியும் பதிப்புப்பணியும் செய்தனர் பொன்னுசாமித் தேவர், தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதரைக் கொண்டு தனிப்பாடல்களைத் தொகுப்பித்தார். சந்திரசேகர கவிராஜ பண்டிதர் சித்தூர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். கவிராஜ பண்டிதரால் தொகுக் கப்பட்ட தனிப்பாடல் திரட்டு திருக்காட்டுப்பள்ளி இராமசாமி முதலியார் என்பவரால் திரட்டிக் கொடுக்கப்பட்டது. இவர் மீது பாடப்பட்ட பாடல் ஒன்றில் இவர் இப்பாடல்களை ஐந்து வருடங்களாகத் தேடி எழுதிக் கொடுத்ததாகப் பாடப்பட்டுள்ளது. இவை ஏற்கெனவே உள்ள தொகுப்புகளிலிருந்தும் வழக்கத்திலிருந்த பாடல்களிலிருந்தும் இலக்கியங் களிலிருந்தும் தொகுக்கப்பட்டுள்ளன.

இப்பாடல்களைக் காஞ்சிபுரம் வித்வான் கச்சபால ஐயர் பரிசோதித்துள்ளார். இத்திரட்டு 1862ஆம் ஆண்டு கலாநிதி அச்சுக்கூடத்தின்வழி முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. எனினும் மூலப்பதிப்புகளில் தொகுப்பு சார்ந்து எந்தவித மாறுபாடுகளும் இல்லை. தனிப்பாடல்களில் இடம்பெற்றுள்ள பாடல்கள் 10-12ஆம் நூற்றாண்டு ஔவை, கம்பர், ஒட்டக்கூத்தர் பாடியவை. பெரும்பான்மையான பாடல்கள் 15, 16, 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. பலவித்வான்கள் பாடிய பாடல்கள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது ஆய்வுக்குரியது. திரட்டின் பெரும்பகுதி மேற்கூறப்பட்ட மூன்று நூற்றாண்டுப் பாடல்களாக உள்ளன. தனிப்பாடல் திரட்டைத் தொடர்ந்து தொகுக்கப்பட்ட பாடல்களில் பிற்காலப் புலவர் பாடல்களின் சேர்க்கை மிகுந்து காணப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டன. ஒரு புலவருடைய பல்வேறு தனிப்பாடல்களைத் தொகுத்து நூலாக்கியுள்ளனர் அல்லது ஒரு புலவரைப் பற்றி பலரும் பாடிய தனிப்பாடல்களைத் தொகுத்துள்ளனர். வ.உ.சிதம்பரம் பிள்ளை பற்றிய பாடற்றிரட்டு ஔவை தனிப்பாடல்கள், காளமேகம் தனிப்பாடல்கள் என்று பல திரட்டுகள் தொகுக்கப்பட்டன.

தனிப்பாடல் அமைப்பு:

தனிப்பாடல் திரட்டில் உள்ள பாடல்கள் புலவர்களை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் புலவர் பெயர்கள் அகரவரிசையாகவோ, காலவாரியாகவோ வரிசைப்படுத்தப்படவில்லை. இவை எந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாக வரையறுக்க முடியவில்லை.

மேலும் தனிப்பாடல்களில் தொகுக்கப்பட்ட அனைத்துப் பாடல்களும் பொருள் தொடர்ச்சியற்ற தனிப்பாடல்கள் அல்ல. ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஔவை, கம்பர் முதலிய சில புலவர்கள் தமக்குள் நிகழ்த்திக் கொள்ளும் விவாதங்களும் பாடல் களாகப் பாடப்பட்டுள்ளன. சில இடங்களில்

மு. நஜ்மா: சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் 'சிந்துவெளி நாகரிகம்' குறித்து முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.



இப்பாடல்கள் விரவிய நிலையில் உள்ளன. தமிழ் நாவலர் சரிதையில் இது போன்ற விவாதங்கள் அடுத்தடுத்த பாடல்களாக அன்றி ஒவ்வொரு புலவர்பெயரின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. தனிப்பாடல் திரட்டில் ஒட்டக்கூத்தர் பாடலின் கீழ் புகழேந்தி பாடல்களும் வேளாளன், கருமான், அம்பட்டன், குயவன் முதலிய பலரும் பாடிய பாடல்களும் விரவிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஒரே சபையில் நிகழ்ந்தவை. இவ்வாறு விவாதநிலையில் பாடப்பட்டவை ஒரு புலவர் பாடலின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

தனிப்பாடல் திரட்டில் உள்ள பாடல்கள் புலவர்களை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் புலவர் பெயர்கள் அகரவரிசையாகவோ, காலவாரியாகவோ வரிசைப்படுத்தப் படவில்லை. இவை எந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாக வரையறுக்க முடியவில்லை.

தனிப்பாடல் திரட்டின் ஆரம்பகால மூலப்பதிப்புகள் கீழ்க்காணும் வரிசையில் தொகுக்கப் பட்டுள்ளன. 1. கவிகாளமேகம் 2. அதிமதுரகவிராயர் 3. ஔவையார் 4. ஔவை முதலிய எழுவர் (ஔவை, உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவநாயனார்) 5. கம்பர் 6. ஒட்டக்கூத்தர் 7. புகழேந்தி 8. கவி வீரராகவ முதலியார் 9. படிக்காசுத் தம்பிரான் 10. சவ்வாது புலவர் 11. காளிமுத்து 12. பாண்டியன் மீது பாடியவை 13. ஒப்பிலாமணிப் புலவர் 14. பட்டினத்து சுவாமிகள் 15. சிவப்பிரகாச சுவாமிகள் 16. வேலைய சுவாமிகள் 17. சத்திமுத்தப்புலவர் 18. வரதுங்க பாண்டியன், அவர் மனைவி 19. பலபட்டடைச் சொக்கநாதர் 20. பொய்யாமொழிப் புலவர் 21. சொக்கநாதப் புலவர் 22. அம்மானைப் பாடல்கள் 23. கச்சபால ஐயர் 24. நமச்சிவாய புலவர் 25. சுப்ரமணியப் புலவர் 26. நையாண்டிப் புலவர் 27. இராமச்சந்திர கவிராயர் 28. எல்லீசு 29. இராமகவிராயர் 30. மதுரகவிராயர் 31. பலவித்வான் பாடல்கள் 32. நூதனமாகச் சேர்த்த பலவித்வான் பாடல்கள் 33. சுடிகை முத்துப் புலவர் 34. நாகூர் முத்துப் புலவர் 35. பொன்னுசாமித் தேவர் மீது கச்சபால ஐயர் பாடியவை.

இவற்றில் பலவித்வான் பாடல்களில் பல புலவர்களுடைய பெயர் அறியப்படவில்லை. 'தனிப்பாடல் திரட்டு - ஓர் ஆய்வு' (2003) என்னும் நூலில் கால வரிசைப்படி புலவர் பெயர், பாடல் எண்ணிக்கை முதலியன கொடுக்கப்பட்டுள்ளன. பலவித்வான் பாடல்களில் பெயர் அறியப்பட்ட வரையிலும் உள்ள பட்டியல் கொடுக்கப் பட்டுள்ளது.

தனிப்பாடல்களுக்குரிய உரைகள் வித்யா விநோதினி இதழாசிரியர்களால் எழுதப்பட்டு 1989 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது பற்றிய குறிப்பு ஜான் மர்டாக் பதிப்பித்த தமிழ்நூல் பட்டியலில் கிடைப்பதாகத் தமிழன்பன் குறிப்பிடு கிறார் (2003, பக்: 77). இதற்கு முன்னதாகவே உரை எழுதப்பட்டிருக்கலாம். க. இராமசாமி நாயுடு தனிப்பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார். இது 1908 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. உரைகளைப் பதிப்பிக்கும்போது திரட்டை இரண்டாகப் பிரித்துள்ளனர். இவற்றில் பலவித்வான் பாடல்களையும் மிகவும் பிற்காலப் புலவர் பாடல்களையும் இரண்டாம் பாகமாக வெளியிட்டனர். உரைகள் கண்ணழித்துப் பொருள் கூறும் முறையிலும் சிறு குறிப்புகளாகவும் விளக்கவுரைகளாகவும் எழுதப்பட்டுள்ளன.

எவற்றைப் பாடியுள்ளனர்?

புலவர்கள் நேரடி அனுபவங்களையும் கற்பனைகளையும் இயல்பாகவும் மிகுந்த புனைந்துரைகளோடும் பாடியுள்ளனர். இவற்றை

1. சொந்த அனுபவத்தைப் பாடியவை
2. சொல்லிப் பாடியவை

என்று இரண்டாக வகைப்படுத்துகின்றார் தமிழன்பன். சொந்த அனுபவங்களில் அன்றாட நடவடிக்கைகளையும் தனக்கு ஏற்படும் இன்ப துன்பங்களையும் பாடியுள்ளனர். சொல்லிப் பாடியவைகளில் வள்ளல்கள், மன்னர்கள் / அரச அதிகாரங்களில் இருப்பவர்கள், யாரிடத்துப் பொருள் வேண்டிச் செல்கின்றனரோ அவர்கள் கூறுகின்ற பொருண்மையில் / வடிவத்தில் / முறைமையில் பாடியுள்ளனர். தமக்கு வேண்டிய பொருள்கொடுப்பவர்களைப் புகழ்வதோடு பொருள் கொடாதவர்களை இகழ்ந்தும் பாடியுள்ளனர். பெரும்பாலான புகழ்ச்சிப் பாடல்கள் காமச்சுவை மிக்கதாக உள்ளன.

தனிப்பாடல்களில் உள்ள ஒவ்வொரு பாடலும் சிறப்பானவை என்பதைவிட சுவாரஸ்யமானவையாக உள்ளன. வடிவத்திலும் பொருண்மையிலும் பாடப்பட்ட முறைமையிலும் அவற்றை உணர முடியும். காளமேகப் புலவர் பாடல்களில் வசைப் பாடல்களும் சிலேடைகளும் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. ஒரு பாடலில் எண்களை மட்டும்

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு வேழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன் றுபன்னி
ரண்டுபதின் மூன்றுபதி நான்குபதி னைந்துபதி
னாறு பதினேழ் பதினெட்டு

என்று வரிசைபடுத்திப் பாடியுள்ளார். வேறு பாடலில் 12 இராசிகளை வரிசைப்படுத்தியுள்ளார். சொல்லிப்பாடிய பாடல்களில் காளமேகம் பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டுள்ளனர். திரட்டில் விடுகதைகள், கேள்வி பதிலாக அமைந்த விவாதங்கள், ஒருபொருட் பன்மொழிகளைப் பயன்படுத்தி அமைந்த பாடல்கள், சொல் விளையாட்டுக்கள், எழுத்துக்களை முன்பின்னாகப் பொருத்திப் பொருள்கொள்ளுதல் என்று பலவகைப்பட்ட பாடல்கள் உள்ளன. தடியின் சிறப்பு, கொடையின் சிறப்பு, செருப்பின் சிறப்பு என்று பல பொருட்சிறப்புகள் பாடப்பட்டுள்ளன. பெண் உடல் வருணனை, உயர்வாகவும் சில இடங்களில் திட்டுவதற்காக இழிவாகவும் பாடப் பட்டுள்ளன. தேவதாசிப் பெண்களைப் பற்றிய பல பாடல்கள் உள்ளன. இவை அவர்களைப் புகழ்வதாகவும் இகழ்வதாகவும் உள்ளன. இவ்வாறு இன்னது சிறந்தது இன்னது தாழ்ந்தது என்ற பாகுபாடின்றி எல்லாவற்றையும் சேர்த்துத் தொகுத்துள்ளனர்.

தனிப்பாடல் உரைகள்

தனிப்பாடல் திரட்டின் மூலத்தைப் பதிப்பிக்கும் போது பாடல்களுடைய சூழல் எதுவும் விரிவாக விளக்கப்படவில்லை. சுவடிகளில் உள்ள அமைப்பின்படி மூலம் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இவற்றுக்கு உரை எழுதும்போது சூழல் குறிப்பிடவேண்டிய தேவை ஏற்படுகிறது. மூலப்பதிப்புகளில் சில பாடல்களுக்கான சூழலை ஒரு வரியில் தலைப்பாகக் கொடுத்துள்ளனர். இந்தச் 'சூழல்' பாடல் திரட்டிய இடத்தினின்று பெறப்பட்டதா? அல்லது தொகுத்தவர்கள் சேர்த்துள்ளனரா? என்பது தெரியவில்லை. இந்தத் தலைப்பைக் கொண்டும் பாடல் பொருண்மையைக் கொண்டும் சூழலை விரித்துரைக்கின்றனர் உரையாசிரியர்கள். இவ்வுரைகள் சிலசமயம் பாடல் பொருண்மை தாண்டி வேறு பொருளைக் கொடுக்கின்றன. உரைகளில் மட்டுமின்றி பாடல் தலைப்பிற்கும் பாடல் பொருண்மைக்கும் கூட தொடர்பு இல்லாமல் உள்ளது. எடுத்துக்காட்டாக,

நடக்கில் அன்னமு மாம்நிற்கில் வஞ்சியாம்;
கிடக்கில் ஓவியப் பாவைகி டந்ததாம்
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளாள்என் மனத்துஉறை வல்லியே

என்ற பாடல் கம்பர் பாடியதாக நாவலர் சரிதையில் தொகுக்கப்பட்டுள்ளது. பாடலில், திருவொற்றியூர் கோயில் மடத்து தேவரடியாரைக் கண்ணுற்று அவள்வீட்டில் இரவு தங்கி மறுநாள் அவள் நலம் பாராட்டிப் பாடிய பாடல் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது (1972, பக்: 80-81) இதே பாடலைச் சுப்ரதீபக்கவிராயர் பாடியுள்ள தாகத் தனிப்பாடல் திரட்டு உரைப்பதிப்பு குறிப்பிடுகின்றது. மேலும் பாடலில் குறிப்பிடப் பட்டுள்ள பெண் சதுரானன பண்டிதன் மனைவி என்றும் அவள் கவிராயருக்குச் செய்த உதவிக்கு நன்றியாக அவர் பாடிய பாடல் என்றும் உரை விளக்கம் கூறுகின்றது. (1998, பக்: 13) பாடல் தலைப்பு கூறும் இவ்விளக்கம் நாவலர் சரிதை விளக்கத்தினின்று வேறுபடுகிறது. இப்பாடல் யாரால் பாடப்பட்டது என்பது ஒருபுறமிருக்க பாடலுக்கும் பாடல் தலைப்பிற்கும் தொடர்பு இல்லாமல் உள்ளது. எனவே பாடல் தலைப்பு ஒருவராலும் உரை ஒருவராலும் எழுதப்பட்டுள்ளது. இது போன்ற பல சிக்கல்கள் உரைகளில் உள்ளன.

தனிப்பாடல்கள் – புலவர்களின் வாழ்க்கை வரலாறு

தனிப்பாடல்கள் புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய உதவும் ஆதாரம். எனில், எல்லாப் பாடல்களையும் புலவர்களுடைய நேரடி வாழ்க்கையோடு தொடர்புபடுத்த முடியுமா என்பது கேள்விக்குறி.

மயக்கிணை யான விழிக்கணை கொண்டு
மருட்டி இருட்டறையில்
பொய்க்கள வாகப் புகுந்ததும் உண்டு:
புணர்ந்ததும் இல்லையடா;
கயக்கிசை வான குறுந்தடி கொண்டு
கழுத்தைநெ ரிக்கவரும்
கயக்கள வா, என் தங்கைய டா,நின்
தாரமடா, விடடா.

என்னும் பாடல் கம்பர் பாடியது. இதில் கம்பரால் பாடல் பெற விரும்பிய கைக்கோளன் மனைவி தன் புருஷனை ஒளித்து வைத்து கம்பரைத் தன்னிடத்து வரும்படி செய்தாள். கம்பர் வீட்டில் வருதலும் அக்கைக்கோளன் குறுந்தடி கொண்டு கம்பரை அடிக்க வரும்போது பாடிய பாடல் இது என்று குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. இது போன்ற களவுப் புணர்ச்சி குறித்த பல பாடல்கள் உள்ளன. இவற்றைக் கம்பர் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் காணமுடியுமா? நாவலர் சரிதையில் இதுபோன்று வரும் பாடல் களைக் குறித்து இரா. இராகவையங்கார் குறிப்பிடும்

போது 'கம்பருடைய கல்விப் பெருமையும் புலமையும் நோக்க இதுவும் இதுபோல் காணப்படும் கதைகளும் இவற்றைக் குறிக்கும் பாட்டுக்களும் உண்மையென்று கொள்ளும் தகுதியுடையவை யென்று எண்ண முடியவில்லை; தூங்கினவன் துடையில் திரித்த வரையில் கயிறு என்பது போலப் புலவர்கள் வரலாறு இல்லாதது கொண்டு இடைக்காலத்தார் திரித்தப் பொய்யே புனைந்த கதைகளும் பாட்டுக்களுமாம் இவையெனக் கொண்டொழிவது நலம்' (1972, பக்: 81) என்கின்றார். எனவே இதுபோன்ற பாடல்களை வாழ்க்கைச் சான்றுகளாகக் கொள்வதா புனைந்துரைகளாகக் கொள்வதா என்ற ஐயம் எழுகின்றது. இவ்வாறு ஐயுறத்தக்க பெரும்பாலான பாடல்கள் மூலப்பதிப் புகளில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடல்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டவை? தொகுத்தோர் எழுதிச் சேர்த்தவையா? அல்லது வாய்மொழியாகப் புழக்கத்தில் இருந்த பாடல்களா என்பது ஆய்விற்குரியது.

புலவர்களைப் பற்றிய தொன்மங்களைப் புனைவதில் தனிப்பாடலுக்குப் பெரும்பங்கு உள்ளது. பாடல் வரிசை முறைகள் அவை பாடப்பட்ட சூழல்களும் பொருந்தி வரும்போது கதை புனையப்படுகின்றது. இறையனார் பாடலான 'கொங்குதேர் வாழ்க்கை' பற்றிய கதையும் இவ்வாறு புனையப்பட்டதே. திருவள்ளுவர் பற்றிய கதைகளுள் ஒன்று அவர் ஆதிக்கும் பகவனுக்கும் மகனாகப் பிறந்தவர். இவருடன் ஆறு பேர் பிறந்தனர். அவர்கள் ஔவை, உப்பை, உறுவை, அதிகமான், கபிலர், வள்ளி ஆவர். இக்கதை இத்தனிப்பாடல்களிலிருந்து உருப்பெற்றது. தனிப்பாடல் தொகுப்பு இவ்வாறு பல கதைகள் உருவாகக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

தனிப்பாடல்கள் சங்கப்பாடல்களின் நீட்சி

தொகுப்பு அடிப்படையில் உருவான 'தனிப்பாடல் திரட்டினை' சங்கத் தொகை நூல்களின் தொடர்ச்சியாகக் காணமுடியுமா என்பது அவசியம். பல புலவர்கள் அவ்வவ்வ மயங்களிற் பாடியவை என்று தனிப்பாடலுக்குக் கூறும் வரையறை சங்கப் பாடல்களுக்கும் பொருந்தும். எனினும் தொகை நூல்களின் தொகுப்பு தனிப்பாடல் திரட்டினின்று அடிப்படையிலேயே வேறுபட்டவை. தொகை நூல்கள் அகம் / புறம், ஐந்திணை முதலியவற்றைக் கொண்டு தொகை செய்யப்பட்டவை. இவற்றைப் பாடிய புலவர்களின் வாழ்க்கையோடு முற்று முழுதாக இணைத்துக் காணமுடியாது. சங்கப் பாடல்கள் வாய்மொழி வழக்காற்றுத் தன்மை கொண்டவை. தனிப்பாடல்களில் இத்தகைய பொதுத் தன்மைகளைக் காணமுடியாது. தனிப்பாடல்களில் உள்ள பலவித்வான் பாடல் பகுதி அகப்பாடல்களைக் கொண்டவை. தனிப்பாடல் சுட்டும் அகம் சங்கப்பாடல்களினின்று வேறுபட்டவை. தனிப்பாடலில் உள்ள அகப் பாடல்கள் காம மிகுதி காரணமாக வெளிப்படும் புலம்பல்களாக உள்ளன. உடல் உறுப்புக்களின் வருணனைகளும் தலைவியின் நோய்தீர்க்க வரும்படி தாயே புலம்பும் வகையில் கூற்றுகளும் அவையல்கிளவிகளின் பயன்பாடும் தகாப்புணர்ச்சி களும் சங்கப்பாடல்களின்று தனிப்பாடல்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

தமிழ் இலக்கியங்களில் சங்ககாலம் தொடங்கி காலம்தோறும் அகப்பாடல்கள் பல்வேறு வடிவத்திலும் பொருண்மையிலும் பாடப் பட்டுள்ளன. ஒவ்வொரு காலகட்டத்திலும் அகத்தினை வெளிப்படுத்தும் தன்மை மாறுபடு கின்றது. 'அகம்' என்பது புறம் பற்றிய செய்திகளை (மன்னர் / வள்ளல்களின் புகழை) விளக்குவதற்கான உத்தியாகக் கையாளப் பட்டுள்ளது. அகப்பாடல் களில் இடம்பெறும் புறச்செய்திகள் இவற்றைப் புலப்படுத்துகின்றன. தனிப்பாடல் அகமும் இதே உத்தியில் பாடப்பட்டவை.

சங்க காலத்தில் பாடப்பட்ட அகம், சங்கம் மருவிய காலத்தில் அறம் சார்ந்தும் (இல்-அறம்) பக்தி காலத்தில் புனிதத் தன்மை கற்பிக்கப்பட்டும் (நாயக - நாயகி பாவம்) காப்பிய காலத்தில் மிகைத் தன்மையோடும் சிற்றிலக்கிய காலத்தில் புறச்சாயலிலும் (பெயர்சுட்டி) மிக வெளிப்படை யாகவும் பாடப்பட்டன. இவற்றின் நீட்சியாகத் தனிப்பாடல்கள் அமைந்துள்ளன. அரசியல் சூழலுக்கு ஏற்ப இலக்கியங்கள் படைக்கப்படும் என்பது இயல்பு. தனிப்பாடல்கள் மிகுதியாகப் பாடப்பட்ட காலம் நாயக்கர் காலமாகும். பேரரசுகள் வீழ்ச்சி அடைந்து சிற்றரசுகளும் பாளையக்காரர்களும் அதிகாரம் பெற்ற காலம் அது. இலக்கியங்களுக்கு இருந்த பேராதரவு இக்காலகட்டத்தில் தளர்ச்சி அடைந்தது. இச்சூழல் தனிப்பாடல் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைந்தது.

தனிப்பாடல்கள் இலக்கிய வரலாற்றில் அதிக கவனம் பெறவில்லை

சங்கப்பாடல்களைத் தமிழ்ப் பண்பாட்டிற்கான அடையாளமாகக் கூறும் அதே சமயம் இதே மதிப்பீட்டைப் பிற்காலத் தனிப்பாடல்களுக்குக் கொடுப்பதில்லை. மிகுந்த உடல் வருணிப்பு, உணர்ச்சிப் பெருக்கு, தகாப்புணர்ச்சி போன்ற


பாலுணர்வுப் பாடல்களின் மிகுதியே இதற்குக் காரணம் என்று கூறமுடியுமா? தனிப்பாடல் போன்ற படைப்புகள் திடீரென உருவாகி வருவதில்லை. அவை காலந்தோறும் வழக்கிலிருந்த வைகளே. 'மிக்க காமத்து மிடலொடு தொகைஇ' (தொல். அகத். 54) என்பது அகத்திணைகளில் ஒன்றான பெருந்திணைக்கு உரியது. இதனை விளக்கும் இளம்பூரணர், ''வற்புறுத்துந் துணையின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும், இழிந்திரந்து கூறுதலும், இடையூறு கிளத்தலும் அஞ்சிக் கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறன்வயிற் சேறலும் இன்னோரன்ன ஆண்பாற் கிளவியும், முன்னுறச் செப்பலும், பின்னிலை முயல்தலும் கணவனுள் வழி இரவு தலைச் சேறலும், பருவம் மயங்கலும். இன்னோரன்ன பெண்பாற் கிளவியும் குற்றிசையும், குறுங்கலியும் இன்னோரன்ன பிறவுமாகி ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் கொள்ளப்படும்" (1956, பக்; 69) என்று இத்திணைக்குரிய துறையை விளக்குகின்றார்.ஆனால் மேற்கூறப்பட்ட திணை அமைந்த பாடல்கள் சங்க இலக்கியங்களில் மிகவும் சொற்பமாகவே காணப்படுகின்றன. இது போன்ற பாடல்கள் சங்க காலத்து பாடப்பட வில்லையா? எனின் பாடப்பட்டிருக்கலாம். ஆனால் அவை தொகுப்பில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கலாம். தொகைநூல்கள் 'அன்பின் ஐந்திணை' பாடல்களையே மிகுதியாகக் கொண்டுள்ளன. ஆனால் தனிப்பாடல்கள் பெரும் பகுதி கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களைக் கொண்டவை. இத்தொகுப்பு முறை சங்கப் பாடல்களையும் அவை வழங்கப்பட்ட காலத்தையும் மதிப்பு மிக்கதாகக் காட்டுகின்றன. ஆனால், இவை இரண்டுமே தமிழ் இலக்கியங்களின் அகமரபினை விளக்கக் கூடியவை. இத்தகைய மதிப்பீடு தொகுப்பு மரபின் வழியாகவே பெறப்படுகின்றது. எனவே, ஒரு சமூகத்திற்குரிய மதிப்பீட்டைத் தீர்மானிப்பதில் தொகுப்பு மரபு பெரும்பங்காற்றுகிறது.

> தனிப்பாடலில் உள்ள அகப்பாடல்கள் காம மிகுதி காரணமாக வெளிப்படும் புலம்பல்களாக உள்ளன. உடல் உறுப்புக்களின் வருணனைகளும் தலைவியின் நோய்தீர்க்க வரும்படி தாயே புலம்பும் வகையில் கூற்றுகளும் அவையல்கிளவிகளின் பயன்பாடும் தகாப்புணர்ச்சிகளும் சங்கப்பாடல்களின்று தனிப்பாடல்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

துணைநூற்பட்டியல்

1. தனிப்பாடற்றிரட்டு, பெரியதம்பி முதலியார் (பதிப்பு), கலாநிதி அச்சுக்கூடம், 1862.
2. தமிழ் நாவலர் சரிதை ஔவை. சு. துரைசாமிபிள்ளை (உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1972.
3. தனிப்பாடற்றிரட்டு, க. இராமசாமி நாயுடு (உரை) இரண்டு பாகம். வித்யா ரத்நாகர அச்சகம் 1908.
4. தனிப்பாடல் திரட்டு, அ. மாணிக்கம், பூம்புகார் பதிப்பகம், 1996 நான்காம் பதிப்பு.
5. தனிப்பாடல் திரட்டு, இரண்டாம் பாகம், அ. மாணிக்கம், பூம்புகார் பதிப்பகம், 2003.
6. தனிப்பாடல் திரட்டு - ஓர் ஆய்வு - ஈரோடு தமிழன்பன், பூம்புகார் பதிப்பகம், 2003.
7. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் (உரை) சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1956.

■



சி. இராமலிங்கம் பாடல்கள் வள்ளலார் தொகுப்பான வரலாறு

இரா. வெங்கடேசன்

சென்னை முதல் ஈழமீறாகவுள்ள வித்துவான்களுள் சிறந்த நாவலருக்கும் தொண்ட மண்டல வித்துவான்களுக்கும் இடையிலான சைவ சமய கருத்துமோதலும் சி. இராமலிங்கம் பாடல் தொகுப்பும்

நான் முதலில் சைவசமயத்தில் லக்ஷீயம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லக்ஷீயம் இப்போது எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லக்ஷீயம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருக்கின்ற ஸ்தோத்திரங்களே போதும். அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது. இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலை மேலேற்றிருக்கிறார்.

(2007:100)

– சி. இராமலிங்கம்

பிற சமயத் தாக்குதல்களிலிருந்து குறிப்பாகக் கிறித்துவத்தின் மோதல்களிலிருந்து உயர்சாதி வர்க்கம் (வேளாளச் சமூகம்) சைவ சமயத்தைப் பழைய பெருமைக்கு மீட்டெடுத்துக் கட்டமைக்கும் போக்குகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த சூழலில் தான் வள்ளலார் என்னும் சி. இராமலிங்கம் பாடல் தொகுப்பு முயற்சியும் தீவிரமாக நடைபெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சைவத்தின் மீதான கிறித்துவத்தின் மோதல்களை எதிர்கொள்ள, தத்துவார்த்தமான மோதல்களை உயர்சாதி வேளாளர்கள் ஒருபுறம் முன்னெடுத்தனர். மறுபுறத்தில் சாதி சமய ஆசாரங்களைக் கண்டித்துச் சமயம் கடந்த ஒரு தேடலை நோக்கி இராமலிங்கர் சென்று கொண்டிருந்தார். இயல்பாகவே இராமலிங்கரின் ‘சமயம் கடந்த தேடல்' என்பது சமயத்துக்குள் வினைபுரிந்த முரண்களைக் கண்டித்துக் களைவதாக அமைந்தது. குறிப்பாக அது சைவ சமயத்தின் பாற்பட்டதாக மட்டும் புரிந்துகொள்ளப் பட்டது. அன்று சைவ சமயத்தின் வீச்சு விரிந்த அளவில் இருந்தது இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

சாதிய, சமயச் சார்பான சமூக அமைப்பினைப் பாதுகாக்கும் நோக்கில் கிறித்துவத்தின் மோதல்களை எதிர்கொண்டு உயர்சாதி இந்துக்கள் தீவிரமாகச் செயல்பட்ட நேரத்தில் சமயம் கடந்த தேடலிலான இராமலிங்கரின் பாடல்கள் இயல்பாக அவர்களுக்கு எதிராக அமைந்தது; அது குறிப்பாகத் தீவிர சைவப் பற்றாளர்களை அவருக்கு எதிர்முகமாகச் செயல்பட வைத்தது. இதன் எதிர்நிலையில் புதிதாக முகிழ்த்து வந்து சைவத்துக்குள் தங்கள் அடையாளத்தைத் தேடிய இடைநிலைச் சாதியினர் ஒருவகையில் அவரின் பாடல்களை ஆதரித்துக் கொண்டாடினர். இதன் விளைவு இராமலிங்கரின் பாடல் தொகுப்பில் எதிர்ப்பு x ஆதரவு என்னும் தன்மைகள் தீவிரமாகப் பிரதிபலித்தன. இந்தப் பின்புலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த அவரின் பாடல் தொகுப்பின் செயல்பாடுகள் தமிழ்ச் சமய, சமூக வரலாற்றில் மிக முக்கியக் கவனத்தைப் பெற்றன. வரலாறு இன்றும் அந்தச் சம்பவத்தை வியப்புடனேயே பதிவுசெய்து வைத்துள்ளது. மிக நீண்ட தமிழ்த் தொகுப்பு வரலாற்றில் சமூக அசைவிலான போராட்டப் பின்புலத்தில் இராமலிங்கம் எனும் தனியொருவரின் பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கும் என்பது வரலாற்று உண்மை. இப்படியான புரிதல் பின்புலத்தோடு கீழ்க்காணும் சில சம்பவங்களைத் தொகுத்துப் பார்ப்பதன்வழி இராமலிங்கர் பாடல்களின் தொகுப்புப் பின்புலத்தை முழுமையாகப் பதிவுசெய்யமுடியும்.

- கிறித்துவத்தின் மோதல்களுக்கு எதிராக உயர்சாதியினர் முன்னெடுத்த தத்துவச் சண்டையின்வழி கிறித்துவ x சைவ எதிர்ப்புப் பிரச்சாரங்கள் உருவாயின. இவ்விரண்டிற்கும் எதிர்நிலையில் இராமலிங்கரின் பாடல்கள் வினையாற்றிய தன்மைகள், அவை தொகுப்பு நிலையில் செயலாற்றிய பங்களிப்பு ஆகியன பற்றிய விவாதம்.

- சைவத்துக்குள் நிலவிய முரண்கள் இராமலிங்கரின் பாடல்களின் தொகுப்பிற்குள் வினைபுரிந்த தன்மைகள் முக்கியமானதாகும். இவற்றை மிக விரிந்த அளவில் விவாதிப்பது.

- ஈழத்துத் தமிழ்ப் புலமை மரபிற்கும் தமிழகத்துப் புலமை மரபிற்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடுகள் இராமலிங்கரின் பாடல் தொகுப்பு முயற்சியில் ஏற்படுத்திய தாக்கங்கள்.

- மேற்குறிப்பிட்ட கருத்து வேறுபாடுகளை மேற்சாதியினருக்கும் (குறிப்பாக சிவாச்சாரியர், சைவ வேளாளர் (சற்சூத்திரர்)) இடைநிலைச் சாதியினருக்குமான (சைவத்துக்குள் தமது அடையாளத்தைத் தேடிய கருணீகர், சோழிய வேளாளர், செங்குந்தர், துளுவ வேளாளர், அகமுடையார், நாயகர், செட்டியார் முதலானோர்) முரண்களாகப் புரிந்துகொள்ளவும் வாய்ப்புள்ளது. இந்த முரண்களின்வழி இராமலிங்கர் பாடல் தொகுப்பிற்குள் வினைபுரிந்த தன்மைகள் என்ன? சமயம் கடந்த இராமலிங்கரின் பாடல்களை இந்த



இரா. வெங்கடேசன்: தமிழ்ப்பதிப்பு வரலாறு குறித்தான தகவல்களைத் திரட்டுவதில் ஈடுபாடு கொண்டவர். தற்போது இவர் செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தில் செம்பதிப்புத் திட்டத்தில் பணியாற்றி வருகிறார். இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் அரிமா நோக்கு முதலான இதழ்களில் வெளியாகி உள்ளன. தொல்காப்பிய நன்னூல் – இ. சாமுவேல்பிள்ளை என்ற நூலின் பதிப்பாசிரியர்களுள் ஒருவர்.

இரு எதிர்நிலைப்பட்ட சைவ உலகம் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டன? என்ற விவாதங்களை முன்னெடுப்பது.

- சமயப் பாடல் மரபில் எந்தவொருவரின் பாடல்களும் புலவன் வாழ்ந்த சமகாலத்தில் தொகுக்கப்படாத நிலையில் இராமலிங்கர் பாடல்களை அவரின் சமகாலத்தில் தொகுத்து வெளியிடுவதற்கான சூழலை எது தீர்மானித்தது?

- இராமலிங்கரைத் தொடர்ச்சியாக வற்புறுத்திப் பாடல்களைத் தொகுத்தமை, அவரின் அனுமதியின்றி அருட்பா எனப் பெயரிட்டமை ஆகியவற்றிற்கான பின்புலம் என்ன? இவை இரண்டிற்கும் இடையில் நின்று சைவ அடையாளத்தை நோக்கிச் செயல்பட்ட தொண்ட மண்டல இடைநிலைச் சாதியினரின் செயல்பாடுகள் எத்தன்மையன? ஆகியவற்றை நோக்கிய விவாதங் களையும் கருதுகோளையும் முன்னெடுத்தல்

- இராமலிங்கர் பாடல்களின் முதல் தொகுப்பிலிருந்து இரண்டாம் மூன்றாம் தொகுப்பிற்குள்ளான கால இடைவெளி, அவற்றுள் இடைநிலைச் சாதியினரின் போக்குகளில் ஏற்பட்ட மாற்றம் குறித்த விவாதங்கள்

மேற்குறிப்பிட்ட விவாதக் குறிப்புகளுக்கு விரிவான அளவில் விடைகாண முயற்சிப்பதன்வழி இராமலிங்கரின் பாடல் தொகுப்பு வரலாற்றைத் தமிழ்த் தொகுப்பு மரபிலிருந்து வேறான ஒன்றாகப் புரிந்துகொள்ளமுடியும்.

தமிழ்ச் சமூக வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் 'நடுப்பகுதி நிகழ்வுகள்' பின்வரும் அசைவியக்கம் பலவற்றிற்கு அடித்தளமிட்டுக் கொடுத்தன. தமிழ்ப் புலமையாளர்களின் செயல்பாடுகள் என்பது சமயப் பின்புலத்துடனான செயல்பாடாக மட்டுமே அன்று இருந்தது. செவ்வியல் நூல்கள் என்று இன்று நாம் கொண்டாடுகின்ற பெரும்பகுதி நூல்கள் (கீழ்க்கணக்கு நூல்களில் சில சமயம் மற்றும் நீதி சொல்லிக் கீழ்ப்படிதலை வற்புறுத்தும் கண்ணோட்டங்களில் அச்சான வரலாறு வேறானது) அச்சாகாமல் ஓலையில் கிடந்தன. தொல்காப்பியம் எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப்பகுதியை மட்டும் மழைவை மகாலிங்கையர் என்பவர் அச்சிட்டு வெளியிட்டிருந்தார் (1847). ஆங்கிலேயக் கல்வி மரபை உள்வாங்கிச் செயல்பட்ட சாமுவேல் பிள்ளை என்பவர் தொல்காப்பிய நன்னூல் எனும் ஒப்பீட்டு நூலை உருவாக்கி வெளியிட்டிருந்தார் (1858). எட்டுத்தொகை, பத்துப்பாட்டு (ஆறுமுக நாவலர் பத்துப்பாட்டில் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படையைச் சமயப் பார்வையில் அணுகி அச்சாக்கம் செய்தார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்), காப்பியங்கள் என்னும் எந்தவொரு செவ்வியல் நூலும் அன்றைய நிலையில் அச்சாகி வெளிவர வில்லை. ஆனால், சமய நிலையிலான ஏராளமான நூல்கள் அச்சாகி வெளிவந்தன. சமய மோதல் களின் விளைவால் பல கண்டன நூல்களும், தத்தம் சமயம் சார்பான கருத்தியல் நூல்களும் அச்சாகி வெளிவந்துள்ளதனைப் பதிப்பு வரலாற்றில் பார்க்கமுடிகிறது. சமயம் கடந்த ஒரு பொது இலக்கியத்தை அன்றைய புலமையுலகம் கண்டுகொள்ளவும் இல்லை; கண்டெடுத்து வெளியிடவும் இல்லை. இதற்குப் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சூழலில் நிலவிய சமயம் குறித்த செயல்பாடுகள் அடிப்படைக் காரணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் இராமலிங்கம் என்னும் வள்ளலாரின் பாடல்களைத் தொகுத்து அச்சாக்கும் முயற்சிகளும் நடந்தன. இராமலிங்கரின் நாற்பத்து நாலாவது வயதில் அதாவது 1867 ஆம் ஆண்டு அவர் பாடல்களின் ஒரு பகுதி தொகுக்கப் பட்டு (முதல் நான்கு திருமுறைகள்) முதன்முதலில் நூலாக வெளிவந்தது. இந்தக் காலகட்டத்தில் இராமலிங்கர் சென்னையை விட்டு வெளியேறி சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கருங்குழியில் தமது பணியை மேற்கொண்டிருந்தார். சென்னையில் இருந்த காலத்து இராமலிங்கரின் மாணவராக இருந்த, சென்னையில் ஆசிரியர் பணியை மேற்கொண்டிருந்த இறுக்கம் இரத்தின முதலியார், அவரின் பாடல்களைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் தீவிரமாகச் செயல்பட்டுள்ளார். புதுவை வேலுமுதலியார், செல்வராய முதலியார், தொழுவூர் வேலாயுத முதலியார் ஆகியோர் பாடல் தொகுப்பிற்குத் துணையாக இருந்து செயல்பட்டவர்களுள் முக்கியமானவர்கள்.

பொதுவாகவே இராமலிங்கரின் செயல்பாடு களுக்கு ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர்களிடத்து (சைவ ஆச்சாரமுடைய) எதிர்ப்புகள் இருந்து வந்துள்ளன. இந்நிலையில் அவரின் பாடல்கள் தொகுப்பாக, அவையும் அருட்பா எனும் பெயரில் வெளிவந்ததை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனது. அருட்பா x மருட்பா போராட்டம் கண்டன நூல்களின்வழி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அருட்பா அணியில் சைவத்துக்குள் தமது அடையாளத்தைத் தேடிய இடைநிலைச் சாதியினரும் மருட்பா அணியில் பிற சமயத் தாக்குதலுக்கு எதிர்முகம் கொடுத்துச் சைவத்தை இறுக்கமாகக் கட்டமைக்க முயன்ற உயர்சாதி வேளாளர்களும் நின்று போராடினர்.

இராமலிங்கர் பாடல்களின் தொகுப்பிற்குள் செயல்பட்ட ஈழ x தொண்ட மண்டல வித்துவான்களின் புலமைச் செயல்பாடுகள் என்பது மிக முக்கியமானதாகும். இதனை ஈழ x தொண்ட மண்டல வித்துவான்களின் முரண்பாடாக மட்டுமல்லாமல் உயர்சாதி (வேளாளர்) மற்றும் இடைநிலைச் சாதியினருக்குமான முரண்பாடாகவே புரிந்துகொள்ள வேண்டும்.

இராமலிங்கர் பாடல்களின் தொகுப்பிலும் அருட்பா x மருட்பா போராட்டத்திலும் அருட்பா அணியில் நின்று செயல்பட்டவர்கள் தொண்ட மண்டல இடைநிலைச் சாதியினர் என்பதையும் மருட்பா அணியிலிருந்து இராமலிங்கர் பாடல் தொகுப்பிற்கு எதிராக நின்று செயல்பட்டவர்கள் உயர்சாதி வேளாளர்கள் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். (ஒரு வகையில் இருவரின் செயல்பாடுகளும் சைவ அடையாளத்தை நோக்கியே இருந்தன. இது இராமலிங்கருக்குத் தெரியாத ஒன்றாக இருந்தாலும் வரலாற்றுக்குத் தெரிந்தே இருந்தது.)

மேற்சொன்ன கருத்திற்குக் கீழ்வரும் ஒரு தகவலை இணைத்துப் பார்ப்பதன்வழி அவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். இராமலிங்கர் பாடல்களின் ஒரு பகுதி தொகுக்கப்பட்டு 'அருட்பா' எனும் பெயரில் வெளிவந்ததும் 'அப்பாடல்கள் அருட்பா அல்ல; மருட்பா' என்று சொல்லிக் கண்டன நூல்களின்வழி போராட்டங்கள் நடைபெற்ற நேரத்தில் (1868), ஆறுமுக நாவலரின் மாணவரான யாழ்ப்பாணத்து சி.வை. தாமோதரம் பிள்ளை தாம் பதிப்பித்து வெளியிடப்போகும் தொல்காப்பிய நூலிற்கான விளம்பரத்தில் நாவலரைக் கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"தொல்காப்பியம் சொல்லதிகாரம். இதனை வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையருரையோடும் இலக்கண இலக்கியங்களில் மகா வல்லவரும் சென்னை முதல் ஈழமீறாகவுள்ள தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவருமாகிய ஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலரைக் கொண்டு பல பிரதிகளோடு வழுவறப் பரிசோதிப்பித்திருக்கின்றேன்" (2010:85)

நாவலரை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது அருட்பா குழுவினரை, குறிப்பாகத் தமிழக வித்துவான்களை அவமதிப்பதாகக் கருதப்பட்டது. அதனினும் தொண்டமண்டல வித்துவான்களை அவமதிப்பதாகப் புரிந்துகொள்ளப்பட்டது. இராமலிங்கரின் மாணவருள் ஒருவராகிய நரசிங்கபுரம் வீராசாமி செட்டியார் 'விஞ்ஞாபனப் பத்திரிகை' எனும் நூலின்வழி அதைக் கீழ்வருமாறு கண்டித்தார்.

"நீர் (சி.வை.தா.) தினவர்த்தமானி பத்திரிகையிற் பிரசுரஞ்செய்து வந்ததற்கு இத்தமிழ்நாட்டுப் பிரபுக்களும் வித்துவான்களும் மிகவதிசயப்படுகின்றார்கள். ஏனெனின், எத்தேசத்தாரும் எத்தீபாந்தரவாசிகளும் தமிழ்த் தேசங்களிற் சிறந்த தொண்டமண்டல வாசிகளோடு பயின்று வருகின்றதனால் நாகரிகம் கல்விக்கேள்வி முதலியவற்றிற் பெருமைபெற்று விளங்கி வருகின்றார்கள். ஆதலால் தொண்டமண்டல வித்துவான்களே சிறந்தவர்களென்றும், தொண்ட மண்டலத்திற் சான்றோரும் வித்துவான்களும் மிகுதியென்பதற்கு "தொண்ட நன்னாடு சான்றோருடைத் தென்றும்" "காலைப் பலகலை நூல் கற்போம்" என்றும் ஔவையார் முதலிய மகான்மாக்கள் புகழ்ந்திருக்கின்றார்கள். இதனை மதுரைக் கடைச் சங்கத்தார் சரிதையினாலும் திருக்குறள் வரலாற்றினாலும் ஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் அச்சிட்டு வருதற்கு வேண்டிய புத்தக வுதவி செய்து வருகின்றதினாலும் தொண்டமண்டல வித்துவான்கள் பெருமையுணர்ந்தி ரில்லைபோலும்" (2010 : 85)

> உயர்சாதி இந்துக்கள் தீவிரமாகச் செயல்பட்ட நேரத்தில் சமயம் கடந்த தேடலிலான இராமலிங்கரின் பாடல்கள் இயல்பாக அவர்களுக்கு எதிராக அமைந்தது; அது குறிப்பாகத் தீவிர சைவப்பற்றாளர்களை அவருக்கு எதிர்முகமாகச் செயல்பட வைத்தது. இதன் எதிர்நிலையில் புதிதாக முகிழ்த்து வந்து சைவத்துக்குள் தனது அடையாளத்தைத் தேடிய இடைநிலைச்சாதியினர் ஒருவகையில் அவரின் பாடல்களை ஆதரித்துக் கொண்டாடினர்.

இவ்வாறு சி.வை.தா.வைக் கண்டித்த வீராசாமி செட்டியார் 'தமிழக வித்துவான்களுள்' என்று சொன்னதற்கும் தனது கண்டனத்தைத் தெரிவிக்கிறார்.

"தமிழ்நாட்டுக்குக் குணக்கடலும் கன்னியாகுமரியும் குடசுமும் திருவேங்கடமும் எல்லையெனச் சான்றோராட்சியாய் வழங்குகின்ற தமிழ்நாட்டுள் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் வையையாற்றின் தெற்கும் மருதயாற்றின் வடக்கும் செந்தமிழ் நாடென்றும், இதனைச் சூழ்ந்திருக்கின்ற (தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம்,

மலாடு, புன்னாடு) என்னும் பன்னிரண்டுங் கொடுந்தமிழ் நாடென்றுந் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றவற்றுள் ஒன்றினுஞ் சேராத யாழ்ப்பாண மென்னும் ஈழத்தீவை இத்தமிழ் நாட்டுக்கு எல்லையென எழுதிவந்தது கொடி முடியும் வழக்கும், மடைமாறும் வழக்கும் போற் புதுமையினும் புதுமையாக விருக்கின்றது." (மேலது: 85,86)

தமிழக எல்லைப்பகுதியில் சேராத யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரைத் தமிழக வித்துவான்களுள் சிறந்தவர் என்று சி.வை.தா. சொன்னது அறியாமை செயல் என்று அவரைக் கண்டித்தும் நாவலரின் புலமையைக் கிண்டல் செய்தும் தொண்டமண்டல வித்துவான்களைச் சிறப்பித்தும் செட்டியார் கூறியுள்ளார். செட்டியார் கண்டனத்தை எழுதி வெளியிடுவதற்குக் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையும், தொழுவூர் வேலாயுத முதலியாரும் துணையாக இருந்துள்ளனர் (2001:42). இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாகச் சிவபாதநேசப் பிள்ளை 'நல்லறிவுச்சுடர் கொளுத்தல்' என்னும் கண்டன நூலை எழுதி வெளியிட்டுள்ளார் (2010:685). ஆறுமுக நாவலரின் புலமைச் சிறப்பு பற்றியும் தமிழக எல்லை பற்றியும் விளக்கம் கூறுமுகமாக அக்கண்டன நூல் அமைந்திருக்கின்றது.

தொண்டமண்டல வித்துவான்களே நாவலர் குறித்துச் சி.வை.தா. குறிப்பிட்டிருந்த தகவலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இவர்கள் இராமலிங்கர் பாடல் தொகுப்பில் தீவிரமாகச் செயல்பட்டவர்கள் என்பதை மனங்கொள்ள வேண்டும். இந்த ஈழ x தொண்டமண்டல வித்து வான்களின் செயல் பாட்டிற்குப் பின்னாலிருந்து இயக்கியது சைவ சமயம் பற்றிய கருத்தியல் போராட்டமேயாகும்.

"இந்து சமயத்தின் தலைமை அந்தணருக்குரிய தென்றால், சைவ சமயத்தின் தலைமை வேளாளருக்கே உரியதென்பது அவர்கள் (வேளாளரின்) கொள்கையாக இருந்தது" (2010:68). இந்தப் பின்புலத்தோடுதான் சைவ சமயமும் அது சார்ந்த மடங்களும் வேளாளர்களின் பின்னணியிலேயே செயல்பட்டன. புதிதாக மேலெழும்பி வந்து சைவ சமயத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடத்தொடங்கிய இடைநிலைச் சாதியினருக்கு இப்போக்கு எதிராகத் தெரிந்தது. இதன் விளைவு மடங்களின் தலைமைப் பீடத்தில் இருந்துகொண்டு சைவ சமயத்துக்குள் அதிகார முடையவர்களாகச் செயல்பட்ட உயர்சாதியினருக்கு இணையாக நிறுவனங்களை அமைத்துச் செயல்பட்ட இராமலிங்கரிடம் அவர்களை இட்டுச்சென்றது. (இராமலிங்கர் உருவாக்கிய அமைப்புகள் மேற்சொன்னதிலும் வேறுபட்ட ஒன்றாகும்). சைவ சமயத்திற்குள் தமக்குரிய அடையாளத்தைத் தேடிய இவர்கள் இராமலிங்கரின் செயல்பாடுகளையும் பாடல் களையும் அதற்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்றே சொல்ல வேண்டும்.

"கிறித்துவத்தோடு உறழ்ந்து சைவ சமயத்தை வரையறுத்த நாவலர் அதனை ஆகம அடிப்படை வாதமாகக் கட்டமைத்தார். கிறித்துவத்திற்கு எதிராகச் செயல்பட்ட இந்து அறிவாளர்கள் மிகப் பெரும்பான்மையோர் முன்னேற்றமான மாற்றங்களுக்கு எதிராகவே இருந்தனர் என்பதோடு நடைமுறையில் நெகிழ்வான பாங்கினைக் கொண்டிருந்த இந்து சமயத்தைக் கறாராக வரையறுக்க முயன்றனர்" (2010:35).

மேற்குறித்த முயற்சியை முன்னெடுத்ததில் ஈழத்து உயர்சாதித் தமிழ்ப் புலமையாளர்களின் செயல்பாடுகள் மிக முக்கியமானதாகும். (ஈழத்தில் பெரும்பான்மையராக இருந்த சிங்களபௌத்தர்க ளோடு அரச அதிகாரத்துடன் தங்கள் சமயத்தைக் கிறித்துவர்களும் பரப்ப, தமிழர்களுக்கு - சைவர்களுக்கு - ஏற்பட்ட பண்பாட்டு நெருக்கடி இதற்குக் காரணமாகலாம்). அவற்றுள் நாவலரின் பங்களிப்பு செம்பாதிக்கும் மேற்பட்டதாகும். இந்தப் பின்புலத்தோடுதான் நாவலர் வள்ளலார் முரண்களை, அதாவது ஈழ, தொண்டமண்டல வித்துவான்களின் முரண்களையும் அவற்றுள் உள்ளிருந்து செயல்பட்ட உயர்சாதி, இடை நிலைச்சாதி முரண்களையும் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிதலோடு இராமலிங்கர் பாடல்களின் தொகுப்பு வரலாற்றில் அதற்கான ஆதாரங்கள் சிலவற்றைக் காண்போம்.

பொதுவாக, தாம் பாடிய பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டுமென்கிற எண்ணம் இராமலிங்கருக்கு இருந்ததாகச் சான்றுகள் இல்லை. அவரது மாணவர்களுக்கும் ஆதரவாளர் களுக்குமே பாடல்களைத் தொகுத்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்கின்றது. (இவர்கள் அனைவரும் தொண்டமண்டல வித்துவான்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.) இவற்றைக் கீழ்வரும் இராமலிங்கரின் கடிதப் பகுதி உறுதிசெய்கிறது.

"நான் சென்னபட்டணம் விட்டு இவ்விடம் வந்தநாள் தொடங்கி நாளதுவரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுவதும் எழுதிவைக்க வேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன (1971 :301).

இது, சென்னையிலிருந்து பாடல்களைத் தொகுத்து நூலாக்கம் செய்வதற்காகத் தம்மிடம் அனுமதிகேட்ட தனது மாணவர் இறுக்கம் இரத்தின முதலியாருக்கு 1860 ஆம் ஆண்டு இராமலிங்கர் எழுதிய கடிதப் பகுதியாகும். 1857 இல் இராமலிங்கர் சென்னையைவிட்டு வெளியேறிய நாள்முதல் அவரது பாடல்களைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியில் தீவிரமாகச் செயல்பட்டவர் இறுக்கம் இரத்தின முதலியார். இவரின் முயற்சி 1867 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. இராமலிங்கரின் பாடல்களில் ஒருபகுதி தொகுக்கப்பட்டு அருட்பா எனும் பெயரில் வெளிவந்தது. 1858 - 1867 க்குமான பத்தாண்டு காலப்பகுதியில் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதில் பல கடிதப் பரிமாற்றங்கள் இராமலிங்கருக்கும் முதலியாருக்கும் இடையே நடைபெற்றுள்ளன.

கடித வழியாக அனுமதிகேட்டு வந்த இரத்தின முதலியார், இராமலிங்கரின் அனுமதி கிடைக்காத நிலையில் தாம் உண்ணாவிரதமிருந்து அனுமதி பெற்றிருக்கிறார். இருவருக்கும் நடந்துள்ள கடிதப் பரிமாற்றங்களின்வழி இராமலிங்கருக்குப் பாடல்களைத் தொகுத்து வெளியிடவேண்டு மென்கின்ற எண்ணம் அவரது ஆதரவாளர்களின் வற்புறுத்தலால் ஏற்பட்டுள்ளது என்பதாகவே புரிந்துகொள்ளவேண்டியுள்ளது. ஊரன் அடிகள் எழுதிய இராமலிங்கரின் வரலாற்று நூலில் இந்தக் கடிதப் பகுதியைப் பதிவுசெய்துள்ளார் (1971:302).

1860 இல் முதலியார் உண்ணாவிரதமிருந்து அனுமதியைப் பெற்றாலும் இராமலிங்கரின் முழு அனுமதி 1865 வரை கிடைக்கப்பெறவில்லை. இதனைக் கீழ்வரும் கடிதப் பகுதியைக் கொண்டு அறியமுடிகிறது.

"கடிதத்திற் குறித்த விஷயம் எனக்கத்துணை அவசிய மின்றாயினும் தங்கள் கருத்தின்படி இறைவனுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும், செல்வராய முதலியாராயினும் தாங்கள் வரைந்தபடி செய்துகொள்ளலாம். இனி எழுதுவதற்கு சமயமின்று. ஆகலின் இங்ஙனம் அமைதி செய்தாம்" (1971 : 303).

இப்படியாகத் தொகுப்பு முயற்சிகள் நடைபெற்று 1866 இல் அச்சாக்கும் வேலைகள் தொடக்கம் பெற்றுள்ளன. பாடல்களைத் தொகுக்கும் பணியை இரத்தின முதலியார் மேற்கொண்டாலும், இராமலிங்கரின் பாடல்களை ஆறு திருமுறைகளாகப் பகுப்பது, அவற்றுள் எந்தப் பாடல்களை எந்தெந்த திருமுறைகளில் இடம்பெறச் செய்வது, எவற்றை முதலில் அச்சிடுவது, தொகுப்பிற்கு என்ன பெயரிடுவது என்பதான பணிகளைத் தொழுவூர் வேலாயுத முதலியார் மேற்கொண்டுள்ளார்.

சில நேரங்களில் இவ்வாறான பணிகள் இராமலிங்கரின் கவனத்திற்கு வராமலும் நடைபெற்றுள்ளன. இதைக் கீழ்வரும் கடிதப்பகுதி உறுதிசெய்கிறது.

"ஒற்றியூர் பாடல்களையும் மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப்படுகிறேன். அவைகளைத் தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் (சென்னை) வந்தவுடன் இவ்விடத்திலிருக் கின்ற இன்னுஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக்கொள்ளலாம். பின்பு தங்களிஷ்டம். நமது சிநேகிதர் வேலுமுதலியாரவர்களுக்கு இதைத் தெரியப்படுத்துவீர்களாக" (2010:303).

இவ்வாறாக நூல் அச்சாக்கப் பணிகள் முடிவுற்றதும் நூலிற்குப் பெயரிடுவதிலும் இராமலிங்கருக்கு உடன்பாடில்லாத சம்பவங்கள் நடந்துள்ளன. நூலின் தலைப்பில் 'இராமலிங்கசாமி அருளிச்செய்த' என்று பெயரிடுவதற்கும் அவர் உடன்படவில்லை.

"இராமலிங்கசாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை? ஆராவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில் இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்" (1971: 303).

ஆனால், அருட்பா என்று பெயரிட்டதற்கு அவரிடமிருந்து எந்த மறுப்பும் வெளிவந்ததாக ஆதாரம் இல்லை. பின்னாளைய போராட்ட வரலாற்றிற்கு இப்பெயரே காரணமாக அமைந்ததை நினைவில் கொள்ளவேண்டும். பகட்டுத் தனமான ஆடம்பர விளம்பரத்திற்கு விருப்பமில்லாத இராமலிங்கரின் பாடல்கள் ஒருபகுதி தொகுக்கப் பட்டு 1867 பிப்ரவரி மாதம் வெளியாயிற்று.

இராமலிங்கர் பாடல்களின் முதல் தொகுப்பு (நான்கு திருமுறைகள்) வெளியான பதிமூன்றாண்டுகள் கழித்து 1880 இல் இரண்டாம் தொகுப்பு (ஐந்தாம் திருமுறை) வெளியாயிற்று. (இந்தக் காலப்பகுதியிலும் சங்க நூல்களில் ஒரு நூலும் அச்சாகி வெளிவரவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.) 1867 இல் முதல் பகுதி வெளியான ஆண்டிற்கும் 1880 இல் இரண்டாம் பகுதி வெளியானதற்குமான பதிமூன்றாண்டுகால இடைவெளி மிக முக்கியமானதாகும். இந்தக் காலப்பகுதியில் சத்திய தருமச் சாலை (1867), சன்மார்க்க போதினி என்ற கல்வி நிலையம் (1867) (இதில் தொழுவூர் வேலாயுத முதலியார் ஆசிரியராக இருந்தார்), 1596 அடிகளைக்கொண்ட அருட்பெருஞ்சோதி அகவல்

(1872) முதலானவற்றை வழங்கிய இராமலிங்கர் மறைந்த (1874) நிகழ்வு, அருட்பா தொகுப்பிற்கு எதிரான மருட்பா போராட்டம், இப்போராட்டம் முன்னெழுந்ததற்கு அடிப்படைக் காரணமாக இருந்த நாவலர் இறப்பு (1879) என்பதான பல வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வுகள் நடந்து முடிந்திருந்தன. இன்னொரு முக்கியமான நிகழ்வு இராமலிங்கர் நிறுவிய சன்மார்க்க போதினி எனும் கல்விச் சாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய தொழுவூர் வேலாயுத முதலியார் அப்பணியிலிருந்து விலகி மாநிலக் கல்லூரியில் வந்து, ஆசியர் பணியை மேற்கொண்ட நிகழ்வும் இக்காலப்பகுதியில் நடந்திருந்தன.

இராமலிங்கர் பாடல்கள் அருட்பா அல்ல; மருட்பா என்ற போராட்ட முன்னெடுப்பு அவரது ஏனைய பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதில் தயக்கத்தை ஏற்படுத்தின. எனவேதான் இராமலிங்கர் மறைந்து (1874) நான்காண்டுகள் கழிந்தும் நாவலர் மறைந்து (1879) ஓராண்டுகள் கழிந்தும் ஐந்தாம் திருமுறையை வெளியிடுகின்றனர் (1880). மயிலை. சி. சோமசுந்தர செட்டியார் வெளியிடக்கோரியதன் விளைவாக வேலாயுத முதலியார் இத்தொகுப்பை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

முதல் இரண்டு பகுதியில் வெளிவராத ஏனைய பாடல்கள் (ஆறாம் திருமுறை) இரண்டாம் பகுதி (ஐந்தாம் திருமுறை) வெளியான ஐந்து ஆண்டுகள் கழித்து வெளிவந்துள்ளன. முதல் இரண்டு தொகுப்புகளை வெளியிட ஆர்வம் காட்டிய வேலாயுத முதலியார் மூன்றாம் தொகுப்பை வெளியிட ஆர்வம் காட்டவில்லை. முதலிரண்டு தொகுப்பிற்குத் துணையாக இருந்தவர்களும் பொருளுதவி செய்த சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் மூன்றாம் தொகுப்பை வெளியிட ஆர்வம் காட்டவில்லை. ஆக முதலிரண்டு தொகுப்பை வெளியிட்டுக் கொண்டாடிய இவர்கள் மூன்றாம் தொகுப்பை வெளியிடாமல் பின்வாங்கியுள்ளனர். இச்சம்பவம் மிக முக்கியமான ஒன்றாகும்.

சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடிய இடைநிலைச்சாதியினர் சைவ சமயத்துக்குள் மேலாண்மை செலுத்திய உயர்சாதியினரை எதிர்க்கத் தொடங்கினர். இதன் ஒரு வடிவமாக இராமலிங்கரின் செயல்பாடுகளையும் பாடல் தொகுப்பையும் அதற்குள் இணைத்துக்கொள்ள முயன்றனர். ஒருவகையில் இராமலிங்கர் பாடல்கள் அனைத்தும் அவரது காலமுறைப்படியே தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இரண்டு தொகுப்புகளில் வெளிவராத எஞ்சிய பாடல்கள் இராமலிங்கர் கருங்குழியில் வாழ்ந்த காலத்துப் பாடிய பாடல்களாகும்.

“நான்கு வருணங்களும், நால்வகை ஆசிரமங்களும் (பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம்) ஆசாரங்களும் (சாதி, மத, குல, ஒழுக்கங்கள்) சொன்ன சாத்திர சரிதங்கள் எல்லாமே பிள்ளை விளையாட்டு என்றும், மேல் வருணம், தோல் வருணம் கண்டு அறிவார் இல்லை என்றும் 1870களின் தொடக்கத்தில் துணிந்து எழுதியவர் இராமலிங்கர். இதோடு அவர் விடவில்லை. இதுவரை வந்த நூல்களில் ‘இந்திரசாலம்’ என்ற நூலை மட்டும் ஜாலம் என்று கூறுவார்கள்; ஆனால், வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலான அனைத்து நூல்களுமே ஜாலம்தான் என்று மறுத்தார். இவை எல்லாம் பொய் என்றார்” (2007:109).

இக்கொள்கையிலான பாடல்கள் அனைத்தும் இரண்டு தொகுப்புகளில் வெளிவராத பாடல் களாகும். இராமலிங்கரின் சாதி மதங் கடந்த பாடல்களே ஆறாம் திருமுறையில் அடங்கு வனவாகும்.

இறுதிக்காலங்களில் சாதி மதம் கடந்து சென்று இராமலிங்கர் பாடிய பாடல்கள் சாதீய சமயச் சார்பான சமூக அமைப்பினைப் பாதுகாக்கும் நோக்கில் செயல்பட்ட தீவிர சைவப் பற்றுடைய உயர்சாதியினருக்கும் சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடிய இடைநிலைச் சாதியினருக்கும் எதிராக அமைந்தது. இதன் விளைவு இராமலிங்கரின் ஆறாம் திருமுறைப் பாடல்கள் அவரது ஆதரவாளர்களாலேயே மௌனப்படுத்தப் பட்டன. இந்த ஆதரவாளர்கள் அனைவரும் உயர்சாதியினர் புறக்கணித்த இடைநிலைச் சாதியினர்; குறிப்பாகத் தொண்டமண்டல வித்துவான்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சைவத்துக்குள் தனக்கான இடத்தை அடைவதே இடைநிலைச் சாதியினரின் நோக்கமேயன்றி சைவத்தைப் புறக்கணிப்பதல்ல. முதல் இரண்டு தொகுப்புகளுக்குப் பொருளுதவி தந்து ஆதரவளித்தவர்களும் வேலாயுத முதலியாரும் ஆறாம் திருமுறையைத் தொகுத்து வெளியிடாமல் பின்வாங்கியதை இவ்வாறாகத்தான் புரிந்துகொள்ள முடிகிறது. இதே காலகட்டத்தில் முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய நூலை இரண்டாம் பதிப்பாக வேலாயுத முதலியார் அச்சிட்டு வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படியான புறக்கணிப்பிற்குப் பின்பு, அதாவது முதல் தொகுப்பு நூல் வெளியான ஏறத்தாழ இருபது ஆண்டுகள் கழித்து 1885 இல்

இறுதித் தொகுப்பு (ஆறாம் திருமுறைப் பாடல்கள்) வெளியிடப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அனைத்தும் இராமலிங்கர் பாடலின் முதற்கட்ட தொகுப்பு முயற்சியின் ஊடாக நடைபெற்ற சம்பவங்களாகும். இம்மூன்று தொகுப்பு நூலை அடிப்படையாகக் கொண்டு விடுபட்ட சில பாடல்களைச் சேர்த்தும் சில பாடல்களை நீக்கியும் பொன்னேரி சுந்தரம் பிள்ளை (பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் பொருளுதவியுடன்) (1892 6955), ச.மு.கந்தசாமிப் பிள்ளை (புதுக்கோட்டை தி.நா. முத்தையா செட்டியார் பொருளுதவியுடன்) (1924 6725), ஆ. பாலகிருஷ்ண பிள்ளை (1930 1958 5970), ஊரன் அடிகள் (1972 5818) இராமலிங்கரின் ஆறு திருமுறைப் பாடல்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர். (அடைப்புக் குறிக்குள் பதிப்பாண்டும் பதிப்பாசிரியர்கள் கொண்ட பாடல்களின் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது.) இப்பதிப்புகளைப் பற்றி விவாதிப்பது இங்கு நோக்கமல்ல. ஆனால், இப்பதிப்புகளுக்குப் பின்னாலும் பல சமூகப் பின்னணியிலான வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. அவற்றை வேறோரு வடிவில் முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

தொகுப்பாகச் சில கருத்துகள்...

சைவ சமய எதிர்ப்பு X ஆதரவு எனும் தன்மைகளிலும் அச்சு ஊடக வளர்ச்சியின் பின்புலத்திலும் தொகுக்கப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் தொகுப்பு இராமலிங்கர் பாடல் தொகுப்பாகத்தான் இருக்கும்.

கிறித்துவப் பரப்பலுக்கு எதிராக உயர்சாதி வேளாளர்கள் முன்னெடுத்த போராட்டம், சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடத் தொடங்கிய உயர்சாதியினருக்கு எதிராக எழுந்த இடைநிலைச் சாதியினரின் (அது வெளிப்படையாக இல்லாமல் ஈழ X தொண்டமண்டல வித்துவான் களின் போராட்டமாக இருந்தது) போராட்டம் ஆகியவற்றின் பின்புலத்திலேதான் இராமலிங்கரின் பாடல் தொகுப்பு முயற்சியில் எதிர்ப்பு X ஆதரவு என்னும் தன்மைகள் தீவிரமாக வினைபுரிந்துள்ளன. இதன் மறுவடிவமாகவே அருட்பா X மருட்பா போராட்டம் உருவெடுத்தது எனலாம்.

இன்னொரு முக்கியமான ஒன்று சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடத்தொடங்கிய இடைநிலைச் சாதியினர் இராமலிங்கரைத் துணைக்கு இட்டுக்கொண்டனர் எனலாம். இந்த நோக்கத்திற்காக அவரது பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர். பாடல்களை மட்டுமே தொகுத்து வெளியிட்டுக்கொள்ள ஆர்வம் காட்டினரேயன்றி, அவரது கொள்கைகளையோ கோட்பாடுகளையோ அவர் நிறுவிய நிறுவனங்களையோ மக்களிடத்துக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற நோக்கம் அவர்களிடத்து இல்லை. அப்படி இருந்திருப்பின் அவரது ஆறாம் திருமுறைப் பாடல்களை வெளியிடாமல் பின்வாங்கியிருக்க மாட்டார்கள். இவர்களது நோக்கம் சைவத்துக்குள் தனக்கான இடத்தைப் பெறுவதேயன்றி சைவத்தைப் புறக்கணிப்பதல்ல. இராமலிங்கரின் ஆறாம் திருமுறைப் பாடல்கள் சமயத்தைக் கடந்து சமரசத்தைக் காட்டும் பாடல்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இராமலிங்கர் பாடல்கள் தீவிர சைவப் பின்னணியிலும் சைவத்துக்குள் அகப்புற சாதிய எதிர்ப்புப் பின்னணியிலும் எதிர்ப்பு X ஆதரவு எனும் தன்மைகளில் தொகுக்கப்பட்டுள்ளன. இதன் மறுவடிமாக எழுந்ததே அருட்பா X மருட்பா போர். இப்போரில் அருட்பா அணியினர் (இடைநிலைச் சாதியினர்) வென்றனரா? மருட்பா அணியினர் (உயர்சாதி வேளாளர்கள்) வென்றனரா? என்றால் சைவம் வென்றது. ஏனெனில் அருட்பா அணியினரே இராமலிங்கரைக் கொண்டுபோய் சைவ சமயத்துக்குள் கரைத்துவிட்டனர். இவை இராமலிங்கர் பாடல் தொகுப்பு வரலாறு காட்டும் செய்தி.

துணைநூற்பட்டியல்

1. ராஜ் கௌதமன் கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப்போக!
   சி. இராமலிங்கம் (1823 1874,) தமிழினி, இரண்டாம் பதிப்பு , 2007.
2. சரவணன். ப. அருட்பா X மருட்பா, தமிழினி, முதல் பதிப்பு, 2001.
3. சரவணன். ப. (ப.ஆ) அருட்பா X மருட்பா கண்டணத் திரட்டு, காலச்சுவடு, முதல் பதிப்பு, 2010.
4. வேங்கடசாமி. மயிலை சீனி. 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், சாரதா மாணிக்கம் பதிப்பகம் , முதல் பதிப்பு , 2003.
5. பரமசிவம். தொ. சமயங்களின் அரசியல், பரிசல் வெளியீட்டகம், முதல் பதிப்பு , 2005.
6. ஊரன் அடிகள் இராமலிங்க அடிகள் வரலாறு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், முதல் பதிப்பு, 1971.

■


தமிழ் அச்சுப் பண்பாடும் தமிழ்த் தொகுப்பு மரபும்

வீ. அரசு

தமிழ் இலக்கிய வரலாறு எழுதியோர் தமிழில் உள்ள தொகுப்பு மரபைப் பெரிதும் கவனத்தில் கொண்டதாகக் கருதமுடியாது. தமிழில் உள்ள தொகுப்பு மரபை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இலக்கிய / இலக்கண/தத்துவ வரலாறுகளை எழுத வாய்ப்புண்டு. தமிழில் காணப்படும் தொகுப்பு மரபுகளை உரையாடலுக்கு உட்படுத்துவதின் மூலம், தமிழ்ப்புலமைப் பாரம்பரிய வரலாற்றையும் கண்டறிய முடியும். தமிழ்ச்சூழலில் புதிது புதிதாக உருப்பெறும் பல்வேறு புதிய தன்மைகளையும் தமிழ்த் தொகுப்பு மரபுகள் உள்வாங்கிச் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதுவரை தமிழில் நிகழ்ந்துள்ள தொகுப்பு மரபுகளைப் புரிந்துகொள்ள கீழ்க்காணும் முறையில் தொகுத்துக் கொள்ளலாம்.

- கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட செவ்வியல் பண்புகளைக் கொண்ட இலக்கிய/ இலக்கண தொகுப்பு மரபுகள்
- கி.பி. பதினாறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சமயம், நீதி மற்றும் சாத்திரத்தொகுப்பு மரபுகள்
- கி.பி. 1850க்கு முற்பட்ட பனைஓலைச் சுவடிகள் மூலம் அறியலாகும் தொகுப்பு மரபுகள்
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, இன்றுவரை (சுமார் 150 ஆண்டுகள்) தொடரும் தொகுப்பு மரபுகள்.

தமிழ்ச்செவ்வியல் தொகுப்பு மரபு என்பது, உலகில் உள்ள பிற செவ்வியல் மொழிகளில் காணப்படும் தொகுப்பு மரபுகளைப் போன்றே அமைந்திருப்பதைக் காண்கிறோம். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் உருவான பிரதிகளைக் கி.மு. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் தொகுத்திருக்கிறார்கள். இவைகளைத் தொகுப்பதில் பாடல்களின் வரி எண்ணிக்கை, பாடல்களின் எண்ணிக்கை, பாடல்களில் உள்ள பொருண்மை, பாடல்களில் காணப்படும் யாப்பு மரபு ஆகிய பிற கூறுகள்


கடவுள் துணை.

விநோதரசமஞ்சரி.

சென்னைத் துரைத்தன வித்தியாசாலையில்
திராவிடாந்திர பாஷாபோதகராயிருந்த
கனம்பொருந்திய-ஜெபர்ஸிவல் ஐயர்
வேண்டுகோளின்படி.
பலவித்துவான்கள்செய்த சரித்திரங்களை வசனரூபமாக
மேற்படி—வித்தியாசாலையின்
தமிழ்ப்பண்டிதர்களிலொருவராகிய
அஷ்டாவதானம்
வீராசாமிசெட்டியாரவர்களால்
இயற்றி,
அச்சிட்டுவழங்கிய,
அநேகப்பிரதிகளைக்-பரிசோதித்து

இஃது
கலவை,
நாராயணசாமிமுதலியாரவர்கள்
வேண்டுகோளின்படி
பட்டாளம்
குப்புசாமிமுதலியாரவர்களது
தொண்டைமண்டலம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.
காபி—500
சென்னை - ஜுன்,
1868

அடிப்படைகளாக அமைந்துள்ளன. பத்து, நூறு, ஆயிரம் எனும் எண்ணிக்கை சார்ந்தே பெரும்பாலான தொகுப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. இப்பண்பு உலகப் பொதுமையானது எனலாம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் உருவான தண்டியலங்காரம், *'பொருள், இடம், காலம், தொழில் என நான்கினும் / பாட்டினினும் அளவினும் கூட்டியதாகும்'* (பொதுவணியியல்: 5) என்று வரையறை செய்வதை நாம் ஏற்றுக்

கொள்ள முடியும். எனவே செவ்வியல் நூல்களின் தொகுப்பு மரபின் பின்புலமாக மனித சமூகம் எண்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கை செயல்படுவதைக் காண்கிறோம். இலக்கணங்கள் இம்மரபை அகம்/புறம் எனும் பொருள்மரபு; திணை, துறை, கூற்று எனும் பிரித்தல் மரபு; கலி, பரிபாடல் எனும் இசையுடன் கூடிய யாப்பு மரபு எனப் பலவகையில் வெளிப்படுத்தின. தமிழ்ப்புலமை மரபின் செயல்பாடுகளாக இவற்றைப் புரிந்துகொள்ள முடியும். இம்மரபில் சமயச் சார்பற்ற, நிறுவனசார்பற்ற, இயற்கை நெறிகள் அடிப்படையாகச் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இயற்கை வழிபாடு, இயற்கையைப் பாடுதல் ஆகிய மரபுகள் தமிழ்ச் சூழலில் மடைமாற்றம் செய்யப்பட்டன. வைதீக மரபுகள் உருவாயின. சமயம் உருப்பெற்று நிறுவனமாகியது. குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்ட கடவுளர்கள் உருவாக்கப் பட்டனர். கோயில்கள் உருவாயின. நீதி/அநீதி உருவானது. கடவுளையும் சமயத் தலைமைகளையும் முதன்மைப்படுத்தி போதிக்கத் தொடங்கினர். இந்தச் சூழலில் தான் வழிபாடு சார்ந்த பாடல்களும் நீதி போதனை சார்ந்த பாடல்களும் உருவாயின. இவ்வகையில் உருவானவற்றைத் தொகுத்தனர். இவ்விதம் தொகுக்கப்பட்ட மரபில் கடவுளர்கள் இருக்கும் இடங்கள்; பாடல்களில் அமைந்த இசைக்கூறுகள் ஆகிய பிற சார்ந்தும் தொகுப்பு மரபுகள் உருவாயின. அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு எனக் கூறப்படும் பொருண்மை உருவானது. இப்பொருண்மைகளைக் கொண்ட பாடல்களைத் தொகுத்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் 'புறத்திரட்டு', இம்மரபிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. எனவே இயற்கைநெறி சார்ந்த மரபு சமயத்துடன் இணைந்த அறம் போதித்தல் மரபாக உருப் பெற்றதின் விளைவாக, தொகுத்தல் மரபும் அதனை உள்வாங்கியது. திருமுறைகளும் பிரபந்தங்களும் சாத்திரங்களும் இவ்வகையில் தொகுப்புகளாயின. இம்மரபு பின்னர் பாராயணம் செய்து வழிபாடு செய்வதற்கும் உதவியது. தமிழ் இலக்கிய/இலக்கண உருவாக்க மரபில் இருந்த கூறுகளையே தமிழ்த்தொகுப்பு மரபுகளும் உள்வாங்கியதைக் காண்கிறோம்.

* * *

நம்மிடம் இன்று சுமார் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட பனைஓலைச் சுவடிகள் உள்ளன. இவற்றில் மேலே குறிப்பிட்ட நூல்களும் உள்ளன. அவை பெரும்பகுதி அச்சு வடிவத்திற்கு மாற்றம் பெற்று விட்டன. அச்சு வடிவம் பெறாமல், சுவடிகளாக இருப்பவற்றின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டும் நமது தொகுப்பு மரபைப் புரிந்து கொள்ளும் தேவையுண்டு. அகத்தியர் சாலத்திரட்டு, சட்டைமுனி ஆயிரந் திரட்டு, சோதிட நூல்திரட்டு, நீதி நூற்றிரட்டு, பஞ்சபுராணத் திரட்டு, பலகவித்திரட்டு, பிரபந்தத் திரட்டு எனும் சுவடிகளின் பெயர்கள் காணப் படுகின்றன. சுமார் இருநூறு ஆண்டுகளுக்குள் எழுதப்பட்ட இச்சுவடிகளில் உள்ள திரட்டுகள் முதன்மையாக, மருத்துவம் தொடர்பான திரட்டுகளாக உள்ளன. நம்பிக்கைகள், சடங்குகள் சார்ந்தும் உள்ளன. வெகுமக்களின் பண்பாடு சார்ந்து அமையும் இத்தொகுப்பு மரபு குறித்து, நாம் விரிவான உரையாடலை முன்னெடுக்கும் தேவையுண்டு. அம்மரபு குறித்த ஆய்வுகள் தர்க்க அடிப்படையில் தமிழில் இன்னும் நிகழவில்லை. நம்பிக்கை சார்ந்தே நிகழ்த்தப்படுகிறது. நம்பிக்கை களின் தர்க்கம் சார்ந்து இத்தொகுப்பு மரபை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மேற்குறித்த தொகுப்பு மரபுகளிலிருந்து முற்றிலும் புதிதான மரபுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, தமிழில் செயல்படுவதைக் காண்கிறோம். இம்மரபு, நவீன



வீ. அரசு: இவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையின் தலைவர். வ.உ.சி., ப. ஜீவானந்தம், சங்கரதாஸ் சுவாமிகள் மற்றும் புதுமைப்பித்தன் ஆகியோரின் ஆக்கங்களைப் பதிப்பித்துள்ளார். ரிக்வேதம் – ஆங்கில மொழிபெயர்ப்பு, தமிழ் மொழி பெயர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுதிகள் உருவாக்கத்தில் செயல்பட்டவர்.

இவரது ஆய்வுக் கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'கங்கு' என்ற சிறுவெளியீட்டின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டவர். இவ்வெளியீட்டில் 'சிறுபத்திரிகையின் அரசியல்' என்ற நூலை எழுதியுள்ளார். மயிலை சீனி. வேங்கடசாமி பற்றிய குறிப்பு நூல் ஒன்றை எழுதியுள்ளார். 'கட்டியம்', 'மாற்றுவெளி' ஆகிய இதழ்களின் சிறப்பாசிரியராகச் செயல்படுகிறார்.

அச்சுக்கருவி பயன்பாட்டிற்கு வந்ததை அடிப்படையாகக்கொண்டு செயல்படுகிறது. புத்தொளி மரபு வழி உருவான நவீனப் புலமைச் செயல்பாடுகள், இத்தொகுப்பு மரபுகளுக்கு அடிப்படைகளாக அமைகின்றன. எனவே நவீன சமூக உருவாக்கத்தில்,. பாரம்பரியமான தொகுப்பு மரபு, எவ்வகையில் நவீனத் தன்மைகளை உள்வாங்குகிறது? என்பது குறித்த உரையாடல் இங்கு நமது நோக்கம். அச்சுப் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாகத் தொகுப்பு மரபு சார்ந்த செல்நெறிகள் எவ்வகையில் செயல் படுகின்றன என்பதைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ளமுடியும்.

- மிராசுதார்கள், ஜமீன்தார்கள் போன்றவர்கள் புலவர்களைத் தம்மோடு வைத்துப் பராமரித்து வந்த வரலாறு, 17&18ஆம் நூற்றாண்டுகளில் நடைமுறையில் இருந்ததை அறிகிறோம். இப்பண்பு பழங்காலத்திலிருந்து தொடர்ந்து வருவதுதான். 19&20ஆம் நூற்றாண்டுகளில், புரவலர்கள் புலவர்களைப் பராமரிப்பதற்கு மாறாக, அவர்கள் எழுதியவற்றைப் பதிவுசெய்தனர். ஓலைச்சுவடிகளில் எழுதினர். அச்சு வருகையோடு, அச்சிடுதலும் புரவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நூல்களைப் பதிப்பிப்பதற்கு உதவினர். இதைப் போலவே பல்வேறு தொகுப்பு நூல்கள் உருவாவதற்கும் புரவலர்கள் காரணமாக அமைந்தனர். இதனால் புதிய தொகுப்பு முறை உருவானது. இதனைப் 'பன்னூல் திரட்டு' என்று அழைத்தனர்.

- புலவர்கள் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்பது, புரவலர்களிடம் காணப்பட்டது. இவ்வகையான பாடல்களைத் தொகுத்து அச்சிடுதலும் நிகழத் தொடங்கியது. இதுவே 'தனிப்பாடல் திரட்டு' எனும் தொகுப்பு முறை உருவாகக் காரணமாக அமைந்தது. பல அச்சு வடிவங்களில் இம்முறையில் அமைந்த தொகுப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாகின.

- தனிப்பாடல் திரட்டின் தொடர்ச்சியாகச் சித்தர் பாடல்களைத் தொகுத்துக் கோவையாக வெளியிடுதலும் அச்சிடுதல் மூலம் சாத்தியமாயிற்று. சித்தமருத்துவம் என்னும் நிகழ்முறையிலிருந்து 'சித்தர்கள்' எனும் தொன்மத்தை உருவாக்கினர். இதன் மூலம் புதிய புதிய சித்தர்களைக் கண்டுபிடித்தனர். இதனை நிலைநிறுத்தச் சித்தர்கள் பாடல் தொகுப்பு முறை உதவியது.

- பிற்காலச் சோழர்கள் காலத்திற்குப் பின் தமிழ்ச்சமூகத்தில், சிறிய சிறிய அளவிலான ஆட்சிப் பரப்பை நிர்வகிக்கும் பலர் உருவாயினர். இவர்களைச் சார்ந்து புலவர்கள் வாழ்ந்தனர். இவ்வாறு வாழ்ந்தவர்கள் குறித்த தொகுப்பு மரபும் தமிழில் உருவானது. 'தமிழ் நாவலர் சரிதை' எனும் நூல் இவ்வகையில் பழமையானது. இந்நூலில் 15ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்களின் பாடல்களோடு அதற்கு முற்பட்டவர்களின் பாடல்களையும் இணைத்து அவற்றைப் பாடியவர்கள் குறித்துக் கதைவடிவில் அமைந்த வரலாறு எழுதப்பட்டுள்ளது. இவ்வகையில் இத்தொகுப்பு நூலில் 261 பாடல்கள், வரலாற்றுச் செய்திகளோடு இணைத்துத் தொகுக்கப் பட்டுள்ளன. சுவடியில் உருவான இத்தொகுப்பு மரபின் தொடர்ச்சியாகத் தண்டபாணி சுவாமிகளின் 'புலவர் புராணம்' எனும் தொகுப்பு நூல் 19ஆம் நூற்றாண்டில் உருவானது. இம் மரபில் உருவான நூல் விநோத ரஸ மஞ்சரி தொகுப்பு நூல். இம்மரபு பின்னர் தமிழில் பல்வேறு கோணங்களில் வளரத் தொடங்கியது.

திருமுறைகளைப் பாடி வழிபடும் மரபு சைவப்பாரம்பரியத்தில் செழுமையாக வளரத் தொடங்கியது. பாடுபவர்கள் 'ஓதுவார்கள்' என அழைக்கப்பட்டனர். திருமுறைப் பாடல்களின் செல்வாக்கால், தமிழில் பக்திப் பாடல்கள் பின்னர் மிகுதியாகப் பாடப்பட்டன. இம்மரபில்தான் பட்டினத்தார், அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமானவர், குணங்குடி மஸ்தான், இராமலிங்கர், தண்டபாணி சுவாமிகள் எனப் பலர் உருவாயினர். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் தொடங்கி இவ்வகைப் பாடல்களை உருவாக்கும் மரபு செல்வாக்குடன் இருந்தது. அச்சு மரபு உருவாக்கத்தில் இவர்களுடைய பாடல்கள் தொகுக்கப்பட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் பல தொகுப்புகள் உருவாகக் காரணமாக அமைந்தது. இவர்கள் சித்தர்களாகவும் ஆக்கப்பட்டார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சிபெற்ற அச்சுத்தொழில் மற்றும் நிறுவனங்கள் பல புதிய தொகுப்பு முறைமைகள் உருவாகக் காரணமாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் தமிழக அரசு நடைமுறைப்படுத்திய 'நூல்கள் நாட்டுடைமை யாக்குதல்' பல தொகுப்பு உருவாகக் காரணமாக அமைந்துவிட்டது. அச்சுத் தொழிலில் உருப் பெற்றுள்ள கணினியின் வழி அச்சிடுதலும் பல புதுவகையான தொகுப்புகள் உருவாவதற்குக் காரணமாக அமைகிறது.

பன்னூல் திரட்டு, தனிப்பாடல்திரட்டு, சித்தர் பாடல் கோவை, விநோத ரஸ மஞ்சரி வகைத் தொகுப்பு, தனிமனிதர்கள் பாடல்கள் தொகுப்பு, அண்மைக் காலத்தொகுப்பு நூல்கள் ஆகியவை

அனைத்தும் கடந்த நூற்றைம்பது ஆண்டுகால அச்சுப் பண்பாட்டின் விளைவு ஆகும். பாரம்பரியமான நமது தொகுப்பு மரபுகளை உள் வாங்கினாலும் அச்சுத்தொழிலின் தேவை, குறிப்பாக இவற்றை நுகர் வோர்க்கு வழங்குவது என்பதே முதன்மையாகச் செயல்பட்டிருப் பதைக் காண்கிறோம். இப்பண்பை, மரபின் தொடர்ச்சியாகக் காணும் அதேவேளையில், புதிய தொழில் நுட்பம் மற்றும் புதிதாக உருவான புலமைத்தளம் ஆகியவை இத்தொகுப்பு மரபில் எவ்வகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன? என்பதை அறிவது அவசியம். இதன் மூலம் தமிழ் அச்சுப் பண்பாட்டு வரலாற்றில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை இனம் கண்டு புரிந்துகொள்ள முடியும்.


புலவர் புராணம்.

"இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராமநாதபுரத்தில் வாழ்ந்திருந்த பாண்டித்துரைத் தேவர் என்பவர் சிறந்த தமிழ்ப்புலவராகவும் புரவலராகவும் திகழ்ந்தார். அவர் சொற்பொழிவு செய்தலிலும் வல்லவர். சொற்பொழிவு செய்யுங்காலங்களில், சொற்பொழிவு செய்வோர் அறம், பொருள், இன்பம் செய்திகள மைந்த பாடல்களை இடையிடையே கூறிச் சொற் பொழிவது செய்வது இயற்கை.

'...சொற்பொழிவு செய்பவர்க்கும் கட்டுரை எழுதுபவர்கட்கும்.... பயன்படுமாறு அறம் பொருளின்பச் செய்திகளமைந்த பாடல்களைப் புராணங்கள், அறநூல்கள் முதலியவைகளிலிருந்து திரட்டி ஒன்றுபடுத்த வேண்டுமென்று பாண்டித் துரைத் தேவர் எண்ணினார்...'

இவ்வாறு தொகுத்த நூலுக்குப் 'பன்னூற்றிரட்டு' என்று பெயர் கொடுத்து 1898ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினார்." (பன்னூல் பாடற்றிரட்டு பதிப்புரை. 1968)

பாண்டித்துரைத்தேவர் 1747 பாடல்களை முதலில் தொகுத்து வெளியிட்டார். பின்னர் 1906இல் மேலும் சில பாடல்களைச் சேர்த்து வெளியிட்டார். இவை சீர் பிரிக்காத பாடல்கள். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இந்நூலை 1968இல் 'பன்னூல் பாடற்றிரட்டு' எனும் பெயரில் மேலும் சில பாடல்களைச் சேர்த்து வெளியிட்டது. திருக்குறள், புறத்திரட்டு மரபில் உருவான இந்நூல், இருபதாம் நூற்றாண்டில் இவ்வகையான பல தொகுப்புகள் உருவாக முன்னோடியாக அமைந்தது. 181 நூல்களிலிருந்து 2924 பாடல்கள் இத்திரட்டில் இடம்பெற்றுள்ளன. இவ்வளவு நூல்களும் அச்சு வடிவில் இருந்ததால் எடுத்துத் தொகுப்பதற்கு எளிதாக இருந்திருக்க வேண்டும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும் பின்னர் 'செந்தமிழ்' இதழையும் உருவாக்கிய பாண்டித்துரைத்தேவரின் தொகுப்பு மரபை, பின்னர் உருவான நூல் வெளியீட்டுக் கழகமான சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மேலும் விரிவுபடுத்தி பல தொகுப்புகளை வெளியிட்டது. இதன்மூலம் புதிய தொழில்நுட்பம் தொகுப்பு மரபில் செயல் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இராமநாதபுரத்தில் வாழ்ந்த பொன்னுசாமித் தேவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலங்களில் தனிப்பாடல்களைத் திரட்டத் தொடங்கினார். அவர் மீது புலவர்கள் பாடிய தனிப்பாடல்களைத் திரட்டுவதே அவரது நோக்கமாக அமைந்தது. இப்பணியைச் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவரிடம் ஒப்படைத்தார். அவர் பல பாடல் களைத் திரட்டி 'தனிப்பாடல் திரட்டு' எனும் நூலை வெளியிட்டார்.

"இஃது இராமநாதபுரம் சமஸ்தானம் மஹாராஜராஜஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்கள் அனுமதியினால், தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராஜ பண்டிதர், காஞ்சிபுரம் வித்வான் கச்ச பால்ய ஐயர் இவர்களால் பரிசோதித்து அச்சிட்ட பாடல்களும் இப்போது நூதனமாகச் சேர்த்த பாடல்களும் வண்ணாரப்பேட்டை ஆறுமுக முதலியாரால் பாநு கோடிப் பிரகாச வச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது".

இந்நூல் 1869ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. தனிப்பாடல் திரட்டு எனும் தொகுப்பு மரபு இவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலங்களில் உருப்பெற்றதைக் காண்கிறோம். புதிதாகப் பாடல்களைத் திரட்டியதையும் அச்சிட்டதையும் நூல் முகப்பு அட்டை கூறுகிறது. இம்மரபு பின்னர் இருபதாம் நூற்றாண்டில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வளர்த்தெடுக் கப்பட்டு பல தொகுதிகளில் ஆயிரக்கணக்கில் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டனர். இத்தொகுப்புப் பணியைக் கருப்பக்கிளர் சு. அ. இராமசாமிப் புலவர் செய்துள்ளார். இப்போது தமிழில் 'தனிப்பாடல் திரட்டு' என்றே ஒரு மரபு உருப்பெற்றிருப்பதை அறிகிறோம். 15, 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் உருப்பெற்று

வாய்மொழி மரபாகவும் ஓலைகளில் பதிவு செய்யப்பட்டவையாகவும் இருந்த தனிப்பாடல்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சுக்கருவி வருகையோடு தமிழில் ஒருவகையான தொகுப்பு மரபாகவும் உருப்பெற்றிருப்பதைக் காண்கிறோம். தமிழ் நாவலர் சரிதையிலிருந்து தனிப்பாடல் திரட்டு உருவான வரலாறு, தமிழ்ப்பாடல்களைத் தமிழகப் புரவலர்களும் சுவைஞர்களும் எவ்வகையில் எதிர்கொண்டார்கள் என்பதை அறிய உதவுகிறது. தனிப்பாடல் திரட்டு எனும் தொகுப்பு மரபு இவ்வகையில், தமிழ்க்கவிதை நுகர்வு சார்ந்த வரலாற்றையும் அறிந்துகொள்ள உதவும் தொகுப்பு மரபாக உருப்பெற்றுள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றை இக்கண்ணோட்டத்திலும் உருவாக்கும் தேவையுண்டு.

நவீன அச்சு வருகையோடு உருவான தொகுப்பு மரபுகளில் ஒன்று சித்தர்பாடல்கள் தொகுப்பு ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெரிய ஞானக் கோவை, எனும் பெயரில் உருவாக்கப்பட்டது. பதினெண் சித்தர்கள் என்று எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த எண்ணிக்கை நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வருவதைக் காண்கிறோம். 1899இல் உபாத்தியாயர் இராமலிங்க முதலியார் பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக் கோவை எனும் தொகுப்பைப் புரசை சுந்தரவிலாச அச்சுக்கூடம் மூலம் கொண்டு வந்தார். இதிலிருந்து உருவான இத்தொகுப்பு மரபு இருபதாம் நூற்றாண்டின், புத்தகச்சந்தையில் தொடர்ச்சியாக இடம்பெறும் ஒரு பிரிவாக அமைந்துவிட்டது. அச்சு மரபில் இத்தொகுப்பு உருவாவதற்கு முன்பு சித்தர்கள் என்று தனித்துக் குறிப்பிட்டதற்கான சான்றுகள் இல்லை. பட்டினத்தார் பாடல்கள், திருமூலர் சூத்திரங்கள் என்றே சுவடிகளில் காணப்படுகின்றன. 1976இல் 'சித்தர்பாடல்கள்' எனும் தொகுப்பை திரு. த. கோவேந்தன் பூம்புகார் பதிப்பகம் மூலம் கொண்டுவந்தார். இந்நூலின் பதிப்புரையில் "செல்வாக்குப் பெற்ற பாடல்களில் இடைச் செருகல்களை ஏடு எழுதினோரும் பதிப்பித்தோரும் கடை விரித்தனர். சிறப்புற்ற முன்னோரின் பெயர்களில் புகுந்து சிலர் விளையாடினர். இவற்றின் உண்மைகளை எந்தப் புலவரும் துணிந்து கூறவில்லை. பேரா. மு. அருணாசலம் ஒருவரே காலமுறைப்படுத்தித் தெளிவுபடுத்தினார்." (ஆறாவது பதிப்பு : 2001) என்று மேற்கோள் காட்டியுள்ள இவர், இவரது தொகுப்பில் புகுந்து விளையாடியுள்ளது சுவையானது. சித்தர்பாடல்கள் தொகுப்பில் இல்லாத உலோகாயதச் சித்தரை இவர் கண்டு பிடித்துள்ளார். இச்சித்தர், "மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை/ இந்த/மானுடம் போலொரு மெய்மையும் இல்லை/ மனிதன் இயற்கையின் எதிரொலிச் சின்னம் / உழைப்பு / மனம் இல்லையேல் அவன் விலங்காண்டி இனம்'' என்ற பாடலைப் பாடியுள்ளார். (தொகுப்பு: ப. 325) இப்பாடலில் காணப்படும் சொற்கள், கருத்துநிலை என்பவை, இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத் திற்குப் பின்பு உருவான தத்துவச்சிந்தனை மரபைச் சார்ந்தது என்பதை வாசிக்கும் எவரும் புரிந்துகொள்ள முடியும். இப்பாடலைப் பாடிய உலோகாயதச் சித்தர் பாடியுள்ள உலோகாயதம் திரு. கோவேந்தன் அவர்களின் கண்டுபிடிப்பு. "தகுதியான மிகுதியே வெல்லும் வெல்லும் / இந்தத் தங்கவேல் லோகாயதரின் சொல்லும் வெல்லும் / மிகுதியாம் பொய்ய சமயங்கள் ஓடும் / நாளை மேன்மையாம் மெய்வாழ்க்கை ஒத்திசைபாடும்.'' உலோகாயதச் சித்தரின் கடைசிப்பாடல் (ப. 328) இது. இவருடைய பெயர் தங்கவேல். கோவேந்தன் தங்கவேல் எனும் சித்தரை உருவாக்கியுள்ளார்.

இத்தொகுப்பில் பதினாறு சித்தர்கள் பாடல்கள், பூசைவிதிகளைக் கூறும் மூவர் பாடல்கள் மற்றும் ஞானப்பாடல்கள் எனும் தலைப்பில் 12 பேர் பாடல்களையும் இணைத்துள்ளார். 'முடிக்கு முன்னே' என்ற தலைப்பின் கீழ் காரைச்சித்தர், தடங்கண் சித்தர் என்று இரண்டு சித்தர்களை இணைத்துள்ளார். காரைச்சித்தர் பெயராகக் கனகசுப்பு என்று குறித்துள்ளார். பாரதிதாசனைச் சித்தராக்கி, கோவேந்தன் பாடல் எழுதி அவரைக் காரைச்சித்தராகக் காட்டுகிறார். இதைப் போலவே கோவேந்தனின் கெழுதகை நண்பர்கள் ம. இல. தங்கப்பா அவர்களைத் தங்கப்பா என்று குறித்து தடங்கண் சித்தர் ஆக்கியுள்ளார். இவ்வகையில், கோவேந்தன் உலோகாயதச் சித்தர், பாரதிதாசன் காரைச்சித்தர், ம.இல. தங்கப்பா தடங்கண் சித்தர் எனும் புதிய சித்தர்கள் மரபை உருவாக்கியுள்ளார். இவரது தொகுப்பை அடிப்படையாகக்கொண்டு, சித்தர்பாடல்களைத் தொகுத்தவர்கள், இப்புதிய சித்தர்களைத் தங்கள் தொகுப்பிலும் இணைத் துள்ளனர். உலோகாயதச் சித்தர் பாடல்களைப் படித்துப் பெரிதும் புளகாங்கிதம் அடைந்து, சித்தர்களின் உலோகாயதச் சிந்தனையை, தமது கட்டுரை ஒன்றில் பேரா. தோத்தாத்ரி விதந்து பேசியுள்ளார். இவ்வகையில், சித்தர் தொகுப்பு மரபின் விளையாட்டுக்கள் சுவையானவை. இவ்வகையான விளையாட்டுக்களைப் பல்வேறு பட்ட தொகுப்புகளிலும் கண்டறியலாம். நவீன அச்சுக் கருவியால் வந்த வினை இதுவென்று கூறத் தோன்றுகிறது.

"இங்கிலீஷ்காரார் சிறுபிள்ளைகள் பாஷையின் எழுத்து முதலானவைகளை வருத்தமின்றி எளிதாக விளையாட்டில் தாமே உணர்ந்து கொள்வதற்குப் பல சித்திரப்படங்களை வேடிக்கை யாகத் தீட்டிக் காட்டுவது போல....... சிறுவர் முதலானோர்க்குச் சிரிப்பும் பரிகாசமுமாய்த் தோன்றியே உபாயமாக மேற்குறித்த பெரும்பயனைத் தரும்படி சில பழமொழி முதலாகிய திருஷ்டாந்தங்களைக் கொண்டு வெளிப்படை யாகவும் சுருக்கமாகவும் செய்யப் பட்டமையால் 'இது யாருக்குத் தெரியாதது? இதில் என்ன அருமை இருக்கின்றது? இதுவும் ஓர் அதிசயமா?'என்று வரன்முறையே கற்றுணர்ந்த சான்றோர் ஒரு பொழுதும் நினையார் என்னும் துணிவு பற்றி இதனை அச்சிட்டுப் பிரசுரம் செய்யலாயினேன். இதற்கு முன் அச்சிடப்பட்ட வைகளும், இனி அச்சிடப்படுபவைகளுக்கும் இஃது ஒருவாறு ஒக்கும்." (விநோத ரஸ மஞ்சரி. 1958 ஆம் ஆண்டு பதிப்பு: 43-44)

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் 1876 இல் அச்சிட்டு வெளியிட்ட 'விநோத ரஸ மஞ் சரி' எனும் நூலில் காணப்படுவது மேற்குறித்த குறிப்பு. சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தவர் வீராசாமி செட்டியார். பெர்சிவல் பாதிரியாரின் கீழ் பணிபுரிந்தவர். பஞ் சதந்திரக் கதை மரபில், தமிழில் நீதி நூற்றிரட்டு என்பவை பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருப்பெறத் தொடங்கியது. 1841இல் பள்ளிக் கூடங்கள் உருவாக்கப்பட்ட பின்னர், பள்ளிப் பாடநூல் களாகவும் நீதிநூல்கள் தேவைப்பட்டன. கிறித்தவ நிறுவனங்கள் இவ்வகையான நீதிநூல்களை அச்சிடுவதில் மிகுந்த அக்கறை காட்டின. இப்பின்புலத்தில் உருவானதுதான் 'விநோத ரஸ மஞ்சரி' போன்ற நூல்கள். இவ்வகை மரபிற்கு இந்நூல் முன்னோடி. 1867-1900 ஆண்டுகளில், நீதிமஞ்சரி, நீதிநூற்றிரட்டு, விவேக சிந்தாமணி எனும் பெயர்களில் சுமார் இருபது தொகுப்புகள் வெளிவந்துள்ளன. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம் ஆகிய நூல்களை இணைத்துத் திரட்டாக வெளியிட்டனர். சமயங்களைக் கடந்து இத்தொகுப்பு உருவானது. இவ்வகைத் தொகுப்பு தமிழ் அச்சுச் சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தை இன்றும் கூடப் பெற்றிருப்பதைக் காண்கிறோம். தமிழ்க் கல்வி பயிற்றுதலில் நீதிபோதித்தல் எனும் செயல்பாட்டை நோக்கி உருவானவை இத்தொகுப்புகள். இவை பாடல்களாக, கதைகளாகப் பல்வேறு வடிவங்களில் உருவாயின. கதைமரபில் தொகுத்ததில் வீராசாமி செட்டியாரே முன்னோடி. இவ்வகையான தொகுப்புகள் சுவடிகளில் இல்லை. புதியகல்வி முறையும் புதிய தொழில் நுட்பமும் சேர்ந்து இவ்வகையான தொகுப்பு மரபை உருவாக்கியுள்ளது. இத்தொகுப்பு மரபு குறித்து விரித்து எழுத வாய்ப்புண்டு.

"தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு. இஃது திருத்தணிகை கந்தப்பையர் குமாரர் சரவணப் பெருமாளை யரால் பரிசோதிக்கப்பட்டு இவராலும் பொய்கைப் பாக்கம் பழனியப்பா முதலியார் குமாரர் சுப்பராய முதலியாராலும் தொண்டை மண்டலத்து வேளாளர்களில் பூம்பாவை அண்ணாசாமி முதலியார் குமாரர் சிங்கார முதலியார் கேட்டுக்கொண்டபடி, சென்னைப் பட்டணத்தில் டி.தி. சரவணப் பெருமாளையர் குமாரர் கந்த சுவாமியாரின் கல்வி விளக்க அச்சுக் கூடத்தில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது." 1840ஆம் ஆண்டில் வெளிவந்த தாயுமானவர் பாடற்றிரட்டின் இரண்டாம் பதிப்பின் அட்டையில் மேல் கண்ட தகவல்கள் உள்ளன. இதைப் போலவே குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், குமரகுருபரர் பாடல்கள், அருணகிரியார் பாடல்கள், பட்டினத் தார் பாடல்கள் மற்றும் இராமலிங்கர் பாடல்கள் அனைத்தும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தொகுக்கப்பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டு முதல் வாய்மொழி மரபுகளிலும் தனித்தனிப் பாடல்களாகச் சுவடிகளிலும் இருந்த மேற்குறித் தவர்கள் பாடல்கள் பத்தொன் பதாம் நூற்றாண்டில் தான் தொகுக்கப்பட்டன. பட்டினத்தார், அருணகிரியார், குணங்குடியார், குமரகுருபரர், தாயுமானவர், வள்ளலார் எனும் ஆளுமைகளின் முழுமை இவர்களது பாடல்கள் தொகுப்பாக உருவான பின்னர்தான் கண்டறியப் பட்டது என்று கூற முடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தொடங்கி அந்த நூற்றாண்டின் இறுதிக்குள் மேற்குறித்தவர்களின் பாடல்கள் தொகுத்து அச்சிடப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் இத்தொகுப்புகள் சமய நம்பிக்கை யாளர்களிடத்தில் பூசைஅறைத் தொகுப்புகளாக வடிவம் பெற்றன. சமய நம்பிக்கை வளர்வதற்கும் அச்சு ஊடகம் உதவியிருக்கிறது.

மேற்குறித்தவர்களின் தொகுப்புகளில் வள்ளலார் தொகுப்புகள் உருவான முறைகள் நவீன புலமைத்தளமும் மரபும் இணைந்து செயல் பட்டிருப்பதைக் காட்டுவதாக அமைகிறது. வள்ளலார் ஆக்கங்கள் ஓலைகளில் எழுதப் படவில்லை. அவரே தாளில் எழுதியிருக்கிறார். அச்சுக் கருவியின் செயல்பாடு குறித்து அறிந்திருந்தார்.

"அன்றி ஒற்றியூர் பாடல்களையும் மற்றவை களையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப் படுகிறேன். அவைகளைத் தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத் திலிருக்கின்ற இன்னுஞ் சில பாடல்களையும் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்களிஷ்டம்". (திருவருட்பா. திருமுகப்பகுதி. பால கிருஷ்ணபிள்ளை பதிப்பு. 60: 1959) இவ்வரிகள் ரத்தின முதலியாருக்கு, இராமலிங்கர் எழுதியவை. இவ்வகையில் ஆறு திருமுறைகளாக இராமலிங்கர் பாடல்கள் தொகுக்கப்பட்ட வரலாறு அவரது வாழ்க்கை வரலாற்றோடு இணைந்தது. இத்தொகுப்பு மரபைப் படைப்பாளி - காலம் - படைப்பை நுகர்வோர் என்ற அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் பின்னர் 1930-1960களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆ. பால கிருஷ்ணபிள்ளை, வள்ளலாருக்கு உருவாக்கிய 12 தொகுப்புகள், தமிழ் தொகுப்பு மரபில் தனித்துப் பேசும் சிறப்புடையவை. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களின் புலமைத்தளமும் அவர் இராமலிங்கரை ஆவணப்படுத்திய முறையும் தமிழ்ப்பதிப்பு மற்றும் தொகுப்பு மரபின் உச்சகட்ட வளர்ச்சி என்று கூறவேண்டும். தனக்குக் கிடைத்த ஆவணங்களை முறையாகப் பயன்படுத்தி பன்னிரண்டு தொகுப்புகளை ஆ. பாலகிருஷ்ண பிள்ளை செய்துள்ளார். இவ்வகையான தொகுப்புகள் தமிழ் ஆளுமைகளுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

எனவே, இரண்டாம் பக்தியுகத்தை உருவாக்கிய வர்கள் எனக் கூறப்படும் ஆளுமைகளின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டதற்கும், தமிழ் சைவ மரபின் செயல்பாடுகளுக்கும் நெருக்க மான உறவுண்டு. இவ்வகையான செயல்பாட்டை நவீன அச்சு உருவாக்க மரபில் வைணவம் ஏன் முன்னெடுக்கவில்லை என்பது குறித்தும் உரையாடும் தேவையுண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டு முடிய செயல்பட்ட தொகுப்பு மரபிற்கும் அச்சிற்குமான உறவு குறித்த உரையாடலில், இருபதாம் நூற்றாண்டின் இறுதியும் இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கமும் கணிப்பொறி புழக்கத்திற்கு வந்ததின் மூலம், புதிய தொகுப்பு மரபு உருப்பெறுவதாகக் கருதலாம். தோழர் ப. ஜீவானந்தம் தொடர்பாகச் சுமார் 7500 பக்கங்கள் 4 தொகுதிகளாகத் தொகுக்க முடிந்தது எனில் அது கணிப்பொறியால் தான் சாத்தியமானது. நாள்தோறும் வெளிவந்த செய்தித்தாள்களில் உள்ளவற்றைக் கணிப்பொறி வழி படமெடுத்து, அச்சிட முடிந்தது. எனவே தொழில்நுட்பமும் புலமைத்தள செயல்பாடுகளும் தம்முள் கொண்டுள்ள உறவைக் கணக்கில் கொள்வது அவசியம். இதன் மூலம் தொகுப்பு மரபு போன்று பல்வேறு புலமைச் செயல்பாட்டின் வரலாற்றைத் தர்க்கமாக அறிய இயலும்.

* * *

இருபதாம் நூற்றாண்டில் நவீன ஆக்கங்கள் தொடர்பாக நடைபெற்ற / நடைபெறும் தொகுப்பு மரபுகள் குறித்தும் உரையாடும் தேவையுண்டு. அரசு சார்ந்த நிறுவனங்கள், தனிப்பட்ட வெளியீட்டு நிறுவனங்கள் ஆகியவை தொகுப்புகளை உருவாக்கியுள்ளன. இவைகளைத் தொகுத்தவர்கள் பல்வேறு செல்நெறிகள் குறித்தும் அக்கறை கொண்டவர்களாகக் கருத இயலாது. தமது கருத்துநிலைச் சார்பில்தான் தொகுப்பில் செயல்பட்டுள்ளனர். க.நா.சு., அசோகமித்திரன், வெங்கட்சாமிநாதன் ஆகியோரின் தொகுப்புப் பணிகளை மேற்குறித்த வகையில் காணமுடியும். நகுலன் ஒரு படைப்பாளியாகச் செயல்பட்டு தொகுத்த 'குருஷேத்திரம் - ஒரு இலக்கியத் தொகுப்பு (1968)' வாசகர் வட்டம் தொகுத்த 'இன்றைய தமிழ் இலக்கியம்' - கதை, கட்டுரை, நாடகம் (1965) ஆகிய இரு தொகுப்புகள் இருபதாம் நூற்றாண்டின் தொகுப்பு மரபில் தனித்துச் சொல்லும் வகையில் உள்ளன. நாட்டுடைமையாக்கப்பட்ட ஆக்கங்களின் தொகுப்புகள் எவ்வித வரைமுறையின்றி அச்சடிக்கப்படுகின்றன. இவற்றைக் காலம் மதிப்பிடும்.

முடிவாக

தமிழில் செந்நெறி இலக்கியத் தொகுப்பு மரபு இயற்கை நெறியில் அமைந்திருக்கிறது. அவைதிக சமயமரபு சார்ந்த தொகுப்பு நெறிகள் நீதிபோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வைதீக சமய மரபு வழிபாட்டு நெறிகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. ஸ்தலமுறை, பண்முறை என்பவைகள் வழிபாடு சார்ந்தவை. புரவலர்கள் சார்ந்து நிகழ்ந்த தொகுப்புகளில் இலக்கியச் சுவைப்பு என்னும் நிலவுடைமைப் பண்பு மேலோங்கியுள்ளது. அச்சுமரபு வழி உருவாகும் தொகுப்புகள் மேற்குறித்த நெறிகளிலிருந்து மாறுபட்ட பல்வேறு புதிய தன்மைகளைக் கொண்டுள்ளன.

■



இருபதாம் நூற்றாண்டுத் தொகுப்புகள்

புனைகதைத் தொகுப்பு மரபு



(ஆ. மாதவன், கி. ராஜநாராயணன், சுந்தர ராமசாமி, ஜி. நாகராஜன், கிருஷ்ணன் நம்பி, தஞ்சை ப்ரகாஷ், க.நா.சு., நீலபத்மநாபன்)

கல்பனா சேக்கிழார்







மாந்தனுடைய அறிவுச் செயல்பாடுகளுள் இலக்கியத் தொகுப்பு உருவாக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழில் சங்க நூல் தொகுப்பின் தொடர்ச்சியாகப் பல தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் அச்சு இயந்திரங்களின் ஆளுமையால் , இலக்கிய உருவாக்க மரபில் ஏற்பட்ட புதிய இலக்கிய வடிவங்கள் கவனப்படுத்தப்பட்டு, அவற்றைத் தொகுக்கும் செயல்பாடுகள் நிகழ்ந்தன. 1930களில் இச்செயல்பாடுகள் தொடங்கியது என்றாலும் 1990களுக்குப் பிறகே பல தொகுப்புச் செயல்பாடுகள் நிகழ்ந்தன.

அச்சு ஊடக அசுர வளர்ச்சியினால் தமிழ்த் தொகுப்பு மரபில் சில புதிய முறைமைகள் உருவாகின. குறிப்பாக ஒரு படைப்பாளரின் ஆக்கங்களை முழுமையாகத் தொகுப்பதில் சில தனிநபர்களும், சில பதிப்பகங்களும் முனைந்து செயல்பட்டனர். அதன் விளைவாகப் பல படைப்பாளர்களின் முழு ஆக்கங்கள் தொகுக்கப்பட்டன.

அவற்றுள் ஆ. மாதவன் (1934), கிராஜநாராயணன் (1923), சுந்தர ராமசாமி (1931- 2005), ஜி. நாகராஜன் (1929 - 1981), கிருஷ்ணன் நம்பி (1932 - 1976), தஞ்சைப்ரகாஷ் (1943 - 2000), க. நா. சு. (1912 - 1988), நீலபத்மநாபன் (1938) ஆகியோரின் புனைகதைத் தொகுப்புச் செயல்பாடுகள் பற்றிய உரையாடலாக இக்கட்டுரை அமைவதோடு, புனைகதைத் தொகுப்பு மரபு வளர்ந்த சூழல், ஒரு படைப்பாளரின் ஒட்டுமொத்த ஆக்கங்களைத் தொகுக்கும்போது பின்பற்றப்படும்

முறைமைகள், ஏற்படும் சிக்கல்கள், தொகுப்பின் தேவை, படைப்பு. - தொகுப்பு - வாசகன் இவற்றுக்கு இடையேயான ஊடாட்டம் பற்றிய உரையாடலாகவும் அமைகின்றது.

நவீன இலக்கியத் தொகுப்புச் செயல்பாடுகள் நிறுவனம் சார்ந்தும், தனிமனித முயற்சியினாலும் படைப்பாளர்களின் படைப்புகள் தனித்த நிலையிலும், கவிதைகள், கட்டுரைகள், புனைகதைகள், நாடகங்கள் போன்றவற்றின் கலவையாகவும், பல படைப்பாளர்களின் பல்வேறு இலக்கிய வடிவங்களின் கதம்பமாகவும் உருவாக்கப்பட்டன.

புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந. பிச்சமூர்த்தி, க.நா.சு., மௌனி, பி.எஸ். ராமையா போன்றோரின் கதைகள் சிறு தொகுப்புகளாகத் தொகுக்கப்பட்டன. பல்வேறு இதழ்களில் பல சமயங்களில் இடம்பெற்ற கதைகள் மட்டுமல்லாமல், தொகுப்புக்காகவும் கதைகள் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டன. அதே நேரத்தில் நூல் வெளியிடுவதில் பதிப்பகத்தார் காட்டிய மெத்தனப் போக்கையும் க.நா.சு குறிப்பிடுகின்றார்.

இந்த நூலில் அடங்கியிருக்கிற 15 கதைகளும் பல்வேறு சமயங்களில் பல்வேறு நூல்களிலும் பத்திரிக்கைகளிலும் சேர்ப்பதற்காக எழுதப்பட்டவை. சில நூல்கள் தொகுப்புக்காகவே எழுதப்பட்டாலும் நூல் வெளியிடுவர் தமிழ்நாட்டில் உள்ள முறைப்படி காலதாமதம் ஆனபோது பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டன. (க.நா.சு. கதைகள் முதல் தொகுதி, முன்னுரை, 1988)

தனித்தனித் தொகுப்புகளாக மட்டுமல்லாமல், அக்காலகட்ட படைப்பாளர்களின் புனைவாக்கங்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் 1959 இல் சாகித்திய அக்காதெமி தமிழ்ப் படைப்பாளர்களின் புனைவாக்கங்களைத் தேர்ந்தெடுத்து தொகுத்து வெளியிட்டது.

ஒரு நூற்றாண்டின் இலக்கிய மரபு, சூழல், செயல்பாடு, சமூக அசைவுகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் நிலையிலும் தொகுப்புகள் உருவாக்கப்பட்டன. 1957இல் கலைமகள் இதழ் கொண்டு வந்த கலைமகள் கதம்பகம் (1932 - 1957) 1968 இல் நகுலன் தொகுத்த குருஷேத்திரம் ஒரு இலக்கியத் தொகுப்பு, 1957 இல் வாசகர் வட்டம் கொண்டு வந்த இன்றைய தமிழ் இலக்கியம், அம்ருதா பதிப்பகம் தொகுத்த காலத்தின் கண்ணாடி, போன்ற தொகுப்புகள் குறிப்பிடத்தக்கன.

இன்றைய சூழலில், அச்சு மரபில் ஏற்பட்ட புதிய வீச்சு, வாசிப்பாளரின் எண்ணிக்கை உயர்வு, ஒரு படைப்பாளரின் ஒட்டுமொத்த ஆக்கங்களையும் தொகுத்து வாசிக்கும் மனப்போக்கு ஆகியவற்றால் ஒரு படைப்பாளரின் ஒட்டுமொத்த ஆக்கங்களையும் வெளிக்கொண்டு வரும் நோக்கில் தொகுப்புச் செயல்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன. அடையாளப் படுத்தப்பட்ட எழுத்தாளர்களின் பிரதிகள் மட்டுமே தொகுக்கப்பட்ட நிலை மாறி இன்று படைக்கப்பட்ட அனைத்துப் பிரதிகளுமே தொகுக்கப்பட வேண்டும் என்னும் முனைப்பால், பல தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இத்தொகுப்புகள் அனைத்துத் தரப்பு வாசகனின் தேவையைப் பூர்த்தி செய்வதாகத் தொகுக்கப் பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் கூறமுடியும். சில தொகுப்புகளைப் பார்க்கும் போது வணிக ஆதாயத்தோடு, தங்கள் பதிப்பகங்களின் நூல் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற முனைப்பு மட்டுமே இருப்பதைக் காணமுடிகின்றது.

பொதுவாகப் புனைகதைகளைத் தொகுக்கும் போது கீழ்க்காணும் முறைமைகளே பின்பற்றப் பட்டுள்ளன.

காலவரிசையில் பதிப்பித்தல்.

தொகுப்பாளரின் இரசனைக்கு ஏற்றவாறு பதிப்பித்தல்.

வெளியான இதழ்களின் அடிப்படையில் பதிப்பித்தல்.

சிறுசிறு தொகுப்புகளாக வெளிவந்த தொகுப்புகளின் அடிப்படையில் பதிப்பித்தல்.

எவ்விதமான அடிப்படையும் இல்லாமல் பதிப்பித்தல்.



கல்பனா சேக்கிழார்: அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். நோக்கு, தமிழ்ப் பொழில், குறள்அரசு ஆகிய இதழ்களில் கட்டுரைகள் எழுதிவருகிறார். இவரின் நூல்கள்: 'திருக்குறள்–பரிதியார் உரைத்திறன்', 'புறநானூற்றில் தமிழர் வாழ்வியல்', 'பரிதியார் உரை', 'கணினியும் கன்னித்தமிழும்' ஆகியனவாகும்.

ஆ. மாதவன் (தமிழினி 2001), கி. ராஜநாராயணன் (அகரம் 2004), ஜி. நாகராஜன் (காலச்சுவடு, 2007), சுந்தர ராமசாமி(காலச்சுவடு, 2006,2008), கிருஷ்ணன் நம்பி (காலச்சுவடு, 2009), தஞ்சை ப்ரகாஷ் (காவ்யா, 2004), நீலபத்மநாபன்(காவ்யா, 1994,2008), க.நா.சு. (காவ்யா, 2007) ஆகிய படைப் பாளிகளின் கதைத் தொகுப்புகளில் பெரும்பாலும் காலவரிசை முறையே பின்பற்றப்பட்டுள்ளது.

ஆ. மாதவன் கதைகள் இரண்டு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் விமர்சனச் சூழலில் புறக்கணிப்பிற்கு உள்ளான இவருடைய படைப்பு களைத் தமிழ் வாசகர்களுக்கு வழங்குவதோடு மாதவனின் பிரதிகளை மறுவாசிப்பிற்கு உட்படுத்தி, சமகாலப் படைப்பாளர்களின் படைப்புகளில் இருந்து இவரின் படைப்பு வேறுபடும் நிலையினை வாசகனுக்கு வழங்கும் பொருட்டு, (மறுவாசிப்பில் மாதவனின் சிறுகதைகள்) எம். வேதசகாய குமாரின் முன்னுரையோடும் (தீமை நடமாடும் தெரு: ஆ. மாதவனின் புனைவுலகு) ஜெயமோகனின் விமர்சனத்தோடும் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் 32 கதைகளும் இரண்டாம் தொகுதியில் 33 கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் 39 கதைகளுக்கு மட்டும் வெளியான ஆண்டு, இதழ் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மற்ற கதைகளுக்கு எவ்விதமான குறிப்புகளும் காணப் படவில்லை. தொகுப்பு பற்றிய செய்திகளோ, எம்முறையில் தொகுக்கப்பட்டுள்ளன என்னும் குறிப்புகளோ இல்லை.

கி.ராஜநாராயணின் கதைகளை அகரம் பதிப்பகம் கி.ரா. வின் 75ஆம் ஆண்டு பவளவிழா விற்காக நான்காம் பதிப்பாக 2008இல் பதிப்பித்துள்ளது. இத்தொகுப்பில் 74 கதைகள் இடம்பெற்றுள்ளன. கி.ரா. முன்னுரையோடு முன்பு வந்த தொகுப்புகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக ஆய்வாளர்கள் பயன்கொள்ளும் வகையில் கதைகள் காலவரிசைப்படி தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

க.நா.சு., தஞ்சைப்ரகாஷ், நீலபத்மநாபன் ஆகியோரின் படைப்புகளைக் காவ்யா பதிப்பகம் தொகுத்துள்ளது. இத் தொகுப்புகள் அனைத்திலும் கால வரிசைமுறை பின்பற்றப்பட்டுள்ளன. க.நா.சு. சிறுகதைகள் என்னும் தலைப்பில் 1943 இல் க. நா.சு. எழுதிய முன்னுரையோடு 67 கதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. க.நா.சு. தொகுப்புகளான தெய்வஜனனம்(1943), அழகி (1944) ஆடரங்கம் (1955) மணிக்கூண்டு (1961) கருகாத மொட்டு (1966) ஆகியவற்றில் தொகுக்கப்பட்ட 54 கதைகள் காலவரிசை முறையிலும் இறுதியில் கலாமோகினி, இலக்கியவட்டம், சரஸ்வதி, கலைமகள், ஞானரதம், கசடதபற, தீபம் ஆகிய இதழ்களில் கிடைத்த 13 கதைகள் இதழ்களின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டுள்ளன.

தஞ்சைப்ரகாஷின் கதைத் தொகுப்பில் 31 கதைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்துக் கதைகளும் காலவரிசைப்படி, இடம்பெற்ற இதழ் களோடு தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் மங்கையர்க்கரசி ப்ரகாஷின் முன்னுரையும், ப்ரகாஷ் தினமணி கதிரில் எழுதிய முதல் பிரசவம் என்னும் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

நீலபத்மநாபனின் 13 கதைகள் வெள்ளம் என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. 1994இல் பதிப்பித்த பதிப்பு எவ்வித மாற்றங்களும் இல்லாமல் அப்படியே 2008இல் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் 1994இல் நீலபத்மநாபன் எழுதிய முன்னுரையும் அவருடைய நேர்காணலும் இடம்பெற்றுள்ளது. கதைகளின் இறுதியில் வெளிவந்த இதழும் ஆண்டும் இடம்பெற்றுள்ளன.

சுந்தர ராமசாமியின் முழுக்கதைகள் என்னும் தொகுப்பில் 72 கதைகள் இடம்பெற்றுள்ளன. முதல் பதிப்பு 2006லும் இரண்டாம் பதிப்பு 2008லும் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. மற்ற பதிப்புகளில் இல்லாமல் இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள கதையினைப் பற்றிய குறிப்பும், பின்னிணைப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள விவரங்களும் பதிப்புரையில் கொடுக்கப் பட்டுள்ளன.

படைப்பாளருடைய பிற நூல்களின் தொகுப்பு, படைப்பாளர் பற்றிய சிறு குறிப்பு, ஒவ்வொரு கதைகளின் கீழே வெளியான இதழ், ஆண்டு கொடுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் அரவிந்தன் பின்னுரையோடு, இதுவரை வெளிவந்துள்ள சுந்தர ராமசாமியின் சிறுகதைத் தொகுப்புகளின் சமர்ப்பணம், முன்னுரை, கதைப்பட்டியல் விவரங்கள் ஆகியன தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜி. நாகராஜன் ஆக்கங்களை ராஜமார்த்தாண்டன் தொகுத்துள்ளார். இத்தொகுப்பு ஜி. நாகராஜனின் நாவல்கள், சிறுகதைகள்,கவிதைகள், உரைநடை, ஆங்கிலப்படைப்புகள் என ஜி. நாகராஜனின் ஒட்டுத் மொத்த ஆக்கங்களின் தொகுப்பாக விளங்குகின்றது. பின்னிணைப்பில் வாழ்க்கைக் குறிப்பும், சுந்தர ராமசாமி கண்டதும் கேட்டதும் சிறுகதைத் தொகுப்பிற்கு எழுதிய முன்னுரை, ஜி. நாகராஜன் படைப்புகளைத் தொகுத்த சி. மோகன் 1997 இல் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி இடம்பெற்றுள்ளன.

கிருஷ்ணன் நம்பி ஆக்கங்களை (முழுத்தொகுப்பு) ராஜமார்த்தாண்டன் தொகுத்துள்ளார். இத் தொகுப்பில் 23 சிறுகதைகள், கவிதைகள், குழந்தைப் பாடல்கள், கட்டுரைகள், கடிதங்கள், நூல் முகவுரைகள், எழுத்து அரங்கம், மேசைக் குறிப்புகள், பின்னிணைப்பில் சுந்தர ராமசாமி கிருஷ்ணன் நம்பி கதைகள் தொகுப்பிற்காக எழுதிய முன்னுரை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இத் தொகுப்பில் முன் தொகுப்பில் தொகுக்கப்படாத மூன்று சிறுகதைகள் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்புகளில் கிரா. வின் தொகுப்பைத் தவிர பிற தொகுப்புகள் அனைத்தும் காலவரிசை முறையைப் பின்பற்றித் தொகுக்கப்பட்டுள்ளன. காவ்யா பதிப்பகத் தொகுப்புகள் அனைத்துத் தரப்பு வாசகனும் பயன்கொள்ளும் நிலையில் தொகுக்கப்படவில்லை. தமிழினி தொகுப்பும் முழுமை பெற்ற தொகுப்பாக அமையவில்லை. ஆகையால் இத்தொகுப்புகள் எதிர்காலத் தேவையை மனதில் இருத்தி மீண்டும் தொகுக்கப்பட வேண்டும்.

காலச்சுவடு தொகுத்துள்ள மூன்று படைப்பு களும் படைப்பாளரின் வாழ்நாளுக்குப் பிறகு தொகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகையால் இவர்களுடைய தொகுப்புகளை முழுத் தொகுப்புகளாகக் கொள்ளலாம். காலச்சுவடு தொகுப்புகள் பொது, ஆய்வு தள நுகர்வோரின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் நிலையில் தொகுக்கப்பட்டுள்ளன. பதிப்பகத்தார் தொகுக்கும் தொகுப்பை விட, தொகுப்பாசிரியர் ஒருவரைக் கொண்டு தொகுத்துள்ள தொகுப்பு எதிர்கால பயன்பாட்டுக்கு உகந்ததாக அமைந்துள்ளது.

வாழும் காலத்து ஒரு படைப்பாளனின் ஒட்டுமொத்த ஆக்கங்களைத் தொகுத்தல் என்பது சாத்தியமில்லை, அந்த நிலையில் ஆ. மாதவன், கிரா., நீலபத்மநாபன் தொகுப்புகளை ஒட்டுமொத்த தொகுப்புகள் என்று கூறமுடியாது. அதே நேரத்தில் மறுபதிப்பு செய்யும்போது இடைப்பட்ட காலத்தில் அப்படைப்பாளர்களின் ஆக்கங்களைச் சேர்த்து மறுபதிப்புச் செய்வது தேவையாகின்றது.

தமிழ்ச் சிறுகதைகளைத் தொகுப்பது என்பது கல்லில் நார் உரிக்கும் செயல் (காலத்தின் கண்ணாடி: xIII எனப் பேரா. வீ. அரசு கூறுவது போல புனைவாக்கத் தொகுப்பு பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையேதான் சாத்தியமாகிறது. தொகுப்பாசிரியருக்கு இப்பணி சவாலாக அமைவது, எப்பொழுது என்றால் எதையும் விடுபடாமல் எதிர்காலத் தேவையைக் கருதி செம்பதிப்பாகப் பதிப்பிக்க வேண்டும் என்று எண்ணும் போது.

சில படைப்பாளர்கள் ஒரே புனைபெயரில் எழுதும் போதும்

ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்களில் ஒரே கதை மாற்றம் பெற்று அமையும் போதும்

காலவரிசைப்படுத்தும் போது ஒரே தேதியில் வந்த கதைகளில் எதனை முன் வைப்பது என்னும் போதும்

இதழ்களில் இடம்பெறாமல் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள கதைகளை வரிசைப்படுத்தும் போதும்

சிக்கல்கள் தோன்றுகின்றன. தொகுப்பாசிரியர் இச்சிக்கல்களைக் களைந்து அகவயச் சார்பு இல்லாமல் புறவயமாகத் தொகுப்புப் பணியை மேற்கொண்டுள்ளனரா என்பது இந்நூற்றாண்டில் காலவரிசை முறையியலை உள்வாங்கிய தொகுப்புப்

இவ்வகையான தொகுப்புகளில் கி.ரா. வின் தொகுப்பைத் தவிர பிற தொகுப்புகள் அனைத்தும் காலவரிசை முறையைப் பின்பற்றித் தொகுக்கப்பட்டுள்ளன. காவ்யா பதிப்பகத் தொகுப்புகள் அனைத்துத் தரப்பு வாசகனும் பயன்கொள்ளும் நிலையில் தொகுக்கப்படவில்லை. தமிழினி தொகுப்பும் முழுமை பெற்ற தொகுப்பாக அமையவில்லை. ஆகையால் இத்தொகுப்புகள் எதிர்காலத் தேவையை மனதில் இருத்தி மீண்டும் தொகுக்கப்படவேண்டும்.

பரவலாகத் தொகுக்கப்பட்டு வருகின்றன. புதிய இலக்கிய வகைகள் முழுமைக்கும் இது போன்ற தொகுப்புகள் தேவை. இத்தொகுப்புகள் பல்வேறு கூறுகளை உள்ளடக்கி, தேவைக்கு ஏற்றாற்போல எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்ளும் தன்மை வாய்ந்தது. காலமுறையியலை உள்வாங்கித் தொகுக்கப்பட்ட கிருஷ்ணன் நம்பி தொகுப்பினை அணுகும் வாசகன், கிருஷ்ணன் நம்பி பற்றிய அறிமுகம், தொகுப்பின் விவரணைகள், படைப்பினை ஊடறுத்துச் செல்லும்போது படைப்பாளரின் படிநிலை வளர்ச்சி , குழந்தைப்

பாடல்களோடு இலக்கிய உலகில் அறிமுகமாகும் கிருஷ்ணன் நம்பி பெரும்பாலும் புனைவாக்கத்திற்குக் குழந்தைகளின் உலகத்தினையே களமாகக் கொண்டு, அதுவும் தன் வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளையும், சமூக ஊடாட்டத்தோடு படைத்திருப்பதை உணரலாம். அவரே

அநேகமாய் என்னையே கதாநாயகனாக்கி, என் சொந்த ஆசைகளை, கனவுகளை, அசட்டுத் தனங்களை, வக்கிரங்களை, தோல்விகளை ஆதாரமாகக் கொண்டுதான் நான் கதைகளை எழுதுகிறேன். வாசகனை ஏமாற்ற அவசிய மானால் ஒரு மீசை, அல்லது ஒரு முண்டாசுக் கட்டு, அல்லது என் கண்ணையும், மூக்கையும்

> அடையாளப்படுத்தப்பட்ட எழுத்தாளர்களின் பிரதிகள் மட்டுமே தொகுக்கப்பட்ட நிலை மாறி இன்று படைக்கப்பட்ட அனைத்துப் பிரதிகளுமே தொகுக்கப்பட வேண்டும் என்னும் முனைப்பால், பல தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இத்தொகுப்புகள் அனைத்துத் தரப்பு வாசகனின் தேவையைப் பூர்த்தி செய்வதாகத் தொகுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் கூறமுடியும்.

கழற்றிப் போட்டு விட்டு, சங்கரனின் கண்ணையும் நாராயணனின் மூக்கையும் இரவல் வாங்கிக்கொண்டு ஏறக்குறைய என்னையே சங்கரநாராயணன் என்கின்ற புதிய ஆசாமியாக வாசகனுக்கு அறிமுகம் செய்கின்றேன். என்னை மையமாக வைத்து எழுதும் கதைகளை எனக்குப் பிடிக்கின்றன. (என்னைப் பொறுத்தவரை) வெற்றிகரமாகவும் எனக்குப் படுகிறது. எனக்கு ஒரு வேலை வேண்டும் அதில் வரும் நானும் ஒரு கனவில் வரும் நானும் கணக்கு வாத்தியாரில் வரும் நானும் நானே (கிருஷ்ணன் நம்பி ஆக்கங்கள்: 2009 : 369,370)

ஆக கதைக்குக் களமாகத் தன் வாழ்வியல் நிகழ்வுகளையே புனைவாகக் கொண்டு எழுதியதைக் குறிப்பிடுகின்றார். இத்தொகுப்பினை அணுகும் வாசகனும் அவருடைய வளர்ச்சிக்கேற்ப கதை மாந்தர்களும் பிரதியின் ஊடே மாறிக்கொண்டு இருப்பதை உணரலாம்.

புனைவாக்கங்கள் இதழ்களின் தன்மையைப் பொறுத்து மாற்றம் கொள்ளுகின்றன என்பதைத் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

சதங்கையில் கதை இப்படி முடிகின்றது.

..... அவன் சூட்டிய தாலியைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு விதவையின் கோலத்தில் கீழிறங்கி திரும்பிக் கூட பார்க்காமல் நேரே வீதியில் நடந்து போய்கொண்டிருந்தாள்.

கலைமகளில் இந்த பெண் என்ன செய்கின்றாள் தெரியுமா?

நெற்றியிலிருந்த குங்குமத்தை அழித்துவிட்டு, தலையில் காய்ந்து தொங்கிய பூவை எடுத்தெறிந்துவிட்டு, கையில் கிடந்த கண்ணாடி வளையல்களை உடைத்துக் கொண்டு, சேலை முன்றானையை எடுத்துத் தலையில் முக்காடிட்டு மெல்ல நடந்து அந்த வீட்டின் படியிலிருந்து இறங்கித் தலை குனிந்துவாறு வீதியில் நடந்தாள் சக்தி (சதங்கையில் சக்தி அல்ல பஞ்சு)

சதங்கையில் வரும் பஞ்சு தாலியைக் கழற்றி வைத்து விடுகிறாள்.

கலைமகளில் வரும் பஞ்சு, இல்லை சக்தி தாலியை கழற்றி வைக்கத் தயாரில்லை.(கிருஷ்ணன் நம்பி ஆக்கங்கள் : 2009 : 379)


ஆனால் இவருடைய கதை இதழ்களின் தன்மைக்கேற்ப மாற்றப்பட்டுள்ளதா என்பதை இத்தொகுப்பின் மூலம் அறியமுடியவில்லை.

அடையாளப்படுத்தப்பட்ட எழுத்தாளர்களின் படைப்புகள் தொகுத்த நிலை மாறி இன்று அனைத்துப் படைப்பாளர்களின் புனைவாக்கங்களும் தொகுப்புகளாக உருவாக்கப்படுகின்றன. பெரும்பாலும் காலவரிசை அடிப்படையிலேயே தொகுக்கப்படுகின்றன. ஆக காலவரிசை அடிப்படையில் தொகுக்கப்பட்டாலும், பொது, ஆய்வுத் தள நுகர்வோரின் தேவையை மனதில் இருத்தி செந்தொகுப்பாகத் தொகுக்கப்படுதல் எதிர்காலத் தேவையாகிறது..

■

தொகுக்கப்பட்ட சிறுகதைத் தொகுதிகள்

ம. மணிமாறன்





தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட இலக்கியப் பனுவல்களைத் தொகுத்துப் பார்த்திடும் வழக்கம் சங்ககாலத்தில் இருந்தே துவங்கியுள்ளது. எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் இன்ன பிற தொல் தமிழ் இலக்கிய வகைமைகளும் தொகுத்தவர், தொகுப்பித்தவர், செம்மையான பதிப்பினை உருவாக்கியவர் என்ற சரியான அடையாளங்களோடு தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இதன் வழி நாம் உணர்வது தமிழர்களின் ஆதி மனநிலையிலிருந்தே இப்படியான தொகுத்திடும் பழக்கம் துவங்கி இன்றுவரை தொடர்கிறது என்பதுதான்.

பின்னாட்களில் உருவான எல்லா இலக்கிய வகைமைகளைப் போல தமிழில் சிறுகதையும் ஆங்கிலம் கற்ற இந்தியர்களால்தான் உருவானது. வ.வே.சு. ஐயர், மாதவய்யா, பாரதி எனத் தமிழ்ச் சிறுகதைகளை அதன் துவக்கநிலையில் கண்டுணர்ந்து உருவாக்கியவர்களின் வரிசை இன்று விதவிதமான வடிவங்களில் ஆதவன் தீட்சண்யா வரை தொடர்கிறது.

சிறுகதைகளைத் தொகுத்துப் பார்த்திடும் பழக்கம் அதன் துவக்க காலத்தில் இருந்தே உருவாகத் துவங்கிவிட்டது. பல்வேறு மனநிலை களில் பல்வேறு தளங்களில் இயங்கிய

தன்னுடைய கதைகளைத் தொகுத்து ஒன்றாக்கிப் பார்த்திடும் போதுதான் படைப்பாளிக்கே தன்னுடைய படைப்பின் எல்லை, அதன் தரம், அதனுடைய இலக்கிய ஆற்றல் யாவும் உணரத் தலைப்பட்டது.

வ.வே.சு. ஐயர் புதுச்சேரியில் இருந்த நாட்களில் தொகுத்த "மங்கையர்க்கரசியின் காதல்" எனும் கதைத் தொகுப்பு தமிழில் உருவான முதல் சிறுகதைத் தொகுப்பாக இருக்கலாம். அன்றிலிருந்து இன்று வரை படைப்பாளிகள் பல்வேறு மாத இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளைத் தொகுத்துப் புத்தகமாக்குவதையும் அது குறித்துப் பெருமிதம் கொள்வதையும் உருவாக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்புகளுக்குப் படைப்பாளிகள் வரைந்திட்ட முன்னுரையை வாசிக்கிற எவரும் உணரமுடியும்.

தொண்ணூறுகளின் துவக்கத்தில்தான் ஒரு படைப்பாளி வெளியிட்ட அவனுடைய மொத்தச் சிறுகதைகளையும் தொகுத்திடும் சாத்தியம் உருவானது. அதற்கு தமிழ்க் கல்விப் புலத்தில் நவீன இலக்கியம் குறித்த அக்கறை கொண்டவர்கள் உருவாகத் துவங்கியதும், உலகம் முழுவதும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் புதிய தமிழ் வாசகர்களாக உருவாகியிருந்ததும், புத்தகச் சந்தைகளின் மீதான ஈர்ப்பும், அக்கறையும் வாசகர் மனங்களில் முளைவிடத் தொடங்கியதுமே, முழுத் தொகுப்பு உருவாகிடக் காரணம் என்று படுகிறது.

புதுமைப்பித்தன், கு.ப.ரா, மௌனி, கு.அழகிரிசாமி துவங்கி, ஜெயகாந்தன், வண்ணநிலவன், வண்ணதாசன், ராஜேந்திரசோழன் என வளர்ந்து இன்றைக்கு எஸ். ராமகிருஷ்ணன், கோணங்கி வரையிலான எல்லாத் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளிகளின் மொத்தத் தொகுப்பும் வாசகனின் கைக்குக் கிடைக்கிறது. ஒரே மூச்சில் படைப்பாளி களின் தொகுப்பினை வாசித்தறிகிற போது நாம் அடையும் மனநிலை மிக ரசமானது.

புதுமைப்பித்தனின் சிறுகதைகளைத் தொகுத்து காலச்சுவடு பதிப்பித்த பிரதியும் ஐந்திணை தொகுத்திட்ட பதிப்பின் கதையும் வேறு வேறு அல்ல; என்றாயினும் இரண்டையும் வாசிக்க நேர்கையில் அடைந்த மனநிலை வேறு வேறு என்பதை நுண்வாசகன் எளிதில் உணர்வான்.

தொகுக்கப்பட்டுக் கிடைக்கும் முழுச் சிறுகதைத் தொகுப்புகளில் வாசகத்தளத்தில் விவாதிக்கப் படாமல் கிடக்கிற கதைத் தொகுப்புகளைக் குறித்து கவனப்படுத்தலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

புதுமைப்பித்தனும், மௌனியும் தமிழ் வாசகர்களாலும், எழுத்தாளர்களாலும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்டு இருக்கிறார்கள். இந்த இரைச்சலில் அல்லது பரவசத்தில் உரிய கவனம் பெறாமல் போனவர் கு. அழகிரிசாமி. அவருடைய முழுக்கதைகளையும் கு. அழகிரிசாமி கதைகள் என சாகித்ய அகாடமி தொகுத்திருக்கிறது. இத் தொகுப்பினை வாசகனிடம் தருவிப்பதில் உருவான ஈடுபாடு உவப்பானதில்லை.

கரிசலின் நிறத்தை, அதன் ஆகிருதியான மனித மனங்களின் வாசத்தை விரிந்த பரப்பில் பதிவு செய்தவர் கு. அழகிரிசாமி. அவருடைய "திரிபுரம்' ராஜா வந்திருக்கார், அன்பளிப்பு, வெறும்நாய் போன்ற கதைகள் அமரத்துவமானவை.

"ராஜா வந்திருக்கார்'' எனும் கதையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் குழந்தைகளின் மனங்களில் உறைந்திருக்கும் பேரன்பு தமிழ்ச் சிறுகதைகளாக இன்றுவரை எல்லோராலும் வேறு வேறு வடிவங்களில் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை எழுதிக் கொண்டிருப்பவர் ச. தமிழ்ச் செல்வனாக் இருக்கலாம்; இரா. நடராசனாகவும் இருக்கக்கூடும். எஸ். ராமகிருஷ்ணன், மேலாண்மை, தனுஷ்கோடி ராமசாமி, பவா செல்லதுரை, ஆதவன்தீட்சண்யா, காமுத்துரை, என்டி. ராஜ்குமார், எஸ். செந்தில் குமாரிலிருந்து பா. திருச்செந்தாழை வரை யாவரும் அந்த மனங்களில் பொங்கிப் பெருகிய ஊற்றிலிருந்தே தங்களின் கதைகளை வடித்திருக்கிறார்கள். அப்படியான அமரத்துவம் பெற்ற படைப்பாளி குஅழகிரிசாமி. அவருடைய முழுத் தொகுப்பின் மீதும் அக்கறையான விவாதங்களையும், விமர்சனங் களையும் உருவாக்குவது தமிழ் இலக்கியச் சூழலை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவும். அது சாகித்ய அகாதமியோ, இன்ன பிற இலக்கிய நிறுவனங்களோ இணைந்து செய்திட வேண்டிய இலக்கியக் கடமையாகும்.

தமிழில் கவனம் பெற்றிருக்க வேண்டிய மிக முக்கியமான கதைத்தொகுப்பு தொண்ணூறுகளில் ஸ்நேகா பதிப்பகம் பதிப்பித்த கிருஷ்ணன் நம்பி கதைகள் தொகுப்பாகும். புறக்கணிப்பின் துக்கத்தைத் தன் கதைகள் எங்கும் படரவிட்டவர் கிருஷ்ணன் நம்பி, "தங்க ஒரு" கதையைப் படிக்கிற எவரும் சென்னைப் புறநகரின் வீதிகளில் தங்கவீடு தேடி அடைந்த மனநிலையை அடைவதைத் தவிர்க்க இயலாது. மாஜிக்கல் ரியலிச எழுதுதல் முறை தமிழுக்கு அறிமுகமாகாத நாளில் 50களில் எழுதப்பட்ட கதை காலத்தில் இன்றும் பொருந்தி நிற்கிறது. இதுவே ஒரு கதையின் மிகச்சிறந்த வெற்றியின் அடையாளம். இத்தொகுப்பில் உள்ள

நீலக்கடல் எனும் கதை 50 பக்கங்களையும் தாண்டித் தொடரும் கதை. தொகுப்பில் உள்ள "சுதந்திரம்" , "கணக்கு வாத்தியார்" எனும் இரு கதைகளும் இன்றைக்கும் விவாதிக்கப்படாமல் இறுகிப் போயிருக்கும் பள்ளிக் கல்வியின் நிலை குறித்த அழுத்தமான பதிவாகும். உயர்ந்த பீடங்களைக் கேள்விக்குள்ளாக்கும் கதையாடல் மரபினைக் கிருஷ்ணன் நம்பியின் கதைகள் எங்கும் வாசித்துணர முடிகிறது. இந்தத் தொகுப்பு குறித்துக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மிகவும் முக்கியமான விஷயம். இதற்கு எழுத்தாளர் சுந்தர ராமசாமி எழுதியுள்ள ஒரேதளத்தில் இயங்கிய சகாக்களின் மனநிலையோடு, கலைஞன் வாழ்வது குறித்த அச்சத்தையும் மிக நுட்பமாக வெளிப் படுத்தும் முன்னுரை.

கவிஞராக மக்கள் எழுத்தாளர் சங்கத்தில் துவங்கி பின்னாட்களில் நவீன கதை சொல்லியாக உருவெடுத்த "கந்தர்வனின் கதைகள்" தொகுப்பினை அவரின் மரணத்திற்குப் பிறகு "வம்சி" பதிப்பகம் தொகுத்திருக்கிறது. தொகுப்பெங்கும் விதவிதமான மனிதர்கள் அலைந்து கொண்டேயிருக்கிறார்கள். எல்லோரும் அன்பையும், கருணையையும், மகிழ்ச்சியையும் அட்சயப் பாத்திரத்தில் நிரப்பிக் கொண்டபடி விநியோகிக்கிறார்கள். அச்சத்தையும், கோபத்தையும் கண் முன் விரிக்கிறார்கள். "துண்டு", "கொம்பன்" போன்ற கதைகள் வெளிப் படையாகக் கதை சொல்ல. "பூவுக்கு கீழே", "மங்கலநாதர்" போன்ற கதைகள் வாசகனின் மனதிற்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டே கதை சொல்கிறது. வாசகனின் மனதிற்கு நெருக்கமான வார்த்தைகளால் கதைகள் தைக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வாளர் முருகேச பாண்டியன் எழுதியுள்ள கந்தர்வனின் கதைகள் குறித்த ஆய்வுரையைத் தவிர மிகப் பொருத்தமான ஆய்வுரைகள் இனிமேல்தான் நிகழ்த்தப்பட வேண்டும்.

முன்னூறுக்கும் அதிகமான கதைகளை எழுதியிருக்கிற மேலாண்மை பொன்னுச்சாமியின் முழுக்கதைத் தொகுப்பு இன்னும் உருவாகவில்லை. புலம் பெயர் தமிழர்களால் தொகுக்கப்பட்ட "மானாவாரிப் பூ" எனும் தொகுப்பு கவனமாகத் தொகுக்கப்பட்ட கதைத் தொகுப்பாகும். வார்த்தைகளின் வலைகளால் சூழ்ந்தபடி நகரும் மேலாண்மையின் கதைகள் எங்கும் கரிசல்காட்டு உழவுக் கட்டிகளைத் தையா, தக்கா என மிதித்து நொறுக்கியபடி சம்சாரிகள் உலா வருகிறார்கள். அவர்களின் மகிழ்ச்சி, துக்கம், கொண்டாட்டம், கோபம் என யாவும் கதைகளாகின்றன. அவர்களின் உள்மன உளைச்சல்களை நுட்பமாகப் பதிவு செய்த கதைகள் "ஜீள்தத்தின் உள்வட்டம்", "உயிரைவிட" எனும் கதைகளாகும். மேலாண்மைப் பொன்னுச்சாமியின் கதைகளின் மொழி, களம், கதைகள் நகரும் புலம் குறித்த நுட்பமான ஆய்வுகளைக் கல்விப்புலத்தில் அவருடைய கதைகளை ஆய்வு செய்த மாணவர்கள் வெளிக் கொணர முயற்சித்துள்ளனர். நவீன இலக்கிய வாசகனின் இடத்திற்கு மேலாண்மையின் கதைகள் வந்து சேர வேண்டும் என்று தோன்றுகிறது.

சாத்தூரில் சந்திக்கும் எழுத்தாளர்கள், இலக்கிய வாசகர்கள், மாணவர்கள் என யாவருடனும் இறப்பிற்குப் பிறகும் உரையாடிக் கொண்டேயிருப் பவர் "தனுஷ்கோடி ராமசாமி". அவரின் முழுத் தொகுப்பினை "நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்" பதிப்பித்திருக்கிறது. முழுத்தொகுப்பினையும் வாசித்து முடித்த பிறகும் நீண்ட நேரத்திற்குப் பிறகும் தனுஷ்கோடி ராமசாமியின் வார்த்தைகள் கேட்டுக் கொண்டிருப்பதை வாசகர்கள் உணரக் கூடும். உரத்துக் கதை சொல்லும் தனுஷ்கோடி ராமசாமியின் கதைகள் பொதுத்தளத்தில் விவாதத் திற்கு உள்ளானது எப்போதாவதுதான் தமிழில் நிகழ்ந்திருக்கிறது. தனுஷ்கோடியின் நாரணம்மா கதைக்கு எதிராக நர்ஸ்கள் போராடியதும். கஸ்பா கதை வந்த நாட்களில் வருவாய்த்துறை ஊழியர்கள் கதையைத் தடை செய்யச் சொல்லிப் போராடியதும் தமிழின் இலக்கிய வரலாற்றில் அழுத்தமாகப் பதிவாகவில்லை. அவரின் அரவணைப்பில் உருவானவர்களே எஸ். காமராஜ், மாதவராஜ், எஸ். லட்சுமணப் பெருமாள் எனும் எழுத்தாளர்கள்.

கு. அழகிரிசாமியின் கதை முடிச்சுகளில் இருந்து கதைக்கான களத்தையும், புதுமைப்பித்தனின் எள்ளலும் கலந்து எழுபதுகளில் எழுதத்



ம. மணிமாறன்: விருதுநகரில் வசிக்கிறார். மேல்நிலைப்பள்ளியில் கணித ஆசிரியர். தமிழ்ச்சிறுகதைகளை வாசக மனம் அறிந்திடச் செய்திடும் வகையில் "கதைகளும் கதையாடல்களும்" என்கிற நூலை எழுதியுள்ளார். 'சொல்லித்தீராதது' எனும் தலைப்பில் இரண்டாயிரத்திற்குப் பிறகான தமிழ்நாவல்கள் குறித்த வாசகக்குறிப்பினை இலக்கியச் சோலையில் தொடராக எழுதிவருகிறார்.

துவங்கியவர் ச.தமிழ்ச்செல்வன். இன்றைக்கு இலக்கிய அமைப்பின் பொறுப்பாளர், கலாசாரத் தளத்தில் மாற்றத்தை நிகழ்த்திட வேண்டி பயணித்துக் கொண்டேயிருப்பவர். பண்பாடு குறித்து விவாதத்தைத் தூண்டுகிற சிறு சிறு பிரசுரங்கள் எழுதியவர் என்கிற பன்முகத்தைக் கொண்ட படைப்பாளியாக மாற்றம் பெற்றிருந் தாலும் அடிப்படையில் ச.தமிழ்ச்செல்வன் தமிழின் தேர்ந்த புனைகதையாளர் தான் என்கிற முடிவிற்கு "தமிழினி'' தொகுத்துள்ள "ச. தமிழ்ச்செல்வன் கதைகள்" என்கிற அவரின் முழுத்தொகுப்பைப் படித்து முடிக்கிற கணத்தில் யாவரும் வந்து சேர்வர்.

எத்தனை அசாத்தியமான வாழ்க்கை, எளிய மனிதர்களின் மனங்களில் நிறைந்திருக்கும் நேர்மை, வைராக்கியம், கரிசல் வாழ்க்கையில் மட்டுமே காணக் கிடைக்கும் விசித்திர மன உணர்வென கவித்துவமான காட்சிகளால் நிறைந்திருக்கிறது தொகுப்பு. தமிழின் தலைசிறந்த சிறுகதைகள் எனப் பட்டியலிட்டால் அவற்றில் கட்டாயம் பங்கேற்கும் பலம் கொண்ட கதைகள் என "கருப்பசாமியின் அய்யா", "அரக்கு முத்திரை", "ஏவாளின் குற்றச்சாட்டுகள்" "அவரவர் தரப்பு" எனப் பலகதைகளைச் சொல்ல முடியும்.

> உரத்துக் கதை சொல்லும் தனுஷ்கோடி ராமசாமியின் கதைகள் பொதுத்தளத்தில் விவாதத்திற்கு உள்ளானது எப்போதாவதுதான் தமிழில் நிகழ்ந்திருக்கிறது. தனுஷ்கோடியின் நாரணம்மா கதைக்கு எதிராக நர்ஸ்கள் போராடியதும். கஸ்பா கதை வந்த நாட்களில் வருவாய்த்துறை ஊழியர்கள் கதையைத் தடை செய்யச் சொல்லி போராடியதும் தமிழின் இலக்கிய வரலாற்றில் அழுத்தமாகப் பதிவாகவில்லை. அவரின் அரவணைப்பில் உருவானவர்களே எஸ். காமராஜ், மாதவராஜ், எஸ். லட்சுமணப் பெருமாள் எனும் எழுத்தாளர்கள்.

சிக்கனமான சொற்களில் அசாத்தியமான மனிதக் காட்சிகளைத் தன் கதைகள் எங்கும் படரவிட்டவர் ச. தமிழ்ச்செல்வன். எங்கும் மனிதக் கூட்டம், மனிதர்களின் ஆசைகள், விருப்பங்கள், கோபங்கள், தப்பிதங்கள், புறக்கணிப்புகள் இவையே இவரின் படைப்புலகம். ஜி. நாகராஜனுக்குப் பிறகு கதைகள் எங்கும் விதவிதமாக மனிதர்களை அடுக்கி வைத்துப் பார்த்துப் பின் அவற்றினைக் கலைத்தும் போட்டு கதையாக்கியவர் ச. தமிழ்ச் செல்வன். அவரின் தொகுப்பு காலம் கடந்தும் வாழ்க்கையினைப் பதிவு செய்ததால் நிற்கிறது. ருசியான வாழ்வை கண்ணீரும் கம்பலையுமாக, சிரிப்பானியும் கூத்துமாகத் தனித்த மொழியில் மிக அழுத்தமாகப் பதிவு செய்திருப்பவர் எஸ்.லட்சுமணப் பெருமாள். இவரின் முழுக்கதை களின் தொகுப் பினை "வம்சி'' பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. எல்லாமே விஸ்தாரன விவரிப்புதான். கிராமத்துத் திண்ணைகளில் படுத்துக்கொண்டு கோடையின் இரவுகளைத் தங்களுடைய கதைகளால் நிரப்பிய பலரின் ஞாபகங்களின் தொகுப்பென இவரின் கதைகளை மதிப்பிடலாம். எல்லா மனிதர்களும் அவரவர் தரப்பின் ஞாபகங்களின்படியே வாழ்வினை நிகழ்த்துகிறார்கள்.

இந்தத் தொகுப்பினைப் படிக்கிறபோது எழுத்தில் வந்திருக்கிற காப்பியங்களின் மீதும், இதிகாசங்களின் மீதும் எளிய கிராமத்து மனிதர்கள் செவிவழியே, வழிவழியே சொல்லிப் பார்த்த கதைகள் தமிழில் வேறு எவரும் பதிவுறுத்தாத வாய்மொழி வரலாறாக இவரின் கதைகளுக்குள் இயங்கிக் கொண்டிருப்பதை உணர முடியும்.

இறுக்கமான மொழியும், அதிநவீனச் சொல்லாடல்களாலும் ஆட்டம் கண்டு கொண்டிருந்த நவீன இலக்கியப் பெருவெளியில் எளிய சொல், எளிய வாழ்க்கை, கட்டற்ற உரையாடல், ததும்பும் எள்ளல் என வாசிப்பின் மீது பெரும் சுவாரஸ்யத்தை வாசக மனதில் ஏற்படுத்தும் தன்மையிலானவை எஸ். லட்சுமணப் பெருமாளின் கதைகள்.

மொத்தத் தொகுப்பையும் படிக்கும்போது தும்பைப்பூ வேட்டி கட்டி, வெள்ளைத்துண்டு போட்டு பாராயாணம் படிச்ச கெங்கவநாயக்கரின் இடத்தில் இருந்து கொண்டு எஸ். லட்சுமணப் பெருமாள் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். சாத்தூரைச் சுற்றியுள்ள அவரின் நிலத்து மனிதர்களின் கதைகளைச் சொல்லில் அடங்காது, சொல்லி முடிக்க முடியாதது கதைகள் என்கிற முடிவிற்கு நாம் வருவதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழ்ச் சிறுகதைகளில் பதிவுறுத்தப்படாத வாழ்வினை எழுதத் துவங்கிய ஆதவன் தீட்சண்யாவின் கதைகள், தர்க்கித்து அறிவார்ந்த தளத்தில் நகரத்துவங்கியது. பின்னாட்களில் ஆதவன் தீட்சண்யா சிறுகதைகள் என அவரின் முழுத் தொகுப்பை "சந்தியா பதிப்பகம்''

வெளியிட்டுள்ளது. அவரின் கதைகளைப் படித்திட வாசகர்களுக்குச் சில முன்தேவைகள் அவசியம். காலம் காலமாகச் சொல்லப்பட்டு வந்த கதைகள் யாவும், வரலாறு என சமூகம் நம்பும் யாவற்றின் மீதும் அதிர்ச்சிகரமான கேள்விகளை முன்வைப்பதே ஆதவனின் கதைகள்.

எழுதப்பட்டு இறுதிப்படுத்தப்பட்ட வரலாற்றுக் குறிப்புகளின் மீது வேறு ஒன்றான வரலாற்றினை எழுதும் போது எழுதி இறுகிக்கிடந்த வரலாறும், ஆதவன் எழுதிப் பார்த்த வரலாற்றுக் குறிப்புகளும் இயைந்து கலந்து வேறு வரலாறு வாசக மனதில் ஊடாடுகிறது. எல்லாவற்றையும் காலந்தோறும் மதிப்பீடுகள், ஒழுக்கங்கள் எனக் கட்டமைத்து தான் உருவாக்கிய வெளிக்கும், புலத்திற்கும் வெளியே நிறுத்திய மக்கள் பெருந்திரளின் குரலை ஆதவன் தன் மொழியில் பகடித்துப் பார்க்கும்போது வாசக மனதில் ஆத்திரமும் கோபமும் மேலேறுகிற விசித்திரம் நடைபெறுகிறது. சமகாலத்தில் நிகழ்கிற கலாசார, அரசியல் நடவடிக்கைகளின் மீதான தன் கேள்விகளை "கடவுளுக்குத் தெரியாதவர்கள்" "நான் மற்றும் நீங்கள் சதாம்'' என கதையாக்கிப் பார்த்தாலும் அவை கால மாற்றத்தில் வேறு ஒரு கதையைப் போல ரூபம் கொள்வதை வாசகன் உணர முடியும். ஆதவன் தீட்சண்யாவின் கதைகள் வேறு எவரும் முயற்சித்திராத தனித்த மொழியில் நிகழும் கதையாடல்கள்.

தொண்ணூறுகளில் வண்ணநிலவன், வண்ணதாசன், கி.ரா., ராஜேந்திரசோழன் ஆகியோரின் முழுக்கதைத் தொகுதிகள் பதிப்பிக்கப் பட்டபோது தீவிரமான எழுத்தியக்கத்தில் இயங்கிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் எவரும் தன்னுடைய முழுத்தொகுப்பு வருவது குறித்த பெரும் விருப்பத்தில் இல்லை. மாறாக எழுதி முடித்த எல்லாம் முடிந்துபோன எழுத்தாளர் களுக்கே முழுத்தொகுப்பு போட வேண்டும். நாம் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்கிற உணர்வு நிலைக்கு நேர் எதிரானவை. முழுத் தொகுப்புகள் என்கிற முடிவிலும் உறுதியாக இருந்தார்கள். ஆனால் காலம் எல்லாவற்றையும் கலைத்துப் போட்டு விட்டது. இன்னும் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிற எழுத்தாளர்களின் இதுவரையிலான சிறுகதைகள் தொகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

"யுவன் சந்திரசேகரின்" முழுக்கதைகளைக் கிழக்குப் பதிப்பகம் தொகுத்திருக்கிறது. "ஜெயமோகனின் சிறுகதைத் தொகுதியையும்" எஸ். ராமகிருஷ்ணனின் முழுத்தொகுப்பையும் உயிர்மை பதிப்பகம் தொகுத்திருக்கிறது அடையாளம் கோணங்கியின் துவக்க காலக் கதைகளை "சலூன் நாற்காலியில் சுழன்றபடி" என்னும் தலைப்பில் தொகுத்துத் தந்திருக்கிறது. கதைகள் யாவும் தொகுக்கப்பட்ட பிறகும் கூட நாம் தொடர்ந்து தீவிரமாக இயங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் எனும் மனநிலை எழுத்தாளர்களுக்குத் தேவையாக இருக்கிறது என்பதைத் தொகுத்த சில மாதங்களுக்குள் ஜெயமோகன் "ஊமைச் செந்நாய்" எஸ். ராமகிருஷ்ணன் "பதினெட்டாம் நூற்றாண்டின் மழை" கோணங்கி "இருள்வ மௌத்திகம்" என அடுத்த தன் தொகுதிகளை வெளியிட்டதன் மூலம் நம்மால் உணர முடிகிறது.

தமிழில் எழுதிய, எழுதிக் கொண்டிருக்கிற யாவருக்கும் முழுத்தொகுதிகள் வெளிவந்து விட்டன. தமிழ்ச் சிறுகதைகள் உலக இலக்கியத்தின் தரத்திலானவை என்பதற்கான சாட்சிகளாக இத்தொகுதிகளை வாசித்துணரும் வாசகன் உணர்வான்.

பதிப்பகங்கள் தொகுப்பினை உருவாக்கியிருக் கிறது. எந்தப் புத்தகமும் எழுத்தாளன் குறித்த மிகச் சரியான சிறுகுறிப்பையும் சேர்க்கவில்லை. எழுத்தாளன் இயங்கி வந்த இலக்கியச் சூழல் குறித்த வாசகருக்கான குறிப்புகள் கதைகளை இன்னும் மன நெருக்கமாக்கிட உதவும். காலச்சுவடு உருவாக்கிய புதுமைப்பித்தன் கதைகளுக்கான செம்பதிப்பைத் தவிர வேறு எந்தத் தொகுப்பிலும் கதைகள் காலவரிசைப்படி தொகுக்கப்படவில்லை. வாசித்துணரும்போது ஏற்படும் எழுத்தாளனின் திறன் குறித்த பரிணாம வளர்ச்சியினை மிகுந்த குழப்பத்துடனே வாசகன் அறிகிறான். கதைகள் தனித்து வெளியிட்ட இலக்கிய இதழ்களின் பெயர்கள் கூட குறிப்பிடப் படவில்லை. பல தொகுப்புகளில் இந்தக் குறிப்புகள் யாவும் வாசகருக்கு இலக்கிய வரலாற்றினை எளிதாக அறிமுகம் செய்யும் சாத்தியம் கொண்டவை என்பதால் பதிப்பகங்கள் இனி முழுத்தொகுதிகளை உருவாக்கிடும்போது மிகுந்த கவனத்துடனும், செய் நேர்த்தியுடனும், கூடுதல் அக்கறையுடனும் உழைப்பைச் செலுத்த வேண்டும் என்று மட்டும் இப்போதைக்குச் சொல்லத் தோன்றுகிறது.

■



நவீன தமிழ்க் கவிதைத் தொகுப்புகள்

ந. முருகேச பாண்டியன்

இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியமுடைய தமிழ்க் கவிதை வரலாற்றில், கவிதைகளைத் தொகுப்பது காலந்தோறும் நடைபெற்று வருகின்றது. பண்டைக் காலத்தில் தமிழ் மொழியினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த புலவர்கள் எழுதிய கவிதைகளைத் தொகுத்து எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் உருவாக்கப்பட்டது தற்செயலானது அல்ல. ஒரு புலவர் நூற்றுக்கணக்கான பாடல்கள் எழுதியிருக்க வாய்ப்புண்டு. அவற்றிலிருந்து சில பாடல்கள் மட்டும் தொகுப்பாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான காரணங்கள் ஆய்விற்குரியன. மேலும் சில காலகட்டத்தில் பல புலவர்கள் பாடல்கள் எழுதிக் கொண்டிருக்கும் போது, சிலரின் சில பாடல்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவதில், நுண் அரசியல் பொதிந்துள்ளது. பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுப்பாக்க வேண்டுமென்ற முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டோர் பெரும்பாலும் பரவலாக இருக்க வாய்ப்புண்டு. அல்லது புலவரின் முயற்சிக்குப் பின்புலமாகத் தொகுப்பித்தவர் இருக்கலாம். தொகுப்பு முயற்சியில் ஈடுபட்டுக் கவிதைகளைத் தேர்ந்தெடுக்கும் தொகுப்பாளர் பெரும்பாலும் புலவராகத்தானிருக்க முடியும். கவிதையின் மதிப்பும் அக்கறையும் மிக்க புலவரால்தான் தொகுப்பு முயற்சியில் ஈடுபடுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம். கவிதைத் தொகுப்பு என்பது வெறுமனே தொகுப்பாளரின் இலக்கிய ரசனை சார்ந்ததாக மட்டும் அமைய வாய்ப்பில்லை. இனக்குழு, பால் வேறுபாடு, சாதிய ஏற்றத்தாழ்வு, பொருளியல் போன்றவை கவிதைத் தேர்வினில் ஆளுமை செலுத்துகின்றன.

தனிப்பட்ட கவிஞர் எழுதிய கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் தொகுக்கப்படுவதற்கும், பல்வேறு கவிஞர்களின் சில கவிதைகள் மட்டும் தொகுக்கப்படுவதற்கும், பருண்மையான வேறுபாடுகள் உள்ளன. கவிஞர்கள் பலரின் கவிதைத் தொகுப்பு, சமகாலத்திய இலக்கியப் போக்கினை முன்னிலைப்படுத்துகிறது. தொகுப்பாளரின் நோக்கம், சமூக அக்கறை, இலக்கிய மதிப்பீடு போன்றன கவிதைத் தொகுப்பாக்கத்தில் நுட்பமாகச் செயல்படுகின்றன.


தமிழைப் பொறுத்த வரையில் சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு எனத் தொடங்கிய தொகுப்பு முயற்சி, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தொடர்ந்தது. இத்தகைய மரபின் நீட்சியாகத்தான் புதுக்கவிதைகளின் தொகுப்பு நூல்களும் தமிழில் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தொகுப்பு நூல்கள் மூலம் வெளிப்படும் போக்குகள் ஆழ்ந்த ஆய்விற்குரியன.

யாப்பினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட தமிழ்ச் செய்யுள் வடிவமானது, காலந்தோறும் மாறி வந்துள்ளது. மருத்துவம், சோதிடம் போன்றவற்றைப் பதிவு செய்யவும் செய்யுள் வடிவம்தான் பயன்பட்டது. உரைநடையில் எழுதுவது பெரிதும் வழக்கற்ற சூழலில், ஐரோப்பியரின் இந்திய வருகைக்குப் பின்னர் மாற்றமேற்பட்டது. இராமலிங்கரின் அருட்பா, பாரதியாரின் மரபுக் கவிதைகள், வசனகவிதைகள் ஆகியன தமிழ்க் கவிதைப் போக்கினை மாற்றியமைத்தன. இத்தகு சூழலில், ஆங்கில இலக்கியத்தின் தாக்கத்தினால், தமிழில் புதுக்கவிதை என்ற புதிய இலக்கிய வடிவம் உருவானது. ந. பிச்சமூர்த்தி எழுதிய 'காதல்' என்ற கவிதை 1934 ஆம் ஆண்டு 'மணிக்கொடி' இதழில் வெளியானது. இதுவே தமிழில் வெளியான முதல் புதுக்கவிதை. அன்றைய கால கட்டத்தில் யாப்பின் ஆதிக்கம் தமிழில் வலுவாக இருந்தது. புதுக்கவிதை முயற்சிக்கு வரவேற்பில்லை. புதுக்கவிதை என்பது 'கோவேறு கழுதை', 'விஜிடபிள் பிரியாணி' எனக் கேவலமாகக் குறிப்பிடப்பட்டது. மரபு வழிப்பட்ட புலவர்களால், புதுக்கவிதை இலக்கிய வடிவம் பெரிதும் கண்டனத்திற்குள்ளானது. கு.ப.ரா., வல்லிக்கண்ணன், க.நா. சுப்பிரமணியன் போன்றோர் தொடக்கக் காலத்தில் புதுக்கவிதை எழுதியவர்களில் முக்கியமானவர்கள்.

புதுக்கவிதை வரலாற்றில் 1959 இல் சி.சு. செல்லப்பாவினால் தொடங்கப் பெற்ற 'எழுத்து' இதழ் தனித்துவமானது. பசுவய்யா, நகுலன், சி. மணி, எஸ். வைதீஸ்வரன், தி. சோ. வேணுகோபாலன், தருமு சிவராமு போன்ற கவிஞர்களின் முதல் கவிதை முயற்சிகள் 'எழுத்து'வில் தான் வெளியாகின. இலக்கிய விமர்சனத்திற்காகத் தொடங்கப்பெற்ற 'எழுத்து' இதழ், நாளடைவில் புதுக்கவிதை வெளியீட்டிற்கு முக்கியத்துவம் தந்தது. சிவாஜி, சூறாவளி, கலாமோகினி கிராம ஊழியன், மணிக்கொடி போன்ற இதழ்களும் புதுக்கவிதையை வெளியிட்டன. தமிழ் இலக்கியப் பரப்பில் புதுக்கவிதை வடிவம் காலூன்ற முயன்றது ஓரளவு வெற்றியடைந்தது. மரபுக்கவிதை, புதுக்கவிதை எனப் பிரித்துக் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. இன்று தற்கால இலக்கியத்தைப் பொறுத்தவரையில் கவிதை என்று குறிப்பிட்டால், அது பெரும்பாலும் புதுக்கவிதையைக் குறிக்கின்றது. கவிதைக்கு முன்பிருந்த 'புது' என்ற ஒட்டு மறைந்துவிட்டது. யாப்புடன் கவிதை எழுதுகின்ற தமிழ்க் கவிஞர்களின் கவிதை முயற்சிகளுக்கு இன்று வரவேற்பில்லை. மரபுக் கவிதைகள் அருகிக் கொண்டிருக்கின்றன.

முதல் கவிதைத் தொகுப்பு

புதுக்கவிதை 1950களில் ஆங்கில இலக்கியப் பழக்கமுற்ற நகர்ப்புறத்து நடுத்தர வர்க்கத்தினரிடம் மெல்ல அறிமுகமானது. மரபுக் கவிதையில் மேலோங்கியிருந்த சப்த ஒழுங்கும், சந்தமும் சிதைந்த நிலையில், கூர்மையான சொற்களின் மூலம் நம்பிக்கை வறட்சியையும், மனத்தின் நுணுக்கத்தையும் புதிய மொழியில் அறிமுகப்படுத்திய புதுக்கவிதை நாளடைவில் கவனம் பெற்றது.



ந. முருகேச பாண்டியன் : மதுரை மாவட்டம், சமயநல்லூரைச் சேர்ந்தவர். நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்.

இவரின் நூல்கள் : பிரதிகளின் ஊடே பயணம் (2003), தமிழ்மொழி பெயர்ப்பில் உலக இலக்கியம் (2004), சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள் (2005), என் இலக்கிய நண்பர்கள் (2006), சொற்கள் ஒளிரும் உலகம் (2006), மொழி பெயர்ப்பியல் (2008), அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் (2008).

எழுத்து இதழில் புதுக்கவிதை பற்றிய விமர்சனக் கட்டுரைகள் வெளியானது. புதுக்கவிதைக்கு இலக்கிய மதிப்பீட்டினை ஏற்படுத்தியது. இலக்கிய விமர்சகரும் தமிழ்ப் பேராசிரியருமான சி. கனகசபாபதி, புதுக்கவிதையைத் தமிழ்த் துறையினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென எழுதிய கட்டுரைகள் அன்றையச் சூழலில் முக்கிய மானவை. 'எழுத்து' இதழில் முதல் ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 250 புதுக்கவிதைகளும், பத்துக்கும் மேற்பட்ட புதுக்கவிதை பற்றிய கட்டுரைகளும் பல மொழிபெயர்ப்புக் கவிதைகளும் வெளியாகி யுள்ளன. பல்வேறு இளைஞர்கள் உற்சாகத்துடன் புதுக்கவிதை முயற்சிகளில் ஈடுபட்டனர். இத்தகு சூழலில், சி.சு. செல்லப்பா 'எழுத்து' பதிப்பக வெளியீடாக 1962ல் ந. பிச்சமூர்த்தியின் முப்பத்தைந்து கவிதைகள் அடங்கிய 'காட்டு வாத்து' தொகுப்பினை வெளியிட்டார். அதே ஆண்டில் அக்டோபர் மாதம் 24 கவிஞர்கள் எழுதிய 63 கவிதைகளைத் தொகுத்துப் 'புதுக் குரல்கள்' என்ற தலைப்பில் 'எழுத்து' பிரசுரமாகக் கொண்டு வந்தார். இதுவே தமிழில் தொகுக்கப் பெற்றுள்ள புதுக்கவிதைத் தொகுப்புகள் புத்தகத்தின் முகப்பு அட்டையில் 'புதுக்குரல்கள்' என்ற தலைப்பு மேலிருந்து கீழாகவும், '24 கவிகளின் 63 கவிதைகள்' என்ற கிடைமட்டமாகவும் அச்சிடப்பட்டிருந்தது. 'நுழைவாசல்' என்ற பெயரில் சி.சு. செல்லப்பா 16 பக்கங்களுக்குத் தொகுப்பு பற்றிய தனது கருத்துகளைப் பதிவாக்கி யுள்ளார். எழுத்து இதழில் முதல் நான்கு ஆண்டு களில் வெளியான இருநூறு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 58 கவிதைகளுடன், வேறு இதழ்களிலிருந்து எடுக்கப்பட்ட கு.ப.ரா.வின் மூன்று கவிதைகளும், ந. பிச்சமூர்த்தியின் இரு கவிதைகளும் தொகுக்கப் பட்டிருந்தன. நூலின் அட்டையில் 63 கவிதைகள் எனக் கொட்டை எழுத்தில் அச்சிடப்பட்டிருந் தாலும், தொகுப்பில் 62 கவிதைகள்தான் இடம்பெற்றுள்ளன. ஒரு கவிதை எண்ணிக்கையில் குறைவது எப்படி என்பது புலப்படவில்லை.

> யாப்பினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட தமிழ்ச் செய்யுள் வடிவமானது, காலந்தோறும் மாறி வந்துள்ளது. மருத்துவம், சோதிடம் போன்றவற்றைப் பதிவு செய்யவும் செய்யுள் வடிவம்தான் பயன்பட்டது. உரைநடையில் எழுதுவது பெரிதும் வழக்கற்ற சூழலில், ஐரோப்பியரின் இந்திய வருகைக்குப் பின்னர் மாற்றமேற்பட்டது. இராமலிங்கரின் அருட்பா, பாரதியாரின் மரபுக் கவிதைகள், வசன கவிதைகள் ஆகியன தமிழ்க் கவிதைப் போக்கினை மாற்றியமைத்தன.

ந.பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன், சி.மணி, எம். பழனிசாமி, ஆர். வெங்கடேசன், என். முத்துசாமி போன்ற நண்பர்கள் தேர்வு செய்த கவிதைகளுடன், தன்னுடைய தேர்வினையும் சேர்த்துத் தொகுப்பைக் கொண்டு வந்திருப்பதாக சி.சு. செல்லப்பா குறிப்பிட்டுள்ளார். எனவே தமிழில் முதல் புதுக்கவிதைத் தொகுப்பாக்கத்தில் சி.சு. செல்லப்பா உள்ளிட்ட எழுவரின் முயற்சி உள்ளடங்கியுள்ளது. எனவேதான் நூலில் தொகுப்பாசிரியர் எனத் தனியே குறிப்பு எதுவுமில்லை.

பசுவய்யா என்ற பெயரில் எழுத்து இதழில் கவிஞராக அறிமுகமான சுந்தர ராமசாமியின் ஐந்து கவிதைகள் அவருடைய பெயரிலே வெளியாகியுள்ளன.

நகுலன் என்ற புனைபெயரில் பிரபலமாக அறியப்பட்ட கவிஞரின் கவிதைகள், அவருடைய இயற்பெயரான டி.கே. துரைசுவாமி என்ற பெயரில் வெளியிடப்பட்டிருந்தன.

தொகுப்பில் இடம்பெற்றிருந்த 24 கவிகளில் தரும சிவராமு, நகுலன், பசுவய்யா, சி. மணி, ந. பிச்சமூர்த்தி, தி.சோ.வேணுகோபாலன், எஸ். வைத்தீஸ்வரன் போன்றோர் தான் கவிதை முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுத் தங்களுடைய ஆளுமையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

எஸ். வைத்தீஸ்வரன் இன்னும் உற்சாகத்துடன் இளமை ததும்பக் கவிதை எழுதிக் கொண்டிருக் கிறார். டி.எஸ். எலியட்டின் கவிதையின் தாக்கத்தினால் எழுதப்பட்ட சி.மணியின் 'நரகம்' கவிதை, வாசிப்பில் கிளர்த்தும் அனுபவங்கள் முக்கியமானவை. மனித இருப்பினைக் காலங்கடந்த நிலையிலும் அசலாக விசாரிக்கும் 'நரகம்' தமிழில் முக்கியமான கவிதை.

தரும சிவராமுவின் 'விடிவு' கவிதை படிமக் காட்சி வெளிப்பாட்டில் நூதனமானது.

பூமித் தோலில்
அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து

படரும் விந்து

கதிர்கள் கமழ்ந்து

விரியும் பூ

இருளின் சிறகைத்

தின்னும் கிருமி

வெளிச்சச் சிறகில்

மிதக்கும் குருவி

சொற்கள் மூலமாகப் பிரமிள் படைத்த படிமங்கள் பலருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தின.

சுந்தர ராமசாமியின் 'என் எழுத்து' என்ற கவிதை, அவருடைய படைப்பு மனம் பற்றிய பிரகடனமாக வெளிப்பட்டிருந்தது.

....

என்னை அழிக்க யாருண்டு?

எழுத்தில் வாழ்பவன் அன்றோ யான்.

என்ற கவிதை வரிகள் கவித்துவச் செருக்குடன் சுரா. வைப் பதிவாக்கியிருந்தன.

நகுலனின் 'கடன்பட்டார்', அறியாதவர் ஒருவருமில்லை, ந. பிச்சமூர்த்தியின் கிளிக்கூண்டு, பூக்காரி போன்ற கவிதைகள் தனித்துவம் மிக்கவை.

"....... நூதன நடையும் ஆழ்ந்த நோக்கமும் இல்லாமல், இன்றைக்கான சொல்லாட்சியும், புதுப்பாங்கான படிமப் பிரயோகமும் இல்லாமல், தீபாவளிக்கும் பொங்கலுக்கும் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் பத்திரிகைச் செய்யுள்களாக ஃபார்முலா உருவமும் உள்ளடக்கமும் கொண்டு வரும் சொல்லோசைச் செய்யுள்களும் மெட்டுப் பாட்டுகளும் "எத்தனை கவிதை என்ற பெயரில்?" நூலின் முன்னுரையில் சி.சு. செல்லப்பா குறிப்பிட்டிருப்பது பரிசீலனைக்குரியது. எதுகை, மோனை, சந்தம், வார்த்தைஜாலம் என மரபு வழிப்பட்ட நிலையில் வறண்டு போன மரபுக் கவிதைக்கு மாற்றாகப் புதுக்கவிதையை முன்னிறுத்துவது, அவரின் தெளிந்த மனநிலையைப் புலப்படுத்துகிறது. "புதுவிதமான சொல் திறன் தான் காண்கிற அது முழுமையானதாக இல்லாமல் இருக்கலாம் மதிப்பு, முக்கியத்துவம் இரண்டையும் வெளிப்படுத்தி, யதார்த்தத்தின் எல்லைகளை நமக்கு விரிவுபடுத்திக் காட்டுகிறது" எனப் புதுக்கவிதையின் இலக்கினை வரையறுக்க முயலும் சி.சு. செல்லப்பாவிற்கு எதிர்காலத்தில் புதுக்கவிதை முதன்மையிடம் பெறும் என்ற நம்பிக்கை இருந்தது.

இருபதாம் நூற்றாண்டு விநோதமானது. மனிதனுக்கு ஏற்படும் பிரச்சனைகள் தாங்க முடியாதவை. ஒவ்வொருவரும் அவரவருக்கான உலகை நிறுவ முயலுகின்றனர். உழைப்பிலிருந்து அந்நியப்பட்டுச் சோம்பித் திரிந்து, தனக்குத் தானே வேறு ஒன்றாகக் காட்சியளிக்கும் நவீன மனவெளி மனிதர்களின் குரல்கள் தனித்து வமானவை. தன்னம்பிக்கை x மன உறுதி, லட்சியம் x யதார்த்தம், உண்மை x போலி, மேன்மை x கீழ்மை போன்ற எதிர்நிலைகளில் மனிதனின் இருப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் புதிய மொழியில் கவிதை சொல்ல முயன்ற கவிஞர்கள் சிலரின் குரல்கள் கோபத்துடன் ஓங்கி ஒலிக்கின்றன; சிலரின் கவிதை வரிகள் இருண்மையைச் சித்தரிக்கின்றன. சிலருடைய புதுக்குரல்கள் என முன் வைக்கப்பட்டுள்ள பலரின் எழுத்துக்கள் புதியவை என்பதுடன், அவை படைப்பு ரீதியில் புதிய தடத்தை வகுக்க முயன்றுள்ளன என்பதும் உண்மை.

நகர்ப்புறத்துப் படிப்பாளிகள், பார்ப்பனர் உள்ளிட்ட உயர் சாதியினரின் இருண்மைப் போக்கு, நம்பிக்கை வறட்சி, சமூக வெறுப்பு போன்றவற்றைப் புதுக்குரல்களாக ஒலிக்கும் நவீன கவிஞர்களின் கவிதை முயற்சிகளைப் பிற்போக்கானவை என்று தொ.மு.சி. ரகுநாதன், நா. வானமாமலை, க. கைலாசபதி போன்ற இடது சாரிச் சார்புடைய விமர்சகர்கள் குறிப்பிட்டதை இங்கு பதிவு செய்ய வேண்டியுள்ளது. தொடக்க காலப் புதுக்கவிதைகளை முன் வைத்துப் புதுக் கவிதை வடிவத்தையே நிராகரித்த போக்கு நிலவியதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புதுக்குரல்களைக் கவிதை படைத்த 24 கவிஞர்களில் பலர் கால வெள்ளத்தில் காணாமல் போனாலும், முதல் தொகுப்பு என்ற நிலையில், அது இன்றும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. சில கவிதைகள் மறுவாசிப்பிலும் ஈர்ப்பை ஏற்படுத்துவது அத்தொகுப்புக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

சமூக விமர்சனத் தொகுப்புகள்

புதுக்குரல்கள் வெளியான பின்னர், தனிப்பட்ட கவிஞரின் கவிதைகள் அடங்கிய சில தொகுப்புகள் வெளியாகின. புதுக்கவிதைகள் பரவலாக அங்கீகாரம் பெற்றிருந்தாலும், பல்கலைக்கழக அளவில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் 1973ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை (தமிழ்) பாடத் திட்டத்தில் புதுக்குரல்கள் தொகுப்பின் திருத்தப் பட்ட இரண்டாம் பதிப்புப் பாடமாக வைக்கப் பட்டது. 1970 அக்டோபர் மாதம் வெளியான 'கசடதபற' இதழ், வெகுஜனப் படைப்புகள், பத்திரிகைகள் குறித்து அதிருப்தியடைந்திருந்த

படைப்பாளர்களின் பொது மேடையாக விளங்கியது. கலாப்ரியா, ஞானக்கூத்தன், கோ. ராஜராம், கங்கை கொண்டான் போன்ற கவிஞர் களின் படைப்புகள் பிரசுரமாயின. கோவையிலிருந்து 1971 ஆம் ஆண்டு வெளியான 'வானம்பாடி' இதழ் சமூகப் பிரச்சனை களுக்கான தீர்வுகளையும், சமூக அவலங்களையும் வெளிப்படுத்தும் புதுக்கவிதை களை வெளியிட்டது. அபி, இன்குலாப், சிற்பி, மீரா, பிரபஞ்சகவி, மு. மேத்தா, அப்துல் ரகுமான் போன்றோர் சமூக அக்கறையுடன் புதுக்கவிதை எழுதினர். பொதுவாக இளைஞர்கள் சமூக ரீதியான பிரச்சனைகளையும் எரிச்சலையும் கோபத்தையும் வெளிப்படுத்தப் புதுக்கவிதை வடிவத்தை வெற்றிகரமாகக் கையாண்டனர். இதுவரை புதுக்கவிதை என்பது மேல்தட்டினர், உயர் சாதியினருக்கு மட்டும் உரியது என்ற பொதுப்புத்தி சிதைக்கப்பட்டது. மாணவர் உள்ளிட்ட விளிம்பு நிலையினரின் மனக் குமுறல் களை வெளிப்படுத்தப் புதுக்கவிதை பெரிதும் பயன்பட்டது. இப்போக்கினில் எழுதப்பட்ட கவிதைகளைத் தொகுத்து 1972ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'ஆக்டோபஸும் நீர்ப்பூவும்' தொகுப்பு முக்கியமானது. குவேரா, தமிழவன், ஆராமுதம், பிரம்மா, ரிஷிதேவன், தீர்த்தங்கரன் என்ற அறுவரின் முப்பத்தேழு கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. கல்லூரி, பல்கலைக் கழகத்தினரைப் பகடி செய்யும் கவிதைகளை எழுதியிருந்தவர்கள் மாணவர்கள். எனவே எல்லோரும் புனைபெயருக்குள் மறைந்து கொண்டனர். ஆராமுதம் என்பது மு. ராமசுவாமி, தமிழவன், அதே பெயரில் பிரபலமடைந்தார். பிற நால்வரைப் பற்றி அறிய இயலவில்லை.

முற்போக்குப் புதுக்கவிதைகள் என்ற துணைத் தலைப்புடன் வெளியான ஆக்டோபஸும் நீர்ப்பூவும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அந்தக் காலகட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தின. தமிழ்த்தாய் வாழ்த்து என்ற பெயரில் பாயிரம் பாடுவதாக மிஸ். தமிழ்த்தாயே/நமஸ்காரம் என எழுதப்பட்ட வரிகள், எல்லாவற்றையும் பகடி செய்தன. "புரியாப் படிமங்கள், மருட்டும் பதச் சேர்க்கைகள், தலை தடுமாற்றங்கள் போன்ற சண்டப் பிரசண்ட எத்து வேலைகள் இல்லாமலேயே ஒரு புதிய உலகைக் காட்ட முயன்றிருக்கிறார்கள்" என நூலின் முன்னுரையில் கவிஞர்களின் நண்பரும் இளைஞருமான முத்து எழுதியிருப்பது, 'எழுத்து' காலக் கவிதையிலிருந்து இவர்கள் வேறுபடுவதை வெளிப்படுத்துகின்றது. "........தமிழகப் பிரச்சனைகளின் வேரை இவர்கள் விஞ்ஞானப்பூர்வமான தத்துவ ஒளி வெள்ளத்தில் பார்க்கப் பழகியவர்கள். இவர்களின் கவிதைகளே உண்மையான புதுக்கவிதைகள். ஏனெனில் புதிய பாஷையின் செயற்பாட்டைப் புது மரபில் கையாண்டுள்ளனர்'' எனப் பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒப்பு நோக்கத்தக்கன.

பசிக்கடியில்/பலநாள் செத்து / நேற்று 12 30க்குத் தண்டவாளத்தில் வாழ்ந்தாள் / அந்தப் பிச்சைக்காரி / நாங்கள் / பார்த்துச்சிரித்துவிட்டு / மேட்னிக்குப் போனோம் என்ற தமிழவனின் கவிதை, மனிதர்களின் ஒதுங்கிப்போகும் இயல்பைச் சித்தரிக்கின்றது.

வேட்டையில் அகப்பட்ட
வேழத்தை
முடிந்த மட்டும் உண்டு
முன்னோடிகள் போனபின்
எஞ்சிய எச்சிலை நக்கும்
நரிகள்

என முடியும் கவிதையின் தலைப்பு 'அரசியல் வாதிகள்' சமூக அவலங்களால் கோபமடைந்த இளைஞர்கள் எளிய மொழியில் தங்களுடைய எரிச்சலைக் கவிதைகளாக மாற்ற முயன்றுள்ளனர். வானம்பாடிக் கவிஞர்கள் அதே காலகட்டத்தில் பயன்படுத்திய வசந்தம், புல்லாங்குழல், அஸ்தமனம், புஷ்பம் போன்ற அலங்காரச் சொற்களைத் தவிர்த்துவிட்டு, யதார்த்தமான சொற்களைக் கவிதையாக்கத்தில் கையாண்டுள்ள இளம் கவிஞர்களுக்கென நோக்கம் இருக்கிறது. எனவேதான் புதுக்கவிதை என்னும் வாளேந்தி அக்கிரமத்தை ஒழிக்கப் புறப்பட்டு விட்டனர். இவை இன்னும் கவிதைகளாக உருமாறவில்லை என்று யாராவது சொன்னால், கவிஞர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். ஏனெனில், 'ஆக்டோபஸும் நீர்ப்பூவும்' மூலம் கவிஞர்கள் கட்டமைக்க விரும்பும் உலகம் யதார்த்தமானது. அங்கு கலையின் உச்சம், அழகியல் போன்ற சொற்களுக்கு அர்த்தமில்லை.

வானம்பாடிகள் நாங்கள் வசந்த மின்னல்கள் நாங்கள் எனத் தங்களை இலக்கிய இயக்கமாக அடையாளம் கண்ட, வானம்பாடி இதழில் கவிதைகள் எழுதிய கவிஞர்களின் தொகுப்பு 'வெளிச்சங்கள்' என்ற பெயரில் 1973இல் வெளியானது. முப்பத்து மூன்று கவிஞர்களின் ஐம்பத்தைந்து கவிதைகள் தொகுப்பினுள் இடம் பெற்றுள்ளன. கவிதைகளைத் தொகுத்தவர் பெயர் நூலில் இடம்பெறவில்லை. எனவே பலரின் கூட்டு முயற்சியில் 'வெளிச்சங்கள்' தொகுப்பு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். "வானம்பாடி கட்சி சார்பற்ற ஒரு கவிதை இயக்கம். சமுதாயப்

பார்வையை முன் வைத்துக் கவிதை படைப்பவர் களின் இயக்கம் இது. முற்போக்குச் சிந்தனையுடைய அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் இயக்கம் இது" என வானம்பாடிகள் பற்றி நூலின் முன்னுரையில் குறிப்பிடும் ஞானி, "இவர்களால் தமிழ்க் கவிதை, உலகக் கவிதையின் உயரத்திற்கு நிமிர்ந்து நிற்கும்" என்று நம்புகிறார்.

1960களின் பிற்பகுதியில் இந்தியாவெங்கும் அரசியல் விழிப்புணர்வு மக்களிடையே கூர்மையடைந்தது. குறிப்பாக மேற்கு வங்கத்தில் வசந்தத்தின் இடி முழக்கமாகத் தோற்றுவிக்கப்பட்ட 'நக்சல்பாரி இயக்கம்' இளைஞர்களிடையே வீச்சாகப் பரவியது. நாடு விடுதலையடைந்த பின்னர் பிறந்து வளர்ந்து இளைய தலைமுறையினர் ஆட்சியதிகாரத்திலிருந்து ஊழல் செய்யும் கட்சிகளை வெறுத்தனர். பொருளாதாரம், சாதி, சமயம், பால் எனப் பல நிலைகளில் அடக்கியொடுக் கப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றவர்கள் கலை, இலக்கியத்திலும் வெளிப் பட்டனர். இந்நிலையில் சமூகப் பிரக்ஞையுடன், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க முயன்ற நடுத்தர வர்க்கத்துப் படிப்பாளி களின் இலக்கிய வெளிப்பாடு வானம்பாடிக் கவிதைகளாக வெளிப்பட்டன. சமூக மாற்றத்தினைப் பிரகடனப்படுத்தும் கவிதைகள், எல்லோருக்குள்ளும் ஊடுருவி, கெட்டிதட்டிப் போயிருக்கும் மனங்களை அசைக்கும் என்ற நம்பிக்கை வானம்பாடிகளுக்கு இருந்தது.

வானம்பாடிக் கவிஞர்களில் சிற்பி, மீரா, பாலா, இன்குலாப், மேத்தா, தமிழவன், கங்கைகொண்டான், புவியரசு, சக்திக்கனல், அப்துல் ரகுமான், அபி, கலாப்ரியா, கல்யாண்ஜி போன்றோர் முக்கிய மானவர்கள். விளிம்பு நிலையினரை விடுவிக்கும் ஆயுதமாகக் கவிதையைக் கருதிய வானம்பாடிக் கவிஞர்கள், தமிழுக்குப் புதிய போக்கினை அறிமுகப்படுத்தினர். புஷ்பம், மன்மதக் கனவு, வசீகரக் கனி, ஜனனம், காராகிருகம் போன்ற சமஸ்கிருத மொழிச் சொற்களைக் கவிதையாக்கத்தில் பயன்படுத்தியது, வாசிப்பில் ஈர்ப்பினை ஏற்படுத்தியது. புதுக்கவிதையின் வாசகத் தளத் தினை விரிவடையச் செய்ததில் வானம்பாடிகளின் பங்கு கணிசமானது. அரசியல், பொருளாதாரம், சாதி, சமய ஒடுக்குமுறையினால் அடக்கப்பட்ட விளிம்பு நிலையினருக்காகக் குரல் கொடுத்த வானம்பாடிகளின் கவிதை முழக்கமானது, அதிகார மையங்களுக்கு எதிராக இருந்தது. இந்த பூமி உருண்டையைப் புரட்டி விடக்கூடிய நெம்பு கோல் கவிதையை உங்களில் யார் பாடப் போகிறீர்கள் என வானம்பாடிகளை நோக்கி மேத்தா எழுதிய அரசியல் முழக்கம் பலரையும் கவர்ந்தது. 'எழுத்து' காலகட்டத்தில் தனிமனித உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தந்து, இருண்மையுடன் புரியாத மொழியில், மங்கலாக விளங்கிய கவிதைப் போக்கினை மாற்றி, புறவயமாக்கியது வானம்பாடிகளின் தனித்துவம். வெளிச்சங்கள் தொகுப்பிலிருந்து சில கவிதைகள்:

நாங்கள்
எங்கள் மீது
சாம்பலைத்
தூவாதீர்கள்!
நாங்கள்
நெருப்புக் கோழிகள்

ப. கங்கை கொண்டான்

சிலுவைப்பாடு

---- -------

ஓ! இதென்ன?
சிலுவையா?
தோள் மீது சுமத்துகிறீர்களா?
பாரம் தாங்காமல்
நான் அழுவேன் என்றா
எதிர்பார்க்கிறீர்கள்?

புவியரசு

சமூகப் புரட்சிக்காகக் காத்திருந்து, கவிதை வரிகள் மூலம் மாற்றத்தைக் காண முயன்ற வானம்பாடிகளின் முயற்சிகள் மேம்போக்கானவை என்ற குற்றச்சாட்டு பின்னர் சுமத்தப்பட்டது. நவீன கவிதை என்பது சிலருக்கு மட்டும் விளங்கக் கூடிய 'பரிபாஷை' என்ற நிலையை மாற்றி, வெகுசனத் தளத்தில் கவிதையைப் பரப்பியதில் வானம்பாடிக் கவிஞர்களின் முயற்சி தனித்துவ மானது. சமூகப் பிரச்சனையை மையமிட்டு, உணர்ச்சிபூர்வமாக எழுதப்படும் கவிதைகள், சூழல் மாறும்போது, தானாகவே மதிப்பிழக்கின்றன. அவ்வகையில் இன்றைய சமுதாயப் போராட்டங் களைக் கவிதையாக்க நவீன வானம்பாடிகள் தேவைப்படுகின்றனர்.

எழுபதுகளில் சில தொகுப்புகள்:

எழுபதுகளில் புதுக்கவிதையானது பரந்துபட்ட நிலையினை அடைந்தது. பல்வேறு புதிய கவிஞர்கள் ஆக்கமுடன் கவிதை எழுதினர். நா. காமராசன் - கறுப்பு மலர்கள், மு. மேத்தா - கண்ணீர்ப் பூக்கள், அபி - மௌனத்தின் நாவுகள்,

அப்துல் ரகுமான் - பால்வீதி, ஷண்முக சுப்பையா - கண்ணன் என் தம்பி, பசுவய்யா - நடுநிசி நாய்கள், கலாப்ரியா - தீர்த்த யாத்திரை போன்ற பல கவிதைத் தொகுதிகள் எழுபதுகளில் வெளியாகின. பல கவிஞர்களின் முதல் கவிதைத் தொகுப்புகள் எழுபதுகளில் வெளியிடப்பட்டன. 'கசடதபற' உள்ளிட்ட பல்வேறு சிறு பத்திரிகைகள் கவிதை வெளியீட்டினுக்கு முன்னுரிமை தந்தன. இத்தகு சூழலில் எம். சுப்ரமணியன் தொகுத்த 'நாற்றாங்கால்', சிவசுப்பிரமணியன், நா., தொகுத்த சலனம், த.பீ. செல்லம் தொகுத்த 'விதி' ஆகிய மூன்று தொகுப்புகள் குறிப்பிடத்தக்கன.

"பழக்கப்பட்டு விடுகிற மரபை மீறிக் கண்ட சுதந்திரம் தான் புதுக்கவிதை. ஒரு புதிய மரபில் சிக்கிக் கொள்ளாமல் கவனத்துடன் இருப்பதில்தான் புதுக்கவிதை இருக்கிறது" என்ற ந. முத்துசாமியின் முன்னுரையுடன் வெளியான 'நாற்றாங்கால்' தொகுப்பில் முப்பத்திரண்டு கவிஞர்களின்

"கவிதை என்றும் புதியதாக இருக்க
வேண்டும். கவிஞனின்
தனித்துவம், அவனுக்கேயான பார்வை,
அவனது சிறப்பான மொழியாளுமை,
எல்லாவற்றுக்கும் மேலாக அவனது
அபூர்வமான கற்பனையாற்றல் கவிதையில்
இந்தப் புதுமை சாத்தியமாகின்றது.
நேற்றைய கவிதையை இன்று நாம்
அனுபவித்து ரசிப்பதற்கும் இந்தப்
புதுமையும் கற்பனையும்
காரணங்களாகின்றன.

நாற்பத்திரண்டு கவிதைகள் இடம்பெற்றிருந்தன. ஆத்மாநாம், கல்யாண்ஜி, கலாப்ரியா, ஞானக்கூத்தன், தேவதச்சன், நகுலன், எஸ். வைதீஸ்வரன், தி.சோ. வேணுகோபாலன் போன்ற இலக்கிய ஆளுமைகளுடன் பலரின் கவிதைகள் தொகுப்பாக்கப்பட்டிருந்தன.

தொகுப்பாளர் எம். சுப்ரமணியம் எழுதிய 'விதி என்ற கவிதை, தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இருந்த மாதிரியில் / இருப்பதை ஏற்று / இருப்பதின் சுகமே பெரிதென / எண்ணி / இருந்ததில் மூழ்கி / இருந்தவர் பார்த்தார் / இருந்தபடி..... எனத் தொடங்கும் தொகுப்பாளரின் கவிதையை வாசிக்கும்போது, நவீன கவிதைகள் மீதான ஆர்வம் காரணமாக இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என அறிய முடிகிறது. தொகுப்பிற்கான நோக்கம் பற்றி நூலில் குறிப்பு எதுவும் இல்லை. பல்வேறு கவிஞர்களின் வேறுபட்ட மனநிலைகளைச் சித்தரிக்கும் கவிதைகள் வாசிப்பில் கிளர்த்தும் அனுபவங்கள் முக்கியமானவையாக உள்ளன. தொகுப்பிலிருந்து சில கவிதை வரிகள்

பூமி

பிஞ்சுக் கதிர் விரல்கள்
உரித்து உரித்துப் பார்த்தும்
முடியாத
ஆரஞ்சுக்காய்
தோலுரிய இன்னும்
எத்தனை யுகங்களாகும்?

எஸ். வைதீஸ்வரன்

தொகுப்பாளர் எம். சுப்பிரமணியத்தின் கவிதைத் தேர்வு, புத்தக வடிவாக்கமும் நேர்த்தியாக உள்ளன. எழுபதுகளில் நவீன கவிதைகளின் இன்னொரு முகத்தைச் சித்தரிப்பதாக 'நாற்றாங்கால்' தொகுப்பு உள்ளது.

சிவசு எனப்படும் நா. சிவசுப்பிரமணியனும், எம். முத்துக்கிருஷ்ணனும் இணைந்து தொகுத்த 'சலனம்' கவிதைத் தொகுப்பு பல்வேறு புதிய போக்குகளைப் பிரதிபலிக்கிறது. இருபத்தாறு கவிஞர்களின் 143 கவிதைகள் இடம்பெற்றுள்ள கவிதைகள், அன்றைய காலகட்டத்திய கவிதைப் போக்குகளுக்கு எடுத்துக்காட்டுகளாய் உள்ளன. கவிஞர். ந. பிச்சமூர்த்திக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொகுப்பில் கவிதைகள் மட்டும் இடம் பெற்றுள்ளன. தொகுப்பாளரின் நோக்கம், முயற்சி, தேர்வு பற்றி அறிய இயலவில்லை. எனவே ஒட்டு மொத்தக் கவிதைகள் மூலம் தொகுப்பினை மதிப்பிட வேண்டியுள்ளது. எனினும் "புதுக்கவிதை நிகழ்ந்து கொண்டிருக்கிற காலத்தின் பிரதிபலிப்பாய்... இந்தக் காலகட்டம் இதனால் என்றும் உணரப்படும் என்ற நப்பாசையுடன்... நம்பிக்கையுடன்..." என நூலின் முகப்புப் பக்கத்திற்கு பின்னர் இடம்பெற்றுள்ள கருத்தினைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நா. சுகுமாரன், நகுலன், தேவதேவன், ஷண்முக சுப்பையா, தஷிணாமூர்த்தி, மாலன், காசியபன், ஜோதி விநாயகம் எனப் பலரின் கவிதைகள் இடம்பெற்றுள்ள தொகுப்பு, தொகுப்பாளர்களின் ரசனை அடிப்படையில் அமைந்துள்ளது.

யாப்பெனும் காப்பெதற்கு?

பூப்பெய்தும் பெண்ணின் முலைவளம் போல்
வளர்கிறதென் கவிதை

இவள் செழுமையைக் கட்டியணைக்க
யாப்பும் அணியும் வேண்டுமோ?
யாப்பெனும் காப்பெதற்கு
இவள் பொன்மேனிக்கு?
அவிழ்த்து அவிழ்த்துப் பார்க்கத்தான் மீண்டும்
அணிதல் வேண்டுமோ?

மா. தஷிணாமூர்த்தியின் கவிதை வரிகள் நவீன கவிதை பற்றிய விமரிசனம் போல உள்ளது. கவிதை என்பது கவிமனத்தின் நுட்பங்களின் வெளிப்பாடு போல மங்கலாகிய நிலையில், எளிமையாக கவிதை எழுதியுள்ள ஜோதி விநாயகத்தின் முயற்சி, குறிப்பிடத்தக்கது.

ரஜா

பள்ளி லீவில்
பிள்ளைகள் வந்து போனதின்
நினைவாய்
மேஜை பைபிளின்
மேல் ஒரு பலூன்
கிடக்கும்
படுத்து

புறக்காட்சியை அலங்காரம் எதுவுமற்றுப் பதிவாக்கியுள்ள ஜோதி விநாயகத்தின் கவிதை முயற்சி, புதிய போக்கினை அறிமுகப் படுத்தியுள்ளது.

சலனம் தொகுப்புகளிலுள்ள கவிதைகள், ஒருநிலையில் 'புதுக்குரல்கள்' தொகுப்பின் நீட்சியாகத்தான் உள்ளன. கவிதை பற்றிய மேன்மையான அபிப்பிராயத்துடன் தொகுக்கப் பெற்றுள்ள கவிதைகள் பெரும்பாலும் அகவயப் பட்டவையாக உள்ளன.

தபீ. செல்வம் தொகுத்த விதி (1974) தொகுப்பு கிடைக்கப் பெறாமையினால், இந்த ஆய்வில் உட்படுத்த இயலவில்லை.

ஈழத்துக் கவிதைத் தொகுப்புகள்

ஈழத்திலே நூற்றுக்கணக்கானோர் எழுதிய கவிதைகளிலிருந்து பதினோரு கவிஞர்களை மட்டும் எம்.ஏ. நுஃமானும், அ. யேசுராசாவும் தேர்ந்தெடுத்து 1984இல் வெளியிட்ட 'பதினோரு ஈழத்துக் கவிஞர்கள்' அதிகம் கவனம் பெறாத தொகுதியாகும். மஹாகவி முதல் சேரன் வரை ஐந்து தலைமுறையைச் சார்ந்த பதினொரு கவிஞர்களின் 55 கவிதைகள் தேர்வானது, முழுக்க தொகுப்பாளர்களின் ரசனை சார்ந்தது என்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளனர். "எமது ரசனைக்கேற்ப, இன்றைய ஈழத்துக் கவிதையின் வெவ்வேறு தலைமுறைகளைப் பிரதிபலிக்கும் மிக முக்கியமான கவிஞர்கள் என்று கருதும் சிலரை, முதன்மையாகப் பிற நாட்டினருக்கு அறிமுகப் படுத்துவதே இத்தொகுப்பின் நோக்கமாகும்".

1940களில் தொடங்கிய ஈழத்து நவீனத்தமிழ்க் கவிதைப் போக்குகளைப் பற்றிய பெரிதும் அக்கறையற்று இருந்த தமிழக இலக்கியச் சூழலில், சிறிய அறிமுகத்தை இத்தொகுப்பு ஏற்படுத்தியது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருண்மை செறிந்த நிலையில் படிமங்கள், குறியீடுகள் என கலங்கலான மொழியில் நவீன கவிதை வெளியாகிக் கொண்டிருந்த போது, ஈழத்து நவீன கவிதைகள் பெரும்பாலும் சமூகச் சார்புடையதாக வெளியானதை அறிய முடிகின்றது. தனிமனிதர் களின் அகநிலைக்கு முக்கியத்துவம் தரும் தமிழகத்துப் புதுக்கவிதையுடன் ஒப்பிடும்போது, ஈழத்துக் கவிதைகள் நேரடியாகப் பொருளினைப் புலப்படுத்துவதைக் கண்டறிய முடியும். வானம் பாடிக் கவிஞர்களின் அலங்காரமான மொழி நடை சமூக நோக்கில் வேறு வகையான கவிதை களை வெளிப்படுத்தியுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகு சூழலில் ஈழத்து நவீனத் தமிழ்க் கவிதையின் தனித்துவமான போக்கினை முதன்மைப்படுத்தும் வகையில் வெளியாகியுள்ள 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்', சிறந்த தொகுப்பாக இன்னும் விளங்குகிறது.

1960-1980 வரை ஈழத்தில் வெளியான நவீனத் தமிழ்க் கவிதைப் போக்குகளை அடையாளப் படுத்தும் தொகுப்பாளர்களின் முயற்சி, பருண்மை யான கருத்தியல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஈழத்துப் போராட்ட வாழ்க்கை வீச்சாகப் பரவிடாத நிலையில், சமூகப் பிரச்சினை களை மையமிட்ட கவிதைகள் எளிய வரிகளில் வெளிப்பட்டுள்ளன.

"ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை"
என்று வந்தான் ஒருவன்

என இளைஞனைப் பற்றிக் குறிப்பிடும் மஹாகவி, சாதிய வெறியர்களால் அவன் கொல்லப்பட்டதைக் கவிதையாக்கியுள்ளார்.

தொகுப்பில் சில கவிதை வரிகள்

....

ஆற்றின் பழுப்பு உடலின் மீது
தேமல் போன்று தேங்கிய நீரில்
பகலில் மண்ணும் பாசியும் கல்லும்
மெல்லச் சறுக்கும் மீனும் தெரியும்

....

சி. சிவசேகரம்

துணை பிரிந்த குயிலொன்றின்
சோகம் போல
மெல்ல மெல்ல
கசிகிறது ஆற்று வெள்ளம்

———

வ.ஐ.ச. ஜெயபாலன்

மண்ணும் தாவரமும் வெளியும் சார்ந்த சங்கத் திணை சார் மரபின் நீட்சி, ஈழத்து நவீனத் தமிழ்க் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது. சமூகப் பிரச்சனைகளை எளிய கவிதை வரிகளாக்கும் போது, இயற்கை சார்ந்த வாழ்நிலைக்கு முக்கியத்துவம் தந்துள்ளனர் பெரும்பாலான கவிஞர்கள்.

ஈழத்தில் சிங்களவர்களின் ஆட்சியில் தமிழர்களின் மீதான ஒடுக்குமுறையினால் ஏற்படும் மனக்குமுறல்கள் சேரன், அ. யேசுராசு, வ.ஐ.ச. ஜெயபாலன் போன்றோரின் கவிதைகளில் வெளிப் பட்டுள்ளன. 1980களுக்கு முன்னர் வளர்ந்து கொண்டிருந்த தமிழர் விடுதலைப் போராட்டச் சூழலிலும், அரசப் பயங்கரவாதம் குறித்த அ.யேசுராசாவின் 'உன்னுடையவும் கதி' என்ற கவிதை அழுத்தமான பதிவு.

எண்பதுகளுக்குப் பின்னர் ஈழத்தில் ஏற்பட்ட அரசியல் போராட்டம், மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. சிறுபான்மையினரான தமிழர்கள் அரசப் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டிய கடும் நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டனர். 1981 இல் யாழ்ப்பாண நூலகம் சிங்கள ராணுவத்தினரால் தீயிலிட்டுக் கொளுத்தப் பட்டது.

தமிழர் மீது பண்பாட்டு ரீதியில் விடப்பட்ட பெரும் சவால். 1983க்குப் பின்னர் ஆயுதப் போராட்டம் உச்சநிலை அடைந்தது. பீரங்கிக் குண்டுகளின் தாக்குதல், கிபி. 47களின் முழக்கம், போர் விமானங்களின் குண்டு வீச்சு என எங்கும் பேரழிவும் கூட்டக் கொலைகளும் நடந்தேறின. சொந்த மண்ணிலே வாழ வழியற்று வன்னிக் காட்டில் தமிழர்கள் தஞ்சம் புகுந்தனர். லட்சக்கணக் கான தமிழர்கள் ஏதிலிகளாகப் புலம்பெயர்ந்து உலகமெங்கும் சென்று அல்லல்பட்டனர். போராளிக் குழுக்களிடையே நடைபெற்ற சகோதர மோதல்கள் இன்னொருபுறம். ஆயுதமேந்திய இயக்கத்தினரின் சாகசமனநிலை, ஆயுதங்களின் மீதான ஈடுபாடு, சராசரித் தமிழர்கள் அன்றாட வாழ்க்கை வாழ்ந்திட முயலுதல் எனக் குழம்பிய சூழலில், வாழ்க்கை மீது நம்பிக்கை கொள்ளும் கவிதைகள் எழுதப்பட்டது. தற்செயலானது அல்ல. அன்றையக் கொதிப்பான சூழலில், போராட்டத்தின் உலைக் களத்திலிருந்து வெளிப்பட்ட கவிதை வரிகளை உ.சேரன், அ. யேசுராசா, இ. பத்மநாப ஐயர், மயிலங்கடலூர் பி. நடராசன் ஆகிய நால்வரும் தொகுத்து 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தொகுப்பாக 1985 இல் வெளியிட்டனர். ஈழத்துத் தமிழர்களுக்கு ஆதரவான அரசியல் சூழல் நிலவிய தமிழகத்தில் அத்தொகுப்புப் பரவலாகக் கவனம் பெற்றது. மனித மனத்தின் இடுக்குகளில் கசியும் வாழ்வின் வெக்கையை நவீன கவிதையாக்க முயன்று கொண்டிருந்த தமிழகச் சூழலில், போராட்டம், ஆயுதம், மரணம் பற்றிய கவிதைகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. முப்பத்தொரு கவிஞர்களின் கவிதைகள் 169 பக்கத் தொகுப்பாக வெளியாகியுள்ளது. முருகையன் தொடங்கிப் பல்வேறு கவிஞர்களின் மனக் கொந்தளிப்பான கவிதைகள் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. ஔவை, மைத்ரேயி, ஊர்வசி போன்ற பெண் கவிஞர்களின் ஆவேசமான கவிதைகளும் தொகுக்கப்பட்டிருந்தது, இத்தொகுப்பின் தனித்துவமாகும்.

நாளையக் கனவுகள் இன்று கலைந்தன

நேற்றைய உணர்வுகள் இன்று சிதைந்தன

காக்கி உடையில்

துப்பாக்கி அரக்கர்

தாண்டவம் ஆடினர்

ஒரு பெரும் நகரம் மரணம் அடைந்தது

என்ற எம்.ஏ. நுஃமானின் வரிகள், எதுவும் நடைபெறுவதற்கான சாத்தியப்பாட்டைப் பதிவாக்கியுள்ளன.

'எவரையும் சுடலாம் விசாரணையின்றியே
எரிக்கலாம் அன்றிப் புதைக்கலாம்' என்று
இயற்றப்பட்ட புதிய விதிகளால்
குருதியும் தோயும் நிகழ்வுகள் இங்கே
.... சு. வில்வரத்தினம்
....

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்
நானும் நீயும்
மனிதர்கள் அல்ல
என்பதுதான்

துஷ்யந்தன்

ராணுவத்தினரின் கொடூரமான சித்ரவதைகள், கொலைகள் தொடர்ந்து நிகழ்ந்தாலும் சமகாலப் பதிவுகள் என்ற நிலையில் பெரும்பாலான கவிதைகள் மனித இருப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனவாக உள்ளன. போர்க்களத்தில்

ஒப்பாரி பாடுவதாக நவீன கவிதைகள் எழுதப்பட வில்லை. மக்கள் மீது சுமத்தப்படும் வன்முறையை அம்பலப்படுத்தும் வேளையில் அதற்கெதிரான துணிச்சலும் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது. இன்று ஈழத்தில் ஏற்பட்டுள்ள பேரழிவுகளையும், தமிழர் மீதான நெருக்கடிகளையும் அவதானிக்கும் போது, 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பு, சமூக ஆவணமாகியுள்ளது.

ஈழத்துப் பெண் கவிஞர்களின் தொகுப்புகள்

யாழ்ப்பாணம், பெண்கள் ஆய்வு வட்டம் சார்பில் வெளியான 'சொல்லாத சேதிகள்' தான் தமிழில் வெளியான முதல் பெண் கவிதைத் தொகுப்பு. எட்டுப் பெண் கவிஞர்களின் இருபத்து மூன்று கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. அதே நூல் சிறிய திருத்தமுடன் 1987ஆம் ஆண்டு சிலிக்குயில் பதிப்பகத்தினரால் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. இத்தொகுப்பில் இடம்பெற்ற சிவரமணியும் செல்வியும் உலகிலிருந்து அகற்றப் படவில்லை. ஏனையோர் வெவ்வேறு இடங்களில் உறைந்துள்ளனர். சிங்களவ ராணுவத்துடன் முரண்பட்டுப் போராடும் சூழலில், அகப் போராளி இயக்கத்தினருடன் முரண்பாடு நிற்கும் நிலையை 'சொல்லாத சேதிகள்' சொல்ல முயன்றுள்ளன.

'இடைவெளி' கவிதையில் அ. சங்கரி, தனக்கும் தனது ஆண் நண்பருக்குமான இடைவெளியைக் காட்சிப்படுத்தியுள்ளார். வழமையான பெண் மனத்திலிருந்து தன்னை விலக்கிப் பார்க்கும் சங்கரியின் குரல் தனித்துவமானது.

என்னை

மேகத்திற்குள்ளும்

மண்ணிற்குள்ளும்

மறைக்க எண்ணிய வேளையில்

வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்

அவர்களின்

குரோதம் நிறைந்த பார்வையும்

வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்

என்னை சுட்டெரித்தன

என எழுதிய சிவரமணி, அரசியல் நெருக்கடி காரணமாக 1991இல் தற்கொலை செய்து கொண்டார்.

போராட்டத்தில் வீரத்துடன் போராடி ஆண்கள் இறந்து போகின்றனர். அத்துடன் அவர்களுடைய துயரம் நீங்குகின்றது. வீட்டில் குழந்தைகளுடன் காத்திருக்கும் கணவனை இழந்த இளம் பெண்ணுக்கு ஒவ்வொரு நாளும் துயரம்தான். இராணுவத்தினரின் வன்புணர்ச்சிக் குள்ளாகும் பெண்ணுடல்கள் எதிர்கொள்ளும் வதைகள் வேறு. பெண்ணின் இருப்பே போராட்டமயமாகும் சூழலில், இதுவரை தமிழ்ச் சமூகம் புனைந்திருந்த பெண் பற்றிய பிம்பம் சிதலமடைகின்றது. மாறிவரும் புதிய சமூகத்தை வரவேற்பதாகப் பெண் கவிஞர்களின் கவிதைகள் உள்ளன.

இயற்கைக் காட்சிகளைச் சித்தரிக்கும் ஊர்வசியின் கவிதைகள் வாசிப்பில் அதிர்வை ஏற்படுத்தக் கூடியன. அளவில் சிறியது எனினும், 'சொல்லாத சேதிகள்', தொகுப்பு, தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதை வரலாற்றில் தனித்து விளங்குகிறது.

'பெயல் மணக்கும் பொழுது' என்ற தலைப்பில் அ. மங்கை தொகுத்த ஈழப்பெண் கவிஞர்களின் கவிதைகள் 2007இல் வெளியாகியுள்ளது. தொண்ணூற்று மூன்று பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய பெரிய தொகுப்பு, இத்தனை பெண்கள் கவிதை எழுதுகின்றனரா என்ற வியப்பை ஏற்படுத்துகின்றது. ஈழப்போராட்டத்தில் போராளிகள் ஆயுதமேந்திய போது வெளிப்பட்ட பெண் கவிதைகள், கடந்த இருபதாண்டுகளில் அடைந்துள்ள வளர்ச்சி நிலையை இத்தொகுப்பில் காணவியலும். போரினால் ஏற்படும் இழப்பு ஒருபுறமும், புலம்பெயர்ந்த தேசத்தில் வாழும் அவலநிலை என இருவேறு போக்குகளும் பெண் எழுத்தில் பதிவாகியுள்ளன. தமிழ்ப் பெண் என இதுவரை மரபுரீதியாகப் புனையப்பட்டுள்ள பிம்பங்களைத் தகர்த்துவிட்டுப் பெண் தனக்கான புழங்கு வெளியை உருவாக்கிக் கொள்வதை இத்தொகுப்பின் மூலம் அறிய முடிகின்றது.

ஈழத்து எழுத்தாளர் சித்ரலேகா, தமிழகத்தைச் சார்ந்த வ. கீதா தொகுப்பாளர் அ. மங்கை ஆகியோர் 'பெயல் மணக்கும் பொழுது' நூலின் தேவை பற்றியும், இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் பற்றியும் கருத்துரைத்துள்ளனர்.

சங்கரியின் 'உயிர்வெளி மாறுபட்ட தொனியில் பெண் மனத்தினையும் உடலையும் பதிவாக்கியுள்ளது. நள்ளிரவில் வானத்தைப் பார்த்தபடி புல்தரையில் கவிதை சொல்லி படுத்துள்ளார். தொலைவில் மத்தள ஒலியும் துப்பாக்கி வெடியொலியும், இந்நிலையில் பாடல் வரிகள்

தென்றல் தடவும்

எனது தலைமயிரில்

காதின் மடலில்

காலின் பெருவிரலில்
மார்பகத்தின் மேட்டில்
இன்பம் கொப்பளிக்கும்
எனதுயிரும்
எனதுடலும்
இவ்விரவின் தேன் பருகும்.

இயற்கைப் பரப்பில் தன்னையிழந்து துயர் மறக்கும் சங்கரியின் மனம் காற்றில் மிதக்கிறது.

ஆண்குறி இருப்பதனால் ஆணாகச் சிலாகிக்கப்படுகிறவனைப் பற்றிய கல்யாணியின் கவிதை, ஆண் மேலாதிக்கச் சூழலை நுட்பமாகப் பதிவாக்கியுள்ளது.

முத்தங்களாகி கலவியில் மயங்கி
இறுக அணைத்து வியர்வையில் ஒட்டி
கரைந்து போகும் அடுத்த நிமிடமே
நீ ஆணாகி விடுகிறாய்

என்ற றஞ்சனியின் 'புரிதல் அவலம்' கவிதை, நவீனப் பெண் மனம் பற்றிய நுண் பதிவு.

லுனுகலை ஹஸீனா புஹார் என்ற பெண் கவிஞர் எழுதிய 'அம்மா வந்துவிட்டேன்' கவிதை, தாயைப் பிரிந்த இளம் பெண்ணின் மனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

"தனிப்பட்ட ரசனை மட்டங்கள் போன்றவற்றை இதுபோன்ற தொகுதிக்குள் கொண்டு வர நான் விரும்பவில்லை. வாழ்வா சாவா என்ற போராட்டத்தில், மூச்சு விடத் திணறும் சூழலில் வெளிவரும் இக்கவிதைகளைக் கூறுபோட்டு கூவி விற்க நான் தயாராக இல்லை. அதற்கான மனம் என்னிடம் இல்லை' என்று தொகுப்பாளர் அமங்கை நூலின் பதிப்புரையில் குறிப்பிட்டிருப்பது வாசிப்பில் பதற்றத்தை ஏற்படுத்துகிறது.

எண்பதுகளில் சில தொகுப்புகள்

ஆனந்த், தேவதச்சன் ஆகிய இரு கவிஞர்களின் கவிதைகளும் தொகுக்கப்பட்டு 1981இல் 'அவரவர் கை மணல்' என்ற பெயரில் வெளியானது. "லௌகிக உலகத்தை, அதன் ரேஷன் க்யூவை அதன் அமிலத்தை அதன் வைரங்களை ஏற்றுக் கொள்ளும் தேவதச்சன் கவிதைகள் சூடேறிய போது, வேற்று யதார்த்தக் காட்சிகளைக் காணத் தொடங்கிவிடும்" என தேவதச்சன் கவிதைகள் பற்றிய குறிப்பு நூலில் உள்ளது. "ஆனந்தின் கவிதைகள் லௌகிக உலகை விரோத பாவம் காட்டாமல் புறக்கணித்து விட்டவை" என்ற அறிமுகம் ஆனந்தின் கவிதைகளைப் புரிந்து கொள்ள உதவலாம்.

புதுக்குரல்கள் என ஒலித்த தமிழ் நவீன கவிதை, தொடக்கத்திலிருந்தே தத்துவத்தைத் தாங்கிக் கொண்டு வெளிப்பட்டுள்ளது. ஆனந்த், தேவதச்சன் ஆகிய இருவரும் தங்கள் இருப்பின் வழியே கண்டறிந்த மெய்மைகளைக் கவிதையாக்க முயன்றுள்ளனர். எனவே கவிதையின் மொழி வேறு ஒன்றாக உருமாறியுள்ளது.

எண்பதுகளில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் 'கனவைத் தொலைத்தவர்கள்' 'நொடிகளின் உறைப்பு' என இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளனர்.

தீர்க்கவாசகன் எனப்படும் அ. ராமசாமி, முத்துராமலிங்கம், மகுடி, பாணன், இரா. பிரபாகர் ஆகிய ஐவரின் கவிதைகளும் கனவைத் தொலைத் தவர்கள் என்ற பெயரில் வெளியாகியுள்ளன. பேராசிரியர் தி.சு. நடராசன் கவிதை வடிவில் அறிமுக உரை தந்துள்ளார். இளைஞர்களுக்கே உரிய ஆவேசம், எரிச்சல், மிடுக்கு, கேலி, பகடி என வெளிவந்த கவிதைகளில் அன்றைய இளைய தலைமுறையினரின் மனம் பதிவாகியிருந்தது. இதுபோல கல்லூரி மாணவர்கள் சேர்ந்து கவிதைப் புத்தகம் வெளியிடும் வழக்கம் தொண்ணூறுகளில் கூட இருந்தது. அவை தொகுத்து ஆராயப்பட வேண்டியுள்ளது.

சிறுபத்திரிகை கவிதைகளின் தொகுப்பு

'எழுத்து' இதழ் முதலாகவே தமிழில் கவிதை முயற்சிகளுக்குப் பெரிதும் ஆதரவு அளித்தவை சிறுபத்திரிகைகள் தான். ஒவ்வொரு காலகட்டத்திலும் படைப்பு ரீதியில் நடைபெற்ற சோதனை முயற்சிகளுக்கும், காத்திரமான கண்டுபிடிப்புகளுக்கும் களம் அமைத்துத் தந்துள்ளன. சிறுபத்திரிகைகள் ஒரு சிறுபத்திரி கையில் வெளியிடப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப் படும் கவிதைத் தேர்வில் ஆசிரியரின் அரசியல் உள்ளது. சில ஆண்டுகளாக அப்பத்திரிகையில் வெளியான கவிதைகளிலிருந்து, குறிப்பிடத்தக்க கவிதைகளை மட்டும் தேர்ந்தெடுத்து நூலாக வெளியிடுவது என்பது தொகுப்பாளரின் விருப்புவெறுப்பு சார்ந்தது. எனினும் குறிப்பிட்ட காலகட்டத்தில் கவிஞர்களின் பதிவுகளாக அத்தொகுப்புகள் விளங்குகின்றன.

1978 முதல் பத்தாண்டுகள் வெளியான 'ழ', கவிதைக்கான இதழில் வெளியான கவிதை களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பத்திரண்டு கவிஞர்களின் கவிதைகள் 'ழ கவிதைகள்' என்ற பெயரில் 1990இல் வெளியிடப்பட்டது. ஞானக்கூத்தன், ஆர். ராஜகோபாலன், எஸ். வைத்தியநாதன், அழகிய

சிங்கர் ஆகிய நால்வரும் தொகுப்பாசிரியராகச் செயல்பட்டுள்ளனர். "மணிக்கொடிக்காரர்கள் சிறுகதைத் துறையில் சாதித்ததை 'ழ' கவிஞர்கள் கவிதைத் துறையில் சாதித்திருக்கிறார்கள் எனத் தொகுப்பின் முன்னுரையில் ஐராவதம் குறிப்பிட்டிருக்கிறார். "கவிஞனின் நெருக்கமான குரல் தனிப்பட்ட முறையில் மனம் விட்டுப் பேசும் தொனி" என நவீன கவிதை பற்றிய அணுகுமுறை, தொகுப்பாக்கத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. கவிதையின் மூலம் கவிஞன் தனது அகத்தேடலை மேற்கொள்கிறான். தனிமனிதப் போக்கினை வலியுறுத்தும் கவிதைகளுக்குத் தொகுப்பில் முன்னுரிமை தரப்பட்டுள்ளது.

பலமுறை
பஸ்ஸிலும் சைக்கிளிலும்
போகுமிடம் போகையில்
இரண்டு பக்கமும் வயல்களைப் பார்த்துப்
போனதுதான் இந்த ரோடு;
சும்மா உலாவ வருகையில்
இன்று தெரிந்தது
வயலுக்கு நடுவேதான் ரோடு போகின்றது

என்ற பிரதீபனின் கவிதையை 'ழ' கவிதைகள் தொகுப்புப் பற்றிய மாதிரிக் கவிதை என்று சொல்ல முடியுமா? தெரியவில்லை.

பத்தாண்டுகள் வெளியான 'ழ' இதழில் முக்கியமான கவிஞர்களின் கவிதைகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ள இத்தொகுப்பு, ஒரு நிலையில் காலத்தின் பதிவாக உள்ளது.

விருட்சம் இதழில் 1988 முதல் 1992 வரை ஐந்தாண்டுகள் வெளியான கவிதைகளிலிருந்து அழகிய சிங்கர் தொகுத்த கவிதைகள், விருட்சம் கவிதைகள்: தொகுதி 1 என்ற பெயரில் 1994 இல் வெளியாகியுள்ளது. விருட்சம் இதழில் 1993-1998 வரை வெளியிடப்பட்ட கவிதைகளைத் தொகுத்த ரா. ஸ்ரீனிவாசன், விருட்சம் கவிதைகள்: தொகுதி 2 என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். விருட்சம் இதழின் ஆசிரியரான அழகிய சிங்கரின் தேர்வின் படியே கவிதைகள் பிரசுரமாகின்றன. எனவே இவ்விரு தொகுதிகளிலும் இடம்பெற்றுள்ள கவிதைகள் பெரிதும் அழகிய சிங்கரின் விருப்பு வெறுப்பு சார்ந்தவையாக உள்ளன.

முதல் தொகுதியில் தொண்ணூற்று நான்கு கவிஞர்களின் நூற்று அறுபத்து மூன்று கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நகுலன், பசுவய்யா, எஸ். வைத்தீஸ்வரன் போன்ற மூத்த கவிஞர்கள் தொடங்கி, ஓரிரு கவிதைகள் மட்டும் எழுதியுள்ள கவிஞர்களும் தொகுப்பில் உள்ளனர். 'விருட்சம் கவிதைகள் ஓர் அறிமுகம்' என்ற அறிமுகத்தை ஸ்ரீனிவாசனும், 'ஒரு சாஸ்திரிய வாதக் கண்ணோட்டம்' என்ற கட்டுரையை ஞானக் கூத்தனும் எழுதியுள்ளனர். "கவிதை எழுதும் போதும் சரி, படிக்கும் போதும் சரி, நமக்கு விநோதமான அனுபவத்தைக் கவிதை தருகிறது. ஒரு தீர்க்கதரிசியின் சூட்சுமத்தைக் கவிதை படைப்பவனுக்குத் தெரியாமல் அளிக்கிறது. எளிதில் வார்த்தைகள் மூலம் விளக்க முடியாத ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியைக் கவிதையைப் படிக்கும் போது அறிய முடிகிறது" என்ற அழகிய சிங்கரின் பதிப்புரை, கவிதைத் தேர்வில் செயற்பட்டுள்ள மனநிலையை அறிய உதவுகிறது. சமயவேலின் 'எங்களுக்கு ஒரு அறை இருந்தது' என்ற பிரபலமான கவிதை விருட்சம் இதழில் தான் வெளியாகியுள்ளது.

கவிதைக்கான சொற்சிக்கனத்துடன், வாசிப்பில் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தொகுப் பிலுள்ள பெரும்பாலான கவிதைகள் உள்ளன.

விருட்சம் கவிதைகள் தொகுதி 2 இல் தொண்ணூற்று மூன்று கவிஞர்களின் நூற்று ஐம்பத்திரண்டு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. விருட்சம் கவிதைகளின் இரு தொகுப்பு நூல்களையும் வாசிக்கும் போது, ஒரு இலக்கிய இதழ், இத்தனை கவிஞர்களின் கவிதைகளுக்கு இடம் அளித்துள்ளதா என்ற வியப்புத் தோன்றுகின்றது. ஒரு கவிஞரின் ஒரு கவிதை வெளியாகியிருந்தால், அது நிச்சயம் சேர்க்கப்பட வேண்டும் என்ற அழகிய சிங்கரின் முயற்சியில், சக கவிஞர்களை மதிக்கும் தன்மை வெளிப் பட்டுள்ளது. நகுலன் போன்ற மூத்த கவிஞர் தொடங்கி, அன்றைய காலகட்டத்தில் கவிதை எழுதிக் கொண்டிருந்த பல கவிஞர்களின் கவிதைகள் அடங்கியிருப்பது தொகுப்பினுக்குப் பன்முகத் தன்மையை அளிக்கின்றது. 'விருட்சம் கவிதைகள் ஓர் அறிமுகம்' என்ற தொகுப்பாசிரியர் ரா. ஸ்ரீனிவாசனின் கட்டுரை, கவிதை பற்றிய பொதுவான பேச்சைப் பதிவாக்கியுள்ளது. விருட்சம் கவிதைகளின் தனித்துவமான போக்கு தேர்வில் எதிர் கொண்ட அனுபவம் என நெருக்கமாக அக்கட்டுரை இல்லை.

பொதுவாக விருட்சம் கவிதைகளின் இரு தொகுப்புகளும், நவீனத் தமிழ்க் கவிதை பற்றிப் பல்லாண்டுகளாக நிலவி வரும் பேச்சை நிஜமாக்கு கின்றனவாக உள்ளன.

1994 முதல் 2003 வரை காலச்சுவடு இதழில் வெளியான கவிதைகளிலிருந்து, நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் இருநூறு கவிதைகள், 'காலச்சுவடு கவிதைகள்' தொகுப்பில் இடம்

பெற்றுள்ளன. சிபிச் செல்வன் தொகுப்பாசிரியராகக் கவிதைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார். பத்தாண்டுகளில் நவீனத் தமிழ்க் கவிதைகளின் போக்குகளை அவதானிக்க ஒரு வகையில் இத்தொகுப்பு உதவியாக உள்ளது. குறுங்கவிதை, நெடுங்கவிதை, கதை சொல்லும் பாணியிலான கவிதை, இறுதி வரியை நோக்கி கவரும் கவிதை, தாள லயத்தில் அமைந்த கவிதை எனப் பல்வேறு வகைகளைத் தனது தொகுப்பாக்கத்தில் கையாண்டிருப்பதாகத் தொகுப்பாளர் சிபிச் செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

மூத்த எழுத்தாளரான பசுவய்யா தொடங்கிப் பல்வேறு கவிஞர்களின் கவிதைகளும் தொகுப்பைக் கனமானதாக்கியுள்ளன. ஈழத்துக் கவிஞர்கள், பெண் கவிஞர்கள் ஆகியோரின் கவிதை முயற்சிகளுக்குக் காலச்சுவடு பெரும் இடம் அளித்துள்ளதனைத் தொகுப்பில் காண முடிகின்றது. மாலதிமைத்ரி, கனிமொழி, சுகிர்தராணி போன்ற பெண் கவிஞர்களின் கவிதைகள் வெளியீட்டில் 'காலச்சுவடு' இதழ் பங்கு கணிசமானது. காலச்சுவடு கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் அட்டவணையைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. 'காலச்சுவடு அதிகார மையமாகி விட்டது' என அதற்கெதிராகக் கலகக்குரலை உயர்த்தும் பல கவிஞர்கள் முன்னர் காலச்சுவடில் கவிதை எழுதியுள்ளனர். காலப்போக்கில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகப் பின்னர் முரண்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், காலச்சுவடில் அன்றைய காலகட்டத்தில் கவிதைகளைத் தேர்வு செய்த மனுஷ்யபுத்திரனின் தேர்வுதான் இத்தொகுப்பினுக்கான மூல ஆதாரமாக உள்ளது. தொகுப்பிலுள்ள சில கவிதை வரிகள்:

புரிதலின் முடிவில்
போகின்றபோது
தோட்டத்தில்
தங்களுக்கிடையேயானதொரு
மதுஊற்றி
கரைத்துக் கொண்டிருக்கும்
இருவரைப் பார்த்தேன்
வருகின்றபோது
குறுக்கும் நெடுக்குமாய்
அவர்களுக்கிடையில்
உயர்ந்திருந்தன
அநேக சுவர்கள்

ராஜன் ஆத்தியப்பன்

தொடர்ந்து கவிதைத் தளத்தில் பல்லாண்டுகளாக இயங்கிவரும் கவிஞர்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. 'காலச்சுவடு' போன்ற பத்திரிகையில் ஒரு கவிதையை மட்டும் எழுதிவிட்டுக் காணாமல் போகும் ராஜன் ஆத்தியப்பன் போன்ற கவிஞர்களைக் கண்டறிய இத்தொகுப்புகளே ஆதாரமாக உள்ளன. என்ன ஆச்சு கவிஞர் ஆத்தியப்பனுக்கு? இவர் ஒரு மாதிரி. இவரைப் போல நூற்றுக்கணக்கான கவிஞர்கள் தொலைந்து போவதன் சூட்சுமத்தைக் கண்டறிய வேண்டியுள்ளது.

தமிழ் நவீன கவிதை வெளியீட்டில் முன்னிலை வகித்த 'கணையாழி' இதழில் வெளியான கவிதைகள் தொகுக்கப்பட்டு நூல் வடிவம் பெற்றுள்ளன. அத்தொகுப்பு கிடைக்காமை காரணமாக இவ்வாய்வில் சேர்க்கப்படவில்லை.

சிறுபத்திரிகைக் கவிதைகளிலிருந்து தொகுப்பு

தமிழில் நவீன கவிதை வெகுசன அச்சு ஊடகங்களிலும் சிறு பத்திரிகைகளிலும் தொடர்ந்து வெளியாகின்றது. வாலி, வைரமுத்து, மு. மேத்தா, பா. விஜய் போன்ற பிரபலங்கள் மட்டுமின்றிப் பல்வேறு கவிஞர்கள் கவிதைகளை வெளியிட்டு வருகின்றனர். எனினும் 'எழுத்து' இதழ் முதலாகக் காத்திரமான சிறுபத்திரிகைகளில் வெளிவருவதுதான் தீவிரமான கவிதைகள் என்ற நம்பிக்கை பலருக்கு உண்டு. கவிதை வெளியீடு, கவிதை விமர்சனம் என இருவேறு தளங்களின் மூலம் கவிதைப் போக்கினை வடிவமைக்கும் சிறுபத்திரிகைகள், பல்வேறு சோதனை முயற்சிகளுக்கும் இடமளிக்கின்றன. மேலும் மொழியின் அதிகபட்ச சாத்தியங்கள் மூலம் கவிதையைச் செறிவு மிக்கதாக்கும் முயற்சியும் இங்கு நடைபெறுகின்றது. வெகுசனப் பண்பாட்டின் விளைவாகப் பிரபலமானவர்களின் கவிதை முயற்சிகளை மதிப்பிட வேண்டும். மற்றபடி சிறுபத்திரிகைகள் தான் தமிழில் நவீன கவிதையைக் காலந்தோறும் வடிவமைத்திருக்கின்றன என்று சொல்ல இடமுண்டு.

பூமா ஈஸ்வரமூர்த்தியும் லதா ராமகிருஷ்ணனும் பல்வேறு சிறுபத்திரிகைகளில் இருந்து தேர்ந்தெடுத்த நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் இருநூறுக்கும் கூடுதலான கவிதைகள் 'சிற்றகல்' என்ற பெயரில் 2003இல் வெளியிடப்பட்டுள்ளன. "பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சிறுபத்திரிகைகளில், வெளிவந்த, பன்முக ஆளுமை கொண்ட, முரணான, எதிர் எதிரான கருத்துருவங்களைப் பின்புலமாகக் கொண்ட பல்வேறு கவிஞர்களின் கவிதைகளை ஒரே தொகுப்பில் பதிவுசெய்ய வேண்டிய நிலையில்தான்

நாம் இருக்கிறோம். தமிழ்க் கவிதைகளில் இருக்கும் இயங்கும் பல்வேறு கவி மனதின் இன்றைய ஆவணங்களாகவே இவற்றை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று தொகுப்பாளர் பூமா ஈஸ்வரமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். சிறுபத்திரிகையில் மட்டும் தான் உன்னத இலக்கியம் வெளியாகும் என்ற 1970களின் நம்பிக்கை, இன்று பொருந்தாது. எனினும் ஒரு கருத்து அடிப்படையில் தொகுப்பாளர்களின் முயற்சியானது பரந்த காலகட்டத்தை அடையாளப்படுத்த முயலுகிறது. கவிஞர் பிச்சமூர்த்தியின் கவிதையிலிருந்து, இன்றைய இளம் கவிஞர்களின் கவிதைகள் வரையிலான தேர்வு, நவீன தமிழ்க் கவிதை பற்றிய 'பருந்துப்பார்வை'யின் வெளிப்பாடாகும். சிறுபத்திரிகைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் எனினும், தொகுப்பாளர்களின் கவிதை சார்ந்த ரசனை ஸ்தலமாகத் தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

நிலவியல் சார்ந்த கவிதைத் தொகுப்பு

நவீன கவிதை என்பது இடமும் வெளியும் தாண்டி, பிரபஞ்ச உண்மைகளைத் தேடுகின்றது என்று வாதிடுவோரிடையே, 'தெற்கிலிருந்து சில கவிதைகள்' தொகுப்பு சலசலப்பை ஏற்படுத்தும். பன்னிரு கவிஞர்களின் அறுபத்தேழு கவிதைகளைத் தொகுத்துச் சமயவேல், 1992இல் வெளியிட்டுள்ள தொகுப்பில் இடம் பெற்றுள்ளவர்கள் தென் மாவட்டத்தில் வாழ்கிறவர்கள் ஆவர். "... வேலைப் பளுவையும், பிரசுரச் செலவையும் கருத்தில் கொண்டு, 'தெற்கிலிருந்து' எனப் பிரித்துக் கொண்டோம். வேறு பிரத்யேகக் காரணம் எதுவுமில்லை'' எனத் தொகையுரையில் தொகுப்பாசிரியரான சமயவேல் குறிப்பிட்டுள்ளார். தென் மாவட்டங்களில் நிறைய கவிஞர்கள் இருப்பதும், அவர்களிடையேயுள்ள பொதுத் தன்மையை அறிவதும், தமிழ்க் கவிதைக்கு அவர்களுடைய கவிதைப் பங்களிப்பும் தொகுப்பாளரின் நோக்கமாக இருப்பதையும் தொகுப்புரை மூலம் அறிய முடிகின்றது. 'கரிசல் கவிதைகள்' எனக் கொண்டு வருவதற்குப் பதிலாகத் 'தெற்கிலிருந்து சில கவிதைகள்' என்ற பெயரில் தொகுப்பு வந்துள்ளது. அன்றைய காலகட்டத்தில் வட்டார இலக்கியத்தின் மீது ஏற்பட்ட கவர்ச்சியின் விளைவுதான், நவீன கவிதைத் தொகுப்பினைப் பிரதேசம் சார்ந்ததாக மாற்றிவிட்டது. முத்து மகரந்தன், கல்யாண்ஜி, ஜெயமோகன், எம்யுவன், தேவதச்சன், தேவநேசன், சமயவேல், பூமா ஈஸ்வரமூர்த்தி அப்பாஸ், விக்கிரமாதித்யன் என்ற கவிஞர்களைத் தெற்கினுக்குள் அடைத்தது சோதனையளவிலே தேங்கிப் போய்விட்டது. நவீன கவிதைகளை வட்டாரத்தினுக்குள் அடைக்க முயன்றது வேடிக்கையானதுதான்.

பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பான 'பறத்தல் அதன் சுதந்திரம்' க்ருஷாங்கினியால் தொகுக்கப்பட்டுள்ளது. 2001ல் வெளியான இத்தொகுப்பில் 52 பெண் கவிஞர்களின் 97 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. தமிழகம் மட்டுமின்றி ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இரா. மீனாட்சி போன்ற பெண் கவிஞர்களிலிருந்து தொண்ணூறு களுக்குப் பின்னர் 'பெண் எழுத்து' எனத் தனித்த அடையாளத்துடன் எழுதும் இளம் கவிஞர்களின் கவிதைகள் வரை தொகுக்கப்பட்டுள்ளன. தமிழில் பெண் என்ற ஓர்மையுடன் எழுதுகின்ற பெண் கவிஞர்களின் எழுத்துக்களைப் பதிவாக்க வேண்டும் என்ற தொகுப்பாளரின் முயற்சியின் விளைவாகத் தான் இத்தொகுப்பைக் கருத வேண்டியுள்ளது. பெண் கவிதைத் தொகுப்பிற்கான தொடக்கமாகத் தான் இத்தொகுப்பு முயற்சி உள்ளது. தொகுப்பினுக்கு வ. கீதா எழுதியுள்ள முன்னுரை, பரந்துபட்ட நிலையில் பெண் எழுத்தினரையும், நவீனப் பெண் கவிதைகளின் தனித்துவத்தையும் விளக்கியுள்ளது. புலம் பெயர்ந்த நாட்டில் பெண்ணின் எதிர்கொள்ளல், ஈழத்துப் போரின் காரணமாகப் பெண் அடையும் வேதனை, தமிழகத்துப் பெண்களின் உடல் ரீதியான வலி, பால் வேறுபாடு காரணமாக அடையும் இழிவுகள்– எனப் பல்வேறு நிலைகளில் பெண் கவிஞர்களின் பிரத்யேக மனநிலையைச் சித்தரிப்பதாக இத்தொகுப்பு உள்ளது.

பெண்ணுடல் பற்றிக் காலந்தோறும் சமூகம் புனைந்துள்ள புனைவுகள், யதார்த்தத்தில் சிதலமாகின்றன. அதிலும் உடல் பற்றிய மர்மங்களைக் கட்டமைத்து உடலைப் பூடகப் படுத்தும் தமிழ்ச் சூழலில், கவிஞர் அ. வெண்ணிலா எழுப்பும் குரல் முக்கியமானது.

பேற்றின் வலியோடு

அலறும் குரலில்

இணைந்தே ஒலிக்கிறது

என் நிர்வாணத்திற்கான

அழுகையும்

இத்தகைய வரிகள் ஆணுக்கு முற்றிலும் அந்நியமானவை. பெண் என்ற நிலையில், 'பறத்தல் அதன் சுதந்திரம்' தொகுப்பு புதிய வழியை அமைத்துள்ளது. அது இன்றைய தேவையும் கூட

புலம்பெயர்ந்தோர் கவிதைகளின் தொகுப்பு

ஈழத்தில் நடைபெற்று வரும் தமிழின ஒடுக்குமுறை காரணமாகத் தமிழர்கள் புலம்பெயர்ந்து உலகமெங்கும் ஏதிலிகளாக வாழ வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இத்தகு நிலையில் தங்களுடைய சொந்த ஊர் பற்றிய ஏக்கமும், புதிய இடத்தின் புரியாத சூழலும், வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்யும் வேலையும் புலம்பெயர்ந்தோரின் மனத்தில் சலனமேற்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழர்களின் மனவோட்டம் கவிதைகளாகப் பல்வேறு இதழ்களில் வெளியாகியுள்ளன. இத்தகைய கவிதைகளைத் தொகுத்து ப. திருநாவுக்கரசு, 'புலம்பெயர்ந்தோர் கவிதைகள்' என்ற தலைப்பில் 2001ஆம் ஆண்டில் நூலாக்கியுள்ளார். அறுபத்தைந்து கவிஞர்களின் எண்பத்தொன்பது கவிதைகள் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

மேலை நாடுகளில் பனிபடர்ந்த புதிய பிரதேசத்தில் வாழ நேர்ந்திட்ட தமிழர்களின் புலம் பெயர் வாழ்க்கை பற்றிய பதிவுகள் முக்கியமானவை. அந்நிய நாட்டில் வேற்று மொழி பேசும் சூழலில், முகமிழந்து அடையாளமற்றுப் போகும் புலம்பெயர்ந்த தமிழர்களின் மன வேதனையின் வடிகால்களாகச் சில கவிதைகள் உள்ளன.

"எட்டி நில் கறுப்பனே!
வெண் முகங்கள்
விட்டெறியும்
ஏளனப் பார்வையில்
தலைகுனியும் மௌனமாய்"

என நிருபா படும் வேதனையை எப்படி சமாதானப்படுத்த முடியும். இப்பிரச்சினை புலம்பெயர்ந்த தமிழருக்கே உரித்தானது.

"வெள்ளைப்பனி படிந்த
இலையுதிர்ந்த நெடு மரங்கள்
பெருங் கட்டட சாலைகளில்
எலும்பையும் ஊடுருவும்
ஊசிப் பனித்துளிகள்

எனச் சந்தியா விவரிக்கும் காட்சி முக்கியமானது. இயற்கைச் சூழலுடன் உடல் பொருந்திப் போவது எளிது அல்ல. குற்றேவல் செய்தும் உணவகங்களில் தட்டு கழுவியும் 'பிழைப்பு' நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட புலம்பெயர்ந்தோரின் கவிதை வரிகளில் ஈரம் ததும்புகிறது.

ஈழப் பிரச்சினைக்கு ஆதரவான கவிதைத் தொகுப்பு

ஈழத்தில் சிறுபான்மையினராக வாழ நேர்ந்திட்ட தமிழர்கள் மீது, மொழி அரசியலை முன்னிறுத்திச் சிங்கள அரசாங்கம் நடத்தும் வன்முறை, கொடூரம் இன்றளவும் தொடர்கின்றது. மொழியினால் ஒன்றுபடும் இந்தியத் தமிழர்கள் பல்லாண்டுகள் ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றனர். தொப்புள் கொடி உறவு எனப் போற்றப்படும் நிலையில், ஈழத் தமிழருக்கு ஆதரவாக எழுதப்பட்ட கவிதைகளைத் தொகுத்துக் கவிஞர் அறிவுமதி 2003இல் வெளியிட்ட 'அரைக்கம்பத்தில் தொப்புள் கொடி', கவிஞர்களின் உணர்ச்சிபூர்வமான கருத்துகளைப் பதிவு செய்துள்ளது.

யூமா. வாசுகி, அய்யப்ப மாதவன், பவுத்த அய்யனார், தமிழச்சி தங்கபாண்டியன், கலாப்ரியா, தமிழ்நதி, என்.டி. ராஜ்குமார், குட்டி ரேவதி, கரிகாலன், பிரபஞ்சன், தேன்மொழிதாஸ், அழகிய பெரியவன், கல்யாண்ஜி, என நூற்றுக்கணக் கான கவிஞர்கள் ஈழத் தமிழர் போராட்டம் குறித்து எழுதிய கவிதைகள் கொதிப்புடன் விளங்குகின்றன. தமிழர் என்பதற்காக வன்முறைக் குள்ளாகும் மக்களின் அவலநிலை கண்டு சீறிய கவிஞர்களின் கவிதைகளில் 'அறச் சீற்றம்' பொதிந்துள்ளது.

....

நான்
எதுவும் பேசக் கூடாது
எதுவும் எழுதக் கூடாது
எதுவும் சொல்லக்கூடாது
ஏனென்றால்
நான் தமிழன்

என்ற பவுத்த அய்யனாரின் கவிதை, ஈழத்தில் நடைபெற்ற பேரழிவினுக்குச் சாட்சியாக உள்ளது.

ஈழப்பிரச்சினையை முன்னிறுத்தித் தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு முயற்சிகளும், தமிழக அரசியல்வாதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட நிலையில், பெரும்பான்மை மக்கள் மௌனத்தில் பேச்சற்றுப் போயினர். நம் கண் முன்னர் நடைபெற்ற பேரழிவின் மௌனசாட்சிகளாகத் தமிழகத் தமிழர்கள் மாற்றப்பட்டதின் சாட்சியமாக 'அரைக்கம்பத்தில் தொப்புள் கொடி உறவு' தொகுப்பு உள்ளது. தமிழர் வரலாற்றில் முக்கியமான வரலாற்று ஆவணமாக இக்கவிதைத் தொகுப்பு விளங்குகிறது.

தனிப்பட்ட கவிதைத் தொகுப்புகள்

ராஜமார்த்தாண்டன் தொகுத்த 'கொங்குதேர் வாழ்க்கை: தொகுதி 2இல் 93 கவிஞர்களின் 893 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. 2004இல் வெளியான இத்தொகுப்பில் தொகுப்பாளர் ராஜமார்த்தாண்டனின் தனிப்பட்ட கவிதை ரசனைக்கேற்பக் கவிதைகள் தேர்வு செய்யப் பட்டுள்ளன. எழுபதாண்டுகள் நவீன கவிதை வரலாற்றில் ந. பிச்சமூர்த்தி தொடங்கிப் பல்வேறு போக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஈழத்துக் கவிஞர்கள், பெண் கவிஞர்கள், தலித் கவிஞர்கள் எனப் பலரின் கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

"கவிதை என்றும் புதியதாக இருக்க வேண்டும். கவிஞனின் தனித்துவம், அவனுக்கேயான பார்வை, அவனது சிறப்பான மொழியாளுமை, எல்லாவற்றுக்கும் மேலாக அவனது அபூர்வமான கற்பனையாற்றல் கவிதையில் இந்தப் புதுமை சாத்தியமாகின்றது. நேற்றைய கவிதையை இன்று நாம் அனுபவித்து ரசிப்பதற்கும் இந்தப் புதுமையும் கற்பனையும் காரணங்களாகின்றன. இந்த அடிப்படையிலேயே இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன" எனத் தொகுப்பாளர் ராஜமார்த்தாண்டன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவர் தேர்ந் தெடுத்துள்ள கவிஞர்களின் அட்டவணை, கருத்து முரணை ஏற்படுத்துவதாக உள்ளது. பிரம்மராஜன், யவனிகா ஸ்ரீராம் போன்ற கவிஞர்களின் கவிதைகளைத் தொகுப்பாளர் ஏன் சேர்க்கவில்லை என்ற கேள்வி தோன்றுகிறது. எல்லோருடைய ரசனையையும் திருப்தி செய்யும் வகையில் கவினதகளைத் தொகுக்க முடியாது. தொகுப் பாளரின் தனிப்பட்ட தேர்வுதான் தொகுப்பைத் தீர்மானிக்கிறது.

தமிழில் வெளியான சிறந்த கவிதைகள் அனைத்தும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட வேண்டுமென்ற தொகுப்பாளரின் எண்ணம் காரணமாகத் தொகுப்பு, பெரிதாக விரிவடைந் துள்ளது. இத்தொகுப்பு குறித்துக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், இதில் இடம் பெற்றுள்ள நவீன கவிதைகள் ஆகச் சிறந்தவை என்பதில் ஐயமில்லை. நவீன தமிழ்க் கவிதையின் குறுக்கு வெட்டுத் தோற்றமாக இத்தொகுப்பு உள்ளது. எனவே இத்தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான கவிதைகளை, வேறு மொழிகளுக்கு மொழி பெயர்க்க வேண்டும். அப்பொழுது நவீன தமிழ்க் கவிதை பற்றிய புரிதல் வேற்று மொழியினருக்கு ஏற்படும்.

'நாடோடிகள் விட்டுச் சென்றிருப்பது' என்ற தலைப்பில் பா. தேவேந்திரபூபதி தொகுத்துள்ள கவிதைகள், 2009ஆம் ஆண்டில் வெளியாகியுள்ளது. புத்தகக் கண்காட்சியையொட்டி நடைபெறும் இலக்கிய நிகழ்வுகளில் பதினைந்து கவிஞர்களால் வாசிக்கப்பட்ட கவிஞர்களின் சொந்தக் கவிதையும், அவருக்குப் பிடித்த சமகாலத் தமிழ்க் கவிதையும், மொழி பெயர்ப்புக் கவிதையும் என வாசிக்கப் பெற்றவை தொகுக்கப்பட்டு, நூல் வடிவம் பெற்றுள்ளன. பிற்சேர்க்கையில் பிரமிள், நகுலன் தொடங்கி ஐம்பத்திரண்டு கவிஞர்களின் கவிதைகள் இணைக்கப்பட்டுள்ளன.

யூமா. வாசுகி, கரிகாலன், தமிழ்நதி, குவளைக் கண்ணன் உள்ளிட்ட கவிஞர்களின் கவிதைத் தேர்வு வாசிப்பில் சுவாரசியமானதாக உள்ளது. தொகுப்பாளர் தேவேந்திரபூபதியின் வித்தியாசமான முயற்சி, தொகுப்பாக்கத்தில் வெளிப்பட்டுள்ளது.

இறுதியாகச் சில சொற்கள்:

தமிழில் நவீன கவிதைத் தொகுப்புகள் என் பார்வையில் படாமல் இன்னும் சில பல இருக்கலாம். என் தேடல் ஓர் எல்லையில் நின்றுவிட்டது.

நான்கைந்து நண்பர்கள் ஒன்று சேர்ந்து கைக்காசைப் போட்டு, ஒரு தொகுப்பின் மூலம் தங்களுடைய கவிதைகளை வெளியிடும் போக்குத் தமிழில் பரவலாக உள்ளது. அவை சேகரிக்கப்பட வேண்டும்.

கல்லூரி மாணவர்கள் ஒன்று சேர்ந்து, தங்களுடைய கவிதைகளை ஒன்றாக ஒரே தொகுப்பில் வெளியிடும் போக்கு, எழுபதுகளில் தொடங்கித் தமிழகமெங்கும் பரவலாக இருந்தது.

வெகுசன ரீதியில் தினமலர் வாரமலர் போன்ற பத்திரிகைகளில் கவிதை எழுதுகிறவர்கள் ஒன்று சேர்ந்து கவிதைத் தொகுப்புகள் கொண்டு வந்திருக்க வாய்ப்புண்டு.

1980களுக்குப் பின்னர் இடதுசாரி இலக்கிய அமைப்பில் செயல்படும் கவிஞர்கள் சேர்ந்து கவிதைத் தொகுப்புகள் கொண்டு வந்திருக்கலாம்.

எழுபதாண்டு வரலாற்றுப் பின்புலமுடைய நவீன தமிழ்க் கவிதைத் தொகுப்புகளின் பின்னர் பொதிந்துள்ள பல்வேறு அம்சங்களை அறிமுக நிலையில் இக்கட்டுரையில் பதிவு செய்துள்ளேன். அவை இன்னும் ஆய்விற்குரியன.

இக்கட்டுரையை எழுத எனக்கு உதவிய தொகுப்பு நூல்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது உங்கள் தேடுதலைத் துரிதப்படுத்தும்.

துணைநூற்பட்டியல்

1. புதுக்குரல்கள் 24 கவிஞர்களின் 63 கவிதைகள்; எழுத்து பிரசுரம், சென்னை, 1962
2. குவேரா, பிறர் ஆக்டோபஸும் நீர்ப்பூவும், சிவப்பு ரோஜா பதிப்பகம், பாளையங்கோட்டை, 1972 (06 கவிஞர்களின் 37 கவிதைகள்)
3. வெளிச்சங்கள்: வானம்பாடிகள் மானுட கீதம், வைகறை வெளியீடு, கோவை, 1973
4. சுப்பிரமணியன், எம்., (தொ.ஆ.), நாற்றாங்கால், தலை ஞாயிறு இலக்கிய அமைப்பு, தஞ்சாவூர், 1974
5. சிவசுப்பிரமணியன், நா, மற்றும் முத்துக்கிருஷ்ணன், கே., (தொ.ஆ.,) சலனம், எஸ். விஜயலட்சுமி, பாளையங்கோட்டை, 1978
6. ஆனந்த், தேவதச்சன், அவரவர் கைமணல் 'ழ' வெளியீடு, சென்னை, 1981
7. தீர்க்கவாசகன், பிறர்., கனவைத் தொலைத்தவர்கள் கனா வெளியீடு, மதுரை, 1984
8. நுஃமான், எம்.ஏ., யேசுராசா, (தொ.ஆ.,) பதினோரு ஈழத்துக் கவிஞர்கள், க்ரியா, சென்னை 1984
9. சேரன், 2, பிறர் (தொ.ஆ.) மரணத்துள் வாழ்வோம், தமிழியல், யாழ்ப்பாணம், 1985
10. சொல்லாத சேதிகள், சிலிக்குயில், குடந்தை 1987
11. ஞானக்கூத்தன், பிறர் (தொ.ஆ.,) ழ கவிதைகள், விருட்சம் வெளியீடு, சென்னை, 1990
12. சமயவேல் (தொ.ஆ.) தெற்கிலிருந்து சில கவிதைகள், வயல் வெளியீடு, சென்னை, 1992
13. அழகிய சிங்கர் (தொ.ஆ.), விருட்சம் கவிதைகள் தொகுதி 1 விருட்சம் வெளியீடு, சென்னை, 1994
14. திருநாவுக்கரசு (தொ.ஆ.,) புலம் பெயர்ந்தோர் கவிதைகள், நிழல் வெளியீடு, சென்னை 2001
15. க்ருஷாங்கினி (தொ.ஆ.,) பறத்தல் அதன் சுதந்திரம், காவ்யா, சென்னை, 2001
16. பூமா ஈஸ்வரமூர்த்தி லதா ராமகிருஷ்ணன் (தொ.ஆ.,) சிற்றகல்: சிறுபத்திரிகைக் கவிதைத் தொகுப்பு, அருந்ததி நிலையம், சென்னை, 2003
17. சிபிச் செல்வன் (தொ.ஆ.,) காலச்சுவடு கவிதைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2003
18. ராஜமார்த்தாண்டன் (தொ.ஆ.,) கொங்குதேர் வாழ்க்கை தொ.2, யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை, 2004
19. ஸ்ரீனிவாசன், ரா., (தொ.ஆ.) விருட்சம் கவிதைகள், தொ.2, விருட்சம் வெளியீடு, சென்னை, 2007
20. மங்கை அ. (தொ.ஆ.) பெயல் மணக்கும் பொழுது, ஈழப் பெண் கவிஞர்களின் கவிதைகள், மாற்று வெளியீடு, சென்னை, 2007
21. அறிவுமதி (தொ.ஆ.,) அரைக் கம்பத்தில் தொப்புள் கொடி, சாரல் வெளியீடு, சென்னை 2003
22. தேவேந்திர பூபதி. பா - (தொ.ஆ.,) நாடோடிகள் விட்டுச் சென்றிருப்பது, கடவு வெளியீடு, மதுரை, 2009

■







தமிழ் அரங்கச் செயற்பாடுகளும் தொகுப்புகளின் பங்களிப்பும்

செ. ரவீந்திரன்

இன்று உலகெங்கிலும் தொகுப்பு நூல்கள் வெளிவருவது பதிப்புத் துறையின், இயக்கச் செயற்பாடுகளை ஒட்டிய ஒன்றாக உள்ளது. "Anthology" எனப்படும் ஆங்கிலச் சொல்லுக் கான கிரேக்க மூலச் சொல்லான "Anthologia" என்பதற்கு மாலையாகத் தொகுப்பதற்குப் பூக்களைச் சேகரித்தல் எனப் பொருள்படும். காடராவின் "மெலயெஜர் (Meleager of Gadra) என்பவரால் தொகுக்கப் பெற்ற தொகைநூல் ஒன்றே தொகுப்புநூல்களின் தோற்றத்துக்கான தொடக்கப்புள்ளியாக உள்ளது என்பர். ஆனாலும் ஆதிக்கிரேக்க மொழியில் தொகுப்புநூல்கள் பற்றியும் அவை தொகுப்பதற்கான கோட்பாடுகள், வரன்முறைகள் பற்றியும் தெரிந்து கொள்ளுவதற்கான இலக்கியத் தடயங்கள் இல்லை என்றே கொள்ளவேண்டும்.

ஜப்பானிய மொழியில் ஒடோமா நோ யகோமோசி என்பவரால் தொகுக்கப் பெற்றதாக அறியப்பெறும் "மன்யோஷு" (Manyosu) என்னும் கவிதைத் தொகுப்பே அம்மொழியில் தோன்றிய முதல் கவிதைத் தொகுப்பு நூலாகும். இது யுனெஸ்கோ வெளியீடாக வெளிவந்துள்ளது. "பத்தாயிரம் இலைகள்" என அழைக்கப்பெறும் மன்யோஷுவின் கவிதைத் தொகுப்பானது "சாகா" (Choka) எனப்படும் நெடும்பாடல்களும் "தங்கா" (Tanka) எனப்படும் குறும்பாடல்களும் கொண்ட தொரு தொகுப்பாகும். இத்தொகுப்பின் காலம் கிபி. 759. இதே காலகட்டத்தே இந்தியாவில் மகராஷ்டிரி பிராகிருத் மொழியில் எழுதப்பெற்ற "ஹால சத்தசாயி", "Hala Sattasai" என்ற கவிதைத் தொகுப்பினை இங்குக் குறிப்பிடல் வேண்டும். இது 700 பாடல்கள் கொண்டது. இத்தொகுப்பே தமிழில் இரா. மதிவாணன் என்பவரால் "ஆந்திர நாட்டு அகநானூறு" என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளி வந்துள்ளது. கட்டற்ற காமத்தின் மனவெளிப்பாடுகள், வரன் முறையற்ற பாலியல் உறவுகளின் ஈர்ப்பு இவற்றின் பாடுபொருள் கொண்ட கவிதைகள் "ஹால சத்தசாயி" தொகுப்பில் பலவுண்டு. ஆனால் அன்பின் அகனைந்திணைப் பாடல்களே சங்க இலக்கியத் தொகுப்புகளாகவுள்ளன. கைக்கிளை பெருந்திணை முதலான ஒரு தலைக்காமம், பொருந்தாக் காமம் பற்றிய பாடல்கள் சங்க இலக்கியத் தொகைநூல்களில் இடம்பெற வில்லை என்பது உண்மையில் இத்தொகை நூல்களின் தொகுப்பின் அரசியல் என்றே சொல்லவேண்டும். போர்வைச்

கோப்பெருநற்கிள்ளி ஆமூர் மல்லனோடு மல்யுத்தம் புரிந்ததைக் கண்டு அவன்மீது பெருவிருப்புற்றுப் பாடிய பாடல்கள் எனப் புறநானூற்றில் மூன்று பாடல்கள் உண்டு. இப்பாடல்களின் அடிக் குறிப்பைத் தவிர பாடல்களுள் வேறு எந்தவித வரலாற்றுக் குறிப்பும் இல்லை. ஓர் ஆண்மீது கொண்ட ஒரு பெண்ணின் உன்னதக் காதல் வெளிப்பாடே இப்பாடல்கள்.

உலக மொழிகளின் இலக்கியத் தோற்றத்தின் மூலங்களைத் தேடிச் சொல்லும்பொழுது அவை தொடக்கத்தே மெய்யியல் (Sacred Literature) பாடல்களாகத் தோற்றம் கொண்டிருப்பதைக் காணலாம். ஆனால் தமிழில் சங்ககாலம் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்துப்பாட்டு எட்டுத் தொகைப் பாடல்கள் அனைத்திலும் உலகியல் (profane Literature) இருப்பதைக் காணலாம். கடவுள் இருப்பு முதன்மைப்படுத்தப்பெறாத மூவேந்தப் பேரரசுகளுள் ஒன்றான பாண்டிய மன்னர்கள் தொகுப்பித்தவர்களாகவும் அவர்களின் கீழ் தொகுத்தவர்களால் இத்தொகைநூல்கள் பலவும் பதிற்றுப்பத்து நீங்கலாகத் தொகுக்கப்பெற்றுள்ளது வரலாறு. அடிவரையறை, திணைக் கோட்பாடு இவற்றின் அடிப்படையில் பாட்டும் தொகையுமாகச் சங்ககாலப் பாடல்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. எட்டுத்தொகை நூல்கள் ஒவ்வொன்றின் தொகுப்பிற்கான காரணங்களை மீண்டும் சொல்வது தேவையற்ற ஒன்று. ஆனால் ஒரு மொழியில் தொகுப்புநூல்கள் முதன்முதலில் கவிதைத் தொகுப்புக்களாகவே உள்ளன என்பது இங்கு நினைவில் கொள்ளவேண்டும். உரையாசிரியர் காலத்தே மேற்கணக்கு கீழ்க்கணக்கு என்னும் பாகுபாடும் மேற்கணக்கு நூல்களின் ஆசிரியர் சான்றோர் (high order of the poet) எனப் பாகுபாடு செய்யப்பட்டதும் நாம் அறிந்த ஒன்று.

பக்தி நெறிக் காலத்தே சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பியாலும் வைணவ இலக்கியங்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என நாதமுனிகளாலும் தொகுக்கப்பெற்றதை ஒட்டி ஒரு சில வார்த்தைகள் இங்கு முன்வைக்கப்படவேண்டும். இறைவனுக்குச் சூட்டப்பெற்ற பாமாலைகள் எனப்பெறும் தேவாரப்பதிகங்கள் எல்லாம் முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றதன்வழி அவை செவ்வியல் சட்டகப் பிரதிகளாக (canonical texts) உருவாக்கப்பெற்றதன்வழி தோற்றம் காணாச் சிவபெருமான் போன்று உரை காணுவதற்கியலாத பிரதியாக்கம் செய்யப்பட்டது. இப்பதிகங்கள் மூலம் சமண பௌத்தம் முதலான பிற சமயத்தினர் மீதான காழ்ப்புணர்ச்சி மேற்கொண்ட வன்முறைகள் எந்தவிதமான எதிர்ப்பும் இன்றிச் சமய அரசியலின் அதிகாரச் சட்டகமாக முன்வைக்கப்பட்டுள்ளன. பன்னிரு ஆழ்வார்களின் பாடல்கள் பாசுரங்களாகத் திவ்யப் பிரபந்தங்களாகத் தொகுக்கப்பெற்று மணிப்பிரவாள நடையிலான ஈட்டின் வடிவாக்கங்களுக்குக் களம் உருவாக்கப் பெற்றது. இதன்மூலம் இந்திய சமயப் பொதுமை மரபின் (pan – Indian religious Tradition) பிரதிகளாக ஆழ்வார் பாசுரங்கள் கட்டமைக்கப்பெற்றன. சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பெற்ற முறைமைக்கும் பக்திநெறிக் காலத்தே சமயப் பாடல்கள் தொகுக்கப் பெற்ற முறைமைக்கும் இடையே ஏற்பட்ட மாற்றம் (paradigm shift) போன்றே இருபதாம் நூற்றாண்டில் பதிப்பகங்கள் (publishing houses) தோற்றம் கொண்ட தன்மையையும் மனதுள் கொள்ளல் வேண்டும்.

மேனாட்டாரின் வருகையொட்டி ஆங்கிலக் கல்வியின் விளைவாக இந்திய மொழிகளின் இலக்கிய வரலாற்றில் கவிதைக்கு இணையாக உரைநடை இலக்கியங்கள் குறிப்பாகச் சிறுகதை இலக்கியம் இடம்பெறத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறும் இதற்கு விதிவிலக்கல்ல. அச்சுயந்திரங்களின் வருகையால் நாளிதழ்களின் தோற்றமும் தொடங்கியது. பத்திரிகைத்துறையின் வளர்ச்சியாக சஞ்சிகைகளின் தோற்றமும் இன்னோரன்ன பல்வேறு வளர்ச்சிகள் அச்சுத்துறை ஊடகங்களின் வளர்ச்சிக்கும் அதனை ஒட்டிய பதிப்பகங்களின் வளர்ச்சியும் பெருகத்தொடங்கின. பாரதிகூட தன் கவிதைகளைத் தானே பதிப்பிக்க வேண்டிய சூழலும் இக்காலக்கட்டத்தே நிலவியது. நாடு விடுதலை பெறும்வரை தமிழ் இலக்கியவுலகில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தொகுப்பு நூல்கள் வரவில்லை என்றே சொல்லவேண்டும். 1964இல் மத்திய அரசினால் சாகித்ய அகாதெமி அதன் பின்னர் பண்பாட்டுத் துறையின் ஆதாரத்தில் உருவான தேசிய புத்தக நிறுவனம் (National Book Trust) இவ்விரு அரசு நிறுவனங்களின் தமிழ் ஆலோசனைக்குழுவினால் பிற இந்திய மொழிகளில் தொகுப்புநூல்களைக் கொண்டு வந்திருப்பதைப்போல தமிழிலும் இரு தொகுப்புநூல்கள் வெளிவந்தன. அவற்றுள் ஒன்று ரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழ்க் கவிதைத் திரட்டு. மற்றொன்று தமிழ்ச் சிறுகதைக் களஞ்சியம். அ. சிதம்பரநாதன் செட்டியாரால் தொகுக்கப் பெற்றது. இவ்விரண்டு தொகுப்புக்களின் பதிப்பாசிரியர்களின் படைப்புத் தேர்வுகள் குறித்து ஒன்றும் சொல்வதற்கில்லை.

1969 என்று நினைவு. நகுலனின் குருக்ஷேத்திரம் என்னும் இலக்கியத் தொகுப்பு ஒன்று வெளிவந்தது.

இன்றளவும் தற்காலத் தமிழ் எழுத்துக்களின் காத்திரமான தொகுப்புநூல் என்றே இதனைக் கொள்ளவேண்டும். கேரளக் கவிஞர் அய்யப்ப பணிக்கரின் நெடுங்கவிதையான "குருஷேத்திரம்" தமிழில் மொழியாக்கமாக இதில் இடம் பெற்றிருந்தது. இக்கவிதையின் தலைப்பே தொகுப்பின் பெயருமாகும். காரோட்டு விஜயனின் சிறுகதை ஒன்று உண்டு. "தனிமைகொண்டு" என்னும் சுஜாதாவின் முதல் சிறுகதை இதில் இடம்பெற்றிருந்தது. இதுவே பின்னாளில் சுஜாதாவால் "நைலான் கயிறு" என்னும் பெயரில் விரிவுபடுத்தப்பெற்று தனி நூலாக வெளிவந்து பல பதிப்புக்கள் கண்டதோடு சுஜாதாவை வெகுஜன எழுத்தாளராகவும் வணிகப் பத்திரிகைச் சூழலில் அறிமுகப்படுத்தியது.

1970 வரை எழுத்துப் பத்திரிகையை நடத்தியதோடு எழுத்துப் பிரசுரம் மூலம் சி.சு. செல்லப்பா, ந.பிச்சமூர்த்தி, வைத்தீஸ்வரன் முதலானவர்களின் கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டதோடு "புதுக்குரல்கள்" என்னும் புதுக்கவிதைத் தொகுப்பு ஒன்றினைக் கொண்டு வந்தார். இத்தொகுப்புக்கு என சிசு.செல்லப்பாவிடம் கவிதை மீதான ஒரு தர மதிப்பீடு, கோட்பாட்டு விளக்கம், தொகுப்பின் நியாயம் குறித்துத் தார்மீகப் பொறுப்பு உண்டு. ஆனால் அன்று தமிழ்ப் படைப்புலகம் குறிப்பாக முற்போக்கு முத்திரை கொண்ட படைப்புலகச் சிந்தனாவாதிகள், இலக்கியரட்சகர்கள் அடங்கிய ஆராய்ச்சிக் குழாம், தமிழ்த்துறை ஆய்வுப் புலம் இத்தொகுப்பினை எதிர்கொண்டவிதம் பாராட்டுவதற்கு உரிய ஒன்றல்ல. இது மிகப்பெரும் பகடி.

இன்று அச்சு ஊடகங்களில் சிறுபத்திரிகைச் சூழல் என்பது முற்றிலும் அழிக்கப்பெற்று அல்லது ஓரங்கட்டப்பட்ட நிலையில், "குமுதம்'', "ஆனந்தவிகடன்" முதலான வெகுஜன பத்திரிகை களின் பரவலுக்கு இணையாகக் கோமல் சுவாமி நாதனின் "சுபமங்களா"வுக்குப் பிறகு இடைநிலை பத்திரிகையாக (middlebrow magazine) "காலச்சுவடு", "உயிர்மை" மாதாந்திர இதழ்களைச் சொல்ல வேண்டும். இவ்விரு இதழ்களின் பதிப்பகங்களும் இவற்றின் வலைத்தளங்களும் இணையதளங்களும் என ஊடகத் துறையில் வணிகரீதியில் நிறுவனமாக ஒரு பெரும் தாவலை நிகழ்த்தியுள்ளன. பாரிநிலையம், தமிழ்ப் புத்தகாலயம், கலைஞன் பதிப்பகம் எனத் தொடங்கி இன்று காவ்யா, சந்தியா, கிழக்கு, ஆழி, அடையாளம், பரிசல் என எண்ணிலாப் பதிப்பகங்கள் இன்று பதிப்புத் தொழிலில் முன்னணியில் இருக்கின்றன. சென்னை, நெய்வேலி, மதுரை, கோவை, திருப்பூர் முதலான ஊர்களில் இன்று நடைபெறும் புத்தகக் கண்காட்சிகள். இப்புத்தகக் கண்காட்சிகளுக்கு என அலையென வரும் பெருமக்கள் திரள், புத்தகங்களை வாங்குவதற்கு வரும் அலைமோதும் மக்கட்கூட்டம், இங்கு நடைபெறும் புத்தக அறிமுக விமர்சன விழாக்கள், பட்டிமன்றங்கள் எல்லாமே பிரமிப்பூட்டுவன. ஒரு வகையில் இக்காட்சிகள் எல்லாம் சுற்றுலாத் தலங்களாக பார்வைப் பண்பாட்டு வெளிகளாக (Gaze cultural space) உருமாறிக் கொண்டிருக்கின்றன. இன்று பதிப்பகங்கள் எல்லாம் பெரும் அளவில் பதிப்புச் சுதந்திரம், காப்புரிமை முதலானவற்றில் பெரிதும் விழிப்போடு தம்முடைய பதிப்புப் பணிகளைத் தொடர்ந்தாலும் படைப்பாளிக்கும் பதிப்பகங்களுக்குமான உறவு என்றும் நெருக்கமான தல்ல. ஒரு சில நட்சத்திர எழுத்தாளர்களைத் தவிர பிற படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களைத் தாங்களே பணம்போட்டுப் பதிப்பிக்கும் சூழலில் அவர்களின் படைப்புக்களின், எழுத்துக்களின் ஒட்டுமொத்தத் தொகுப்புக்காகக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

கவிதை குறிப்பாக புதுக்கவிதை, சிறுகதை, கட்டுரைகள் எனத் தொகுப்புநூல்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தமிழில் நாடகம் அல்லது நாடகக் கட்டுரைகள், நாடகாசிரியரின் பிற படைப்புக்களின் தொகுப்பாகப் பார்க்கும்பொழுது எண்ணிக்கை யளவில் மிகவும் குறைவே. அதுவும் நவீன நாடகம் எனச் சொல்வதற்கே அஞ்சவேண்டிய காலகட்டம் இது. ஏனெனில் இன்று தமிழில் நவீனம் என்ற



செ. ரவீந்திரன்: நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். தில்லி பல்கலைக்கழகத்தில் தற்கால இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறையின் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். தற்போது பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் நிகழ்கலைத் துறையில் ஒளியமைப்பு மற்றும் சினிமாக் கோட்பாடு, வரலாறு பற்றிக் கற்பித்து வரும் இவர் நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களுக்கு ஒளியமைப்பு செய்துள்ளார். இவரது நூல்கள்: பின்னோக்கிய பார்வையில் (2000), மனப்பதிவுகள் (2002), மலேசியா (மொழிபெயர்ப்பு), துளியின் வெளி (தொகுப்பு நூல் 2009)

சொல் நவீனக் கட்டணக் கழிப்பறையில் தஞ்சம் புகுந்துவிட்டது. புதிது செய் (Make it new) என எஸ்ரா பவுண்டுவின் அழைப்பை ஒட்டித் தொடங்கிய நவீனப் படைப்புக்களுள் ஒன்றான நவீன நாடகம், நவீன அரங்கம் தமிழில் எழுபது களில் தோற்றம் கொள்ளத் தொடங்கின. ந. முத்துசாமி, இந்திரா பார்த்தசாரதி என நாடகா சிரியர்கள், சேராமானுஜம், எஸ்பி. ஸ்ரீனிவாசன் முதலான அரங்கக் கலைஞர்களால் தொடங்கப் பெற்ற தமிழ் நாடகரங்கச் செயற்பாடுகள், அவர்தம் படைப்புக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரத் தொடங்கின. வெங்கட் சாமிநாதனின் "அன்றைய முயற்சியிலிருந்து இன்றைய வறட்சி வரை'' என்னும் நாடகக் கட்டுரைகளின் தொகுப்பினை இங்குச் சொல்ல வேண்டும். இதனை ஒட்டி அவரின் "இன்றைய தமிழ்நாடக முயற்சி" என்னும் கட்டுரைத் தொகுப்பும் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். தேசிய புத்தக நிறுவனத்தின் சார்பில் மு. இராமசாமியால் தொகுக்கப்பெற்ற "தமிழில் சோதனை நாடகங்கள்" என்னும் தொகுப்பின் முன்னுரையில் நவீனம் என்ற சொல்லாடலின் பயன்பாடு குறித்த விளக்கத்தின் போதாமை குறித்த ஓர் ஊசலாட்டமே எழுபதுகளுக்குப் பின் தோன்றிய தமிழ் நாடகங்களைச் சோதனை நாடகங்கள் என அழைப்பதற்கான கருதுகோளாகி விட்டதான ஒரு கருத்தினை முன்வைத்துள்ளார் மு.ராமசாமி. "ஜெயந்தன் நாடகங்கள்'' என்னும் தொகுப்பு ஒன்றும் உண்டு.

2000ஆம் ஆண்டிற்குப் பிறகே தமிழில் நாடகம் அரங்கம் எனப் படைப்புக்களத்தில் செயல்பாடு கொண்டவர்களின் எழுத்துக்கள் தொகுப்பாக வெளிவரத் தொடங்கியுள்ளன. என் ஈடுபாடுகளில் முதன்மை கொண்டது தமிழ் நாடக வரங்கம் என்னும் காரணத்தினால் இத்தொகுப்புக் களின் வருகை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. கிழக்குப் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள இந்திரா பார்த்தசாரதியின் நாடகத் தொகுப்பு மறுபதிப்பில் உள்ளது என்னும் செய்தி மிகவும் மகிழ்ச்சியளிக்கும் ஒன்று. எனினும் இத்தொகுப்பு என் பார்வைக்குட்படாத நிலையில் இத்தொகுப்பின் பொருத்தப்பாடு, அதன் மீதான விமர்சனம் என்பது சாத்தியமில்லை. ஆனால் மு.இராமசுவாமி யால் சாகித்திய அக்காதெமிக்காகத் தொகுத்தளிக்கப் பெற்ற "தமிழில் சோதனை நாடகங்கள்" என்னும் தொகுப்புப் பற்றி இங்குப் பேசப்படல் வேண்டும். "நவீனம் என்பது எதைக் குறிக்கிறது? சோதனை தனக்கான மரபைப் பதிக்கையில் நவீனமாகிறது". எல்லாப் படைப்புகளையும் போல் நவீனமும் சமூக உந்துதல்களாலும் நிர்ப்பந்தங்களாலும் உருவானவையே! தொடக்கத்து எதிர்ப்புகளை ஓரம் தள்ளியே எந்த நவீனமும் தனக்கான பாதையை வகுக்கும். நவீனம் நாடகத்தில் எதைக் குறிக்கிறது? சமகாலத்தில் நிகழ்த்தப்படுவதால் மட்டுமே ஒன்று நவீனமாகிவிடாது. நவீனத்துவம் என்பது அவ்வக்காலங்களிலான மரபுமீறல். வாழும் காலத்தேவைக்கேற்ப மனிதனை - மனிதச் செயல்பாடுகளை புதிய அர்த்தமுள்ள பார்வையில் பார்த்தல்" எனவரும் தொகுப்பாசிரியர் முன்னுரை இங்கு நம் பார்வைக்குமுன் வைக்கப்படவேண்டும். நவீனம் நவீனத்துவம் எனச் சொல்வதன்வழியே நவீன நாடகம் சோதனை நாடகம் எனப் பாகுபாடு மேற்கொள்வதன் பொருத்தம் பற்றிய விளக்கத்தின் ஊடாகத் "தமிழகத்தைப் பொறுத்தவரை வெகுஜன ரசனைக்கு எதிரான கலகக்குரல் உயர்த்திய சிறுபத்திரிகை இயக்கத்தின் தொடர்ந்த தேடல்தான் இன்றைய நவீன நாடகம். துவக்கம் முடிவு நிகழ்ச்சிகளின் சேர்க்கை, பாத்திரங்களின் அடையாளங்கள், சிதைக்கப்பட்ட வார்த்தைகள் என்றமைந்திருக்கின்ற இவ்வகை நாடகங்கள் தமிழ்மரபிற்கு முற்றிலும் புதியவை. இவைகளே தமிழின் இன்றைய நவீன நாடகப் பிரதிகள் எனலாம்" என மிகப் பொருத்தமாகவே நவீன நாடகப் பிரதிகள் பற்றிய கோட்பாட்டினை முன்வைத்துள்ளார் மு.இராமசாமி. ஆனால் அதே வேளையில் "இவைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதே இத்தொகுப்பு. கடந்த 25 ஆண்டுக் காலத்தில் அச்சில் வெளிவந்துள்ள முழுநாடக உருவத்துடன்கூடிய சோதனை நாடகங்கள் இத்தொகுப்பிற்குத் தேர்வு பெற்றுள்ளன" எனத் தொகுப்பின் தேர்வுக்கான வரன்முறை தலைப்புப் பற்றிப் பேசும்பொழுது நவீன நாடகங்கள் (Modern Plays) சோதனை நாடகங்கள் (Experimental Plays) என்னும் ஊடாட்டத்தில் உள்ளார் என்றே புலப்படுகிறது. "ஆனால் பெண் நாடகாசிரியர் நாடகம் எதுவும் இதில் சேர்க்கப்படாதது ஒரு குறையே. குறையுடனேயே இத்தொகுப்பு வருவது தவிர்க்கமுடியாததாகிவிட்டது. அது வருத்தம்தான். இதில் சில விடுபட்டிருக்கலாம். சில என் பார்வையில்படாது ஒதுங்கியிருக்கலாம். இன்னொரு புதிய தொகுப்பில் அவை பூரணமாகலாம். நிறைவில்லாதிருப்பதுதானே மனித மனம்". இது மு.இராமசாமியால் சாகித்திய அக்காதெமிக்காகத் "தமிழில் சோதனை நாடகங்கள்" (2001) என்னும் தலைப்பில் வெளியிடப்பெற்ற தொகுப்புக்கான முன்னுரையின் முடிவுரைகள்.

தொகுப்பின் குறைபாடு எனக் கூறியதன்பின் மேலும் "தமிழில் சில சோதனை நாடகங்கள்"



தொகுப்பு பற்றிப் பேசுவது வேண்டாத ஒன்று. இருப்பினும் சிறுபத்திரிகைச் சூழலோடு, அதன் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புள்ள மு.இராமசாமி "கசடதபற", "மீட்சி" முதலிய சிற்றிதழ்களில் வெளியான அம்பையின் "பயங்கள்" , "ஆற்றைக் கடத்தல்", "முடிவில்லாத உரையாடல்" என்னும் இம்மூன்று நாடகங்களுள் ஒன்றினைத் தொகுப்பில் சேர்த்திருக்கலாம் என்னும் ஆதங்கம் உண்டு. இன்று பெண் எழுத்துக்கள் படைப்புக்கள் தனியே பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை ஒட்டி "முடிவில்லாத உரையாடல்" என்னும் தலைப்பில் பெண்கள் நாடகங்கள் பன்னிரண்டின் தொகுப்பு ஒன்று இ. நந்தமிழ்நங்கையால் "மாற்று" பதிப்பகம் மூலம் 2009இல் வெளியிடப்பெற்றுள்ளது மிகவும் வரவேற்கப்பட வேண்டியதே. பெண்ணிய நாடகத் தொகுப்பு போலவே தலித் நாடகத் தொகுப்பும் வெளிவர வேண்டிய காலகட்டமிது.


இன்று தொகை, 'Anthology' என்னும் தொகுப்பு மரபு முற்றிலும் மாற்றம் பெற்றுள்ளது. பதிப்பகங்கள், பதிப்பகத்தார், பதிப்பாசிரியர் அல்லது தொகுப்பாசிரியர் எனப் பல்வேறு பணியாளர்களை உள்ளடக்கிய ஒரு தொழில் துறையாக வளர்ந்துள்ளது. Compilation எனப்படும் வகையில் தமிழில் 2000ஆம் ஆண்டிற்குப் பிறகு வெளிவந்துள்ள நாடகம், அரங்கம் பற்றிய தொகுப்பு நூல்களுள் சி.அண்ணாமலை தொகுத்த "சே. இராமனுஜம் நாடகங்கள்", "சே. இராமானுஜம் நாடகக் கட்டுரைகள்", "நமுத்துசாமி கட்டுரைகள்" என்னும் மூன்றினை இங்கு சொல்லவேண்டும். சே.இராமானுஜம் நாடகங்கள், கட்டுரைகள் இரண்டு தொகுப்புக்களாக 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்தன. "ந. முத்துசாமி கட்டுரைகள்" தொகுப்பு 2005இல் வெளிவந்துள்ளது. இவையாவும் காவ்யா பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தவை. கல்விப்புலம் சார்ந்த ஆய்வாளர்களுக்கு, மாணவர்களுக்குக் களமாக அமைந்தவை. அத்துடன் தமிழ் நாடகவரங்கச் செயல்பாட்டில் தீவிர ஈடுபாடு கொண்டவர்களின் சிறுபத்திரிகைச் சூழலோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்களின் தீவிர வாசிப்பிற்குக் களமாக அமைந்தவை. இதற்காக இத்தொகுப்புக்களின் தொகுப்பாசிரியர் சி. அண்ணாமலையை நாம் பாராட்டவேண்டும். கூத்துப்பட்டறையின் "நிரபராதிகளின் காலம்" நாடக மேடையாக்கத்தில் என்னோடு ஒளியமைப்பில் ஈடுபட்ட சி. அண்ணாமலை தொடர்ந்து ஈடுபடாதது தமிழ் நாடகவரங்கிற்கு ஓர் இழப்பு என்றாலும் இந்த இழப்பை அவர் "அல்ப்ஸ் கூத்தாடிகள்", "நாடக இராமானுஜம்" முதலான குறும்படங்களை இயக்கி வெளியிட்டதன் மூலமும் "சே.இராமானுஜம் நாடகங்கள்" "சே. இராமானுஜம் நாடகக் கட்டுரைகள்" "ந.முத்துசாமியின் கட்டுரைகள்" என மூன்று தொகுப்புக்களைப் பதிப்பித்திருப்பதன் மூலமும் ஓரளவு ஈடுகட்டியுள்ளார் என்றே சொல்லவேண்டும்.

"சே.இராமானுஜம் நாடகங்கள்" தொகுப்பில் "சில குறிப்புகள்" என்னும் பகுதியில் சி.அண்ணாமலை எழுதியவற்றையே இத்தொகுப்பின் வரையறையாகக் கொள்ளலாம். "இவரது நாடகங்களில் பெரும்பாலும் செவ்வியல் வடிவங்களின் உள்ளடக்கங்களையொத்த ஓர் அம்சத்தைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. சமகாலப் பிரச்சனைகளில் மட்டும் வேலை செய்பவர்களுக்கு இவை சற்று அந்நியப்பட்டவையாக இருக்கலாம். அதேநேரம் இவரது நாடகங்கள் பார்வையாளர்களைவிட நாடகவரங்கில் செயலாற்றுபவர்களுக்கான நிகழ்த்துகலைப் பிரதிகளாக இந்நாடகங்கள் பயன்படக்கூடும்". இது அண்ணாமலையின் கணிப்பு. இராமானுஜத்தின் "பிணம் தின்னும் சாத்திரங்கள்" நாடகப் பிரதி தேசிய நாடகப் பள்ளியின் பயிற்சிப் பட்டறைத் தயாரிப்பாகத் தில்லியில் மேடையேறியதைக் கண்டு "தில்லியில் ஒரு தமிழ் நாடகத்தின் அரங்கேற்றம்" என்னும் ஒரு கட்டுரையினை நான் எழுதி இக்கட்டுரை யாத்ரா 1979ஆம் ஆண்டு மே இதழில் வெளியானது. இதனைப் போலவே "வெறியாட்டம்" நாடகத்தினைப் பற்றிய வெங்கட் சாமிநாதனின் விமர்சனக் கட்டுரை ஒன்று முதலில் ஆங்கிலத்தில் Financial Express இல் வெளியானது. "வெறியாட்டம்", "மௌனக்குறம்" நாடகங்களுக்கு நானே ஒளியமைப்பாளனாகவும் இயங்கியுள்ளேன். "புறஞ்சேரி" என்னும் நாடகம் முதல் "மௌனக்குறம்" நாடகம் ஈறாகத் இத்தொகுப்பில் ஒரு நாற்பது வருடகாலத் தமிழ் நவீன நாடகவரங்கில் முன்னோடியாக இயங்கிய சே. இராமானுஜத்தின் 11 நாடகப் பிரதிகள் உள்ளன. இப்பிரதிகளின் மூலம் வாசகர்களுக்கு ஒட்டுமொத்தத்தில் செவ்வியல் நாடகப் பிரதிகளின் வாசிப்பனுபவம் கிடைக்கும் என்பது உறுதி. யூரிபிடிஸின் "டிரோஜன் உமன்", டி.எஸ்.எலியட்டின் நாடகப் பிரதிகள்,

தர்மவீரர் பாரதியின் "அந்தாயுக்" முதலான நாடகப்பிரதிகளின் கவித்துவ மொழிநடை காட்சிப் படிமங்களுக்கு இணையான நாடகப் பிரதியாக்கத்தினை "சே. இராமானுஜத்தின் நாடகங்கள்'' தொகுப்பின்வழித் தமிழ் வாசகன் இனங்கண்டுகொள்ளலாம். இதுவே இத்தொகுப்பிற்கான அடிப்படையாகவுள்ளது. "நாற்பது ஆண்டுகளாக...." என்னும் தலைப்பில் வெங்கட் சாமிநாதனின் முன்னுரை மூலம் சே.இராமானுஜத்தின் "நாடக ஆளுமையை உருவாக்கிய ஆதார மூல காரணிகள், இயக்கும் சக்திகளை" இனங்காட்டியுள்ளார். அத்துடன் அவரின் நாடகங்களுள் வெறியாட்டம் அதன் பிரதியாக்கத்திலும் மேடையாக்கத்திலும் ஒரு சிகரம் என்று சொல்லவேண்டும்" என்கிறார் வெங்கட் சாமிநாதன்.

இத்தொகுப்பினை ஒட்டியே சே. இராமானுஜத்தின் நாடகக் கட்டுரைகளின் தொகுப்பினைக் கொள்ளவேண்டும். இத்தொகுப்பில் 1970இல் எழுதப்பெற்ற "நாடகம் என்னும் கலைவடிவம்" என்னும் கட்டுரைமுதல் 2003 இல் எழுதப்பெற்ற "நாடகப் பேச்சு மொழியில் உட்தகவு கட்டமைப்பு" என்னும் கட்டுரை வரை 41 நாடகக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பிற்கு வெளிரங்கராஜனின் முன்னுரை உண்டு. "முதலில் இத்தொகுப்பு தமிழ்ச்சூழலில் நாடகம் குறித்து எழுந்துள்ள சில தவறான அனுமானங்களைப் பரிசீலனை செய்வதற்கான ஒரு களமாக இருக்கிறது. பொதுவாக நாடகச் செயல்பாட்டை நாடக இலக்கியங்கள் வாயிலாகக் கணிக்கக்கூடிய ஒரு பார்வையே நம்மிடையே தொடர்ந்து இருந்து வருகிறது. தம்முடைய கட்டுரைகளின் வாயிலாக இந்த அனுமானத்தின் போதாமைகளை இராமானுஜம் தொடர்ந்து சுட்டிக்காட்டுகிறார். நாடக இலக்கியம் என்பது பனுவல் என்கிற அளவில் நாடக இயலின் ஒரு பாகம் மட்டுமே என்பதை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்". இது வெளிரங்கராஜன் இக்கட்டுரைகளின் பயன்பாடு பற்றிய விளக்கம் எனலாம். பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகளில், நிகழ்கலைத் துறைகளில் நாடகவரங்கப் படிப்புச் செயல்முறைப்படுத்தப்பட்டபோது விடுதலைக்கான அரங்கக்கல்வி பற்றிய ஒரு தேடலின் விளைவாகவே இக்கட்டுரைகளைக் கொள்ளவேண்டும்" . "கருத்து சொல்லுதல் என்கிற நிலையிலிருந்து ஆய்வாகவும் ஆய்வை நோக்கிய பார்வையாகவும் இவரது கட்டுரைகள் உள்ளன. கருத்துகள் தாண்டி செறிவான முன்வைப்பும் கூட காணக்கூடியதாக இருக்கிறது. சில கட்டுரைகள் நாடகத்தின் ஏதாவதொரு அம்சத்தில் தங்கி ஆவர்த்தனம் புரிகிறது மாதிரி தோன்றுகிறது. சில கட்டுரைகள் பன்முகத் தன்மை கொண்டதாக இருக்கின்றன. இந்தப் பண்புகள் கொண்ட ஒரு முக்கியத் தொகுப்பாக இவரது நாடகக் கட்டுரைகள் நூலமைந்துள்ளதாகப்படுகிறது''. இது தொகுப்பாசிரியர் சி.அண்ணாமலையின் தொகுப்புரை. பேராசிரியர் வேண்டுகோளின்படி இராமானுஜத்தின் நாடகங்களை, கட்டுரைகளை நூலாக, தொகுப்பாக வெளியிடும் பொறுப்பை சி.அண்ணாமலையிடம் ஒப்படைத்த காவ்யா பதிப்பகத்தின் காவ்யா சண்முகசுந்தரம் நம் பாராட்டுக்குரியவர்.

ந. முத்துசாமியின் "அன்று பூட்டிய வண்டி" என்னும் தலைப்பில் "தெருக்கூத்து தமிழர்களுடைய தியேட்டர்" என்ற அளவில் எழுதப்பெற்ற ஒன்பது கட்டுரைகள் தொகுப்பு ஒன்று 1981ஆம் ஆண்டில் அன்னம் வெளியீடாக வந்துள்ளது. இக்கட்டுரைகளோடு மேலும் பதினொரு கட்டுரைகள் சேர்க்கப்பெற்று நமுத்துசாமியின் "அன்று பூட்டிய வண்டி" என்னும் அதே தலைப்பில் தெருக்கூத்து மற்றும் அரங்கக் கலைகள் பற்றிய கட்டுரைகள் என்னும் வரி அடைப்புக்குள் இடம்பெற்று உயிர்மை பதிப்பகத்தின் வெளியீடாக 2008இல் வெளிவந்துள்ளது. "அன்று பூட்டிய வண்டி" கட்டுரைகள் தொகுப்பிற்காக அன்று நான் எழுதிய முன்னுரை இன்று இப்பதிப்பில் பின்னுரையாக இடம்பெற்றுள்ளது. இத்தொகுப்பின் பதிப்புப்பணி கவிஞர் மனுஷ்யபுத்திரனின் "உயிர்மை" பதிப்பகத் தாருடையது. மறுபதிப்பா? விரிவாக்கம் செய்யப்பெற்ற தொகுப்பா? இப்பதிப்பு முன்பதிப்பு கொண்டுள்ள தலைப்பைத் தாங்கி வெளிவருவதன் நியாயம் என்ன? என்பன போன்ற கேள்விகளுக்கான விடையை இத்தொகுப்பில் தேடுவதில் பயன் ஒன்றுமில்லை. 1984இல் க்ரியா வெளியீடாக வந்த "நீர்மை" என்னும் சிறுகதைத் தொகுதிக்கும் பின்னர் வெளிவந்துள்ள சிறுகதைகளை எல்லாம் சேர்த்து ந. முத்துசாமியின் ஒட்டுமொத்தச் சிறுகதைத் தொகுப்பாக "மேற்கத்திக் கொம்பு மாடுகள்" என்னும் தலைப்பில் 2009இல் க்ரியா வெளியீடாக வெளிவந்துள்ளது. ஆனால் சி.அண்ணாமலையின் முயற்சியால் காவ்யா பதிப்பக வெளியீடாக 2005இல் வெளிவந்த "ந.முத்துசாமியின் கட்டுரைகள்'' என்னும் தொகுப்பையே நம் பார்வைக்கு, விமர்சனத்துக்கு உட்படுத்தவேண்டும். "சே.இராமானுஜத்தின் நாடகக் கட்டுரைகள்" என்னும் தொகுப்பின் பெயரைப்போல் அன்றி ந.முத்துசாமியின் உரைநடை எழுத்துக்கள் "ந.முத்துசாமியின் கட்டுரைகள்" என்னும் பெயர்தாங்கி வருவதன்



காரணம் மிகவும் முக்கியமானது. 1965 முதல் 2005ஆம் ஆண்டுவரை நாற்பது ஆண்டுகால எல்லைக்குள் வெளியான கட்டுரைகள் இலக்கியம், சினிமா, ஓவியம், நாடகம் என்னும் நான்கு தலைப்புக் களுள் தொகுக்கப் பெற்றமையே இதற்கான காரணம் எனலாம். "இத்தொகுப்புக்கு நியாயம் சேர்க்காது என்று கருதிய இலக்கியப் போலிகள் (கசடதபற, மார்ச் 1971) அப்பாவும் பிள்ளையும் நீர்மையின் அட்டைகள் பற்றி (யாத்ரா, ஜுலை - செப்டம்பர் 1985) ஜான் ஆப்ரஹாம் (யாத்ரா அக்டோபர் 1985) விவேகி (நடை 1968) ஆகிய நான்கு கட்டுரைகள் நமுத்துசாமியின் ஒப்புதலோடு சேர்க்கப்படவில்லை'' எனத் தொகுப்பாசிரியர் அண்ணாமலை தொகுப்பின் நியாயம் பற்றிப் பேசுவது இங்கு முதன்மைப் படுத்தப்பட வேண்டும்.

தமிழில் இன்று தொகுப்பாசிரியர் என்று பதிப்புத்துறைகளில் செயல்படுவோர் பலருக்குத் தொகுப்பின் பொருள், மொழி, பொருத்தப்பாடு அதன் நியாயம் எனப் பதிப்பாசிரியர் கோட்பாடு ஒன்றும் கிடையாது. "சே.இராமானுஜம் நாடகக் கட்டுரைகள்" நூல் வந்திருக்கிறது. அது மாதிரி என்னுடைய கட்டுரைகளையும் தொகுத்துத் தரமுடியுமா என்று கேட்டதற்கிணங்க அண்ணாமலையால் தொகுக்கப்பெற்றதே "நமுத்துசாமியின் கட்டுரைகள்" என்னும் தொகுப்பு. இத்தொகுப்பிற்குப் பெயர்வைத்தல், அத்துடன் சில கட்டுரைகளின் சில பகுதிகள் அவை கட்டுரைக்குப் பங்களிப்பாய் அமையவில்லை யென்பதால் அவற்றை நீக்குதல் இவையெல்லாம் " தொகுப்பாளன் என்ற முறையில் முத்துசாமி கொடுத்த சுதந்திரத்தின்பேரில் இவற்றைச் செய்யமுடிந்தது" என்கிறார் அண்ணாமலை. பதிப்பாசிரியர் தேர்வு (choice) சுதந்திரம் (freedom) எல்லாமே ஒரு தொகுப்பாசிரியனுக்கான அடையாளங்கள். கண்ணில் பட்டவைகள், படாதவைகள், கிடைத்தவைகள், அழிந்து போனவைகள் இன்னும் பல எண்ணிலாத காரணிகளால் ஒரு தொகுப்பு என்றுமே முழுமையு டையதாக இருக்க முடியாது என்றே சொல்ல வேண்டும். இதுவே அண்ணாமலையின் ஆதங்கமு மாகவுள்ளது. "இது முழுமையான தொகுப்புதானா? என்றால் என்னால் உறுதியாய் எதையும் சொல்ல முடியவில்லை". இதுவே ஒரு தொகுப்பாசிரியரின் தன்னடக்கமும்கூட. "இன்றைய நவீன தொகுப்பாசிரியர்களுள் அவரும் (அண்ணாமலையும்) ஒருவர். அவருக்கு அதற்கு வேண்டிய மனோபாவம் இருக்கிறது. போகப் போக அவருக்கு இன்னும் பூரணமான அனுபவம் உண்டாகிவிடும் என்று நினைக்கிறேன். நன்றாக ஆசிரியம் பண்ணைத் தெரிந்துவிடும். ஆசிரியம் என்ற சொல்லைப் புதிய பிரயோகத்தில் உபயோகிக்கிறேன்". இது ந.முத்துசாமி அண்ணா மலையின் தொகுப்புப்பணி பற்றி "வாசகர்களுக்குச் சில வார்த்தைகள்" என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ள பாராட்டுரைகள். ஆசிரியம் என்பதனை "Editorship" என்பதாகக் கொள்ளவேண்டும் என்பதுவே முத்துசாமியின் உட்கிடக்கை.

"முத்துசாமியின் கட்டுரைகள் பிரபலமான இதழ்களின் லட்சக்கணக்கான வாசகர்களையோ, வருவாயை முன்னிட்டோ புகழை முன்னிட்டோ எழுதப்பட்டவையல்ல. துவக்கம் முதல் இன்றுவரை சிறுபத்திரிகை சார்ந்தே செயல்படும் இவர் பத்திரிகை அவசரங்களுக்காகப் பேனாவைத் திறந்தவரல்ல. அவரது விருப்பம் நேரம் சார்ந்து எழுதப்பட்டவைதான்''. அண்ணாமலையின் குறிப்புக்களில் காணும் உண்மை வெளிப்படை யானது. இடம் சூழல் காலம் இவற்றின் ஒட்டுறவில் உருவாவதே கலை இலக்கியப் படைப்புக்கள். சூழலில் படைப்பு வெறிகொண்டுள்ள படைப் பாளிதான் படைப்பின் மூலம் சூழலை மாற்றவும் செய்கிறான். எனவே நமுத்துசாமியின் கட்டுரைகள் அனைத்தும் அவரது படைப்பாளுமையை வெளிப்படுத்துவன. அதனைக் கண்டுகொள்வதற்கு அவர் வார்த்தையிலே வேண்டுவது வாசக விவேகம். இது தமிழில் முதல் முயற்சியாகப் பவுத்த அய்யனாரை ஆசிரியராகக் கொண்ட "நேர்காணல்" என்னும் சிற்றிதழில் "நமுத்துசாமியின் படைப்பாளுமை" என்னும் தலைப்பிலுள்ள என் கட்டுரையின் ஒரு வரி. எழுத்தே நம் இருப்புக்கான அடையாளம். அதே நேரத்தில் ஒரு காலகட்டத்தின் சாட்சியமாகவும் ஆவணமாகவும் ஒருவனின் எழுத்துக்கள் இருக்கவேண்டும். ஒரு கட்டுரைக்கும் பின் அடுத்த கட்டுரை என எழுத முற்படும் ஒருவனின் எழுத்துலகப் பயணங்களின்போது ஏற்படும் புது வாசிப்பனுபவங்கள், நிகழ்வுகளின் எதிர்வுகளினால் அதிர்வுகொள்ளும் மனத்துடிப்புக்கள், இடைவெளிகள் பேசப்படல்

வேண்டும்; எழுதப்படவும் வேண்டும். இவை யெல்லாம் ஒரு தொகுப்பின் கட்டுரைகளை ஒருசேரப் படிக்கும் வாசகனுக்குக் கிட்டுவது எழுத்தனுபவத்தோடு கூடிய படைப்பனுபவத்தின் பரவசநிலை. அதுவே வாசிப்பின் கலையும் (Art of Reading) ஆகும். இதனை நிறைவேற்றவல்லதொரு தொகுப்பை உருவாக்குவதே தலையாய பணி, கடமையும் கூட. தமிழில் நாடகம் அரங்கம் என இயக்கச் செயல்பாடு கொண்டவர்களுக்காக, தீவிரத் தேடல் மேற்கொண்டவர்களுக்காக இதுவரை சே.இராமானுஜம் நாடகங்கள், கட்டுரைகள், ந. முத்துசாமி கட்டுரைகள் என மூன்று தொகுப்பினைக் "காவ்யா" வழிக் கொண்டு வந்த சி.அண்ணாமலை என்றும் நம் பாராட்டுக்குரியவர். காவ்யா சண்முக சுந்தரத்துக்கும் நாம் நன்றி சொல்லவேண்டும்.

எல்லாமே வணிகமாகிவிட்ட தமிழ்ச்சூழலில் தமிழ்ப் பதிப்பகங்களின் இயக்கச் செயல்பாடுகளும் இதில் ஒரு சில விதிவிலக்குகளும் உள்ளன. தமிழ் வாசகர்கள் இவ்விதிவிலக்குகளின் பதிப்புக்களை ஒட்டியே பயன் அடைகின்றனர். இன்று சே. இராமானுஜம் நாடகங்கள் தொகுப்பாக வெளிவந்ததைப்போலவே, ந.முத்துசாமியின் நாடகங்கள், மு. இராமசாமி நாடகங்கள், முருகபூபதி நாடகங்கள் என ஒட்டுமொத்த நாடகப் பனுவல்களின் திரட்டுக்கள் வெளிவர வேண்டும். ஒரு படைப்பாளியின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக (complete collected work) வெளிவருவதைப்போல நாடகப் பனுவல் திரட்டுகள் வெளிவர வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் அரங்கத்தில் தீவிர செயல்பாடு கொண்டவர்களின் மேடையாக்கங் களுக்கான பிரதிகளாக அவை அமையும். அதுவே ஒரு காத்திரமான வழிகாட்டலுமாகும். இதனைப் போலவே தமிழ் நாடகவரங்கில் முன்னோடி நாடகக் கலைஞர்களாக உள்ள பம்மல் சம்பந்த முதலியார். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பனுவல் திரட்டுகள் வெளிவர வேண்டும். ஆறு தொகுதிகளாக வெளிவந்த நினைவுக் குறிப்புக்கள் பம்மல் சம்பந்த முதலியாரின் "நாடகமேடை நினைவுகள்" என ஒரு தொகுப்பாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாக 1998இல் வெளிவந்துள்ளது. ஒட்டுமொத்தமாக பம்மல் சம்பந்த முதலியாரின் கட்டுரைகளின் தொகுப்பு நூலும் வெளிவர வேண்டும். அனைத்தையும் ஒருசேர ஒரு தொகுப்பாக அல்லது இரண்டு மூன்று தொகுப்புக்களாகக் கொண்டுவருவது தமிழ்ச்சூழலில் அதுவும் தமிழ் நாடகச் சூழலில் சாத்தியமா என்பது தெரியவில்லை. பேராசிரியர் வீ. அரசுவின் தொகுப்பில் "ஜீவாவின் ஆக்கங்கள்" என்னும் பெயரில் ஜீவாவின் எழுத்துக்கள் அனைத்தும் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். இத்தொகுதிகள் வெளிவந்ததற் கான இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, பதிப்பகப் பின்புலம் பிற படைப்பாளிகளின் படைப்புத் தொகுதிகளுக்கு கிடைக்குமா என்பது கேள்வி.

காவ்யா வெளியீடாக 2007இல் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களின் முழுத் தொகுப்பு ஒன்று அரிமளம் சு.பத்மநாபன் அவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்டு வெளியிடப் பெற்றுள்ளது. 2010 ஜனவரி மாதம் "பனுவல்" இதழில் வெளியான "சங்கரதாஸ் சுவாமிகள் மக்கள் அரங்கின் முன்னோடிப் படைப்பாளி" என்னும் என் கட்டுரையின் ஒரு பகுதி: "காவ்யா பதிப்பகத்தின் மூலம் சுவாமிகளின் பதினாறு நாடகப் பனுவல்கள் வெளிவந்துள்ள நிலையில், பேராசிரியர் வீ. அரசு அவர்களின் பதிப்பில் "வல்லினம்" வெளியீடாக வந்துள்ள "சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத் திரட்டு" நூலில் பதினெட்டுப் பனுவல்கள் இடம்பெற்றிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே. அரிமளம் சு. பத்மநாபன் பதிப்பில் சண்முகசுந்தரத்தின் பதிப்பு விவரணம் பரந்துபட்டது. எனினும் தமிழ் நாடக அரங்கத்துக் கான சுவாமிகளின் பங்களிப்பினை இனங்கண்டு கொள்வதற்கான, அவர் நாடகப் பனுவலில் உள்ளார்ந்து இருக்கும் அரங்கக் கூறுகளோடு அவற்றின் புரிதலுக்கான தேடலாக முனைவர் வீ. அரசு அவர்களின் பதிப்பே அமைந்துள்ளது. இப்பதிப்பின் இறுதியாகக் கொடுக்கப் பெற்றிருக்கும் "தூ.தா. சங்கரதாஸ் சுவாமிகள் வாழ்க்கைக் குறிப்புகள் (1867- 1922)" மற்றும் முன்னுரையாக கொடுக்கப் பெற்றிருக்கும் "சுவாமிகளின் நாடகப் பிரதிகளின் அச்சாக்கப் பயணம்", "சுவாமிகளின் அரங்கத்தைப் புரிந்து கொள்வதை நோக்கிய தேடல்" என்னும் பதிப்பாசிரியரின் கட்டுரைகளின் துணைகொண்டு நம் பார்வையை முன்வைக்க வேண்டும். தூ.தா. சங்கரதாஸ் நாடகத் திரட்டு உள்ளபடியே சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பிரதிவழி அவர் காலத்தில் நிலைபெற்றிருந்த அவரால் உருவாக்கப் பெற்றிருந்த தமிழ் நாடக அரங்கத்தை மீட்டுருவாக்கம் செய்வதற்கான களமாக அமைந்துள்ளது. எனவே நாடகப் பனுவல்களின் திரட்டுக்கள் தொகுக்கும் தொகுப்பாசிரியனுக்குப் பிரதி விமர்சனம் (textual criticism) தெரிந்திருக்கவேண்டும். அப்பிரதிகளின் எழுத்துரு வடிவாக்கம் அச்சாக்கப் பயணம் இவற்றின் காலவரிசை (chronology) பற்றிய வரலாற்றுணர்வு இருக்கவேண்டும். ஒரு பிரதி ஒரு சமூகத்தில் எதிர்கொள்ளல் (reception) பற்றிய சமூகக் காரணிகளை அடையாளங்கண்டு கொள்வதற்கான ஈடுபாடு ஒரு தொகுப்பாசிரியனுக்கு இருக்க வேண்டும்.

இன்று ஜெர்மனியில் Constantin School ஐச் சேர்ந்த ஹான்ஸ் ராபர்ட் யாஸ் (Hans Robert Janss) என்பவரால் உருவாக்கப்பெற்ற Reception Theory பற்றிய புரிதலும் தேவை. இது ஒன்றே நாடகப் பனுவல்களின் தொடர்ச்சியான இருப்புக்கான அர்த்தத்தைப் புலப்படுத்தும். எல்லாவற்றுக்கும் மேலாகப் பார்வையாளனின் ரசனை, ஈடுபாடு பற்றியும், பார்வையாளர்ஆய்வு அணுகுமுறை பற்றியும் (audience study) குறைந்தபட்ச புரிதலாவது ஒரு தொகுப்பாசிரியனுக்கு இருக்கவேண்டுவது மிகவும் தேவை.

இவை எல்லாவற்றையும்விட தொகுப்புக்களை வெளியிடுவதன் பின்னுள்ள பொருளாதாரக் காரணிகளையும் இனங்கண்டு கொள்ளவேண்டும். பதிப்பகங்களின் பண முதலீடுகள், பதிப்பகங்கள், கொள்கைகள், எதிர்பார்ப்புக்கள் இவைகளுக் கிடையே காத்திரமான பல நாடகாசிரியர்களின் தேர்ந்தெடுக்கப் பெற்ற நாடகப்பனுவல்களின் தொகுப்புக்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளதைப் போல நாற்பதுகளில், ஐம்பதுகளில், அறுபதுகளில் அமெரிக்க நாடகப்பனுவல்கள் அல்லது வெளியீடாக வந்துள்ள மார்ட்டின் எஸ்லின் தொகுத்துள்ள அபத்த நாடகங்கள், யுத்த நாடகங்கள் (War Plays) எனப் பல்வேறு பாடுபொருள்களின் (Thematic aspect) அடிப்படையில் தமிழில் இனிமேல்தான் நாடகப் பனுவல்களின் தொகுப்புக்கள் வெளிவரவேண்டும். எல்லாமே அரசியலாகிவிட்ட நிலையில் இன்று தொகுப்பும் ஒரு அரசியலாகி politics of selection/representation ஆகிவிட்டது. ஆனாலும் ஒரு தொகுப்பு போலியான படைப்புக்களை விலக்கி வைத்தநிலையில் காத்திரமான படைப்புக்களுக்கான களமாக அத்தொகுப்பு இருக்கவேண்டும். அதற்கான எந்தவிதமான சமரசங்களுக்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளாமல் தீவிரமாகத் தொகுப்புப் பணியில் ஈடுபடும் ஒரு தொகுப்பாசிரியனே இன்று தமிழ் நாடகவுலகிற்குத் தேவை.

மேலைநாட்டில் குறிப்பாக அமெரிக்காவில் மானிடவியல் துறையில் Sol Tax Dell Hymes, நடையியலில் Thomas Sebeok மற்றும் பெண்ணியப் பதிப்பாசிரியரான Toril Moi முதலான தனித்துவம் மிக்க தொகுப்பாசிரியர்களை இனங்கண்டு கொள்ளலாம். இவர்களின் தொகுப்பிற்கான முன்னுரைகளே அவர்களின் தொகுப்பிற்கான ஜீவித நியாயத்தைத் தரவல்லன. இதனைப்போல ரவுட்லெட்ஜ் பதிப்பக நிறுவனத்தின் (Routledge) "New Accents" தொகுப்புக்களின் பொதுப் பதிப்பாசிரியராக (General Editor) டெரன்ஸ் ஹாக்ஸ் (Terence Hawkes) தொகுத்த தொகுப்புநூல்களை இங்கு சொல்லவேண்டும். அமெரிக்காவில், இங்கிலாந்தில் உள்ள பதிப்பகங்களோடு பல்கலைக்கழகங்களின் கலை இலக்கியம் மற்றும் பிறதுறைப் பேராசிரியர்களுக்கும் இடையே ஒரு தொடர்பு, ஒரு புரிதல் உண்டு. இதனை ஒட்டியே மேலே சொன்ன பொதுப் பதிப்பாசிரியர்களின் தொகுப்புப் பணி பரந்துபட்ட அளவில் களம் கொண்டுள்ளது. தமிழகத்தின் பல்கலைக் கழகங்களின் தமிழ் இலக்கியத் துறைகளில் நிகழ்த்துக்கலைத் துறைகளில் தொகுப்புப் பணி பற்றிய தேடல் கொண்ட பேராசிரியர்களை இனங்காண்பது என்பது இன்று மிகவும் எளிதான ஒன்றல்ல. பல தொகுப்புநூல் களைப் பதிப்பிப்பதோடு, "மாற்று" வரிசையில் பொதுப் பதிப்பாசிரியராக (General Editor) இருந்து இதுவரை பதிப்பாசிரியர் (Editor or Compiler) பலரின் துணைகொண்டு ஆறு தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளதில் பேராசிரியர் வீ.அரசுவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது; காத்திரமானது, பாராட்டப்பட வேண்டிய ஒன்றும்கூட.

மாற்று வரிசையின் தொகுப்பாகக் கோ. பழனியின் "கிறிக்கி" (கூத்துக் கட்டுரைகள்) செ. ரவீந்திரனின் "ஒளியின் வெளி : அரங்க ஒளியமைப்பு குறித்த ஆக்கங்கள்" முதலானவற்றை இங்குச் சொல்லவேண்டும். ஏனெனில் இவை தமிழ் நாடகவரங்கோடு தொடர்புடைய பல கட்டுரை யாளர்களின் தொகுப்புக்கள். இன்னும் இவை போன்ற தொகுப்பு நூல்கள் பல வரவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் நாடகவரங்கத்தின் மேடையாக்கங்களைப் படைப்பாக்கங்களை வணிக ஊடகச் சக்திகளின் சீரழிவுப் பண்பாட்டுக்கு எதிராக, "கண்காணிப்பு அரசியலுக்கு" எதிரான எதிர்ப்புக்குரலாக மக்களிடையே கொண்டு செல்வதற்கு இத்தொகுப்புக்கள் வழிகாட்டும். தமிழ் நாடகவரங்கின் தீவிரச் செயல்பாட்டாளர்களுக்கு நாடகப் பனுவல்களின், கட்டுரைகளின், அரங்க விமர்சனங்களின் கட்டுரைகளின் தொகுப்புக்கள் கையேடுகளாக விளங்க வேண்டும். அத்தகைய தொகுப்புக்களுக்காக நாம் காத்திருப்பதைத் தவிர தமிழகத்தின் இன்றைய வணிகப் பண்பாட்டுச் சூழலில் வேறு வழியில்லை.


■













இதழ் தொகுப்பு:

தூக்க நினைத்த கோவர்த்தன கிரி

பழ. அதியமான்

இதழியல் வரலாற்றை ஆவணப்படுத்தும் சில முயற்சிகள் தமிழ் இலக்கிய உலகில் 1960, 70களில் தொடக்கம் பெற்றன. வரா. நடத்திய '*மணிக்கொடியில்*' பணியாற்றியவரும் இரண்டாம் கட்டத்தில் அதை நடத்தியவருமான பி.எஸ். ராமையா இத்தகைய ஆவண முயற்சியைத் தொடங்கி வைத்தார். அவரது ஆவணம், *மணிக்கொடி காலம்* வரலாற்றின் இழையும் படைப்பின் ருசியும் கொண்ட அந்நூலின் வெற்றியைத் தொடர்ந்து சரஸ்வதி, தீபம் ஆகியவற்றின் வரலாறுகளை, படைப்பாளர் என்ற முறையில் அவ்விதழ்களோடு தொடர்புகொண்டிருந்த வல்லிக்கண்ணன் எழுதினார். நவீனத் தமிழில் அவ்விதழ்கள் ஏற்படுத்திய தாக்கத்தைப் பதிவுசெய்வது, அதன் தொடர்ச்சியைத் தக்கவைப்பது, அதன் ஊடாகச் சில விருப்பங்களை நிறைவுசெய்துகொள்வது போன்ற நோக்கங்கள் இவற்றுக்குப் பின்னால் செயல்பட்டன.

இந்த முன்னணி ஆவணப்படுத்தலுக்குப் பின் நின்ற இதழியல் சக்தியான நா. பார்த்தசாரதி கருதியதுபோல நவீனத் தமிழின் வரலாறு, இக்குறிப்பிட்ட மூன்று இதழ்களின் வரலாற்றோடு முடிந்துவிடாது. எதிரெதிரான பல போக்குகளைக் கொண்ட பல இதழ்களின் வரலாறுகள் தொகுக்கப்பட்டால்தான் அது ஒருவாறு திருப்தியைத்

தர இயலும். இக்குறை பலராலும் நன்கு உணரப் பட்டது. இதற்கு இருபதாண்டுகளுக்குப் பின்னர் 90களின் பின்பகுதியில் மற்றொரு முயற்சி தொடர்ந்தது. 1880களில் தொடங்கி 1990வரையில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வெளிவந்தவற்றுள் தேர்வுசெய்யப்பட்ட 107 தமிழ் இதழ்கள் பற்றிய அறிமுகக் குறிப்புகள் எழுதுவதாக அம்முயற்சி அமைந்தது. 10 தொகுதிகள் திட்டமிடப்பட்டு அதில் 8 தொகுதிகள் வெளிவந்துவிட்டன. பேராசிரியர் மா.ரா. அரசுவின் கடும் உழைப்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன உதவியுடன் இம்முயற்சி நடைபெற்றுவருகிறது.

இதழ்களின் வரலாற்றுப் பயனை உணர்ந்திராத தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிட்ட சில நூலகங்கள், சில தனிமனிதர்களின் சேகரிப்பை நம்பியே இந்த இதழியல் ஆவணப் பணி நடைபெற வேண்டியுள்ளது. கிடைக்கும் இதழ்கள், எழுதுபவருக்குக் குறிப்பிட்ட இதழைப்பற்றி இருக்கும் முன் எண்ணம், இதழியல் அறிவு முதலிய கவலைதரும் அம்சங்கள் நிறைந்த புலமைச் சூழலில் தற்சார்பு சார்ந்தவையாகவே இந்த அறிமுகக் குறிப்புகள் பெரும்பான்மையும் இருக்க முடியும். அதேபோல *மணிக்கொடி* காலத்தைத் தன் நினைவிலிருந்தே எழுதியதாகப் பி.எஸ்.ராமையா குறிப்பிடுகிறார். அதன் காலப் பிழைகள் நூல் வெளிவந்த காலத்திலேயே சுட்டிக் காட்டப்பட்டன. தனிப்பட்ட அனுபவமாகவே படைப்பாளி வல்லிக்கண்ணனின் இரு நூல்களும் அமைந்துள்ளன. ஆவணங்களில், வரலாற்றுக்குரிய துல்லியம், நம்பகத்தன்மை, ஆராய்ச்சி முடிவுகள் முதலிய அம்சங்கள் குறித்த கவலை நமக்கு உண்டு. என்றாலும் இவைதாம் ஆய்வு மூலங்கள். இவற்றைக் கொண்டுதான் பிற்கால அறிவுலகம் இயங்க வேண்டும். இத்தகைய பின்புலத்தில் தமிழ் இதழியல் சூழல் நம்பகமான ஆய்வுமூலத்தை நோக்கிக் காத்திருந்தது.

கட்டுரையாசிரியர், இதழ் வரலாற்றாசிரியர் ஆகியோரின் கருத்தியல் சார்ந்த ஒருமுகப் பார்வை என்ற குறையைத் தீர்த்துப் பன்முகப் பார்வைக்கு வாய்ப்பளிக்கும் மூலத்துக்கு வாசகன் ஏங்குகிறான். சிற்றிதழ்களின் வளர்ச்சியால் உருவான மாற்றுச் சிந்தனைகள் பெருகிய வாசகப் பரப்பு ஆகியவை இதழ்களின் மூலப்பிரதியை நோக்கி அவனை நகர்த்தின. இத்தகைய புலமை எதிர்பார்ப்பை உணர்ந்த கலைஞன் பதிப்பகம், இதழ்களைத் தொகுப்புகளாக வெளியிடும் பதிப்புப் பணியினைத் தொடங்கியது. 1999இல் *கசடதபற* இவ்வகையில் முதல் நூலாக வெளிவந்தது. 2007வரையில் ஏறக்குறைய இருபது தொகுப்புகள் வந்துவிட்டன. கலைஞன் மட்டுமல்லாமல் வேறுபதிப்பகங்களும் இதில் ஈடுபட்டன. தொகைநூற்காலம் என்று சொல்லும்படியான நிலையை இந்த எட்டாண்டுகள் பெற்றன. இவ்வகையில் தொகுப்புகளாகி இருக்கும் இதழ்கள் இதழியல் வரலாற்றில் வகிக்கும் இடத்தைப் புரிந்துகொள்வது அவசியம்.

தமிழில் நவீனத்துவம் உருவாகிய சூழலின் அடையாளமாகக் கருதப்படும் *எழுத்துக்கு* முன் இருந்த இதழ்கள், பின் தோன்றிய இதழ்கள் என இந்த நூற்றாண்டுத் தமிழ் இதழ்களை இரு பெரும்பிரிவுகளாக நாம் பிரித்து விடமுடியும். எனினும் அதன் உள்ளடக்கம் மேலும் உள்ஒதுக்கீடு களைக் கோரி நிற்கின்றது. அவற்றை ஐந்து மிகப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

ஸ்தாபிக்கப்பட்டுவிட்ட கருத்தின் மேன்மையில் எழும் மனப்போக்கைப் பிரதிபலிக்கும் இலக்கியப் படைப்புகளைக் கொண்டாடும் இதழ்களான *சுதேசமித்திரன், கலைமகள். . .*

தன் அரசியலைப் பளிச்சென வெளிப்படுத்தி இடதுசாரிச் சாய்வுடைய இலக்கிய முயற்சியை, புரட்சி மனப்பான்மையுடன் வெளியிட்ட இதழ்களாக விளங்கிய *மணிக்கொடி, சரஸ்வதி, மனிதன், சிகரம் . . . .*

மிதவாத அரசியலைக் கவனப்படுத்தி, பொருட்படுத்தக்கூடிய படைப்பாளர்களையும் படைப்புகளையும் பரப்பிய *சக்தி, வசந்தம், முல்லை, சுபமங்களா. . . .*

தரமான இலக்கியமாகத் தன்னை அறிவித்துக்கொண்ட எழுத்து மற்றும் சரஸ்வதிக்கு இடைப்பட்ட பத்திரிகைகளான *தீபம், கணையாழி. . .*

இந்த ஐவகையில் அடங்கிவிடுவன தொகுப்பு களாக வெளிவந்துள்ள எல்லா இதழ்களும். எனினும் இவை *எழுத்து* மற்றும் எழுத்துக்கு முன் உள்ள இதழ்ச் சூழலையே பிரதிநிதித்துவப்

பழ. அதியமான் : வ.ரா. ஆய்வாளர். தி.ஜ.ர. (சாகித்ய அகாதெமி) அறியப்படாத ஆளுமை: ஜார்ஜ் ஜோசப் (கடவு, காலச்சுவடு இணை வெளியீடு, சென்னைக்கு வந்தேன் (காலச்சுவடு), வ.ரா. (திராவிட பல்கலைக்கழகம்) ஆகிய நூல்களின் ஆசிரியர்/தொகுப்பாசிரியர். தமிழ்ச் சிந்தனை வரலாறு தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டிருப்பவர். அகில இந்திய வானொலியில் நிகழ்ச்சி அமைப்பாளராகப் பணியாற்றுகிறார்.

படுத்துபவையாக இருக்கும். புதுச்சிந்தனை, ஜனரஞ்சகத்துக்கு எதிர் நிலை, கருத்து நிலையின் விளைவுகளாகச் சூழலை அவதானித்தல் போன்றவை *எழுத்துக்குப்* பிறகே நிகழ்ந்தன. இந்தச் சிறுபத்திரிகை மரபை *எழுத்து* (1959-1972) விலிருந்து *பிரக்ஞை* (1974-78) என்பதாக ஒரு மரபையும், *புதிய தலைமுறை* (1966)யிலிருந்து *நிகழ்* (1983 -1995) என இன்னொரு தீவிர மார்க்சிய மரபும், படிகள் (1978) முதல் *வித்தியாசம்* (1999) வரையிலான நவீனத்துவச் சாயல் மரபும், *நிறப்பிரிகை* (1990 - 2000) உருவாக்கிய அரசியலை முதன்மைப்படுத்திய மரபும் என நாம் பிரித்துப் பார்க்க முடியும். புது மரபாகக் *கல்குதிரை, சிலேட், கவிதாசரண், அணங்கு, பனிக்குடம்* முதலான வற்றைக் கணிக்கலாம். *எழுத்துக்குப்* பிறகான இதழ்களின் மிக நெகிழ்வான வகைப்பாடே இவை. இதில் *காலச்சுவடு* முதலிய இடைநிலை இதழ்களாக வெளிவருபவற்றைத் தனி மரபாக வகைப்படுத்த வேண்டியுள்ளது. சிற்றிதழுக்கு மிக நெருக்கம் கொண்டவையாக அவை விளங்குகின்றன.

இப்பெரும் தமிழ் இதழியல் பரப்பில் தொகுப்புகளாக ஆகியுள்ளவை *எழுத்துக்கு* முன் உள்ளவையே பெரும்பான்மை. *எழுத்துக்குப்* பின் இருப்பவை மிகச் சில. எழுபதாண்டுக் கால இதழியல் வரலாற்றில் பிற்காலச் *சுதேசமித்தரன்* தொடங்கிக் *கலைமகள், மணிக்கொடி,* உள்ளிட்டு *சுபமங்களா* வரை முக்கியமான இலக்கிய இதழ்கள் தொகுப்புகளாகி உள்ளன.

இந்த இலக்கிய இதழ்களில் வெளிவந்த படைப்புகள் தொகுக்கப்பட்டு இந்தக் காகிதத் தலையணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. சில இதழ்கள் ஒரு தொகுதியாயும் சில இரண்டிலிருந்து நான்கு தொகுதிகளாகவும் வந்திருக்கின்றன. 1000 பக்கங்களைப் பேரெல்லையாகவும் 200 பக்கங்களைச் சிற்றெல்லையாகவும் கொண்டுள்ளன. அதாவது இரண்டு செங்கல் அளவு பெரிதாகவும், மொசைக்கல் அளவு சிறிதாகவும் எனப் பல்வேறு அளவுகளில் இவை உருவாகியுள்ளன. செங்கற்களே மிக அதிகம்.

இதுவரை தொகுப்புகளாகி இருக்கும் இதழ்கள் சுமார் 20 இருக்கும். 'போகிற போக்கைப் பார்த்தால், தினத்தந்திக்குகூடத் தொகுப்பு வந்துவிடும்' என்றார் பிரபஞ்சன் ஒரு சமயம். அந்த அளவுக்கு ஆயாசம் ஏற்படுகிறது.

இந்த இலக்கிய இதழ்கள் சமூகத்தைப் பற்றிப் பெரிதும் கவலைப்படாதவை. தமிழகத்தில் தலித்துகள், பெண்கள், பெரியார் என்னும் ஜீவன்கள் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கூட இவற்றைக் கொண்டு அறிய முடியாது. ஜனரஞ்சகத்துக்கு மிக அருகில் இருந்த *கலைமகள்* பெரியார் பேட்டி ஒன்றை வெளியிட்டிருந்தது. அது பெரியாரைக் காட்டுவதாக இல்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இலக்கியம் மட்டுமே இவற்றின் பேச்சு, மூச்சு எல்லாம். எனவே இலக்கியம் என்ற எனது அடைமொழியும் நியாயப்படுத்தப்பட்டுவிட்டது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தை ஒரு வகையில் பிரதிபலிக்கும் இந்த இலக்கிய இதழ்த் தொகுப்புகளின் அமைப்பும் தரமும் எவ்வாறு உள்ளன என்று மேலோட்டமாகப் பார்க்கும் சிறு முயற்சியே இக்கட்டுரை.

நோக்கமும் தொகுப்பாளர்களும்

தொகுப்புகளாகி உள்ள இதழ்கள் அநேகமாய் வணிக நோக்கம் கொண்டவை அல்ல. அவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட லட்சிய வேட்கையைக் கொண்டவை. மணிக்கொடியின் தொடர்ச்சியாகத் தன்னைக் கருதிக் கொண்டது *கலாமோகினி* என்றால், இலக்கியத்தை மட்டுமே முன்நிறுத்திய *எழுத்துவிலிருந்து* நாடகம், ஓவியம் எனச் சகல கலைத் துறைகளிலும் பரவ வேண்டும் என விருப்பம் கொண்டு கிளைத்ததாக *நடையைச்* சொல்லலாம். நெகிழ்வாக இனம் பிரித்தால் *நடை, இலக்கிய வட்டம், கசடதபற* ஆகியவற்றைத் தீவிர இலக்கிய நோக்கம் கொண்டவை எனலாம்.

தொகுப்புகளில் சிலவற்றை அதன் ஆசிரியர்களே தொகுத்திருக்கின்றனர். இலக்கியவாதிகள், ஆசிரியரின் மகன், பதிப்பகத்தாரின் உழைக்கும் நண்பர்கள் எனப்பலரும் இத்தொகுப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் எவரும் இத்தொகுப்புப் பணியில் ஈடுபடவில்லை என்பதைச் சொல்ல வேண்டும்.

தொகுப்பாளர்கள், குறிப்பிட்ட இதழின் இயக்கத்தில் பங்கேற்றவர்களாகவோ, அதைப் புரிந்தகொண்டவர்களாகவோ அமைவது முன் சொன்ன நோக்கத்தைச் சாத்தியப்படுத்தப் பயன்படலாம். அந்த வகைத் தொகுப்பாளர்கள் *மணிக்கொடி, கசடதபற, சரஸ்வதி, அஃகே, கொல்லிப்பாவை, தீபம், சக்தி, முல்லை* ஆகியவற்றுக்கு அமைந்தனர். ஆனால், அவர்கள் வெற்றி பெற்றார்களா என்பது வேறு.

முன்னுரைகள் என்னும் அறிமுகங்கள்

தொகுப்புகளாகி உள்ளவை இரண்டு தலைமுறைக் கால இதழ்கள். நடப்புத் தலைமுறை பெரும்பாலும் படிக்கவோ பார்க்கவோ வாய்ப் பில்லாத இதழ்கள் என்பதால் அவ்விதழ்களைப்

பற்றிய விரிவான, தெளிவான முன்னுரை அல்லது அறிமுகம் ஒவ்வொரு தொகுப்பிலும் தேவை. இதழின் நோக்கம், ஆசிரியர், பங்கேற்ற படைப்பாளர், தனித்துவம், எதிர்கொண்ட உள் மற்றும் வெளிக்கருத்தியல் நெருக்கடிகள், காலம், எண்ணிக்கை, இதழ் நின்றதற்கான காரணம் முதலிய இதழ் சார்ந்த முழுத் தகவல்களை உள்ளடக்கியதாக முன்னுரை - அறிமுகம் அமைய வேண்டும் என்பது மிக எளிமையான முன் தேவை. அக்குறிப்பை ஆசிரியரோ, இதழோடு நெருங்கிய தொடர்புடைய வரோ வேறு வழி இல்லையெனில் குறைந்தபட்சம் இதழியல் அனுபவமுடையவரோ எழுதுவது தகவல்களின் துல்லியத்திற்கும் நம்பகத்தன்மைக்கும் பயன்படும். இந்த வகையில் நன்கமைந்தவை மூன்று முன்னுரைகள் மட்டுமே.

அதில் ஒன்று *சரஸ்வதி* தொகுப்பிற்கமைந்த அதன் ஆசிரியரின் மேலதிக விவரங்கள் கொண்ட முன்னுரை. ஆனாலும் தான் நடத்திய *சரஸ்வதி* நின்றதற்கான காரணத்தை வல்லிக்கண்ணன் எழுதிய *சரஸ்வதி காலம்* நூலிலிருந்தே எடுத்துக் காட்டுகிறார். உண்மையையும் மறைமுக மாகச் சொல்ல வேண்டிய சூழல். முற்போக்கு வட்டாரத்தி லிருந்து எந்த ஒரு பத்திரிகையையும் தாமே நடத்த வேண்டும் என விரும்பிய ஒரு இடதுசாரித் தலைவரின் தலையீடே *சரஸ்வதி*யின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று தெரிகிறது. இத்தகைய ஒரு தகவலை, இதழை நடத்தியவரோ இதழோடு நெருங்கிய தொடர்புடையவரோதான் கூற முடியும்.

'மணிக்கொடி காலம்' என்ற தொடரை லட்சிய நுரை பொங்கி வழியும் பொருளில் 1948 இலேயே வரா. பயன்படுத்தி *மணிக்கொடி* பிரமை முயற்சியைத் தொடங்கி வைக்க, பி.எஸ்ராமையா 'தீப'த்தின் உதவியுடன் அதைப் பிரபல்யப்படுத்தி, சிட்டி அதை 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து இழுத்தார். *மணிக்கொடி* பற்றிய மறுமலர்ச்சி பிரமையைக் கட்டமைப்பதில் தனக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் அரைநூற்றாண்டுக்குத் தொடர்ந்து பயன்படுத்தி வந்த சிட்டி, *மணிக்கொடி*, *கலாமோகினி* தொகுப்புகளுக்கு எழுதிய முன்னுரைகளையும் இந்த நோக்கத்தில் பயன்கொண்டார். *மணிக்கொடி* இதழ்த் தொகுப்பு முன்னுரையில் அதன் இலக்கியத் தரத்தை விதந்து போற்றும் சிட்டி, *மணிக்கொடி*யின் வாரிசாகக் கலாமோகினியை மதிப்பிட்டு அதன் பணிகளைத் தமிழ் மறுமலர்ச்சி மீட்பு முயற்சி களாகக் கலாமோகினி முன்னுரையில் வர்ணித்தார்.

அவரது மதிப்பீடு அதன் சாதனை சார்ந்ததல்ல; தன் விருப்பத்தின் மேல் எழுந்தது. ஆயினும் அதனைப் பற்றிய பல முக்கிய விவரங்கள் அடங்கிய சிறப்பான முன்னுரை அது. பாராட்டத் தக்க இரண்டாவது சிறந்த முன்னுரை அது.

ஆய்வாளர் ஆ. இரா. வேங்கடாசலபதி *முல்லை*க்கு எழுதிய ஆய்வு முன்னுரை, இதழியல் வரலாற்றில் முல்லையின் இடத்தை நிர்ணயம் செய்யும் முக்கியமான முன்னுரை.

ஆக, *சரஸ்வதி*க்கு அதன் ஆசிரியர் விஜய பாஸ்கரன் முன்னுரையும், கலாமோகினிக்கு அதன் படைப்பாளரும் இதழோடு நெருங்கிய தொடர்புடையவருமான சிட்டி எழுதிய முன்னுரையும், *முல்லை*க்கு ஆ. இரா. வேங்கடாசலபதி எழுதிய ஆய்வுரையும் சிறப்பான முன்னுரைகளாகும். தவிர, கி. அ. சச்சிதானந்தம் *(நடை, இலக்கிய வட்டம்)*, பரந்தாமன் *(அஃக்)* ஆகியோர் எழுதிய அறிமுகக் குறிப்புகளில் சில விடுபடல்கள் இருப்பினும் இதழ்ச் சூழலை நன்கு விளக்குபவை. மற்ற தொகுப்புகளின் முன்னுரைகள் கை விரல்களின் வளர்ந்த நகங்கள்.

காலம் பற்றிய கவனம்

இந்த இதழ்களின் தொகுப்புகள் களஞ்சியம், தொகுப்பு என இரண்டு பெயர்களில் வெளியிடப் பட்டுள்ளன. தலைப்பு, பெயர் எதுவானாலும் படைப்புகள் கால நிரலில் தொகுக்கப்படுவது பலவகையில் வாசகனுக்குப் பயன்படுவதாக அமையும். பல்லாண்டுகள் கடந்த பத்திரிகையின் தொகுப்பில் இவ்வொழுங்கு பயன்தரக்கூடியது. கால மாற்றத்தின் ஊடாகப் பத்திரிகையின் மாறிய நிலைப்பாடுகளைத் தெரிந்துகொள்ளவும் குறிப்பிட்ட ஆண்டில் குறிப்பிட்ட ஆசிரியரின் பொறுப்பில் சாதனைகள் என்னவாக இருந்தன என்பன போன்ற விவரங்களை அறியக் கால ஒழுங்கு பயன்படும். காலம் பற்றிய கவனம் முல்லை, கொல்லிப் பாவை தவிர அநேகமாக எந்தத் தொகுப்பிலும் பின்பற்றப்படவில்லை.

ஒரு எழுபதாண்டு காலத்தின் பல கட்டங்களில் வெளிவந்த இதழ்களின் தொகுப்புகள் தரும் பயன்களுள் மற்றொன்று காலந்தோறும் மாறியும் பக்குவப்பட்டும் வந்துள்ள சமூக, இலக்கிய நிலைமைகள் பற்றிய அவதானிப்புக்கு வாய்ப்பு அளிப்பது. இதற்கு உதவும் தொகுப்புகள் மிகச் சில: *கசடதபற, சரஸ்வதி, தீபம்* ஓரளவு *அஃக்*

1931லிருந்து 1965 வரையிலான 34 ஆண்டு காலம் வெளிவந்த *சுதேசமித்திரன்* வாரப் பதிப்பின் தொகுப்பு இவ்வகையில் நன்கு

பயன்பட்டிருக்கமுடியும். ஆனால் அத்தொகுதியில் 50களுக்குப் பிறகு வெளியான படைப்புகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. *சுதேசமித்திரனின்* இரண்டாம் தொகுதிக்கு 1959 ஆம் ஆண்டுத் தொகுப்பு என்றே பெயர் சூட்டலாம். அந்த அளவுக்கு அவ்வருடப் படைப்புகளின் ஆதிக்கமே அதிகம். இது நாம் சுட்டிய கால மாற்றத்தைப் புரிந்துகொள்ளப் பயன்படாது போவதோடு சமதர்மமும் ஆகாது. மொத்த இதழ்களின் தொகுப்பாக அமைய வேண்டியவை கிடைத்த இதழ்களின் தொகுப்புகளாக உருவாகியுள்ளன. இந்தக் கஷ்டத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால், இக்குறை பற்றி முன்னுரையில் மூச்சுக்கூட விட்டிருக்க மாட்டார்கள். அந்த அலட்சியம்தான் தவறான தொகுப்புக்குறையை விட உறுத்துகிறது.

பழைய முயற்சிகளைப் பயன் கொள்ளாமை

பரந்த வாசகச் சூழல், பதிப்பகத்தேவை போன்றவற்றின் விளைவாய் எழுந்த இந்தப் புதிய தொகுப்புகளுக்கு முன்னோடியாய்ச் சில சிறு முயற்சிகள் முன்னரே இந்த நோக்கில் நடந்துள்ளன. அவற்றுள் ஒன்று தன் வெள்ளி விழாவின்போது *கலைமகள்* வெளியிட்ட 'கலைமகள் கதம்பம்'. முதல் இருபத்தைந்து ஆண்டுகளில் *கலைமகளில்* வெளிவந்தவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த படைப்புகளைப் படைப்பாளர், உள்ளடக்கம், வடிவம் சார்ந்த வகைப்படுத்தலுடன் கொண்டிருந்த தொகுப்பு அது.

1932 தொடங்கி இன்றும் நடக்கும் *கலைமகள்* இதழின் புதிய தொகுப்புக்கு எந்த ஆண்டுவரை படைப்புகளை எடுத்துக் கொண்டார்கள் என்ற குறிப்பு இல்லை. பெரும்பான்மையும் அம்மாமி இலக்கியம், இசை, மதம் சார்ந்த கட்டுரைகள், பேட்டிகள் தொகுப்பை நிறைக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சமூகப்பிரிவின் குறிப்பிட்ட கால, இலக்கிய, சமயப்பங்களிப்பைப் பற்றி அறிந்துகொள்ள மட்டும் பயன்படும் தொகுப்பு இது. முதல் பாகத்தில் இடம்பெற்றுள்ள தமிழக் கணிதம் (பக்.59) என்ற கட்டுரை முடிவு பெறாதிருப்பதைக் கூடக் கவனிக்கவில்லை.

அதே சமயம், முந்தைய கதம்பத்தைக் கவனித்து, அதில் வந்த படைப்புகளை இதில் தவிர்த்திருப்பது நல்ல முறை. இது தற்செயலாகவும் இருக்கலாம். 1957இல் வெளிவந்த கலைமகள் கதம்பத்தின் உள்ளடக்க வகைப்பாட்டையும் முன்னுரையையும் போற்றச் செய்யும் வண்ணம் புதிய *கலைமகள்* உள்ளது. இதேபோல தீபம் இதழில் வெளிவந்த 'நானும் என் எழுத்தும்' தொடரைத் தீபம் கட்டுரைகள் என்ற நூலாக 1985இல் கலைஞன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. தீபம் இதழ்த் தொகுப்பில் 'நானும் என் எழுத்தும்' என்ற வரிசையில் இடம்பெற்றிருந்த நான்கு எழுத்தாளர்களையும் இலக்கியச் சந்திப்பில் இரண்டு பிரபலங்களையும் தவிர்த்திருக்கிறார்கள்.

வாசகனுக்குள் ஒரு தேடலையோ உணர்ச்சி சார்ந்த ஒரு நிறைவையோ தீபத்தின் 'நானும் என் எழுத்தும்' மற்றும் 'இலக்கியச் சந்திப்புகள்' தர முடியாது சரிகின்றன. என்றாலும் நிறைவு தருவதற்கான நல்வாய்ப்பு அந்த வடிவங்களில் இருந்தன. தீவிரமற்ற இலக்கிய வாசகனுக்கும் பல்வேறு இலக்கிய வகைமைகளில் தீனி தரும் தொகுப்பாகத் *தீபம்* விளங்குகிறது. பல ஆளுமை களின் இலக்கியச் செயல்பாட்டை வெளிக்கொணர் வதாகப் பல படைப்புகள் இருக்கின்றன. பேட்டிக் கேள்விகள், ஆளுமைக் கேற்றவாறு அமையாமல் ஒரே மாதிரியாக இருக்கின்றன. அவர்கள் முயற்சியையும் மீறிச் சில பேட்டிகள் நன்றாக அமைந்து ஆச்சர்யத்தைத் தருகின்றன.

தன்னளவில் முழுமை

உள்ளடக்கத்தைத் தவிர இதழ்களின் முகப்பட்டை, வடிவமைப்பு, சித்திரம் அதில் வந்த சிறு குறிப்புகள்... இத்யாதிகளுடனும் ஒரு இதழை முழுமையாகப் புரிந்துகொள்ள ஏற்றபடி ஒரு பதிப்பு இனித்தான் உருவாக வேண்டும். அதற்கு நடக்கும் இடைக்கால ஏற்பாடுகள் தாம் இந்தத் தொகுப்புகள் என்றாலும் முழுமையைப் பற்றிய ஒரு புரிந்துணர்வைத் தரும் வகையில் இந்தத் தொகுப்புகளை அமைக்க முடியும். அந்த உணர்வை *முல்லைக் களஞ்சியம்* முழுமையாகத் தருகிறது. முக்கியமானவை தொகுக்கப்பட்டிருக்கும் என்ற உணர்வை *நடையும் இலக்கிய வட்டமும்* தருகின்றன. ருசியானவை விடுபட்டிருக்காது என்ற உணர்வைத் *தீபம்* தருகின்றது. இப்படி ஒவ்வொரு தொகுப்பும் பிறை உணர்வையே தருகின்றன. பல்லாண்டுகள் வந்த இதழ்களின் தொகுப்புகளில் திருப்தி சிரம சாத்தியம்.

ஆனாலும் தன்னளவில் முழுமை என்ற உணர்வைத் தொகுப்பாளர்கள் சிறிது கூடுதலாக உழைத்திருந்தால் தந்திருக்க முடியும்.

இலக்கிய வட்டம் தொகுப்பில் 'இன்றைய தமிழ் இலக்கியம்' என்ற க.நா.சு.வின் கட்டுரை, 'இதன் தொடர்ச்சியாக ஒரு சிறு கட்டுரை' அடுத்த இதழில் வெளியாகும் என்னும் குறிப்புடன் வெளிவந்து பதிவாகியுள்ளது. ஆங்கில இதழ் ஒன்றில் வெளிவந்து ஐந்தாண்டுகளுக்குப் பின் 1964இல் தமிழில் வெளிவந்த அப்பெரிய கட்டுரை,

தமிழ் மறுமலர்ச்சி இலக்கியம் மீது கடுமையான விமர்சனத்தை வைத்திருந்தது. காலத்துக்கும் இடத்துக்கும் தக்க விளக்கங்கள் சிலவற்றையேனும் தொடர்ச்சியாக வந்த அச்சிறு கட்டுரை கொண்டிருந்திருக்கும் என எதிர்பார்த்துத் தேடும் வாசகனுக்கு அது அத் தொகுப்பில் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட அச்சிறு கட்டுரை எனக்குத் தெரிந்து அத்தொகுப்பில் இல்லை. முழுமை உணர்ச்சி பறிபோன இடங்களுள் இது ஒன்று.

அதே இலக்கிய வட்டத்தில் ஒரு தலையங்கக் கட்டுரையில் இந்த இதழ் நாலாவது பக்கத்தில் எஸ்ரா பவுண்டு எழுதிய கட்டுரை வெளியாகியுள்ளது என்று ஒரு தகவல் வருகிறது. அந்த எஸ்ராவின் கட்டுரைத் தொகுப்பில் இருக்க வேண்டுமே என்று எதிர்பார்க்கும்போது அது இருக்கிறது. அந்த இடம்பெறல் வாசகனுக்குள் மகிழ்ச்சியையும் தொகுப்பின் மீது நம்பிக்கையையும் தருகிறது.

படைப்பாளர் பற்றிய அறிமுகங்கள்

இந்த இதழ்த் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள படைப்பாளர் மிகப் பலர். இன்றைக்குப் புகழ் பெற்றிருக்கும் எழுத்தாளர் அதில் அநேகர். எனினும் ஏறத்தாழ 40 விழுக்காட்டினர் பிரபலமடையாதவர்கள். கொள்கை சார்ந்த ஒரு எழுத்து இயக்கம் எனில் அதிலிருந்து புதிய முனைகள் வெளிக்கிளம்ப வேண்டும். *எழுத்து, இலக்கிய வட்டம், நடை, கசடதபற, கலாமோகினி, மணிக்கொடி*... இதழ்களிலிருந்து புதிய எழுத்தாளர்கள் தோன்றியிருப்பது தெரிகிறது. சிலர் சில இதழ்களில் மட்டுமே பங்காற்றியுள்ளனர்.

சிறுபத்திரிகைகளின் தன்மை இல்லாத இலக்கியப் பத்திரிகைகளில் 40களில் எழுதிய அநுத்தமா, லக்ஷ்மி இத்யாதி பெண்களின் படைப்புகள் உள்ளன. ஆனால் 70, 80களில் வந்த சிறுபத்திரிகைகளில் அந்த அளவுக்குகூடப் பெண்களின் படைப்புகள் இடம்பெறவில்லை. எழுத்துவில் இரா. மீனாட்சி மட்டும் காணக் கிடைக்கிறார். புனைப்பெயர்களில் எழுதியவர் மற்றும் படைப்பாளிகளின் விவரங்கள் தொகுப்புகளில் தரப்படவில்லை. இதைப் பற்றிய தொகுப்பாளர் களின் அலட்சியம் வருத்தம் தருகிறது. *இலக்கிய வட்டம்* தொகுப்பாளர் தவிர வேறு எவரும் இது பற்றிக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், அவரும் பிரபலமான எழுத்தாளர் பற்றிய பிரபலமான குறிப்பையே தந்துள்ளார்.

*நடை*யில் கண்ணன், செல்வம் என்ற பெயர்களில் வந்துள்ள கட்டுரைகள் ஆழம் தேடிப் போய்ப் பிரச்சனையை அலசுகின்றன. ஒலூலூ, தெஹெல்வி என்ற புனைப்பெயர்களில் சிறந்த படைப்புகள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் யார்? எவர்? என்பதை அத்தொகுப்பிலிருந்து அறிய முடியாது. எழுத்தாளர் சிமணியின் புனைப்பெயர் களை அறிந்த சிற்றிதழ் வாசகர்களாக இதழ்த் தொகுப்பைப் படிக்கிற எல்லோரும் இருந்துவிட முடியாது. 'ஜராதுஷ்டன் இவ்வாறு சொன்னான்' என்ற நீட்ஷே நூலின் சிறு பகுதி வி.து. சீனிவாசன் மொழிபெயர்ப்பில் வந்த *நடை* படைப்புகளின் கனத்தைக் கூட்டியிருக்கும்.

சிற்றிதழ்த் தன்மையின் தொடக்க முனைகள்

வெகுஜன இதழ்களுக்கும் சிற்றிதழ்களுக்கும் இருக்கிற வேறுபாட்டில் முக்கியமானது ஆழமும் தீவிரமும் சார்ந்த கருத்து வெளிப்பாட்டு வாய்ப்பு. இதைப் பெரும்பான்மையான இதழ்கள் பயன் கொண்டதற்கு ஆதாரம் இல்லை. ஆனால் கசடதபற, சரஸ்வதி, அஃக், கொல்லிப்பாவை ஆகியவை இவ்வகையில் முதலில் நிற்கின்றன. இந்தத் தன்மை வெளிப்படுமாறு தொகுப்புகளும் அமைந்திருக்கின்றன.

'சிந்திக்கிறவனுக்கு இன்றைய உலகம் விடும் அறைகூவல்களை ஏற்றுக்கொள்ள காத்திருக்கிறது' என்ற முழக்கத்துடன் (திராவிட இயக்க எழுத்துகளோடு சேர்ந்து இனம் காணப்படும் *'முழக்கம்'* என்ற இச்சொல்கூடக் *கசடதபற* வுக்குப் பிடிக்காது) கிளம்பிய *கசடதபற*வின் நோக்கத்தைத் தொகுப்பு பிரதிபலிக்கிறது. எழுத்தில் கல்கி, ஓவியத்தில் ரவிவர்மா, கவிதையில் சுரதா, மீரா ஆகியோரைத் தாட்சண்யமின்றி மறுதலித்தது *கசடதபற*. எழுத்தில் அசோகமித்திரன், ந முத்துசாமி, நகுலன், சார்வாகன், ஓவியத்தில் ஆதிமூலம், பாஸ்கரன், கவிதையில் ஞானக்கூத்தன், பாலகுமாரன், ஐராவதம், விமர்சனத்தில் வெங்கட்சாமிநாதன் ஆகியோரைக் கொண்டாடியது. சார்த்தர் பேட்டியின் தமிழாக்கம், எஸ்.வி. ராஜதுரையின் மொழிபெயர்ப்புக் கட்டுரை போன்ற நல்ல படைப்புகளோடு சில அக்கப்போர்களும் இலக்கியச் சர்ச்சைகள் என்ற முகமூடியோடு இடம்பெற்றுள்ளன. நாடகம் சார்ந்த சாதனைகள் தொகுப்பில் இல்லை என்ற குறை இருந்தாலும் தொகுப்பு *கசடதபற*வைக் காட்டுகிறது.

*சரஸ்வதி*யில் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றோர், தேர்வுக்குழு தேர்வின் முறை, அதன் மெத்தனம் ஆகியவற்றை விமர்சிக்கும் ரகுநாதன் உள்ளிட்டோரின் சில கட்டுரைகள் மிக வேகமானவை, ஆழமானவை. இந்த விமர்சனத்திற்கும் அசைந்து கொடுக்காமல் அத்தேர்வு முறை மாறவில்லை என்பது யதார்த்தம். ஆனால், ரகுநாதனின் நண்பர்கள் பிற்காலத்தில் இதில் புகுந்து வெற்றியுடன் வெளிவந்து விட்டதும் யதார்த்தம்.

தொகுப்புக்கான படைப்புத் தேர்வுமுறை

தொகுப்பின் வெற்றிக்குப் படைப்புத் தேர்வு மிக முக்கியம். இது வரலாற்றுப் பதிவு என்பதால் அதன் முக்கியத்துவமும் கூடுகிறது. இருப்பினும் பெரும்பாலான இதழ்த்தொகுப்பாளர்கள், படைப்புகளைத் தேர்வு செய்தமுறை பற்றிச் சிறப்பான குறிப்பைத் தரவில்லை. ஒரு சிலர் இது பற்றிப் பேசியுள்ளனர். அவருள் ஒருவரான கி.அ. சச்சிதானந்தம் படைப்புத் தேர்வு பற்றி இப்படிக் கூறுகிறார். "இவற்றிலிருந்து (*நடை, இலக்கிய வட்டம்* இதழ்களிலிருந்து) பிரதி நிதித்துவப் படுத்தும் கவிதைகள், கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், சிறுகதைகள் கொண்ட தொகுப்புகள் கொண்டுவர வேண்டும் என்ற அவா என்னுள் நீண்ட காலமாக இருந்து வந்தது" என்று தொடங்கு பவர் நிறைவாய் இப்படிச் சொல்கிறார். "....இத்தொகுப்பில் உள்ளவை தேர்ந்தெடுக்கப் பட்டவை மட்டுமல்லாது பிரதிநிதித்துவமாக இருப்பவைகளும் உண்டு என்பதை வாசகர்களும், மதிப்புரை செய்யத் தயாராக இருப்பவர்களும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று முடிக்கிறார்.

இதிலிருந்து பிரதிநிதித்துவப்படுத்துபவையாகத் தொகுக்க நினைத்து, வேலை முடியும்போது தேர்ந்தெடுக்கப்பட்டவையோடு "பிரதிநிதித்துவப் படுத்துபவையும் உண்டு" என்று சொல்லத்தக்க நிலையில் தொகுப்பு உருவாகியிருக்கிறது என்று தெரிகிறது. இது பலருக்கும் நேர்வதுதான். சிந்திக்கிற சச்சு சாருக்குத்தான் இப்பிரச்சனை எல்லாம், மற்ற தலையணைத் தயாரிப்பாளர்களுக்கு இது ஒரு பிரச்சனையே இல்லை.மற்ற தொகுப்புகளின் படைப்புத் தேர்வு எப்படி நடந்திருக்கும்? பிரதிநிதித்துவப் படைப்புகளின் தொகுப்பா? தேர்ந்தெடுக்கப்பட்ட வையா? மாதிரிகளா? படைப்புக்கு முக்கியத்துவமா? படைப்பாளர்க்கா? காலத்தின் வரிசை? கருத்துக்கு முதன்மையா? ஏதேனும் வேறு நோக்கமா? இப்படித்தான் நடந்து முடிந்தது என்பதன் சாட்சியமா? காலம் புடைத்தபின் முறத்தில் தங்கிய நெல்லின் மணியா? விருப்பங்களின் தேர்வா? கிடைத்தவற்றின் திரட்டா? கிளிமூக்கின் தேர்ந்தெடுப்பா? திரட்டுகளைப் பார்த்து விட்டு யோசிக்கும் போது எந்த ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

வித்தியாசமான வெற்றித் தொகுப்பு

கவிதை, கட்டுரை, கதை என்ற இலக்கிய வகைமை சார்ந்த வரிசையிலேயே பெரும்பாலான தொகுப்புகள் அமைந்துள்ளன. இதழின் நோக்கத்தைச் சார்ந்தும் அதனதன் தனித்தன்மை சார்ந்தும் தொகுப்புகள் அமைந்திருக்கலாம். *முல்லை*, அதன் ஆசிரியர் முத்தையாவின் மகன் பழநியப்பனால் புதுமுறையில் பதிக்கப்பட்டிருக் கிறது. புதுமைப்பித்தனும் பாரதிதாசனும் *முல்லை*யின் கதாநாயகர்கள். இவர்களை முக்கியத் துவப்படுத்தும் வகையில் தொகுப்பு செய்யப்பட்டிருக் கிறது. *முல்லை*யில் முக்கியப் பங்காற்றிய இவ்வாளுமைகளின் படைப்புகள் அடிப்படையில் பொருள் பாகுபாடும் அமைந்துள்ளது. எஞ்சியவை இலக்கிய வகைமைகளின் அடிப்படையில் பதிவாகியுள்ளன. 'முல்லை ஒரு வரலாற்றுப் பதிவு' என்ற ஆ.இரா. வேங்கடாசலபதியின் முன்னுரையுடன் வெளிவந்துள்ள *முல்லை இலக்கியக் களஞ்சியத்தில்* அவ்விதழ் இதழியல் வரலாற்றில் பெறும் இடம் குறித்த ஆய்வு இடம் பெற்றுள்ளது. இதழின் கருத்துநிலை, அதில் பங்கு பெற்றவர்களின் கருத்துநிலை இவற்றின் விவரிப்புகளோடு வெளிவரும்போது வாசகனுக்கும் ஆய்வாளனுக்கும் அத்தொகுப்பு வாசிப்பு அனுபவத்தோடு வேறு பயனையும் அளிக்கிறது.

தொகுப்பு முயற்சியில் தோல்வி கண்டவை

முன்னால் இலட்சியமாகவும் பின்னால் சாதனையாகவும பிரகடனப்படுத்திக் கொண்டதற்கு ஏற்ற வகையில் தம் இதழைத் தொகுத்துக் கொள்ள சில சிற்றிதழ்களுக்கு வரலாறு அளிக்கும் நல்ல வாய்ப்பு இந்தத் தொகுப்புப் பதிப்புகள். செய்யப்பட்ட தொகுப்பு உள்ளடக்கக் குறையால் விரும்பியவாறு அமையவில்லை என்றாலும் நியமிக்கப்பட்ட தொகுப்பாளரின் குறையாகவும் பதிப்பாளரின் பிழையாகவும் இதனைச் சுட்டிவிடலாம். இந்த வகையில் எழுந்த முயற்சி களுக்கும் அதன் ஒரே விளைவான தோல்விகளுக்கும் சான்றாக *மணிக்கொடி, கலாமோகினி* ஆகிய தொகுப்புகளைச் சுட்டலாம்.

முதலில் மணிக்கொடி, மணிக்கொடியின் சரியான தொகுப்பு என்பது வரா. (1933 - 34), பி.எஸ். ராமையா (1935-38) பரா (1938 - 39) ஆகியோரின் ஆசிரியத்துவத்தில் வந்த இதழ்களின் தொகுப்பாக இருக்க வேண்டும். நான்காவது பகுதியாக, கணேசன் என்னும் 'வெறும் வாசகர்' (வார்த்தை உபயம் : சிட்டி) பண உதவியால், ராமையாவின் ஆசிரியப் பொறுப்பில் வந்த மிகச் சில இதழ்களையும் இணைத்துக் கொள்ளலாம். மூன்று தொகுப்பாசிரியருள் ஒருவரான 'ப. முத்துக்குமாரசாமி எங்கெங்கோ தேடிப் பிடித்துப் பல விஷயங்களைக் கொண்டுவர' அவற்றிலிருந்து தொகுக்கப்பட்டதுதான் இந்த அரிய நூல் என்று

தொகுப்பாசிரியருள் மற்றொருவரான சிட்டி முன்னுரையில் குறிக்கிறார்.

இதழின் தொகுப்பு முறை பற்றி இதைத் தவிர வேறு குறிப்பில்லை. ஆனால் 'மணிக்கொடியும் சிறுகதையும் ஒருபொருள் குறிக்கும் இரு சொற்கள்' எனும் கருத்தைக் களித்தோதும் தொகுப்பாளர், கவிதைகள், கட்டுரைகள், கதைகள், மொழி பெயர்ப்புகள், நாடகம் என வழக்கமான தொகுப்பு வரிசையினை இதிலும் கையாண்டுள்ளார். சிறுகதைக்கென எந்த முக்கியத்துவமும் தரப்பட வில்லை. சில கதைகள் கட்டுரைத் தலைப்பெயருக்குக் கீழேயும் பரவியுள்ளதை வேண்டுமானால் சிறப்பு எனச் சொல்லமுடியும். கட்டுரைப்பகுதியின் கீழ் கதைகள் சிலவும் இடம் பெறுமாறு தொகுப்பு முழுக் கவனத்துடன் சுவையாகத் தயாரிக்கப் பட்டுள்ளது. அச்சில் கதைகளுள் தொகுப்பாளர் ஒருவருடையதும் ஒன்று. இத்தொகுப்பின் மூன்று தொகுப்பாளர்களுள் இரண்டாமவரின் பங்கு என்ன என்பதை அறிய ஆவலாக உள்ளது. *மணிக்கொடிக்* கதைகளைத் தேர்வுசெய்து தந்தார்; மொழிபெயர்ப்பு களுக்கு மூல ஆசிரியர் பெயர்களைப் பதிவுசெய்தார்; நூல் வர உறுதுணையாக இருந்தார் என நம் ஆவலைப்பூர்த்தி செய்திருக்கிறார்கள் முன்னுரையில், ரஜனி, வில்லன், மாயா, விஸ்கி, வியாசன், உவேசா, வாணிதாஸன் முதலிய சிறுகதை எழுத்தாளர்களின் (?) கதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தது பெரிய பணிதானே! *மணிக்கொடி* எழுத்தாளர்களாக மேற்கண்டவர்களை அறிய வைத்ததும் நல்லதுதான். அடுத்து எந்தெந்தக் கதைகளுக்கு மூல ஆசிரியர் பெயரைக் கண்டு பதிவுசெய்தார் என்ற குறிப்பையாவது தந்திருக்கலாம். மூலஆசிரி யரின் பெயரில்லாமல் கதையை வெளியிட்ட *மணிக்கொடியை* நாம் எதற்குப் பாராட்டுகிறோம் என்றாவது நாம் வருத்தப்பட உதவியிருக்கும்.

மணிக்கொடியின் வாரிசு என்று ஒரு சிலரால் கருதப்படுவது *கலாமோகினி*. இதில் இடம் பெற்றுள்ள மாரீச இலக்கியம் என்ற தலைப்பிலான வல்லிக்கண்ணனின் கட்டுரை இலக்கியத் திருட்டுக்கு எதிராகத் தார்மீகக் கோபம் பொங்குவது. 'நமது அதிதி' என்ற தலைப்பிலான புதிய பாணியில் அமைந்த எழுத்தாளர் அறிமுகக் குறிப்புகள் சுமார் ரகத்தைச் சார்ந்தவை. வரா., பாரதிதாசன் ஆகியோர் 'நமது அதிதி' பகுதியில் தம் புகைப்படம் இடம் பெற வந்த வேண்டுகோளை மறந்துப் புறந்தள்ளியிருக்கிறார்கள். இந்த மறுப்பே *கலாமோகினியின்* தரத்தை, *மணிக்கொடி* தொடர்புடைய இவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை அறியப் போதுமானது. அது வெளியிட்ட குபரா. மலரை மட்டும் வைத்துக் கொண்டு *கலா மோகினியைச்* சிறந்த இதழ் என்று சொல்ல முடியாது.

'உலகத்தில் இது மாதிரி பெயரைப் பத்திரிகைகளுக்கு யாரும் வைத்திருக்கக் கூடாது. எந்தக் காலத்துக்கும் என்று நான் விரும்பினேன். ஒரு சப்தத்தைப் பெயராக வைத்தேன். வரவேற்பும் மிதமிஞ்சிக் கிடைத்தன' என்று சொல்லும் ஆசிரியர் பரந்தாமன், தானே தொகுப்பாளராக இருந்து *அஃகீ* தொகுப்பை உருவாக்கியுள்ளார். 'பிராணனை வாங்கிக் கொண்டு பிரசுரமாயின. என் கையிலிருந்த கடைசிச் சல்லியையும் இதற்காகவே செலவு செய்துவிட்டு தற்சமயம் நான்தான் எனக்கு மீதியாக இருக்கிறேன்' என்று *அஃகீ* கொண்டு வந்தது பற்றி அலமலந்து பேசுகிறார். சிற்றிதழுக்குள் ஓவியத்தை அச்சுக் கலைத் திறமையைக் கொண்டுவந்த பெருமையின் சொற்களால் நிரம்பி வழிகிறது *அஃகீ* தொகுப்பு. இந்தப் பெருமையின் பிரவாகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தொகுப்பில் வந்துள்ள கலைப்படைப்புகள் அமுங்கிப்போய்விட்டன. ஒரு மனிதரின் கடுமையான உழைப்பும் இரு மனிதர்களின் நீண்ட புலம்பலுமாக *அஃகீ* தொகுப்பு அமைந்துவிட்டது. *அஃகீ* தோல்வியின் வெற்றி.

வருந்த வைக்கும் தொகுப்புகள்

பெரும்பான்மைத் தொகுப்புகள் ஒரே மாதிரியாய் அமைந்து வாசகனுக்கு அலுப்பையும் வருத்தத்தையும் தருகின்றன. தொகுப்பை எந்த நோக்கத்தில் எந்தச் சந்தர்ப்பத்தில் செய்திருந்தாலும் தவறுகளை நீக்கிச் செய்திருந்தால் ஒரே மாதிரியாய் அமைந்திருந்தாலும் அலுப்பை அளித்திருக்காது. கவனம், அக்கறை, நேர்த்தி ஆகியவை சில தொகுப்பு முயற்சிகளில் இல்லை. தவறற்றதை விரும்புவது பேராசையாக மாறிவிட்டது இத்தொகுப்புகளைப் பார்க்கும்போது.

சக்தி இதழ்த் தொகுப்பு

வருத்தத்தைத் தரும் தொகுப்பில் முதல் இடத்தைப் பிடித்துக்கொள்கிறது *சக்தி*. எத்தனை ஆண்டு காலம் நடைபெற்றது என்பதைக்கூட உறுதியாகச் சொல்ல முடியாத நிலையில் ஒரு இதழ்த் தொகுப்பு! சுமார் 16 ஆண்டு காலம் என்ற தொனியில் போகிறபோக்கில் ஒரு குறிப்பு. மகாகவி பாரதி என்ற தலைப்பெயரின் கீழ் பாரதிக்குத் தொடர்பில்லாத அச்செழுத்து மகிமை (தி.ஜ.ர.) வருகிறார்கள் போகிறார்கள் (ல. சண்முகசுந்தரம்) முதலிய கட்டுரைகள். கவனத்தைச் செலுத்தாது தயாரிக்கப்பட்ட தொகுப்புகள். சக்தி களஞ் சியத்தின் முதல் பாகத்தின் நிலை பற்றிய பருக்கைப் பதம் மேலே சொன்னது. (இதற்கு இரண்டு தொகுப்பாளர்கள்!)

சக்தி களஞ்சியத்தின் இரண்டாம் தொகுதியில் பிற இந்திய மொழிக் கதைகள் என்ற பகுதியில் பல குழப்பங்கள். படைப்புகள் வெளிவந்த இதழின் எண், காலம் பற்றிய குறிப்பு தொகுப்பில் எங்கும் தரப்படவில்லை. ந. பிச்சமூர்த்தி, நா. பிச்சமூர்த்தி ஆகியிருப்பது (இந்தத் தவறு பல தொகுப்புகளிலும் சகஜமாகக் காணக் கிடைக்கிறது) பற்றியோ மாக்சிம் கார்க்கியின் ஒரு கதையைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார் என்ற குறிப்பு இல்லை என்பது பற்றியோ தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் கு. அழகிரிசாமி தொகுத்திருக்கும் தமிழக நாட்டுப்புறக் கதைகள் பற்றிய தகவல் உள்ளடக்கக் குறிப்பில் இல்லை என்பது பற்றியோ இன்னும் இவை போல உள்ளவை பற்றியோ ஒன்றும் சொல்லப்போவதில்லை. எத்தனை வேகாத பருக்கைகளை எடுத்துக் காண்பிப்பது?

அதேபோல சுதேசமித்திரன் தொகுப்பிலும் குழப்பங்கள் பல. 'எனக்குக் கிடைத்த மோதிரம்', 'புத்திர வாஞ்சை' என்ற கட்டுரைகளை எழுதியவர் யார் என்ற குறிப்புகள் இல்லை. கட்டுரைக்குரிய தகுதி இல்லாத இப்படைப்புகள், எழுதியவர் பெயராலாவது தகுதி பெறலாம் என்றால் அதுவும் தெரியவில்லை.

இந்தக் கவனம், அக்கறையின்மையால் ஏற்படும் தவறுகள், நேர்த்தியான தயாரிப்பு என்ற திசையிலிருந்து இத்தொகுப்புகளை அப்புறப்படுத்தி விடுகின்றன.

முடிவாக

இலக்கிய இதழைப் பெரும் கனவுடன் தொடங்கிய அதன் ஆசிரியர்களைப் போலவே, இந்தத் தொகுப்பாளர்களும் பெரும் பொறுப்புடன் இப்பணியை மேற்கொண்டிருக்க வேண்டும். தொகுப்பதற்குரிய சரியான நபர்கள், இதழ்களின் கிடைப்பருமை, சரியான முறைகளை வகுத்துக் கொள்ளாதது, அதற்குரிய பணம் முதலிய ஏந்துகள் கிடைக்காதது போன்றவற்றைத் தோல்விக்குக் காரணங்களாகச் சொல்லமுடியும். சூழலின் மோசத்தைக் காரணமாகச் சுட்டலா மெனினும் இன்னும் சூழல் படுமோசமாகவில்லை என்பதையும் நாம் சொல்லித்தானாக வேண்டும். கோவர்த்தன கிரியைத் தூக்க நினைத்தவர்கள், கடைசியில் துணி துவைக்கும் கல்லையே தூக்கி நிறுத்தினர். குடையாக மாற வேண்டியது குடைக் கம்பியாகக் குத்துகிறது.

உயிரோடு இருக்கிறவர்களின் தவறுகளைச் சொன்னால் அவதூறு. அமரர்களை விமர்சிப்பது அநாகரிகம். வாழ்த்த(வே) வாய், நினைத்து மருக(வே) மட நெஞ்சு, தாழ்த்த(வே) சென்னி.

மேலும் சில தொகுப்புகள்

1. வசந்தம்(1942 - 68)

சென்னை அல்லாத ஒரு இடத்திலிருந்து (கோவை) நீண்டகாலம் வந்த இதழ் என்ற பெருமை, ஆர். சண்முகசுந்தரத்தின் சகோதரர் திரு ஞானசம்பந்தம் ஆசிரியராக இருந்த *வசந்தத்*திற்கு உண்டு. 1944, 1949 ஆம் ஆண்டுகளில் ஜிடிநாயுடு உள்ளிட்ட புரவலர்களின் உதவியோடு வ.ரா., பாரதிதாசன், அண்ணா எனப் பல வகை எழுத்தாளர்களையும் கொண்ட எழுத்தாளர் மாநாட்டை நடத்தியது வசந்தத்தின் இரண்டாவது பெருமை. அதேபோல 1949 செப்டம்பரில் நடத்திய பாரதி விழாவும் முக்கியமானது. *வசந்தம்* நீண்ட காலம் வீச முடிந்ததற்கு, ஆர்.கே. சண்முகம் செட்டியாரின் பொருளாதாரப் பின்னணி காரணம். கவிதை, கட்டுரை, சிறுகதை, பிறமொழிக் கதை, நாடகம் என்பதாகத் தொகுப்பு அமைந்துள்ளது. கே.சி.எஸ். அருணாசலம் கவிதைக்கு மாதிரி; கட்டுரைக்கு அடையாளம் மு. அருணாசலம்; கதைக்குப் பூபாளூர் சுந்தரராமன்; பிறமொழிக் கதைக்கு மாஸ்தி வெங்கடேச ஐயங்கார்; நாடகங்களுக்கு மாதிரி 'சுகி'... என்றால் *வசந்தத்*தின் படைப்புகளின் தரத்தை, போக்கை வாசகர்கள் புரிந்துகொள்ள முடியும். தழுவல், மொழிபெயர்ப்பு என்ற பாகுபாட்டைப் பிறமொழிக்கதைகளின் வெளியீட்டில் தவறாமல் குறித்திருப்பது *வசந்தத்*தின் இலக்கியத் தெளிவைக் காட்டுகிறது. *வசந்தத்*தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவரும் தொகுப்பாளரில் ஒருவருமான கா. நஞ்சுண்டன் 600 பக்கங்கள் கொண்ட இந்தத் தொகுப்புக்குத் தெளிவான முன்னுரையை எழுதியுள்ளார். ஆமாம்! எதற்கு நான்கு தொகுப்பாளர்கள்!

2. மனிதன்

விந்தனை நினைவுபடுத்த இதழ் உலகில் இருக்கும் எச்சம் *மனிதன்*. இதில் பலவகையான எழுத்தாளர்களின் சங்கமம் நிகழ்ந்துள்ளது. எனினும் விந்தன், தமிழ் ஒளி, ஜெயகாந்தன் பங்களிப்பே பிரதானமான இடத்தைப் பிடித்திருக் கின்றது. ஒன்றுக்கொன்று தொடர்ச்சி உள்ள ஓ லுவினா (ரமன்) ஐயோ கமல் (சாது) ஸ்ரீமதி லுவினா அவர்களுக்கு (ஜெயகாந்தன்), காலத்தின் தூதரே (ஆலால சுந்தரம்) என்ற படைப்புகள் கதைகள் என்ற பெயரில் வெளிவந்துள்ளன. அவை கட்டுரைகள். விந்தனின் கசந்த வாழ்க்கைக்கு மேலும் கசப்பூட்டும் திரை உலக மனிதர்களுடனான அவரது அனுபவங்களின் தொடர் ஒன்று நிறைவு பெறாமல் இத்தொகுப்பில் உள்ளது. கசப்புக்கு ஏது முடிவு? கீழ்த்தட்டு, நடுத்தர வர்க்க மனிதர்

களின் வாழ்க்கைப் போராட்டங்களைப் பற்றிய நம்பிக்கை வறட்சி. யதார்த்தத்தின் கோரக்குதறல்களுடன் கூடிய படைப்புகள் *மனிதனை* முழுவதும் ஆக்கிரமித்துள்ளன. விந்தனின் யதார்த்த சித்திர வரைதல் முயற்சிக்கு மனிதன் ஒரு பெரிய வரைதளம்.

புத்தனைக் கொண்டாடிய இதழாகத் தமிழில் அறிமுகமான *மனிதன்* மொத்தம் 10 இதழ்களே வந்தது. ஜனரஞ்சக இலக்கிய உலகின் அங்கீகாரம், சமகால ரசனை இவற்றை அடிப்படையாகக் கொண்டு படைப்புகளைத் தேர்வுசெய்யத் தொகுப்பாளர் திட்டமிட்டுள்ளது தெரிகிறது. இதில் இடம்பெற்றுள்ள கல்கியின் படம், அவரது அங்கீகாரக் கடிதம் ஆகியவை இவற்றுக்குச் சான்று. இந்தியாவில் யார் திட்டம் தான் நிறைவேறியது?

3. கணையாழி (1965)

அரசியல் பத்திரிகையாகத் தில்லியில் உருவாகி, ஆசிரியரின் முயற்சி இன்றியே இலக்கியப் பத்திரிகையாகமாறி, சென்னையில் வந்து தங்கிவிட்ட மாத இதழ் *கணையாழி.* நாற்பதாண்டு கணையாழி இதழ்கள் நான்கு தொகுதிகளாக வந்துள்ளன. வே. சபாநாயகம் (1) இந்திரா பார்த்தசாரதி (1) என்.எஸ். ஜகந்நாதன் (2) ஆகியோரின் பெயரில் அவை உருவாகியுள்ளன. ஆசிரியர் கி. கஸ்தூரி ரங்கன் முதல் தொகுப்புக்கு முன்னுரையும் இரண்டாவது, மூன்றாவது தொகுப்புகளுக்கு நன்றி உரையும் (நான்காவது தொகுப்புக்கு அதுவும் இல்லை) எழுதியுள்ளார். கூடுதலாக என். எஸ். ஜகந்நாதன் மட்டும் தன் இரண்டாவது தொகுப்புக்கு முன்னுரை எழுதியுள்ளார். மற்ற தொகுப்பாளர்கள் எதுவும் எழுதவில்லை.

இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா, தி. ஜானகிராமன், அசோகமித்திரன், மாலன், பாலகுமாரன் ஆகியோரின் பழைய எழுத்துகளை நினைவூட்டும் தொகுப்பாகக் *கணையாழி* விளங்குகிறது. நேற்றைய தமிழ்ப் பரப்பில் தீவிர இலக்கியத்திற்கான இதழ் என்று எப்படியோ *கணையாழி*க்குப் பெயர் ஏற்பட்டுவிட்டது. ஆச்சர்யம் ஊட்டும் அந்த வினோதம் அன்றைய மற்ற பத்திரிகைகள் நிலையைக் கவலையோடு நினைக்கவைக்கிறது.

இதழின் நோக்கம், செயல்பாடு, தொகுப்புமுறை ஆகியவை பற்றியும் சொல்ல வேண்டியதன் தேவை பற்றியும் கவலைப்படாத அலட்சியம் தந்திரமானது. குறிப்பிட்ட குறைந்த வாசகர்களின் ஆதரவை மட்டுமே கொண்ட ஒரு இதழ், பல காலம் தொடர்ந்து வந்ததின் பொருளாதாரப் பின்னணி குறித்து அறிய விரும்பும் வாசகன் அது குறித்த தகவலுக்கு எங்கே போவான்? அவை முன்னுரை ஆசிரியரின் வாய்வழித் தகவல்கள் வழியாக அன்றோ கிடைக்க வேண்டும். அவை முன்னுரையில் தெளிவாக இல்லை. கி. கஸ்தூரிரங்கன் *சுபமங்களா*வுக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் இது கிடைக்கின்றன. *கணையாழி*யை ம.ராசேந்திரன் பொறுப்பில் 'தசரா' விடம் கையளித்த சமயத்தில் அந்நேர்காணல் நிகழ்ந்ததால் அதுவும் இயன்றது. கி. கஸ்தூரிரங்கன், தி. ஜானகிராமன் (கௌரவ ஆசிரியர்), அசோகமித்திரன் (பொறுப்பாசிரியர்), இந்திரா பார்த்தசாரதி (கௌரவ ஆசிரியர்) எனக் *கணையாழி*யின் ஆசிரியத்துவத்தில் ஏகதேசம் ஒரே பார்வை கொண்டவர்களே இருந்திருக்கிறார்கள். இவர்களது வார்ப்பாகவே, படைப்புகளும் கவனப்படுத்தப்பட்டிருக்கும் என்று தீர்மானிப்பது தவறாகாது.

அறிவார்ந்த நடுநிலை என்னும் பெயரில் திராவிட இயக்க எதிர்ப்பு நுண் அரசியலை இலக்கியத்தின் ஊடாகப் புதிய தலைமுறைக்குள் பரப்பியதில் நேற்றைய கணையாழி வகித்த பாத்திரத்தை வேறு எந்த இதழாலும் தட்டிப் பறித்துவிட முடியாது.

4. சிகரம் (1975-82)

ஆசிரியரே தொகுப்பையும் தயாரிக்கும் பேறு பெற்ற சில பத்திரிகைகளில், முற்போக்கு இதழாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட சிகரமும் ஒன்று.

இடதுசாரி முகாமிலிருந்தும் செம்மலர் வந்துகொண்டிருந்த சூழலில் இன்னொரு பத்திரிகை வருவதும் வந்தாலும் விற்பதும் சிரமம். ஆனால், சிகரம் வந்தது. விற்றதா? தனக்குப் பிறகு தோன்றிய தாமரையோடு களத்தில் நிற்க முடியாது *சரஸ்வதி* வீழ்ந்த வரலாறு இதே முற்போக்கு முகாமில் நடந்து முடிந்தது எல்லோரும் அறிந்த ஒன்று. தரமான உள்ளடக்கம், பெருகிய வாசகப்பரப்பு, தீர்க்கமான பார்வை முதலியவற்றைக் காட்டிலும் இயக்கம் அல்லது பின்னணிப் பலம்தான் முக்கியம் என்பது *தாமரை, செம்மலர், கலைமகள்* ஆகியவை தொடர்ந்து வெளி வருவதிலிருந்து நாம் அறிய வரும் செய்தி. சரஸ்வதி தோற்றதும் *சிகரம்* நின்றதும் இவ்வகையிலேயே புரிந்து கொள்ளப்படும். *சிகரம்* நின்றது சொந்த லௌகீக வாழ்க்கையின் திசைத் தேர்வின் விளைவு எனச் *சிகரம்* ஆசிரியர் தொகுப்பின் முன்னுரையில் கூறியிருக்கிறார்.

காலத்தின் ஊடகமான சினிமாவைப் பொருட்படுத்தி இதழுக்குள் கொண்டுவந்ததைச் *சிகரத்*தின் முக்கியச் செயல்பாடாகக் கருதலாம். சூரிய தீபன் -*மன ஓசை;* வைகறை -*பாலம்;* பெநாசிவம் - பதிப்பகம், கித பச்சையப்பன்-*தமிழ்*

இயக்கம் என்ற தொடர்பில்தான் மலர்ச்சி பெற்று வரலாற்றுக்குள் வருகிறார்கள். இவர்களுக்குப் படியாகச் சிகரம் இருந்திருக்கிறது என்று ஆசிரியர் கூறுவது முக்கியமான விஷயம். வெவ்வேறு விதமான நிறம் கொண்ட ஆயிரம் மலர்களைப் பூக்கச் செய்திருக்கிறது *சிகரம்* என்கிற ஒரே செடி.

மாவோவுக்கு இருந்த செல்வாக்கு, பாரதிதாசன், பெரியார் தொடர்பில் இடதுசாரிகளின் மாறுபட்ட நிலைப்பாடு, 'நெருக்கடி கால'ச் சிக்கலில் *சிகரம்* தப்பித்த வரலாறு, பலரும் வெளியிட முடியாத படைப்புகளை வெளியிட்டது, பத்திரிகை விற்பனை எண்ணிக்கை அதிகமானால் இழப்பும் அதிகமாகும் என்ற விசித்திர வணிகச் சித்தாந்தப்படி சிகரம் வீழ்ந்தது இப்படிப் பல விவரங்கள் அடங்கிய முன்னுரை குறிப்பிடத்தக்கது. வழக்குரைஞருக்குரிய திறமை, *சிகரத்தின்* உள்ளடக்கத்தில் மட்டுமல்ல தொகுப்பிலும் தெரிகிறது.

5. கொல்லிப்பாவை (76-88)

தருமு சிவராமுவினால் பெயர் சூட்டப்பெற்ற *கொல்லிப்பாவை* அ. ராஜமார்த்தாண்டன் பொறுப்பில் 12 இதழ்களும், ஆர்.கே. ராஜகோபாலன் பொறுப்பில் காலம் தவறாது எட்டு இதழ்களும் மொத்தம் 20 இதழ்கள் வந்துள்ளன. உள்ளடக்கங் களில் கூடுதலாகக் கடிதம், குறிப்புகள் எனச் சேர்த்துள்ளது தனிச் சிறப்பு. படைப்புகள் நவீனத் தமிழை அடையாளப்படுத்துவதாய் உள்ளன. படைப்புகள், தொகுப்பின் பக்கங்களில் தொடர்ச்சி யாகப் பதிக்கப்பெற்று இருப்பதால், ஒரு படைப்பு முடிந்ததும் முடிந்தது எனும் உணர்ச்சி உடனே வர மறுக்கிறது.

"நிதர்சனத்தின் தீவிரத் தன்மையை ஆழ்ந்த மனோபாவத்தின் மூலம் சந்திக்கிறபோது கிளர்வது ஆனந்தம். ருசிகரம் என்பது சிற்றுணர்வுகளுக்குத் தீனி போடுவது. முதிர்ச்சியற்ற மேலோட்டமான மனோபாவங்களைப் போஷிப்பது. பெரும்பான்மை யினரால், வெகுஜனத்தினால் விரும்பப்படுகிறவை எவை என்று குறிவைத்து அவற்றை வளர்ப்பது' என்ற நோக்கின் அடிப்படையில் 70களில் சிற்றிதழ்களில் வெளிவந்த எழுத்துகளை அலசி, நோண்டி நுங்கு எடுக்கும் பிரமிளின் எழுத்து ஆனந்தமானது. 'வெளிச்சம் பாய்ந்திருந்த அறை' யாகப் பிரமிளின் எழுத்துகள் பரவசப்படுத்துகின்றன. அரசியல் முன்எண்ணம் எதுவுமின்றிப் படித்தால் இன்றும் கிளர்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது. எழுத்தின் உள் ஒளி அரசியலைத் தாண்டி ஊடுருவக் கூடியது. பிரமிளின் எழுத்துக்களும் வெங்கட்சாமி நாதனின் 'இரண்டு தலைமுறைகளுக்கிடையில்' கட்டுரையும் அதன் விளைவான விமர்சனக் கட்டுரைகளும் *கொல்லிப்பாவையின்* அழிக்க முடியாத முத்திரைகள், வெசா.போற்றிய கோவில் கலாசாரத்தை மறுத்து, சுந்தர ராமசாமி எழுதிய எழுத்து *கொல்லிப்பாவையை* இன்னும் குறைந்தது 25 ஆண்டுகளுக்காவது சமூக நினைவில் நிறுத்தும்.

6. யாத்ரா (1978-84)

யாத்ரா இரண்டு தொகுப்புகளாய் வந்துள்ளது. நாடகம், தெருக்கூத்து, பாவைக் கூத்து, மெலட்டூர் பாகவத மேளா, கணியான் ஆட்டம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க கட்டுரைகள் தொகுப்பாகி உள்ளன. தவிர தி. ஜானகிராமன் பற்றிய கட்டுரைகள், தருமு சிவராம் படைப்புகள், ஜேஜே. சில குறிப்புகள், ஜெருசலேம், கண்ணதாசன் பற்றிய விமர்சனங்கள் ஆகியவையும் *யாத்ரா*வின் முக்கியப் படைப்புகள்.

600 பக்கங்களைக் கொண்ட ஒரு சிறுபத்திரிகைத் தொகுப்பில் கூத்துகள் பற்றி மட்டுமே 200 பக்கங்களுக்கு மேல் இடம்பெறுவது என்பதும் அதுவும் கூத்துகள் பற்றிய நேரடிப்பரிச்சயம் இல்லாதவர்களால் அது இயன்றுள்ளது எனும்போது அது மேலும் முக்கியமாகிறது. கூத்துக் கலையை மேற்குலகிற்கு அறிமுகப் படுத்தும் பிரகிருதிகளாக யாத்ராவோடு தொடர்புடையவர்களானதற்கு யாத்ரா ஒரு காரணம்.

7. எழுத்து (1959 -1970)

சிறுபத்திரிகையின் தோற்றத்திற்கு ஆதர்சமான *எழுத்து*க்கு இன்னும் தொகுப்பு வரவில்லை. இந்தக் குறையைச் சிறிதளவு தீர்த்திருக்கிறது வல்லிக்கண்ணன் தொகுப்பில் வந்துள்ள எழுத்து என்ற சிறுநூல். நூலில் *எழுத்து*வின் இரண்டு இதழ்கள் அப்படியே முழுவதும் தரப்பட்டுள்ளன. சின்ன குத்தூசி *எழுத்து*வின் முதல் ஆண்டின் பல இதழ்கள் குறித்து விரிவாக எழுதியிருப்பது *எழுத்து*வின் அடிநாதத்தைப் பத்திரிகையாளர் பார்வையில் புரிந்து கொள்ள உதவுகிறது. இலக்கியம் (அதிலும் விமர்சனம்), புதுக்கவிதை இதுவே எழுத்துவின் இலட்சியம் என்பதை இந்நூலிலிருந்தும் உணர முடியும். *எழுத்து*வின் பங்களிப்பாளர்கள், அதன் தமிழ், அதன் இலக்கிய விளைவு பற்றி விரிவாக எழுத வேண்டிய சமூகத் தேவை உள்ளது. அதற்கு இங்கே இடமில்லை.

நன்றி : காலச்சுவடு

உதவிய நூல்கள்

1.மணிக்கொடி மரபும் சிறுபத்திரிகைகளும் - (கட்டுரை)-தி.க. சிவசங்கரன் - தீபம் - 1953

2 சிறுபத்திரிக்கை அரசியல் - வீ. அரசு - கங்குவெளியீடு - 2006.

இன்னும் பல......

■

தமிழறிஞர்களின் நூல் தொகுப்புகள்

இரா. சீனிவாசன்



தமிழறிஞர்கள் ஆய்வுகளைக் கட்டுரைகளாக எழுதினர். கட்டுரைகள் பல தொகுக்கப்பட்டுப் புத்தகங்களாக வெளிவந்தன. சில ஆய்வுகள் நேரடியாகவே புத்தக வடிவம் பெற்றிருந்தன. அவர்கள் மறைந்த பின்னர் அவர்கள் எழுதிய சில கட்டுரைகள் தொகுக்கப்பட்டுப் புத்தகங்களாக வெளிவந்தன. இந்த விதமாகவே தமிழறிஞர்களின் எழுத்துகள் வெளிவந்துகொண்டிருந்தன. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலும் தமிழில் புதிய போக்காக ஒரு அறிஞரின் எல்லா ஆக்கங்களையும் ஒருசேரத் தொகுத்து வெளியிடும் போக்கு காணப்படுகின்றது.

இவ்வாறான தொகுப்புகள் வெளிவருவது இலக்கிய உலகின் இக்காலத்திய போக்கு என்று கூறலாம். தமிழறிஞர்களின் நூல்கள் மட்டுமே தொகுப்புகளாக வருகின்றன என்று கூறமுடியாது. புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மௌனி, ஆத்மாநாம், கநா. சுப்ரமணியம், சுந்தரராமசாமி, ஜி. நாகராஜன், கிருஷ்ணன் நம்பி, நகுலன், தருமுசிவராமு முதலியவர்களின் படைப்புகளும் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. தற்போதும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் பிரபஞ்சன், ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், கோணங்கி முதலியவர்களின் படைப்புகளும் தொகுக்கப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கின்றன. சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள், பெரியாரின் எழுத்துகள் உட்பட ஒரு ஆசிரியரின் எல்லா ஆக்கங்களையும் தொகுத்து வெளியிடுதல், இக்காலப் புத்தக வெளியீட்டு முறைகளில் ஒன்றாக இருக்கின்றது. எனவே இதை இலக்கிய உலகில் இக்காலத்தில் நிலவும் போக்கு என்றே கூறவேண்டியிருக்கின்றது.

தொகுப்புகள் வெளிவருவதற்கான சூழல்கள்

1 தமிழறிஞர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடும்போது அவர்களின் நூல்கள், கட்டுரைகள் முதலியன தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. பாரதியார் நூற்றாண்டு விழா 1982ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பாரதியார் படைப்புகள் பற்றிய புதுவிதமான பார்வைகள் வெளிவந்தன. தொடர்ந்து பாரதிதாசன், திருவிக., ச. சோமசுந்தர பாரதியார், நாவலர் நமு. வேங்கடசாமி நாட்டார், சதாசிவப் பண்டாரத்தார், மனோன்மணீயம் சுந்தரனார், மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை, தெபொ. மீனாட்சிசுந்தரனார் முதலியவர்களுக்குத் தமிழக அரசு நூற்றாண்டு விழாக்களை எடுத்தது. இந்த வரிசையில் பின்னர் மா. இராசமாணிக்கனார் முதலியவர்களுக்கும் நூற்றாண்டு விழாக்கள் எடுக்கப்பட்டன. இவர்களது நூற்றாண்டு விழாக்களையொட்டி இவர்களுடைய நூல்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

2 தமிழறிஞர்களின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் விளைவாக அவர்களுடைய நூல்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. மபொ.சி, பாரதிதாசன், அண்ணா, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,

தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், திருவிக, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ப. ஜீவானந்தம், நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை, வஉசி, வரா., நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலியவர்களுடைய நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையாளர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்பட்டது. இதனால் இவர்களுடைய புத்தகங்களை யார் வேண்டுமானாலும் வெளியிடலாம் என்ற நிலை ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு பல பதிப்பகங்கள் இவர்களுடைய நூல்களை வெளியிட்டுவருகின்றன.

3 ஆர்வலர்களால் சில ஆசிரியர்களுடைய ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. மா. இராசமாணிக்கனார் புத்தகங்கள் அவருடைய பிள்ளைகளால் தொகுக்கப்பட்டு வெளியிடப் படுகின்றன. பேரா. வீ. அரசு அவர்களால் ப. ஜீவானந்தம், வஉசி., சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோருடைய ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

4 தமிழ்மண், காவ்யா, காலச்சுவடு, அடையாளம் முதலிய பதிப்பகங்கள் சில ஆசிரியர்களுடைய எல்லா ஆக்கங்களையும் தொகுத்து வெளியிடும் முயற்சியை மேற்கொண்டுவருகின்றன. தமிழ்மண் பதிப்பகம் நாவலர் நமு. வேங்கடசாமி நாட்டார், தேவநேயப்பாவாணர், வெ. சாமிநாதசர்மா, சாத்தான்குளம் ராகவன் முதலியவர்களுடைய புத்தகங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. காவ்யா பதிப்பகம் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் முதலிய சிலருடைய புத்தகங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது.

5 பொதுவாக 1995ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்பட்ட கணினி தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அச்சாக்கம் எளிதானது. அதிக உழைப்பின்றி நிறைய பக்கங்களை விரைவாக கணினியின் மூலம் உள்ளிட முடிகின்றது. கணினி வழியாகவே அச்சுப்பிழை திருத்துதல், மீண்டும் மீண்டும் அச்சுப் பிரதி எடுத்துப் பிழைகளைத் திருத்துதல் முதலிய வேலைகள் எளிமையாக அமைவது அதிக அளவில் புத்தகங்கள் வெளியிடுவதற்கு வாய்ப்பாக அமைகின்றன. மேலும் கணினியின் மூலம் புத்தகத்தின் பக்கங்களை அழகாக வடிவமைக்க முடிகின்றது. இந்த வகையில் ஆங்கிலப் புத்தகங்களுக்கு இணையாகத் தமிழ்ப் புத்தகங்களும் அழகாக வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. கணினிப் பயன்பாட்டில் குறைவான இடத்தேவை, குறைந்த மனித உழைப்பு, வேகம் ஆகிய அம்சங்கள் சாதகமாக அமைகின்றன. மேலும் வேகமாக அச்சிடும் ஆப்செட் அச்சகங்கள் குறைந்த நேரத்தில் அதிக எண்ணிக்கையில் புத்தகங்களை அச்சிட்டு முடிக்கின்றன. இதே முறையில் பல வண்ண அச்சாக்கமும் அதிக எண்ணிக்கையில் புத்தகங்கள் வெளிவர உதவியாக அமைகின்றது. புத்தகத் தயாரிப்பின் மற்ற நிலைகளிலும் எளிமை, விரைவு, துல்லியம், தரம் இவை எல்லாம் அதிக எணிணிக்கையில் புத்தகங்கள் வெளிவருவதற்குக் காரணமாக அமைகின்றன.

6 புத்தகத் தயாரிப்பின் மற்றொரு பக்கமான புத்தக விற்பனை அதிகரித்து வருவதும் இத்தகைய தொகுப்புகள் அதிக எண்ணிக்கையில் வெளிவரக் காரணமாக அமைகின்றன. ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் புத்தகங்களின் விற்பனை அதிகரித்துவருவதாகத் 'தென்னிந்திய புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம்' கூறும் தகவல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. மேலும் புத்தக விற்பனை நன்றாக இருப்பதால் சில ஆண்டுகளாக மதுரை, ஈரோடு, நெய்வேலி முதலிய ஊர்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

1989ஆம் ஆண்டில் வையாபுரிப்பிள்ளை நூற்றாண்டு விழாவின்போது 'வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்' அமைத்து அவரது எல்லாப் படைப்புகளையும் தொகுத்து ஏழு தொகுதிகளாக வெளியிடும் திட்டம் உருவானது. வையாபுரிப் பிள்ளையின் மகள் சரோஜினி, மருமகன் திரு. ராமசாமி ஆகிய இருவரது ஈடுபாடு காரணமாக இந்தத் திட்டம் உருவானது. இந்தக் குழுவில் பேரா. மு. சண்முகம்பிள்ளை, பேரா. இ. சுந்தரமூர்த்தி, பேரா. வீ. அரசு முதலானோர் இருந்தனர். வையாபுரிப்பிள்ளையின் எல்லா ஆக்கங்களையும் தொகுத்து வெளியிடவேண்டும் என்பது திட்டம். முதலில் நூல் உருப்பெற்றிருந்த ஆக்கங்கள் தொகுக்கப்பட்டன. பின்னர் இருந்த கட்டுரைகள் எல்லாம் தொகுக்கப்பட்டன. இவ்வாறு ஏழு தொகுதிகள் உருவாயின. இந்தத் தொகுதிகளுக்கு விரிவான முன்னுரை எழுதப்பட்டது. புத்தகத்தின் இறுதியில் பொருளடைவு சேர்க்கப்பட்டது. இறுதித் தொகுதியில் வையாபுரிப்பிள்ளையின் ஆக்கங்கள் கால வரிசையில் ஆண்டுவாரியாகத் தரப்பட்டுள்ளன. பொருள் அடிப்படையிலும் இந்தப் பட்டியல் தரப்பட்டுள்ளது. இவையெல்லாம் வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுப்போக்கை அறியவும் அவர் ஆய்வில் ஈடுபட்டிருந்த துறைகளை அறியவும் பேருதவி புரிந்தன.

பொதுவாகத் தமிழ் நூல்களில் பொருளடைவு தரப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட பொருள் எந்தெந்தப் பக்கங்களில் இடம்பெற்றுள்ளது என்ற

தகவல் நூலைப் பயன்படுத்துவோருக்கு உதவுவதாக அமையும். மேலும் புத்தகத்தை எளிதாகப் பயன்படுத்தவும் இது வழிகாட்டியாக அமையும். இதை உணர்ந்து வையாபுரிப்பிள்ளையின் தொகுப்பு நூல்களில் விரிவான பொருளடைவு தரப்பட்டுள்ளது. இத்துடன் ஆசிரியர் பெயர் அடைவும் நூற்பெயர் அடைவும் தரப்பட்டுள்ளன. அறிவியற்பூர்வமான பதிப்புமுறை இந்தத் தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ளது.

பொதுவாகத் தொகுப்பு நூல்களுக்கும் குறிப்பாக வையாபுரிப்பிள்ளையின் நூல் தொகுப்புக்கும் பயன் என்ன என்ற கேள்வி எழும். அதாவது இத்தகைய நூல் தொகுப்புகளுக்கான தேவை என்ன என்பதே கேள்வியாக எழுகின்றது. இதற்கு அளிக்கும் விடை தொகுப்பு முயற்சிகளை நியாயப்படுத்துவதாக அமைய வேண்டும்.

வையாபுரிப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய இலக்கிய வரலாற்று நூல் மறுமுறை அச்சிடப்பட்ட போது அந்தப் புத்தகத்திற்கு பேரா. கா. சிவத்தம்பி எழுதிய அணிந்துரையில் இதைப்பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். வையாபுரிப்பிள்ளையின் மறைவுக்குப் பின்னர் அவரது நூல்கள் எதுவும் வெளிவரவில்லை. வையாபுரிப்பிள்ளையின் நூல்கள் கிடைக்காமையால் அவரது ஆய்வுகள் பற்றிய தவறான கருத்துகள் பரவியிருந்தன. நூல்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு வெளிவந்த பின்னர் வையாபுரிப்பிள்ளை குறித்த பார்வையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், வையாபுரிப்பிள்ளை எந்த அளவுக்கு ஆழமாகவும் பரந்துபட்ட தளத்திலும் ஆராய்ச்சி செய்தார் என்றும் அறிய முடிகின்றது என்று எழுதியிருந்தார். பேரா. கா. சிவத்தம்பி அவர்களின் கூற்று உண்மை என்பது பின்னர் உறுதிப்பட்டது.

வையாபுரிப்பிள்ளையின் கால ஆராய்ச்சி தொடர்பாகப் பலரும் குறைப்பட்ட மனத்துடன் இருந்தனர். வையாபுரிப்பிள்ளையின் நூல் தொகுப்புகள் வெளிவந்த பின்னர் அந்த எண்ணங்கள் மாறின. அவரது அறிவியல் பூர்வமான ஆய்வுமுறை அறிஞர்களால் பாராட்டப் பெற்றது. ஆய்வில் முடிவுகள் மாறலாம்; பின்னர் கிடைக்கும் சான்றுகளாலும் ஆய்வு நோக்கில் ஏற்படும் மாற்றங்களாலும் முடிவுகள் மாறலாம்; அதனால் ஒருவர் கூறிவிட்டதாலேயே அந்தக் கால நிருணயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய தில்லை முதலிய கருத்துகள் தோன்றின. மேலும் தமிழ் மொழியின்மீதும் இலக்கியங்களின் மீதும் வையாபுரிப்பிள்ளை கொண்டிருந்த பற்றும் அவரது எழுத்துகளின் வழியே வெளிப்பட்டது. வையாபுரிப்பிள்ளையின் தொகுப்பு நூல் வெளியீட்டிற்குப் பின்னர் அவரைப் பற்றிய கண்ணோட்டம் மாறுபட்டதைத் தமிழறிஞர்களின் கூற்றுகள் மூலமாகவே அறியமுடிந்தது. வையாபுரிப்பிள்ளை நூற்றாண்டு விழாவில் தமிழண்ணல் முதலிய தமிழறிஞர்கள் அவரைப்பற்றி புதிய கண்ணோட்டத்தில் கருத்துகளை முன்வைத்தனர்.

வையாபுரிப்பிள்ளை நூல் தொகுப்பின் வெற்றிக்குப் பின்னர் மற்ற தமிழறிஞர்களின் நூல்கள் தொகுக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து உணரப்பட்டது.

தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், மயிலை சீனி. வேங்கடசாமி, சாமி. சிதம்பரனார், சாத்தான்குளம் ராகவன், தேவநேயப்பாவாணர் முதலானோர் நூல்கள் இவ்வாறு தொகுக்கப்பட்டு வெளிவந்தன.



இரா. சீனிவாசன்: தற்போது சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ் இணைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவருடைய எம்.பில். பட்டத்திற்காக ரகுநாதன் நடத்திய சாந்தி இதழ்ச் சிறுகதைகள் ஆய்வு செய்யப்பட்டன. 'தமிழ் இலக்கண மரபுகள் 800–1400' என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இந்த ஆய்வேடு புத்தகமாகவும் வெளிவந்துள்ளது. 'ஐந்திலக்கணம்' என்ற பெயரில் ஐந்து இலக்கண நூல்களின் மூலங்கள் சந்தி பிரிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. நல்லாப்பிள்ளை இயற்றிய பாரத நூல் பாரதக் கதையைத் தமிழில் முழுமையாகக் கூறும் நூலாகும். இதில் பதினெட்டுப்பருவங்களும் 131 சருக்கங்களும் 13949 செய்யுள்களும் உள்ளன. இந்த நூல் முழுமையாகச் சந்தி பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. எட்டு ஆண்டுக்கால முயற்சியில் 2248 பக்கங்களில் இரண்டு பாகங்களாக இவரின் சொந்த வெளியீடாக இந்த நூல் வெளிவந்துள்ளது. இரண்டு ஆண்டுகளாகப் 'புதிய பனுவல்' என்ற ஆங்கிலம்–தமிழ் இருமொழித் தமிழியல் காலாண்டு ஆராய்ச்சி இதழை நடத்திவருகின்றார்.

வேங்கடசாமியின் நூல்களும் கட்டுரைகளும் மக்கள் வெளியீடு, வசந்தா பதிப்பகம் ஆகிய இரண்டு நிறுவனங்களால் வெளியிடப்பட்டன.

நூல் தொகுப்புகள் வெளிவருவதன் நன்மைகள்:

1. ஒரு ஆசிரியருடைய எல்லா ஆக்கங்களையும் ஒருசேரப் படித்தறியும் வாய்ப்பு இதன்மூலம் ஏற்படுகின்றது.

> பொதுவாகத் தமிழ் நூல்களில் பொருளடைவு தரப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட பொருள் எந்தெந்தப் பக்கங்களில் இடம்பெற்றுள்ளது என்ற தகவல் நூலைப் பயன்படுத்துவோருக்கு உதவுவதாக அமையும். மேலும் புத்தகத்தை எளிதாகப் பயன்படுத்தவும் இது வழிகாட்டியாக அமையும். இதை உணர்ந்து வையாபுரிப்பிள்ளையின் தொகுப்பு நூல்களில் விரிவான பொருளடைவு தரப்பட்டுள்ளது. இத்துடன் ஆசிரியர் பெயர் அடைவும் நூற்பெயர் அடைவும் தரப்பட்டுள்ளன. அறிவியற் பூர்வமான பதிப்புமுறை இந்தத் தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ளது.

2. ஒரு ஆசிரியர் எழுதிய எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் படிக்கும் வாய்ப்புக் கிடைப்பதால் அவரது ஆய்வுப் போக்குக் குறித்து மதிப்பீடு செய்ய முடிகின்றது.

3. ஒரு ஆசிரியர் எதைப்பற்றி எழுதினார், எதைப்பற்றி எழுதவில்லை என்பதை எளிதில் அறிய முடிகின்றது.

4. ஆசிரியர்கள் பற்றிய கருத்தாக்கங்கள் காலப்போக்கில் மாறுதல் அடைகின்றன. ஒருவர் வாழ்ந்த காலத்திற்கும் அவர் மறைந்த பின்னர் அவரது நூல்கள் தொகுக்கப்பட்டு வெளிவரும் காலத்திற்கும் பெரிய இடைவெளி உள்ளது. இந்தக் கால இடைவெளியில் இலக்கிய ஆய்வில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. புதிய ஆய்வுத்துறைகள் உருவாகின்றன. ஒரு பொருள் குறித்த கண்ணோட்டங்கள் மாறுபடுகின்றன. புதிய ஆய்வுத் தரவுகள் கிடைக்கின்றன. கிடைக்கும் தரவுகள் புதிய நோக்கில் மதிப்பீடு செய்யப்படு கின்றன. இவற்றின் காரணமாக ஒரு ஆசிரியரின் ஆய்வுகளைக் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின்னர் மறு மதிப்பீடு செய்யும் வாய்ப்பு உருவாகின்றது.

இவை எல்லாம் நூல் தொகுப்புகளின் பயன்களாக அமைகின்றன.

இவ்வாறு தொகுக்கப்படும் தொகுதிகள் அறிவியற்பூர்வமான ஆய்வுப் பதிப்புகளாக அமைய வேண்டும். ஆசிரியரின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு, அவரது ஆக்கங்கள், பங்களிப்பு குறித்த விவரங்களுடன் இத்தகைய தொகுதிகள் அமையவேண்டும். மேலும், பொருளடைவு, கட்டுரைகளின் காலவரிசை, அடைவு, பொருள் வரிசை, அகரவரிசை அடைவு முதலியனவும் இடம்பெறல் வேண்டும். இப்படி இருந்தால் ஆய்வாளர்களுக்கு அந்தப் புத்தகங்கள் மிகவும் பயனுள்ளவையாக அமையும். இத்தகைய தொகுப்பு நூல்கள் வெளியிட வையாபுரிப்பிள்ளை நூல் தொகுப்புகளை வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

இதுவரை வெளிவந்த ஆசிரியர்களின் தொகுப்புகள் போக வே. வேங்கடராஜுலு ரெட்டியார், ஔவை துரைசாமிப்பிள்ளை, ரா. ராகவையங்கார், கே.என். சிவராஜபிள்ளை, வ. சுப. மாணிக்கம், முதலிய தமிழறிஞர்களின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப் படவேண்டும். அப்போதுதான் இதுவரை நடந்த ஆய்வுகள் என்ன? மேற்கொண்டு செய்யவேண்டிய ஆய்வுகள் என்ன? என்று ஆய்வாளர்கள் உணர வழியேற்படும்.

■

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக்கோவைகள்

மு. வளர்மதி

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்து
இருபத்துமுன்றாம் கருத்தரங்க

ஆய்வுக்கோவை

தொகுதி ஒன்று
1992

பதிப்பாசிரியர்

டாக்டர் தா ஏ ஞானமூர்த்தி
டாக்டர் பா பாலசுப்பிரமணியம்
டாக்டர் க ப அறவாணன்
டாக்டர் சிலம்பு நா செல்வராசு

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்

தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி 605 014

தமிழின் சிறப்பைப் பல்வேறு நிலைகளில் ஆய்வுசெய்து ஆண்டுதோறும், கருத்துகளைப் பலரும் அறியும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தி ஆய்வுக்கோவை எனும் கட்டுரைத் தொகுதிகளை 1969ஆம் ஆண்டு முதல் வெளியிட்டுவருகிற பணியை இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் செய்து வருகின்றது.

பல்வேறு இந்தியப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த தமிழறிஞர்கள் 09.01.1968 ஆம் நாளன்று ஒன்றுகூடி இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஏற்படுத்துவதென முடிவு செய்தனர். அந்த முடிவின்படி இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் முதன் முதலாகக் கோவையில் அமைக்கப்பெற்று 1860ஆம் ஆண்டு மன்றங்களின் பதிவுச் சட்டம் 21ன் படி 21.05.1969ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டது.

செயற்குழு

இம்மன்றத்தின் செயல்பாடுகளைக் கவனித்துக் கொள்ள செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவால் இம்மன்றம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பன்மொழிப்புலவர் டாக்டர் தெபொ. மீனாட்சி சுந்தரனார் இதன் தலைவராகப் பொறுப்பேற்றார். டாக்டர் வ.சுப. மாணிக்கம், டாக்டர்.மெ. சுந்தரம், டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் ஆகியோர் இம்மன்றத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றனர். டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி, டாக்டர் ச. அகத்தியலிங்கம் செயலாளராகவும் டாக்டர் மா. இளையபெருமாள் இணைச் செயலாளராகவும் திரு. சுப. திண்ணப்பன் பொருளாளராகவும் பொறுப்பேற்று இம்மன்றத்தினை நடத்தி வந்தனர்.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் நோக்கம்

ஆண்டு தோறும் இந்திய நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழாய்வினையொட்டி குறைந்தது ஒரு கருத்தரங்கேனும் நடத்துதல், இக்கருத்தரங்குகளின் வாயிலாகத் தமிழ் ஆராய்ச்சியிலும் வளர்ச்சியிலும் ஆர்வங் கொண்ட இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் ஏனைய நிறுவனங்களிலும் பணிபுரியும் தமிழாசிரியர்களை ஒன்றுபடுத்தி தமிழாராய்ச்சியினை வளர்த்தல், தமிழறிஞர்கள் தங்களின் அயராத உழைப்பின் மூலம் கண்டறிந்த புது ஆய்வுச் சிந்தனைகளை, உண்மைகளைப் பலரும் அறியும் வகையில் பரப்புதல், தமிழுடன் தொடர்புடைய ஏனைய திராவிட மொழிகளுடன் பிற உலக மொழிகளுடன் ஒப்பிட்டு தமிழின் இலக்கிய,

இலக்கணக் கருத்துகளைத் தமிழறிஞர்களும் பிறரும் அறியுமாறு செய்தல்,

அத்துடன் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பையும் அதன் செழுமையையும் பிற மொழியாளர்கள் ஜெர்மன் மொழிகளைப் போன்று அனைத்துலக மொழியாக ஆக்கம் செய்ய ஆவண செய்தல், தமிழை அனைத்துத் துறைகளிலும் பயன்படும் மொழியாக ஆங்கிலம் பிரெஞ்சு, துறைவாரியாக நூல் வடிவில் அச்சிட்டுப் பலரும் பயன்படுமாறு செய்தல் ஆகியன இந்தியப் பல்கலைக் கழக மன்றத்தின் நோக்கமும் செயல்பாடுகளாகும்.

கருத்தரங்குகள்

இம்மன்றம் மூன்று நாட்கள் கருத்தரங்குகள் நடத்துவதை வழமையாகக் கொண்டுள்ளது. தொடக்க விழாவில் ஆளுநர்கள், அமைச்சர்கள், அறிஞர்கள், துணைவேந்தர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர். இறுதியில் வாழ்த்தியல் விழா நடைபெறும். ஏனைய நாட்களில் கருத்தரங்குகளில் பங்குபெற உள்ள பேராளர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கட்டுரைகளை வழங்க வேண்டும் என்பது இம்மன்றத்தின் முறைமையாகும்.

தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல் திறனாய்வு, வரலாறு, அறிவியல், மெய்ப்பொருளியல், இசைத் தமிழ், நாடகத் தமிழ், தொல்பொருளியல், நாட்டுப்புறவியல், சங்க இலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம், சமய இலக்கியம், என்ற பல்வேறு தலைப்புகளில் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து, இத்துறைகளில் சிறந்து விளங்கும் ஒவ்வொரு அறிஞர் தலைமையில் தத்தம் கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படித்து வழங்குவார்கள். அக்கட்டுரை படித்து முடித்தபின் அங்கு கூடியுள்ள மற்றவர்கள் கட்டுரையாளரிடம் வினாத் தொடுப்பார்கள். அதற்கு அவர்கள் விடை கூறுவதாகக் கலந்துரையாடல் அமையும்.

இக்கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள செய்திகளை அறிவதுடன் கட்டுரையாளரிடமிருந்து மேலும் விளக்கம் பெறவும், பிழைகளைச் சுட்டிக்காட்டவும், கருத்திற்கு மறுப்புரை கூறவும் வாய்ப்பாக இக்கலந்துரையாடல் நிகழ்ச்சி அமைகின்றது. ஆய்வினை மேலும் மேலும் கூர்மைப்படுத்தவும் நுணுகிக் காணவும் இது வழி வகுப்பதாக அமைகின்றனது.

"இம்மன்றத்தின் முதலாவது கருத்தரங்கு மதுரைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் மதுரை தியாகராசர் கல்லூரியில் 1969ஆம் ஆண்டு மே, திங்கள் 30,31 சூன் திங்கள் 1 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த பன்மொழிப்புலவர் பல்கலைச்செல்வர் டாக்டர் தெபொ. மீனாட்சி சுந்தரனார் தலைமையில் தமிழக அரசின் சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். இக்கருத்தரங்கில் ஏறத்தாழ 150 தமிழாசிரியர்கள் கலந்து கொண்டு 50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரையைப் படித்து ஆராய்ந்தனர்.' [1]

கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகளின் கருத்துகளைச் சுருக்கமாக அறியும் வண்ணம் வாழ்த்தியல் விழாவில் குழுத் தலைவர்கள் தத்தம் குழுக்களில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறுவதுடன் குறை நிறைகளையும் சுட்டிக் காட்டுவர். இதன் மூலம் அனைத்துக் குழுக்களின் நடவடிக்கைகளையும் பேராளர்கள் சுருக்கமாக அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.

1969 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை 40 கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளின் சார்பில் இக்கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. முதல் (1969) மற்றும் இரண்டாவது (1970) கருத்தரங்குகளின் கட்டுரைகள் தட்டச்சு வடிவத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் இதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அரிதின் முயன்று 1969 ஆண்டில் வெளிவந்த கட்டுரைகளை இரண்டு தொகுதிகளாகவும் 1970ஆம் ஆண்டில் வெளிவந்த கட்டுரைகளை மூன்று தொகுதிகளாகவும் 1970 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 28 ஆங்கிலக்கட்டுரைகளைத் தொகுத்து 2000ஆம் ஆண்டில் ஒரு தொகுதியாகவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. மூன்றாவது கருத்தரங்கிலிருந்து கட்டுரைகள் அனைத்தும் அந்தந்த ஆண்டிலேயே ஆய்வுக்கோவைகளாக வெளியிடப்பட்டு வருகின்றன. இக்கட்டுரைகள் பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் ஆய்வில் உழைப்பில் கிடைக்கப்பெற்றவையாகும். இவை தொடர்ந்து ஆய்வில் ஈடுபடும் இளந்தலைமுறையினர் அறிந்து கொள்ளவும், பங்கேற்கவும் ஒரு அரிய வாய்ப்பாக பயனுள்ளதாக அமைகின்றது என்பதை பயனாளிகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. முதல் இரண்டு ஆண்டுகளில் பக்க வரையறை பின்பற்றப்படவில்லை. பின்னர் ஒரு கட்டுரை என்பது 5 பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்பது ஒரு முக்கியமான வரையறையாக அமைந்தது.

சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரை ஆய்வு செய்து உலகோருக்கு எடுத்துக்கூறும் வகையில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் செயல்பட்டு வருகிறது. முதல்

பத்து ஆண்டுகளில் ஆய்வுக் கோவையில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து வகைப்படுத்தி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் இணைப்பேராசிரியரான முனைவர் சு. சத்திவேல் வெளியிட்டுள்ளார். இரண்டாவதாக திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியரான முனைவர் தானியேல் தேவசங்கீதம் 1969 முதல் 1986 வரையில் உள்ள ஆய்வுக் கோவையில் கட்டுரைகளைத் தொகுத்து வகைப்படுத்தி வெளியிட்டுள்ளார். ஜெ. மணிகண்டன் 'ஆய்வுக் கோவை பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகள் அடைவு' எனும் தலைப்பில் முதுகலைப்பட்ட ஆய்வேடாக வழங்கியுள்ளார். இதில் 594 பழந்தமிழ்க் கட்டுரைகளை வகைப்படுத்தி வழங்கியுள்ளார். 1969 ஆம் ஆண்டு முதல் 2005 வரையிலும் நடைபெற்ற கருத்தரங்குகள் 36 ஆகும். இந்தக் கருத்தரங்குகளில் படிக்கப்பெற்ற மொத்தக் கட்டுரைகள் 8903.[2]

1969, 1970 ஆம் ஆண்டுகளில் வெளியிடப் பட்டுள்ள கட்டுரைகளின் தனித்தன்மைகளை இன்றைய கட்டுரைகளின் தனித்தன்மையுடன் ஒப்பிடும்போது இன்று மெலிந்து தேய்ந்திருக்கும் சங்க இலக்கிய ஆய்வு அன்று தலைமை இடத்தில் இருந்துள்ளது. அது போல் இன்று பேராதிக்கம் செலுத்தும் புதினம், சிறுகதை, நாட்டுப்புறவியல் ஆய்வுகள் அன்று மிக அருகியே காணப்படுகின்றன. நீதி இலக்கியம் என்ற வகையில் திருக்குறள் மட்டுமே ஆராயப்பட்டுள்ளன. இலக்கணம், மொழியியல் வகைப்பாடு அன்று முதல் இன்று வரை ஒரே சீராக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது என முனைவர் க.ப. அறவாணன் குறிப் பிட்டுக் காட்டியுள்ளார்.*

கடந்த 40 ஆண்டுகளில் முதலில் ஓரிரு தொகுதி களாக வெளிவந்து கொண்டிருந்த ஆய்வுக் கோவை 2000ஆம் ஆண்டிலிருந்து 3,4 அல்லது 5 தொகுதி களாக வெளிவரும் நிலையை அடைந்துள்ளது.

1969 ஆம் ஆண்டு கருத்தரங்கின் ஆய்வுக்கோவை முதல் தொகுதியில்


1. குறுந்தொகையின் காலம்
2. சங்க இலக்கியங்களில் மானுட உரிமைக் கோட்பாடுகள்
3. சங்க நூல்களில் இயரீற்றுச் சொற்கள்
4. சங்க அகத்துறைப் பாடல்களில் பாத்திரப் பண்போவியம்.

ஆகிய 4 கட்டுரைகளும், இரண்டாம் தொகுதியில் சங்க இலக்கியம் - வாழ்வின் நிழல், Psychological Types in Ettuthokai ஆகிய இரண்டு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் தமிழியல் ஆய்வு எவ்வாறு இருந்தது, எந்தெந்தத் தலைப்புகளில் கட்டுரைகள் வழங்கப்பட்டுள்ளன, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, மிகுதியாக இடம் பெற்றுள்ள தமிழியல் பிரிவு எது என்பதைக் கண்டறிவதுடன் முந்தைய ஆய்வுகளின் தன்மைகளை அறிய ஓர் வாய்ப்பாக உள்ளது. அத்துடன் அன்றைய தமிழியலில் அடங்கியிருந்த பிரிவுகளைக் காட்டிலும் இன்றைய ஆய்வுத்தளங்கள், பகுப்பு முனைகள், ஆய்வுக் கண்ணோட்டங்கள், விரிவடைந்துள்ளன. இந்த ஆய்வுகளுக்குள் ஒவ்வொரு காலக்கட்டத்தின், இலக்கியத்தின், சமூகத்தின் இருப்பியலை அறிந்துகொள்ளவும் தொன்மக் கட்டுடைப்பின் தேவையையும், புதிய ஆக்கங்கள் உருவாக்கத்தையும் உணரவும் முடியும்.

(எ.டு) தமிழச்சியின் எஞ்சோட்டுப் பெண் கவிதைத் தொகுதி-தொன்மக் கட்டுடைப்பு (ஜெ. நிஷாந்தினி, ஆய்வுக்கோவை-2007, ப.2345, தொகுதி 5, இ.ப.த.மன்றம், மதுரை).

படைப்பாளிக்கும் சமுதாயத்திற்குமான உறவுநிலை என்பது நெருக்கமுடையது. அடிமைத் தனத்தைப் போற்றிப் பாதுகாக்கும் மரபு எனப் போற்றப்படும் அனைத்தின் மீது போர்தொடுக்கும் குணமும், பண்பும் பெண்களுக்கு வேண்டும் என்பதை இன்றைய பெண் படைப்பாளிகள் தங்களது படைப்பாளிகளின் வழியாகப் பதிவு செய்து வருகின்றனர். தமிழச்சியின் 'எஞ்சோட்டுப் பெண்' கவிதைத் தொகுதியைப் பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரையில் 'பெண்ணின்' மீதான தாக்கு தலையும் ஒடுக்குதலையும் தன் மீது செலுத்தப் படுகின்ற எதிர் வினைகளை எல்லாம் சகுந்தலையின் மூலம் வென்றெடுக்கும் தன்மையைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.



மு.வளர்மதி: பெரியார் சிந்தனையாளரான இவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராக உள்ளார். பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களையும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி உள்ளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இதழான 'தமிழியல்' இதழில் இவர் எழுதி உள்ள கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. சமீபத்தில் வெளியான இவருடைய நூல்கள்: 'சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்' (இரண்டு பாகம்), 'மூவலூர் இராமாமிர்த அம்மையார்'.

'முத்திரை மோதிரமும், குலக்குறியும் முன்மொழி கின்ற புது அடையாளங்களுக்குள் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கல்ல என் பிறப்பு என்று கூறுகின்றாள். குழந்தையை வயிற்றுக்குள் வளரவிட்டு, பெற்றெடுத்து வளர்த்து, ஆளாக்கித் தருவதுதான் தனக்கான சுயவாழ்வு என்பது போன்ற ஆணாதிக்க மனோபாவங்களை சகுந்தலையின் மூலம் கட்டுடைக்கின்றார்' ஆசிரியர். மேலும்

'அழைத்துச் செல்லலாம்
உன் வாரிசினை
அகிலத்திற்கே அன்னையாய்
ஆனந்த்திருப்பதே
என் விருப்பம்'

என்று கூறுவதிலிந்து, பெண்களை ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்கு முடக்குவதிலிருந்து விடுபடச் செய்கின்றார் ஆசிரியர். தன்னுடைய மகனையும் துறக்கின்ற நிலையைக் காண முடிகின்றது. இங்கு பெண்மை தன்னை ஏற்றுக்கொள் என்று கெஞ்சவில்லை. கதறவில்லை. பெண்மை ஆண்மைக்கு அடிபணியவில்லை. தன்னைத் தன் சுயரூபத்துடன் உணர்ச்சியை ஒளிவு மறைவின்றி நியாயமான முறையில் வெளிப்படுத்து கிறது. போலி அடக்கம் இல்லை. தேவையற்ற பணிவு இல்லை. அவள் தன்னைக் காட்டுகிறாள். சகுந்தலைக்குத் துஷ்யந்தனிடம் காதல் உண்டு. அன்பு உண்டு. மரியாதை உண்டு. தோழமையுண்டு. ஆனால் அடிபணிய, அடித்தால் காலில் விழ, அவன் சொல்வதை அப்படியே ஏற்கும் அடிமைத்தன வாழ்வு போன்று வேண்டாத போலித்தனம் இல்லை என்பதை அறியமுடிகிறது'. இன்றைய இலக்கியம் குறித்த இத்தகைய கட்டுரைகள் இளம் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இன்றைய காலகட்டத்தில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு நிகழ்த்தும் மாணவர்களின் எண்ணிக்கைப் பெருகியுள்ளது. "தமிழை அருளியர் மொழியாக மட்டும் அன்றி, அரசியல் மொழியாக மட்டும் அன்றிப் பொருளியல் மொழியாக வளர்க்க வேண்டிய கட்டுப்பாடு நமக்குள்ளது. மெய்யாகவே இன்று தமிழ் உலக மொழியாகி வருகிறது. ஆனால் அதற்குரிய குணங்கள் தமிழுக்கு இருந்தாலும், வளங்கள் பெருகியாக வேண்டும்"[3] என்ற நோக்குடன் செயல்பட வேண்டியுள்ளது.

சங்க இலக்கியம், இலக்கணம், மொழி, மொழியியல், உரை, நீதி இலக்கியம், காப்பியம், பக்தி, சமயம், புராணம், தத்துவம், சிற்றிலக்கியம், கல்வெட்டு, தொல்லியல், நாட்டுப்புறவியல், இசை, அறிவியல், மானுடவியல், புவியியல், உளவியல், தற்காலக் கவிதை, சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம், கூத்து, வரலாறு, மொழிபெயர்ப்பு, மக்கள் தொடர்பு ஊடகங்கள், பெண்ணியம், கல்வியில், பாடத்திட்டம், பயிற்றுமொழி என சுமார் 50க்கும் மேற்பட்ட பிரிவுகளாகத் தமிழியல் துறை விரிவடைந்துள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் பேராசிரியர்களுடன், இளம் ஆய்வாளர்களும் இணையாகப் பங்கெடுக்கும் வாய்ப்பு உள்ளது. சில கட்டுரைகள் கூறியது கூறலாக உள்ளன. (எ.டு.) 'சங்க இலக்கியத்தில் தூது'.

தற்கால இலக்கியங்கள் குறித்து எழுதும் போக்கு தமிழியல் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். (எ.டு.) ச. பாலமுருகனின் 'சோளகர் தொட்டி', 'நாவலின் கட்டமைப்பு' எனும் கட்டுரை சோளகர் இனத்தினர் அனுபவித்து வரும் ஒடுக்கு முறைகள், இன்னல்கள், அவர்களுடைய அன்றாட, வாழ்க்கைப் போராட்டம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது. இச்செய்திகள் நாவல் வழியாக எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது என்பது இக்கட்டுரையின் பொருண்மை.


சோளகர் இன மக்களின் பண்பாட்டினையும் வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது காவல் துறையினர் அம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் காட்சிப்படுத்துவதே நோக்கமாகக் கொண்டு கதைக்கருவை அமைத்துள்ளார் ஆசிரியர். (ஆய்வுக் கோவை 2009, ப.159).

ஒரு நிகழ்வு யதார்த்தமான இலக்கியப் படைப்பாக மாறுவதுடன் நில்லாது, அது ஆய்வுப் பொருளாகவும், வரலாறாகவும், 5 பக்கங்களுக்குள் ஒரு பதிவாகவும் மாறுவதும் இதன் சிறப்பு. சமூகவியல் பார்வை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்க உதவும். மேலும் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்க முனைவோருக்கு இந்த 40 ஆண்டுகால ஆய்வுகள் பெரிதும் துணைபுரியும். தமிழியல் ஆய்வின் எல்லைகளை, புரிந்து கொள்ளவும் எதிர்கால ஆய்வுகளை வழிநடத்தவும் பயன்படும் என்பதில் ஐய்யமில்லை.

அடிக்குறிப்புகள்

1. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் பத்தாண்டுப்பணி, சு.சக்திவேல், ப.6.
2. ஆய்வுக்கோவை, பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகள் அடைவு, ப.5.
3. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற இரண்டாம் கருத்தரங்கம், ஆய்வுக்கோவை 1970, தொகுதி 1, பதி. 2000, ப.5.

* தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் - 2010



கல்வெட்டுத் தொகுப்புகள்: நிறுவனங்களின் அணுகுமுறைகள்

மு. காமாட்சி

18 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் 'தொல்லியல்' முறையாகத் தொடங்கப்பட்டது. இதற்குமுன் சில ஐரோப்பிய அறிஞர்கள் சொந்த ஈடுபாட்டின் காரணமாகக் கல்வெட்டுகள், தொல்பொருட்கள் முதலான ஆவணங்களைச் சேகரிக்கத் தொடங்கினர். இச்சூழலில் ஐரோப்பிய வருகையினூடே உருப்பெற்ற வரலாறெழுதியலுக்கு இலக்கியப் பிரதிகள் மட்டுமல்லாது மேற்குறித்த ஆவணங்களும் கருவிகளாக அமைந்தன. குறிப்பாக இந்திய மக்களின் மொழி, வரலாறு குறித்து அறிந்துகொள்ள விரும்பிய ஐரோப்பியர்களுக்குக் கல்வெட்டுகள் தரவுகளாக அமைந்தன. எனவே இன்று நமக்குச் சொல்லப்படும் வரலாறு என்பது இதனூடாகவே எழுதப்பட்டது எனும் புரிதல் அவசியமாகிறது. இத்தரவுகளை வரலாற்றியல், மொழியியல், சமூகவியல், அரசியல், பொருளாதாரம் எனும் பின்புலத்தில் ஆராய்ந்தால் மக்களின் பன்முக வளர்ச்சியை அறிய முடியும். மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு மொழியும் கடந்த கால வரலாறும் அவைகளினூடாகப் பெற்ற அடையாளமும் அவசியமாகிறது. இவற்றை விளங்கிக் கொள்வதற்கான ஆவணங்களைச் சேகரித்து, தொகுத்து, பாதுகாத்து வருகின்ற நிறுவனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்பின்புலத்தில் கல்வெட்டுத் தரவுகளை நிறுவனங்கள் எவ்வாறு முறைப்படுத்தி தொகுத்து வெளியிட்டுள்ளன என்பதை கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ள இயலும்.

இந்தியாவில் கிடைக்கின்ற பல்வேறு சான்றுகளான இலக்கியம், கல்வெட்டு, நாணயம், வெளிநாட்டார் குறிப்புகள், தொல்லியல், அகழாய்வுச் சான்றுகள் அனைத்தையும் இணைத்து வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சி நடந்த வண்ணம் உள்ளது. குறிப்பாக இந்திய வரலாற்றை மீள் உருவாக்கம் செய்வதற்கு கல்வெட்டுகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இச்சான்றுகளின் மூலம் இந்திய வரலாற்றை மீள் உருவாக்கம் செய்வதில் பெரும்பங்காற்றியவர் டிசி. சர்கார் ஆவார். இவர் இந்திய

வரலாற்றைக் குறிப்பிடும் போது கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட இந்திய வரலாறு எண்பது (80%) விழுக்காடு கல்வெட்டுகளின் வாயிலாகவே வெளிக்கொணரப்பட்டுள்ளது என்கிறார். இப்பின்புலத்தில் கல்வெட்டுகளின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்த அறிஞர்கள் கல்வெட்டுகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனவே ஐரோப்பியர்களின் வருகையின் ஊடே இந்திய வரலாற்றை மீள் உருவாக்கம் செய்யும் பணி நடந்தது. இம்மீள் உருவாக்கத்தில் ஐரோப்பியர்களுக்கு உறுதுணையாக இந்திய மொழியியல் மற்றும் வரலாற்று அறிஞர்கள் துணை நின்றனர். கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில், சர்வில்லியம்ஸ் ஜோன்ஸ் 1784 ஆம் ஆண்டு ஆசியவியல் கழகத்தை நிறுவி இந்திய வரலாற்று ஆய்விற்கு வித்திட்டார். இக்கழகம் ஆசிய ஆய்வுகள் (Asian Researches) எனும் ஆய்விதழை 1788 இல் தொடங்கியது. இவ்விதழில் பல கல்வெட்டுகள் வெளிவரத் தொடங்கிய போதிலும் இவை பெரும்பாலும் மொழிபெயர்ப்புகளாகவே இருந்தன. இவ்விதழில் கல்வெட்டுப்படிகள் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைத் தொடர்ந்து ஹென்றி டி. கோல்புருக், பிரைஸ், ஸ்டிர்லிங், பெல், வில்சன் மற்றும் ஸ்ரீவர்ம சூரி போன்றோர் கல்வெட்டாய்விற்குத் துணை புரிந்தனர். இவர்களைத் தொடர்ந்து 1837ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்ஸப் என்பவர் இந்திய கல்வெட்டுகளைப் படியெடுத்து, வரலாற்றை உருவாக்கப் பயன்படுத்த வேண்டும் எனும் கருத்தை வெளியிட்டார். பிராமி, கரோஷ்டி ஆகிய கல்வெட்டுகளைப் படிப்பதில் வெற்றியும் கண்டார். இதற்குப் பிறகு ஆசியாவின் ஆராய்ச்சிகள், ஆசியக் குழுவின் பத்திரிகை, இந்தியாவின் பழமை, சென்னை இலக்கிய விஞ் ஞானப் பத்திரிகை முதலிய இதழ்களில் பல கல்வெட்டுகளின் குறிப்புகள் மற்றும் விளக்கங்கள் வெளிவரலாயின.

ஜேம்ஸ் பிரின்சப், கிறிஸ்டியன் லாசன், எட்வின் நோரிஸ் போன்றோரின் முயற்சியால் இந்தியாவில் அசோக பிராமி மற்றும் கரோஷ்டி கல்வெட்டுகள் படிக்கப்பட்டன. இவர்களுக்குப் பின் இப்பணியினை எம்.கிட்டோ (M. Kittoe), எச்.எச். வில்சன் (H.H.Wilson), பெர்னல் போன்றோர் செய்தனர்.

ஜேம்ஸ் பிரின்சப்பிற்குப் பிறகு, ஆசியவியல் கழகத்தின் ஆய்வுப் பணிகளில் தொய்வு ஏற்பட்டது. இதனை ஈடுசெய்யும் வகையில் ராயல் ஏசியாடிக் சொஸைட்டி ஆய்விதழ் (Journal of Royal Asiatic Society) மற்றும் ஆசியவியல் கழகத்தின் மும்பை அலுவலகம் வெளியிட்ட ஆய்விதழான ராயல் ஏசியாடிக் சொஸைட்டி பாம்பே பிராஞ்சு ஆய்விதழ் (Journal of Bombay Branch of the Royal Asiatic Society) ஈடுசெய்தது. இவற்றில் பல சமஸ்கிருத கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் வெளியிடப்பட்டன.

1860-க்கும் 1900-க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கல்வெட்டுகளை ஆங்கிலேயே அரசு மட்டுமல்லாது அரசின்கீழ் இயங்கிய நிறுவனங்களும் சிற்றரசுகளும் தொகுக்கும் பணியில் ஈடுபட்டன. அந்நிறுவனங் களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :

- இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறை
- கன்னட மாநில அரசு தொல்லியல் துறை
- திருமலை - திருப்பதி தேவஸ்தானம்
- புதுக்கோட்டை சமஸ்தானம்
- திருவாங்கூர் கொச்சி சமஸ்தானம்
- தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
- தமிழ்ப் பல்கலைக்கழகம்

என்பனவாகும். இவற்றில் சில நிறுவனங்கள் இன்றும் இத்தொகுப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆங்கிலேய அரசு தொல்பொருட்களைப் பாதுகாத்து, ஆவணப்படுத்தி, வெளியிட ஒரு துறையை உருவாக்க வேண்டும் என நினைத்து 1861இல் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையை நிறுவியது. 1870இல் இத்துறையின் டைரக்டர் ஜெனரலாக இருந்த அலெக்ஸாண்டர் கன்னிங்காம் மற்றும் பெக்லர், கார்லே, காரிக் போன்றோர் வட இந்தியாவில் கள ஆய்வை மேற்கொண்டு 1861க்கும் 1887க்கும் இடைப்பட்ட கண்டுபிடிப்புகளை 23 தொகுதிகள் கொண்ட ஆண்டறிக்கையாக வெளியிட்டனர் (Archaeological Survey of India Annual Reports). இவ்வறிக்கையில் கல்வெட்டுடன் கல்வெட்டின் மைப்படிகள் தரப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 1872இல் இந்தியன் ஆன்டிகோரி (The Indian Antiquary) எனும் ஆய்விதழ் தொடங்கப்பட்டது. இதில் பல கல்வெட்டாய்வாளர் களின் கட்டுரைகள் வெளிவந்தன. 1877இல் கன்னிங்காம் தலைமையில் Corpus Inscriptionum Indicarum எனும் தொகுப்பு வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து Inscriptions of Asoka எனும் நூலை வெளியிட்டார்.

இந்தப் பின்புலத்தில், இத்துறையின் மூலம் கோயில் ‘கணக்கெடுப்புத்திட்டம்’ (Temple Survey

Project) நடைமுறைப் படுத்தப்பட்டது. 1883 இல் மேற்குறித்த திட்டத்தின் மூலம் கல்வெட்டுகளை ஆய்வு செய்யும் பணி தொடங்கியது. கல்வெட்டுகள் மற்றும் பட்டயங்களின் ஆய்வுத்துறைத் தலைவராகச் 'சாண் பெயித்புல் பிளீட்' பதவி ஏற்றார். இவர் கல்வெட்டுகளை வரலாற்றுக் காலவரிசையில் தொகுப்பதற்குத் திட்டமிட்டுப் பணியாற்றினார். இதன் மூலம் வரலாறுகள் குறித்துப் பல செய்திகள் வெளிவரலாயின.

இந்தப் பின்புலத்தில் 1886இல் சென்னை மாகாண அரசு தனி கல்வெட்டாய்வாளர் பதவியை உருவாக்கி, முதல் கல்வெட்டாய்வாளராக இ. ஹீல்ட்ச் என்பவரை நியமித்தது. இப்பதவி 1903இல் இந்திய அரசின் கல்வெட்டாய்வாளர் என பெயர் மாற்றம் பெற்றது. இக்கல்வெட்டாய் வாளர் அலுவலகம் சில மாறுதல்களோடு, இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் ஒரு பிரிவாக இன்றும் இயங்கி வருகின்றது. முதலில் சென்னை மாகாணம் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் கல்வெட்டாய்வு செய்து வந்த இத்துறை, 1945க்குப் பிறகு இந்தியா முழுவதும் தன் பணியை விரிவுபடுத்தியது. இத்துறையின் கண்டுபிடிப்புகள் பற்றிய ஆங்கிலச் சுருக்கள் மட்டும் ஆண்டறிக்கைகளில் வெளியிடப்பட்டன. கல்வெட்டுகளின் பாடங்கள் தனித் தொகுதிகளில் வெளியிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஜேம்ஸ் பர்கஸை பதிப்பாசிரியராகக் கொண்டு 'எபிகிராபியா இண்டிகா' (Epigraphia India) எனும் ஆய்விதழ் 1888-இல் தொடங்கப்பட்டது. 1977-78 வரை 42 ஆய்விதழ்கள் வெளியிடப்பட்டன. இவ்வாய் விதழ்கள் அனைத்தும் இந்திய கல்வெட்டியல் ஆய்வினை முன்னெடுத்துச் செல்லவும் இந்திய வரலாற்றை மீள் உருவாக்கம் செய்யவும் பெரிதும் துணைபுரிந்தன. இந்தப் பின்புலத்தில் 1890 இல் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடப் பட்டன. இதில் கல்வெட்டின் பாடங்கள், மைப்படி, ஒலிபெயர்ப்பு ஆகியவற்றுடன் பதிப்பாசிரியரின் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. இத்தொகுதிகளில், இதுவரை 15,000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்தொகுதிகளில் பெரும்பான்மை தமிழ்க் கல்வெட்டுகளாக இருந்தாலும், சில தொகுதிகள் கன்னடம் மற்றும் தெலுங்கு மொழி கல்வெட்டு களுக்கு ஒதுக்கப்பட்டன.

இந்தப்பின்புலத்தில் 1903 தொடங்கி நடத்தி வந்த மதுரைத் தமிழ்ச் சங்கம் 'செந்தமிழ்' எனும் இதழில் கல்வெட்டு ஆண்டறிக்கைகளை விளக்கியது. இதனைத் தொடர்ந்து 'தமிழ்ப் பொழில்' போன்ற தமிழியல் இதழிலும் கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்பும் நிழற்படமும் வெளிவரலாயின.

இவ்வெளியீடுகள் வாயிலாக தமிழ்நாட்டு வரலாறு முறையாக எழுதப்பட வழியேற்பட்டது. குறிப்பாக, இலக்கியங்கள் மற்றும் செவிவழியாக அரச பரம்பரைகள் குறித்த செய்திகள் முழுமை பெறவில்லை என்றாலும் பல செய்திகளை இக்கல்வெட்டுகள் வழங்கின. ஆகவே, வரலாற்றாசிரியர்கள் இதனை ஆர்வத்துடன் நாடத்தொடங்கினர். இம்முதல்காலகட்ட, கல்வெட்டுத் தொகுப்புப் பணிக்கு இணையாக அச்செய்திகளைப் பகுப்பாய்வு செய்து, பல வரலாறுகளை உருவாக்கும் பணியை கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார், ஆர். கோபாலன், நீலகண்ட சாஸ்திரியார், A. அப்பாதுரை, வெங்கடரமணய்யா போன்ற வரலாற்றாசிரியர்கள் மேற்கொண்டனர். இதன் மூலம் பல வரலாற்று நூல்கள் 1920 முதல் தொடர்ந்து வெளிவரலாயின. இந்தப் பின்புலத்தில் நாடு விடுதலை பெற்றவுடன் வந்த வெளியீடுகளில் முக்கியமானது தி.நா. சுப்பிரமணியம் பதிப்பித்த தென்னிந்திய கோயிற்சாசனங்கள் 3 தொகுதிகள் (1953-57) ஆகும். இதில் மூன்றாம் தொகுதியில் இணைத்துள்ள 'தமிழ் நாட்டுச் சாசனவியல்', 'தமிழ் எழுத்து வரிவடிவ வளர்ச்சி 'சாசனச் சொல்லகராதி ஆகியன கல்வெட்டு அறிஞர்களுக்கு மிகவும் பயன்பட்டன (எ. சுப்பராயலு, : 2001-02).

இந்தப் பின்னணியில் ஆங்கிலேய அரசு மட்டு மல்லாது அவ்வரசின் கீழ் இயங்கிய சிற்றரசுகள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பை பின்வருமாறு தொகுத்துக்கொள்ள இயலும்.



மு. காமாட்சி:

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் ஆய்வு மாணவர்.

- மைசூர் அரசு, லூயிஸ் ரைஸ் என்பவரின் தலைமையில் மைசூர் கல்வெட்டுகளை 1879-ல் வெளியிட்டது. ரைஸ்ஸை பதிப்பாசிரியராகக் கொண்டு 1886-1904க்கு இடையே 'எபிகிராபியா கர்னாடிகா' எனும் ஆய்விதழ் 12 தொகுதிகளாக வெளிவந்தன. இத்தொகுதிகளில் ஏறத்தாழ 9000 கல்வெட்டுகள் வெளிவந்துள்ளன. இதில் தமிழ்க் கல்வெட்டுகளும் அடங்கும். தற்பொழுது இந்திய வரலாற்று ஆய்வுக்கழகம் இவற்றை குறுந்தகட்டில் பதிவு செய்து வெளியிட்டுள்ளது.

- திருவிதாங்கூர் சமஸ்தானம், டி.ஏ. கோபிநாத ராவை பதிப்பாசிரியராகக் கொண்டு திருவிதாங்கூர் தொல்லியல் தொகுதிகள் (Travancore Archaeological Series) எனும் ஆய்விதழை வெளியிட்டது. இதில் 1000-கும் மேற்பட்ட தமிழ் மற்றும் மலையாளக் கல்வெட்டுகள் வெளிவந்துள்ளன.

- புதுக்கோட்டை மாவட்டம் அன்று தனியாக அரசரின் கீழ் இயங்கி வந்தது. புதுக்கோட்டை அரசு தன் ஆட்சியின் கீழ் இயங்கிவந்த ஊர்களில் கல்வெட்டுகளைப் படியெடுத்து புதுக்கோட்டை கல்வெட்டுகள் என்ற பெயரில் வெளியிட்டது. முதல் தொகுதி 1130 கல்வெட்டுகளையும் அதைத் தொடர்ந்து 240 கல்வெட்டுகளுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் வெளியிட்டது. நம் நாடு சுதந்திரம் பெற்றவுடன் புதுக்கோட்டை அரசு இந்திய அரசுடன் இணைந்துவிட்டது. அதன்பின் தனியாக எதுவும் வெளியிடப்படவில்லை.

- திருப்பதி தேவஸ்தானம் சுமார் 1000-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகளை வெளியிட்டுள்ளது. குறிப்பாக, திருப்பதி கோயிலில் காணப்படும் சுமார் 1000 தமிழ்க் கல்வெட்டுகள் மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டுள்ளன. *(கா. ராஜன், 2006, 116-118)*

- இந்திய விடுதலைக்குப் பிறகு இந்திய அரசின் மத்திய தொல்லியல் ஆய்வுத்துறையுடன் அனைத்து மாநிலங்களிலும் தொல்லியல் ஆய்வுத்துறைகள் தொடங்கப்பட்டன. அவ்வகையில், 1961-ல் தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து மாவட்டம் மற்றும் ஊர் வாரியாக கல்வெட்டுத் தொகுதிகளை இத்துறை வெளியிட்டு வருகின்றது. இதுவரை 30-க்கும் மேற்பட்ட கல்வெட்டுத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக, 1970-இல் வெளிவந்த 'சென்னை மாநகர்க் கல்வெட்டுகள்' எனும் நூலே முதல் கல்வெட்டுத் தொகுதியாகும். இத்தொகுதியைத் தொடர்ந்து 12 தொகுதிகள் மாவட்ட வாரியாக வெளியாயின. மாவட்டம் வாரியாக வெளியிடுவதில் காலதாமதம் ஆவதால் ஊர்வாரியாக கல்வெட்டுகளை தொகுக்கும் பணி தொடங்கியது. அவ்வகையில் 1990-இல் வெளிவந்த 'திருக்கோடிக்கா கல்வெட்டுகள்' எனும் நூலே ஊர்வாரியாக வெளிவந்த முதல் கல்வெட்டுத் தொகுதியாகும். இதனைத் தொடர்ந்து திருவீழிமிழலை, பெருமுக்கல், தாமரைப்பாக்கம், திருவலஞ்சுழி என ஊர் வாரியாக கல்வெட்டுத் தொகுதிகளை வெளியிடுவதில் கவனம் செலுத்தியது.

இக்கல்வெட்டுத் தொகுதிகளின் உள்ளடக் கத்தைப் பின்வருமாறு பகுக்கலாம். அவை:

- தொடர் மற்றும் ஊர் கல்வெட்டு எண் தருதல்
- மாவட்டம் உட்பட பல தகவல்கள் இடம் பெறுதல்
- கல்வெட்டு காணப்படும் இடம்
- குறிப்புரை
- மூலக்கல்வெட்டுகள் இடம்பெறுதல் என்பனவாகும்.

தற்பொழுது கல்வெட்டுகளைத் தொகுப்பதற் கான முனைப்புத் திட்டத்தைத் தொடங்கி மாவட்டந்தோறும் காணப்படும் கல்வெட்டுகளைத் தொகுத்து வருகின்றது. இதனைத் தொடர்ந்து 'கல்வெட்டு' எனும் காலாண்டிதழில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க கல்வெட்டுகளை வெளியிட்டு வருவது இத்துறையின் மற்றொரு பணியாகும்.

- 1982இல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஒரு தனித்துறை துவக்கப் பெற்றது. இத்துறை முதலில் தஞ்சைமராட்டியர் கல்வெட்டுகளை முழுமையாகத் தொகுத்துப் பதிப்பிக்கும் பணியை மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து 15ஆம் நூற்றாண்டிற்குப் பின் உள்ள கல்வெட்டுகளை அரச பரம்பரை மற்றும் இடம் வாரியாக வெளியிடும் வகையில் சில சிறப்புத் திட்டங்களை மேற்கொண்டது. சேதுபதிகள் மற்றும் தொண்டைமான்களின் செப்பேடுகள், கொடுமணலில் கிடைத்த தமிழ் பிராமி பொறிப்புகள், குறியீடுகள் ஆகியவற்றை வெளியிட்டு தனது பங்களிப்பைச் செய்துள்ளது.

- 1990இல் தொடங்கப்பட்ட தமிழகத் தொல்லியல் கழகம் 'ஆவணம்' எனும் இதழையும், திருச்சி டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம் 'வரலாறு' எனும் ஆய்விதழையும் தொடங்கிப் பல புதிய கல்வெட்டுகளை வெளியிட்டு வருகின்றது.

- தனிப்பட்ட ஆய்வாளர்களும் இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, டி.ஏ. கோபிநாத் ராவ், கேவி. சுப்ரமணிய ஐயர், திந. இராமச்சந்திரன், எஸ்.எச். ரித்தி, ஐராவதம் மகாதேவன், இரா. நாகசாமி, நடனகாசிநாதன், எ. சுப்பராயலு,

செ. இராசு, என். சேதுராமன் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவார்கள்.

இந்தியாவில் இதுவரை 90,000 கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டதாக டிசி. சர்கார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக்கல் வெட்டுகளின் எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்தைத் தாண்டும் எனலாம். இவற்றில் மூன்றில் இரண்டு பகுதி தென்னிந்தியாவைச் சார்ந்தது. அண்மையில் இதுவரை வெளியிடப் பட்ட கல்வெட்டுகளின் தன்மை குறித்து ஆய்வு மேற்கொண்ட எ. சுப்பராயலு தமிழ் மொழியில் சுமார் 24,000, கன்னட மொழியில் 11,000, தெலுங்கில் 5000, கல்வெட்டுகள் உள்ளன என குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக தமிழ்க் கல்வெட்டுகளை காலவாரியாக கீழ்வருமாறு பிரித்துக்கொள்ளலாம்.

- கி.மு. 300 கி.பி. 550 - 400(மட்கலக் கீறல்களையும் சேர்த்து)
- கி.பி. 550 - கி.பி. 850 - 1000
- கி.பி. 850 - கி.பி. 1300 - 1600
- கி.பி. 1300 - கி.பி. 1600 - 4500
- கி.பி. 1600 - கி.பி. 1900 - 2500

இவற்றில் மூன்றில் ஒரு பகுதிமட்டுமே, தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன (எ. சுப்ராயலு 2001, 4).


எனவே, நம் நாட்டில் தொல்லியல் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி முறைப்படுத்தப்பட்டது ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் எனலாம். இவர்களின் தொடர்பு மக்களுக்கு அறிமுகமாக, எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது போல, கல்வெட்டுத்துறையிலும் புது மாற்றம் ஏற்பட்டது. இந்தப் பின்னணியில், வடமேற்கு இந்தியாவில் காணப்படும் 'கரோஷ்டி' 'பிராமி' ஆகிய கல்வெட்டுகளின் சிறப்புகளை பிரின்ஸிப், லாஸ்ஸன், நோரிஸ், கன்னிங்காம் போன்றோர் உணர்த்தினர். பிறபகுதிகளில் கிடைத்த கல்வெட்டுகளைத் தொகுத்து வெளியிட்ட பெருமை பூலர், ஸெனர்ட், கில்ஹார்ன், ஹீல்ஷ், ரைஸ், எல்லியட், பிளீட், பானர்ட் போன்ற அறிஞர்களையும் அவர்கள் வழிவந்த பகவான்லால் இந்திரஜித், மித்ரா, பண்டார்கர், வெங்கையா, கிருஷ்ண சாஸ்திரி போன்ற இந்திய அறிஞர்களையும் சாரும். இதனை மேற்கண்ட தொகுப்புகளின் மூலம் அறியலாம்.

அண்மைக்காலத்தில் தனிக்கல்வெட்டுகளை வைத்து ஆய்வு செய்வதை விட வட்டாரம், கால அடிப்படையில் தொகுத்து ஆராயும் முயற்சி நடந்து வருகிறது. ஜப்பானியப் பேராசிரியர் கராஷிமா சோழர், விஜய நகர கால வரலாற்றில் மேற்கொண்ட ஆய்வைக் குறிப்பிடலாம். இத்தொகுப்புப் பணிகளின் மூலம் இந்திய வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்படலாயின. குறிப்பாக, இந்தியாவில் கிடைத்த இலக்கியங்கள் சமகாலச் சமூகத்தின் நிகழ்வுகளைக் குறித்தனவே யன்றி வரலாற்றைக் கால நிரல்பட கூறவில்லை எனலாம். இந்திய வரலாற்றை பெருமளவில் காலநிரலில் அமைப்பதற்கு கல்வெட்டுகள் மிகவும் துணைபுரிகின்றன. குறிப்பாக, சங்ககாலக் கல்வெட்டுகளான தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் சங்கால இலக்கியங்களை மதிப்பீடு செய்யவும், பாண்டியர், அதியர், சேரர், வேளிர், குறுநில மன்னர்களை அறிந்து கொள்வதற்கும், அக்காலத்தில் நிலவிய சமூகம், நிலப்பிரிவு, அதிகாரக் கட்டமைப்பு அதன் ஊடான நிருவாகம் மற்றும் மொழியியல் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றன. குறிப்பாக கி.பி. 4 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை உள்ள தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கு கல்வெட்டுகளும் ஆதாரங்களாக விளங்குகின்றன.

துணைநூற்பட்டியல்

1. ஆ. தசரதன் (பதி.), தமிழில் ஆவணங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2001.
2. எ. சுப்பராயலு (பதி.), தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப் பல்கலைக்கழகம், 2001.
3. க. ராஜன் கல்வெட்டியல், மனோ பதிப்பகம், 2006.
4. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் (பதி.), தமிழ் - பிராமிக் கல்வெட்டுகள், தமிழ்நாடு தொல்லியல் துறை, 2006.
5. ம. ராசசேகரதங்கமணி தொல்லியல், கொங்குப் பதிப்பகம்.
6. அ. இராகவன் ஆதித்த நல்லூரும் பொருநை, வெளிநாகரிகமும், அமிழ்தம் பதிப்பகம், 2007.
7. தமிழகத் தொல்லியல் ஆய்வு வரலாறு - தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடுகள் (1969-2009), ஆய்வேடு.

■



தனி நபர் தொகுப்புகள்

அயோத்திதாசர் தொகுப்பின் வரவும் அடையாளப் புனைவுகளின் தகர்வும்

அ. ஜெகநாதன்



தமிழில் தொகுப்புகளின் வரவுகள் சமீபத்தில் கணிசமாக உயர்ந்துள்ளன. பெரும்பாலான தொகுப்புகள் ஒளிவட்டம் கட்டுவதிலேயே கவனம் குவிக்கின்றன. ஆனால் தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றில் இரண்டு தொகுப்புகள் ஏராளமான மாற்றத்தை வெளிப்படுத்தின. 1978ல் வே. ஆனை முத்துவால் தொகுக்கப்பட்ட ஈ.வெ.ரா. பெரியார் சிந்தனைகள் எனும் தொகுப்பு அறிவுப்புலத்தில் பலவித எடுகோள்களை உருவாக்கியது. அத் தொகுப்புகள் வரலாற்றுப் பரப்பை வேறு பக்கம் திருப்பிவிட்டது. அதைப்போன்று இத்தொகுப்பை முன்வைத்து வேலை செய்த சுதந்திர அறிவாளிகள் சிறிதும் பெரிதுமான தவறுகளையும் மேற்கொண்டனர்.

பெரியார் சிந்தனைகள் என்ற தொகுப்பிற்குப் பின்னர் அயோத்திதாசரது தொகுப்புகள் தமிழகத்தில் ஏராளமான விவாதத்தை உருவாக்கியது. தமிழகத்தில் ஏராளமான வாத பிரதிவாதத்தைத் தோற்றுவித்தன. கடந்த பத்தாண்டுகளில் அயோத்திதாசர் ஆட்படுத்த முடியாத சிந்தனை யாளராக அடையாளம் காணப்பட்டார். அவரது சித்தாந்தங்கள் வழி நின்று 'வரலாற்றை நேர்செய்தல்' என்ற சொல் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டு பெரும் சலசலப்பை உருவாக்கியது. இக்கட்டுரை அயோத்திதாசர் தொகுப்பு உருவாவதற்கு முன்னர் தமிழில் நடைபெற்ற அடையாளப் புனைவுகளை விவரிக்கும். அதன்பின் அயோத்திதாசரின் தொகுப்பு வருகையையும் அப்பிரதிகளால் ஏற்பட்ட விளைவுகளையும் பேசிப் பார்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

I

தொண்ணூறுக்கும் இரண்டாயிரத்திற்குமான காலகட்டத்தைத் தலித் பரப்பின் அதிமுக்கிய பத்தாண்டாகச் சுட்டலாம். தமிழ்ச்சமூகம் தனது அசைவில் தலித்துகளின் போராட்டத்தை எதிர் நோக்கி காத்திருந்தது. ஏகாதிபத்தியத்தின் கொடூரம் இந்திய மண்ணில் பாய்வதற்கு ஆளும் வர்க்கம் கதவைத் திறந்து வைத்தது. இன்னொரு புறத்தில் தலித் மக்கள் இந்திய நிலப்பரப்பெங்கும் அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவைத் தங்களது விடுதலையின் பெருவிழாவாகக் கொண்டாடி வந்தனர். பிறிதொரு புறத்தில் இந்துக்களும் தனது இந்து மேலாண்மையை இந்தியாவெங்கும் விரித்துப் போட்டனர். இந்திய நிலப்பரப்பு இத்தகைய முக்கோண மோதலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது உருவானது. உலகமயம், இந்துத்துவம் என்பதான இரண்டு வசிகரச் சொற்கள் பிராமணர்களையும் சூத்திரர்களையும் ஆட்டிப் படைத்தது. உலகமயத்தின் விரிவாக்கத்திற்கும் இந்துத்துவத்தின் பரவலுக்கும் ஏராளமான சூத்திர பிராமணர்கள்

காரண கர்த்தாக்களாக உருமாறினர். தமிழ்ப் பரப்பில் இந்துத்துவம் இக்காலகட்டத்தில் வேரூன்ற முடியவில்லை. மாறாக உலகமயம் தனது நங்கூர செயல்திட்டத்தை முன்னெடுத்தது. உலக மயத்தின் இருப்பு நிலங்களை வளைத்தல் என்பதில் இருந்து துவக்கமாயிற்று. இதே காலகட்டத்தில் நிலத்தோடு பிணைந்த சாதியை எதிர்த்து தலித்துகள் கலகம் செய்தனர். அம்பேத்கரின் நூற்றாண்டுவிழா ஞாபகங்கள் கலகத்தோடு மட்டும் தொடர்பு கொள்ளாமல் தனது தனித்துவத்தை நோக்கியும் விரிவு பெற்றது. தலித் ஞாபகங்கள் வரலாற்றை நினைவுபடுத்தியது. சாதி ஒழிப்பைக் கவனப்படுத்தியது. முட்டுச் சந்தியில் நின்று திணறிக் கொண்டிருந்த திராவிட அரசியலைக் கேள்விக்குட்படுத்தியது. இடது சாரிகள் மீதும் தனது அதிருப்தியை வெளிப் படுத்தியது. இத்தகைய பின்புலத்தின் ஊடேதான் சித்தாந்த தளத்தில் "தலித்" என்ற சொல் விசிறப்பட்டது.

"தலித்" என்ற சொல் இப்போது இலக்கிய நாக்குகளில் படரவிடப்பட்டது. சிலரின் நாக்குகள் எரிச்சலடைந்தன. இன்னும் சில நாக்குகள் உச்சரிக்க மறுத்தன. வேறு சில நாக்குகள் காழ்ப்பை உமிழ்ந்தன. என்றபோதும் நவீன எழுத்து வகைகளைக் கேள்விக்குட்படுத்திய "தலித்" எனும் சொல்லாடல் சிட்டுக்குருவியின் சிறகசைவைப் போல் இலக்கியப் பரப்பெங்கும் சிறகடித்து பறந்து வந்தது. "உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?" என்பதான சொல வடைகள் இலக்கிய உலகத்தில் உதிர்க்கப்பட்டாலும் தலித் எனும் சொல்லாடல் தனது சிறகசைப்பை நிறுத்திக் கொள்ளவில்லை.

இதே காலகட்டத்தில் மார்க்சிய வழித்தடத்தில் பயணித்த சில சூத்திர அறிவாளிகள் அவற்றில் இருந்து விலகி பின்னை நவீனத்துவம் எனும் சொல்லாடலில் கவனம் குவித்தனர். கவிழ்ப்பு, ஒழுங்கு மீறல் என்பதான புதுவகை வடிவம் பின்னை நவீனத்திற்குள் தொழில்படுவதால் இவற்றில் இருந்து அவர்கள் தலித் சொல்லாடலிற்கு வந்து சேர்ந்தனர். ஏனெனில் இங்கு ஏற்கனவே கட்டப்பட்ட 'ஒழுங்கு' 'அறம்' என்பது சாதியத் தன்மை படைத்தது. தலித் போராட்டம் என்ற ஒன்று இத்தகைய ஒழுங்குகளை மீறுவதில் இருந்தே பயணப்பட்டது. இதனை உணர்ந்து கொள்ள சூத்திர அறிவுக்குப் பின்னை நவீனத்துவம் எனும் தத்துவக்கோட்பாடு தேவைப்பட்டது. ஆனால் தலித்துகளுக்கு அது இயல்பூக்கமாகவே தொழில்படும் முறைமையாகும். அதனால் தலித் படைப்பாளிகள் தத்துவ தரிசனங்களுக்குள் சிக்கிக் கொள்ளாமல் மௌனமாக அவற்றில் இருந்து விடைபெற்று நகர்ந்து வந்தனர்.

இலக்கிய வகைமைக்குள் நின்றுகொண்டு கோட்பாட்டு பூச்சாண்டிகளிடம் சரணடைந்த சூத்திர அறிவு தலித் அறிவாளிகளுடன் கைகோர்த்தது. அது அரசியல் தளத்திலும் அறிவுத்தளத்திலும் ஒரு சேரப் பயணப்பட்டது. அரசியல் வெளியில் பாட்டாளி மக்கள் கட்சி வன்னியர் எனும் சாதிப்பிரிவில் இருந்து வெளி வந்ததை மறைக்க எத்தனித்த ராமதாஸ் அதனை வன்னிய + தலித் மக்கள் கூட்டமைப்பு என்பதாகப் புனைவு செய்தார். தலித் எழில்மலையை அக்கட்சியின் பொதுச்செயலர் ஆக்கிப்பார்த்தார். இறுதியில் சாதிய நலன் முதன்மை அடைந்ததை நாம் அறிவோம். அதைப் போன்று சித்தாந்தவெளியில் "நிறப்பிரிகை" எனும் இதழ் பிராமணரல்லாதார் பாவலாவை மீண்டும் கைப்பற்றியது. சாதி என்ற ஒன்றை நிறப்பிரிகை மீண்டும் பிராமண மூளைக்குள் மட்டுமே வைத்துத் தேடியது. தலித்துகளையும் சூத்திரர்களையும் இணைக்கும் பல கண்ணியை நிறப்பிரிகை இப்போது தூசு தட்டி உசுப்பியது. இதற்குத் தோதாக அப்பத்திரிகை பெரியாரைக் கையில் எடுத்தது.

தலித் போராட்டத்தின் ஊடாகப் பெரியாரை முதன்மைப் பாத்திரமாக மாற்றும் கோலத்தை நிறப்பிரிகை வலிந்து மேற்கொண்டது. மதுரையில் கூட்டப்பட்ட பெரியார் விவாத அரங்கைப் போல் அம்பேத்கரின் விவாத அரங்கை அது கூட்ட வில்லை. அத்தோடின்றி தமிழக தலித் தலைவர் களின் எழுத்துக்களையும் நிறப்பிரிகை கவனத்தில் நிறுத்தவில்லை. இந்நிகழ்வு நிறப்பிரிகையோடு உடன்படாத சூத்திர அறிவாளிகளுக்கும் உத்வேகத்தைக் கொடுத்தது. மேற்சொன்ன அழிமாண்டத்தைக் கோ. கேசவன் மட்டும் எதிர்த்து எதிர்வினையாற்றினார். மார்க்சியப் பார்வையில் இருந்து கேசவன் தலித் போராட்டத்தை உற்று நோக்கினார். பெரியாரியத்தின் மீது கூர்மையான விமர்சனத்தை முன்வைத்தார். அயோத்திதாசரின் எழுத்துக்களைத் தமது வரலாற்றுக் கட்டமைப்பிற்குப் பயன்படுத்தினார். தொடர்ச்சியாக "தாழ்த்தப்பட் டோரும் சமூக விடுதலையும்"; "சாதியம்", "கோவில் நுழைவுப் போராட்டங்கள்", "அம்பேத்கரும் சாதி ஒழிப்பும்" என்பதான நூல்களையும் "சுயமரியாதை இயக்கமும் பொது உடைமையும்" "திராவிட இயக்கமும் மொழிக்கொள்கையும்", "திராவிட இயக்கத்தில் பிளவுகள்" ஆகிய பெரியாரிய விமர்சன நூல்களையும் கோ. கேசவன் வெளியிட்டார்.

கேசவனின் இத்தகைய எழுத்துப் போராட்டங்கள் எதை அடையாளப்படுத்தின? எனும் கேள்வி இங்கு இயல்பாக வருவதைத் தவிர்க்க முடியவில்லை. சூத்திரர்களின் அபாண்டமான வரலாற்றுக் கட்டமைப்பை எதிர்த்து கேசவனின் எழுத்துக்கள் வினையாற்றின. இத்தருவாயில் தலித் எழுத்து முறைமையை ராஜ்கௌதமன் துரிதமாக விரைவுபடுத்தினார். தலித், தமிழ் இலக்கியம் என்பதான சொல்லாடல் களைக் கவனப்படுத்தும் / விவாதிக்கும் "தமிழக தலித்தும் தலித் இலக்கியமும்" எனும் குறுநூல் ஒன்றை 1991இல் எழுதினார். அதை ஒட்டியே தலித்பண்பாடு, தலித் நோக்கில் தமிழர் பண்பாடு என்பதான நூல்கள் தொடர்ச்சியாக வெளிவந்தன. மேற்குறித்த நூல்கள் ஏற்கனவே இங்கு சொல்லப் பட்ட பண்பாட்டு அறங்களைக் கட்டுடைத்தன. தமிழ் என்ற ஒன்றின் மீது கட்டப்பட்ட பண்பாட்டுக் கோலங்களைக் கௌதமன் தனது தலித் எனும் வாளியால் நீருற்றி அகற்ற முயன்றார். இருந்தபோதும் அரசியல் வரலாறு என்ற ஒன்றில் அவரது எழுத்து முறைமை கவனம் குவிக்கவில்லை. ஆனால் பொய் + அபத்தம் = உண்மை எனும் தொகுப்பில் உள்ள 'திராவிட இயக்கத்தின் உலகப்பார்வை' எனும் கட்டுரை திராவிட இயக்கத்தின் மீது பொத்தாம் பொதுவான விமர்சனத்தை முன்வைத்தது.

நிறப்பிரிகையின் நண்பர் குழாம் திராவிட இயக்கத்தின் மீதான பசலித்தனமான விமர்சனத்தை முன்வைத்துக் கொண்டே பெரியார் மீது சார்புத்தன்மை கொண்டிருந்தனர். இத்தகைய விமர்சனம் தலித் பரப்பிற்கும் பொருந்தும். இரட்டை வாக்குரிமை குறித்தான தொகுப்பை முன்வைத்த ரவிக்குமாருக்கும் மேற்குறித்த விமர்சனம் பொருத்தமுடையதாகும். 1996இல் ரவிக்குமார் தொகுத்த "தலித் எனும் தனித்துவம்" எனும் தொகுப்பில் இரட்டை வாக்குரிமையைப் பெரியாரியப் பார்வையில் தப்பும் தவறுமாகப் பார்த்த தொ. பரமசிவன் கட்டுரையை எத்தகைய விமர்சனமுமின்றி தொகுப்பில் இணைத்திருக்கிறார்.

தலித் பரப்பின் இத்தகைய பெரியாரிய அனுக்கிரக ஆதரிப்பின் ஊடேதான் கோ. கேசவனின் பெரியாரிய விமர்சனத்தையும் அதை ஒட்டிய அவரது எழுத்து முறைமையையும் கவனிக்க வேண்டியுள்ளது.

நிறப்பிரிகை நண்பர் குழாமும் கோ. கேசவனும் எதிரும் புதிருமான விமர்சன நிலைப் பாட்டை மேற்கொண்டிருந்த வேளையில் எஸ்.வி. ராஜதுரையும் வ. கீதாவும் இணைந்து "பெரியார் சுயமரியாதை சமதர்மம்" எனும் பெரும்நூல் ஒன்றை எழுதினர். அதன் தொடர்ச்சி யாக 1998இல் எஸ்.வி. ராஜதுரை தனித்து 'பெரியார்: ஆகஸ்ட் 15' எனும் நூலையும் அதை ஒட்டியே கேசரியின் 'ஆகஸ்ட் 15; இன்பநாளா? துக்கநாளா?' எனும் நூலைப் பதிப்பித்தார். இவற்றோடு கூடவே 'பெரியார்: மரபும் திரிபும்' எனும் தனி நூலை வெளியிட்டார். மேற்குறித்த நூல்களின் நோக்கமாகப் பெரியார் எனும் பெரும் புனிதம் மார்க்சிய சட்டகம் வழியாகப் புனையப்பட்டது. இவற்றின் ஊடாகத் தலித் தலைவர்களின் தனித்துவமான செயல்பாடுகள் மறைக்கப்பட்டன. அல்லது அவைகளைப் பெரியார் இயக்கத்தோடு இணைத்து எழுதி தலித்துகளின் வரலாறு இருட்டடிப்பு செய்யப்பட்டன.

தமிழகத்தில் தொண்ணூறுகளின் துவக்கத்தில் இருந்து இரண்டாயிரம் வரையில் தலித் வரலாறு என்பது பெரியாரிய வரலாறாக உருமாற்றம் செய்யப்பட்டது. இப்பணியில் நிறப்பிரிகை குழு ஒரு முனையிலும் எஸ்.வி.ஆர்., தொ.பரமசிவன் முதலானோர் பிரிதொரு முனையிலும் நின்று பெரியார் எனும் பம்பரத்தைச் சுழற்றிக் கொண்டு இருந்தனர். பெரியார் எனும் பெரும் அடையாளப் புனைவு தலித் மனங்களில் நங்கூரமாக இறக்கப்பட்டு வந்த சமயத்தில் ஞான. அலாய்சியஸ் தனது உழைப்பின் வலியில் இருந்து புறப்பட்ட அயோத்திதாசர் சிந்தனைகள் எனும் தொகுப்பு பூதம்போன்று அனைவரையும் ஆட்டிப் படைத்தது. அயோத்திதாசரின் தொகுப்புகள் 1999 செப்டம்பரில் வெளிவந்த வரலாற்றைத் தொடர்ந்து காணலாம்.

அ. ஜெகநாதன்: விருதுநகர் மாவட்டம் வ.புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். பேரா. ந. முத்துமோகன், பேரா. இ. முத்தையா ஆகியோரின் மாணவர்களில் ஒருவர் என்பதிலும் தான் தலித் என்பதிலும் மனநிறைவு கொள்பவர். அம்பேத்கர், ஈ.வெ.ரா., அயோத்திதாசர் ஆகியோரின் எழுத்துக்களில் பரிச்சயம் கொண்டவர். தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் குருநானக் ஆய்வு மையத்தில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். 'முதுகுளத்தூர் கலவரம்', 'முதுகுளத்தூர் பயங்கரம்' ஆகிய நூல்களின் பதிப்பாசிரியர். 'இரட்டை வாக்குரிமை குறித்தான சில ஆய்வுகள்','மத அடையாள மீட்டு உருவாக்கமும் அதன் பண்பாட்டு அரசியலும்' ஆகிய ஆய்வு நூல்களின் ஆசிரியர்.

II

அயோத்திதாசர் தமிழ் எழுத்துலகில் தலித்துகளோடு கரைந்தது போல் ஆங்கிலத்தில் கரைந்து விடவில்லை. சூத்திர அறிவாளிகள்தான் ஆங்கிலத்தில் அயோத்திதாசரை முதன் முதல் விவாதிக்க முனைந்தனர். 93ல் EPW எனும் ஆங்கில இதழில் 'Dalit and Non Bramin consciousnes in colonial Tamil Nadu'எனும் கட்டுரையை எஸ்.வி.ஆர்- வ.கீதா ஆகியோர் இணைந்து எழுதினர். அதைப்போன்று வ.கீதா தனித்து 'Journal of Arts and Ideas' எனும் ஆங்கில இதழில் 'Rewriting History in the Brahmins shadow : cost and mordern historical Imaginaton' எனும் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் அயோத்திதாசர் அங்கொன்றும் இங்கொன்றுமாக விவாதிக்கப் பட்டதாக அறிய முடிகிறது. அதை ஒட்டியே எஸ்.வி.ஆர்., வ. கீதாவுடன் இணைந்து 'Towards as Non brahimin millenium : From Periyar to Iyotheethass' எனும் ஆங்கில நூல் ஒன்றை எழுதினார். அந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பே 'பெரியார் சுயமரியாதை சமதர்மம்' எனும் நூலாகும். ஆங்கிலத்தில் 'அயோத்திதாசர் முதல் பெரியார் வரை' என்பதான துணைத் தலைப்பு தமிழில் ஒதுக்கப்பட்டு விட்டதன் சூத்திர + பிராமண மர்மம் இன்று வரை அகலவில்லை.

1993-ல் EPW வில் வெளிவந்த ஆங்கில கட்டுரையை வாசித்த அலாய்சியஸ் தமது MPhil ஆய்விற்காக அயோத்திதாசரைத் தேடி தமிழகம் நோக்கிப் பயணமானார். மேலதிகமான தகவல்கள் எஸ்.வி.ஆரிடம் இருந்து கிடைக்கலாம் எனும் ஆவலில் அலாய்சியஸ் அவரைச் சந்தித்தார். அலாய்சியஸிடம் "தமிழன் இதழில் ஒன்றும் இல்லை, பௌத்தம் அது இது என்றுதான் பேசியுள்ளார் அயோத்திதாசர். எங்களது கட்டுரையில் உள்ளதைத் தவிர பெரிதாக ஒன்றும் இல்லை" (தகவல் / கரிகால்வளவன்) என எஸ்.வி.ஆர் பதிலிட்டுள்ளார். தனது களப்பணியில் ஏற்பட்ட முதல் இடையீட்டைக் கவனத்தில் நிறுத்தாமல் வேறொரு தொடர்பாளரின் வழியாக அன்புபொன்னோவியத்தைக் கண்டடைந்தார். முதல் சந்திப்புகளில் நம்பிக்கையற்ற பொன்னோவியம் அலாய்சியசைப் பெரியார் திடலுக்கு நகர்த்திவிட்டார். அயோத்திதாசரின் தமிழன் ஏட்டின் பிரதிகள் சென்னை வாழ் தலித்துகளால் பெரியார்திடல் நூலகத்திற்குக் கிடைத்துள்ளது. தமிழன் இதழ் தங்களிடம் உள்ளதை மறுக்காத திடல் நிர்வாகிகள் "இன்று போய் நாளை வா" என்பதான பிராமணியச் சொல்லாடல் வழியாக அலாய்சியசை அலைக்கழித்தனர்.

அயோத்திதாசர் எனும் யானைப்பலங்கொண்ட அறிவாளியைப் படித்தே தீரவேண்டும் எனும் வேட்கை கொண்ட அலாய்சியஸ் மீண்டும் அன்பு பொன்னோவியத்தை நாடிச்சென்றார். இதனிடையில் அலாய்சியசின் Mphil ஆய்வு முடிவுற்று அவை புத்தகமாக உருப்பெற்று "Nationality without nation in India" எனும் நூலை Oxford University Press 1997ல் வெளியிட்டது. ஆங்கில வாசகருக்கு மிகப் பெரும் சலனத்தை உருவாக்கிய நூலாக இந்நூலை ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். இந்தியாவில் காலனிய ஆட்சிக்கு எதிராக உதிர்க்கப்பட்ட "விடுதலை" "சுதந்திரம்" எனும் சொல்லாடல்கள் உண்மைத்தன்மை படைத்தவை அல்ல. மாறாக சமூக ரீதியாலான அசைவியக்கங்களே "சுதந்திரம்" என்பதின் பதத்தை அடையாளப்படுத்தியிருந்தன. சமூக அசைவியக்கம் என்பது சாதிய ரீதியான போராட்ட வடிவங்களிலேயே சாத்தியமாகின என்பதை இந்நூல் கவனப்படுத்தியது. தமிழ்ப்பரப்பில்

> நிறப்பிரிகை நண்பர் குழாமும் கோ. கேசவனும் எதிரும் புதிருமான விமர்சன நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்த வேளையில் எஸ்.வி. ராஜதுரையும் வ. கீதாவும் இணைந்து "பெரியார் சுயமரியாதை சமதர்மம்" எனும் பெரும்நூல் ஒன்றை எழுதினர். அதன் தொடர்ச்சியாக 1998இல் எஸ்.வி.ராஜதுரை தனித்து 'பெரியார்: ஆகஸ்ட் 15' எனும் நூலையும் அதை ஒட்டியே கேசரியின் 'ஆகஸ்ட் 15; இன்பநாளா? துக்கநாளா?' எனும் நூலைப் பதிப்பித்தார். இவற்றோடு கூடவே 'பெரியார்: மரபும் திரிபும்' எனும் தனி நூலை வெளியிட்டார். மேற்குறித்த நூல்களின் நோக்கமாகப் பெரியார் எனும் பெரும் புனிதம் மார்க்சிய சட்டகம் வழியாகப் புனையப்பட்டது. இவற்றின் ஊடாகத் தலித் தலைவர்களின் தனித்துவமான செயல்பாடுகள் மறைக்கப்பட்டன. அல்லது அவைகளைப் பெரியார் இயக்கத்தோடு இணைத்து எழுதி தலித்துகளின் வரலாறு இருட்டடிப்பு செய்யப்பட்டன.

அய்யா வைகுண்டர், அயோத்திதாசர், பெரியார் என்பதில் இருந்து புலே வரையிலான ஆளுமைகளின் போராட்ட வடிவங்களே சுதந்திரம் என்பதை அர்த்தப்படுத்தின. தேசிய அளவில் பகுதி பகுதியிலான இத்தகைய சாதிய மறுப்புப் போராட்டங்களே தேசியம் என்ற ஒன்றை அர்த்தப் படுத்தின என்பதனை அந்நூல் விவரித்தது.

அலாய்சியஸ் மேற்குறித்த நூலின் தொடர்ச்சியாக 1998ல் "Religion as an Exansiparty Idenity A Budist Movement among the Tamil under colonialism" எனும் நூலை வெளியிட்டார். இந்நூலின் ஒரு பகுதியில் அயோத்திதாசர் பள்ளியினரின் தொடர் மனக்குறையை விவாதித்துள்ளார். அயோத்திதாசர் பள்ளியினரின் திராவிடம், சுயமரியாதை, பிராமணீய எதிர்ப்பு, பகுத்தறிவு, நாத்திகம் என்பதான தத்துவக் கருத்தாக்கங்களைப் பெரியார் அயோத்திதாசரிடமிருந்தே பெற்றுக்கொண்டார். ஆனால் அயோத்திதாசர் குறித்துப் பெரியார் வெளிப்படையாக எத்தகைய பதிலையும் வெளிப்படுத்தவில்லை என்பதான மனக்குமுறலை அலாய்சியஸ் தமது ஆய்விற்கு எடுத்துக் கொண்டார். முதல்பகுதியில் பெரியார் அயோத்திதாசரை அறிந்திருப்பதன் முடிவை ஏழு கண்ணிகளாகத் தொகுத்துவிட்டு இறுதியில் "திராவிட இயக்கத்தின் ஆணிவேராகத் தமிழ் பௌத்த இயக்கங்கள் அமைந்துள்ளன. கருத்துருவ அளவில் மட்டுமல்லாது. இயக்கமாகக் கட்டுவதிலும் பௌத்த சங்கங்களின் பங்களிப்பு பெருமளவில் இருந்துள்ளது. திராவிட இயக்கத்தின் மையக் கொள்கைகளான திராவிடன், பிராமண எதிர்ப்பு, பகுத்தறிவு, சமதர்மம் போன்றவை தமிழ் பௌத்த மூலவரான அயோத்திதாசரிடமிருந்து கடன் வாங்கப்பட்டவை. அதே போல் வட தமிழகத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் திராவிட இயக்கம் வேருன்ற பௌத்த சங்கங்களே அடிப்படையாக இருந்தன. ஏறக்குறைய பௌத்த சங்கங்களின் அழிவிலேயே திராவிட இயக்கம் பிறந்தது (நான் பூர்வபௌத்தன் /86) என்பதான கருத்தமைவை அலாய்சியஸ் வெளியிட்டார்.

அலாய்சியசின் மேற்குறித்த இரண்டு ஆங்கில நூல்கள் காய்தல் உவத்தல் இன்றி அயோத்திதாசரை முதன்மைப் பாத்திரத்திற்கு இழுத்து வந்தன. பெரியார் மீது காத்திரமான விமர்சனத்தை முன்வைத்தன. இவற்றோடு கூடவே அலாஸ்சியசின் உறவு அன்பு பொன்னோவியத்தை நெகிழச் செய்தது. இருவரின் நட்புப் பிணைப்பில் பொன்னோவியத்தின் குடும்பச் சொத்தாகப் பாதுகாக்கப்பட்ட தமிழன் இதழ்கள் அனைத்தும் அலாய்சியசிடம் கொடுக்கப்பட்டது. இந்நேரத்தில் அலாய்சியசிடம் உருவான சந்தோசக் களிப்பை அவர் எப்போதாவது விவரிக்கலாம்.

தமிழன் இதழைப் பெற்றுக்கொண்ட அலாய்சியஸ் டெல்லி நண்பர்களுடன் இந்நூலை எப்படித் தொகுப்பது என்பதான விவாதத்தில் இறங்கி இருக்கிறார். அலாய்சியசும் அவரது டெல்லி நண்பர்களும் 'ஈ.வெ.ரா. பெரியார் சிந்தனைகள்' எனும் தொகுப்பை முன்மாதிரியாக வைத்து 'அயோத்திதாசர் சிந்தனைகள்' தொகுக்கப்பட வேண்டும் எனும் முடிவிற்கு வந்துள்ளனர். இதற்காக ஆனைமுத்து தொகுத்த பெரியார் சிந்தனைகள் நூலைத் தேடும் தருவாயில் சென்னைப் பேராசிரியர் முனைவர் கோ. தங்கவேலுவின் வழிகாட்டுதலின் பேரில் வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் 'ஈ.வெரா பெரியார் சிந்தனைகள்' எனும் தொகுப்பு மூன்றையும் கண்டுபிடித்துப் படியெடுத்து விட்டனர். மேற்குறித்த நண்பர்களின் திட்டமாகப் பெரியார் சிந்தனைகள் தொகுதிகள் ஏன் வினையாற்றின? எனும் கேள்வி சுவாரசியமான பதிலை வெளியிடுகிறது. அயோத்திதாசர் சிந்தனையாளர்.பெரியார் அயோத்திதாசர் சிந்தனையின் வெகுசன வடிவம் என்பதை அனுமானித்துப் பெரியார் சிந்தனைகள் எனும் பதத்தைத் தலித் மனங்களில் இருந்து அகற்றிவிட்டு அயோத்திதாசர் சிந்தனைகள் என்பதை நிறுவுவதே அலாய்சியஸ் மற்றும் அவரது J.N.U. நண்பர்களின் திட்டமாக இருந்திருக்கிறது.

மேலே விவரித்த கடின இலக்குகளோடே அயோத்திதாசர் சிந்தனைகள் எனும் இரண்டு தொகுதியும் 1999 செப்டம்பரில் பாளையங் கோட்டை சவேரியார் கல்லூரியில் செயல்படும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தால் வெளியிடப்பட்டது. நூற்றாண்டு காலமாக மறைத்து வைக்கப்பட்ட பெரும் பூதத்தின் வீச்சு இப்போது நாலா பக்கமும் சுழன்று சுழன்று பயணித்தது. தமிழ்ச் சமூகத்தில் கெட்டுதட்டிப் போய்விட்ட சாதியத்தை நீக்கும் மருந்துகளை அயோத்திதாசர் தனது சித்த ஏட்டின் சிதைந்த பக்கத்தில் இருந்து துலாவித் துலாவி எடுத்துக் கொடுக்கத் தயாரானார். இந்நேரத்தில் அலாய்சியசிற்கு வேறொரு புறத்தில் இருந்தும் வெளியீட்டு அழைப்பு வந்து சேர்ந்தது. தலித் எழில்மலை தலித் சாகித்ய அகாடமி எனும் பதிப்பகத்தை நிறுவி 1988ஆம் ஆண்டு அயோத்திதாசரின் "புத்த மார்க்க வினா விடை" எனும் நூலைப் பதிப்பித்தார். 1998ஆம் ஆண்டு இந்நூல் இரண்டாம் பதிப்பு கண்டது. தொடர்ச்சியாக அயோத்திதாசரின் சிந்தனைகளை

அலாய்சியஸ் தொகுத்திருக்கிறார் என்பதை அறிந்து அவரைத் தொடர்பு கொண்டிருக்கிறார். இப்போது அலாய்சியஸ் வடக்கில் இருந்து தொகுப்பு வருவதைக் காட்டிலும் தெற்கில் இருந்து வருவது கூடுதல் கவனம் பெறும். அத்தோடின்றி அயோத்திதாசரின் வடக்கு வருகை 'பறையன்' என்பதாகச் சுருங்கிவிடும் என்பதான கணிப்புகளில் இருந்து தலித் சாகித்ய அகாடமி அழைப்பை மறுத்துள்ளார்.

தலித் எழில்மலை இத்தகைய நிகழ்வால் சோர்ந்து விடாமல் அயோத்திதாசரின் நூல்களை நான்கு தொகுதிகளாக 1999ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக வெளியிட்டார். 1999 ஏப்ரல் 14ஆம் தேதியில் முதல் தொகுதியான அயோத்திதாசரின் 'ஆதி வேதம்' வெளியிடப்பட்டது. தொடர் நிகழ்வாக 1999 மே மாதத்தில் இரண்டாவது தொகுதி வெளியிடப்பட்டது. இத் தொகுதியில் அயோத்திதாசரின் 'ஸ்ரீ அம்பிகையம்மன் அருளிய திரிவாசகம், ஸ்ரீ அம்பிகையம்மன் வரலாறு' எனும் இரண்டு நூல்கள் இணைக்கப்பட்டன. மூன்றாவது மற்றும் நான்காவது தொகுதி டிசம்பர் 1999ல் வெளி வந்தது. மூன்றாவது தொகுதியில் 'முருகக் கடவுள் வரலாறு, திருவள்ளுவர் வரலாறு, திருக்குறள் கடவுள் வாழ்த்து, விவாக விளக்கம், 'புத்தமார்க்க வினா விடை' ஆகிய நான்கு நூல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. நான்காவது தொகுதியாக இந்திரர் தேச சரித்திரம் எனும் நூல் அமைந்துள்ளது.

மேற்குறித்த நான்கு நூல்களும் தமிழன் வார ஏட்டில் தொடராக வெளிவந்தன. இவற்றை நூல்வடிவம் ஆக்கியவர்கள் கோலார் தங்கவயலைச் சார்ந்த சித்தார்த்த புத்தகச்சாலை எனும் அமைப் பாகும். மேற்குறித்த நான்கு தொகுப்பு வேலை களிலும் ரவிக்குமார், குமு. ஜவஹர் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகப் பதிப்பு முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. இத்தொகுப்புகளில் உள்ள மூன்றாவது தொகுப்பின் பதிப்புரையில் 'இந்நூலில் இணைக்கப்பட்டுள்ள புத்தமார்க்க வினா விடையின் பிரதியொன்றை அம்பேத்கர் தமது நூலகத்தில் வைத்திருந்தார்' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1988இல் இரண்டாம் பதிப்புக் கண்ட புத்தமார்க்க வினா விடையின் பதிப்பாளர் எழில்மலை தமது பதிப்புரையில் 'ஆர். அசோகன், 31, எப். சாம்பியன்ரீல், தங்கவயல்; என்பவரிடமிருந்து மேற்குறித்த நூலைப் பெற்றதாகப் பதிவு செய்திருக்கிறார். அச்சிறு நூலின் xii பக்கத்தில் "1954ல் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சென்னை வந்தபோது அயோத்திதாசர், அப்பாத்துரையார், நரசு ஆகியோர் எழுதிய பௌத்த இலக்கியங்களைத் தேடி சேகரித்துக் கொண்டு போனார்" என்பதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

1988இல் வெளிவந்த புத்தமார்க்க வினாவிடை எனும் நூலின் இரண்டாவது அச்சாக்கம் 1998இல் வெளிவந்துள்ளது. மேற்குறித்த இரண்டு பதிப்புகளில் இல்லாத தகவல் 1999 டிசம்பரில் வெளிவந்த க. அயோத்திதாசப் பண்டிதர் சிந்தனைகளின் தொகுதி மூன்றில் திடும் என இடம்பெற்று விட்டது எப்படி? 2008இல் ரவிக்குமாரைத் தொகுப்பாளராகக் கொண்டு "தீண்டாமையின் வரலாறு" எனும் நூல் வெளிவந்திருக்கிறது. இத்தொகுப்பு குறித்து எழுதியுள்ள ரவிக்குமார் "தமிழன் வார ஏட்டில் தீண்டாமையின் வரலாறு பற்றி அவர் எழுதிய தொடர் கட்டுரை முதன் முதலாக நூல்வடிவம் பெறுகிறது" (பக்கம் 16) எனப் பதிவு செய்துள்ளார். தமிழன் வார ஏட்டில் மேற்குறித்து தொடர் வெளிவந்ததா? ஒரு வேளை ரவிக்குமார் தன் கையிருப்பில் வைத்துள்ள "தமிழன்" வார ஏட்டில் இத்தொடர் வந்திருக்குமோ? அப்படி வந்திருந்தால் தொடர் துவங்கப்பட்ட வாரம் என்ன? முடிவு பெற்ற வாரம் என்ன?

"தீண்டாமையின் வரலாறு" என்பதான தொடர் நிச்சயம் தமிழன் ஏட்டில் வெளிவரவில்லை. மாறாக தீண்டாமை குறித்து சிறு சிறு கட்டுரைகள் தொகுப்பெங்கும் பரவியுள்ளன. அக்கட்டுரைகளை முடிந்த மட்டும் ரவிக்குமார் இத்தொகுப்பில் தொகுத்திருக்கிறார். கவனமாக கட்டுரைகள் வெளிவந்த வார நாட்கள் பதிவு செய்யப்படவில்லை. தொகுத்த கட்டுரைக்கு அவரே "தீண்டாமையின் வரலாறு" எனப் பெயரிட்டு தவறான தகவலான "தொடர்" என்பதை இணைத்து விட்டார். மேற்குறித்த தவறுகள் ரவிக்குமார் பங்கு கொண்ட தலித் சாகித்ய அகாடமி வெளியீட்டில் இருந்து இன்று வரை பயணிக்கிறது. இந்நிகழ்வு அயோத்திதாசருக்கு விளைந்த களங்கமாகும். இக்களங்கமே மேற்குறித்த இரண்டு தலித் பதிப்பக நூல்கள் நம்பிக்கையற்றுப் போய்விட்டதின் காரணமாகும். ஆனால் தொகுப்பு மற்றும் பதிப்பு செயல்பாட்டின் ஆய்வு நேர்மை அலாய்சியஸ் தொகுப்புகளில் தொழில்படுகிறது. அதனாலேயே தான் அலாய்சியசின் தொகுப்புகள் நம்பிக்கைக்குரிய தாக இன்று ஆய்வாளர்களால் சுட்டப்படுகிறது.

III

அலாய்சியசின் அயோத்திதாசரது தொகுப்புகள் வெளிவந்தவுடன் அதனைப் பரப்பும் செயல்பாடு வேகமாக நடைபெற்றது. அயோத்திதாசரது

எழுத்துகளைப் புரிந்து கொள்வதற்காக டி. தருமராஜன் தனது நண்பர்களோடு இணைந்து 'கல்லாத்தி' எனும் அமைப்பைப் பாளையம் கோட்டையில் உருவாக்கினார். அயோத்திதாசரின் எழுத்துகள் கல்லாத்தி ஒழுங்கு செய்த தொடர் கூட்டங்களில் வாசிக்கப்பட்டது. வாசித்தபின் அதற்கான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

இவை நடைபெற்ற தருணத்தில்தான் தொகுதி களின் வெளியீட்டுப் பரவலாக்கமும் தீவிரமாக நடைபெற்றது. சிறுபத்திரிகை வட்டத்திற்குள் அயோத்திதாசர் புகை போன்று சுளுவமாகப் பயணித்தார். வணிகப் பத்திரிகையான குமுதம் இக்காலகட்டத்தில் அயோத்திதாசரின் எழுத்து களை நக்கலடித்துச் செய்தி வெளியிட்டது. திருநெல்வேலியில் அயோத்திதாசர் சிந்தனைகள் வெளியீட்டுவிழா இத்தருவாயில் நடைபெற்றது. தொகுப்பினுள் அயோத்திதாசர் விவாதித்த பொருளை விமர்சிக்காமல் தொ.பரமசிவன் "அயோத்திதாசரது எழுத்துகளைப் பேசாமல் போனதற்கு இடதுசாரிகள் கட்டாயம் பதில் சொல்லியே தீரவேண்டும்" என்பதை வலுவாக முன்வைத்தார். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட இடதுசாரிகள் "அயோத்திதாசரது எழுத்துக்களை இடதுசாரிகள் பேசாமல் போனது இருக்கட்டும். திராவிட இயக்கம் ஏன் பேசவில்லை? என வினவினால் பிரச்சனை பெரிதாக மாறிவிடும்" என பதிலிட்டனர்.

தொகுப்பின் எழுத்துகளை முன்வைத்து விவாதிக்காமல் அயோத்திதாசரை மறைத்தது யார்? என்பதின் துவக்கம் இடதுசாரி, சூத்திர தரப்பில் இருந்து உதிர்க்கப்பட்டது. அதன் பின்னர் தலித்துகள் சற்று சப்தமாகத் திராவிட இயக்கமும் பெரியாரும் அயோத்திதாசரை மறைத்ததாகக் குற்றம் சாட்டினர். தொகுப்புகள் வெளிவந்தபின் தொகுப்பின் எழுத்துகளைத் தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட டி. தருமராஜன் சிறிதும் பெரிதுமான தொடர்கட்டுரைகளை எழுதினார். 2003ஆம் ஆண்டு அயோத்திதாசரை முன்வைத்து 'நான் பூர்வ பௌத்தன்' எனும் நூலை வெளியிட்டார். அந்நூலின் 6வது அத்தியாயம் "ஒரு நூற்றாண்டு மறதி" என்பதாகும். மேற்குறித்த அத்தியாயத்தில் பெரியார் இயக்கம் அயோத்திதாசர் சிந்தனைகளை எப்படி வருவித்துக் கொண்டது என்பதைப் பலமாக நிறுவி விவாதித்தது. அத்தியாயத்தின் ஒரு பகுதியில் "......பரவலாகக் கருதுவது போல் திராவிட இயக்கம் சுயம்புவானதோ, தனியொரு மனிதனின் மூளையில் உதித்ததோ அல்ல, வரலாற்றில் காணப்படும் வேறெந்தவொரு விடுதலை இயக்கத்தினையையும் போல் திராவிட இயக்கத்திற்கும் முன்னோடி இயக்கங்கள் இருந்தன. அவற்றைத் தின்று செரித்தே திராவிட இயக்கம் வளர்ந்து வந்திருக்கிறது. அவ்வாறு செரிக்கப்பட்டதில் தமிழ் பௌத்த இயக்கம் முதன்மையானது" (87) என டி. தருமராசன் முன்வைத்தார்.

கல்விப்புலத்தில் இருந்து இத்தகைய விமர்சனங்கள் வருவதைச் சூத்திர அறிவு விரும்பவில்லை. அதனால் அந்நூல் குறித்து கடுமையான அதிருப்தியைச் சூத்திர அறிவு உற்பத்தி செய்தது. ஏனெனில் கல்விப்புல அறிவே தெளிவான அரசியல் நடவடிக்கையை முன்னெடுக்கும் கருத்தியல் பலம் கொண்டதாகும். மேற்குறித்த சூத்திரப் பதட்டம் இதனாலேயே உருவானது. ஆனால் அப்படி ஒன்றும் இங்கு நடந்துவிடவில்லை. கல்விப்புலத்திற்கு வெளியே எழுதிக்கொண்டிருந்த தமிழ்ச் சிந்தனையாளர் ரவிக்குமாரின் மிகச் சொற்பமான எழுத்து நடவடிக்கைகள் மிகப் பெரும் கவனிப்பைத் தோற்றுவித்தன. ரவிக்குமாரின் எழுத்துகள் அரசியல் தன்மை படைத்ததாகும். அத்தோடு அவர் தன்னை விடுதலைச்சிறுத்தைகள் எனும் தலித் அமைப்போடு அடையாளப்படுத்திக் கொண்டார். விடுதலைச் சிறுத்தைகளின் மாத இதழான தாய்மண் இதழில் "பெரியார் மறு பரிசீலனை" தொடரை எழுதினார். இத்தொடர் முற்றுப்பெறாமல் சூத்திரக் குதியாட்டத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

"பரிசீலனை" தொடர் இடைநிறுத்தம் ஆனதால் ரவிக்குமார் "மீளும் வரலாறு" எனும் புதிய தொடரைத் தொடங்கினார். மேற்குறித்த இரண்டு தொடர்கள் தலித் பரப்பில் நடைபெற்றதால் சூத்திரர்கள் ஒருங்கிணைந்து பெரியாரை விமர்சிக்கும் தாய்மண் இதழில் எழுதுவதில்லை எனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். ரவிக்குமாரை அன்று அவர்கள் எழுத்தில் ஒப்புக்க ஒண்ணா தன்மையில் திட்டித் தீர்த்தனர். அவரது வீட்டிற்கு "Post card" வழியாக "நாகரீக" எழுத்துகளை எழுதி அனுப்பினர். இறுதியில் சூத்திரர்கள் நினைத்தது போன்று அனைத்தும் நிறைவேறிவிட்டது.

பெரியாரிய விவாதம் அயோத்திதாசரது தொகுப்புகளை முன்வைத்து நடைபெற்றது போன்று 2005க்குப் பின்னர் அயோத்திதாசரது எழுத்துகள் விவாதிக்கப்படவில்லை. ராஜ்கௌதமன் 2004ல் க. அயோத்திதாசர் ஆய்வுகள் எனும் நூலை வெளியிட்டார். ப. மருதநாயகத்தின் 'ஒரு பூர்வ பௌத்தனின் சாட்சியம்' எனும் நூல் 2006இல் வெளிவந்தது. 2008இல் அயோத்திதாசர்

ஆய்வு மாணவர் வட்டம் எனும் அமைப்பு அயோத்திதாசரின் விண்ணப்பங்களை மொழி பெயர்த்து "விண்ணப்பம் சொல்லும் விடுதலை" எனும் சிறு தொகுப்பை வெளியிட்டது. 2007ல் சாகித்ய அகாடமிக்காக கவுதம சன்னா க. அயோத்திதாச பண்டிதர் எனும் நூலை எழுதினார். மேற்குறித்த நான்கு நூல்கள் தவிர்த்து ஆங்கிலத்தில் ஞான. அலாய்சியஸ் Dalit subaltern self.- Identifications Iyothee Thassar & Tamizhan எனும் சிறுநூலை 2010இல் வெளியிட்டார் இதற்கு முன்னர் 2004இல் Dalit-subaltern Emergence is Religio-cultural subjectivity Iyothee Thassar & Tamil Buddhism எனும் நூலும் வெளிவந்தது.

அயோத்திதாசரின் தொகுப்புகள் வெளிவந்த பின்னர் இருவர் தவிர்த்த நால்வர் தலித் பரப்பைச் சேர்ந்தவர்கள். இருவரில் ஒருவரான அலாய்சியஸ், அயோத்திதாசரின் ஆய்வாளர். பிறிதொருவரான மருதநாயகம் தொகுப்பைப் படித்து விதந்து ஒரு

> தலித் எழில்மலை அயோத்திதாசரின் நூல்களை நான்கு தொகுதிகளாக 1999ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெளியிட்டார். 1999 ஏப்ரல் 14ஆம் தேதியில் முதல் தொகுதியான அயோத்திதாசரின் 'ஆதி வேதம்' வெளியிடப்பட்டது.

நூலை உருவாக்கினார். மருதநாயகத்தின் அறிவு அயோத்திதாசரை ஏற்க வைத்தது, ஆனால் ஏனைய சூத்திரர்கள் - பொ.வேல்சாமி தவிர்த்த- நேர்மறையாகவும் ஏன் எதிர்மறையாகவும் கூட எந்த ஒரு சிறு கட்டுரையையும் எழுதி விடவில்லை. ஆ. இரா. வேங்கடாசலபதி தாமஸ்ட்ரவுட்மேன் நூலான 'திராவிடச் சான்று' என்பதின் அணிந்துரையில் எல்லிஸ் குறித்த அயோத்திதாசரின் எழுத்துகளைத் தொகுத்திருக்கிறார். இதைத் தாண்டி இடதுசாரி வட்டாரத்தில் ந. முத்துமோகன், இ. முத்தையா, சிவராமன், ஆகியோர் சிறிதும் பெரியதுமான கட்டுரைகளை வடித்துள்ளனர். இதற்கு என்ன காரணம் பெரிதாக இருந்துவிடப் போகிறது? "அயோத்திதாசரும், அவர் தோற்றுவித்த தமிழ் பௌத்த இயக்கமும் புறக்கணிக்கப்பட்டதன் காரணம், அவர் பறையர் என்பதும், அந்த இயக்கம் பறையர் மத்தியிலேயே பரவலாக இருந்தது என்பதும் தானே?" என டி.தருமராஜன் வினவியது சரிதானோ?

IV

அயோத்திதாசரது தொகுப்புகள் எதனை முதன்மைப்படுத்தி இருக்கின்றன? அயோத்திதாசர் தன் எழுத்துகளை எதற்கு மாற்றாக கட்டமைத்தார்? என்பதை விவாதித்து விடுவோம். 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்து தமிழகம் புதுவகை இயக்கத்திற்குத் தயாரானது. திராவிடம் எனும் மொழிக்குடும்பம் எல்லிஸால் வெளிக் கொணரப் பட்டது. பிராமணர்கள் தங்களது சகவாசத்தை ஆங்கிலேயர்களுடன் மேற் கொண்டனர். புதிது புதிதான தொழில்கள் இங்கு அறிமுகப்படுத்தப் பட்டன. நகரங்கள் இங்கு உருவாக்கப்பட்டன. சாலைகள் வழியாகத் தமிழ் தொடர்பாடல்கள் சாத்தியப்படுத்தப்பட்டன. 1850க்குப் பின்னர் ஏராளமான பஞ்சங்கள் மக்களை நிலைகுலைய வைத்தன. புலப்பெயர்வு களும் புதிய நீர்த் தேக்கங்களும் பஞ்சங்களால் உருவாக்கப்பட்டன.

காலனிய ஆட்சி அச்சு உரிமையை அனைவருக்கு மானதாக்கியது. இப்போது புற்றீசல் போன்று ஏராளமான நூல்கள் அச்சிற்குப் படை எடுத்தன. கால்டுவெல்லின் திராவிட மொழிக் குடும்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு சுதேசி என்ற சொல்லும் தமிழன் என்ற சொல்லும் அறிவுத் தளத்தில் முன்னிலைக்கு வந்தன. சுதேசி என்ற சொல் தலித்துகள் தவிர்த்த என்பதாகத் தொழில்பட்டது. தமிழன் என்ற சொல் பிராமணர்கள், பறையர்கள் ஒழிந்த என்பதாக பறைசாற்றப்பட்டது.

இந்து என்ற சொல் இப்போது அறிமுகப் படுத்தப்பட்டது. மனிதத் தலைகளை எண்ணுவதற்கு முனைந்த காலனிய ஆட்சித் தலைகளின் மதங்களை வரையறுத்து அறிவித்தது. இச்சூழலில் சைவமும் தமிழுமாகக் காட்சி தரும் வெள்ளாளர்கள் இந்து என்பதை எதிர்க்கத் துணியவில்லை. உருவாகி வந்த இந்து வாதத்தை அயோத்திதாசர் மட்டுமே எதிர்த்தார். 1881இல் அறிவிக்கப்பட்ட முதல் குடிக்கணக்கு முறையில் தலித்துகளை ஆதித்தமிழர் என்றார். தலித்துகளை இந்து இல்லை என அறிவித்தார். 1891இல் பூர்வ திராவிடர்கள் என்றார். 1901இல் தலித்துகளைப் பூர்வ பௌத்தர்கள் என அறிவித்தார்.

ஒருபுறம் காலனிய ஆட்சியும் மறுபுறம் புற்றீசல் தமிழ் நூல்களும் புதிய வகை சாதியத்தை உற்பத்தி செய்தது. சாதியின் தோற்றத்தைக் காலகாலம் என்பதாக மாற்றியது. தீண்டாமையை வலிந்து

பறையர்கள் மீது திணித்தது. இந்து எனும் பிராமணியத்தின் பெரும் கட்டமைப்பைச் சூத்திர வர்க்கம் எதிர்க்க மறுத்தது. இத்தகைய நவீன பிராமணிய உருவாக்கத்தைக் கண்டுகொண்டதால் அயோத்திதாசர் இந்து என்பதற்கு மாற்றாகப் பௌத்தத்தை முன்வைத்தார். மாற்றாக என்பதைக் காட்டிலும் பௌத்தம் எனும் மெய்க்கு மாற்றாகக் காலனியம் பிராமணியத்தோடு இணைந்து இந்து என்றது. அயோத்திதாசர் இந்து என்பதைப் பொய் என்று அறிவித்தார். பௌத்தத்தை மெய் என்றார். மெய் x பொய் என்பதன் முரணே இந்திய வரலாறு எனக் கட்டமைத்தார். ஒரு விதத்தில் நவீன பிராமணியம் என்பதனை எதிர்க்கும் புரட்சிகர செயல்திட்ட சித்தாந்தத்தை அயோத்திதாசர் கட்டமைத்தார் என்று சொல்லலாம்.

இறுதியாக:

உருவாகி வந்த பிராமணக்கூடுகை என்பதை அதன் முளையிலேயே எதிர்த்தவர் அயோத்திதாசர். இடஒதுக்கீடு எனும் வடிவத்திற்குத் தத்துவார்த்த சித்தாந்தத்தை வழங்கியவர். விவசாயிகளின் பிரச்சனைப்பாட்டை வலுவாக முன்வைத்தவர். அதே வேளையில் நவீன வடிவத்தின் தொழில் வரவையும் ஆதரித்தவர். தென்னிந்திய பரப்பு காலனிய ஆட்சிக்கு எதிரான ஒரு தேசியத்தை கட்டமைத்தது. அக்கட்டமைப்பு பௌத்த தேசியம் என்பதாகப் புரிந்து கொள்ளப்பட்டது. நாடு என்ற ஒன்று உருவாவதற்கு முன்பே சாதி முரணை தேசியம் என்ற ஒன்றின் அதிமுக்கிய முரண்பாடாக அயோத்திதாசர் விசிறினார். அயோத்திதாசரின் இத்தகைய செயல்பாடுகள் தமிழ்ப் பரப்பில் இருந்து துவக்கம் கண்டது.

தலித்துகளின் சிந்தனை வடிவம் தமது தனித்துவத்தைக் கட்டமைத்தது. தங்களின் சுயம்புவான சிந்தனை உருவாக்கத்தை இடையில் பெரியாரிய வடிவம் அபகரித்தது. அபகரித்ததோடு தலித்துகளின் தலைவனாகப் பெரியார் உருமாற்றப் பட்டார். இத்தகைய அடையாளப் புனைவுகள் அயோத்திதாசர் வருகையால் அப்பளம்போல் நொறுங்கிப் போனதையே அயோத்திதாசர் தொகுப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

துணைநூல்பட்டியல்

1. ஞான. அலாய்சியஸ்: அயோத்திதாசர் சிந்தனைகள் I, II, III (நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையம் கோட்டை)
2. அயோத்திதாசர் பண்டிதர் சிந்தனைகள் I, II, III, & IV - தலித் சாகித்ய அகாடமி
3. டி. தருமராசன்: நான் பூர்வ பௌத்தன் (அம்பேத்கர் பண்பாட்டு ஆய்வு மையம், மதுரை)
4. ராஜ்கௌதமன்: தலித் பண்பாடு, கௌரி பதிப்பகம், பாண்டிச்சேரி: தலித் நோக்கில் தமிழர் பண்பாடு: பொய் + அபத்தம் = உண்மை (விளிம்பு டிரஸ்ட், கோவை): க. அயோத்திதாசர் ஆய்வுகள் காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
5. பெ. மருதநாயகம்: ஒரு பூர்வ பௌத்தனின் சாட்சியம் கல்லாத்தி, திருநெல்வேலி.


நன்றி

1. கரிகால்வளவன் : 11.03.2010 & 10.04.2010 & 25.05.2010 ஆகிய நாட்களில் தொலைபேசியிலும் நேரிலுமாகப் பல செய்திகளைப் பகிர்ந்து கொண்டவர்.

■

காந்தி நூல் தொகுப்பு: உயரிய வாழ்க்கையின் எளிய அறிமுகம்

அ. அண்ணாமலை



"உங்களுக்குச் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு. எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையை உணர வேண்டும். எனக்காகக் கோயில்கள் கட்ட வேண்டாம். குளங்கள் வெட்ட வேண்டாம், சாலைகள் அமைக்க வேண்டாம். சிலைகளும் வைக்க வேண்டாம். என் கொள்கைகளை மனத்தில் வைத்து, அவைகளைப் பின்பற்றுங்கள். என் கொள்கைகள் மூலம்தான் நான் வாழ்கிறேன். அதை மட்டும் செய்வீர் களானால் என்பால் மகத்தான அன்பைச் செய்தவர்களாவீர்கள்"

- காந்தி

"அவர் அவ்வப்போது எழுதிய எழுத்துக் களும் சொன்ன வார்த்தைகளும் நிறைந்த சக்தியுள்ளன. இன்றும், என்றும் அதைப் படிப்போர் மனத்தில் எழுச்சியையும், சக்தியையும், தூய்மையான கருத்துகளையும் உண்டாக்க வல்லன. இவைகளைத் தமிழில் வெளியிடுவது தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் சிறந்த சேவையாகும். காந்தி வாழ்ந்த போதும் தமிழ்நாடும் தமிழ் மக்களும் அவர் கொள்கைகளில் பெரிதும் ஈடுபட்டுப் பின்பற்றினார்கள். அவருக்குத் தமிழ் மக்களின் பாலிருந்த அன்பு பெரிது. அவர் மறைந்த பிறகு அவர் நூல்களையெல்லாம் திரட்டி வெளியிட தமிழ்நாடே முதலில் முன் வந்திருக்கிறது" என்ற முன்னுரையைத் தமிழ்நாடு காந்தி நினைவு நிதியால் அமைக்கப்பட்ட காந்தி நூல் வெளியீட்டுக் கழகம் காந்தி நூல்கள் தொகுதியில் கொடுத்திருக்கிறார்கள்.

காந்தி வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த பல உலகத் தலைவர்களுக்குக் கிட்டாத அரிய வாய்ப்பு காந்திக்குக் கிடைத்தது. கிழக்கு நாகரிகத்தில் பிறந்து, வளர்ந்துவந்த காந்திக்கு மேற்கத்திய நாகரிகத்தோடு வாழும் வாய்ப்புக் கிடைக்கிறது. அந்நாகரிகத்தோடு

இணைந்து, வாழ்ந்து பின்னர் அதிலிருந்து விலகி வருகிறார். அதேபோல் உலகில் அன்றிருந்த தொன்மையான கலாசாரம், நாகரீகம் தென் ஆப்பிரிக்காவில் காந்தி வாழ்ந்த போது அவருக்குப் பரிச்சயமாகிறது. அங்கெல்லாம் சென்றார், வாழ்ந்தார் என்று வந்தவரில்லை காந்தி. அங்கெல்லாம் அந்தந்த நாகரிகங்களோடு மோதலை (encounter) ஏற்படுத்தி அதனின்று வளர்ந்து வந்தவர். தலைவராக வளர்ந்தாலும் மக்களோடு மக்களாக வாழ்ந்து, தன்னுடைய அனுபவத்தில் வளர்ந்தவர். குறிப்பாக தென்னாப் பிரிக்க அனுபவம் காந்தியைப் புடம் போட்ட தங்கமாக்கியது.

ஆகவே அவருடைய எழுத்துக்களும் பேச்சுக் களும் மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்ப தாக இருந்தது. உண்மையை உணர்ந்த அனுபவ எழுத்துக்களாய் மிளிர்ந்தன. ஆதலால் தான் "என் வாழ்க்கையே செய்தி" என்று உலகுக்கே கூறினார். தன்னுடைய ஒவ்வொரு வினாடியையும் வாழ்ந்து பார்த்தவர் காந்தி. தான் செய்த காரியங்களை வெளியுலகுக்குத் தைரியமாகத் தெரிவித்தவர் காந்தி. மக்கள் மத்தியில் தன்னைப் பற்றிய கருத்தாக்கம் இதனால் பாதிப்பு அடையுமா என்று கிஞ்சித்தும் எண்ணாது கருத்துகளை வெளியிட்டவர்.


ஆகவேதான் அவருடைய எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொகுத்து நூலாக வெளியிட வேண்டும், அது தமிழ்மக்களுக்குப் பலனளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் 17 தொகுதி களாக வெளியிட்டார்கள். காந்தி நூல் வெளியீட்டுக் கழகத் தலைவராக திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியாரும் செயலாளராக திரு கோ.வேங்கடாசலபதி அவர்களும் மற்றும் திரு. கே.காமராஜ் நாடார், திரு. சி. சுப்பிரமணியம், திரு. எம். பக்தவச்சலம், திரு. நா.மரா. சுப்புராமன், அ. வேதரத்தினம் பிள்ளை, திரு. ம.ப. பெரியசாமி தூரன், திரு மு. அருணாசலம், திரு ரா. விநாயகம், திரு. லா.நா. கோபாலசாமி, திரு. ரா. வேங்கடராஜுலு, திரு. நா. ராமஸ்வாமி, திரு. கி.வா. ஜகந்நாதன், திரு. செ.மெ. பழனியப்ப செட்டியார் ஆகியோரை உறுப்பினர்களாகவும் திரு. ரா. வேங்கடராஜுலுவை ஆசிரியராகவும் கொண்டு இந்தத் தொகுதிகள் 1957 செப்டம்பரில் வெளியிடப்பட்டன. இந்த முதல் தொகுப்பில் ஒரு தொகுப்பின் விலை ரூ.7.50 மட்டுமே! 17 தொகுதிகளும் சேர்த்து வெளியிடப் படவில்லை. இக்கழகத்தின் அலுவலகம் முதலில் தக்கர்பாபா வித்யாலயத்தில்தான் இயங்கியது. பின்னர் இது அரசினர் தோட்டத்திற்குச் சென்றது. அந்த தக்கர்பாபா வித்யாலயத்துடன் தொடர் புடைய நான் இந்த அறிமுகத்தை எழுதுவது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. தொகுப்பு நூலுக்கான ஆசிரியரான திரு. ரா. வேங்கடராஜுலு இறந்த பிறகு அந்தப் பணியை சிரமேற்கொண்டவர் திரு. ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள்.

1961இல் இரண்டாம் பதிப்பும், 1962இல் மூன்றாம் பதிப்பும், 1965இல் நான்காம் பதிப்பும் வெளியிடப்பட்டன. இதற்கான இடவசதி மற்றும் பொருள்வசதிகளை அன்றைய மாநில அரசு ஏற்றுக்கொண்டது. 1967க்குப் பின் வந்த மாநில அரசு ஏனோ காந்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவ்வளவு நல்லதல்ல என்று நினைத்து சிறுகச் சிறுக காந்திய தீபத்தை அணைக்க எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டது. காந்தியடி களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் 17வது தொகுதியை வெளியிட்டுத் தன்னுடைய பணியை நிறைவுசெய்து கொண்டது இக்கழகம். அவலை நினைத்து உரலை இடித்தக் கதையாக காங்கிரஸை எதிர்க்க வேண்டும் என்பதற்காக காந்தியை அழித்துவிட்டது. ஆனால் காலம் செய்த கோலம் அந்த காங்கிரஸோடுதான் இன்று கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. இந்த "அரசியலில்" காந்தி கரைந்து விட்டார். காந்தி இந்த அரசியலுக்கெல்லாம் அப்பால் அறியப்படவேண்டியவர் என்பதை ஏனோ பலர் மறந்துவிடுகிறார்கள்.



அ. அண்ணாமலை: தற்போது காந்தி கல்வி நிலையத்தின் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். சென்னை தக்கர் பாபா வித்தியாலயத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றி இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி கொடுத்து வருகிறார். காந்தியத்தில் மிகுந்த ஆழமான ஈடுபாட்டோடு அதை வாழ்க்கை நெறியாகவும் ஏற்று வாழ்ந்து வருபவர். 'காந்தியின் கல்விச் சிந்தனைகள்' என்ற நூலின் தொகுப்பாசிரியர்.





தொகுதி 1 தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம், இந்திய சுயராஜ்யம் (1957)

தொகுதி 2 அகிம்சா தருமம் (1958)

தொகுதி 3 சத்தியசோதனை (1959)

தொகுதி 4 ஆரோக்கிய வாழ்வு (1959)

தொகுதி 5 கதரும் கைத்தொழிலும் (1960)

தொகுதி 6 பொருளாதார உறவு (1960)

தொகுதி 7 சமூக சீர்திருத்தம் (1961)

தொகுதி 8 சத்தியாகிரகம் (1961)

தொகுதி 9 சமூக ஒற்றுமை (1962)

தொகுதி 10 கடவுளும் சமயமும் (1963)

தொகுதி 11 பகவத் கீதை (1964)

தொகுதி 12 கல்வி (1964)

தொகுதி 13 அரசாங்கத்திற்கு காந்திஜியின் கடிதங்கள் (1965)

தொகுதி 14 தலைவர்களுக்கு காந்திஜியின் கடிதங்கள் (1966)

தொகுதி 15 கிராம சுயராஜ்யம் (1967)

தொகுதி 16 சகோதரிகளுக்கு காந்திஜியின் கடிதங்கள் (1968)

தொகுதி 17 பொருட்குறிப்பு/அகரவரிசை (அனைத்துத் தொகுதிகளுக்கும்) (1969)

ஆங்கிலத்தில் வந்துள்ள நூல்களில் முதல் தொகுதி 1958-இல் தான் வந்தது. ஆனால் அதற்கு ஒரு வருடத்திற்கு முன்னரே தமிழில் வந்தது தமிழகத்திற்குப் பெருமை. அதேபோல ஆங்கிலத் தொகுதிகள் காலவரிசைப்படி வெளியிடப்பட்டது. ஆனால் தமிழிலோ கருத்துக்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு தொகுதிக் குள்ளும் துணைத்தலைப்புகள் காலவரிசைப்படி தரப்பட்டுள்ளதால் காந்தியின் கருத்தாக்க வளர்ச்சியையும் நம்மால் காண இயலும். பலருடைய பக்தியோடு கலந்த 12 ஆண்டுகள் கடுமையான உழைப்பு இந்தத் தொகுதிகளில் தெரியும். அதேபோல தமிழாக்கத்திலும் பலர் பங்கெடுத்துக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் ஒருவரோ அல்லது பலர் சேர்ந்தோ இந்தப் பணியை நிறைவு செய்திருக்கிறார்கள். இப்பணியில் ஈடுபட்டவர்கள் அநேகமாக காந்தியோடு வாழ்ந்தவர்கள். 50களின் இறுதியில் என்பதால் அன்றைய தமிழைத் தற்போது படிக்கும்போது சற்றுக் கடினமாக இருக்கிறது.

தொகுதி - 1 தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம், இந்திய சுயராஜ்யம் (1957):

காந்தியாய் சென்று மகாத்மாவாக உருவான ரசவாத வரலாறு. தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம். இந்த இருண்ட கண்டத்திலிருந்துதான் காந்திக்கு ஒளி கிடைத்தது. நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இல்லாமல் தன்னுடைய மன ஓட்டத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். அதேபோல் அடுத்த புத்தகம் இந்திய சுயராஜ்யம். நூறு ஆண்டுகள் கடந்த பின் இப்போதும் ஆர்வமாக அனைவராலும் படிக்கப்பட்டுவரும் காந்திய சிந்தனைகளின் சாராம்சம்தான் இந்த இந்திய சுயராஜ்யம்.

இத்தொகுதியில் மகாத்மா காந்தி எழுதிய தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம், இந்திய சுயராஜ்யம் ஆகிய இரு நூல்களையும், தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம் பற்றி காந்தி எழுதிய கட்டுரைகள், சொற்பொழிவுகள், சிறை அனுபவங்கள், சிறையிலிருந்து எழுதிய கடிதங்கள் ஆகியவற்றைக் காணலாம். இத்தொகுதியை திரு. தி.சு. அவினாசிலிங்கம், திரு. நா.ம.ரா. சுப்புராமன், டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் மற்றும் திரு. ரா.வேங்கடராஜுலு ஆகியோர் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்கள்.

தொகுதி - 2 அகிம்சா தருமம் (1958):

அகிம்சை பற்றி முழு விளக்க நூல் எழுதியாக வேண்டும் என்றால், நான் இறந்த பிறகே அதை எழுத இயலும். அப்படி எழுதினால் கூட அகிம்சையைப் பற்றிய முழு விளக்கத்தையும் கொடுக்கத் தவறியதாகவே அது இருக்கும் என்பதையும் எச்சரிக்க விரும்புகிறேன் என்றார் காந்தி. அகிம்சை என்ற வித்தையைக் கற்றுக் கொண்டு பலருக்கு அதனைப் போதிக்கும் ஆசிரியராக இல்லாது, ஒவ்வொரு நாளும் அகிம்சையின் ஆற்றலைப் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கிறார். அவர் இந்தத் தத்துவத்தில் வைத்திருந்த கருத்துகளை வெவ்வேறு காலகட்டத்தில் கூறியற்றை, எழுதியவற்றைத் துணைத்தலைப்புக்களில் அழகாக நமக்குக் கொடுத்திருக்கிறார். தமிழாக்கம் செய்த ஆசிரியர் திரு ரா.வேங்கடராஜுலு.

தொகுதி - 3 சத்தியசோதனை (1959):

ஒளிவுமறைவின்றி தன்னுடைய வாழ்க்கையைப் படம்பிடித்து நமக்குக் கொடுத்ததற்குக் காரணம் தன் வாழ்க்கைதான் செய்தி என்பதால். கொள்கை வேறு, வாழ்க்கை வேறு என்று பிரித்து வாழாது இரண்டும் ஒன்றே என்றார். ஏனென்றால் அவருடைய (சமய)நம்பிக்கையே கடவுள் வேறு நாம் வேறு அல்ல (அத்வைதம்) என்பதுதானே! ஏறத்தாழ 80 ஆண்டுகள் ஆனாலும் இன்றுகூட புத்தகக் கண்காட்சியில் அதிகம் விற்பனையாகும் நூல் என்றால் அது சத்தியசோதனைதானே!

1920க்குப்பின் 1948 வரையில் அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள், லண்டனில் மாணவராயிருந்த போது அவர் எழுதிய நாட்குறிப்பு, கடிதங்கள், நேட்டால் இந்தியன் காங்கிரஸ் அறிக்கை முதலிய பல விவரங்களைக் கொண்டது. தமிழாக்கம் ஆசிரியர் திரு ரா. வேங்கடராஜுலு.

தொகுதி - 4 ஆரோக்கிய வாழ்வு (1959):

காந்தி எழுதிய ஆரோக்கியத் திறவுகோல். புலனடக்கம், உணவையும் உணவுச் சீர்திருத்தத்தையும் குறித்து அவர் எழுதியவை இந்தத் தொகுதியில் அடங்கும். இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக எழுதியது. இந்திய சுயராஜ்யம் என்றால் இந்தியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காக எழுதியதுதான் ஆரோக்கியத் திறவுகோல். அகிம்சையில் அவர் செய்த ஆய்வுகளுக்கு இணையாக உணவில் அவர் ஆய்வு செய்திருக்கிறார். இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பதனை நமக்கு விளக்கிக் கொடுத்திருக்கிறார். புவி வெப்பமயமாதல் பற்றி சிந்திக்கும் நமக்கு அருமருந்து காந்தியடிகளின் எளிமையான வாழ்க்கை முறையும் உணவு முறையும். தமிழாக்கம் செய்தவர் திரு கு. அழகிரிசாமி அவர்கள்.

தொகுதி - 5 கதரும் கைத்தொழிலும் (1960):

நடப்பதைப் போராட்டமாக்கியவர் காந்தி. அதேபோல் நூற்பதையும் போராட்டமாக்கினார். கதரின் முக்கியத்துவத்தைக் குறித்தும், மக்களின் வறுமையையும் பசியையும் போக்குவதற்கு உற்ற துணையாக எவ்வாறு ராட்டை இருக்கிறது, கிராமக் கைத்தொழில்களின் வளர்ச்சியின் அவசியம் என்பது பற்றி காந்தி எழுதிய, பேசிய செய்திகளின் தொகுப்பு இந்நூல். மூன்று பாகங்கள் உள்ள இந்நூலின் முதல் இரண்டு பாகங்களைத் தமிழாக்கம் செய்தவர் திரு ரா.வேங்கடராஜுலு, மூன்றாவது பாகத்தைத் தமிழாக்கம் செய்தவர் திரு. க.திரவியம் அவர்கள்.

தொகுதி - 6 பொருளாதார உறவு (1960):

மனித வாழ்க்கையின் அடிநாதமாக இருப்பது பொருளாதார உறவு அல்ல என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு வாழ்ந்தவர் காந்தி. ஆகவே இப்பொழுதிருக்கும் பொருளாதார சிக்கலுக்குப் பயனுள்ள படைப்பு, இந்நூல். சுயராஜ்யம், சோஷலிஸம், கம்யூனிசம், செல்வத்திற்கும் உழைப்புக்கும், முதலாளிக்கும், தொழிலாளருக்கும் இருக்க வேண்டிய சரியான உறவைக் குறித்தும், வேலைநிறுத்தங்கள், முதலாளிகளின் கடமை, தொழிலாளர்களின் பொறுப்பு, தொழில் உறவுக்கு இருக்க வேண்டிய முக்கியமான அம்சங்கள் ஆகியவற்றைக் குறித்தும் காந்தி கூறியவற்றைத் திரட்டிக் கொடுத்திருக்கிறது இந்நூல். இந்நூலின் முதல்பாகத்தை திரு. ந. இராமரத்தினம் அவர்களும், இரண்டாம் பாகத்தைத் திரு. அழகிரிசாமி அவர்களும் மூன்றாம் பாகத்தைத் திரு. ரா. வேங்கடராஜுலு அவர்களும் தமிழாக்கம் செய்து தந்துள்ளனர்.

தொகுதி - 7 சமூக சீர்திருத்தம் (1961):

சமூக அவலங்களை, ஏற்றத் தாழ்வுகளைக் காந்தியைப் போன்று சாடியவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. சமூக அவலங்களை எதிர்த்துப் பலர் போராடியிருக்கிறார்கள். பலர் அவர்களின் சமூகம் சார்ந்து மட்டும் பாடுபட்டார்கள். ஆனால் ஜாதி கடந்து, மொழிகடந்து, இனம் கடந்து ஏன் நாடுகடந்து முழுமையான சமுதாயப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் காந்திதான். குழந்தைத் திருமணம், பெண்களின்

நிலை, தீண்டாமை ஒழிப்பு போன்ற எண்ணற்ற பிரச்சனைகள் பற்றி காந்தியின் எண்ணங்களின் தொகுப்பு. காந்தியின் சமூக சிந்தனையின் வளர்ச்சியினைக் குறித்து ஆய்வு செய்வோர் படிக்க வேண்டிய தொகுப்பு. திரு ரா. வேங்கடராஜுலு அவர்களும் திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்களும் தமிழாக்கம் செய்து தந்துள்ளனர்.

தொகுதி - 8 சத்தியாகிரகம் (1961):

காந்தியின் வாயிலாக அகிம்சையின் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தது முதல் முறையாகப் போரையே பார்த்த இப்பூவுலகு. மக்கள் சக்தியின் ஆற்றல் அணுகுண்டின் ஆற்றலை விட அளப்பரியது என்பதை உலகுக்கு உணர்த்திய காந்தியடிகளின் அகிம்சைப் போராட்டம், சத்தியாகிரகத்தின் தத்துவங்கள், சத்தியாகிரகிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், சத்தியாகிரகப் போராட்டத்தின் தன்மை, அதை நடத்தும் முறை என்று விரிவாக அவர் செய்த நடவடிக்கைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. திரு ரா.வேங்கடராஜுலு அவர்களும் திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்களும் தமிழாக்கம் செய்து தந்துள்ளனர்.

1967க்குப் பின் வந்த மாநில அரசுகளோ ஏனோ காந்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவ்வளவு நல்லதல்ல என்று நினைத்து சிறுகச் சிறுக காந்திய தீபத்தை அணைக்க எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டது. காந்தியடிகளின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் 17வது தொகுதியை வெளியிட்டு தன்னுடைய பணியை நிறைவுசெய்து கொண்டது இக்கழகம். அவலை நினைத்து உரலை இடித்த கதையாக காங்கிரஸை எதிர்க்க வேண்டும் என்பதற்காகக் காந்தியை அழித்துவிட்டது. ஆனால் காலம் செய்த கோலம் அந்த காங்கிரஸோடுதான் இன்று கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. இந்த “அரசியலில்” காந்தி கரைந்துவிட்டார். காந்தி இந்த அரசியலுக்கெல்லாம் அப்பால் அறியப்படவேண்டியவர் என்பதை ஏனோ பலர் மறந்துவிடுகிறார்கள்.

தொகுதி - 9 சமூக ஒற்றுமை (1962):

ஒட்டுமொத்த இந்தியர்களுக்காகத் தென்னாப்பிரிக்காவில் போராடிய காந்தி, 1915இல் இந்தியா திரும்பிய பின் சந்தித்த சவால் நம்மிடையே இருக்கும் பல்வேறு பிரிவினைகள், மதத்தின் பெயரால், இனமொழியின் பெயரால் என்று இன்னும் எத்தனை எத்தனையோ. ஒன்றுபட்டுப் போராட்டம் நடத்த எத்தனை தடைகளை உருவாக்க முடியுமோ அத்தனை தடைகளை ஆங்கிலேயர்கள் ஏற்படுத்த அத்தனை ஏற்பாடுகளையும் நமது சமூகச் சூழல் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இதனைக் களைந்தெறிய காந்தி எடுத்துக்கொண்ட முயற்சிகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சமூக நல்லிணக்கம் என்ற சொல்லாடல் மத நல்லிணக்கத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது. திரு ரா. வேங்கடராஜுலு அவர்களும் திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்களும் மற்றும் திரு மு. அருணாசலம் அவர்களும் தமிழாக்கம் செய்து தந்துள்ளனர்.

தொகுதி - 10 - கடவுளும் சமயமும் (1963):

காந்தி சமயவாதியா அல்லது அரசியல்வாதியா அவர் யார் என்று பொருத்திப் பார்க்கும் போக்கு நம்மிடையே அதிகமாக உள்ளது. அரசியலுக்குச் சற்றேனும் சம்பந்தம் இல்லாத தார்மீக ஒழுக்கங்களைப் பற்றி அதிகம் பேசிய அரசியல் வாதியாக அறியப்படுகிறார். கடவுள் பற்றியும் காந்தியுடைய ஆன்மீக எண்ண ஓட்டங்களையும் மிகக் கவனமாகப் பதிவு செய்திருக்கிறார்கள். கடவுள் தான் உண்மை என்ற நிலையிலிருந்து உண்மைதான் கடவுள் என்ற நிலைக்கு அவர் செய்த ஆன்மீகப் பயணத்தின் தொகுப்பே இந்நூல். திரு. ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்.

தொகுதி - 11 பகவத் கீதை (1964):

பகவத் கீதை என்னுடைய வழிகாட்டி. எப்பொழுதெல்லாம் எனக்குக் குழப்பங்கள் வருகிறதோ அப்பொழுதெல்லாம் கீதைதான் எனக்குப் பாதை அமைத்துத்தருகிறது. வன்முறையான போரை அர்ஜுனன் செய்ய மறுக்கும்போது அவரை வன்முறையான போருக்குச் செல்ல ஆயத்தப்படுத்தியது கீதை என்றே அறியப்பட்ட நூல் அகிம்சையே வாழ்க்கை என்று வாழ்ந்த காந்திக்கு எவ்வாறு வழிகாட்டிட முடியும்? அவருடைய எண்ண ஓட்டங்களுடன் அவரே மொழிபெயர்ப்பு செய்த அனாசக்தியோகமும்

இந்தத் தொகுப்பில் அடங்கியுள்ளது. அதற்கு காந்தியின் செயலாளராகப் பணிசெய்த மகாதேவ் தேசாய் அவர்களின் முன்னுரையும் இடம் பெற்றிருக்கிறது. திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்.

தொகுதி - 12 – கல்வி (1964)

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழி நம்முள் ஆழப்பதிந்து போனதால்தான் என்னவோ அதை முளையிலேயே கிள்ளி எறிகிறோம். ஆரம்பக் கல்வி என்ற பெயரில் பள்ளி, கல்வி என்றாலே ஒரு வெறுப்பை, அருவருப்பைக் குழந்தைகளிடம் ஊட்டி வருகிறோம். சமச்சீர் கல்வி என்று இப்பொழுது பேசி வருகிறோம். தமிழில் கேட்பதற்கு மிகவும் நன்றாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில்...... சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அதிக இடங்கள் காலியாக உள்ளதால், பொறியியல் படிப்பில் சேருவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்களை இன்னும் குறைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இது கல்வியை மேலும் வணிகப்படுத்தவே பயன்படும். இந்தச் சூழலில் வாழ்க்கைக்கான கல்வியான ஆதாரக்கல்வியைப் பற்றிய காந்தியின் எழுத்துகள், அவரின் பரிசோதனைகள் என்று தேவையான கருத்துகள் அடங்கிய தொகுப்பு இந்நூல். திரு. ந. இராமரத்தினம் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்.

தொகுதி - 13 – அரசாங்கத்திற்கு காந்திஜியின் கடிதங்கள் (1965):

தொலைபேசி வந்தபிறகு குற்றுயிரும் குலை உயிருமாக இருந்த கடிதம் எழுதும் பழக்கம் கைபேசி வந்தபிறகு சவக்குழிக்கே போய்விட்டது. கடிதம் என்றால் அரசாங்கத்திற்கு நாம் எழுதுவது அல்லது வணிக நிறுவனங்கள் தமது பரிவர்த்தனைகளுக்காக எழுதுவது என்றாகிவிட்டது. நமது எண்ணங்களை, நிலைப்பாட்டைத் தெளிவாக அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வது அகிம்சைப் போராட்டத்தின் ஒர் அங்கம். அதனை காந்தியடிகள் எவ்வாறு செய்துள்ளார் என்பதை நாம் அனைவரும் கற்றுக் கொள்ளவேண்டும். எங்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், நம்முடைய கருத்து ஆழமாக அவர்களின் மனதில் பதிய எவ்வாறு எழுத வேண்டும், அதில் நாம் கடைபிடிக்க வேண்டிய மரியாதையான விஷயங்கள் எனப் பலவற்றை நாம் கற்றுக் கொள்ளலாம். ஒரு வக்கீலின் திறமையை, அரசாங்கத்திற்கு அவர் எழுதிய கடிதங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். திரு ரா.வேங்கடராஜுலு அவர்களும் திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்களும் தமிழாக்கம் செய்து தந்துள்ளனர்.

தொகுதி - 14 தலைவர்களுக்கு காந்திஜியின் கடிதங்கள் (1966):

தன்னுடைய சக தோழர்களுக்கும் மற்ற பிற தலைவர்களுக்கும் காந்தி எழுதிய கடிதத் தொகுப்பு. 1894, ஜூலை 5ஆம் நாளன்று தாதாபாய் நௌரோஜிக்கு அவர் எழுதிய கடிதத்துடன் இத்தொகுப்பு ஆரம்பமாகிறது. கோகலே, திலகர் என்று இந்தியத் தலைவர்களுக்கும் லியோ டால்ஸ்டாய் போன்ற ரஷ்ய சிந்தனையாளர் வரை காந்தி எழுதிய கடிதங்களின் தொகுப்பு. திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்.

தொகுதி - 15 கிராம சுயராஜ்யம் (1967):

காந்தி சொன்ன ராம ராஜ்யம் என்பது கிராம சுயராஜ்யம் தான் என்று பலமுறை அவரே எடுத்துச் சொன்னபோதிலும் பலர் இதைத் திரித்துக் கூறிவந்தார்கள். அவர் இந்து ராஜ்யத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறார் என்றார்கள். அந்தக் காலத்தில் மட்டும் அல்ல. இந்தக் காலத்தில் கூட அவர் எழுதிய இந்திய சுயராஜ்யம் என்ற புத்தகத்தைக் குறிப்பிடும் போது முற்போக்கு சிந்தனையாளர்கள், அறிவுஜீவிகள் என்று தங்களை அறிவித்துக் கொள்ளும் நண்பர்கள் கூட இந்து சுயராஜ்யம் என்று போடுகின்றார்கள். இது அவர் எழுத்தின் குறையா அல்லது நம் பார்வையின் குறைபாடா? கிராம வளர்ச்சி பற்றி மட்டும் அல்லாது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அமைச்சர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அவர்களுடைய கடமை என்ன என்பதைப் பற்றியெல்லாம் காந்தியின் கருத்தின் தொகுப்பே இந்நூல். முதல் இருபாகங்களைத் திரு. அ. இராமசாமி அவர்களும் மூன்றாவது பகுதியைத் திரு. ஜெயமணி சுப்பிரமணியம் அவர்களும் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

தொகுதி - 16 சகோதரிகளுக்கு காந்திஜியின் கடிதங்கள் (1968):

சற்றேறக்குறைய 1000 கடிதங்களுக்கு மேல் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மீரா பென், இராஜ்குமாரி அமிருத் கௌர் என்று பல இயக்க சகோதரிகளுக்கு அவர்களுடைய சொந்தப் பிரச்சனைகளுக்காகவும் அரசியல் பிரச்சனைகளுக்காகவும் எழுதிய கடிதங்கள். ஒரு தலைவன் எவ்வாறு தம்முடைய சக போராட்ட வீரர்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்டு

அவர்களுடைய வாழ்க்கையுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்பதற்கு அன்பான இந்தக் கடிதங்கள்தாம் சாட்சியாய் இன்று விளங்குகின்றன. சில கடிதங்களைப் படிக்கும் போது அவர்களுக்குள் நிலவிய அந்நியோன்யம் தெரிகிறது. திரு. க. திரவியம் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்.

தொகுதி – 17 – பொருட்குறிப்பு / அகரவரிசை (அனைத்துத் தொகுதிகளுக்கும்) (1969):

இன்று கணினி வந்தவுடன் இது போன்ற அகரவரிசைப் பட்டியல், பொருட்குறிப்பு எல்லாம் விநாடியில் முடித்துவிடலாம். இந்த வசதிகள் இல்லாத காலத்தில் வாசகர்களுக்குப் பயன்படும்

> காந்தியின் நூல்கள் தமிழாக்கத்திலும் பலர் பங்கெடுத்துக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியும் ஒருவரோ அல்லது பலர் சேர்ந்தோ இந்தப் பணியை நிறைவு செய்திருக்கிறார்கள். இப்பணியில் ஈடுபட்டவர்கள் அநேகமாக காந்தியோடு வாழ்ந்தவர்கள். 50களின் இறுதியில் என்பதால் அன்றைய தமிழைத் தற்போது படிக்கும்போது சற்றுக் கடினமாக இருக்கிறது.

விதத்தில் இந்த 17வது தொகுதியைத் தயாரித்து வெளியிட்டுள்ளார்கள் காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தினர். இதுவே நிறைவான தொகுதியாகவும் உள்ளது. இதில் காந்தியின் வாழ்க்கைக் குறிப்பையும் இணைத்துள்ளார்கள். இந்தப் பதினாறு தொகுதிகளுக்கும் செல்ல வழியாய் அமைந்துள்ளது இந்தப் பதினேழாவது தொகுதி.

இந்த நூல் தொகுதியில் வராத அதே சமயம் மிகவும் பொருத்தமாக காந்தி நூற்றாண்டு விழாவின் போது வெளியிடப்பட்டது "தமிழ்நாட்டில் காந்தி". திரு.அ. இராமசாமி அவர்களின் கடின உழைப்பால் உருவானது. காந்தி தமிழ்நாட்டிற்கு 20 முறை வந்துள்ளார். தமிழ்நாட்டிற்கும் காந்திக்கும் உள்ள தொடர்பை, தமிழருடன் காந்திக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஆவணப்படுத்தும் தொகுதியாகத் தமிழ்நாட்டில் காந்தி அமைந்துள்ளது. 50 ஆண்டுகளுக்குப் பின்னரும்கூட இதுபோன்றதொரு ஆய்வு நூலை யாரும் எழுதவில்லை. இதனை 18வது தொகுதியாகக் கொள்வதில் தவறேதுமில்லை.

மறுபதிப்பு (2005):

இத்தொகுதிகள் அனைத்தும் மற்றும் அரங்க. சீனிவாசன் அவர்கள் எழுதிய "காந்தி காதை" என்ற நூலை 19வது தொகுதியாகவும், "காந்தியடிகளின் சம காலத்தவர்கள்" என்ற தொகுப்பை 20வது தொகுதியாகவும் சேர்த்து மறுபதிப்பு செய்து வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தில் வர்த்தமானன் பதிப்பகம் களத்தில் இறங்கியது. அவர்களுக்கு அனைத்துப் பொருள் உதவிகளையும் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்கள் செய்து 20 தொகுதிகளையும் மிகவும் சிறந்த முறையில் வெளியிட உதவி செய்தார்கள். இதுவரை 4 மறுபதிப்புக்கள் வந்துள்ளது. இதில் 20வது தொகுதியில் "காந்தியடிகளின் சம காலத்தவர்கள்" என்று காந்தியோடு இணைந்து வேலை செய்த தலைவர்களைப் பற்றி எழுதலாம் என்று திட்டமிட்டிருந்ததாகவும் அது இயலாமல் போனதால் "காந்தியடிகளின் முன்னோடிகள்" என்று ஆண்டாள், ஆதிசங்கரர், இராமாநுஜர் போன்று 11 ஆன்மீகப் பெரியோர்களைப் பற்றி எழுதி வெளியிட்டுவிட்டார்கள். ஆனால் இவ்வரிசையில் இது ஒவ்வாது நிற்கிறது. அடுத்து வரும் பதிப்பிலாவது காந்தியடிகளின் முன்னோடிகள் என்பதை நீக்கிவிட்டு காந்தியடிகளின் சமகாலத்தவர்கள் பற்றிய விவரங்களைக் கொடுப்பதே சரியாக இருக்கும்.

காந்திக்கு எழுதுவதில் ஆர்வம் அதிகம். அதேபோல் தன்னுடைய எண்ணங்களை அனைவரோடு பகிர்ந்து கொள்வதிலும் அவ்வளவு ஆனந்தம் அவருக்கு. அந்தப் பணியைத் திறம்படச் செய்திருக்கிறார்கள் காந்தி நூல் வெளியீட்டுக் குழுவினர்.

■

பாரதி படைப்புகளின் பதிப்பு முயற்சிகளும் பிரச்சனைகளும்

ந. இரவீந்திரன்



காத்திரமான தமிழ்ப் படைப்புகளில் இன்று அதிக வெளியீடுகளைக் காண்பனவாய் திருக்குறள், பாரதி - பாரதிதாசன் படைப்புகள் ஆகியன காணப்படு கின்றன. திருக்குறள் ஒட்டுமொத்தத் தமிழுணர்வு சார்ந்த திருப்தியை நிறைவுசெய்வது. இந்தியத் தேசியம், சமூகவிடுதலை, சர்வதேச நோக்கு இவற்றோடு இணைந்த தமிழுணர்வு என்கிறவகையில் பாரதி படைப்புக்கள் கவனங்கொள்ளப்படுகின்றன. மூன்று - நான்கு தசாப்தங்களுக்கு மேலாகப் பிரதான செல்நெறியாக மேவியுள்ள திராவிடர் இயக்க உணர்வுடனான தமிழ்த்தேசியம் சார்ந்து பாரதிதாசன் வரவேற்பினைப் பெற்றுள்ளார்.

இக்கட்டுரை, பாரதி வரவேற்கப்படும் களங்கள் சார்பில் அவரது பதிப்பாக்கங்கள் வெளிப்பாடு களையும் - எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் அலசுகின்றது. ஆரம்பகாலங்களில் பாரதி இந்தியத் தேசிய எழுச்சி அரசியலில் தீவிர செயற் பாட்டாளராகத் திகழ்ந்தவர். முன்னரே கவிதை புனையும் ஆர்வம் இருந்த போதிலும், பத்திரிகை யாளராகச் சுதேசமித்திரனில் இணைந்தபோது கவிதை எழுத முயன்றாரில்லை. அரசியல் விழிப்புணர்வின்பால் மக்களைத் தட்டியெழுப்பும் எழுச்சி நடையிலான உரைவீச்சிலேயே அவரது கவனம் முழுதாய்க் குவிந்திருந்தது. தேசபக்திக் கவிதைகளைப் பிறரிடமிருந்தே எதிர்பார்த்தார். கிடைக்காத நிலையிலே தேசியக் கவிதைகளைத் தானே படைத்தார். அவை அவ்வப்போது தொகுக்கப்பட்டு 'சுதேச கீதங்கள்' எனும் சிறு பிரசுரங்களாக முடிந்தது.

இப்பிரசுரங்களிலிருந்து தொகுக்கப்பட்ட கவிதைகள் "மாதா மணி வாசகம் மற்றும் தேசியப் பாடல்கள்" எனும் மகுடத்துடன் தென்னாப்பிரிக் காவின் டர்பன் நகரில் 1914இல் வெளியிடப்பட்டது. இந்தியாவுக்கு வெளியில் வெளிவந்த முதல் நூல் இது. தெய்வீகப்பாடல்கள் 14 உடன் 'ஜாதிய திருப்பாடல்கள்' என்பதாக 16 தேசியப்பாடல்கள் இடம்பெற்றிருந்தன. தேசியப்பாடல்களில் 11 பாடல்கள் மட்டுமே பாரதியுடையவை; ஏனைய 5 தேசியப் பாடல்கள் 'இந்தியா' பத்திரிகையில் வெளிவந்தனவாயினும் பாரதியுடையதாக உறுதிப்படுத்தப் படாதவை.

முதல் தேசிய எழுச்சி 1910 இல் அடங்கிப்போன பின்னர் 1912 இலிருந்து 'பாஞ்சாலி சபதம்' எனுங் காவிய முயற்சி உள்ளிட்ட பல்வேறு தளங்களிலான எழுத்துமுயற்சிகளில் பாரதி மூழ்கினார். அவற்றுள் ஒன்று, அன்னிபெசன்ட் அம்மையாரது முயற்சியொன்றின் மீதான கடும்விமரிசனமாக அமைந்த "பொன்வால் நரி" எனும் பொருளிலான ஆங்கிலப் படைப்பு. அது வேகமாக விற்றுத் தீர்ந்து

இரண்டாம் பிரசுரத்துக்குக் கேட்கப்பட்ட போது பாரதி மகிழ்வடைவதற்குப் பதில் எரிச்சலடைந்தார். "பாஞ்சாலி சபதம்" உள்ளிட்ட தமிழ்ப் படைப்பு களில் அக்கறை கொள்ளாமல் ஆங்கிலத்தில் அதிகம் வெளிவந்து என்ன பயன் என்ற ஆத்திரமே பாரதியிடம் மேலோங்கியிருந்தது.

கடலூர் சிறைவாசம் முடிந்து வெளிவந்தபின்னர் 1919 இலிருந்து தீவிர அரசியற் செயற்பாட்டிலிருந்து பாரதி ஒதுங்க வேண்டியிருந்தது. தனது போர்க்களத்தின் வடிவத்தை மாற்றியபோதிலும் மக்களை அரசியல் விழிப்புணர்வுக்குத் தூண்டும் அடிப்படை நோக்கிலிருந்து பாரதி பின்வாங்கிய தில்லை. இலக்கிய வெளிப்பாடு வாயிலாக மக்கள் விடுதலைக்கான பண்பாட்டு அரசியல் செயற் பாட்டினைத் தனக்குரியதாகப் பாரதி வரித்துக் கொண்டார். பண்பாட்டுப் புரட்சி மூலமான அரசியல் சமூக விடுதலை என்ற நோக்கு அவரிடம் ஆரம்பம் முதலாகவே இருந்துவந்தது. காந்தி யுகம் தொடங்கியபோது மக்களை அரசியல் எழுச்சியில் களம் இறக்குவதில் ஆன்மீகம் பெற்ற இடத்தை ஆர்வத்துடன் ஆதரித்தவர் பாரதி. அது காரணமாக "வாழ்க நீ எம்மான்" என்றும் "மகாத்மா" என்றும் புகழ்ந்து, அரசியலதனிலும் ஆன்மீகம் செயற்பட இடமேற்படுத்திக் கொண்டதற்கு வாழ்த்துக்கூறி வரவேற்றார்.

அந்தவகையில், தனது படைப்புகள் வெளிவர வேண்டியதன் அவசியத்தை வெறும் இலக்கிய முயற்சியாக அவர் கருதியதில்லை. அது அரசியல் கிளர்ச்சிக்கு வித்திடும் என்ற எதிர்பார்ப்பு அவருக்கு இருந்தது. தனது படைப்புகளைப் பல தொகுதிகளாக்கித் தொடர்ந்து வெளியிட உத்தேசித்துள்ளதாக விளம்பரம் செய்து ஆர்வலர் களைப் பணம் அனுப்புமாறு வேண்டிக் கேட்டிருந்தார். அதனை நன்கொடையாக அல்லாமல், வெற்றிகரமான வணிக முயற்சியாக அமைத்து மீண்டும் லாபத்துடன் பணத்தை மீளக் கையளிப்பேன் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தியிருந்தார். எவருமே உதவ முன்வரவில்லை என்ற துயர்மிகு உண்மை தமிழக யதார்த்தத்தை உணர்த்துவதாக அமைந்தது. அவரது நண்பர்களது முயற்சியினாலே ஓரிரு படைப்புகள் வெளிவந்தன.

பாரதியின் ஆங்கிலப் படைப்புகள் பாரதி பிரசுராலயத்தால் 1929 இல் வெளியிடப்பட்டது. பாரதியின் இளவல் சி. விசுவநாதன் Bharathi and his works எனும் தலைப்பில் இதனைப் பதிப்பித்தார். மண்டையம் சீனிவாசாச்சாரியர் பாரதியின் சிறுகதைகள் சிலவற்றை (குறிப்பாக தாகூர் சிறுகதைகளது தமிழாக்கம்) வ.வே.சு. ஐயருடன் இணைந்து கம்பர் நிலையம் ஊடாகவும் கமலநிலையம் வாயிலாகவும் வெளியிட்டிருந்தார். பாரதியின் மறைவின் பின்னர் இந்தியத் தேசிய எழுச்சி வீறுகொள்ளத் தொடங்கியதோடு பாரதி கவிதைகள் மேடைகளில் முழங்கப்படும் எழுச்சிக் கீதங்களாயும் அமைந்தன. பாரதி பாடல்களுக்கான பிரசுரத் தேவை வலுத்தது. குடும்பத்தினர் முயற்சியில் "பாரதி பிரசுராலயம்" உருவாக்கப்பட்டு பாரதி கவிதைகளுக்கான புதிய பதிப்புக்கள் வெளிவரலாயின. பாரதி விரும்பியவாறு முன்னரே பதிப்பாக்கம் வெளிவந்திருக்க வேண்டியமை எத்தனை அவசியம் என்பதைப் பாரதி பிரசுராலயத்தின் பதிப்புகள் காத்திரமாய் வெளிப்படுத்தின. ஏற்பில்லாத பல மாற்றங்களை அவர்கள் செய்திருந்தனர். ஆரம்பத்திலேயே பாரதி படைப்புகளின் பாடபேதங்கள் குறித்து புதுமைப்பித்தன் குறிப்பிட்டிருந்தார்.

வேறு பிரச்சனைகளைப் பாரதி பிரசுரம் வெளியிட்ட உரைநடைத் தொகுப்புகள் ஏற்படுத்தின. "சுதேசமித்திரனில்" பாரதி எழுதிய வற்றைத் தொகுக்கும் இந்த முயற்சியில் 1935 இல் பாரதி பிரசுராலயம் ஈடுபடத்தொடங்கியபோது வெளிவந்த காலத்தையோ அவசியப்பட்ட குறிப்புகளையோ தரவில்லை. "பாரதி நூல்கள்" எனும் பாரதி பிரசுராலயத்தின் இந்த முயற்சிக்கு முன்னரே "பித்தன்" எனும் சஞ்சிகையில் அதன் ஆசிரியராக இருந்த பெ. தூரன் சுதேசமித்திரனில் வெளிவந்த பாரதி கட்டுரைகளை வேண்டிய குறிப்புக்களுடன் மீள் பிரசுரம் செய்திருந்தார். பின்னர் பெ. தூரன் "பாரதி தமிழ்" எனும் மகுடத்துடன் ஒரு ஆய்வுப் பதிப்புக்குரிய பாங்கில் பாரதியின் உரைநடைத் தொகுப்பை வெளியிட்டு காலவரிசைப்படுத்திய நூலாக்கத்துக்கான முன்னோடியாகத் திகழ்ந்தார். பின்னர் ரா.அ. பத்மநாபன், முக்கியத்துவம் மிக்க பாரதியின் படங்களுடன் கூடிய "சித்திரபாரதி" எனும் தொகுப்பினை 1957 இல் வெளியிட்டார்; தொடர் தேடலில் கட்டுரைகளை மட்டும் கொண்டதான "பாரதி புதையல்" எனும் பெருந்தொகுப்பாக நூல் ஒன்றினையும் அவர் வெளியிட்டார்.

இத்தகைய பங்களிப்பில் திருத்தமுடைய பதிப்புக்குரிய முயற்சியில் பெருஞ்சாதனையைச் செய்வதில் பெ. தூரன் கொண்டிருந்த ஆர்வத்தின் உந்துதலை அவரது வார்த்தைகளில் காணமுடியும். "அவருடைய கவிதைகள், கதைகள், கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்ட காலம் சரிவரத் தெரியலாகாதா? ஆங்கிலத்தில் பாருங்கள். எழுதிய தேதி முதல் எத்தனை குறிப்புகள்! கவிஞன் ஒரு கவிதையை ஒரு மாதிரி எழுதி அதைப் பிறகு மாற்றியிருந்தால்

அந்த அடிக்கப்பட்ட வரிகளையுமல்லவா விடாது பிரசுரித்துப் போற்றுகிறார்கள்? அவற்றால் எவ்வளவு விஷயங்கள் நமக்கும் புலனாகின்றன. கவியின் உள்ளத்தை நாம் துருவிக் காண அவை உதவுகின்றனவே" என்பது பெ. தூரன் ஆதங்கம் (கலைமகள் தொகுதி ரூ.24,ப.316. மேற்கோள்: பெ.சு.மணி. டிசம்பர் 2009. "ஆய்வுக்கட்டுரைகள்" பூங்கொடி பதிப்பகம், சென்னை.ப335)

இத்தகைய புரிதல் ஏதுமின்றி கண்டமேனிக்கு பாரதி படைப்புகள் பதிக்கப்படுவதற்கு அவராக்கங்கள் அரசுடைமையாக்கப்பட்டமையும் காரணமாயிற்று. ஒருபக்கம் பொதுவாக்கியதன் ஜனநாயகம் நன்மையேயாயினும், வெறும் வணிகநோக்கு மேலெழுந்து சமூக உணர்வற்ற வெளிப்பாடுகள் புற்றீசல்களாய்க் கிளம்பி ஏற்படுத்தும் பாதகங்கள் தீமையின் பக்கத்தை முனைப்பாக்குகின்றன.

பாரதி படைப்புகள் அரசுடைமையாக்கப் படுவதில் சினிமாத்துறைக்கு முக்கியப் பங்குண்டு. அந்நியராட்சியின் காலத்திலிருந்து நாடகங்களிலும் சினிமாவிலும் பாரதி பாடல்கள் தேசப்பற்று சார்ந்து அதிகமும் விரும்பப்பட்டன. உரிமைப் பிரச்சனை எழுந்தபோது ஏ.வி.எம்.மெய்யப்பன் அதனை விலைகொடுத்துப் பாரதி பிரசுராலயத்திட மிருந்து பெற்றிருந்தார். பின்னர் பதிப்பாளர்கள் பிரச்சனையை எதிர்நோக்கிய நிலையில் தமிழக அரசை நாடியபோது ஏ.வி.எம். இடமிருந்து பெறவேண்டியிருந்தது. ப. ஜீவானந்தம் போன்றோர் தொடர்ந்து முயற்சி எடுத்ததன்பேரில் இறுதியில் ஏ.வி.எம். மெய்யப்பன் இலவசமாகவே உரிமையை அரசிடம் கையளித்தார்.

இன்று பாரதியின் ஆக்கங்களை எவரும் வெளியிடமுடியும் என்கிறபோது வெறும் வணிக நோக்கமே மேலோங்கியிருப்பது பெரும் பிரச்சனையாகியுள்ளது. பாரதி நூற்றாண்டினை யொட்டி 1982 இல் இளசை மணியன் 'பாரதிதரிசனம்' என "இந்தியா" பத்திரிகைக் கட்டுரைகளை இரு தொகுதிகளாக வெளியிட்டிருந்தார். பாரதியின் வீறுமிகு அரசியல் ஊடாட்டம் அதன்வாயிலாகவே பெருமளவில் ஆய்வுலகின் கண்களில் பட்டது. தொடர்ந்தும் பெ. தூரன், தொ.மு.சி. ரகுநாதன், இளசை மணியன், பெசுமணி, சீனி. விசுவநாதன் போன்ற பாரதி ஆர்வலர்கள் பாரதி படைப்புகளைக் கால உணர்வுடனும் வேண்டிய குறிப்புகளுடனும் மிகுந்த பிரயாசையுடனான தேடுதலில் கண்டெடுத்து வெளிப்படுத்தி வந்தனர். இருந்தபோதிலும் வணிகப் பதிப்புகள் எந்த அக்கறையுமின்றி பாரதி படைப்புக்களைக் குற்றுயிராய் வெளியிடலாயின.

இத்தகைய சூழலில் சீனி. விசுவநாதனின் "காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்" என்ற தொடர் தொகுப்புகள் ஆய்வுலகுக்கான பெரும்பங்களிப்பாக அமைந்தன. காலவரிசைப் படுத்தியதோடு, அவசியப்பட்ட பல குறிப்புகளையும் அவர் வழங்கியுள்ளமை அதன் முக்கியத்துவத்தை வழங்குவதாயுள்ளது. (இதுவே கண்டன விமரிசனத்துக் குள்ளாகும் அளவில் மிகையாகப் போன சந்தர்ப்பங்களும் உள்ளன பல குறிப்புகள் வேறான நூலாக்கத்துக்குரியன. அத்தகையன பாரதி படைப்புக்குள் நுழைக்கப்படும்போது அங்கும் வணிக நோக்கம் முனைப்பாகிறது என்ற விமரிசனம் புறக்கணிக்கத்தக்கதல்ல). அடுத்து வரும் பதிப்பு களில் இத்தகைய விமரிசனங்களைக் கவனத்தி லெடுத்து ஏற்புடைய மாற்றங்களுடன் வெளியிடும்போது சீனி.விசுவநாதனின் பாரதி பணி விதந்துரைக்கத்தக்க பங்களிப்பாக அமையும். முன்னதாக, 1982இல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்



ந. ரவீந்திரன்: இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் பண்பாட்டுப் பணி வாயிலாகச் சமூகம் பற்றிய புரிதல்களை வளர்த்துக் கொண்டவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மூலம் பல விரிவான தளங்களில் இயங்கியவர். இலங்கையில் தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். மேலும் இலங்கையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயலாளராகப் பணியாற்றியவர்.

இவரின் நூல்கள்:

'பாரதியின் மெய்ஞ்ஞானம்', (1986) 'ஏன்'? (சிறுகதைத் தொகுதி/1992), 'கலாசாரம், எதிர்கலாசாரம், புதிய கலாசாரம்' (1999), 'பின் நவீனத்துவமும் அழகியலும்' (2001) 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்' (2001), 'இந்துத்துவக் காலச்சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்' (2003), 'இந்துத்துவமும், இந்து சமயம், சமூக மாற்றங்கள்' (2003).

கழகம் பாரதி கவிதைகளைக் காலவரிசைப்படி ஆய்வுப் பதிப்பாக வெளியிட்டிருந்தது. அந்த முயற்சியில் பெரும்பங்களிப்பு சீனி.விசுவநாதனுடையது என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

பாரதியின் அரசியல் மற்றொரு பிரச்சனையாகும். அவரது ஆக்கங்கள் இன்றும் இந்தியத் தேசிய உணர்வு சார்ந்து முனைப்பாக்கப்படுவது முதல் நிலையில் உள்ளது. பொதுவுடைமையாளர்கள் பாரதியின் அரசியல் வீச்சினைச் சமத்துவ சமூகத்துக்குச் சார்பாக வெளிப்படுத்தும் போது அவரை வலிந்து பாட்டாளிவர்க்கக்கவி எனச் சொல்வதான விமர்சனத்துக்கு உள்ளாவதும் உண்டு. பாட்டாளிவர்க்க அரசியல் இயக்கம் இந்திய வரலாற்றரங்கில் சாத்தியப்பட்ட 1925க்கு முன்னர் மறைந்த பாரதியை வலிந்து பாட்டாளி வர்க்கக் கவிஞராகக் காட்ட அவசியமில்லை. அதேவேளை பிராமணத்தேசிய வடிவம் சார்ந்த இந்தியத் தேசியத்துக்குரியவரல்ல பாரதி; சாதியத் தகர்ப்புடன் பொதுவுடைமை சமூகத்தைப் படைக்கும் பாட்டாளிவர்க்க இயக்கத்துக்கு முற்றிலும் உரிமை கோரத்தக்கவர் பாரதி எனும் உண்மை எந்த முயற்சியாலும் மறுக்கத்தக்கதல்ல.

அன்னிபெசன்ட் அம்மையாரது முயற்சியொன்றின் மீதான கடும்விமரிசனமாக அமைந்த “பொன்வால் நரி” எனும் பொருளிலான ஆங்கிலப் படைப்பு. அது வேகமாக விற்றுத் தீர்ந்து இரண்டாம் பிரசுரத்துக்குக் கேட்கப்பட்ட போது பாரதி மகிழ்வடைவதற்குப் பதில் எரிச்சலடைந்தார். “பாஞ்சாலி சபதம்” உள்ளிட்ட தமிழ்ப் படைப்புகளில் அக்கறை கொள்ளாமல் ஆங்கிலத்தில் அதிகம் வெளிவந்து என்ன பயன் என்ற ஆத்திரமே பாரதியிடம் மேலோங்கியிருந்தது.

இங்கு மற்றுமொரு பிரச்சனையாக அமைவது பாரதியின் கருத்தியல் தொடர்பான விடயமாகும். அவரை இந்து மதப்பற்று மிக்க ஆன்மீகவாதக் கவியாகக் காட்டும் பதிப்புகளே இன்று பெருமளவில் வெளிப்பட்டுள்ளன. பாரதி ஆன்மீகவாதியல்ல என்ற உண்மை பெரும்பாலான மார்க்சியர்களுக்கே புரியமுடியாத அளவில் பாரதியின் கருத்தியல் குறித்த குழப்பம் நிலவுகிறது. பாரதி ஒரு ஆன்மீக நாத்திகர். இது புதுவகைப் பாத்திரம். அதுவே இப்புரியாமை நீடிப்பின் அடிப்படை. கடவுள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை, மக்களே கிளர்ந்தெழுந்து புரட்சியூடாக சமூக அமைப்பை மாற்றுவதன் வாயிலாகவே பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் அந்தக் கிளர்ச்சியுணர்வைத் தூண்டுவதற்கு மக்களின் ஆன்மீக உணர்வைப் படிமப்படுத்தியவர் பாரதி. ஆன்மீகவாதியைப் போல கடவுள் சித்தப்படியே அனைத்தும் நடந்தேறுகின்றன என எந்தவொரு விடயத்தையும் காணாத அதேவேளை, நாத்திகவாதியைப் போல மக்களது ஆன்மீக உணர்வை நிராகரித்துவிட்டவரல்ல பாரதி. மக்களிடம் செல்லும் பண்டப்பாக்கங்களை அவர்களது உணர்வைத் தட்டியெழுப்பி செயலூக்கம் கொள்ளும் வகையில் ஆன்மீகத்தைப் போர்க்குணமுடையதாக வெளிப்படுத்தியவர் பாரதி.

பாரதியின் இப்பங்களிப்பை முழுமையாகப் புரிந்துகொள்ளத்தக்க வெளியீடுகள் அவசியமாகும். பாட்டாளிவர்க்க இயக்கங்கள் முன்முயற்சியெடுத்து வெளியிடுகின்ற பதிப்புகளின் அவசியமான குறிப்புகள் இவ்வகையில் பாரதியைப் புரிந்துகொள்ள உதவமுடியும். மேலோட்டமாக பக்தியுணர்வாகத் தெரிகிற ஒன்றினுள் உறைந்துள்ள அரசியல் வீச்சு இத்தகைய குறிப்புகள் வாயிலாகவே வாசகருக்குரியதாக முடியும். “மாயையைப் பழித்தல்” கவிதை தொகுப்புகள் எல்லாவற்றிலும் வேதாந்தக் கவிதை என்ற பிரிப்பினுள் வெளியிடப்பட்டு வருகின்றன. அதன் அரசியல் வீச்சினை தொ.மு.சி.ரகுநாதன் காத்திரமான ஆய்வு வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். புதிய பதிப்பு முயற்சிகளே வேதாந்தச் சிமிழுக்குள்ளிருந்து பாரதியை மீட்டெடுக்க முடியும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட மக்களைக் கிளர்ந்தெழுந்து போராடுவதற்கான படைப்புகளை முன்வைத்தவர் பாரதி. பரந்த ஐக்கிய முன்னணிக்குரிய பல்வேறு சக்திகள் அவரைத் தத்தமக்குரியவர்' எனப் பார்ப்பது ஏற்புடையதே. அதேவேளை, அத்தகைய போராட்டத்துக்குத் தலைமையேற்று புத்துலகம் படைக்கவேண்டிய பாட்டாளிவர்க்கச் சிந்தனைக்குரிய சக்திகள் பாரதியின் கருத்தியல் தமக்கு சாதகமானது எனக் கண்டு, அதனடிப் படையில் அவரது பதிப்புகளை வெளியிடுவது இன்றைய மிகப் பிரதான வரலாற்றுக் கடமையாகும்.

■



பெரியார் ஈ. வெ. ரா. வின் சிந்தனைகளும் பதிவுகளும்

உ. பிரபாகரன்

பெரியார் பாறைகளை உடைத்துச் சுரங்கங் களைத் தோண்டி மண்ணைத் தூக்கி வெளியே போட்டார். அதில் தங்கமிருந்தது. அதை ஆபரணங்களாக்கி அணிந்துகொண்டு இப்பொழுது ஜொலிக்கிறோம். அந்தக் காலத்தில் திராவிடர் கழகத்தின் பணி சாதாரணமான தல்ல, கடுமை யானது; எதிர்ப்புகளை நாளும் சந்திக்கக்கூடியது. இயக்கத்தில் ஈடுபடுபவர்களைப் பார்த்தாலே அவர்களின் தோற்றம் ஒரு வண்டி விறகை வெட்டி முடித்து வந்தவர்கள் போல இருப்பார்கள். முகமெல்லாம் எண்ணெய் வழியும், கறுப்புச்சட்டை அணிந்த இவர்கள் சாப்பிட்ட விஷங்கள் எத்தனை எத்தனையோ!

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்களைப் பகுத்தறிவுப் பாதையில் வழிநடத்தக்கூடிய தலைவர்கள் குறைந்துள்ளனர் என்ற நிலை தற்காலிகமாக உருவாகியுள்ளது. பெரியார் வழியில் வந்த அரசியல் தலைவர்கள் சிலர் 'பகுத்தறிவு' என்ற சொல்லைப் பயன்படுத்தவே

அஞ்சுகின்றனர். தங்களை மிகச்சிறந்த பகுத்தறிவு வாதிகளாகப் பொதுமேடையில் அறிவிக்கும் தலைவர்கள் கூடத் தன்னலம் கருதி பக்தி வேடம் அணிந்து மக்களைத் திசை மாற்றுபவர்களாக மாறிவிட்டார்கள் என்பதுதான் இன்றைய உண்மையாகும்.

பகுத்தறிவு, மூடநம்பிக்கை ஒழிப்பு, இறைமறுப்பு பற்றிப் பேசினால் தங்களைக் கடவுள் மறுப்பாளர்கள் என்று எண்ணி தேர்தலில் வாக்களிக்க மாட்டார்கள் என்ற அய்யம் தன்மான இயக்கத்தின் மூலம் வளர்ந்த அரசியல் தலைவர்களிடமும், தொண்டர்களிடமும் இன்று மேலோங்கியுள்ளன. இந்நிலை மாறாவிட்டால் பகுத்தறிவு பாழ்பட நேரிடும். பகுத்தறிவு என்றைக்குப் பாழ்படுகிறதோ அன்றே தமிழனின் வீழ்ச்சி தொடங்கிவிடும். இன்று தமிழ்நாடெங்கும் தெருவுக்குத் தெரு புதிய புதிய கோயில்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. நாளேடுகளிலும், வார ஏடுகளிலும் பெரிய மற்றும் சின்னத் திரைகளிலும் நாள்தோறும் கோயில் பற்றிய விளம்பரங்கள் வந்த வண்ணம் உள்ளன. சில சமய இதழ்கள் இன்ன கோயில்களில் இன்ன கடவுளை வழிபட்டால் இன்னின்ன நன்மைகள் கிட்டும் என்று பறைசாற்றுகின்றனர். இவ்வஞ்சக வலையில் பாமரர்கள் மட்டுமன்றி படித்தவர்களும் (மருத்துவர்கள், பொறியாளர்கள், அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள், இந்திய ஆட்சிப்பணி மற்றும் இந்திய காவல்பணியில் பணியாற்றுபவர்கள்) அடிமையாகி வருவதை நாம் நாளும் கண்கூடாகக் காண்கிறோம். இதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய கட்டாயம் அல்லது தேவை சமூகச் சீர்திருத்தவாதிகளுக்கு உண்டு. இல்லையெனில் மீண்டும் மீண்டும் கோயில் கட்டுவதும், திருப்பணி செய்வதும், கடவுள் கொள்கையைப் பரப்புவதும் தொடர் நிகழ்வாக அமைந்துவிடும். 'கடவுள்' என்பது மனிதனின் கற்பனையே என்பதை இன்றைய இளைஞர்கள் மனதில் ஆழமாகப் பதியவைக்க வேண்டிய கடமை பகுத்தறிவாளர்களுக்கு இன்றியமையாததாகும். இக்கடமையைச் செய்யும் பொறுப்பு இதுவரை பெரியார் சிந்தனைகளைத் தொகுத்துப் பதிப்பித்த ஆசிரியர்கள் கையில் வலியத் திணிக்கப்பட்டுள்ளன.

பதிப்பின் இன்றியமையாமை.

காலமும், இடமும் கடந்து நிற்க கருத்துகள் பதிவு செய்யப்படுகின்றன. மனிதன் கால்களில் இரண்டைக் கைகளாக மாற்றிக் கொண்டு விலங்கினின்று வேறுபட்ட காலம் முதல் கருத்தறிவித்தல் அதாவது 'பதிப்பித்தல்' இருந்திருக்கிறது. தொன்மைப் பொதுவுடைமைச் சமுதாயத்தில் வேட்டைக்குச் சென்ற இடம் பற்றியும், வேட்டையாடிய விலங்குகள் பற்றியும், வேட்டைமுறை பற்றியும், கோடுகளால் அக்கால மக்கள் வரைந்து காட்டியுள்ளனர். இவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பதிவு செய்யும் முறையிலும், பதிவு செய்வதற்குப் பயன்படும் பொருள்களிலும் பல்வேறு வகையான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அன்றைக்கு வேட்டையாடுதல் (உணவுக்காக) முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அதில் கிடைத்த உணவை உண்டு மகிழ்ந்தான். இன்று உணவுடன் மானமும், அறிவும் மனிதனுக்கு இன்றிமையாத இடத்தினைப் பெற்றுள்ளன. இதன் காரணமாகப் பெரியார் சிந்தனைக்கு ஆதாரமாக உள்ள பல்வேறு செய்திகளை நூலாக்கித் தொகுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தொகுக்கப்பட்ட பெரியாரின் தொகுப்புகள் அறிவுசார் அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், வருங்கால மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் பகுத்தறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றன. காலத்தின் தேவையாக இத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. ஆம்! முன் எப்போதைக் காட்டிலும் பெரியார் இப்போதுதான் கூடுதலாகத் தேவைப்படுகிறார். இன்றைய இந்துத்துவச் சூழலில் பெரியாரின் பன்முகப் பார்வைகளையும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தொகுப்பாசிரியர் அல்லது பதிப்பாசிரியர்.

பதிப்பாசிரியர் என்ற அளவில் நாம் இன்று பலரைக் காணமுடியும். நூற்பதிப்பாசிரியர் (Book Editor), இதழாசிரியர் (Journal Editor), மலர் ஆசிரியர் (Magazine Editor), களஞ்சியப் பதிப்பாசிரியர் (Encyclopeadia Editor), அகராதிப் பதிப்பாசிரியர் (Lexicon Editor), பத்திரிகையாசிரியர் (News paper Editor), திரைப்படத் தொகுப்பாளர் (Motion Picture Editor), ஓவியத் தொகுப்பாளர் (Art Editor) போன்றும் இன்னும் பல திறத்திலும் இப்பொருண்மையுடையோர் காணப்படுகின்றனர். இவற்றில் பதிப்பாசிரியர் என்ற பெயரில் சில அமைவுகளும். தொகுப்பாசிரியர் என்ற பெயரில் சில அமைவுகளும் நிலவுவதைக் காணலாம். இவை அடிப்படையில் ஒரே பணித்தன்மையைக் கொண்டதாக அமைகின்றன. பொதுவாகப் பதிப்பாசிரியர் என்ற சொல்லைப் பயன்படுத்துவது அவற்றின் ஒற்றுமையைக் கருதியே ஆகும். வேற்றுமை நயம் கருதும்போதுதான் அவற்றைப் பிரித்துப் பார்த்து அவற்றிற்குரிய பணித்தன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்பதிப்பாசிரியர்கள் ஒவ்வொருவரின் கடமைகளையும், பணி

நிலைமைகளையும் நோக்குவதால் அக்கடமை களிடையே ஒரு பொதுத்தன்மை நிலவுவதை நம்மால் உணரமுடியும். பெரியார் சிந்தனைகளைத் தொகுத்துப் பலரும் வெவ்வேறு பெயர்களில் வெளியிட்டு இருந்தாலும் அவற்றில் புதைந்து கிடப்பது "பெரியார் 'வெறும்' சிந்தனையாளர் அல்லர், கல்விசார் ஆராய்ச்சியாளர் அல்லர், அவரது கருத்துகள், இந்திய, தமிழக சமுதாயத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் முதன்மையானவை என்று அடையாளப்படுத்திய சமூக, பண்பாட்டு, அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அவர் செய்த முயற்சிகளின் வெளிப்பாடுகளேயாகும். அவர் காலனியம் தேசியம் என்பனவற்றுள் சுழன்று கொண்டிருக்காமல் அவற்றிற்கு முன்பும் பின்பும் நிலவிக்கொண்டு இருந்த ஒடுக்குமுறைகளைப் பற்றிச் சிந்தித்தவர். அந்த ஒடுக்குமுறைகள் இல்லாத ஒரு புதிய சமுதாயத்தைக் 'கற்பிதம்' செய்தவர். தான் வாழ்ந்த கால, தேச, வர்த்தமானங்களைத் தாண்டிய உலகு தழுவிய விழுமியங்களை உருவாக்கியவர்" என்பதை உலகுக்கு உணர்த்தும் நோக்கமே இப்பதிப் பாசிரியர்களின் பதிப்புகளில் குவிந்துகிடக்கும் பொதுமை நோக்கமாகும். அந்நோக்கம் நிறைவேற பாடுபட்ட பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பகங்கள் பற்றிக் குறிப்பிடுவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

பெரியாரின் எழுத்தும், பேச்சும்.

பெரியாரின் எழுத்தையும், பேச்சையும் வெளியிட்ட நிறுவனங்கள் பலவாகும். அதில் குறிப்பிடத்தக்கவை அறிவியக்க நூற்பதிப்பகம் சென்னை, குடிஅரசு பதிப்பகம் ஈரோடு, வள்ளுவர் பதிப்பகம் பவானி, திராவிடமணி பதிப்பகம் திருச்சி, பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் திருச்சி, பகலவன் பாசறை சென்னை, திராவிடன் பிரஸ் சென்னை, பெரியார் தன்மானப் பிரச்சார நிலையத்தார் திருச்சி, விடுதலை வெளியீடு சென்னை, தமிழன் அச்சகம் ஈரோடு, பகுத்தறிவு வெளியீடு சென்னை, சிந்தனைப் பண்ணை தஞ்சை, அறிவுக்கடல் பதிப்பகம் மதுரை, திராவிடர் கழகம் கல்கத்தா, திராவிடர் மாணவர் கழகம் மதுரை, கர்நாடகா திராவிடர் அசோசியேஷன் கூத்தரசன் பதிப்பகம் சென்னை, தென்னாற்காடு மாவட்டம் திராவிடர் கழகம் சிதம்பரம், சிந்தனையாளர் கழகம் திருச்சி, கீதா ரஞ்சன் பிரஸ் நாகர்கோயில், விடுதலை வெளியீடு சென்னை, உண்மைவிளக்கப் பதிப்பகம் சென்னை, விடுதலை பப்ளிக்கேஷன்ஸ் மெட்ராஸ், சிந்தனை சுடர்வரிசை சென்னை, சி.பி.சர்வாதிகாரி இரும்புலிக்குறிச்சி, அண்ணா சிந்தனைப் பேரவை கோவை, முல்லைப் பதிப்பகம் சென்னை, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சென்னை, தம்பி பதிப்பகம் சென்னை, செய்தி மக்கள் தொடர்புத் துறை தமிழ்நாடு அரசு, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி சென்னை, பெரியார் பாசறை பெரம்பலூர், பெரியாரியல் குடும்பங்கள் நட்புறவு சங்கம் குடந்தை, பாரதி பதிப்பகம் சென்னை, பெரியார் இயக்கம் பகுத்தறி வாளர் கழகம் தஞ்சை, எமரால்டு பதிப்பகம் சென்னை, பெரியார் நூல் வெளியீட்டகம் சென்னை, கவிதா பப்ளிகேஷன்ஸ் சென்னை, நாத்திகம் சென்னை, வ.உ.சி. நூலகம் சென்னை, தந்தை பெரியார் திராவிடர் கழகம் சென்னை, சிந்தனைப் பதிப்பகம் திண்டுக்கல், பாரதி புத்தகாலயம் சென்னை போன்றன குறிப்பிடத்தக்கன வாகும். பெரியாரின் எழுத்தும், பேச்சும் முதன்மை யாகக் கொண்டு மேற்கண்ட பதிப்பகங்கள் பலவும் வெளியிட்டன.

மேற்கண்ட பதிப்பகங்கள் மூலம் வெளியிட்ட பதிப்பாசிரியர்கள் பெரியார் கொள்கைகள் ஒரு வாழ்க்கை நெறிமுறை என்பதை உணர்ந்து வீட்டார் எதிர்ப்பு, வீதியார் எதிர்ப்பு, ஊரார் எதிர்ப்பு, உற்றார் எதிர்ப்பு, நாட்டார் எதிர்ப்பு, சமய நிறுவனத்தார் எதிர்ப்பு, சக தோழர்கள் எதிர்ப்பு என்ற நிலையில் எதிர்நீச்சல் போட்டு இலட்சிய வழியில் நின்றார்கள். அதுபோல, தான் உண்டு, தன் குடும்பம் உண்டு என்கிற ஒரு குடுவைக்குள் தன் வாழ்வைச் சிறைப் படுத்திக்கொள்ளாமல் பிறர் நலன் பேணும் வேட்கை, இனஉணர்வு, மொழி, பண்பாட்டுக் களத்தில் தம்மைக் கரைத்துக்கொள்ளும் தொண்டறத்தின் வார்ப்பாக வாழ்ந்து காட்டிய



உ. பிரபாகரன்: தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டு தமிழ்க் கல்வித்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரின் சில நூல்கள்; 'நடைமுறைத் தமிழ் இலக்கணம்', 'கற்பித்தலுக்கான வகுப்பறைத் திறன்கள் மற்றும் தொழில் நுட்பங்கள்', 'சமூக மாற்றத்தில் தமிழ் இதழ்கள்', 'பெண் விடுதலைக்கு இதழ்களின் பங்கு'.

பெரியாரின் தனித்தன்மையை வெளிக்கொணர மேற்கண்ட பதிப்பகங்கள் பலவும் பாடுபட்டன. 1934ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் பேச்சு மற்றும் எழுத்துக்களின் தொகுப்பைக் 'குடிஅரசு கலம்பகம்' (1ம் பாகம்) என்ற பெயரில் வெளியிட்டது. அதனை பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், ஈரோடு வெளியிட்டது. பின்னர் 1944ஆம் ஆண்டு அறிவின் எல்லை என்ற தலைப்பில் ஒரு தொகுப்பினைக் குடிஅரசு பதிப்பகம், ஈரோடு வெளியிட்டது. பின்னர் 1949 ஆம் ஆண்டு திருச்சி திராவிடமணி பதிப்பகம் 'பொன்மொழிகள்' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பினை வெளியிட அது அன்றைய காங்கிரஸ் அரசால் தடைசெய்யப்பட்டது. 1949ஆம் ஆண்டு தடை செய்யப்பட்ட அந்த நூல் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பின் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் தடை நீக்கம் செய்யப்பட்டு 1979 களில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையினரால் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர் அன்றைய முதல்வர் மாண்புமிகு எம்.ஜிராமச்சந்திரன் ஆவார். 'சிந்தனைத் திரட்டு' என்கிற தலைப்பில் கடலூர் கி.வீரமணியால் (தலைவர், திராவிடர் கழகம்) உருவாக்கப்பட்ட தொகுப்பு 1957ஆம் ஆண்டு தஞ்சாவூர் சிந்தனைப் பண்ணையினரால் வரலாற்றுப் புகழ்மிக்க சட்ட எரிப்புப் போராட்ட அறிவிப்பு மாநாட்டில் தஞ்சையில் வெளியிடப்பட்டது. அதே ஆண்டில் (1957) கல்கத்தா திராவிடர் கழகத்தினரால் பொன்மொழிகள் எழுத்தும் பேச்சும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இத்தகைய பதிப்புகள் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக மேம்பாட்டுக்கு உதவின என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

சித்திரப்புத்திரன்

தந்தை பெரியார் 'சித்திரப்புத்திரன்' என்ற புனைபெயரில் எழுதிய உரையாடல் வடிவிலான கட்டுரைகளைச் 'சித்திரப்புத்திரன்' என்ற தலைப்பில் சென்னை, பகுத்தறிவுப் பாசறை 1958 ஆம் ஆண்டு வெளியிட்டது . அதன் தொடர்ச்சியாக 1959ஆம் ஆண்டு 'சித்திரப்புத்திரன் கட்டுரைகள்' என்றொரு தொகுப்பினைச் சென்னை பகுத்தறிவு வெளியீடு வெளியிட்டது. மேலும் 1958 ஆம் ஆண்டு நடைபெற்ற கடலூர் கி.வீரமணி, மோகனா



சுயமரியாதைத் திருமணத்தின்போது வழங்கப்பட்ட 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற தொகுப்பு தந்தை பெரியார் அவர்கள் திருமணம் குறித்துப் பேசிய பேச்சுகளின் தொகுப்பாகும். இப்பதிப்புகள் அக்காலத்தில் மிகப்பெரிய சமூகப் புரட்சியை ஏற்படுத்தி சுயமரியாதைத் திருமணத்திற்கு வித்திட்டது. இவ்வாறு பெரியாரின் பேச்சும், எழுத்தும் அன்றைய சமூக மாற்றத்திற்கு அருமருந்தாகப் பயன்பட பதிப்பாசிரியர்கள் தங்களது பங்களிப்பைச் செய்தார்கள்.

அறிவு விருந்து

1965ஆம் ஆண்டு, சென்னை விடுதலை வெளியீடு 'அறிவு விருந்து' என்ற தலைப்பிலும், 1968ஆம் ஆண்டு பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் 'அறிவு விருந்து2' என்ற தலைப்பிலும் சிறிய தொகுப்பினை வெளியிட்டது. சென்னை 'முல்லை பதிப்பகம்' 1971 ஆம் ஆண்டு 'பெரியார் குரல்' என்ற தொகுப்பினை வெளியிட்டது. சென்னை பெசுபி. நிறுவனம் 'உயர் எண்ணங்கள்' என்ற தலைப்பில் 1972, 1973, 1975களில் மூன்று பகுதிகளை வெளியிட்டது. இதனால் நூற்றுக்கணக் கான சுயமரியாதைச் சிந்தனையாளர்களும் தொண்டர்களும், ஆசிரியர்களும், வணிகர்களும், தொழில்முனை வோர்களும் திராவிடர் கழகத்தில் உறுப்பினர்களாக ஆயினர்.

பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) என்னும் நீதிக்கட்சி 1916 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1974ஆம் ஆண்டு அது 57 ஆண்டுகளை நிறைவு செய்திருந்தது. 'பார்ப்பனரல்லாத சுயமரியாதை இயக்கம்' 1926இல் தொடங்கப்பட்டது. 1974இல் அது 47 ஆண்டுகளை முடித்திருந்தது. பின்னர் 'திராவிடர் கழகம்' என்னும் மாற்றத்துடன், 1944 முதல் நீதிக்கட்சி செயல்பட்டது. 1974ஆம் ஆண்டு அது 30 ஆண்டுகளை முடித்திருந்தது. இவ்வளவு நெடிய காலத்தில் சிந்தனையாளராக விளங்கிய பெரியார் ஈ. வெ. ரா. வின் சொற்பொழிவுகளையும், எழுத்தையும் தொகுத்து 2076 பக்க அளவில் பதிப்பித்து ஒருசேர வெளியிடும் பணியைத் திராவிடர் கழகம் மேற்கொண்டிராத நிலையில், திருச்சி சிந்தனையாளர் கழகம் அச்சிரியப் பணியை முதன்முதலாகச் செய்து ஒரு புதிய வரலாற்றைப் படைத்தது. இதன் பதிப்பாசிரியர் வே.ஆனைமுத்து ஆவார். இந்நூலின் மூன்று தொகுதிகளையும் 1.7.1974 ஆம் ஆண்டு திருச்சியில் பி.ரெத்தினவேலு (தேவர்) மன்றத்தில்,

திருச்சி சிந்தனையாளர் கழகப் புரவலரும், உள்ளாட்சித்துறை அமைச்சருமான அன்பில் பெ. தர்மலிங்கம் தலைமையில் திருச்சி சிந்தனையாளர் கழகம் வெளியிட்டது. இந்நூலின் முதல் தொகுதியினைத் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவரும், தமிழக முதலமைச் சருமான டாக்டர் கலைஞர் முகருணாநிதி வெளியிட்டார். இரண்டாம் தொகுதியைத் தமிழ்நாடு அரசு பிற்பட்டோர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என்.வி. நடராஜனும், மூன்றாம் தொகுதியைச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நெ.து.சுந்தரவடிவேலும் வெளியிட்டனர். சிறப்பு மலரை ராஜாசர். எம்.ஏ. முத்தைய செட்டியார் வெளியிட்டார். ஈ. வெரா. மணியம்மை, கி. வீரமணி, கு.ம.சுப்பிரமணியம், திருவாரூர் கே. தங்கராசு, செ. கந்தப்பன், டாக்டர் பொன். கோதண்டராமன் ஆகியோர் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றினார்கள். நோபிள் கு.கோவிந்தராஜுலு வரவேற்புரையும், பதிப்பாசிரியர் வே. ஆனைமுத்து நன்றியுரையும் ஆற்றினர். இந்நூலின் 2500 படிகள் தமிழ்நாட்டிலும், தமிழர்கள் பரவி வாழும் சில அயல்நாடுகளிலும், அமெரிக்கா, சீனா முதலான நாடுகளிலும், தனிப்பட்டவர்களிடமும், தமிழ்நாடு அரசுப் பொது நூலகங்கள் பலவற்றிலும் 1974க்கும், 1979ஆம் ஆண்டிற்கும் இடையில் பரவின என்பது இதன் சிறப்பாகும். இத்தொகுப்புகள் மூன்றும் பெரியாரின் பெருந்தொண்டினையும், சீர்திருத்தத்தையும், சிந்தனையையும் ஒருசேர காண பல தகவல்களைத் திரட்டித் தந்த நூலாகும். இவை பெரியார் பற்றிய ஆய்விற்கும், மேற்கோள் காட்டுவதற்கும் மிகவும் பயனுள்ள வகையில் மூலநூலாக அமைந்தன. பெரியாரின் கருத்துகளைத் திரட்டிக்கொள்வதற்குப் பயன்பட்ட முதன்மையான நூலாகும். இத்தொகுப்புகள்தான் இந்த தலைமுறையினர் பெரியார் பற்றி அறிந்துகொள்வதற்கு உதவின எனில் மிகையில்லை. இதே ஆண்டில் 1974இல் நவமணிகள் என்ற பெயரில் ஒரு தொகுப்பினைப் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், திருச்சி வெளியிட்டது.

பெரியார் ஒரு வாழ்க்கை நெறி

கவிஞர் கலி பூங்குன்றன் 'பெரியார் ஒரு வாழ்க்கை நெறி' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பினை 1976ஆம் ஆண்டு பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை சார்பாக வெளியிட்டார். பின்னர் 1978ஆம் ஆண்டு 'தந்தை பெரியார் அறிவுரைகள் 100' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பினைப் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை வெளியிட்டது. மேலும், தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை 1974 ஆம் ஆண்டு 'புரட்சி மொழிகள்' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பினை வெளியிட்டது. இதன்பின்னர் 1979 முதல் 1981ஆம் ஆண்டு வரை ஆங்கிலத்தில் தீண்டாமை, குடும்பக்கட்டுப்பாடு, பெரியார் சிந்தனைத்தொகுப்புகள், பெரியாரின் கருத்துகள், மனிதனும் கடவுளும், சுயமரியாதை இயக்கம் எனப் பல நூல்களைப் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு 'அபாயச்சங்கு', 'சமதர்மம் காப்போம்' என இரு தொகுப்புகளை மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் வே. ஆனைமுத்து வெளியிட்டுள்ளார். இதே ஆண்டில் 'சுயமரியாதை திருமணம் ஏன்', 'விடுதலைக் கேள்விகள்' என்ற இரு தொகுப்புகளை முறையே திராவிடர் கழகமும், பெரியார் பாசறையும் (பெரம்பலூர்) வெளியிட்டு தமிழர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டின. 1997ஆம் ஆண்டில் 'பெரியாரின் அயல்நாட்டுப் பயணக்குறிப்புகள்' என்ற தொகுப்பை வே.ஆனைமுத்துவும், பின்னர் 1998 ஆம் ஆண்டு 'தந்தை பெரியார் சிந்தனைக் களஞ்சியம்' இரண்டு தொகுதிகளைக் கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை மூலம் புலவர் த.கோவிந்தன் வெளியிட்டார். மேற்கண்ட தொகுப்புகள் அனைத்தும் மக்கள் மனதில் அறிவியல் மனப்பான்மையையும், பகுத்தறிவுச் சிந்தனையையும் உருவாக்கி சமூக விடுதலைக்கு வித்திட்டன.

பெரியார் களஞ்சியம்

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் மூலம் அதன் தலைவர் கி.வீரமணி (திராவிடர் கழகம், சென்னை.) 1977ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை 'பெரியார் களஞ்சியம்' என்ற பெயரில் 13 தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். மேலும் 2009 மற்றும் 2010ஆம் ஆண்டில் 'குடிஅரசு' (1925 தொகுதி1), 'குடிஅரசு' (1926, 1927, 1928 தொகுதி2) என ஆண்டு வாரியாகக் கணக்கிட்டு இரண்டு தொகுப்புகளைக் கி.வீரமணி வெளியிட்டுள்ளார். பெரியாரின் சொற்பொழிவு களையும், எழுத்துக்களையும் அச்சிடப்பட்ட ஆதாரங்களிலிருந்து அவற்றில் வெளிவந்துள்ள வாறே தொகுத்து பொருள்வாரியாக வகைப்படுத்திப் பதிப்பிக்கும் பணியை இவர் மேற்கொண்டுள்ளார். இத்தொகுப்புகள் மக்கள் மனதில் மண்டியிருக்கும் அறியாமை இருளைப் போக்கி பகுத்தறிவு என்னும் ஒளியைப் பாய்ச்சின. இதன்மூலம் மூட நம்பிக்கை ஒழிந்து பல்வேறு வகையான பெரியார் சிந்தனைகள் மக்களிடையே சென்றடைய வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் சமூக விழிப்புணர்வும் ஏற்பட்டன.

தந்தை பெரியார் திராவிடர் கழகம்.



தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி 2003ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை 'குடிஅரசு' இதழில் வெளிவந்த 'பெரியாரின் எழுத்தும் பேச்சும்' (1925-1926) தொகுத்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். இதில் எந்தவிதமான பதவுரையும், பொழிப்புரையும் இல்லாமல் இன்றைய தலைமுறை படிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தெரிவிக்கப்பட்டேயாக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தந்தை பெரியார் அறிவித்த, தெரிவித்த செய்திகளை முழுமையாகக் கொண்டு வெளி வந்துள்ளன. இத்தொகுப்புகள் மனித பேதம் ஒழிய வேண்டு மானால், மதம் ஒழிய வேண்டும். மதமும், கடவுளும் கண்டிப்பாக வேண்டவே வேண்டாம் என்றும், அப்போதுதான் அன்பும் சமத்துவமும் உருவாகும் என்றும் வெளிப்படுத்தின. எனவே சமுதாய மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் மனிதனின் தன்னலமின்மையும், பொதுநல நோக்கும் அமைய வேண்டும். அதுவே பாகுபாடற்ற மனித சமுதாயத்தை உருவாக்கும் என்றும், இப்படைப்புகள் வெளிப் படுத்தின என்பதே இதன் தனிச்சிறப்பாகும்.

ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்

'ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்' என்ற இரண்டு தொகுப்புகளைக் கொண்ட நூலை மானமிகு பசு.கவுதமன் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பாரதி புத்தகாலயம், சென்னை 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிட்டுள்ளது. இதன் சிறப்பு என்னவெனில் ஆண்டு வாரியாகப் பெரியாரின் சிந்தனைகளைச் சிறப்பாகத் தொகுத்து வெளியிட்டுள்ளது. முழு ஈடுபாட்டுடன் இத்தொகுப்புகள் வெளிவந்துள்ளன. பதிப்பாசிரியர் மொழியிலே சொல்ல வேண்டுமானால் இன்று விடுதலையை விட குடிஅரசுக்கே அதிகத் தேவையும், சீக்கிரமாய் செய்யவேண்டிய வேலையும் இருப்பதால் இதனை இவர் துணிந்து வெளியிட்டு பலரது பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றுள்ளார். காரணம் பெரியாரின் எழுத்துக்களும், பேச்சுக்களும் இவரை ஆக்கிரமித்துக் கொண்டதேயாகும். குடிஅரசு மூலத்தினை நகலுடன் ஒப்பிட்டு செப்பனிடுகிற பணிகள் மேட்டூரிலும், தஞ்சையிலுமாக நடந்தபோது கொளத்தூர் மணியுடன் அப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர் என்பதால் பெரியாரின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் அப்படியே பதிப்பித்துள்ளார். இதுவே இதனின் மற்றொரு சிறப்பாகும். திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருந்த பெரியாரின் சிந்தனைத்தாக்கம் இவரது தொகுப்பில் மிளிர்வதைக் காணலாம்.

முடிவுரை

பெரியாரை "ஏகாதிபத்திய ஆதரவாளர், சந்தர்ப்பவாதி, பிழைப்புவாதி, தன்னை உயர்த்திக் கொள்வதற்காகப் பொதுவுடைமை பேசிவிட்டு ஒடுக்குமுறை வந்தபோது ஓடிப்போன கோழை, தலித் விரோதி, சாதி இந்துக்களுக் காகப் பாடுபட்டவர், தமிழகத் தரகு முதலாளிகளின் சேவகர், தெலுங்கு முதலாளிகளின் நலனுக்காகத் தமிழ்த்தேசியத்தைச் சிதைத்துத் திராவிட மாயையை உருவாக்கியவர். வறட்டுப் பொருள் முதல்வாதி, கால வழக்கொழிந்த 19 ஆம் நூற்றாண்டுப் பகுத்தறிவுவாதி, மேம்போக்கான சீர்திருத்தவாதி, பூர்ஷ்வா ஜனநாயகவாதி என்று கூடச் சொல்லப்படுவதற்குத் தகுதியற்றவர், பார்ப்பனரல்லாத நிலப்பிரபுக்களுடன் கொஞ்சிக் குலாவியவர். இப்படிப் பல்வேறு வகையான தாக்குதல்கள் பெரியார் உயிரோடு இருந்தபோதும் சரி, அவரது மறைவுக்குப் பிறகும் சரி, தொடர்ந்து நீடிக்கின்றன".ஆனாலும் அத்தகைய தாக்குதல் களுக்கு ஆக்கப்பூர்வமாகவும், ஆற்றல் மிக்க வகையிலும் முகம் கொடுத்துப் பதிலளிக்கவேண்டிய ஆற்றல்களாகப் பெரியாரின் பதிப்புகள் அல்லது தொகுப்புகள் அமைந்துள்ளன எனில் மிகையில்லை. அவர் வாழ்ந்த காலத்தில் பேசப்பட்டதைப் போலவே ஏசப்பட்டவர். அவர் மறைந்து 37 ஆண்டுகளைக் கடந்தும் பேசப்படுகின்ற, விமர்சிக்கப்படுகின்ற கட்டாயத்தை வரலாற்றில் ஏற்படுத்தியக் 'கலகக்காரர்' பெரியார். உங்களையெல்லாம் சூத்திரனாக விட்டுச் சாகிறேன் என்ற உணர்ச்சி மிகுந்த, உண்மை நிறைந்த இறுதி சாசனம் வரையிலான அவரின் நீண்ட நெடிய சமூகப் பயணத்தின் தடங்களில் அவரது எழுத்தும் பேச்சும் கருத்துச் சுரங்கமாய் சிந்தனைக் கடலாய் அறிவு அருவியாய்ப் பதிவாகியுள்ளது. அவற்றில் பலவற்றைப் பலரும் தங்கள் தொகுப்பில் கொண்டுவந்துள்ளனர். அவைகள் அனைத்தும் பெரியாரின் பெருந்தொண்டினை உணர நமக்குத் துணை செய்கின்றன.



தமிழில் அம்பேத்கரின் - அம்பேத்கர் பற்றிய நூல்கள்

ஸ்டாலின் ராஜாங்கம்.

அம்பேத்கரின் நூற்றாண்டை (1991) ஒட்டி அவர் ஆங்கிலத்தில் எழுதியவை, பேசியவை அனைத்தையும் தொகுத்து மகாராஷ்டிரா அரசின் கல்வித்துறை சார்பாக 1992 முதல் பல தொகுதி களாக வெளியிடப்பட்டன. அத்தொகுதிகளின் ஆங்கிலத் தொகுப்பாளராக வசந்த்மூன் இருந்தார். அத்தொகுதிகளை இந்தியாவின் பல மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடும் பொறுப்பை இந்திய அரசு மேற்கொண்டது. அதன்படி 1993 தொடங்கி தமிழில் அம்பேத்கரின் 37 நூல்தொகுதிகள் வெளிவந்துள்ளன. தொகுக்கப்பட்டவை போக அம்பேத்கரின்

தொகுக்கப்படாத எழுத்துகள் ஏராளமுள்ளன என்று கூறப்படுகிறது. அவற்றில் அவர் மராத்தியில் எழுதியவையும் உண்டு. இந்நிலையில் தமிழில் அம்பேத்கரின்/அம்பேத்கர் பற்றிய எழுத்துகள் வெளியான வரலாற்றையும், அதன் நோக்கங் களையும் பேசிப்பார்க்க இக்கட்டுரை முயற்சிக்கிறது.



அம்பேத்கர் உயிரோடு இருந்த காலத்திலும், மறைந்த பின்னாலும் அவரின் நடவடிக்கைக ளோடும், கருத்துகளோடும் தமிழகம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அம்பேத்கருக்கும் தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழ்ப்பகுதி நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே இருந்து வந்தது. அவரின் அரசியல், பண்பாட்டு கருத்துகளைப் பொறுத்தவரையில் பலவிதங்களிலும் தமிழகம் அவரின் சிந்தனை உருவாக்கத்திலும் தாக்கத்தினைச் செலுத்தியிருந்தது.

சென்னை மாகாணத்திலிருந்து செயற்பட்ட பேராசிரியர் லட்சுமி நரசுவின் Essence of Buddhism என்னும் நூலைத் தன்னுடைய முன்னுரையோடு 1948ல் அம்பேத்கர் பதிப்பித்தார். நரசு எழுதிய Religion of the modern Buddhist என்னும் நூலின் கையெழுத்துப் பிரதியும் அவரிடம் இருந்தது. கருத்து ரீதியாக நரசுவின் பௌத்த விளக்கங்களால் ஈர்க்கப்பட்டிருந்தவராகக் கருதப்படும் அம்பேத்கர் தமிழ்ப்பகுதியில் தாழ்த்தப்பட்டோரால் நடை முறைப்படுத்தப்பட்ட பௌத்த சங்கங்கள் குறித்துப் பெரிதும் ஆவல் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பர்மா பௌத்த சங்க சிறப்புமலர் ஒன்றுக்கு கட்டுரை எழுதிய அம்பேத்கர் அதில் தென்னிந்தியாவில் செழித்திருந்த பௌத்த சங்கங்கள் குறித்து எழுதியிருப்பதாகக் கூறப்படு கிறது. 1954ஆம் ஆண்டில் புத்தசங்க நடைமுறை களை அறிய தென்னிந்திய பயணம் மேற்கொண்ட அவர் பெரம்பூர், காஞ்சிபுரம், பள்ளிக்கொண்டா, திருப்பத்தூர், வெள்ளனூர், வன்னிவேடு, கோலார் தங்கவயல், பெங்களூர் ஆகிய இடங்களில் பௌத்த சங்கங்களை நேரில் கண்டதாகக் கூறுவதோடு "இச்சங்கங்கள் தென்னிந்தியாவில் 30, 40 ஆண்டு களாக இருந்து வருகின்றன. பிராமணர்களாலும் இந்துக்களாலும் சூழப்பட்டிருந்தாலும் புத்தமதத்தைப் பின்பற்று வதில் அவர்களுக்கிருந்த திட உறுதியையே புலப்படுத்துவதாகவும்'' கூறுகிறார். 1954ஆம் ஆண்டிலிருந்து 30, 40 ஆண்டுகள் முன்பு என்றால் அது அயோத்திதாசர் பின்புலத்தில் உருவான சாக்கைய பௌத்த சங்கங்களே. ஆனால் அயோத்திதாசரை அம்பேத்கர் அறிந்திருந் தாரா என்பது குறித்து மறைமுக ஆதாரங்களே கிடைக்கின்றன. அயோத்திதாசரின் புத்தமார்க்க வினா விடை என்னும் தமிழ்நூல் அம்பேத் கரின் நூலகத்தில் இருந்ததாகவும் ஒரு கருத்து உண்டு. அயோத்திதாசரை நன்கு அறிந்திருந்த வி.பி.எஸ். மணியாரோடு அம்பேத்கருக்குப் தொடர்பு இருந்தது.

அயோத்திதாசருக்கும், அம்பேத்கருக்கும் இருந்த தொடர்பு குறித்த பதிவை விவரிப்பது பதிப்புலக அரசியல் ஒன்றை விளங்கிக்கொள்ள பயன்படும். அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்று மராத்தியில் 1991ஆம் ஆண்டு வசந்த்மூன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. அந்நூல் ஆங்கிலத்தில் Dr. Babasaheb Ambedkar என்னும் தலைப்பில் ASHADAMLE என்பவரால் மொழிபெயர்க் கப்பட்டு 2002ஆம் ஆண்டு நேஷனல் புக் ட்ரஸ்ட் பதிப்பாக வெளியிடப் பட்டது. வசந்த்மூன் எழுதிய இதே நூல் ஸ்ரீதர் என்பவரால் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு நேஷனல்புக் ட்ரஸ்ட்டாலேயே வெளியிடப்பட்டது. தமிழ் மொழிபெயர்ப்பில் "ஆபாதிதாஸ் என்பவர் எழுதிய தமிழ்க் கட்டுரையை அம்பேத்கர் மொழிபெயர்க்கப்படச் செய்தார்" என்ற வரி இடம்பெறுகிறது. இக்கூற்று இடம்பெறும் பகுதி பௌத்தம் பற்றிய பகுதியாகும். குறிப்பாக தமிழகத்திலிருந்து செயற்பட்ட லட்சுமி நரசுவைக் குறிப்பிடும் பகுதியாகவும் இருக்கிறது. இந்நிலையில் ஆபாதிதாஸ் என்று கூறுவது அயோத்தி தாசரையே என்பது தெளிவாகிறது. அம்பேத்கரின் சிந்தனைகளைத் தொகுத்தளித்த மூலவரான வசந்த் மூனின் கருத்து இது என்பதும் குறிப்பிடத்தக்கது. தெளிவற்ற பெயராகவும், மொழிபெயர்ப்பாகவும் இடம்பெற்ற இதனை தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு ASHADAMLE மொழிபெயர்த்த ஆங்கில நூலை நாடினால் நமக்குக் கிடைப்பது பெருத்த ஏமாற்றமே.

ஆங்கில மொழிபெயர்ப்பில் 51ஆம் அத்தியாயத்தில் (பக்: 192-194) லட்சுமி நரசு குறித்த பதிவெல்லாம் சரியாக இடம்பெற்றிருந்தும், ஆபாதிதாஸ் குறித்த ஒரு வரி மட்டுமே காணாமல் போயிருக்கிறது. அயோத்திதாசரை 'மறைத்துவிடும்' நோக்கம் ஏதும் ஆங்கில மொழிபெயர்ப்பாளருக்கு இருந்திருக்க முடியாது. ஆனால் இந்திய மொழிகள்

அல்லாத சர்வதேச கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் ஆங்கில மொழிபெயர்ப்பில் சிறுபெயராக இடம்பெறும் வட்டார (Local) அடையாளம் சார்ந்த பெயர் தேவைப்படாது என்று அவர் கருதியிருக்கக்கூடும். உலகின் பல்வேறு வட்டார மொழிகளிலிருந்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் நூல்களுக்கு இத்தகைய பதிப்பு தணிக்கை உண்டு. ஆங்கில வாசகர்களுக்கு உகந்த பண்டங்களாக எழுத்துகளை உருமாற்றும் நுட்பம் இதிலிருக்கிறது. தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் தலித் இலக்கியங்களையும் இத்தகு அரசியலுக்குட்பட்டே ஆங்கிலப் பதிப்புலகம் தேர்ந்தெடுத்துக் கொள்வதும், அடையாளப்படுத்திக் கொள்வதும் நடக்கிறது.

அம்பேத்கர் எம்.சி. ராஜாவோடும், இரட்டைமலை சீனிவாசனோடும் கொண்டிருந்த தொடர்பு தமிழில் பரவலாக அறியப்பட்ட ஒன்றுதாம். பிற்காலத்தில் அவரோடு என்.சிவராஜ், மீனாம்மாள் ஆகியோரும் தொடர்பு கொண்டிருந்தனர். 1942இல் அவர் தொடங்கிய All India Scheduled caste Federation தலைவராக என். சிவராஜ் தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்பேத்கர் தொடங்கிய 3 அமைப்புகளிலும் தமிழக தாழ்த்தப்பட்டோர் பெருந்திரளினராகப் பங்குவகித்தனர். மேலும் பண்டைய இந்தியாவின் மாபெரும் அறிவு இனமான திராவிட இனத்தின் மற்றுமொரு பெயரே நாகர் இனம் என்றும், இந்தியாவில் புத்தமதத்தைப் பரப்பிய நாகர்கள்; ஆரியர்களின் தீவிரமான பகைவர்கள் என்றும், இவ்வாறு இந்தியா முழுக்க வாழ்ந்த நாகர்களின் மொழி தமிழாக இருந்தது என்றும் அம்பேத்கர் கருதினார். தீண்டப்படாதார் மீது இந்துக்கள் செலுத்தும் வன்கொடுமைகளை விவரிக்க தமிழகச் சான்றுகள் பலவற்றையும் அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

■

நாமறிந்த தகவல்களின் அடிப்படையில் தமிழில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் சாதி ஒழிப்பு ஆகும். 1936இல் இந்நூல் அம்பேத்கரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. அடுத்த 1937இல் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் சார்பாகக் குத்தூசி குருசாமியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியானது. இந்நூலுக்குப் பிறகு தமிழில் நீண்ட காலமாக அம்பேத்கரின் மூல எழுத்துக்கள் நூல்களாக வெளிக்கொணரப்பட வில்லை என்றே தெரிகிறது. சாதி ஒழிப்பு நூலுக்குப் பிறகு அத்தகு முயற்சி களைப் பெரியார் இயக்கமும் தொடரவில்லை.

பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடக்கிய ஆரம்ப ஆண்டுகளில் அதில் தாழ்த்தப் பட்டோர் அறிவாளிகளும், தாழ்த்தப்பட்டோரும் மிகுதியாகப் பங்கு வகித்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. பிராமணர் எதிர்ப்பு, இந்துமதக் கடவுளர் மற்றும் புராணங்கள் மறுப்பு ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு முன்னோடியான பங்களிப்புகள் இருந்தன. அத்தகு கருத்துகள் பெரியாரால் பேசப்பட்டபோது தாழ்த்தப்பட்டோரை இயல்பாகவே அவை ஈர்த்திருக்கும். தாழ்த்தப்பட்டோரின் பௌத்த சங்க அறிவாளிகளும் இவ்வாறு இணைந்தனர். இதோடு பெரியாரும், பெரியார் இயக்கமும் பல்வேறு உலக அரசியல் நடைமுறைகளையும், சிந்தனைகளையும் பேசுவது, விவாதிப்பது என்று தம்மை கருத்தியல் ரீதியாக வலுப்படுத்திக் கொண்ட காலமும் சுயமரியாதை இயக்க காலமேயாகும். குத்தூசி குருசாமி போன்ற ஆங்கிலம் படித்த அறிவாளி களும், இதழ்களும், வெளியீடுகளும் இதில் பங்காற்றினர். சுயமரியாதை இயக்க காலத்தில் உரம்பெற்று திராவிடர் கழகம் என்னும் கட்சியும், கருத்தியல் குழுவும் உருவாயின. கம்யூனிசம் உள்ளிட்ட 'உலக அரசியல் இயக்கங்களும், பெண் சுதந்திரம் போன்ற நவீன கருத்துகளும், தமிழ் அறிஞர்களின் தொடர்புகளும்



ஸ்டாலின் ராஜாங்கம்: தமிழகத் தலித் இயக்க/போராட்ட வரலாற்றினை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர். தமிழ்ச் சிறுபத்திரிகைகளிலும், ஆய்வு இதழ்களிலும் அரசியல், இலக்கியம், ஊடகம் குறித்து எழுதிவருகிறார். திருவண்ணாமலை மாவட்டம் செங்கம்முன்னூர் மங்கலத்தில் பிறந்த இவர் தற்போது மதுரையில் அமெரிக்கன் கல்லூரி தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

இவரது நூல்கள்: 'சனநாயகமற்ற சனநாயகம்', 'தீண்டப்படாத நூல்கள்', 'வரலாற்றை மொழிதல்' ஆகிய நூல்களும், 'பறையொலியில்' 'பரவும் இழிவு', 'வஞ்சி நகரம் கந்தன்' போன்ற சிறு நூல்களும் வெளியாகியுள்ளன.

சுயமரியாதை இயக்க காலத்தில் இருந்தன. இவை சார்ந்த கருத்துகளும், மூலஎழுத்துகளும் கூட அவர்களால் வெளியிடப்பட்டன. சிறுகுழுவினர், சில சாதியினர் ஆதரவு என்று 1925இல் தனது பயணத்தைத் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் 1930-களின் இறுதியில் தனது ஆதரவுத்தளத்தைப் பெருக்கியிருந்தது. கட்சியாக விரிவுபெற்ற பின்பு அதற்கேற்ப மெல்லமெல்ல அதன் போக்கும் மாறியது. 1939இல் பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகி சுயமரியாதை இயக்கத்தை அதோடு கலந்து 1944இல் திராவிடர் கழகம் என்னும் கட்சியின் தலைவராக மாறியபோது பெரும் ஜனத்திரள், அரசை நேரடியாக எதிர்கொள்ளாமை

நாமறிந்த தகவல்களின் அடிப்படையில் தமிழில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் சாதி ஒழிப்பு ஆகும். 1936–இல் இந்நூல் அம்பேத்கரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. அடுத்த ஆண்டான 1937இல் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் சார்பாகக் குத்தூசிகுருசாமியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியானது.

என்று தன்னை தகவமைத்துக் கொண்டார். இயக்கமாகிவிட்ட பின்பு சுயமரியாதை இயக்கமாய் இருந்தபோது பேசப்பட்ட பல்வேறு கருத்துகளும் நடைமுறைக்கு கொணரப்படவில்லை. சில கருத்துகள் தொடர்ச்சியாகப் பேசப்படகூட இல்லை. இயக்கத்தில் பங்குபெற்றிருக்கும் குழுவினருக்கான நலனைப் பிரதிபலிப்பதோடு அது நிறுத்திக்கொண்டது. மேலும் அது தன்னை பிராமணர் எதிர்ப்பு + இடஒதுக்கிடு ஆதரவு என்னும் முழக்கங்களில் உறுதியாக்கிக்கொண்டு அதற்கான ஆதரவு எதிர்ப்பு என்றே நிறுவிக் கொள்ளவும் செய்தது. இவ்வாறு அவர்களிடம் காணாமல் போய்விட்ட அம்சங்களில் ஒன்றுதான் தாழ்த்தப்பட்டோரைப் பாத்திரமாகக் கொண்ட சாதி ஒழிப்பு சார்ந்த விளக்கங்கள். எனவே தாழ்த்தப்பட்டோரைப் பேசியாக வேண்டும் எனும் அழுத்தமும் அவ்வியக்கத்திற்கான கூட்டமாக அவர்களே திரண்டாக வேண்டும் என்ற அவசியமும் பின்னாளில் இல்லாமல் போய்விட்டது. பிராமணர் எதிர்ப்பு கருத்திலும், பிராமணியத்தால் சூத்திரர்களும் தாழ்த்தப் பட்டார்கள் எனும் கருத்திலும் பெரியாரோடு ஒத்த எண்ணத்தினைக் கொண்ட அம்பேத்கர் தலித்துகள் மீதான மொத்த இந்துக்களின் சாதிய நோக்கு, அனைத்திந்திய அளவில் தலித்துகளின் அடையாளம் ஆகியவற்றின் அடிப்படையில் தலித்துகளின் பிரச்சனையைத் தனித்துவமான பிரச்சனையாகவே அடையாளப் படுத்தி வந்தார். முன்பு பெரியாரோடு தொடர்பு கொண்டிருந்த தலித் தலைவர்களில் சிலரும் கூட அம்பேத்கர் தொடங்கிய அமைப்புகளை நோக்கி பயணித்தனர். அம்பேத்கரை பலமுறை நேர்மறையாகப் பெரியார் பேசியிருப்பினும் கூட இச்சூழல் சார்ந்து அம்பேத்கர் மீது அதிருப்தியையும், அவர் இயக்கத்தாரோடு இடைவெளியையும் அவர் கையாண்டு வந்தார். பெரியாரின் குடியரசு இதழ் வெளிவந்து கொண்டிருந்த சமகாலத்திலேயே தங்கவயல் ஜி. அப்பாதுரையாரின் தமிழன் இதழ் (09.07.1926 முதல் 27.06.1934 வரை) வெளியானது. குடியரசு இதழைப்போலவே தமிழன் இதழிலும் அம்பேத்கர் பற்றி எழுதப்பட்டிருக்கக் கூடும் என்று யூகிப்பதை யாரும் தவறென்று கூறமுடியாது. பூனா ஒப்பந்தத்தை எதிர்த்தும் அம்பேத்கரை ஆதரித்தும் தங்கவயல் பௌத்த சங்கங்கள் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை இங்கு கவனப் படுத்தி பார்க்கவேண்டும். ஆனால் இன்றைக்கு தமிழன் இதழ் ஒன்றுகூட கிடைக்கவில்லை. அதனால் அம்பேத்கரைத் தமிழில் அறிமுகப்படுத்திய பெருமை குடியரசுக்கே உண்டு என்று சொல்வதை நாம் 'ஒத்து'க்கொள்ளவே வேண்டும்.

சுயமரியாதை இயக்கம் அம்பேத்கரைத் தமிழில் அறிமுகப்படுத்தியதை ஒப்புக் கொள்ளும் அதே நேரத்தில் அது அவரை எவ்வாறு அறிமுகப் படுத்தியது? என்று காண்பதும் அவசியம். அவர்கள் அம்பேத்கரை பிராமண எதிர்ப்பு, இடஒதுக்கிடு ஆதரவாளர் என்னும் தளத்தில் அறிமுகப்படுத்தி விளக்கி வருகின்றனர். இன்று வரையிலும் திராவிடர் கழகத்தின் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிட்டு வரும் அம்பேத்கரின் நூல்களே அதற்கு ஆதாரம். இந்து மதம், மனுதர்மம் போன்ற கருத்துகளடங்கிய அம்பேத்கரின எழுத்துகளில் சில மட்டுமே சிறுசிறு வெளியீடுகளாகக் கொணரப்படுகின்றன. இந்து மதத் தத்துவமும் மனுதர்மமும் (1996), கி. வீரமணியின் அம்பேத்கர் புத்தநெறியைத் தழுவியது ஏன் (2005) மற்றும் நாத்திகம் பி. ராமசாமியின் தந்தை பெரியார் ஆதரவு, அண்ணல் அம்பேத்கர் பாராட்டு என்னும் துணை தலைப்பு களோடு "இரக்கமற்ற இந்துமதம் வேண்டாம்

மதம் மாறுங்கள் அண்ணல் அம்பேத்கர்" (2003) ஆகிய நூல்களை இவ்வாறு கூறிச்செல்லலாம். இது திராவிடர் கழகத்திற்கான ஆதரவு கருத்துகள் மட்டுமே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அம்பேத்கரின் வேறு பரிமாணங்கள் இதனால் பேசப்படுவதில்லை என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அம்பேத்கரின் எழுத்துகள் தமிழில் தொகுதிகளாக வெளிவந்து விட்ட பின்னாலும், அவருடைய பன்முகச் சிந்தனைகளை விரிவாக வாசித்து மேலெடுத்து செல்லப்படாமையில் அவரைக் குறித்த இது போன்ற குறுக்கப்பட்ட புரிதல்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. அவரைப் புதிதாக வாசித்து புரிந்துக் கொள்வதைக் காட்டிலும் உருவாக்கப்பட்ட பிம்பங்களே போதுமானவையாக இருக்கின்றன. இந்தியாவின் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் மட்டுமே தலித் அரசியல் தமிழ், திராவிடம் போன்ற மாநில அடையாளங்களோடு தங்களை இணைத்துக் கொள்வதும், அதையே தலித் அரசியலாகவும் எண்ணி இயங்குகிறது. இம்'மயக்கத்திற்கு' முக்கிய காரணங்களில் ஒன்றாக திராவிடர் இயக்கம் அம்பேத்கர் பற்றியும், சாதி ஒழிப்பு பற்றியும் தந்துள்ள அறிமுகங்களைக் கூறமுடியும். பல்வேறு சிந்தனைப் புலங்களிலிருந்து கருத்துகளைப் பெறுவதிலும், விவாதிப்பதிலும் சுயமரியாதை இயக்கம் கவனம் செலுத்தி வந்த காலத்தில்தான் அம்பேத்கரின் சாதிஒழிப்பு நூலை மொழிபெயர்த்து வெளியிட்டது. அந்நூலின் முக்கிய கருத்துகள் பெரியாரிடம் பெரிய அளவில் பிரதிபலித்தன என்றே கூற வேண்டும். அனைத்து சாதியினரும் அர்ச்சகர், அகமணம் போன்ற அந்நூலின் கருத்துகளைச் சான்றுகளாகக் கூறலாம். பாரதிதாசனின் புகழ்பெற்ற சமத்துவ பாட்டு என்னும் நீண்ட கவிதை அம்பேத்கரின் சாதிஒழிப்பு நூலின் தாக்கத்தால் பிறந்ததாகும். இந்த அளவில் மட்டுமே கட்சி சார்ந்த திராவிடர் இயக்கத்தின் அம்பேத்கர் பற்றிய கவனம் இருந்தது.

■

சுயமரியாதை இயக்கத்தின் சாதி ஒழிப்பு நூலுக்குப் பிறகு தமிழில் வெளியான அம்பேத்கரின் நூல்கள் குறித்த குறிப்புகள் ஏதும் நமக்கு கிடைக்கவில்லை. நீண்ட காலத்திற்குப் பின்பு சில தலித் பெரியவர்கள் இம் முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. சென்னையிலிருந்து அம்பேத்கர் சிந்தனைக்கூடம் 1967ல் அன்பு பொன்னோவியம் எழுதிய வட்டமேஜை மாநாடும் பூனா ஒப்பந்தமும் (6/16 ஜெகன்னாதபுரம் 4வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை) என்னும் நூலை வெளியிட்டது. அன்பு பொன்னோவியத்தோடு இணைந்து செயற்பட்ட மற்றையோர் எம்.ஏ. மெயில் முனுசாமி, ஜெகன்னாதன் ஆகியோராவர். அம்பேத்கர் சிந்தனை மையம் என்னும் அமைப்பு இதே காலத்தில் பெங்களூரிலிருந்து அம்பேத்கர் மூல எழுத்துகளின் மொழிபெயர்ப்பைச் சிறுவெளியீடு களாக வெளியிட்டது. அம்பேத்கரின் புத்தரா? காரல்மார்க்ஸா? என்னும் கட்டுரை இம்மையத்தால் தான் முதலில் தமிழில் வெளியிடப்பட்டது. பெங்களூர் அம்பேத்கர் சிந்தனை மையமும், சென்னை அம்பேத்கர் சிந்தனைக்கூடமும் ஒன்றிலிருந்து ஒன்று தாக்கத்தைப் பெற்று தொடங்கப்பட்டதாகத் தெரிகிறது. அம்பேத்கர் பற்றிய எழுத்துகள் பெருக இப்பெரியவர்கள் காரணமாயிருந்தனர். அம்பேத்கரிஸ்ட், அறவுரை ஆகிய இதழ்களில் அன்புபொன்னோவியம் அம்பேத்கர் உள்ளிட்ட தலித் தலைவர்கள் குறித்து எழுதினார்.

தலித்துகளால் நடத்தப்பட்ட பல்வேறு இதழ்களிலும் அம்பேத்கர் குறித்தும், பூனா ஒப்பந்தம் மூலம் காந்தி செய்த துரோகம் குறித்தும் எழுதப்பட்டன. பிரச்சார நோக்கமும், தலித் வாசகர்களையே இலக்காகக் கொண்டும் இந்த இதழ்கள் வெளியானதால் தலித் வட்டாரத்திலேயே புழங்கின.

1940களில் நாமக்கலிலிருந்து வெளியான சமத்துவம் இதழில் அம்பேத்கரின் மகத் பொதுக்குளம் போராட்டம் குறித்தும், அம்பேத்கரின் கற்பி என்னும் முழக்கம் குறித்தும் எழுதப்பட்ட பகுதிகள் கிடைத்துள்ளன. (பார்க்க: தீண்டப்படா நூல்கள் ஸ்டாலின் ராஜாங்கம், ஆழிபதிப்பகம், சென்னை, டிசம்பர் 2007) சமத்துவம் இதழில் அம்பேத்கரைப் பொது ஊடகங்கள் புறக்கணிப்பது குறித்தும் எழுதப்பட்டுள்ளது. அம்பேத்கர் தொடங்கிய All India Scheduled caste Federation யில் பணியாற்றிய ஆம்பூர் ஜே.ஜே.தாஸ் 1940களில் நடத்திய உதயசூரியன் இதழில் அம்பேத்கர் வாழ்ந்த சமகாலத்து செய்திகள் வெளியானதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் உதயசூரியன் இதழ்கள் கிடைக்கவில்லை. அடுத்தாக 1950களில் பள்ளிக்கொண்டா கிருஷ்ணசாமி நடத்திய சமத்துவசங்கு இதழிலும் திருச்சி வீராசாமி நடத்திய தொண்டு இதழிலும் அம்பேத்கர் பற்றிய செய்திகள் வெளியாயின. இவ்விதழ்களை நடத்தியவர்கள் தலித் தலைவர்களாக இருந்து இயக்கங்களை நடத்தியவர்கள். இவர்கள் நடத்திய இதழ்களின் அம்பேத்கர் பற்றிய செய்திகள் இயக்க அளவில் பரவலாக சென்று சேர்ந்தன. இதே

போன்று எரிமலை, சிவில் உரிமை, கற்பி, ஜெய்பீம், சங்காரன், இனப்போர், உணர்வு, சமூகப் புரட்சி, அரண், அம்பேத்கர் குரல், அம்பேட்கர், அம்பேட்கர் முரசு போன்ற இதழ்களும் அம்பேத்கர் குறித்த செய்திகளைத் தாங்கி வந்தன. இவ்விதழ் களின் சிலகட்டுரைகள் மட்டுமே அம்பேத்கரின் மூல எழுத்துகளின் நேரடி மொழிபெயர்ப்பாக இருந்தன. அம்பேத்கர் உயிரோடு இருந்த காலத்திலேயே அவரைக் குறித்த சிறப்புமலர் ஒன்றினை ஜெய்பீம் இதழ் வெளியிட்டது. பௌத்த பெரியார் என்றழைக்கப்பட்ட சுந்தரராசன் அம்பேத்கர் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி அம்பேத்கர் குறித்த நூல்களை வெளியிட்டார். 1960களிலிருந்து வெளியான இந்நிறுவன வெளியீடுகள் மூலமாகவே அம்பேத்கர் தம் வாழ்நாளில் நடத்திய பல்வேறு போராட்டங்கள் குறித்த வரலாறு தமிழில் வெளியிடப்பட்டது. சுந்தரராசனாருக்கு இருந்த பன்மொழி அறிவின் துணைகொண்டு நாசிக் போராட்டம், போர்க்களத்தில் புரட்சிவீரர் உள்ளிட்ட நூல்கள் எழுதப்பட்டன. தமிழகத்தில் அம்பேத்கரை நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று திரும்பத்திரும்பச் சொல்லுவதன் மூலம் தங்கள் மீதான தலித்துகளின் விசுவாசத்தைக்கோரும் அமைப்புகள் - எழுத்தாளர்களுக்குச் சுந்தரராசன் என்னும் பெயரோ, அவரின் வெளியீடுகளின் முக்கியத்துவம் குறித்தோ இதுவரையிலும் தெரியாது. தலித்துகளில் முதல் தலைமுறைப் படிப்பாளிகளாய் மாறி அரசு ஊழியர்களாய் ஆனவர்கள் தலித் இதழ்களின் வாசகர்களாய் இருந்தனர். இவர்கள் பழைய அடையாளங்களை உதறுதல் அதற்கு மாற்றாக கல்வி, வேலைவாய்ப்பு என்று நவீன வாழ்நிலையை ஏற்பது என்பதற்கான குறியீடாக அம்பேத்கரைப் பார்த்தனர். அவரின் கல்விப் புலமை இதற்கான காரணமாக அமைந்தது. மேளம் அடித்தல், செத்தமாடெடுத்தல் போன்ற இழிதொழில்களை கைவிடுதல் அதற்கிணையாக கல்விகற்பது, இரவுப்பள்ளிகளைத் தொடங்குதல் ஆகிய நடைமுறைகள் உருவானது இவ்வாறுதான். தமிழகத்தின் வடஆர்காடு பகுதியில் 1940 முதலே அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு, அரசியல் நிகழ்வுகள் ஆகியவற்றைக் கொண்ட பாடல்கள், கதைகள், வில்லுப்பாட்டுகள், சொற்பொழிவுகள் சிறுசிறு நூல்களாக வெளியாகி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அவரைக் குறித்த சித்திரத்தினை உருவாக்கின. அம்பேத்கருக்கு நூல்அடைவு ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வரும் பேரா.க. ஜெயபாலன் சொல்லும்போது "37 நூல் தொகுதிகள் தவிர்த்து தமிழில் இதுவரை அம்பேத்கர் குறித்து 100க்கும் மேற்பட்ட வெளியீடுகள் உண்டு. இவற்றுள் 40 வெளியீடு களாவது அம்பேத்கரின் மூல எழுத்துகளாக இருக்கின்றன" என்கிறார். இப்போக்கு இப்போதும் தொடர்கின்றன. ஆனால் தாழ்த்தப்பட் டோருக்கான இடஒதுக்கீடு, கல்வி என்ற தளத்தில் பேசப்பட்டதால் அம்பேத்கர் தலித் சாதிகளுக்கான தலைவர் என்னும் அர்த்தம் உருவாக ஏதோவொரு வகையில் இந்நிலை காரணமாகி விட்டது. அரசியல் ரீதியாக இரட்டைவாக்குரிமை, காந்தியின் துரோகம் குறித்த விசயங்களே இம்மக்கள் முன் உணர்ச்சிபூர்வமாக விவாதிக்கப்பட்டது. பூனா ஒப்பந்தத்தின்போது அம்பேத்கர் சந்தித்த சிரமங்கள் கதை அம்சத்திற்குத் தோதானதாக இருந்தது என்பது இதற்கொரு காரணம்.

■

அம்பேத்கரின் மூல எழுத்துகள் 1970களில் தலித்துகள் நடத்திய இதழ்களில் வெளியானதாக தெரிகிறது. அவற்றுள் சில நூல்களாகவும் வெளியிடப்பட்டன. சென்னையிலிருந்து வெளி யான அம்பேத்கரிஸ்ட்ஸ் என்னும் இதழில் 1980 ஆகஸ்ட் முதல் அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு என்னும் விரிவான தொடரை அன்புபொன்னோவியம் எழுதினார். ஆங்கில வாசிப்பின் பின்னணியில் எழுதப்பட்ட அத்தொடர் அடிக்குறிப்புகளோடு நல்ல தமிழில் வெளியானது. அம்பேத்கரிஸ்ட்ஸ் இதழிலேயே அம்பேத்கரின் பல்துறை சார்ந்த சிந்தனைகள் தனித்த கட்டுரைகளாக வெளியாயின. பூனா ஒப்பந்தம் குறித்த அம்பேத்கரின் மூலஎழுத்தினை சென்னையிலிருந்து டாக்டர் அம்பேத்கர் இளைஞர் இயக்கம் 1988ல் பூனா ஒப்பந்தம் எனும் பெயரில் வெளியிட்டது. அதே போல What congress and Gandhi have done to the untouchables என்ற அம்பேத்கரின் புகழ்பெற்ற நூலிலிருந்து பூனா ஒப்பந்தம் குறித்த அத்தியாயத்தினை மொழியாக்கம் செய்து சொந்த வெளியீடாக பூனா ஒப்பந்தம் எனும் பெயரில் 1988இல் அ. ஜெய்சன் கொணர்ந்தார். பூனா ஒப்பந்தத்தைப் புரிந்து கொள்ள இம்மொழிபெயர்ப்பாளர் தந்துள்ள ஐந்திற்கும் மேற்பட்ட பின்னிணைப்புகள் பயனுள்ளவை ஆகும். ஜெய்சனின் இந்நூல் 1996இல் நெய்வேலியில் நடைபெற்ற இரட்டை வாக்குரிமை மாநாட்டை ஒட்டி கோவை விளிம்பு ட்ரஸ்ட் வெளியீடாக ரவிக்குமார் முன்முயற்சியில் மறுபதிப்பாக கொணரப்பட்டது. இப்பதிப்பில் மொழிபெயர்ப்பாளர்பெயர் பதிப்பு விவரங்கள் அடங்கிய பகுதியில் சிறு பெயராக இடம் பெற்றதோடு சரி. நூலுக்கு எழுதப்பட்ட ரவிக்குமாரின் அறிமுகவுரையில்கூட மொழி

பெயர்ப்பாளர் குறித்த குறிப்புகள் மட்டுமல்ல; அது ஏற்கனவே நூலாக வெளிவந்தது என்ற தகவலும் கூட இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

அம்பேத்கர் குறித்த நூல்களை அறிமுக நோக்கத்தோடு எழுதியவர்களுள் பேரா. பெ. தங்கராசு குறிப்பிடத்தக்கவர் ஆவார். பாட்டாளி முழக்கம் என்னும் பத்திரிக்கையை வெளியிட்ட அவர் புரட்சிக்கனல் என்னும் சொந்த பதிப்பகத்தின் மூலம் அம்பேத்கரின் அரும்பணி - ஓர் ஆய்வு (1987), அண்ணல் அம்பேத்கர் சிந்தனைகள் (1995), காந்தி - அம்பேத்கர் கருத்துமோதல் (1999) உள்ளிட்ட அம்பேத்கர் குறித்த ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டார். அம்பேத்கரின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வலசை. து. ஜெயராமன் தன்னுடைய அறிவொளி பதிப்பகத்தின் சார்பாக அண்ணல் அம்பேத்கரின் அண்ணல் அம்பேத்கரின் பாதை ஆகிய நூல்களை 1990களின் முதன் மூன்றாண்டுகளுக்குள்ளேயே எழுதி வெளியிட்டார்.

அம்பேத்கரின் மூல எழுத்துகளை தலித்துகளில் இதழ்கள் நடத்தியோர், அமைப்புகளை நடத்தியோர் ஆகியோர் கொணர்ந்தனர். அன்பு பொன்னோவியம் நடத்திய அறவுரை இதழில் மு. ஆ. அரங்கசாமி என்பவர் அம்பேத்கரின் காந்தி ஜின்னாரானடே என்ற புகழ்பெற்ற உரையை-நூலை (1943) மொழிபெயர்த்து 1994 சனவரி முதல் தொடராக வெளியிட்டார். அது நூலாக தொகுக்கப்படவில்லை. சிதம்பரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எ.பொன்னுசாமி அம்பேத்கரின் தீண்டப்படாதார் வரலாறு (1948) நூலை தமிழில் மொழிபெயர்த்து டாக்டர் அம்பேத்கரின் தீண்டப்படாதார் வரலாறு (1992) என்னும் தலைப்பில் சொந்தமாக வெளியிட்டார் (அ.ஆ.பதிப்பகம், சென்னை). அடுத்ததாக

> கம்யூனிஸ்ட் தலைவர் ஏ.எஸ்.கே. வின் நூலும், அம்பேத்கர் நூல்களின் தொகுப்பாளரான பேராசிரியர் எஸ்.பெருமாளின் நூலும் குறிப்பிடத்தக்கவையாகும். 1976இல் நியூசெஞ்சுரி வெளியீடாக ஏ.எஸ்.கே. யின் டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சினையும் என்னும் நூல் வெளியானது. 2000–ஆம் ஆண்டில் இந்நூலை பல்கலைப் பதிப்பகமும் வெளியிட்டது. பெரியார் பற்றிய நூலுக்கு அடுத்து அம்பேத்கர் பற்றிய இந்நூலை ஏ.எஸ்.கே. எழுத முன்வந்தார். 1968–ஆம் ஆண்டு கீழவெண்மணியில் 44 தலித்துகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அச்சம்பவம் ஏற்படுத்திய அதிர்ச்சியும், சாதி குறித்த அணுகுமுறையும் இந்நூலை எழுத பெருங் காரணமாயிருந்தது என்று ஏ.எஸ்.கே. கூறியிருக்கிறார். மேலும் இந்நூலை தலித் தலைவர்களான எம்.சி. ராஜாவுக்கும், என்.சிவராஜீக்கும் ஏ.எஸ்.கே அர்பணித்துள்ளார்.

கற்பி (1987), அண்ணல் அம்பேத்கரின் ஒன்றுசேர் (1989) ஆகிய நூல்களை வெளியிட்டார். பூவை அமுதன் அரும்பெரும் தலைவர் அம்பேத்கர் (மயிலவன் பதிப்பகம், சென்னை, 1990) என்னும் நூலையும், அம்பேத்கர் ப்ரியன் பாபசாகிப் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு (நிறைமொழி அச்சகம், 1991) என்னும் நூலையும் வெளியிட்டனர். காந்தி குறித்த அம்பேத்கரின் கருத்துகளையும் பிற அறிஞர்களின் கருத்துக்களையும் தொகுத்து டாக்டர் வேலு அண்ணாமலை சார்ஜென்ட் மேஜர். எம்.கே.காந்தி என்னும் நூலை (1995) வெளியிட்டார். இந்நூல் தலித்வாய்ஸ் ஆசிரியர் வி.டி ராஜசேகரால் ஆங்கிலத்திலும் வெளியிடப் பட்டது. தங்கவயல் த. சந்திரன் ஸ்ரீசித்தார்த்தா பவன் சார்பாக நமது கடமை, புத்தநெறி, குறிப்பிடப்பட வேண்டியவர் பள்ளிக்கொண்டா கிருஷ்ணசாமியின் மகன் கிருஷ்ணகுமார் மொழிபெயர்த்து வெளியிட்ட நூல்களாகும். அண்ணலின் கடைசி செய்தி, நமது சுதந்திரத்திற்கு என்னவழி? அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது எப்படி? அமைச்சர் பதவியை நான் ஏன் ராஜினாமா செய்தேன்? (1990) ஆகிய தலைப்புகளில் அம்பேத்கரின் பேச்சுகளை - எழுத்துகளை சிறுவெளியீடுகளாகக் கொணர்ந்தார். இச்சிறு வெளியீடுகளின் வெளியீட்டாளர்களாக அம்பேத்கர் பெயரிலான அமைப்புகளே இருந்தன. சான்றாக நமது சுதந்திரத்திற்கு என்னவழி? என்ற நூலின் முதல் பதிப்பை அம்பேத்கர் சமுதாய விழிப்புணர்வு இயக்கமும், இரண்டாம் பதிப்பைத் தென்னாட்டு தளபதி எம். கிருஷ்ணசாமி சமுதாய விழிப்புணர்வு

கல்வி அறக்கட்டளையும் வெளியிட்டது. இந்துக்களிடமிருந்து விடுதலை என்னும் நூல் 1983இல் தலித் இதழ்களுள் ஒன்றான நீலக்கொடி வெளியிட்டது. இதழ் ஒன்றின் வெளியீடு எனும்போது இதழின் வாசகர்களை கருத்தில் கொண்டதாக இருந்திருக்க முடியும். அம்பேத்கர் எழுதிய Mr. Gandhi and the Emancipation of untouchables என்னும் நூலின் ஒரு பகுதியே இந்நூல். இந்நூல் விற்பனை மூலம் கிடைக்கும் லாபத்திலிருந்து சென்னை நகரில் தாழ்த்தப்பட்ட - பழங்குடி வகுப்பு மக்களுக்கு இடம் வாங்குவதற்காக பயன்படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. இது போன்ற வெளியீடுகள் உருவாக்கிய வாசிப்பு அனுபவம் அவை கட்டமைத்த அம்பேத்கர் குறித்த சித்தரிப்பு குறித்து மையநீரோட்ட ஆய்வுகள் கணக்கில் கொள்வதில்லை.

■

அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றினை எழுத செய்யப்பட்ட தொடக்க கால முயற்சிகளில் கம்யூனிஸ்ட் தலைவர் ஏ.எஸ்.கே. வின் நூலும், அம்பேத்கர் நூல்களின் தொகுப்பாளரான பேராசிரியர் எஸ்.பெருமாளின் நூலும் குறிப்பிடத்தக்கவையாகும். 1976இல் நியூசெஞ்சுரி வெளியீடாக ஏ.எஸ்.கே. யின் டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையும் என்னும் நூல் வெளியானது. 2000 ஆம் ஆண்டில் இந்நூலை பல்கலைப் பதிப்பகமும் வெளியிட்டது. பெரியார் பற்றிய நூலுக்கு அடுத்து அம்பேத்கர் பற்றிய இந்நூலை ஏ.எஸ்.கே. எழுத முன்வந்தார். 1968ஆம் ஆண்டு கீழ்வெண்மணியில் 44 தலித்துகள் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து அச்சம்பவம் ஏற்படுத்திய அதிர்ச்சியும், சாதி குறித்த அணுகுமுறையும் இந்நூலை எழுத பெருங் காரணமாயிருந்தது என்று ஏ.எஸ்.கே. கூறியிருக்கிறார்.மேலும் இந்நூலை தலித் தலைவர் களான எம்.சி. ராஜாவுக்கும், என். சிவராஜீக்கும் ஏ.எஸ்.கே அர்பணித்துள்ளார். இத்தலைவர்களின் பணிகளையும், பிற தலித் செயற்பாட்டாளர்களின் பணிகளையும் அவர் இந்நூலின் என்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அன்புபொன்னோவியம், ஏ.கோவிந்தசாமி ஆகியோர் அளித்த நூல்களின் அடிப்படையில் இந்நூலை அவர் எழுதினார்.

1981ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் வாழ்வும் தொண்டும் என்னும் நூலை டாக்டர் எஸ்.பெருமாள் வெளியிட்டார். 1986ஆம் ஆண்டு முல்லை நிலையத்தாரால் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் 2001 வரையிலும் 7 பதிப்பு வரை வெளியாகியுள்ளன. மேலும் இவர் கற்பி என்னும் இதழை நடத்தி அதில் அம்பேத்கர் குறித்த கட்டுரைகளை வெளியிட்டார்.

அம்பேத்கரின் சிந்தனைகளைத் தேர்ந்த பதிப்பாக வெளிக்கொணருவதில் முன்னோடி முயற்சியைச் செய்தவர் தலித் எழில்மலை ஆவார். கர்நாடகாவிலிருந்து வெளியாகும் V.T. ராஜசேகர் நடத்தும் Dalit Voice என்னும் இதழ் அம்பேத்கரின் சிந்தனைகளை ஆங்கிலத்தில் கொணர்ந்தபோது அதை அப்படியே, “தலித் குரல்“ எழில்மலை முயற்சியில் தமிழ் மொழிபெயர்ப்புகளாக வெளியிடப்பட்டன. தலித் சாகித்ய அகாடமி சார்பாக அந்நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. அம்பேத்கரின் இந்துமத மாற்றம் ஏன்? என்ற உரை 1982இல் நூலாக வெளியிடப்பட்டது. தொடர்ந்து மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு (1985), இந்து மத மாற்றம் ஏன்? (1988) ராமனும் கிருஷ்ணனும் ஓர் புதிர் (1988), மற்றும் காந்தியும் காங்கிரசும் தீண்டாத மக்களுக்கு செய்தது என்ன? (1998) ஆகிய நூல்களை வெளியிட்டது. காந்தியும் காங்கிரசும் தீண்டாத மக்களுக்கு செய்ததென்ன என்னும் நூலின் முக்கியத்துவத்தினைத் தலித் தலைவர்களுள் ஒருவரான ஜார்ஜ் கோமகன் மூலம் அறிந்து 31 ஆண்டுகளுக்குப் பின் தமிழில் கொணர முடிந்ததாகத் தலித் எழில்மலை கூறுகிறார். தலித் சாகித்ய அகாடமி வெளியிட்ட நூல்களுள் இந்நூலைத் தவிர மற்றவை பல பதிப்புகள் கண்டன.

1990களுக்கு முன்னர் அம்பேத்கர் சிந்தனைகளின் முக்கியத்துவம் இங்கு போதுமான அளவு உணரப்படவில்லை. அதற்கு முன்பு தலித் அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் அம்பேத்கர் பற்றிய - அம்பேத்கர் எழுதிய நூல்களைப் பரவலாக வெளியிட்டே வந்தனர். அம்பேத்கரின் நூல்கள் பரவலாகக் கிடைக்காத சூழலில், ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து அவர்கள் மிகுந்த பொருளாதாரச் சிரமங்களோடு வெளியிட்டார்கள். அம்பேத்கரின் எழுத்துகள் ஆங்கிலத்தில் முறைப்படி தொகுக்கப்படாத காலம் அது. அம்பேத்கர் பற்றிய தகவல்கள் இல்லாதது மட்டுமல்ல, அவரை வாசிக்க வேண்டும் என்ற “தேவை” கூட உணரப்படாத காலமும்கூட. 1990களுக்குப் பின்னரே தலித் சாகித்ய அகாடமி மற்றும் தொண்டுநிறுவனங்கள் போன்ற நிதியாதாரத்தினை உறுதியாக்கி கொண்டவர்களின் வருகை நிகழ்ந்தது. அம்பேத்கரும், அம்பேத்கரிய அமைப்புகளும் சாதிய அமைப்புகளாகவே பார்க்கப்பட்ட அக்காலத்தில் அவ்வெளியீடுகளின் தாக்கமும்,

பரவலும் வரையறைக்குட்பட்டே இருந்திருக்க முடியும் என்பதைப் புரிந்துக்கொண்டால் அவ்வெளியீடுகளின் முக்கியத்துவத்தினை யாரும் புறந்தள்ளிவிடமுடியாது.

■

1990களில் அம்பேத்கரின் சிந்தனைகள் தொகுதிகளாக வெளிவருவதற்கு முன்பே அம்பேத்கர் எழுதிய சில குறிப்பிட்ட நூல்கள் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன. 1980களின் இறுதியில் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் உலக - இந்திய அளவிலான அரசியல் மாற்றங்கள், அதை சார்ந்த விமர்சனங்கள், விவாதங்கள் ஊடாக முன் வந்த மார்க்சிய படிப்பாளிகளாகவும், இடஒதுக்கீட்டு ஆதரவாளர்களாகவும், முற்போக்கு இயக்கப் பின்னணி கொண்டவர்களாகவும் இருந்தார்கள். உலகஅளவில் சோவியத் தகர்வு இந்தியாவில் இந்து அரசியல் எழுச்சி, மண்டல்குழு அறிக்கை ஆகிய மாற்றங்கள் நடந்த காலத்தில்தான் அம்பேத்கர் நூற்றாண்டும், புதியவகை தலித் அமைப்புகளின் எழுச்சியும் எழுந்தன.

முதலாவதாக திருப்பூர் சமூகநீதி பதிப்பகம். அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட சாதி தலைவராகப் பார்க்கப்பட்ட சூழலில், இந்தியாவில் சமூகநீதி, மார்க்சியத்தின் எதிர்காலம் ஆகியவற்றை இணைத்துப் பார்த்து அம்பேத்கரின் தேவையை உணர்ந்தோம் என்று இவற்றுக்கு முன்முயற்சி எடுத்த கருணா மனோகரன் குறிப்பிடுகிறார். இந்துயிசத்தின் தத்துவம்(1993), இந்தியாவில் சாதிகள் அவற்றின் அமைப்பியக்கம் தோற்றுவாய் வளர்ச்சி (1992), பார்ப்பனியத்தின் வெற்றி (1992), காந்தியம் (1988), தாழ்த்தப்பட்டவர்கள் காந்தியிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் ஏன்? (1994) மற்றும் சாதிஒழிப்பு ஆகிய நூல்கள் சமூகநீதி பதிப்பகத்தால் கொணரப்பட்டன. தனிமனிதர்களை; முன்னிறுத்தாமல் பதிப்புரை, மொழிபெயர்ப்பாளர் பெயர்கள் இடம்பெற்று இந்நூல்கள் வெளியிடப் பட்டன. இந்நூல்களின் தலைப்புகளைப் பார்க்கும் பொழுதே சாதி, இந்துயிசம் குறித்த அம்பேத்கரின் எழுத்துகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை அறியமுடிகிறது. இப்பதிப்பகத்தின் தொடர்ச்சியாகவே கோவை விடியல், புத்தா வெளியீட்டகம் ஆகிய பதிப்பகங்கள் அம்பேத்கரின் நூல்களை வெளியிட்டன. குறிப்பாக சமூகநீதி பதிப்பகம் வெளியிட்ட அம்பேத்கர் நூல்களின் மறுபதிப்புகளோடு சேர்த்து சில புதிய முயற்சிகளில் புத்தா வெளியீட்டகம் ஈடுபட்டது. இந்தியாவில் சாதிகள் (2004), காந்திஜின்னா ரானடே (2004), இந்துயிசத்தின் தத்துவம் (2003) ஆகிய நூல்களைப் புத்தா வெளியிட்டது. விடியல் பதிப்பகத்தோடு இணைந்த வெளியீடுகளும் இவற்றுள் அடங்கும். விடியல் பதிப்பகம் போலவே சென்னைப் பல்கலைப் பதிப்பகமும், சரவணபாலு பதிப்பகமும் அம்பேத்கரின் சில நூல்களைக் கொணர்ந்தன. சமூக நீதி பதிப்பகத்தின் சமகாலத்திலேயே மதுரை கார்முகில் பதிப்பகம் அம்பேத்கரின் சாதி ஒழிப்பு (1990), இந்தியாவில் சாதியம் (1990) ஆகிய நூல்களை வெளியிட்டது.

அன்றைய மண்டல் அறிக்கை மூலம் விவாதிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு என்னும் தேவைக்கு அனுசரணையாக அம்பேத்கரை அடையாளப்படுத்த இப்பதிப்பகங்கள் முயற்சித்தன. அதாவது அம்பேத்கரின் பிராமண எதிர்ப்பு பிராமணரல்லாத பிற்படுத்தப்பட்டோருக்கு ஆதரவானதாக பார்க்கப்பட்டது. இதன் நோக்கத்தை விளங்கிக் கொள்ள முடிகிற தென்றாலும், அம்பேத்கரின் சாதி பற்றிய சிந்தனை களைப் பிராமணர்களைத் தாண்டி, பிராமணரல்லாதா ரோடும் இணைத்து விளக்கு வதில் யாரும் கவனம் செலுத்த விரும்பவில்லை. 1990இல் கார்த்தி என்பவர் எழுதிய பார்ப்பனரும் மண்டலும் (சித்தார்த்தா வெளியீடு) என்னும் நூல் அம்பேத்கருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அம்பேத்கர் நூல்களில் ஆர்வம் செலுத்திய கார்முகில் பதிப்பகம் இடஒதுக்கீடு அரசியலும் (1989), சரவணபாலு பதிப்பகம் செந்தூரனின் இடஒதுக்கீடு (1990)ஆகிய நூல்களை வெளியிட்ட மையும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். எனினும் சாதியம், இந்துயிசம் குறித்த சிந்தனைகளில் அம்பேத்கருக்கு உள்ள முக்கியத்துவத்தினை இவ்வெளியீடுகள் கவனப்படுத்தின. அதன் தொடர்ச்சியாக அம்பேத்கர் சிந்தனைகளின் பின்னணியில் சமகாலச் சூழல்களை விளக்கும் பார்வைகள் வளர்ந்திருக்க வேண்டும். அவ்வாறான முயற்சிகள் தொடக்கநிலையில் சிறிதளவே தலையெடுத்தன. சான்றாக சனநாயகப் புரட்சியும் அம்பேத்கரும் சாதிய ஒழிப்பும் (1998), என்னும் தொகுப்பு நூல் அமார்க்ஸ் எழுதிய அம்பேத்கரின் போர்க்குரல் என்னும் சிறுநூல், ரவிக்குமார் அறிமுகப்படுத்திய உபேந்திர பக்ஷியின் அம்பேத்கர் பற்றிய மதிப்பீடு, கோ. கேசவனின் பிற்கால நூல்கள் ஆகியவற்றைக் கூற முடியும். ஆனால் இப்போக்கு வளரவில்லை.

1992இல் வே. ஆனைமுத்துவின் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி சார்பாக க.முகிலன் மொழிபெயர்ப்பில் தனஞ்செய்கீர் ஆங்கிலத்தில் எழுதிய அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு தமிழில் வெளியானது. தமிழில்

எழுதப்படும் அம்பேத்கர் குறித்த அநேக வாழ்க்கை வரலாற்று நூல்களுக்கு தனஞ்செய்கீரின் நூலே ஆதாரமாக விளங்கி வருகிறது. ப. சீனிவாசனின் சமூகப் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் (1992 மணிவாசகர் பதிப்பகம்) ராவணன் எழுதிய விடுதலைவீரர் அம்பேத்கர், ஏ.பி. வள்ளிநாயகம் எழுதிய போராளி அம்பேத்கர் குரல் (ஜீவ சகாப்தன் பதிப்பகம்), பரவலான வாசகர் களைச் சென்றடைந்த அஜயன்பாலா எழுதிய நாயகன் அம்பேத்கர் (2008 செப்டம்பர் ஆனந்தவிகடன் வெளியீடு) ஆகிய நூல்கள் தனஞ் செய்கீரின் தாக்கம் பெற்றவைகளாகும். அம்பேத்கரின் சிந்தனைகள் ஏறக்குறைய தொகுக்கப் பட்டு வெளிவந்துள்ள நிலையில் அந்நூல்களின் வாசிப்பு பின்னணியோடு அவரது வாழ்க்கை வரலாறு எழுதப்படவேண்டும். அம்பேத்கரின் நூல்தொகுதிகளில் இடம்பெற்றுள்ள தேதி உள்ளிட்ட விவரங்களோடு தனஞ்செய்கீரின் நூல் தரும் விவரங்கள் முரண்படுகின்றன தமிழில் இதுவரையிலும் அம்பேத்கருக்கு முறையான வாழ்க்கை வரலாற்று நூல் இல்லை என்றே சொல்லவேண்டும்.

வே. ஆனைமுத்துவின் முயற்சிக்கு அடுத்து அம்பேத்கரைப் பெரியாரோடும், திராவிட இயக்க அரசியலோடும் இணைத்து விளக்கும் முயற்சிகள் பெருகின. குறிப்பாக எஸ்.வி.ராஜதுரை எழுதிய இந்து இந்தி இந்தியா நூலிலும், வ.கீதாவோடு இணையாசிரியராக இருந்து அவர் எழுதிய பெரியார் பற்றிய நூல்களிலும் அம்பேத்கர் பல்வேறு இடங்களில் பேசப்பட்டு செல்வதைப் பார்க்கலாம். அருண் சௌரியின் அம்பேத்கர் பற்றிய அவதூறுகளை மறுத்து கி.வீரமணி நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். அருண்சௌரியை மறுத்து அறவுரை இதழில் அன்புபொன்னோ வியமும் நீண்ட கட்டுரையொன்றை எழுதினார்.

தலித் இயக்கங்களைப் பொறுத்த வரையில் 1990களுக்குப் பிந்தைய இயக்கங்கள் அன்றாட நடைமுறை, அரசியல் பணிகள் என்றே கவனம் செலுத்தியிருக்கின்றன.பெரிய அளவில் வெளியீடு களில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. ஆனால் அம்பேத்கர் பற்றிய அறிமுகம் சேரி இளைஞர்களிடம் பரவலாகச் சென்று சேர்ந்துள்ளன. அதே வேளையில் ஊடக வாய்ப்பும், ஓரளவு கட்டமைப்பு வசதியும் பெற்றுள்ள ஓரிரு தலித் இயக்கங்களும்கூட வெளியீடுகளிலும், அம்பேத்கர் பற்றிய வாசிப்பிலும் ஆர்வம் காட்டுவதில்லை. தங்களைக் காட்சி அரசியலின் பிம்பமாக மாற்றிக்கொள்ளும் தலித் கட்சிகளின் பேச்சுக்களிலும், அரசியலற்றகட்சிப் பணிகளிலும் அம்பேத்கர் பார்வையிலான அரசியலுக்கு இடம் இல்லாமல் செய்யப்பட்டு வருகின்றது. தலித் அமைப்புகளின் எழுச்சியும், அம்பேத்கர் சிந்தனைத் தொகுப்புகளும், தலித் அறிவுஜீவிகளின் ஊடக பங்கேற்பும் கைகூடியும் கூட அம்பேத்கர் சிந்தனை சார்ந்து புதிய நோக்குகள் இங்கு எழவில்லை. அம்பேத்கர் மீது விரிவான வாசிப்பு பின்னணிகொண்ட ரவிக்குமார் போன்றோரின் அரசியல் வாழ்க்கையும் இத்தகைய வாய்ப்பினைத் தடுத்துவிட்டன. முன்பு ரவிக்குமார் எழுதிய அம்பேத்கரின் சனநாயகம் (தாய்மண் 2003) போன்ற கட்டுரைகள் அம்பேத்கர் சிந்தனைகள் மீது வெளிச்சம் பாய்ச்சிய முயற்சிகளாய் இருந்தன. தலித் எழுத்தாளர்களில் குடியரசன் ம. மதிவண்ணன், அழகியபெரியவன் ஆகியோர் அம்பேத்கர் குறித்து எழுதி வருகின்றனர்.

பெரிய இயக்கங்களாக இல்லாமல் சிறு அமைப்புகளாக உள்ள தலித் அமைப்புகளின் வெளியீட்டு முயற்சிகள் 1990களுக்குப் பின்னரும் தொடர்கின்றன. சமூகநீதி பதிப்பகம், விடியல் பதிப்பகம் ஆகியவற்றோடு சேர்ந்து ஆதித்தமிழர் பேரவை 1994இல் அம்பேத்கரின் தாழ்த்தப் பட்டவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? என்னும் நூல் வெளியீட்டில் பங்கு பெற்றது. சென்னையில் பல்வேறு சிறு அமைப்புகள் பௌத்தம் குறித்த அம்பேத்கரின் எழுத்துகளை வெளியிடுகின்றன. 2008இல் தலித் முரசு இதழ் தன் ஒரு இதழையே அம்பேத்கரின் சாதி ஒழிப்பு நூலாக கொணர்ந்தது. 2008இல் திருமாவளவனின் பிறந்த நாளை ஒட்டி அக்கட்சி வெளியிட்ட 25 நூல்களில் காந்தியம் என்னும் அம்பேத்கரின் நூலும் உண்டு. துடி என்னும் தலித் இளைஞர் இயக்கம் மூலம் சாதிஒழிப்பு, விடுதலைப்பாதை, புத்தரா? காரல்மார்க்ஸா?, புத்தர் எவற்றை போதித்தார்?, பௌத்த வாழ்க்கை முறை, கேள்விகளும் புத்தரும் ஆகிய சிறிதும் பெரிதுமான நூல்களைக் கடந்த 5 ஆண்டுகளில் வெளியிட்டுள்ளது. துடி வெளியீடுகள் நேரடி பிரச்சார நோக்கம் கொண்டவையாகும். இதே போல பாலம் என்னும் அமைப்பு மூலம் கேள்வி களும் புத்தரும், விடுதலைப் பாதை போன்ற வெளியீடுகள் வந்துள்ளன. பேரா.க. ஜெயபாலனின் அம்பேத்கரையும் பௌத்தத்தையும் இணைக்கும் சிறுவெளியீடுகள், 2010 ஆம் ஆண்டில் அம்பேத்கரின் பெண்ணியம் என்னும் ஒரே தலைப்பில் வெளியாகியுள்ள அரச. முருகுபாண்டியன், பா.பிரபாகரன் ஆகியோரின் நூல்கள், இரட்டை வாக்குரிமை குறித்த அ.ஜெகநாதன் நூல், எரிமலை ரத்தினம் மொழி பெயர்த்த விடுதலைக்கு வழி எது? (2001,

ஆதிபகவன் பதிப்பகம்) ஆகியவை சொல்ல வேண்டியவையாகும். அம்பேத்கரின் பௌத்தம், மற்றும் நிலம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பாக வெளியாகியுள்ள எம். தங்கராஜின் 2 தொகுப்பு நூல்கள், ஏ.பி.வள்ளிநாயகத்தின் அம்பேத்கரின் ஆசான் புத்தர் (2006) ஜான் ஜெயகரன் தொகுத்த புரட்சியாளர் அம்பேத்கரின் கருத்துக்கலகம் (2005, தலித் ஆதாரமையம்) போன்ற நூல்களின் வருகை புதியதாய் எதையும் சொல்லுவதாய் அமையவில்லை. பாடத்திட்ட நோக்கில் பல்வேறு தலைவர்களில் ஒருவராக அம்பேத்கர் பற்றிய அறிமுக நூல்களை பழனியப்பா பிரதர்ஸ் தொடங்கி (தி.சு.கலியபெருமாள், 1969) கிழக்கு பதிப்பகம் வரை வெளியிட்டு வருகின்றன.

■

தலித் எழுச்சிக்குப் பின்னர் கட்சிசார் இடதுசாரிகளிடம் அம்பேத்கர் பற்றி எழுத்துள்ள அக்கறை குறிப்பிட்டு சொல்லத்தக்கதாகும். அம்பேத்கர் நூல்தொகுதிகளைஇந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீட்டுப் பிரிவான நியூசெஞ்சுரி புக்அவுஸ் விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. 2006இல் மதுரை புதியகாற்று இதழ் இடதுசாரி அறிவாளிகளின் பங்கேற்போடு நடத்திய மார்க்சியமும் அம்பேத்கரியமும் என்னும் கருத்தரங்கம், 2009 நவம்பர் 27,28 தேதிகளில் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத்துறை, அம்பேத்கர் பொருளாதார ஆய்வுமையம், நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் ஆகிய மூன்றும் இணைந்து நடத்திய அறிஞர் அம்பேத்கர் சிந்தனைகள் கருத்தரங்கமும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவையாகும். மேலும் என்சிபிஎச் வெளியிட்டுள்ள டாக்டர் அம்பேத்கரின் நினைவலைகள் (2007 டிசம்பர்), மு.நீலகண்டனின் டாக்டர் அம்பேத்கரும் இந்திய அரசியல் சட்ட வரலாறும் (2009), டாக்டர் அம்பேத்கரின் நாசிக் போராட்டமும் (2009) நூல்கள் ஆழம் தாங்கியவையாக இல்லாதிருப்பினும்கூட எழுதப்பட்ட முயற்சி என்ற அளவில் முக்கியமான தாகும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்பு முன்னனி உருவாக்கப்பட்ட பின்பு அம்பேத்கரை அரசியல் ரீதியாக அடையாளப்படுத்தும் போக்கு பெருகியுள்ளது. பாரதி புத்தகாலயத்திற்காக ரவிக்குமார் அம்பேத்கர் கல்விச் சிந்தனைகள் (2007 டிசம்பர்) என்னும் நூலைத் தொகுத்துள்ளார். இத்தொகுப்பு இன்னும் விரிவாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும். இவைகளைத் தாண்டியும் இடதுசாரி இதழ்களிலும், அரங்குகளிலும் அம்பேத்கர் பற்றி பேசப்படுகிறது. இவை எல்லாவற்றுக்கும் பின்பும் அம்பேத்கர் குறித்த விரிவான நோக்குகளை இடதுசாரிகளாலும் உருவாக்கித் தரமுடியவில்லை.

■

இந்திய அரசு வெளியிட்ட அம்பேத்கரின் சிந்தனைகள் தமிழில் 37 தொகுதிகள் வரை வெளியாகியுள்ளது. 1993இல் முதல் தொகுதியோடு தொடங்கிய இம்முயற்சி 2005 வரையிலும் 37ஆம் தொகுதியோடு நின்றிருக்கிறது. ஆங்கிலத்தில் 17 வது தொகுதியின் மூன்றாவது பாகம் வரையிலான பகுதிகளே தமிழில் 37 தொகுதிகளாகப் பகுக்கப் பட்டுள்ளன. 1993இல் அம்பேத்கரின் சிந்தனை களைப் பல்வேறு தொகுதிகளாக மொழிபெயர்த்து வெளியிடும் பணி தொடங்கியதிலிருந்தே அவைகளின் தமிழ்மொழிபெயர்ப்பு ஒருங்கிணைப் பாளராகவும், நிர்வாக பதிப்பாசிரியராகவும் டாக்டர் எஸ்.பெருமாள் இருந்தார். மொழிபெயர்ப்பு ஒருங்கிணைப்பாளர் மட்டுமின்றி ஒரு தொகுதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்புகளை ஒப்புநோக்குவோர், பிழைதிருத்துவோர் என்று கூட்டுப்பணியாக இவை அமைந்திருந்தது. தமிழின் முக்கிய மொழி பெயர்ப்பாளர்கள்கூட சில பகுதிகளை மொழி பெயர்த்துத் தந்துள்ளனர். ஆனால் ஒவ்வொரு தொகுதியையும் ஒருவரே மொழிபெயர்ப்பதாக இல்லாமல், அதனை பல்வேறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியை ஒவ்வொருவர் மொழிபெயர்த்தனர். இதில் பலர் அம்பேத்கரின் சிந்தனைகளைத் தொழில் முறைக்கருதி மொழி பெயர்த்தவர்களாக இருந்தனர். சிலர் அம்பேத்கரை முதன்முறையாகப் படிப்பவர்களாகவும் இருந்தனர். இதனால் ஒரு நூலின் ஒரு பகுதியை அந்நூலின் மற்றொரு மொழிபெயர்ப்பாளர் அறிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. குறிப்பிட்ட நூலை முழுமையாக படித்து அதன் அரசியல் அர்த்தத்தை உள்வாங்கி மொழிபெயர்க்கும் ஜீவன் இதில் இல்லாமல் போய்விடுகிறது. ஒரு தொகுதியிலேயே பல்வேறு பட்ட மொழிநடைகள் கலந்துவருவதைத் தமிழ்த் தொகுதிகளை வாசிப்பவர்கள் கண்டுணர முடியும். சான்றாக: தமிழில் பலமுறை மொழிபெயர்க்கப்பட்ட அம்பேத்கரின் சாதி ஒழிப்பு நூலின் ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் வேறுபட்டிருப்பதை இங்கு ஒப்பிட்டு பார்க்கலாம். மொழிபெயர்ப்பிலும், அதனை ஒப்புநோக்குவதிலும் மேலும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்பதையே இத்தொகுதிகளின் மொழிபெயர்ப்புகள் உணர்த்து கின்றன. ஆனால் தமிழ் மட்டுமே அறிந்தவர்களாக இருப்பவர்களையும் அம்பேத்கரின் அறிவார்ந்த நடை ஈர்ப்பதை நாம் மறுக்க முடியாது.

25வது தொகுதிவரை தமிழ்த்தொகுதிகளின் பதிப்பாளராக இருந்த எஸ்.பெருமாள் 2001இல் மரணமடைந்ததையடுத்து அதுவரையிலும் தொகுதி மொழிபெயர்ப்புகளை ஒப்புநோக்கு பவராகவும், மொழிபெயர்ப்பவராகவும் இருந்த ராரங்கசாமி என்ற மாஜினி தமிழ்நூல் நிர்வாக ஆசிரியராக ஆனார். ஒவ்வொரு தொகுதியிலும் அம்பேத்கரின் பல்வேறுபட்ட அறிக்கைகள், விண்ணப்பங்கள், நூல்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொன்றையும் வாசிப்பதற்கு முறையான அறிமுகக் குறிப்புகள் இல்லை என்பது பெருங்குறை. அதேபோல இவைகளை காலவரிசைப்படுத்தி தொகுப்பதற்கான அவசியமும் உள்ளது. அம்பேத்கரின் நூல்தொகுதிகளில் அடங்கியிருப் பதை வசதிக்காக இவ்வாறு பிரித்துப் பார்க்கலாம். அவை

1. நூல்கள்
2. பாராளுமன்ற - சட்டமன்ற / மாநாட்டு விவாதங்கள்
3. ஆராய்ச்சி கருத்தரங்கக் கட்டுரைகள்
4. தனி உரைகள்
5. கடிதங்கள், விண்ணப்பங்கள், அறிக்கைகள் என்று பிரித்துக் கொள்ளலாம்.

அம்பேத்கரின் எழுத்தும், பேச்சும் விரிந்த அளவில் கிடைத்திருப்பினுங் கூட அவற்றுள் அவர் நூல்களாகத் திட்டமிட்டு எழுதி முடித்தவை குறைவேயாகும். அம்பேத்கரின் நூல்கள்:

அ. காந்தியும் காங்கிரசும் தீண்டாத மக்களுக்கு செய்ததென்ன? (1945)

ஆ. தீண்டப்படாதார் என்பவர்கள் யார்?
அவர்கள் எவ்வாறு தீண்டப்படாதார் ஆயினர்? (1948)

இ. சூத்திரர்கள் யார்? அவர்கள் எவ்வாறு இந்தோ ஆரிய சமுதாயத்தில் நான்காம் வருணத்தவர் ஆனார்கள்? (1947)

ஈ. பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை (1940)

உ. இந்து மதத்தின் புதிர்கள் மக்களுக்கு தெளிவுறுத்துவதற்கானதொரு விளக்கம்.
(பதிப்பாளர்களால் ஆண்டு கண்டறியப் படவில்லை)

6. புத்தரும் அவரது தம்மமும் (1956) ஆகியவையாகும். புத்தரும் அவரது தம்மமும் என்னும் நூல் அவரது மறைவுக்குப் பின்னர் 1957இல் வெளியானது. ஆய்வுக் கட்டுரையாகத் தொடங்கப்பட்டு நூலாக விரித்து எழுதப் பட்டது பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை நூலாகும். இவை தவிர நூலாக எழுத திட்டமிட்டு நிறைவு செய்யப்படாமல் போன நூல்களும் உண்டு. தமிழில் 7வது தொகுதியாக வெளிவந்துள்ள பண்டைய இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் தீண்டப்படாதவர்கள் அல்லது இந்திய சேரிகளின் குழந்தைகள் ஆகிய நூல்களைக் காணலாம். நூலில் அவர் வகுத்து வைத்துள்ள புத்தகங்களுக்கான திட்டம் என்னும் பகுதி தரப்பட்டுள்ளது. அதன் மூலம் நூல் ஒன்றை எழுதுவதில் அவருக்கிருந்த திட்டமிடலையும், பகுப்பு முறையையும் அறியமுடிகிறது.

அம்பேத்கரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சொற்பொழிவுகளும் அவராலேயே நூலாக வெளியிடப்பட்டு அவரின் பிரதானமான நூல்களாகக் கருதப்படுகின்றன. அவர் 1916இல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நடந்த மானுடவியல் கருத்தரங்கில் வாசித்த இந்தியாவில் சாதிகள் என்னும் கட்டுரையே இந்தியாவில் சாதிகள் என்னும் அவரது நூலாகும். ஆனால் இதனை அம்பேத்கர் வெளியிடவில்லை. அம்பேத்கர் நூல்களின் ஆங்கில தொகுப்பாளரால் தொகுக்கப் பட்டதாகத் தெரிகிறது. லாகூரில் நடக்கவிருந்த ஜாத்பட்தோடக் மாநாட்டில் வாசிப்பதற்காக எழுதப்பட்டு அந்நூலின் கருத்துகளை மாற்றிக்கொள்ள மறுத்து அம்பேத்கராலேயே 1936இல் வெளியிடப்பட்ட சாதி ஒழிப்பு நூல், பூனாவில் நடந்த ரானடேகாந்தி ஜின்னா நூல் ஆகியவை முக்கியமானவை யாகும் நினைவு சொற்பொழிவாக வழங்கப்பட்டு 1943இல் நூலாக வெளியிடப்பட்ட ரானடே காந்தி ஜின்னா மேலும் கல்வித் துறையில் அவர் அளித்த ஆய்வேடுகளில் 1915இல் முதுகலைப்பட்ட ஆய்வேடாக அம்பேத்கர் அளித்த கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நிர்வாகத் துறையும் நிதித்துறையும் எனும் ஆய்வு, இந்தியாவில் சிறு நிலவுடைமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் போன்ற ஆய்வுக் கட்டுரைகள் முக்கியமானவையாகும். அம்பேத்கரின் புகழ்பெற்ற ஆய்வான ரூபாயின் பிரச்சினை அதன் தோற்றமும் அதற்கான தீர்வும் (1923) என்னும் ஆய்வு நூல் 1947இல் விரிவாக்கப் பட்டு இந்தியச் செலவானி மற்றும் வங்கித்தொழிலின் வரலாறு என்று மறுபதிப்பாக வெளிவந்தது. மேலும் 1942 கியூபெக் பசிபிக் உறவுகள் கழக மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட கட்டுரை 1943இல் திரு காந்தியும் தீண்டப்படாதோரின் விடுதலையும் என்னும் நூலாக அம்பேத்காராலேயே வெளியிடப்பட்டது.

இந்தியாவில் உருவாகி வந்த பெரும் பான்மைவாத அரசியலுக்கு எதிராகவும், சாதி ஒழிப்புக்கு ஆதரவாகவும் எழுதிய தலித் ஒருவரின் எழுத்திற்கு ஏற்படும் அனைத்து இடையூறுகளையும் அவரது எழுத்தும் பதிப்பும் சந்தித்தன. அவரது நூல்களின் கருத்துகள் பல பெயர் குறிப்பிடாமல் எடுத்தாளப் பட்டன. உரையாக வழங்க ஒப்பு கொள்ளப்பட்டு கருத்தின் தீவிரம் கருதி மறுக்கப்பட்டன. மௌனம், இருட்டடிப்பு, மறுப்பு, அவதூறு என யாவும் நடந்தன. இதைக் குறித்தே தனியாக எழுத முடியும். இனி தமிழில் வெளிவந்துள்ள அம்பேத்கரின் நூல் தொகுதிகளின் உள்ளடக்கத்தினைப் பார்க்கலாம்.

பகுதி 1

தொகுதி: 1. இந்தியாவில் சாதிகள் (1916)
2. சாதி ஒழிப்பு (1936)

பகுதி 2

மொழிவாரி மாகாணங்கள் குறித்து

3. மொழிவாரி மாகாணமாக மகாராஷ்டிரம் (1948)

4. வரைமுறை, தராதர நிர்ணய அவசியம் (1953)

5. மொழிவாரி மாநிலங்கள் பற்றிய சிந்தனைகள் (1955)

பகுதி3

வீரரும் வீர வழிபாடும்

6. ரானடே, காந்தி, ஜின்னா (1943)

(1)

தொகுதி:2 அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்தம் பற்றியவை

1. சவுத்பரோ குழுவின் முன் அளித்த சாட்சியம் (1919)

2. கூட்டாட்சியா? சுதந்திரமா? (1939)

3. சமூகத்தடையும் அதைத் தீர்க்கும் வழியும் (1945)

4. மாநிலங்களும் சிறுபான்மை யினரும் (1947)

(2)

பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்து

5. இந்தியாவில் சிறுநிலவுடைமை களும் அவற்றுக்கான தீர்வுகளும் (1918)

6. திரு. ரஸ்ஸலும் சமுதாய மறு சீரமைப்பும் (1918)

தொகுதி:3 1927, 1928, 1932, 1937, 1938 ஆகிய ஆண்டுகளில் பம்பாய் சட்ட மன்றத்தில் அம்பேத்கர்.

தொகுதி:4 தொகுதி மூன்றின் தொடர்ச்சி, மாநில அமைப்புப் பற்றிய கருத்துகள், பகிஷ்கிரிதா ஹிதகாரணி சபா இந்தியச் சட்டப்படி அமைந்த கமிஷனுக்கு அறிக்கை - சாட்சியம்.

தொகுதி:5 வட்டமேஜை மாநாடுகளில் அம்பேத்கர் 1930, 1931.

தொகுதி:6 இந்துமதத் தத்துவம் குறித்த கட்டுரைகள் மற்றும் இந்தியாவும் பொதுவுடைமைக்கான முற்படுத் தேவைகளும்.

தொகுதி:7 பண்டைய இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் (13 இயல்கள்)

தொகுதி:8 இந்துமதத்தின் புதிர்கள்

தொகுதி:9 தீண்டப்படாதவர்கள் அல்லது இந்தியச் சேரிகளின் குழந்தைகள் மற்றும் தீண்டப்படாதவர்கள், தீண்டாமை பற்றிய ஏனைய கட்டுரைகள் (14 இயல்கள்)

தொகுதி:10 தொகுதி 9ன் தொடர்ச்சி. தொடர்ச்சியாக 15 இயல்கள் முதல் 30 இயல்கள் முடிய.

தொகுதி:11 கிழக்கிந்திய கம்பெனியாரின் நிர்வாகத்துறையும் நிதித்துறையும் (1915)

தொகுதி:12 ரூபாயின் பிரச்சினை - அதன் தோற்றமும்; அதற்கான தீர்வும் (1923)

தொகுதி:13 சூத்திரர்கள் யார்? (1947)

தொகுதி:14 தீண்டப்படாதார் என்பவர்கள் யார்? (1948)

தொகுதி:15 பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை (1946)

தொகுதி:16 தீண்டப்படாதவர்களுக்கு காந்தியும் காங்கிரசும் சாதித்தது என்ன? (1945)

தொகுதி:17 திரு. காந்தியும் தீண்டப்படாதோரின் விடுதலையும் (1943)

தொகுதி:18 1942இல் வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராகி, தொழிலாளர் நலத் துறை மீது நிகழ்த்தப்பட்ட உரைகள் மற்றும் விவாதங்கள்.

தொகுதி:19 1942 - 46ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற முக்கிய கடிதப் போக்கு வரத்து, கோரிக்கை மனு மற்றும் அறிக்கைகள்.

தொகுதி:20 மற்றும் தொகுதி: 21 தொகுதி 19ன்

தொகுதி:22 புத்தரும் அவரது தம்மமும் (1957)

தொகுதி:23

பகுதி 1 1. பண்டைக்கால இந்திய வணிகம்

2. வரலாற்றின் இடைநிலை காலத்தில் இந்தியாவில் வாணிக உறவுகள்.

(அல்லது)

இஸ்லாமின் தோற்றமும் மேற்கு ஐரோப்பாவில் விரிவாக்கமும்

3. மன்னர்பிரான் அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்கவிருந்த தருணத்தில் இந்தியா.

பகுதி 2 1. தீண்டப்படாதோரும் பிரிட்டீஷ் பேரரசும்.

பகுதி 3 1. இங்கிலாந்தின் அரசியல் சாசனம் குறித்த விரிவுரைகள்.

(பம்பாய் அரசினர் சட்ட மாணவர் களிடம் இங்கிலாந்து அரசியல் சாசனம் குறித்து 1934-35இல் அம்பேத்கர் நிகழ்த்திய விரிவுரைகள் அம்பேத்காராலேயே இப்பெயரால் பிரசுரிக்கப்பட்டது. இத்தலைப்பின் கீழ் ஐந்து உபதலைப்புகள் அமைந்தன).

2. தலைமை அதிகார உரிமையும் இந்திய சமஸ்தானங்களின் சுதந்திர கோரிக்கையும்.

தொகுதி:24 தொகுதி 23ன் தொடர்ச்சியாக பகுதி 4 இடம்பெற்றன. 8 தலைப்புகளில் சட்ட நெறி குறித்த கட்டுரைகள் மட்டுமே தொகுதியில் சேர்க்கப் பட்டுள்ளன.

தொகுதி:25 இத்தொகுதியும் தொகுதிகள் 24,25 ஆகியவற்றின் தொடர்ச்சி ஒரு விசாவுக்காக காத்திருத்தல். (அம்பேத்கர் தம் இளமை வாழ்க்கையில் சந்தித்த தீண்டாமை கொடுமைகளின் தேர்ந்தெடுத்த பதில்கள்)

பகுதி5 பலவகைக் குறிப்புகள் என்னும் தலைப்பில் 9 சிறு தலைப்புகளில் கட்டுரைகள்.

(மேற்கண்ட 23,24,25 ஆகிய மூன்றுத் தொகுதிகளிலும் அம்பேத்கர் கால வரிசைப்படுத்தப்படாத உரைகள், கட்டுரைகள் மற்றும் குறிப்புகள் அடங்கியுள்ளன. இவற்றுள் பலவும் முற்றுப்பெறாதவை. சில முழுமை யாக பதிப்பாளர்களுக்கு கிடைக்கப் பெறாதவை).

தொகுதி:26 அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் சேர்ந்தது முதல் அரசியல் நிர்ணய சபையில் இந்திய அரசியல் சாசனத்தை அறிக்கைப் படுத்தியது வரை 1946 டிசம்பர் 6 முதல் 1948 நவம்பர் 8வரை நடந்த விவாதங்கள் 3 பகுதியாகவும், அரசியல் நிர்ணய சபை குறித்த தி கெஜெட் ஆப் இந்தியா சிறப்பிதழ் பின்னிணைப்பும் இடம்பெற்றுள்ளது.)

தொகுதி:27 தொகுதி 26ன் தொடர்ச்சி – விதிவாரி யாக விவாதம் (1948 நவம்பர் 15 முதல் 1949 சனவரி 8 வரை)

தொகுதி:28 தொகுதி 26, 27ன் தொடர்ச்சி .... விதிவாரியாக விவாதம் (1949 மே 16 முதல் 1949 ஜீன் 16 வரை)

தொகுதி:29 தொகுதி 27,28ன் தொடர்ச்சி.... விதிவாரியாக விவாதம் (1949 ஜீலை 30 முதல் 1949 செப்டம்பர் 16 வரை)

தொகுதி:30 தொகுதி 26, 27, 28, 29ன் தொடர்ச்சி .... விதிவாரியாக விவாதம் (1948 செப்டம்பர் 17 முதல் 1949 நவம்பர் 16 வரை)

தொகுதி:31 இந்து சட்டத்தொகுப்பு, மசோதா, அதன் மீதான விவரம்

தொகுதி:32 தொகுதி 31-ன் தொடர்ச்சி

தொகுதி:33 1947 நவம்பர் 20 முதல் 1949 மார்ச் 31 வரையிலான விவாதங்கள்.

தொகுதி:34 1951 ஆகஸ்டு 7 முதல் 1951 அக்டோபர் 12 வரை

தொகுதி:35	மஹத்குளப் போராட்டம், காந்தி - அம்பேத்கர் சந்திப்புகள், தலித்துகளை இந்திய அரசியல் வானில் ஈடுபடுத்துவதில் அம்பேத்கரின் பங்கு, நாசிக் காலாராம் கோயில் நுழைவு, பிற இயக்கங்கள் என்னும் தலைப்புகள்.
தொகுதி:36	4 பிரிவுகளில் தலைப்பு 1. கட்டுரைகள், செய்திகள் முன்னுரைகள் 2. அம்பேத்கர் அமைச்சரவை தூதுக்குழுவும் அதிகார மாற்றமும் 3. தேசத்தையும் அதன் ஜனநாயகத்தையும் வளர்த்து மேம்படுத்துவது சம்பந்தமாக 4. நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் அவற்றின் சட்டவிதி முறைகள்
தொகுதி:37	157 தலைப்புகளில் அம்பேத்கரின் பேச்சுகள், அறிக்கைகள்.

தமிழில் அம்பேத்கரின் எழுத்துகள் பதிப்பிக்கப் பட்டதில் பல்வேறு போக்குகள் பிரதிபலித்துள்ளன. 1990களுக்கு முன்னர் தலித்துகள் வெளியிட்ட நூல்கள் அம்பேத்கர் குறித்த சித்திரத்தினைத் தலித் மக்கள் மத்தியில் உருவாக்குவதில் பங்காற்றின. அவரின் மூல எழுத்துகளைப் போலவே அவரைக் குறித்த எடுத்துரைப்புகளும் அன்றைக்கு அவசியமாய் இருந்ததை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறான எடுத்துரைப்புகளில் மிகைப்படுத்தலும், விடுபடல்களும் இருந்தன. எனினும் தலித் மக்களுக்கு அம்பேத்கர் என்னும் அடையாளம் தந்த நம்பிக்கையைக் குறித்து நாம் அக்கறை செலுத்தவேண்டி இருக்கிறது. தொடக்ககால வெளியீடுகளில் அம்பேத்கர் சாதி குறித்து சொன்ன கருத்துகளைச் சொல்லியதைக் காட்டிலும் அவரின் சாதி என்னும் ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றிபெற்ற வரலாறு தலித்மக்களுக்கு முக்கியமானதாய் இருந்திருக்கிறது. அம்பேத்கரின் சாதி ஒழிப்பு சிந்தனையைப் போலவே இந்திய அரசியல் சட்டத்திற்கு அவரின் பங்களிப்பு, பௌத்தம் தழுவல் ஆகியவையும் தலித் செயற்பாட்டாளர்களால் நூல்களாக மொழியப் பட்டன. இந்தியாவில் சாதியின் பெயரால் புறக்கணிக்கப்பட்ட தங்களின் அடையாளம் பூண்ட ஒருவராலேயே இந்தியா முழுமைக்குமான அரசியல் சட்டம் தரப்பட்டது என்னும் ஆழமான நோக்கு இதிலிருக்கிறது. ஆனால் 1990களில் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பதிப்பித்த தமிழ் இடதுசாரி பின்னணிகொண்ட அறிவாளிகளுக்கு சாதி என்னும் சமூக சிக்கலுக்குரிய சிந்தனையாளராக இருந்து அம்பேத்கர் வழங்கிய பங்களிப்புகளே போதுமானவையாக இருந்தன. பரந்த நோக்கில் அரசு அதிகாரம் குறித்து முரண்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்த அந்த அறிவாளிகளுக்கு அம்பேத்கரின் அரசியல் சட்டத்திற்கான பங்களிப்பு, பௌத்தம் ஆகிய கருத்துகள் அத்துணை அவசியமில்லாததாய் போய்விட்டது. திராவிட இயக்கத்தைப் போற்றும் அறிவாளிகள் பார்ப்பன எதிர்ப்பு என்னும் அடையாளத்திலிருந்து தாண்டி அம்பேத்கரின் பெயரை உச்சரிப்பதில் எப்போதும் ஆர்வம் காட்டப்போவதில்லை. இடதுசாரிகளிடம் அரசியல் ரீதியான அடையாளமாகப் பேணப்படும் அம்பேத்கரைச் சிந்தனைப் போக்காகப் பார்க்கும் நிலைமை ஆழமாகப் பரிணமிக்கவில்லை.

அம்பேத்கரின் சிந்தனைகளைத் தேவைக்கேற்ப, எடுத்து பதிப்பித்த நிலைமையை மாற்றும் விதத்தில் இப்போது அவரின் நூல் தொகுதிகள் வெளியாகியுள்ளன. அவற்றினை அடிப்படையாக வைத்து அவரின் முழுமையைப் புரிந்து கொள்வதும், விமர்சன பூர்வமாக சிந்தனைப் போக்கைக் கண்டடைவதும் அவசியமாய் இருக்கிறது. ஆனால் தமிழில் அத்தகு முயற்சிகள் இல்லை. 37 தொகுதிகளில் அடங்காத அம்பேத்கரின் பணிகள் மற்றும் சிந்தனைகள் குறித்து ஆங்கிலத்தில் தொடர்ந்து வெளிவருகின்றன. அதேபோல பல்வேறு கோட்பாடுகள் அடிப்படையில் அவரை புதிய திசையில் விளக்கும் எழுத்துகளும் வருகின்றன. தமிழகத்தில் பெரும்செல்வாக்குப் பெற்றிருந்த அம்பேத்கர், அம்பேத்கரைத் தொடர்ந்து ஈர்த்துவந்த தமிழகம் என்ற நிலைமை இருந்தும்கூட தமிழில் இவைதொடர்பாகக் குறித்து ஒரு நல்ல நூல் இல்லை. தமிழகத்தில் பெரும்செல்வாக்குச் செலுத்திய All India Scheduled caste Fedaration குறித்து தமிழில் இரண்டு பக்க பதிவு கூட இல்லை. இந்நிலைமையைக் கடக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது.

■

‘கிண்டற்காரன் c/o பாரதிதாஸன்’ என்னும் பாரதிதாசன்

தொகுப்பு மரபு – கவிதைகள்

கு. கலைவாணன்



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புரட்சிக் கவிஞராகத் திகழ்ந்தவர் கனகசுப்புரத்தினம் என்கிற பாரதிதாசன். ஒரு நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞன் என்று போற்றுமளவிற்கு அவரது எழுத்துகளின் ஆற்றல் பரிணமிக்கிறது. அத்தகைய கவிஞனின் படைப்புகள் எந்த அளவிற்கு மக்களிடம் கொண்டு சேர்க்கப் பட்டிருக் கின்றன? என்ற கேள்வியைக் கேட்பதற்கு முன் அவரது படைப்புகள் முழுவதும் நம்மிடம் இருக்கிறதா? என்ற கேள்விக்கு இன்னும் ‘முழுமை பெறவில்லை’ என்பதே பதிலாக உள்ளது. இது ஒருபுறம் இருக்க இதுவரை வந்துள்ள பாரதிதாசன் படைப்புகள் எவ்விதம் நம்மிடம் வந்துள்ளன என்பதும் முக்கியக் கேள்வியாக நம்முன் நிற்கிறது. இக்கேள்விக்குரிய பதிலைப் பாரதிதாசனின் படைப்புகள் அவர் வாழ்ந்த காலத்திலிருந்து எப்படி வெளிவந்துள்ளன என்பதிலிருந்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது.

முதன்முதலில் பாரதிதாசன் படைப்புகள் குறுநூல்களாக வெளிவந்தன. அவ்வாறு வெளிவந்த நூல்களிலிருந்து முந்நூறு கவிதைகள் தொகுக்கப்பட்டு அவற்றிலிருந்து எழுபத்து மூன்று கவிதைகளை மட்டுமே கொண்ட முதல் கவிதைத் தொகுதி 1938-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அதன் பின்னர் 1949-ஆம் ஆண்டு இரண்டாம் தொகுதி வெளிவந்தது. ஆனால் இன்று நமக்குக் கிடைக்கும் பதிப்புகள் முல்லை நான்காம் பதிப்பின் முதல் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு வெளி வருகின்றன. முல்லை நான்காம் பதிப்பை

அடிப்படையாகக் கொண்டு இன்றைய பதிப்புகள் வெளிவருவதற்கு முந்தைய தொகுதிகளில் இருந்த புதிய சேர்க்கைகளும், விடுபாடுகளும் முக்கியக் காரணங்களாக அமைகின்றன. சான்றாக முதல் மூன்று பதிப்புகளிலும் இடம்பெற்ற 'சமர்ப்பணம்' என்னும் பாடல் நான்காம் பதிப்பில் இடம்பெறவில்லை. மூன்றாவது பதிப்புவரை இடம்பெறாத 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற பாடல் நான்காம் பதிப்பில் இடம் பெற்றிருந்தது. இதுபோன்று இன்னும் சில மாறுபாடுகள் நிகழ்ந்துள்ளதை இதுவரை வந்துள்ள தொகுப்புகளிலிருந்து (பாவேந்தர் பாரதிதாசன் தலைப்பு அகரவரிசை முதற்குறிப்பு அகர வரிசை (தொகுப்புரை 2005) அறிய முடிகிறது.

பாரதிதாசன் படைப்புகளைத் தொகுப்பதில் இருந்த சிக்கல்களைப்போலவே அவரது படைப்புகளிலும் சிக்கல்கள் உள்ளன. இதனைப் பாரதிதாசன் ஒவ்வொரு காலகட்டத்திலும் கொண்டிருந்த கொள்கை நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு புரிந்துகொள்ள முடியும். பாரதிதாசன் தொடக்க காலத்தில் கடவுளைப்பற்றிய பாடல்களைப் பாடியுள்ளார். சிறிதுகாலத்திற்குப் பின்னர் கடவுள் மறுப்பு, பொதுவுடைமை, இந்திய விடுதலை, தமிழ்த் தேசியம் என்று அவரது நிலைப்பாடுகள் குறிப்பிட்ட கால எல்லையில் மாற்றம் அடைந்து வந்துள்ளதை அவரது படைப்புகளின்வழி உணர முடிகின்றது. இது முதல்வகை இவ்வாறு ஏற்படும் மாற்றங்கள் ஒருபுறம் இருக்க, அவரது தொடக்ககால தொகுப்புகளில் இருந்துவந்த பொருண்மைகள் பின்னர் வெளிவரும் தொகுப்புகளில் அவரது கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட்டன. குறிப்பாகச் சில கவிதைகளில் 'இந்திய நாடே' என்று இருந்த இடங்களில் 'அன்னைநாடே' 'தமிழ்நாடே' என்று அவரே திருத்தம் செய்துள்ளதிலிருந்து இதனை அறிய முடிகின்றது. இது அவரது படைப்புகளில் அவர் பார்வைக்கு உட்பட்டு நிகழ்ந்த மாற்றங்கள், இது இரண்டாவது வகை. இதே போல் அவரது படைப்புகள் வெளிவந்த இதழ்கள், மலர்கள், நாளேடுகள் இவற்றின் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றாம் வகை. அதாவது படைப்புகளில் பொருண்மை / தலைப்பு மாற்றங்கள் என்னும் வகைகளில் இந்த மாற்றங்கள் அமைந்திருந்தன. இதற்குக் காரணம் பாரதிதாசன் படைப்புகள் ஒரே நேரத்தில் பல்வேறு இதழ்கள் மற்றும் நாளேடுகளில் வெளிவந்ததாகும். இத்தகைய இதழ்கள் மற்றும் நாளேடுகளை அடிப்படையாக வைத்துப் பிற்காலங் களில் தொகுக்கப்படும்போது முற்காலத்தில் ஏற்பட்ட பிழைகள் மற்றும் மாற்றங்கள் தொடர்ந்து வருகின்றன. சான்றாகப் பாரதிதாசன் தன்னைப் பற்றி கவிதை / பாடல் ஒன்று எழுதியுள்ளார். அதற்கான தலைப்புகள் பின்னர் வந்த தொகுப்பு களில் நானோர் பாவேந்தன், தன்னைப்பற்றி பாரதிதாசன், பாவேந்தர் வாழ்விலே, என்று பல்வேறு தலைப்புகளை அந்த கவிதை, பாடலுக்குக் காணமுடிகின்றது.

பாரதிதாசனின் தொகுப்புகள் மற்றும் பொருண் மையில் ஏற்பட்ட மாற்றங்கள் இக்கட்டுரைக்கு முக்கியப் பகுதியாகக் கருதப்பட்டதால் அதனைப் பற்றி முன்னர் கூறப்பட்டுள்ளது. மேலே பேசப்பட்டவற்றிக்கு முதன்மையாக அமைவது அவரது படைப்பாளுமை. அவரது படைப்பாளுமை பன்முகத்தன்மையுடையது. அதனுள் கவிதை வடிவமே அனைவரிடமும் அவரைக் கொண்டு சேர்த்துள்ளது. இதனைப் பாவேந்தர், புரட்சிக் கவிஞர் என்னும் பெயர்களை உச்சரிக்கும்போது தமிழ்ச் சமூகத்தில் உள்ள அனைவரும் புரிந்து கொள்வதிலிருந்து அறிய முடிகின்றது. கவிதை தவிர நாடகம், சிறுகதை, நாவல், திரைப்படக்கதை, வசனம், கட்டுரை எனப் பல்வேறு தளங்களில் தன்னுடைய ஆளுமையைச் செலுத்தியவர் பாரதிதாசன். இதிலும் குறிப்பாகப் பாரதிதாசனுக்கும் இதழியலுக்கும் உள்ள நெருங்கிய உறவு தனித்துச் சுட்டும் சிறப்புடையது. இதனைப் பாரதிதாசன் நடத்திய இதழ்கள், ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள், பாரதிதாசனின் படைப்புகள் வெளிவந்த இதழ்கள் என ஒவ்வொன்றினையும் தனித்துப் பேசலாம். சுதேசமித்திரன், புதுவை முரசு, குடி அரசு, நகர தூதன், தமிழரசு, குயில், திராவிடநாடு, கவிதா மண்டலம் என இவற்றோடு இன்னும் பல இதழ்களின் பெயர்களைச் சுட்ட முடியும்.

பாரதிதாசனின் கவிதைகளைத் தவிர்த்த பிற படைப்புகள் குறிப்பிட்டவர்களிடம் மட்டுமே சென்றடைந்துள்ளன. இதனை அறிந்தவர்களாக பாரதிதாசன்பற்றிய ஆய்வினை மேற்கொள் வோரையும், ஆர்வத்தின் காரணமாகப் பாரதி தாசனைப் படிப்போரையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்திய அரசின் இலக்கியத்துக்கான உயரிய விருதான 'சாகித்ய அகாடமி' விருது பாவேந்தர் எழுதிய 'பிசிராந்தையார்' என்னும் நாடக நூலுக்கு 1969-ஆம் ஆண்டு வழங்கப் பட்டுள்ளது. இது அவரது படைப்பாளுமையின் சிறப்பினை உணர்த்துகிறது.

மேற்கூறிய கருத்துக்களை அடியொற்றி பாரதிதாசன் குறித்து தமிழகத்தில் வாழ்ந்த அறிஞர்களும், ஆய்வாளர்களும், அரசியல்

வாதிகளும் கொண்டிருந்த நிலைப்பாட்டினைப் பற்றிப் பேசுவதும் இங்கு முக்கியமானதாகத் தோன்றுகிறது. பாரதிதாசனுக்குப் பாராட்டும் பெருமையும் அளிக்க வேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத்தக்கதாகும். காரணம் அவர் பகுத்தறிவுவாதி ஆனபடியினால் அவருடைய பணிக்குக் கிடைக்கவேண்டிய மதிப்பு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் - தொ. பரமசிவன். அவர் ஒரு நூலிற்கு வழங்கிய அணிந்துரையில் 'தமிழ்க் கல்வியுலகம் பாரதி அளவுக்குப் பாவேந்தர் என்னும் ஆக்க இலக்கிய வாதியை அடையாளம் கண்டுள்ளதா என்ற கேள்வி எஞ்சி நிற்கிறது' என்று வினவியுள்ளார். மேலும் தொ.ப. பொதுவாகக் கடந்த ஐம்பது ஆண்டு காலமாகவே திராவிட இயக்க இலக்கிய வாதிகளின் படைப்புகள் 'கண்டு கொள்ளப்படாமல்' - ஆனால் தன்னுணர்ச்சியோடு - விலக்கப்பட்டன. இந்த நிலைமை மாறி வருகிறது. (பாரதிதாசன் அரிய படைப்புகள்: அணிந்துரை : 2001) என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலே பேசப்பட்டுள்ள / விவாதிக்கப்பட்டுள்ள கருத்துகள் மிகவும் முக்கியமானவை. பாரதிதாசனைப் பற்றித் தமிழக மக்கள் கொண்டிருந்த எண்ணவோட்டத்தினை வெளிக்காட்டுபவை. தமிழகத்து அரசியல் வாதிகளைப் பொருத்தவரை அவர்களுடைய மேடைப்பேச்சிற்கு உரமாகப் பாரதிதாசனின் எழுத்துகள் அமைகின்றன. மேலும் இக்கருத்துகள் அனைத்தும் அவரது படைப்பு களின் தொகுப்பு நூலில் இடம்பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசனுடைய தொகுப்புகள், பாடற் பொருண்மைகள், படைப்பாளுமை, அறிஞர்களின் கருத்துகளின் அடிப்படையில் பாரதிதாசன் என்னும் ஒரு படைப்பாளியின் பல்வேறு தன்மைகள்பற்றிப் பேசப்பட்டுள்ளன. இதனைப் பின்புலமாகக்கொண்டு இதுவரை வந்துள்ள பாரதிதாசன் கவிதைகள் எவ்வாறு வெளி வந்துள்ளன. அந்தத் தொகுப்புக்கும் தொகுத்த வருக்கும் உள்ள தொடர்புபற்றியும், அதனுடைய சார்புத்தன்மைபற்றியும் அதனால் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள நன்மை / தீமை குறித்துப் பேசுவது இந்தத் தொகுப்புமலரின் நோக்கமாக அறிய முடிகின்றது. பாரதிதாசனின் முழுப்படைப்பு களையும் எடுத்துக் கொண்டால் அது தனிநூலாக அமையும். எனவே பாரதிதாசனின் கவிதைகளின் தொகுப்புகளைப் பற்றியதாக இக்கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரைக்குப் பயன்படுத்திய நூல்களின் பட்டியல் கட்டுரையின்முடிவில் இணைக்கப்பட்டுள்ளன.

பாரதிதாசன் படைப்புகளை அணுகுவோரை இரண்டு வகையில் பிரிக்கலாம். (1) பாரதிதாசனின் படைப்புகளை வாசிப்போர் (2) பாரதிதாசன் குறித்து ஆய்வினை மேற்கொள்வோர். இவர்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்தும் மூலம் என்பது வெவ்வேறானதாகவே இருக்கும். இந்தக் கருத்துநிலையினை அடியொற்றியும் இது வரைவந்துள்ள பெரும்பாலான கவிதைத் தொகுப்புகளை முன்வைத்தும் பின்வருமாறு கட்டுரை அமைகிறது அவை:

- உருவப்படம்
- கவிதைகளின் தொகுப்பு : வகைகள்
- இதழ்களில் வெளிவந்த கவிதைகள் தொகுப்பு
- அறியப்படாத படைப்புகள்
- தொகுப்புகள் குறித்து
- தொகுப்புகளுக்கான அரசியல்

என்பனவாகும். பொதுவாகப் பாரதிதாசன் படைப்புகள் பரவலாக்கம் என்பது பாரதிதாசனின் நூற்றாண்டின்போது அவரது படைப்புகள் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்ட பின் பரவலாயின. அதன் பின் பல்வேறு பதிப்பகங்கள் பாரதிதாசன் படைப்புகளைத் தொகுத்து வெளியிட்டன. சில பதிப்பகங்களின் வெளியீடு களில் தமிழக அரசிற்கு நன்றியும் தெரிவிக்கப் பட்டுள்ளன.

உருவப்படம்

பாரதிதாசன் தொகுப்புகளில் உருவப்படம் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. இதுவரை வந்துள்ள தொகுப்புகளில் சில தொகுப்புகள் தவிர மற்ற அனைத்திலும் பாரதிதாசனின் உருவப்படம் அட்டைப்படமாக வந்துள்ளது. சில தொகுப்புகளில் முகப்புப் பக்கமாக உருவப்படம் வந்துள்ளது. குறிப்பாக 2000-ஆம் ஆண்டிற்குப் பின் வந்த தொகுப்புகளில் பாரதிதாசனது உருவமானது கோட்டோவியமாகவும், ஓவியமாகவும் தீட்டப்பட்டு அவை அட்டைப்படமாக்கப்பட்டுள்ளன. பாரதி தாசனை வாசிக்கப் புகுமுன் அவரது உருவப்படம் வாசகனைச் சென்றடையும் தன்மையில் அட்டைப்படங்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன.

கவிதைகளின் தொகுப்பு - வகைகள்

பாரதிதாசன் கவிதைகள் பல தொகுப்புகளாக வெளிவந்திருப்பினும் அதன் பரவலாக்கம் போதுமானதாக இல்லை. சில பதிப்பகங்கள் மற்றும் பாரதிதாசன் ஆய்வாளர்கள்/ஆர்வலர்கள் என்று தொகுப்புகள் வெளிவருகின்றன.

ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு நோக்கத்துடன் தொகுப்புகளை உருவாக்குகின்றனர். தொகுக்கும் போது ஏற்பட்ட நன்மை/தீமைகளை சிலர் அப்படியே பதிவு செய்துள்ளனர். சிலர் தொகுப்பின் முக்கியத்துவம் குறித்து தொகுப்புரை / முன்னுரையில் கூறியுள்ளனர். அதன்வழியே தொகுப்புநூலுக்கும் தொகுத்தவருக்கும் இடையேயுள்ள உறவினை நாம் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. தொகுப்புமரபில் முக்கியமானது சில முக்கியத்தரவுகளையும் ஆலோசனைகளையும் வழங்கியவர்களை மறவாமல் நன்றி கூறும்தன்மை. இதனைப் பெரும்பாலான தொகுப்பு நூல்களில் காணமுடிகின்றது.

இதுவரை வந்துள்ள பாரதிதாசன் கவிதைத் தொகுப்புகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மை கொண்டதாக உள்ளன. அவை பொருண்மை, தொகுத்த முறைமை, தொகுத்தவர் நோக்கம், தொகுப்புரை/முன்னுரை, பதிப்பகம் என்று ஒவ்வொன்றிலும் விலகிநிற்பதால் அதனைத் தனித் தனியாகப்பேசி அதன் பின்னர் தொகுப்புகளின் ஒட்டு மொத்த தன்மையைப் பற்றிக் கூறுவது பொருத்தமாக அமையும். அந்த வகையில் இதுவரை வந்துள்ள பாரதிதாசன் தொகுப்புகளை ஒவ்வொரு வகையாகப் பின்வரும் பகுதி பேசுகிறது.

வகை : 1

செந்தமிழ் நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள தொகுப்பில் ஒரு முக்கியக் குறிப்பு இடம் பெற்றுள்ளது. அதில் பாரதிதாசனின் கவிதைகளை அவரது நண்பர்கள் பாரதியார் பெயரிலேயே வெளியிட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.


இங்கு ஒரு செய்தியைப் பதிவுசெய்வது பொருத்தமாக அமையும். பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் இருந்த தொடர்பு / புரிதல் என்பது ஒரு முக்கிய நிகழ்வு. பாரதிதாசனுக்கு பாரதியார் மீது அளவுகடந்த மரியாதை உள்ளது என்பதை இருக்கின்ற பதிவுகளின் வழியும் அவரது பெயரின் மூலமும் அறிய முடிகின்றது. இருப்பினும் பாரதிதாசனுடைய படைப்புகளைத் தொகுக்கும் சிலர்/பதிப்பகங்களின் தொகுப்புரைகளில் இவ்விருவருக்கும் இடையே தரம் பார்த்து மதிப்பீடு செய்யும் தன்மையை அவர்களது எழுத்துகளின் வழியாக உணரமுடிகின்றது. பாரதியாரின் படைப்புப் பொருண்மையும் பாரதிதாசனுடைய படைப்புப் பொருண்மையும் முற்றிலும் வேறுபட்டது. இதனைக் கவனத்தில் கொண்டு எழுதவேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு செய்வது பாரதிதாசனுக்கு நாம் கொடுக்கும் மரியாதையாகக் கொள்ளலாம்.

வகை : 2

பாரதிதாசன் திரைப்பாடல்கள் என்னும் தலைப்பிலான தொகுப்பு நூலினை வாமனன் என்பவர் உருவாக்கியுள்ளார். அதில் பாரதிதாசன் மீது அவருக்கு இருந்த மனப்பதிவைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'பாரதிதாசனின் சில கொள்கை களுடன் நான் இசைவு இல்லாதவனாக இருந்தாலும், அவரது கம்பீரமான ஆளுமையின் முன் தலை வணங்குகிறேன், என்று முன்னுரையில் சுட்டியுள்ளார். மேலும் அந்நூல் பாரதிதாசனின் கவிதை/இசைப்பாடலைத் திரைப்படங்களில் எப்படிப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை மையப்படுத்துகிறது. நூல் உருவாக்கத்தின் முக்கியத்தரவாகக் கம்பெனிப்பாட்டுப் புத்தகங் களைக் குறிப்பிட்டுள்ளார்.

வகை: 3

த. கோவேந்தன் என்பவர் 'பாவேந்தர் பாரதிதாசன் சிந்தனைக் களஞ்சியம்' என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பு நூலினை உருவாக்கியுள்ளார்.அதில் பாரதிதாசனின் படைப்புகளைப் பொருண்மை அடிப்படையில் தொகுத்துள்ளார். அந்தப் பொருண்மைகளைச் 'சிந்தனைத் தோரணம்' என்ற தலைப்பில் அகரவரிசைப் படுத்தியுள்ளார். அவர் தொகுப்பு முறைமைபற்றி விரிவாக எழுதவில்லை. ஆனால் தொகுத்தபோது ஏற்பட்ட இன்னல்களைப் பதிவு செய்துள்ளார். அதில் சில இலக்கியப் பெருச்சாளிகளும், கள்ளப் பூனைகளும் பாரதிதாசன் குறித்த தகவல்களைத் தம்மிடமிருந்து திருடிச்சென்று விட்டதாகவும் குறிப்பிட்டுளளார்.



கு. கலைவாணன்: சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் 'சைவப் புலமை வரலாறு' என்னும் தலைப்பில் முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகிறார். இவர் 'Collected Research papers on Tamil Classics Siddhanta Deepika (1897-1914)'. என்னும் நூலினைத் தொகுத்துள்ளார்.

வகை : 4

'பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் தலைப்பு அகரவரிசை, முதற்குறிப்பு அகரவரிசை, என்னும் நூலினைப் பேராசிரியர் இரா. இளவரசு உருவாக்கியுள்ளார். இந்நூலில் அவர் தொகுத்த முறைமைகள் குறித்து தெளிவாகப் பதிவுசெய்துள்ளார். மேலும் அவர் கூறுகையில் 'வாணிகச் சந்தையில் பொதுமக்களிடம் சுடச்சுட சென்று சேர வேண்டும் என்னும் நாட்டமுடைய வெளியீட்டாளர்களுக்குப் பொருளடக்கமோ, தலைப்பு முதற்குறிப்பு அகர வரிசையோ தேவைப்படா' என்று கூறுவதிலிருந்து இந்நூல் உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது. இந்நூலின் பின்பக்க அட்டையில் 'தமிழியல் ஆய்வாளர்களுக்கு உற்றுழி உதவும் தேனடை' என்று குறிப்பிட்டுள்ளார். சுட்டியுள்ளார். இதிலிருந்து பாரதிதாசன் படைப்புகள் இன்னும் முழுமை பெறவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

வகை: 5

பாரதிதாசன் கவிதைகள் (பாவேந்தர் பாடல்களின் முழுத்தொகுப்பு) என்னும் இந்நூல் இதுவரை வந்துள்ள தொகுப்புகளிலேயே பெரியது. இந்நூல் இரண்டாயிரத்துப் பதினாறு பக்கங்களை உடையது. இந்நூலினைக் கவிஞர் ஆதிருவாசகன், கவிஞர் சுரதா கல்லாடன் ஆகிய இருவருமே தொகுத்துள்ளனர். இந்நூலினைத் தொகுத்ததற்குக் காரணம் பாவேந்தர் பாடல்கள் எங்களுக்கு ஊட்டிய தமிழ் உணர்வும் சமுதாயச் சீர்திருத்தமும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் உள்ள படைப்புகள் காலவரிசைப்படித் தொகுக்கப் பட்டுள்ளன. இந்நூலைத் தொகுத்தது தொடர்பாக மிகவும் சுருங்கிய அளவிலேயே பதிவு செய்துள்ளனர்.

> பாரதிதாசன் படைப்புகளைத் தொகுப்பதில் இருந்த சிக்கல்களைப் போலவே அவரது படைப்புகளிலும் சிக்கல்கள் உள்ளன. இதனைப் பாரதிதாசன் ஒவ்வொரு காலகட்டத்திலும் கொண்டிருந்த கொள்கை நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு புரிந்துகொள்ள முடியும். பாரதிதாசன் தொடக்ககாலத்தில் கடவுளைப்பற்றிய பாடல்களைப் பாடியுள்ளார். சிறிது காலத்திற்குப் பின்னர் கடவுள் மறுப்பு, பொதுவுடைமை, இந்திய விடுதலை, தமிழ்த் தேசியம் என்று அவரது நிலைப்பாடுகள் குறிப்பிட்ட கால எல்லையில் மாற்றம் அடைந்து வந்துள்ளதை அவரது படைப்புகளின் வழி உணரமுடிகின்றது. இவ்வாறு ஏற்படும் மாற்றங்கள் ஒருபுறம் இருக்க, அவரது தொடக்ககால தொகுப்புகளில் இருந்து வந்த பொருண்மைகள் பின்னர் வெளிவரும் தொகுப்புகளில் அவரது கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட்டன. குறிப்பாகச் சில கவிதைகளில் 'இந்திய நாடே' என்று இருந்த இடங்களில் 'அன்னைநாடே' 'தமிழ்நாடே' என்று அவரே திருத்தம் செய்துள்ளதிலிருந்து இதனை அறிய முடிகின்றது.

பேராசிரியர் இளவரசு 'பாவேந்தர் பாரதிதாசனின் பழம் புதுப்பாடல்கள்' என்னும் மற்றொரு தொகுப்பு நூலையும் உருவாக்கியுள்ளார். அதில் பாவேந்தரின் பிள்ளை மன்னர் மன்னனும் பாவேந்தர்பால் ஈடுபாடு கொண்ட முல்லை முத்தையாவும் பழந்தாள்களைப் பொறுக்கியதைப் போல நானும் பழந்தாள்களைத் தேடித் திரட்டினேன். அவற்றில் கவிஞர் முன்னாளில் எழுதியவையும் பல்வேறு கவிதைகளில் வெளிவந்த நறுக்குகளும் எனக்குக் கிடைத்தன. அவற்றைப் பாவேந்தர் பாரதிதாசன் பழம்புதுப் பாடல்கள் என்னும் பெயரில் தமிழ்கூறு நல்லுலகின் முன் படைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலின் முக்கியச்செய்தி 'பதிப்பும் தொகுப்பும்' முறைமை ஆகும். அதனைக் குறித்து முன்னுரையில் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். மேலும் பேராசிரியர் கூறுகையில் 'முழுமை என்பதோ நிறைவு என்பதோ ஆய்வில் ஏற்படுவது அரிது' என்பதையும்

வகை : 6

தெரிந்தெடுத்த பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பு நூலைக் கவிஞர். ஈரோடு தமிழன்பன் அவர்கள் சாகித்ய அகாதெமியின் வெளியீடாகத் தொகுத்துள்ளார். இந்நூலினைக் குறித்துக் கவிஞர் கூறுகையில் பாரதிதாசனின் பல்வேறு வகையான படைப்பாளுமையைப் புலப்படுத்தும் வகையில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பாடுபொருள் பன்முகத்தன்மையும், பாடுநெறி பன்முகத்தன்மையும் விடுபடாமல் இருக்க இத்தொகுப்பு முயன்றுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கவிஞரின் முன்னுரையானது பாரதிதாசன் - பாரதியார், பாரதிதாசன்

- பெரியார், பாரதிதாசன்-பொதுவுடைமைக் கருத்து இவற்றை முதன்மைப்படுத்துவதாக உள்ளது. பிற பொருண்மையைப் பற்றித் தொட்டுக் காட்டியுள்ளார். பாரதிதாசன் படைப்புகளின் பாடுபொருளில் ஒரு முழுமையான மாற்றுப் பரிமாணத்தை உண்டாக்கியவர் என்று தந்தை பெரியாரைச் சுட்டியுள்ளார். பாடுநெறியில் மாற்றத்தை உண்டாக்கியவர் பாரதியார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

வகை: 7

முனைவர் ய.மணிகண்டன் பாரதிதாசன் குறித்துப் பல்வேறு தொகுப்பு நூல்கள் உருவாக்கியுள்ளார். அவருடைய தொகுப்புப் பணியானது பதிப்பு-தொகுப்பு-ஆய்வு என்னும் முறைமையில் அமைந்துள்ளது. பாரதிதாசன் படைப்புகளை ஆய்வுப் பதிப்பாகத் தொகுத்ததற்குக் காரணமாகப் பின்வரும் செய்திகளைக் குறிப்பிடு கின்றார். அதில் தமிழ்க் கவிதை இலக்கியத்தைப் பொருத்தவரையில் பண்டைய இலக்கியங்கள் சிலவற்றுக்கு ஆய்வுப் பதிப்புகள் உண்டு. இக்காலக் கவிதையிலக்கியத்தில் பாரதிக்கு உண்டு. பாரதிதாசனுக்கு அரும்பாதிருந்தது. இக்குறையைப் போக்கும் வகையில், தேவையை நிறைவு செய்யும் வகையில் அரும்பியுள்ள முதல் முயற்சியே இத்தொகுதியாகும் என்று குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசனுடைய கவிதைகளில் உள்ள சுயமரியாதை, சமத்துவம், இறைமை, இந்திய விடுதலை இயக்கம் ஆகிய பொருண்மைகளில் உள்ள கவிதைளை இரு நூலாகத் தொகுத்துள்ளார். இவரது நூல்களில் ஆய்வுக்குத் துணை நின்ற மூலங்கள் அனைத்தையும் பின்னிணைப்பில் கொடுத்துள்ளார். இவருடைய ஆய்வுப் பதிப்பில் பாரதிதாசனுடைய ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனியான ஆய்வு முன்னுரையினை எழுதியுள்ளார். அதில் அவர் பயன்படுத்திய மூலங்களின் முன்னுரை, அணிந்துரை, முகப்புப் பக்கம் ஆகியவற்றைப் பின்னிணைப்பாகக் கொடுத் துள்ளார். பாரதிதாசனின் அரிய படைப்புகள் என்னும் நூலினையும் தொகுத்துள்ளார். அதில் சுயமரியாதைச்சுடர் என்னும் நூலிற்கு நூலாசிரியர் பெயர் 'கிண்டற்காரன் C/o. பாரதிதாஸன்' இவ்வாறாக இடம்பெற்றுள்ளதைச் சான்றுடன் குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசன் படைப்புகளை வெளியிட்ட திரு. நோயேல் பற்றியும் பதிவு செய்துள்ளார்.

பாரதிதாசனின் பல நூல்களுள் சில நூல்களை மட்டுமே மற்றவர்களுக்குக் காணிக்கை செய்துள்ளார். அவற்றுள் இரு நூல்கள் மட்டுமே மற்றவர்களுக்குக் காணிக்கை செய்த செய்தியினைக் கூறும் பாடல்களைக் கொண்டுள்ளன. அதில் சுயமரியாதைச்சுடர் நூலினைக் குத்தூசி குருசாமி எனப் பலராலும் அறியப்பட்ட திரு எஸ்குருசாமிக்கு காணிக்கை செய்துள்ளார். இதில் முக்கியச் செய்தி இந்நூலினைக் காணிக்கையாக்கும் போது குருசாமிக்கு வயது 24, பாவேந்தருக்கு வயது 40, என்பது அனைவரும் தெளிவுபெற வேண்டியது. (பாரதிதாசன் அரிய படைப்புகள்: 2001)

வகை: 8

தனிப்பட்ட நபர்கள் பாரதிதாசன் படைப்பு களைத் தொகுத்தது போலவே சில பதிப்பகங்களும் பாரதிதாசன் தொகுப்புகளை வெளியிட்டுள்ளன. இவை அவரது படைப்புகள் நாட்டுடைமை ஆன பின் அதிகரித்துள்ளன. பாரதிதாசன் கவிதைகளைப் பரவலாக்கம் செய்ததில் பதிப்பகங்களின் தொகுப்பு களுக்கு முக்கியப்பங்கு உண்டு.

வகை: 9

உயர்ந்தோர், புகழ்மலர்கள், இயற்கை, தமிழ், காதல், சமுதாயம், இதுபோன்ற பல்வேறு பொருண்மையில் உள்ள பாரதிதாசன் பாடல்கள் / கவிதைகள் தொகுத்து பாரதிதாசனின் மகன் மன்னர் மன்னன் போன்றவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இதழ்த் தொகுப்பு

(1) குடிஅரசு இதழில் வந்துள்ள பாடல்களைப் பேராசிரியர் சசு. இளங்கோ தொகுத்துள்ளார். அதில் இதுவரை குடிஅரசு இதழில் பாரதிதாசனுடைய 'பதினேழு' பாடல்கள் வெளி வந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். இந்தத் தொகுப்பிற்குமுன் நூல்வடிவம் பெற்றவை 9 பாடல்கள், நூல்வடிவம் பெறாதவை 8 பாடல்கள் என்றும் சுட்டியுள்ளார். பல்வேறு இதழ்களில் பாரதிதாசன் கவிதைகள் இடம்பெற்றுள்ளது எனினும் தொன்மை கருதியும் பாவேந்தர் பாநிலை வளர்ச்சியைச் சுட்ட விரும்பியும் குடிஅரசு இதழில் வெளிவந்த கவிதைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இத்தொகுப்பில் சுயமரியாதை இயக்கத்தின் சிறப்பினை உணர்த்தும் விரிவான கட்டுரையினை எழுதியுள்ளார். பெரியாரின் கருத்துகளை உள்வாங்கிப் பாரதிதாசன் கவிதைகளைப் புனைந்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்தொகுப்பு மூலம் சுயமரியாதை இயக்கம்-பெரியார்-பாரதிதாசன் இவர்களிடையே இருந்த உறவுநிலையினைப் புரிந்துகொள்ள முடிகிறது. கவிதைகள் வெளிவந்த குடிஅரசு இதழில் வெளிவந்த பிற செய்திகள்

குறித்தும் பேசியுள்ளார். அது அக்காலச் சூழலினை உணர்த்துவதாக உள்ளது.

(2) பாரதிதாசனும் சக்தி இதழும் என்னும் தொகுப்பு நூலை முனைவர் ய. மணிகண்டன் உருவாக்கியுள்ளார். அதில் கவிதை, கட்டுரை, சொற்பொழிவின் சுருக்கம், முன்னுரை என எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக உள்ளது இந்நூல். பாரதிதாசன் உருவப்படத்தை முதன் முதலில் முகப்பு அட்டையில் அழகுற வெளியிட்டு 'புரட்சிக் கவிஞர்' எனப் போற்றியது சக்தி இதழ் என்று குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசன் கவிதைகள் சக்தியில் இடம்பெறுகையில் அவற்றுக்கு அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. பாரதிதாசன் கவிதை வரலாற்றில் பாரதிதாசனுக்கும் சக்திக்குமான தொடர்பு குறிப்பிடத்தக்கது. பாரதிதாசன் ஆய்வாளர்கள், பாரதிதாசன் இதழியல் ஆய்வாளர்கள் இக்கூற்றை அழுத்தமாகப் பேசவில்லை என்றும் பதிவு செய்துள்ளார்.


குயில்

எது பிரிவினை மனப்பான்மை?

தன்னிற் பிறிதில்லா தெய்வம்!

அறியப்பபாத படைப்புகள்

முனைவர் ய. மணிகண்டன் அவர்கள் 'பாரதிதாசன்: அறியப்படாத படைப்புகள்' என்னும் தலைப்பில் தொகுப்பு நூல் ஒன்றை உருவாக்கியுள்ளார். அதில் பாரதிதாசன் படைப்புகள் வெளிப்படவேண்டிய, நூல் வடிவம் பெற வேண்டிய, வெளிப்பட்டவற்றில் முழுமையும் துல்லியமும் பெற வேண்டிய படைப்புகள் இன்னும் ஏராளம் உள்ளன என்பதை முன்னிலைப்படுத்தித் தமிழ்கூறு நல்லுலகத்தின் முன் படைக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். அந்நூலில் இதுவரை வெளிவராத சில படைப்புகளைச் சுட்டியும் விளக்கியுள்ளார்.

தொகுப்புகள் குறித்து

மேலே உள்ள தொகுப்புகளின் அடிப்படையில் இதுவரை வந்துள்ள பாரதிதாசன் தொகுப்புகள் தொகுத்தவர்களைப் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம். அவை

- பாரதிதாசன்மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக வந்த தொகுப்புகள்
- பாரதிதாசன் குறித்த ஆய்வினை மேற்கொள்பவர்களால் தொகுக்கப்பட்டவை
- பதிப்பகங்கள் மூலம் தொகுக்கப்பட்டவை

எனப் பகுத்துக்கொள்ளலாம்.

தொகுப்புக்கான அரசியல்

பாரதிதாசன் தொகுப்புகளை ஒருவர் ஏன் தொகுக்க வேண்டும் என்ற கேள்வியை அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட தொகுப்புகளை நோக்கும் போது தொகுப்புச் செயல்பாட்டிற்கான அரசியலை அறியமுடியும். அதனைப் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம்.

- பாரதிதாசன் மீதும் அவரது படைப்புகள் மீதும் அளவுகடந்த ஈடுபாடு கொண்டவர்கள்
- திராவிட இயக்கக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவர்கள்
- பாரதிதாசன் குறித்த ஆய்வினை மேற்கொள்பவர்கள்
- பாரதியாரை அடியொற்றி வந்தவர் பாரதிதாசன் என்பதை முன்னிலைப்படுத்துபவர்கள்
- பாரதிதாசனோடு முரண்பட்டிருந்தாலும் அவரது படைப்புகளோடு / எழுத்துகளோடு உடன்பாடுடையவர்கள்
- விற்பனை நோக்கிலானவர்கள்

முடிவுரை


பல வகைகளாகப் பாரதிதாசன் தொகுப்புகள் வந்திருப்பினும் அவை அனைவரையும் சென்றடையவில்லை. பாரதிதாசனுடைய படைப்புகளும் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. இதனைப் பாரதிதாசன் குறித்த ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், ஆய்வு நிறுவனங்கள் என அனைவரும் ஒருமித்துச் செயல்பட்டால் ஒழிய அதனைச் செயல்படுத்துவது சாத்தியம் இல்லை. இவர்களிடம் உள்ள பாரதிதாசன் படைப்புகள் வெளி உலகுக்கு கொண்டு வரப்படாமல் உள்ளன. பாரதிதாசன் படைப்புகள் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்குமானது என்ற எண்ணம் நூலைப் பதுக்குகிறவர்களிடம் உருவாக வேண்டும். அத்தகைய எண்ணம் உருவாகாதவரை பாரதிதாசன் படைப்புகள் முழுமையாக்கம் செய்வது என்பதும் அனைவரிடமும் பரவலாக்கம் செய்வது என்பதும் குதிரைக்கொம்பே. பாரதிதாசனுடைய 125-வது பிறந்தநாளிலாவது காலவரிசைப்படி அவரது படைப்புகளை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை மேற்கொள்வோம். இது பாரதிதாசனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை.

பல வகைகளாகப் பாரதிதாசன் தொகுப்புகள் வந்திருப்பினும் அவை அனைவரையும் சென்றடையவில்லை. பாரதிதாசனுடைய படைப்புகளும் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. பாரதிதாசன் குறித்த ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் ஆய்வு நிறுவனங்கள் என அனைவரும் ஒருமித்து செயல்பட்டால் இதனைச் செயல்படுத்துவது மிகவும் எளிது. இவர்களிடம் உள்ள பாரதிதாசன் படைப்புகள் வெளி உலகுக்குக் கொண்டு வரப்படாமல் உள்ளன.


துணைநூற்பட்டியல்

1. குடியரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள், டாக்டர் ச.சு. இளங்கோ, ஏரக வெளியீடு, மதுரை.
2. பாரதிதாசன் கவிதைகள், செந்தமிழ் நிலையம் திருச்சி.
3. பாரதிதாசன் திருக்குறள் உரை ஆய்வும் பதிப்பும், டாக்டர் சசு. இளங்கோ, பாரி நிலையம், சென்னை. 1
4. பாரதிதாசன் ஆய்வடங்கல், வித்துவான், தே.வே. சந்தானம், தந்தை பெரியார் பதிப்பகம், அரூர்.
5. பாரதிதாசன் திரைப்படப்பாடல்கள், தொகுப்பு - வாமனன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
6. புரட்சிக்கவி பாரதிதாசன், களஞ்சியம், கவியாறு, வெ. தேசகுரு.
7. பாவேந்தர் பாரதிதாசன் அறுசுவை விருந்து, முல்லை முத்தையா, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
8. பாவேந்தர் பாரதிதாசன், ஆதிரையர், அலைகள் அச்சகம், சென்னை -24
9. பாரதிதாசன் கவிதைகள், பதிப்பு - ச. மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
10. பாரதிதாசன் தலையகங்கள், ச.சு. இளங்கோ, என்.சி.பி.எச், சென்னை.
11. பாவேந்தர் பாரதிதாசன், சிந்தனைக் களஞ்சியம், த. கோவேந்தன், இராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை - 114.
12. பாரதிதாசன் கவிதைகளில் பாரதியார், தொகுப்பு - பதிப்பு - ஆய்வு: ய. மணிகண்டன், விழிகள் பதிப்பகம், சென்னை -41.
13. பாரதிதாசன் நாடகங்கள், கதிர் வெளியீடு, சென்னை - 53
14. பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.
15. பாரதிதாசன் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை - 1.
16. பாரதிதாசன் யாப்பியல், ய. மணிகண்டன், விழிகள் பதிப்பகம், சென்னை - 41
17. பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் தலைப்பு அகரவரிசை முதற் குறிப்பு அகர வரிசை - இரா. இளவரசு, பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
18. பாரதிதாசன் கவிதைகள் (மூன்றாம் தொகுதி), பாரிநிலையம் சென்னை - 1
19. பாரதிதாசன் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்க மலர், உமா பதிப்பகம், கோலாலம்பூர்
20. பாரதிதாசன் ஆய்வுக்கோவை, தொகுப்பு-சாயுபு மரைக்காயர், கங்கை புத்தக நிலையம், சென்னை - 17
21. பாரதிதாசன் கவிதை இலக்கியங்கள், தொகுப்பு - ய. மணிகண்டன், பொன்னி, சென்னை -91
22. பாரதிதாசனும் சக்தி இதழும், தொகுப்பு - பதிப்பு - ஆய்வு : ய. மணிகண்டன், விழிகள் பதிப்பகம், சென்னை - 41
23. பாரதிதாசன் அரிய படைப்புகள், பதிப்பு - தொகுப்பு - ஆய்வு: ய. மணிகண்டன், அய்யா நிலையம், தஞ்சாவூர் -6
24. பாரதிதாசன் கவிதைகள் (பாவேந்தர் பாடல்களின் முழுத்தொகுப்பு) தொகுப்பு : கவிஞர் ஆ. திருவாசகன், கவிஞர் சுரதா கல்லாடன், அருள் சுடர் பதிப்பகம், சென்னை - 87
25. தெரிந்தெடுத்த பாரதிதாசன் கவிதைகள், தொகுப்பு - ஈரோடு தமிழன்பன், சாகித்ய அகாடமி.
26. பாரதிதாசன் கவிதை இலக்கியங்கள், ஆய்வுப் பதிப்பு: ய. மணிகண்டன், பொன்னி, சென்னை -91
27. பாரதிதாசன் இலக்கியம்: அறியப்படாத படைப்புகள், தொகுப்பும் பதிப்பும்: ய. மணிகண்டன், விழிகள் பதிப்பகம், சென்னை - 41
28. பாவேந்தர் பழம் புதுப்பாடல்கள், பதிப்பும் தொகுப்பும்: இரா. இளவரசு, பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
29. பாரதிதாசன் அவரும் அவர் தம் படைப்புகளும், பதிப்பு - தொ. பரமசிவன், பாரதிதாசன் அறக்கட்டளை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

■



இயக்கம் சார்ந்த தொகுப்புகள்



மார்க்சிய மூலநூல்களும் தொகுப்பு நூல்களின் பதிப்புகளும்

எஸ். பாலச்சந்திரன்

"குகல்மனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதங்கள் ஜெர்மன் சமூக–ஜனநாயக வார இதழான *Neue Zeut* இல் வெளிவந்தவை. இக்கடிதங்களின் முழுத் திரட்டையும் ஒரு தனிப் பிரசுரமாய் வெளியிடுவதில் எமது நோக்கம் என்னவெனில், ருஷ்யப் பொதுமக்கள் மார்க்சையும் மார்க்சியத்தையும் பற்றி மேலும் நெருங்கிய பரிச்சயம் பெறும்படிச் செய்வதே ஆகும். மார்க்சின் கடிதங்களில் ஓரளவு அதிக இடம் சொந்த விவகாரங்களுக்காகச் செலவிடப்பட்டிருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. இப்பகுதிகள் வாழ்க்கை வரலாறு எழுதுகிறவருக்கு மிகுந்த மதிப்புக்குரியவை. ஆனால் பொதுமக்களுக்கு, குறிப்பாய் ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்துக்கு, தத்துவார்த்த, அரசியல் விஷயங்கள் அடங்கிய வாசகங்கள் மிகப் பன்மடங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இப்பொழுது நாம் கடந்து செல்லும் இந்தப் புரட்சிகரச் சகாப்தத்தில் இவ்விஷயங்களைக் கவனமாய்ப் படித்தறிவது நமக்கு மிகவும் படிப்பினை அளிப்பதாகும். தொழிலாளர் இயக்கம், உலக அரசியல் _ இவை குறித்த எல்லாப் பிரச்சனைகளிலும் மார்க்ஸ் கருத்தூன்றிக் கவனித்தவர் என்பதை இவை நமக்குப் புலப்படுத்துகின்றன...."[1]

குகல்மனுக்குக் கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதங்களின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு லெனின் எழுதிய முன்னுரையின் தொடக்க வரிகள் இவை. 1907-ஆம் ஆண்டில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் நோவயா தூமா பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட இக்கடிதங்களின் தொகுப்பானது, நூறு ஆண்டுகளுக்கு முன்பே மார்க்சிய மூலநூல்கள் தொகுத்து வெளியிடப்பட்டன என்பதைக் காட்டுவதுடன் மட்டுமின்றி, லெனின் போன்ற மாபெரும் மார்க்சிய அறிஞர்களும் தலைவர்களும் இவ்வாறு தொகுப்பு நூல்கள் வெளியிடுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்தனர் என்பதற்கான சான்றாகவும் விளங்குகின்றது.

உண்மையில், மார்க்சிய மூலப் படைப்புகளைத் தொகுப்பு நூல்களாகப் பதிப்பிப்பது மார்க்சியப் பேராசான் பிரெடெரிக் எங்கெல்ஸின் காலத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம். 1886-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ஆம் நாளன்று 'மூலதனம்' நூலின் முதல் பாகத்தின் ஆங்கிலப் பதிப்பிற்காக எழுதிய முன்னுரையில் பி. எங்கெல்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: '.... இந்த முதல் பாகம் பெருமளவுக்கு அதனளவிலேயே முழுமை யானதொன்று. இது இருபது ஆண்டுகளாகத் தனியொரு நூலாய் விளங்கி வருகிறது. 1885-இல் என்னைப் பதிப்பாசிரியனாகக் கொண்டு ஜெர்மன் மொழியில் வெளிவந்த இரண்டாம் பாகமானது மூன்றாம் பாகம் இல்லாமல் முழுமையற்றதே. ஆனால், 1887 முடிவுக்கு முன்னதாக இந்த மூன்றாம் பாகத்தை வெளியிட முடியாது. மூன்றாம் பாகம் மூலத்தின் மொழியான ஜெர்மன் மொழியில் வெளிவந்ததும், இரண்டுக்குமான ஆங்கிலப் பதிப்பைத் தயாரிப்பது குறித்து உடனே யோசிக்க வேண்டியிருக்கும்.'[2]

கார்ல் மார்க்ஸின் 'மூலதனம்' நூலின் முதல் பாகம், அவர் உயிரோடிருந்த காலத்திலேயே வெளிவந்தது. ஆனால், அதன் அடுத்தடுத்த பாகங்கள் வெளிவருவதற்கு முன்பே, 1883-ஆம் ஆண்டில் கார்ல் மார்க்ஸ் இறந்து விட்டார். அப்போது அவை இறுதி வடிவத்தைப் பெற்றிருக்கவும் இல்லை. எனவே, கையெழுத்துப் பிரதிகளிலிருந்து தொகுத்துப் புத்தகமாக ஆக்கும் பணியை எங்கெல்ஸே மேற்கொண்டார். உலக அளவில், வரலாறுநெடுகிலும், மிகச்சிறந்த நூல்தொகுப்புப் பணியாக மதிக்கப்படுகின்ற இப்பணியை எங்கெல்ஸ் எவ்வாறு செய்து முடித்தார் என்பதை அவரே கூறுகின்றார்: "மூலதனம் இரண்டாம் பாகத்திற்குப் புத்தக வடிவம் கொடுப்பது எளிதான காரியமாய் இருக்கவில்லை; ஒரு புறம் கோவையான, கூடுமான



எஸ். பாலச்சந்திரன்: 1980களிலிருந்து படைப்பிலக்கியங்களையும் மொழிபெயர்ப்பு களையும் செய்து வருபவர். மார்க்சியத்தைப் பின்னணியாகக் கொண்ட இவர் மெக்ஸிக எழுத்தாளர் யுவான் ருல்ஃபோவின் 'எரியும் சமவெளி' என்னும் சிறுகதைத் தொகுதியையும் 'பெட்ரோ பராமோ' என்னும் நாவலையும் அகஸ்டோ ருவா பஸ்டோஸின் 'போர் தொடர்கிறது' என்னும் நாவலையும் 'உபரா', 'உச்சாலியா', 'அனார்யா' ஆகிய தலித் சுயசரிதை நாவல்களையும் அமில்கர் கப்ராலின் 'தத்துவம் என்னும் ஆயுதம்' 'வேர்களை நோக்கி' 'விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டின் பாத்திரம்' ஆகிய நூல்களையும் கேப்ரியேல் கார்ஸியா மார்க்குவெஸின் 'சால்வடார் ஆலெண்டேயின் மரணம்' ழான்போல் சார்த்தரின் 'பாட்ரிஸ் லுமும்பாவின் அரசியல் சிந்தனைகள்,' லியூடோ டி விட்டே-யின் 'லுமும்பா: இறுதி நாட்கள்,' துணைத் தளபதி மார்கோஸின் 'எதிர்ப்பும் எழுத்தும்' ஆகிய நூல்களையும் 'சேகுவேரா: வாழ்வும் மரணமும்,' 'போர்க்குதிரை', 'ஃபனான்: அல்ஜீரிய வாழ்வும் விடுதலையும்,' லியோனார்ட் பெலட்டியரின் 'சூரியனைத் தொடரும் காற்று' 'வால்ட்டர் பெஞ் சமின்: 'நிலை மறுக்கும் வாழ்வும்,' ஃபிலிப் ஷார்ட் எழுதிய 'மாவோ வாழ்க்கை வரலாறு' ஆகிய வாழ்க்கை வரலாற்று நூல்களையும் மர்ஜானே சத்ரபியின் 'ஈரான்: ஒரு குழந்தைப் பருவத்தின் கதை' 'ஈரான்: திருப்புதல்' ஆகிய வரைபட நாவல்களையும் தமிழில் மொழிபெயர்த்திருப்பவர். தற்போது இவர் கேத்லீன் கோ எழுதிய 'Rural Society in Southeast India,' 'Rural Changes in Southeast India' ஆகிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வருகிறார். இந்நூலை பாரதி புத்தகாலயம் வெளியிட இருக்கிறது. தற்போது இவர் கோயமுத்தூரில் வசித்து வருகிறார்.

வரை நிறைவான படைப்பாகவும், மறுபுறம் பதிப்பாசிரியரின் படைப்பாக அல்லாமல் முழுக்க முழுக்க நூலாசிரியரின் படைப்பாகவும் அமையக்கூடிய விதத்தில் இவ்வேலையைச் செய்ய வேண்டியிருந்தது..... ஆசிரியரின் கையெழுத்து பிரசித்தமானது; சில சமயங்களில் அவராலேயே கூட படிக்க முடியாமற் போய்விடும் கையெழுத்து அது. இந்தக் கையெழுத்துப் பிரதிகளை உள்ளது உள்ளபடி கூடுமான வரை அப்படியே எடுத்துக் கொடுப்பதோடு நின்று கொண்டேன். மார்க்சே மாற்றியிருப்பார் என்னும்படியான இடங்களில் மட்டுமே நடையை மாற்றியுள்ளேன்; முற்றிலும் அத்தியாவசியமான இடங்களிலும், அத்துடன் அர்த்தம் ஐயந்திரிபறத் தெளிவாக இருந்த இடங்களிலும் மட்டுமே, விளக்க வாக்கியங் களையோ, இணைப்புக்கு வேண்டியவற்றையோ இடையிடையே சேர்த்துள்ளேன். பொருள் விளக்கம் தொடர்பாக மிகச்சிறு சந்தேகத்துக்கும் ஏதுவான வாக்கியங்களை சொல்லுக்குச் சொல் அப்படியே தந்து விடுவது மேலெனக் கொண்டேன். நான் மாற்றியமைத்துள்ள அல்லது இடையிடையே சேர்த்துள்ள பகுதிகள் அச்சில் பத்தே பத்துப் பக்கம்தான் வரும்; அவையும்கூட, வடிவம் தொடர்பானவையே...... கிடைத்தவற்றில் கடைசி யாகச் சீரமைக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியை முந்தையவற்றுடன் ஒப்பிட்டு, எப்போதும் அதனையே என் வேலைக்கு அடிப்படையாகக் கொண்டேன்... என்னால் இப்போது கணிக்க முடிந்தவரை, மிக முக்கியமான ஒரு சில பிரிவுகள் தவிர்த்து பிறவற்றில் எழக்கூடிய சிக்கல்கள் பிரதானமாய் செய்நுட்பம் தொடர்பானவையாகவே இருக்கும்."[3]

தனது இறுதிக்காலத்தில் பார்வைக் கோளாறின் விளைவாக எங்கெல்ஸ் தீராத இன்னல்களுக்கு ஆளான போதிலும், ஆண்டுக்கணக்காக அவரது எழுதும் நேரம் இதனால் மிகவும் குறைந்துவிட்ட போதிலும், வேறு பல பணிகளையும் அவர் செய்துமுடிக்க வேண்டியிருந்த போதிலும், அயராது உழைத்து அவர் *'மூலதனம்'* நூலின் மூன்றாம் பாகத்தை 1894-ஆம் ஆண்டில் வெளிக் கொண்டு வந்தார். இதற்கிடையில் அவர் எதிர்கொண்ட தடைகளை, மூன்றாம் பாகத்திற்கான முன்னுரையில் விரிவாகக் குறிப்பிடும் அவர், இப்பணியின் நிறைவு குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "ஆகக் கடைசியில், மார்க்சின் பிரதானப் படைப்பின் மூன்றாம் புத்தகத்தை வெளியிடும் பாக்கியம் எனதாகிறது. இப்புத்தகம் தத்துவப் பகுதியின் முடிவுரையாகும். ஒருசில, நிச்சயம், மிக முக்கியமான பிரிவுகள் தவிர்த்து, மூன்றாம் பாகத்தில் அநேகமாகச் செய்நுட்ப சிரமங்கள் மட்டுமே தலைகாட்டும் என்று, 1885இல் இரண்டாம் பாகத்தைப் பிரசுரித்தபோது நான் நினைத்தேன். உள்ளபடியே நடந்ததும் அதுதான். ஆனால், நூல் முழுவதன் மிக முக்கியப் பகுதிகளான இப்பிரிவுகள் இந்த அளவு தொல்லை தரும் என்று நான் அந்த நேரத்தில் அறிந்திடவில்லை. அதே போலத்தான், வேலையின் பூர்த்தியை இந்த அளவுக்குத் தாமதப்படுத்தவிருந்த மற்ற தன்மைகளையும் நான் எதிர்பார்த்திடவில்லை."[4]

மூன்றாம் பாகத்தைப் பதிப்பிக்கும் பணி, பின்வரும் காரணங்களால், இரண்டாம் பாகத்தைப் பதிப்பிக்கும் பணியிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டிருந்தது: "....மூன்றாம் பாகத்தின் விஷயத்தில், மிக மிக முழுமையற்ற ஒரு முதல் நகல் அல்லாமல் அடிப்படையாகக் கொள்ள ஏதுமில்லை. பல்வேறு பகுதிகளின் துவக்கங்களும், வழக்கமாகவே, கவனமாகச் செய்யப்பட்டிருந்தன. நடை மெருகேற்றப்பட்டிருந்தது. ஆனால் எவ்வளவுக்கு மேலே செல்கிறோமோ, அவ்வளவுக்கு கையெழுத்துப் பிரதி அதிகம் நேர்த்தியற்றதாகவும் அரைகுறையான தாகவும் இருந்தது. கிளம்புகின்ற துணைப்பிரச் சனைகளில் கிளை படர்வது அவ்வளவுக்கு அதிகமாயிருந்தது - தர்க்கத்தில் இவற்றுக்குரிய இடம்பற்றிப் பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என்று விடப்பட்டிருந்தது. வாக்கியங்கள் அந்த அளவுக்கு நீண்டும் சிக்கல் மிகுந்தும் இருந்தன. இவ்வாக்கியங்களில், சிந்தனைகள் பிறந்த மேனியில் (Statu nascendi) பதிவு செய்யப்பட்டிருந்தன. சில இடங்களில் கையெழுத்தும் சமர்ப்பண முறையும், மிகையுழைப் பால் சேர்ந்த உடல் நலிவின் தாக்குதல்கள் வெடித்ததையும் படிப்படியாக முன்னேறியதையும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன..."[5]

கையெழுத்துப் பிரதியை வாசிக்கத் தக்கப் பிரதியாக எழுதிக் கொள்வதில் இருந்த சிரமங்கள், கையெழுத்தைக் கண்டறிந்து படிப்பதில் ஏற்பட்ட பிரச்சனைகள், மார்க்ஸின் மறு கூறல்களைக் கையாள்வதில் எழுந்த முட்டுக்கட்டைகள், குறிப்பாகச் சொல்லப்பட்ட விஷயங்கள் விரிவாக்கப்படுவதில் இருந்த சிக்கல்கள் எனச் சிரமங்களின் பட்டியல் மிகவும் நீளமானது. ஆகப்பெரிய சிரமம் ஒன்றை தான் எவ்வாறு எதிர்கொள்ள நேர்ந்தது என்று எங்கெல்ஸ் கூறுகின்றார்: "... சரியாக இந்தக் கட்டத்தில்தான், மேற்குறிப்பிட்ட உடல்நலிவின் கடுந்தாக்குதல்களில் ஒன்று மார்க்ஸை மிஞ்சியிருந்தது. இங்கேயும் பூர்த்தியான நகலேதுமில்லை. நிரப்பிக்கொள்ளக் கூடிய சுருக்கவுரைகளையுடைய ஒரு திட்டம் கூடக் கிடையாது; ஒரு விரிவாக்கத்தின் துவக்கம்

மட்டுமே இருந்தது - பல நேரங்களில் குறிப்புகளும் விமர்சனக் கூற்றுகளும் எடுகோள்களுமான ஓர் ஒழுங்கற்ற திரள் மட்டுமே இருந்தது– நூலாசிரியர் விரும்பிய அனைத்துமே குறைந்தபட்சம் ஏறக்குறையவேனும் இடம்பெறக் கூடிய விதத்தில், இடைவெளிகளை இட்டு நிரப்புவதன் மூலமும், சூசனையாக மட்டுமே தரப்பட்ட நூற்பகுதிகளை விரிவுபடுத்துவதன் மூலமும், இந்தப் பகுதியைப் பூர்த்தி செய்ய முதலில் முயன்றேன். மூன்று தடவைக்குக் குறையாமல் நான் இப்படி முயன்றேன். ஆனால் ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வி கண்டேன். இதில் இழக்கப்பட்ட நேரம், இந்தப் பாகத்தை வழிமறித்த முதன்மையான காரணங்களில் ஒன்றாகும். நான் தடந்தவறிச் சென்றுகொண்டிருப் பதைக் கடைசியில் உணர்ந்தேன். இத்துறையில் ஏராளமாயுள்ள இலக்கியம் முழுவதிலும் நான் புகுந்து புறப்பட வேண்டியிருந்திருக்கும் அப்படியும் மார்க்ஸ் எழுதிய ஒரு புத்தகமாக அமைந்திருக்காத ஏதோ ஒன்றை முடிவில் தயாரித்திருப்பேன். கிடைக்கக் கூடிய விஷயத்தை முடிந்தவரை ஒழுங்காக வரிசைப்படுத்துவதோடும், மிக மிக இன்றியமையாத வற்றை மட்டுமே சேர்ப்பதோடும் என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம் இந்தச் சிக்கலைக் கிட்டத்தட்ட அவிழ்ப்பது தவிர எனக்கு வேறு வழியில்லாமற் போனது....” [6]

மார்க்ஸின் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து ‘*மூலதனம்*’ நூலின் இரண்டாம் பாகத்தையும் மூன்றாம் பாகத்தையும் தொகுத்து நூலாக்குவது இந்த அளவுக்குக் கடினமானதாக இருந்தது. மூன்று பாகங்களும் வெளிவந்த பின்னர், ஓர் ஆண்டிற்குள்ளாகவே பிரெடெரிக் எங்கெல்சும் மரணமடைந்தார். இருப்பினும், ‘*மூலதனம்*’ நூலின் மூன்றாம் பாகத்திற்கான முன்னுரையில், “எப்படியும் சாத்தியப்பட்டதுமே, நான்காம் பாகம் - *உபரி மதிப்புத் தத்துவத்தின் வரலாறு* - தொடர்பான வேலையைத் தொடங்கப் போகிறேன்,” என்று மிகுந்த நம்பிக்கையோடு அவர் குறிப்பிடுகிறார்;[7] உடனடியாக அதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்ட அவரால் அப்பணியை முடிக்க முடிய வில்லை. மரணம் அவரை முந்திக் கொண்டுவிட்டது. அதன்பிறகு கார்ல் காவுட்ஸ்கி, *உபரி மதிப்புத்தத்துவ வரலாறு* குறித்த நூலின் மூன்று தொகுதிகளைத் தொகுத்துப் பதிப்பித்தார். *மூலதனத்தின்* நான்காவது பாகமாக, உபரிமதிப்புத் தத்துவம் பற்றிய இந்நூலின் மூன்று தொகுதிகளும் மதிக்கப் பெறுகின்றன.

இதுவரையில் குறிப்பிடப்பட்டவற்றினைக் கொண்டு மார்க்சிய மூல நூல்களைத் தொகுக்கும் பணி எந்த அளவுக்குக் கடினமானதும் முக்கியமானதும் ஆகும் என்பதை ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். மார்க்சியத்தின் செல்வாக்கு வளர்ச்சி பெற்றதுடன் இணைந்தே, மார்க்சிய மூல நூல்கள் தொகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்படுவதும் வளர்ந்தது என்பதையும் அவதானிக்க முடியும். மார்க்சும் எங்கெல்சும் பத்திரிகைகளுக்காக எழுதியவற்றிலும், நூல்களாக எழுதியவற்றிலும், குறிப்பேடுகளில் எழுதியவற்றிலும் ஏராளமான படைப்புகள் அவர்களுடைய காலத்தில் நூல்களாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவது சாத்தியமில்லாமற் போயிற்று.

* * *

மார்க்சும் எங்கெல்சும் படைத்தளித்த நூல்களும் பிறபடைப்புகளும் தத்துவரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும், ஒருங்கிணைந்த தத்துவக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் உருவானவை மட்டுமல்ல; மார்க்சும் எங்கெல்சும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பங்களித்த கருத்துச் செல்வங்களாலும் உருவானவை. இந்தப் படைப்பு களின் ஒட்டுமொத்தம்தான் கடந்த 160 ஆண்டு களுக்கும் மேலாக, மற்றெந்தவொரு படைப்பையும் விட, இவ் உலக வரலாற்றின் மீதும் அளவிடற்கரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தத்துவ ஆராய்ச்சி மற்றும் எழுத்துப் பணிகளிலும் சரி, புரட்சிகரத் தலைமைப் பணிகளிலும் சரி, இருவருக்குமிடையில் தனிச்சிறப்பான கூட்டுத்தன்மை வெளிப்பட்டது. இதில் தலையாய பாத்திரம் வகித்தவர் மார்க்ஸ் என்பதில் ஐயமில்லை என்றபோதிலும், இருவரும் இணைந்து ஆற்றிய பணிகள் சரி நிகரானவை. இவ்விருவரின் பல முக்கியப் படைப்புகள் அவர்கள் இணைந்து எழுதியவையே. இருவருக்கும் இடையில் நட்பு மலரத் தொடங்கிய 1844–ஆம் ஆண்டு முதல் மார்க்ஸ் மரணமடைந்த 1883 -ஆம் ஆண்டு வரையில் இருவரும் எழுதிய படைப்புகளில் மிகப் பெரும்பான்மையான படைப்புகள் கூட்டு விவாத அடிப்படையில் எழுதப்பட்டவையே. எனவே, இருவரும் இவ்வுலகுக்கு வழங்கிய வாழ்க்கைக் கண்ணோட்டம் மார்க்சியம் என்று குறிப்பிடப் படுவதும், இருவரின் படைப்புகள் அனைத்தும் ஒன்றாகவே தொகுக்கப்படுவதும் அவசியமாயிற்று.

மார்க்சும் எங்கெல்சும் வாழ்ந்த காலத்திலேயே, முதலாளித்துவச் சமூக அமைப்பைத் தூக்கி யெறிவதற்கான போராட்டத்திற்கு மக்களை அணி திரட்டுகின்ற, வழிகாட்டுகின்ற தத்துவமாக மார்க்சியம் திகழ்ந்தது. பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேச அமைப்புகளாகிய கம்யூனிஸ்ட் லீக், உழைக்கும் மக்களின் சர்வதேசச் சங்கமம் (முதலாம் அகிலம்) ஆகியவற்றுக்கும், பல்வேறு நாடுகளிலும் இருந்த சோஷலிஸ்ட் குழுக்களுக்கும் தொழிலாளர்களின் வர்க்க அமைப்புகளுக்கும்

தொழிற்சங்கங்களுக்கும், திட்டம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றுக்கான தத்துவ அடிப்படையாக மார்க்சியம் விளங்கியது. பூர்ஷ்வா சமூக அமைப்பின் முரண்பாடுகள் தீவிரமான அளவுக்குக் கூர்மையடையவும், உழைக்கும் வர்க்கத்தினருக்கான இயக்கங்களின் செல்வாக்கு அதிகரிக்கவுமே, மார்க்சியமானது உலக நாடுகள் அனைத்திலும் வலுவான இடத்தைப் பெறத் தொடங்கியது; அதன் ஆதரவாளர்கள் பெருகிக்கொண்டே இருந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே, மார்க்சியத்தில் ஏற்பட்ட வளர்ச்சியானது விளாதிமிர் லெனின் அவர்களின் ஆளுமையோடும் கருத்துகளோடும் பணிகளோடும் இரண்டறக் கலந்துள்ளது. அவருடைய காலக்கட்டத்தில் தத்துவக் கண்ணோட்டத்திலும் சரி, அரசியல் பொருளாதாரத்திலும் சரி, விஞ்ஞான சோஷலிசக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றிலும் சரி, மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் ஆகியோரின் படைப்புகளினுடைய உள்ளடக்கத்துடனும் வழிமுறைகளுடனும் மிகச் சரியாகத் தன்னைப் பொருத்திக் கொண்டவர் லெனின் ஒருவர் மட்டுமே. அதன்மூலம் அவர்களுடைய படிப்பினைகளை மிகவும் ஆக்கப்பூர்வமான விதத்தில் வளர்த்தெடுக்கவும் அவரால் முடிந்தது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், சோஷலிச சமூகத்தை நிர்மாணிப்பதற்கும் பாட்டாளி வர்க்கம் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களுக்கும் தலைமை தாங்குகின்ற தகுதி வாய்ந்த கட்சிக்கான அமைப்புப் பூர்வமான மற்றும் அரசியல் ரீதியான கொள்கைகளை அவரால் வகுக்க முடிந்ததற்குக் காரணம் இதுதான். இருபதாம் நூற்றாண்டில் மார்க்சியமானது லெனினால் வழங்கப்பட்ட புதிய மதிப்பீடுகளையும் அணுகுமுறைகளையும் உயிரோட்டமாக உள்வாங்கிக் கொண்டு மார்க்சிய-லெனினியமாக வளர்ந்து, சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தத்துவ-அரசியல் அடிப்படையாக மாறிவிட்டது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகிய மூவருமே மார்க்சியத்தின் மூல முதல் ஆசான்களாகத் திகழ்கின்றார்கள். எனவே மார்க்சிய மூல நூல்கள் என்று சொன்னால், அது மார்க்ஸ்-எங்கெல்ஸ் படைப்புகளையும் அவற்றுடன் லெனினது படைப்புகளையும் குறிக்கும்.

* * *

மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பின்பு, பாட்டாளி வர்க்கத்திற்கு அரசியல் கல்வியூட்டுவது குறித்தும், மார்க்சிய நூல்களையும் சோசலிசச் சிந்தனைகளையும் வெளியிட்டு மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பது குறித்தும் அதிகமாகச் சிந்தித்து வந்த லெனின் 1922-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பின்வருமாறு எழுதினார்: " பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியானது போர்க்குணம் கொண்ட நாத்திக இலக்கியத்தை மக்களிடையே பெருவீத அளவில் வினியோகித்துப் பரப்புவதற்காக மொழிபெயர்த்திடும்படி நெடுங்காலத்திற்கு முன்பு எங்கெல்ஸ் அக்காலத்தில் பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறினார். இதுநாள்வரை நாம் இதைச் செய்தாக வில்லை, நாம் வெட்கித் தலைகுனியும் வண்ணம் இதைச் சொல்லியே ஆக வேண்டும்."[8] இவ்வாறு எழுதுவதற்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே, மார்க்சியத் தத்துவ - அரசியல் கல்வி எத்துணை முக்கியமானது என்பதைப் பற்றி அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்: "நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவிதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே, ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டுகொள்ள மக்கள் தெரிந்துகொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள்..... பழமையைத் துடைத்தெறியவும் புதுமையைப் படைக்கவும் திறன் பெற்றடையவும், சமுதாயத்தில் தங்களுக்குள்ள நிலையின் காரணமாக அப்படிப் படைத்துத் தீரவேண்டிய கட்டாயத்திலிருக்கிறவையுமான சக்திகளை நம்மைச் சூழ்ந்துள்ள இதே சமுதாயத்திற்குள்ளேயே நாம் கண்டுபிடித்து, அந்தச் சக்திகளுக்கு அறிவொளியூட்டிப் போராட்டத்திற்கு ஒழுங்கமைத்துத் திரட்ட வேண்டும். இது ஒன்றேதான் வழி."[9] மார்க்சிய நூல்களின் வெளியீட்டுப் பணியைப் பொறுத்தவரையில் இந்த வழிகாட்டுதல் அப்படியே பொருந்துகிறது.

லெனின் அறிவுறுத்தலைப் பின்பற்றி, மார்க்ஸ் எங்கெல்ஸ் படைப்புகளை முழுமையாகத் தொகுக்கும் பணியானது, அவரது மரணத்திற்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னர் சோவியத் யூனியனில் மேற்கொள்ளப்பட்டது. 1927- ஆம் ஆண்டில், மாஸ்கோவிலிருந்த அன்றைய கால மார்க்ஸ் - எங்கெல்ஸ் இன்ஸ்டிடியூட், மார்க்ஸ்/ எங்கெல்சின் படைப்புகள் எழுதப்பட்ட மூலமொழியாகிய ஜெர்மன் மொழியில், "Gesantausabe" என்ற தலைப்பில், அவர்களது நூல்களைத் தொகுத்து வெளியிடும் பணியைத் தொடங்கியது. முதலில் இதற்கு டிரியாஸானோவ் என்பவர் தலைமைப் பதிப்பாசிரியராக இருந்தார்; பின்னர் வி. அடோராட்ஸ்கி என்பவர் பதிப்பாசிரியராக

இருந்தார். ஆனால் இப்பணி முழுமையடைய வில்லை.

மார்க்ஸ் - எங்கெல்ஸ் தொகுப்பு நூல்களின் ருஷ்யப் பதிப்பை வெளியிடும் பணி 1928-இல் தொடங்கி 1947- வரை தொடர்ந்தது. இதன் இரண்டாம் பதிப்பு 1955 -ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவினுடைய மார்க்சிய - லெனினிய இன்ஸ்டிடியூட் மேற் கொண்ட விரிவான ஆய்வுகளின் அடிப்படையில், மார்க்சும் எங்கெல்சும் எழுதியதாகக் கண்டறியப்பட்ட அனைத்துப் படைப்புகளும், அவர்களின் உழைப்பின் பலனாக உருவான அனைத்து ஆவணங்களும், அவர்களுடைய காலத்தில் வெளியான அனைத்துப் பத்திரிகைக் கட்டுரைகளும் இவ்விரண்டாம் பதிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இப்பதிப்பு தற்போது 39 அடிப்படைத் தொகுதிகளையும், 4 பின்னிணைப்புத் தொகுதி களையும் உள்ளடக்கியதாக (அதாவது மொத்தமாக 47 நூல்களாக - ஏனெனில், சில தொகுதிகள் இரண்டு அல்லது மூன்று நூல்களைக் கொண்டவை) உள்ளது.

இந்த ருஷ்யப் பதிப்புப் பணியை அடியொற்றி, பெர்லினிலிருந்த ஜெர்மன் சோஷலிஸ்ட் ஒற்றுமைக் கட்சியின் மத்தியக் குழுவினுடைய மார்க்சிய - லெனினிய இன்ஸ்டிடியூட் மேற்கொண்ட உழைப்பின் பலனாக, மார்க்ஸ்/ எங்கெல்ஸ் தொகுப்பு நூல்கள் "Werke" என்னும் பெயரில் வெளியிடப்படும் பணி 1956-ஆம் ஆண்டு தொடங்கியது. இப்பதிப்பும் 39 அடிப்படைத் தொகுதிகளைக் கொண்டது; 2 பின்னிணைப்புத் தொகுதிகளை மட்டும் கொண்டது (மொத்தமாக 44 நூல்கள்).

இதன் பின்னரும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும் சோவியத் யூனியனிலும் புதிய பின்னிணைப்புத் தொகுதிகள் தொடர்ந்து தயாரிக்கப்பட்டு வந்தன. இடைப்பட்ட காலத்தில் கண்டறியப்பட்ட, மார்க்ஸ்/எங்கெல்சின் தொடக்க கால எழுத்துகளும் அவர்களது கையெழுத்துப் பிரதிகளும் கடிதங்கள் உள்ளிட்ட பிற படைப்புகளும் இவற்றில் இடம் பெற்றிருந்தன.

மார்க்ஸ் / எங்கெல்ஸ் படைப்புகளின் முழுமையான பதிப்பு ஒன்றை மூல மொழியிலேயே வெளியிடுவதற்கான முயற்சியை மாஸ்கோவிலும் பெர்லினிலும் இருந்த மார்க்சிய - லெனினிய இன்ஸ்டிடியூட்கள் இணைந்து மேற்கொண்டன. (Marx / Engels. Gesamtausgabe MEGA) மார்க்சும் எங்கெல்சும் எழுதிய, வெளியிடப்பட்ட படைப்புகளுக்காக அவர்கள் எழுதி வைத்திருந்த விரிவான தயாரிப்புக் குறிப்புகள், சுருக்கவுரைகள், பிழிவுகள், ஓரக் குறிப்புகள் ஆகியவையும், அவர்களுக்கு மற்றவர்கள் எழுதியிருந்த கடிதங்கள் அனைத்தும் (அதாவது கிடைத்தவை அனைத்தும்) இப்பதிப்பில் இடம்பெற்றன.

மார்க்ஸ் / எங்கெல்ஸ் தொகுப்பு நூல்களின் முதல் ஆங்கில மொழிப் பதிப்பைத் தயாரிக்கும்போது, இந்த அனுபவங்கள் அனைத்தும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டன. இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் யூனியன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளிலும், பிற நாடுகளிலும், மார்க்ஸ்/எங்கெல்ஸ் நூல்கள் வெளியிடப்படுவதில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சிறந்த மரபுகள் அனைத்தும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. இவ்வாறாக, உண்மையிலேயே முழுமையான, நேர்த்தியாக ஒருங்கு திரட்டப்பட்ட, சிறப்பான விளக்கக் குறிப்புகள் இணைக்கப்பட்ட முதல் ஆங்கில மொழிப் பதிப்பு உருவாயிற்று.

மார்க்ஸ் / எங்கெல்ஸ் தொகுப்பு நூல்களின் ஆங்கிலப் பதிப்பானது, அதற்கு முந்தைய மூலமொழிப் பதிப்பின் அனைத்துக் கூறுகளையும் கொண்டிருந்ததோடு, அவ்விருவரும் ஆற்றிய உரைகளின் எழுத்துவடிவத்தையும், அவர்களுடைய உரைகளைப் பற்றிய அறிக்கைகளையும் பதிவுகளையும் உள்ளடக்கியிருந்தது. பல்வேறு செய்தியாளர்களுக்கு அவர்கள் அளித்த நேர்காணல்கள், அவர்களின் அறிவுறுத்தலின்படி எழுதப்பட்ட கடிதங்கள், பல்வேறு அமைப்புகளுக்காக அவர்கள் எழுதிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவையும் அப்பதிப்பில் இடம்பெற்றன.

முழுமையான ஆங்கிலப் பதிப்பு மொத்தமாக 50 தொகுதிகளைக் கொண்டது. இத் தொகுதிகள் மூன்று பெரும் பிரிவுகளின்கீழ் வகைப்படுத்தப்பட முடியும்:

1. தத்துவ / வரலாற்று / அரசியல் / பொருளாதார / மற்றும் பிற படைப்புகள்: தொகுதி 1 முதல் 28 வரை.

2. மார்க்சின் '*மூலதனம்* என்ற நூலும், அதன் தொடக்கக்கட்ட வடிவங்களும் - குறிப்பாக, 1857-58 ஆம் ஆண்டுகளின் பொருளாதாரக் கையெழுத்துப்படிகள் (அதாவது, கிரண்ரிஸ்): தொகுதி 29 முதல் 37 வரை.

3. 1844-ஆம் ஆண்டிலிருந்து எழுதப்பட்ட கடிதங்கள்: தொகுதி 38 - 50 வரை.

இவற்றில் 1 முதல் 3 வரையிலான தொகுதி களுக்குச் சில சிறப்பம்சங்கள் உண்டு. மார்க்சுக்கும்

எங்கெல்சுக்கும் இடையில் நட்பும் கூட்டுப் பணிகளும் தொடங்கிய 1844 ஆகஸ்ட்டுக்கு முன்பே இருவரும் தத்தமது வழிகளில் சிந்தனையாளர்களாகவும் எழுத்தாளர்களாகவும் புரட்சியாளர்களாகவும் உருவாகி வந்தார்கள். எனவே இருவரது படைப்புகளும் இத்தொகுதிகளில் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ளன. 1843 மார்ச் வரையிலான இளம் மார்க்சின் படைப்புகள் முதல் தொகுதியிலும், அதே காலம் வரையிலான இளம் எங்கெல்சின் படைப்புகள் இரண்டாவது தொகுதியிலும், அந்தக் காலத்திற்குப் பிறகிலிருந்து 1844 ஆகஸ்ட் வரையில் அவர்கள் எழுதியவை மூன்றாவது தொகுதியில் தனித்தனிப் பகுதிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன. 1844 ஆகஸ்டிலிருந்து அவர்கள் இருவரும் இணைந்து பணியாற்றினார்கள் என்பதால், அதற்குப் பிறகான படைப்புகள் அனைத்தும் 4-வது தொகுதியிலிருந்து 50-வது தொகுதி வரையிலும், கால வரிசைப்படி தொகுக்கப்பட்டு, ஒன்றாகவே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆங்கில பதிப்பின் சிறப்புகள் பின்வருமாறு: 1. கால வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன; 2. சில குறிப்பிட்ட நூல்கள் சிறப்புத் தொகுதிகளில் சேர்க்கப்படும் பட்சத்தில் மட்டும் இந்தக் காலவரிசைப்படியான அடுக்குமுறையில் மாற்றம் செய்யப்படும்; 3. ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட படைப்புகளுக்கு மார்க்சோ எங்கெல்சோ சில பகுதிகளைக் கூடுதலாகச் சேர்த்திருந்தார்கள் எனில், அப்பகுதிகள் சற்றே விலகிச் செல்லும் போக்கைக் கொண்டு விளங்குகின்றன எனில், அப்பகுதிகள் எழுதப்பட்ட காலத்திற்கு ஏற்பத் தனியாகக் கொடுக்கப்படும்; முக்கியப் பகுதிகளுடன் சேர்த்துத் தரப்படமாட்டா; 4. மார்க்சும் எங்கெல்சும் யாருக்கெல்லாம் கடிதங்கள் எழுதியிருந்தாலும் சரி, அக்கடிதங்கள் அனைத்தும் காலவரிசைப்படிப் பதிப்பிக்கப்படும்; 5. மார்க்ஸ் /எங்கெல்ஸின் வாழ்நாள் காலத்திலேயே வெளியான படைப்புகளின் பதிப்புகளை ஆதாரமாகக் கொண்டே தொகுப்பு நூல்கள் பதிப்பிக்கப்படும்; அவ்வாறு இல்லாத பட்சத்தில், ஆசிரியர்களின் கையெழுத்துப்படிகளே பதிப்பிற்கான ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்படும்; 6. பதிப்பாசிரியர்களின் குறிப்புகள் தேவையில்லாதவையாக இருந்தால், அவை நீக்கப்படும்; அவசியமானவையாக இருந்தால், அவை குறிப்புகளுக்கான பகுதியில் கொடுக்கப்படும்; 7. மார்க்ஸ் / எங்கெல்சின் வாழ்நாளிலேயே, அவர்களால் பார்வையிடப்பட்டோ சரிபார்க்கப்பட்டோ ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவந்திருக்குமாயின், அவை அவர்களால் அங்கிகரிக்கப்பட்டவையாகக் கருதப்பட்டு, ஆங்கிலத்தொகுப்பு நூல்களின் பதிப்பில் அப்படியே சேர்த்துக் கொள்ளப்படும்; 8. நூலாதாரக் குறிப்புகள் முரண்பாடற்றவையாகவும் தெளிவானவையாகவும் இருக்கும்; 9. மேற்கோள் காட்டப்படும் வாசகங்களும் அவற்றின் அசலான தன்மையும் அப்படியே பாதுகாக்கப்படும்; 10. ஒவ்வொரு தொகுதியிலும் தனித்தனியாக, விரிவான அளவுக்கு விளக்கக் குறிப்புகள் இடம்பெறும். (நூற்பிரதிகள், ஆதாரநூல்கள், நூற்பட்டியல், வரலாற்று நிகழ்வுகள் ஆகியவை பற்றிய தகவல்கள்; பொருள் விளங்காத சொற்றொடர்கள் பற்றிய கருத்துரைகள்; நூற் பிரதிகளில் குறிப்பிடப்படுகின்ற நபர்கள், செய்தித்தாள்கள், மற்றும் சஞ்சிகைகள் பற்றிய சுருக்கமான குறிப்புகள்); 11. ஒவ்வொரு தொகுதியும் பின் வருமாறு அமைக்கப்பட்டிருக்கும்: (i) ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பதிப்பாசிரியர் முன்னுரை கொடுக்கப்பட்டிருக்கும்; பல தொகுதிகள் சேர்ந்து ஒரு முழுநூலாக அமையுமாயின் அவற்றில் எது முதலாவது தொகுதியோ, அதில் இத்தகைய முன்னுரை இருக்கும்; (ii) குறிப்புகள் இடம்பெறும்; (iii) ஒரு பெயரடைவு வழங்கப்படும்.; (iv) மேற்கோள் காட்டப்பட்ட, அல்லது சுட்டிக்காட்டப்பட்ட இலக்கியப் படைப்புகளின் பட்டியல் கொடுக்கப்படும்; (v) சஞ்சிகைகளின் பட்டியல் தரப்படும்; (vi) இறுதியாக, விவாதப் பொருள்களுக்கான சொல்லடைவும் வழங்கப்படும்; 12. பதிப்பாசிரியரின் கருத்துகள் அடிக்குறிப்பில் மட்டுமே இடம்பெறும்; 13. அடிக்குறிப்புகள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியே கொடுக்கப்படும்; 14. பெயரடைவுகளில் கூடுதலான விவரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கும்; 15. நூற் பிரதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கியப் பாத்திரங்கள் மற்றும் இதிகாசப் பாத்திரங்களைப் பற்றிய விவரங்கள் அவற்றுக்கான சிறப்புப் பகுதியொன்றில் அகர வரிசைப்படித் தரப்படும்; 16. ஆவணரீதியான முக்கியத்துவம் வாய்ந்த சித்திரங்கள்-குறிப்பாக, நிலப்படங்கள் மற்றும் வரைபடங்கள் - உரிய பக்கங்களில் தரப்படும்; எங்கெல்சின் கடிதங்களில் அவர் வரைந்த ஓவியங்களின் அசலான படங்கள் உரிய இடங்களில் இடம்பெறும்.

மார்க்ஸ்/எங்கெல்ஸ் தொகுப்பு நூல்களின் இந்த முழுமையான ஆங்கிலப்பதிப்பு, சோவியத், பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க அறிஞர்கள், ஆய்வாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் ஆகியோருக்கிடையிலான ஒத்துழைப்பின் விளைபயனாகும். பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகக் குழுவின் ஆலோசனையின் படி, லண்டனிலுள்ள லாரன்ஸ்

& விஷார்ட் லிமிட்டெட் என்னும் நிறுவனமும், அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுவினுடைய ஆலோசனையின்படி, நியூயார்க்கிலுள்ள இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ் கம்பெனி இன்கார்ப்பரேட்டட் என்னும் நிறுவனமும், அன்றைக்கால சோவியத் யூனியனின் தலைநகரான மாஸ்கோவில் செயல்பட்டுவந்த சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவினுடைய மார்க்சிய - லெனினிய இன்ஸ்டிடியூட்டின் ஆலோசனையின்படி, மாஸ்கோவின் முன்னேற்றப்பதிப்பகமும் இணைந்து இப்பதிப்பை வெளியிட்டன.

இம்மூன்று நாடுகளையும் சேர்ந்த மேற்காணும் மூன்று பதிப்பகங்களாலும் நியமிக்கப்பட்ட பதிப்பாசிரியர்களின் குழுக்கள் இத்தொகுப்பு நூல்களின் தயாரிப்புப் பணி மற்றும் வெளியீட்டுப் பணி ஆகியவற்றை முழுமையாக மேற்பார்வையிட்டன. அப்போது பெர்லினில் செயல்பட்டு வந்த ஜெர்மன் சோஷலிஸ்ட் ஒற்றுமைக்கட்சியின் மத்தியக் குழுவினுடைய மார்க்சிய-லெனினிய இன்ஸ்டிடியூட்டும் இப்பணியில் கணிசமான உதவிகளைச் செய்து வந்தது. ஆங்கிலப் பதிப்பின் அனைத்துத் தொகுதிகளும் மாஸ்கோவிலிருந்த First Model Printers என்னும் அச்சகத்தில் அச்சிடப்பட்டன. தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்ற பொதுவான கொள்கைகள் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாஸ்கோவில் நடைபெற்ற, மூன்று பதிப்பகங்களின் பிரதிநிதிகளினுடைய பொது மாநாட்டில் முதலில் வகுக்கப்பட்டன. பின்னர், இம்மூன்று பதிப்பகங்களின் பதிப்பாசிரியர் குழுக்களுக்கிடையிலான பொது உடன்பாட்டின் அடிப்படையில் இக்கொள்கைகள் மேலும் விரிவாக்கப்பட்டன. பதிப்புக் கொள்கைகளை விரிவுபடுத்துவதில் நேரடியாகப் பங்கு பெற்றவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

கிரேட் பிரிட்டன்: ஜேக் கோஹன், மாரிஸ் கான்ஃபோர்த், மாரிஸ் டாப், ஈ.ஜே.ஹாப்ஸ்பாம், ஜேம்ஸ்க்ளுக்மன், மார்கரைட் மைநாட்;

அமெரிக்கா: ஜேம்ஸ் எஸ்.ஆலன், ஃபிலிப் எஸ்.ஃபோனர், ஹோவார்ட் செல்ஸாம், டர்க் ஜேஸ்துருய்க், வில்லியம் வெயின்ஸ்டோன்.

சோவியத் யூனியன்: (முன்னேற்றப் பதிப்பகத்தின் சார்பில்) என்பிகார்மனோவா, வி.என்.பாவ்லோவ், எம்.கே.ஷெக்லோவா, டி.ஒய்.சொலோவியோவா; (மார்க்சிய - லெனினிய இன்ஸ்டியூட்டின் சார்பில்) பி.என்.ஃபெடோசெயேவ், எல்.ஐ.கோல்மன், ஏ.ஐ.மாலிஷ், ஏ.ஜி.யெகோரோவ், வி.ஒய்.ஸெவின்.

* * *

முன்னேற்றப் பதிப்பகம், லாரன்ஸ் & விஷார்ட் லிமிடெட், இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ் கம்பெனி ஆகிய மூன்று பதிப்பகங்களுமே மார்க்சிய மூல நூல்களின் முழுமையான ஆங்கிலப்பதிப்பை வெளியிடுவதற்கான முயற்சியில் இறங்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் வந்த காலம் முழுவதிலும், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் தனிநூல்களின் சிறந்த பதிப்புகளை வெளியிடுவதிலும் ஈடுபட்டு வந்தன; மேலும், அந்தந்த நாடுகளின் மார்க்சிய - லெனினிய இன்ஸ்டியூட்களின் உதவியோடு, குறிப்பான விவாதப் பொருள்களின் அடிப்படையிலான பல தொகுப்பு நூல்களையும் வெளியிட்டு வந்தன. பின்வரும் நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் ஒரு சில உதாரணங்களாகும்:

தனி நூல்கள் :

1. Karl Marx, **Economics & Philosophic Notebooks of 1844.***
2. Karl Marx and Frederick Engels. **The Communist Manifesto.**
3. Karal marx **A Contribution to the Critique of Political Economy.**
4. Karl Marx, **Poverty of Philosophy.**
5. Frederick Engels, **Anti-Duhring.**
6. Frederic Engels, **Origin of the Family, Private Property, and the State.**
7. Karl Marx, **Critique of the Gotha Programme.**
8. Karl Marx, **Civil War in France.**
9. Karl Marx, **Eighteenth Brumeire of Louis Bonaparte.**
10. Karl Marx, **Capital** Vol. I, II & III (இதில் II, III ஆகிய பாகங்கள் எங்கெல்ஸால் தொகுக்கப்பட்டவை)
11. Karl Marx, **Theories of Surplus Value** vols I, II & III (இவையும் கூட கார்ல் காவுட்ஸ்கியால் தொகுக்கப்பட்டவையே).
12. Frederick Engels, **Dialectics of Nature**
13. Frederick Engels, **Principles of Communism**
14. Karl Marx, **The German Ideology.***
15. Frederick Engels, **Ludwig Fruer bach and the End of Classical German Philosophy.**

தொகுப்பு நூல்கள்:

1. Marx and Engels, **On Literature and Art.***

2. Marx and Engels, **On the United States***
3. Marx, Engels and Lenin : **Dialectical Materialism.**
4. Marx and Engels, **On Religion**
5. Marx and Engels, **on Colonialism**
6. Karl Marx **On India**
7. Karl Marx, **On China**
8. Marx Engels and Lenin, **Socialist Revolution**
9. Marx Engels, and Lenin, **Anarchism and Anerchio - Syndicalism.***
10. Marx and Engels, **Selected Correspondence.***
11. Marx, Engels and Lenin, **Individual and Society.***
12. Karl Mark, **Letters to Ludwig Kugelmann.***

இந்தப் பட்டியல் முழுமையானதல்ல; ஒரு முக்கியப் போக்கினைச் சுட்டிக் காட்டவே இந்நூல்கள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன.

* * *

மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் மொத்தப் படைப்புகளின் முழுமையான தொகுப்பை வெளியிடுதல், தனி நூல்களாக விளங்கும் மார்க்சிய மூல நூல்களையும், குறிப்பான பொருள் சார்ந்த தொகுப்பு நூல்களையும் தயாரித்து வெளியிடுதல் ஆகியவற்றோடு, மார்க்ஸ் / எங்கெல்ஸின் நோக்கையும் போக்கையும், தத்துவ-அரசியல் சாரத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய, தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளைக் கொண்ட நூல் திரட்டுகளையும் இப்பதிப்பகங்கள் மார்க்சிய அறிஞர்களின் அசுர உழைப்பின் துணையோடு வெளிக்கொண்டு வந்தன. அவை:

நூல்திரட்டுகள்

1. Marx and Engels, Selected Works, In One Volume.*
2. Marx and Engels, Selected Works, In Three Volumes

   Volume 1 : (1845 - 1859) Communist Manifesto and Marxs early theoretical Writings

   Volume 2 : (1860 - 1872) The First International, Capital and Parris Commune, etc.

   Volume 3 : (1875 - 1895) Critique of the Gotha Programme and Engels' popular explanations, etc.

***

மார்க்சிய மூல நூல்களை உலகின் பல மொழிகளிலும் வெளியிடுகின்ற மகத்தான பணியையும் மாஸ்கோவின் முன்னேற்றப்பதிப்பகம் விரைவில் தொடங்கியது. அதன் ஒரு பகுதியாகவே, தமிழ்மொழியிலும் மார்க்ஸ்/எங்கெல்ஸ் படைப்புகள் வெளிவந்தன. மேற்காணும் தனி நூல்கள், தொகுப்பு நூல்கள், நூல் திரட்டுகள் ஆகியவற்றில் பெரும்பாலான நூல்கள் தமிழில் தொடர்ந்து வெளியிடப்பட்டுவந்தன. இவற்றில், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட மிகச்சில நூல்களும் அடக்கம். இங்கே, நட்சத்திரக் குறியிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தும் இதுவரை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படவில்லை; இவை தமிழில் வெளிவர வேண்டிய முக்கியமான நூல்களாகும் என்பது கவனிக்கத்தக்கது. நூல்திரட்டுகளைப் பொறுத்தவரை, மூன்று தொகுதிகளைக் கொண்ட ஆங்கிலப் பதிப்பானது 12 தொகுதிகளைக் கொண்ட தமிழ்ப் பதிப்பாக வெளிவந்துள்ளது.

* * *

இதுவரையில் எடுத்துரைக்கப்பட்ட மார்க்ஸ் / எங்கெல்ஸ் படைப்புகளைத் தொகுத்து வெளியிடுவதிலும் தனித்தனியாக வெளியிடுவதிலும் பதிப்பகங்கள் பின்பற்றிய அதே கொள்கைகள் மற்றும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டே, மாஸ்கோவின் முன்னேற்றப் பதிப்பகமானது, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவினுடைய மார்க்சிய-லெனினிய இன்ஸ்டிடியூட்டின் உதவியோடு, லெனினது படைப்புகளை முழுமையாகத் தொகுத்து ருஷ்ய மொழியில் வெளியிடும் முயற்சியை மேற்கொண்டது. பின்னர், முழுமையான ஆங்கிலப் பதிப்பை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சியும் சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர்களின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டது. லெனின் நூல் தொகுப்பு அதன் ஆங்கிலப் பதிப்பில் 45 தொகுதிகளைக் கொண்டு, முழுமையாக வெளியிடப்பட வேண்டும் என்ற திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது.

அதே நேரத்தில், லெனினது காலத்தில் அவர் எழுதி வெளிவந்த தனிநூல்களையும், காலச் சூழலின் தேவைக்கேற்ப மார்க்சிய-லெனினிய இன்ஸ்டிடியூட் தொகுத்துத் தயாரித்து வழங்கிய லெனினது தொகுப்பு நூல்கள் பலவற்றையும் முன்னேற்றப்பதிப்பகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுவந்தது. மேலும், லெனினது எழுத்துக்கள், சிந்தனைகள் ஆகியவற்றின் பிழிவாக விளங்குகின்ற, அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, தேர்ந்தெடுக்கபட்ட நூல்திரட்டுகளையும் முன்னேற்றப் பதிப்பகம் பெரிதும் முயன்று வெளியிட்டு வந்தது. அந்நூல்களின் சுருக்கமான பட்டியல் பின் வருமாறு:

தனிநூல்கள் : (ஆங்கில நூல்களின் தலைப்புகள் தமிழில் தரப்பட்டள்ளன)

1. கார்ல் மார்க்ஸ்
2. மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்
3. என்ன செய்ய வேண்டும்?
4. ஓரடி முன்னால், ஈரடி பின்னால்.
5. ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகக் கட்சியின் இரு போர்த் தந்திரங்கள்
6. தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை.
7. ஏகாதிபத்தியம் : முதலாளித்துவத்தின் உச்சகட்டம்
8. அரசும் புரட்சியும்
9. இடதுசாரி கம்யூனிசம் : இளம் பருவக் கோளாறு
10. நாட்டுப்புற ஏழை மக்களுக்கு
11. பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்
12. ஏப்ரல் ஆய்வுரைகள்

குறிப்பான பொருளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட நூல்கள்:

1. மார்க்ஸ், எங்கெல்ஸ், மார்க்ஸியம்
2. உட்டோப்பியன் சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்
3. கலாசாரமும் கலாசாரப் புரட்சியும்
4. திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம்
5. ஊழியர் பயிற்சி.
6. கூட்டுறவு குறித்து
7. சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து
8. அக்டோபர் புரட்சியின் ஆண்டு விழாக்களை ஒட்டி
9. புரட்சிகரமான வாய்ச்சொல்
10. பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதம்
11. அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றி
12. ஆசிய நாடுகளின் விடுதலை குறித்து
13. சமாதான சகவாழ்வு குறித்து.*
14. கலைப்பு வாதத்திற்கு எதிராக.*
15. போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்
16. தத்துவக் குறிப்பேடுகள்.*

நூல் திரட்டுகள்

1. லெனின், தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் (Lenin, Selected Works, In One Volume), ஒரே தொகுதி.
2. லெனின், தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் (Lenin, Selected Works, In Three Volumes) மூன்று தொகுதிகள்.

* * *

மார்க்ஸ் / எங்கெல்ஸ் நூல்களின் விஷயத்தில் முன்பு குறிப்பிடப்பட்டதைப் போன்றே, லெனின் எழுதிய தனி நூல்களையும், தொகுப்பு நூல்களையும், நூல் திரட்டுகளையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியிலும் மாஸ்கோவின் முன்னேற்றப்பதிப்பகம் அயராது ஈடுபட்டு வந்தது. மேற்காணும் பட்டியல்களில் நட்சத்திரக் குறியிடப்பட்ட நூல்கள் மட்டும் இதுவரை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படவில்லை; பிற நூல்கள் அனைத்தையும் - நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்ட ஓரிரு நூல்களைத் தவிர - முன்னேற்றப் பதிப்பகமே சிறந்த முறையில் வெளியிட்டது. நூல் திரட்டுகளைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தில் ஒரே தொகுதியாகவும் மூன்று தொகுதிகளாகவும் வெளியிடப்பட்ட, லெனின் - தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தமிழில் முறையே நான்கு தொகுதிகளைக் கொண்ட நூல் திரட்டுகளாகவும், பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட நூல் திரட்டுகளாகவும் பிரித்து மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன.

* * *

இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியின் போது இந்தியா ஒரு காலனிய நாடாக இங்கிலாந்திடம் அடிமைப்பட்டிருந்தது. அப்போது இந்தியப் பொதுவுடமை இயக்கம் வெளிப்படை யாகச் செயல்பட முடியாமற்போன ஆண்டுகள் பல. ஆங்கிலேயே அரசின் ஒடுக்குமுறை ஒருபுறம்; ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டபோதிலும் ஆளும் வர்க்கத்தினருக்கும் சாதி-ஆதிக்கவாதிகளுக்கும் கூடாரமாக விளங்கிய காங்கிரஸ் கட்சியின் பிற்போக்குத்தனமான கொள்கைகளும் நடைமுறை களும் மறுபுறம். இவற்றுக்கு நடுவில், மார்க்சிய மூலநூல்களை இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தால் முறையாகவும் தொடர்ந்தும் வெளியிட முடியாமற்போனது இயல்பானதே. இரண்டாம் உலகப்போரின் போது, அரசியல் பிரச்சாரங்களைத் தடுக்கும் நோக்கத்துடன் ஆங்கிலேய அரசு கொண்டுவந்த கடுமையான கட்டுப்பாடுகளின் விளைவாக, காகிதத் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருந்தது. நாட்டு விடுதலைக்குப் பின்னரோ, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான மத்திய அரசு 1948-ஆம் ஆண்டிலேயே கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்தது. அதையடுத்து, பல ஆண்டுகளுக்கு அரசியல் அடக்குமுறைகள் தொடர்ந்தன. அந்த ஆண்டுகளில், அன்றைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியானது மார்க்சிய மூலநூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடவில்லை.

இந்நிலையில்தான், இரண்டாம் உலகப் போரின் போது பாசிஸ்ட்டுகளிடமிருந்து மனிதகுலத்தைக்

காப்பாற்றுவதற்கான யுத்தத்தில் தனது நாட்டு மக்களில் இரண்டரைக் கோடிப் பேருக்கும் அதிகமானோரைப் பலிகொடுத்து மாபெரும் துயரத்தை அனுபவித்து வந்த சோவியத் யூனியன் இந்திய மொழிகளிலும் - தமிழ் உட்பட - மார்க்சிய நூல்களைத் தயாரித்து, இந்தியாவிற்குக் கொண்டுவந்து வினியோகித்தது. இந்தியாவில் மட்டுமின்றி, உலகநாடுகள் பலவற்றிலும், அந்தந்த நாடுகளின் தேசிய மொழிகளில் மார்க்சிய மூலநூல்களைப் படைத்தளிக்கும் பணியையும் சோவியத் யூனியன் செய்தது. தனது நாட்டு மக்களின் கடும் உழைப்பால் உருவான செல்வாதாரங்களில் கணிசமானவற்றைச் சற்றும் தயங்காமல் இதற்காகச் செலவழித்தது. இதற்காகவும், மார்க்சிய மூலநூல்களை மட்டுமன்றி, ருஷ்ய இலக்கியங்களையும் அறிவியல் - தொழில்நுட்ப நூல்களையும் குழந்தைகளுக்கான இலக்கியங்களையும் கூட நம்மிடம் கொண்டுவந்து சேர்த்ததற்காகவும், நாம் சோவியத் யூனியனுக்கு மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளோம். இந்நிலையில், இத்தகைய அறிவுச் செல்வங்கள் நமக்குத் தொடர்ந்து கிடைக்காமல் போகும் விதமாக சென்ற நூற்றாண்டின் எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் சோவியத்யூனியன் நாடே சிதறுண்டு போய்விட்டது. அதற்கான சமூக-அரசியல் காரணிகள் பல இருக்கலாம். ஆனால், தமிழர்களாகிய நம்மைப் பொறுத்தவரையிலோ, நூல்களின் விஷயத்தில் மட்டுமாவது, அது மீண்டும் திரும்ப வராத ஒரு பொற்காலமாக மாறி நம்மைக் கடந்து சென்றுவிட்டது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் ஏற்கனவே வெளிவந்த நூல்கள் கிடைப்பதே பெரும்பாடாகப் போய்விட்டது. இன்னும் வெளிவராத மிகச்சிறந்த பல நூல்கள் எதிர்காலத்தில் வெளிவரவேண்டும் என்ற நமது ஆசை நிராசையாகிக் கொண்டே வருகிறது. சோவியத் யூனியனையே நம்பியிருந்த பதிப்பகங்கள், தொடர்ந்து தாக்குப் பிடிப்பதற்காகவும் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் தம்மை போட்டா போட்டிகள் நிறைந்த இந்த வணிகமயப் பதிப்புலகில் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கிவிட்ட இச்சூழலில், நமது அடுத்த தலைமுறையினரின் மத்தியில், மார்க்சிய மூல நூல்கள் என்ற விஷயமே கடந்த காலத்திற்குரிய செய்தியாக மாறிவிடும் அபாயம் உள்ளது. முன்னேற்றப் பதிப்பகமும், ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்த அதன் தோழமைப் பதிப்பகங்களும் சென்ற நூற்றாண்டில் மாபெரும் இடையூறுகளையெல்லாம் கடந்து மகத்தான பணியை நிறைவேற்றியதைப் போல, இந்த நூற்றாண்டில் 'உலகத்தைப் புரட்டுகின்ற செயலுக்கு' இணையான, மார்க்ஸ் / எங்கெல்ஸ் தொகுப்பு நூல்களையும் லெனின் தொகுப்பு நூல்களையும் முழுமையாகத் தமிழில் வெளியிடுகின்ற பணியைச் செய்து முடிக்க வல்லவர் எவரோ? அந்த நாளும் எந்நாளோ?


* * *


குறிப்புகள் :

இக்கட்டுரையை எழுதுவற்கான ஆதாரங்களைப் பெறுவதற்காக, மார்க்ஸ் /எங்கெல்ஸ் தொகுப்பு நூல்களின் ஆங்கிலப் பதிப்பையும், எங்கெல்ஸின் நூல்தொகுப்பாசிரியர் பணி குறித்த விவரங்களுக்காக தோழர் தியாகு அவர்களால் தமிழில் மொழிபெயர்க் கப்பட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட, 'மூலதனம்' நூலின் மூன்று பாகங்களையும் நான் முழுமையாகச் சார்ந் திருந்தேன். இதற்காக, அந்நூல் களுக்கும், அவற்றின் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர் களுக்கும் என் நன்றி. (கட்டுரையாளர்).

1. லெனின், லு. குகல்மனுக்கு கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதங்களின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு முன்னுரை, *திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம்.* தமிழில் ரா. கிருஷ்ணையா, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978. பக்.27.
2. கார்ல் மார்க்ஸ், மூலதனம், முதல் பாகம் - புத்தகம் ஒன்று இந்நூலின் ஆங்கிலப் பதிப்புக்கான முன்னுரை, பிரெடெரிக் எங்கெல்ஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2003. பக். 21, 22.
3. மே. கு. நூல், இரண்டாம் பாகம். முன்னுரை, பிரெடெரிக் எங்கெல்ஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2003, பக். 1,2,7.
4. மே. கு. நூல், மூன்றாம் பாகம் - புத்தகம் ஒன்று, முன்னுரை, பிரெடெரிக் எங்கெல்ஸ், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2003, பக்.1.
5. மே. கு. நூல் மூன்றாம் பாகம், - புத்தகம் ஒன்று, பக். 2, 3.
6. மே கு நூல், மூன்றாம் பாகம் - புத்தகம் ஒன்று, பக். 5.
7. மே கு நூல், மூன்றாம் பாகம் - புத்தகம் ஒன்று, பக். 8
8. வி.இ.லெனின், போர்க்குணம் கொண்ட பொருள் முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து, கலாசாரமும் கலாசாரப் புரட்சியும், தமிழில் : ப. விருத்தகிரி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1979. பக் 234.
9. வி.இ.லெனின், மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய் களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும், மே.கு.நூல், பக்.45, 46.

■







தமிழகப் பொதுவுடைமையாளர்களின் தொகுப்புகள்

மே.து. ராசுகுமார்

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பெறுகின்ற அறிவு மற்றும் பட்டறிவுச் செல்வங்களை ஏதோவொரு வகையில் திரட்டித் தொகுத்து வைத்துக்கொள்வதை வழக்கமாகவும் கடமையாகவும் பல்வேறு மக்கள் பகுதியினர் பின்பற்றி வருகிறார்கள்.

பாடல் வழியிலான இலக்கியங்கள், வரலாற்று வகையிலான எழுத்துக்கள், கலைகளாக வடிக்கப்பட்ட படைப்புகள், ஆவண வாயிலான பதிவுகள் என்பன போன்று வேறுபட்டு இருப்பினும், இவை அனைத்தும் மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தை மட்டுமல்லாது, வளர்ச்சிகளையும் முன்னேற்றங்களையும் வெளிப்படுத்துகின்றன. எழுத்துக்களை உருவாக்கிக்கொள்ளாத இனங்கள்கூட, தங்கள் உணர்வுகளையும் எண்ணங்களையும் பாடல்களாகப் புனைந்து பின்னைய தலைமுறையினருக்குக் கையளித்து வருகின்றன.

இத்தகைய அறிவுச் செல்வங்களின் தொகுப்பு முயற்சிகள் தமிழர்களுக்குப் புதியனவல்ல. சங்க இலக்கியங்களில் *எட்டுத்தொகை* நூல்கள் யாவும் பொருள் அடிப்படையிலான பாடல்களின் தொகுப்புகளாகவே அமைந்திருக்கின்றன. ஒவ்வொன்றிலும் 400 தனிப்பாடல்கள் அடங்கிய தொகுப்புகளாகக் *குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு* ஆகியன அமைந்திருக்கின்றன. ஒருவகையில் பொருளமைதிகொண்ட எழுபது

தனிப்பாடல்களின் தொகுப்பு *பரிபாடல்* ஆகும். *பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை* ஆகியன வெவ்வேறு புலவர்களது பாடல் திரட்டு களின் தொகுதிகளாக விளங்குகின்றன. இத்தகைய தொகுப்புகள் யாவும் மீண்டும் *எட்டுத் தொகை* என்ற தொகுதிக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன. எண்ணிக்கையில் மிகுந்த வரிகளைக் கொண்ட பத்துப்பாடல்களின் தொகுதியாகப் *பத்துப்பாட்டு* அமைக்கப்பட்டுள்ளது.


பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெரும்காப்பியங்கள், திருமுறைகள், நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் என்றெல்லாம் இத்தொகுப்பு முயற்சிகள் தொடர்தலையும் காணலாம். காலப்போக்கில், தனியுடைமையின் தோற்றமும் முரண்பட்ட வாழ்முறைகளின் வேறுபட்ட கருத்தோட்டங்களும் மாறுபட்ட போக்குகளும் பலநிலைப்பட்ட படைப்பாளரது எழுத்துக்களை ஒரே தொகுதிக்குள் அடக்கிவிடுகின்ற வாய்ப்புகளை மிகவும் குறைத்துவிட்டன. இருப்பினும், இந்த மாற்றங்கள், ஒரு குறிப்பிட்ட படைப்பாளரது எழுத்துக்கள் அனைத்தையும் எளிதில் கிடைக்குமாறு தொகுத்தளிக்கின்ற ஒரு புதிய முறைமையினை உருவாக்கிவிட்டன.

ஆயினும், தனியொருவர் எழுதியதாக அமைந்த இருபதாம் நூற்றாண்டில் எழுந்த படைப்புகளைத் திரட்டி முழுமையான தொகுப்புகளாக்குவதில் பெருமளவிலான முனைப்புகள் அண்மைக் காலம் வரை காட்டப்படவில்லை என்றே கூறமுடியும். பாடல்கள், சிறுகதைகள், புதினங்கள், ஆய்வுகள், இலக்கிய மதிப்பீடுகள், சமூக-பொருளிய-அரசியல் கட்டுரைகள் போன்ற அனைத்துக்கும் இது பொருந்தும். சில விலக்குகள் இருக்கலாம். இதில் குறிக்கத்தக்கது, 1950களில் ஆ. பாலகிருஷ்ணபிள்ளை தொகுத்தளித்த வள்ளலார் படைப்புகள் அடங்கிய ஓரளவு முழுமையான தொகுதிகளாகும்.

பாரதியார் பாடல்களின் பதிப்புரிமை 1949இல் நீக்கப்பட்ட பின்னர், பாரதியாரது அனைத்துப் பாடல்களும் தொகுக்கப்பட்டு 1950களின் தொடக்கத்தில் தமிழக அரசினால் வெளியிடப் பட்டன. கிடைக்கப்பெற்ற பாரதியாரது கட்டுரை களும் நூலாக்கம் பெற்றன. பின்னர் இவற்றைப் பல வெளியீட்டாளர்களும் தங்களுடைய நோக்கத்துக்கு ஏற்றவாறு, பொருளடிப்படையிலும் கால அளவிலும் பதிப்பித்திருக்கிறார்கள்.

அடுத்து இந்தவகையில், பி.இ. பாலகிருஷ்ணன் தொகுத்து நியூ செஞ்சுரி நூல் நிறுவனத்தார் வெளியிட்ட பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் பாடல்களைக் குறிப்பிடலாம். ஒரு சில பாடல்கள் விடுபட்டுப் பின்னர் சேர்க்கப்பட்டிருந்தாலும், பதிப்புரிமை கொண்டிருந்த ஒரு படைப்பாளியின் ஆக்கங்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்ட முயற்சியில் இது முதலிடம் பெறுகிறது என்று கூறமுடியும்.

தனியொருவருடைய முழுமையான படைப்புகள் தொகுக்கப்படாவிட்டாலும், தனித்துச் சில பாடல்கள், சிறுகதைகள், குறும்புதினங்கள், ஆய்வுகள், பிற கட்டுரைகள் என்ற அளவிலான தொகுப்பு நூல்கள் பெருமளவில் குவிந்திருக்கின்றன. ஆயினும், ஒருவரது வாழ்நாளுக்குப் பின்னர் அல்லது ஒருவரது வாழ்நாளிலேயே அவர் எழுதிய



மே.து. ராசுகுமார்: : தமிழக மார்க்சிய ஆய்வாளர்களின் ஆய்வு முறைமை பெரும்பாலும் தமிழர் வரலாற்றை எதிர்மறையாக மற்றும் அணுகுவதாக இருந்த சூழ்நிலையில் மெய்யான சார்பற்ற ஆய்வை முன்வைக்கும் மிகச் சிலரில் ஒருவர். பேரா. நா. வானமாமலையின் மாணவர். இவரது சோழர்கால நிலவுடைமைப் பின்புலத்தின் 'கோயில் பொருளியல்' என்ற நூல் சோழர்காலம் குறித்து நூறாண்டுகால எதிர்நிலை கற்பிதங்கள் பலவற்றை உடைத்தெரிந்தது. சங்க இலக்கியங்களை காதல், வீரம் என்ற இரு தலைப்புகளில் அடக்கி தமிழருக்கென வாழ்வியல், அரசியல் கோட்பாடுகள் இருந்ததை மறைத்ததே கடந்த நூற்றாண்டின் பொதுக்போக்கா இருந்தது. இந்த இழிவை மாற்றியதில் இவருடைய பங்கு முக்கியமானது.

'மே.து.ரா. சிறுகதைகள்', 'சோழர் கால நிலவுடமை பின்புலத்தில் கோயில் பொருளியல்' உள்ளிட்ட 10 நூல்களின் ஆசிரியர். மக்கள் வெளியீடு சார்பாக பதிப்பாசிரியராக இருந்து நா.வா., க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, மயிலை சீனி. வேங்கடசாமி ஆகியோரின் நூல்களைப் பதிப்பித்துள்ளார். கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் துணை இயக்குநராகப் பணியாற்றியவர். தற்போது செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தில் ஆய்வறிஞராகப் பணியாற்றி வருகிறார்.

அனைத்தையும் கால அளவில் தொகுக்கப்படும் நடைமுறை அண்மைக் காலம் வரை ஏனோ நடைமுறைக்கு வராமலேயே இருந்துவிட்டது.



தனியொரு படைப்பாளரது பன்முகத் தன்மையைக் காட்டும் வகையில், அவர் எழுதிய கவிதைகள், சிறுகதைகள், புதினங்களின் பகுதிகள், இலக்கியக் கட்டுரைகள், ஆய்வுப் படைப்புகள், அரசியல் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், மதிப்பீடுகள், மடல்கள் என்பன போன்ற பல வகைப்பட்ட வேறுபட்ட ஆக்கங்களைத் தொகுக்கும் 'பல்வகைத் திரட்டு' (Anthology) என்ற வகையிலான முயற்சிகளும் தமிழில் மேம்படவில்லை.

தமிழகச் சூழலில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர், சமூக-பொருளிய-அரசியல் பண்பாட்டுப் பின்புலத்தில் தங்களது கருத்துக்களை வெளியிட்டோரில், அயோத்திதாசர் தொடங்கி சிங்காரவேலர், பெரியார், அண்ணா, ஜீவா உள்ளிட்ட அனைவருக்கும் இது பொருந்தும். பாரதிதாசன் முதலான கவிஞர்கள், புதுமைப்பித்தன் போன்ற படைப்பாளிகள், ஆய்வாளர் பலர் ஆகியோரது படைப்புகளின் தொகுப்பு முயற்சிகளும் உரியகாலத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

பொதுவுடைமை முன்னோடிகளான மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆகியோரது எழுத்துகள், தனி நூல்களாகவும் பொருள் அடிப்படையிலான கட்டுரைத் தொகுப்புகளாகவும் அவர்கள் காலத்தில் வெளிவந்திருக்கின்றன. இவை பல்வேறு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. அவர்களது மறைவுக்குப் பின்னரும், அவை தொடர்ந்து பல மொழிகளில் வெளியிடப்பட்டு வருகின்றன.

அத்துடன், மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆகியோரது தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்கள் பலவும் *தேர்வு நூல்கள்* என்ற பெயரில் பல தொகுதிகளாகப் பல மொழிகளில் வெளிவந்துள்ளன. ஆனால், மார்க்ஸ்-எங்கெல்ஸ் எழுத்துக்களின் முழுமையான தொகுப்புகள் யாவும், அவர்களது மறைவினையடுத்து ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்குப் பின்னரே வெளிவரத் தொடங்கி நிறைவு பெற்றன. ஆயினும், அவர்களது காலத்தில் அவர்கள் ஆங்கிலம், செருமனி போன்ற மொழிகளில் வெவ்வேறு நாடுகளின் இதழ்களில் எழுதியனவற்றைத் தொகுக்கும் முயற்சிகள் உரிய காலத்தில் தொடங்கியிருந்தன என்பதையும் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். ஆனால், லெனின் எழுத்துக்களுக்கு இத்தகைய நிலை ஏற்படவில்லை. லெனினது மறைவை அடுத்து, அவருடைய ஆக்கங்கள் அனைத்தும் முழுமையாகத் தொகுக்கப்பட்டு நூல் வடிவம் பெற்றுவிட்டன.

இவர்களைப் போன்றே, வேறு பல தளங்களில் ஆக்கங்களை அளித்திருந்த பலருடைய தொகுப்புகளும் சோவியத் நாட்டின் அரசால் பதிப்பிக்கப்பட்டு வந்தன. மாக்சிம் கார்க்கி போன்ற இலக்கியப் படைப்பாளரது முழுமையான ஆக்கங்களும் இவ்வாறே தொகுதிகளாக வடிவம் கொண்டன.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது எழுத்துக்களைப் பொருத்தவரை, அவை அனைத்தும் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் வெவ்வேறு முறைகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பொருளடியிலான கட்டுரைகள் அடங்கிய தொகுதிகளாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைத் திரட்டுகளைக் கால அளவில் கொண்ட தேர்வு நூல்களின் தொகுதிகளாகவும், அனைத்துப் படைப்புகளையும் கால அளவில் உள்ளடக்கிய தொகுப்பு நூல்களாகவும் அவை பயன்பாட்டு நோக்கில் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தகைய தொகுப்பு முயற்சிகளிலும் பகுப்பு முனைப்புகளிலும், பதிப்பு முறைமைகளிலும், பயன்பாட்டு வகைமைகளிலும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது பதிப்புகள் எடுத்துக்காட்டுகளாகவும் வழிகாட்டுவனவாகவும் அமைந்திருக்கின்றன என்று துணிந்து கூற இயலும்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது இத்தகைய தொகுப்புப் பதிப்புகளைப் படிக்கவும் பயன்படுத்தவும் பார்வையிடவும் தமிழ்நாட்டில் இருந்த பொதுவுடைமையினர் வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர். ஆயினும், இவற்றினை அடியொற்றி, தமிழில் வெளியான பொதுவுடைமை யாளரின் படைப்புகளைத் திரட்டும் முயற்சிகளில் தொடக்கத்தில் ஈடுபடவில்லை என்றே தெரிகிறது.

ஆங்கிலத்தில் எழுதியவை மட்டுமல்லாது, குசராத்திய மொழியில் காந்தி எழுதியவையும் மொழிபெயர்க்கப்பட்டு அனைத்தும் பல தொகுதிகளாகக் கால நிரலில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்திலும் மராத்தியிலும் அம்பேத்கர் எழுதிய யாவும் முழுத் தொகுப்புகளாகக் கால அளவில் வெளிவந்துள்ளன. இவை, தமிழ்

உள்ளிட்ட பல இந்திய மொழிகளிலும் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இருப்பினும், குறிக்கத்தக்க பங்காற்றியுள்ள தமிழ்ப் பெருமக்களுடைய முழுமையான படைப்புக்களைத் தொகுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக, பெரியாரது நூல்கள் பல தலைப்புகளில் சிறிதும் பெரிதுமாக வெளியிடப்பட்டிருப்பினும், தொகுப்பு நூல்கள் என்ற வகையில் அவரது எழுத்துக்கள் கால அளவில் இன்னும் முழுமையாகத் தொகுத்துத் தரப்படவில்லை. பொருள் அடிப்படையிலான பல்வேறு தலைப்புகளில் ஒருபுறமும் தேர்ந்தெடுக்கப் பட்ட படைப்புகளின் தொகுதிகளாக மறுபுறமும் மட்டுமே தற்போது பெரியாரது எழுத்துக்கள் கிடைக்கின்றன.

இந்த நிலையில், பேரா. நா. வானமாமலையின் மணிவிழாவினை யொட்டி 1977ஆம் ஆண்டளவில், நியூசெஞ்சுரி நூல் நிறுவனம் வெளியிட்ட நூல்களில் இடம் பெறாத அவரது அனைத்துப் படைப்புகளையும் திரட்டிப் பத்துத் தொகுதிகளாகக் கொண்டு வரும் விருப்பம் ஒன்றினை மக்கள் வெளியீடு அறிவித்திருந்தது. ஆனால், ஐந்து நூல்களுடன் மட்டுமே அந்த விருப்பம் முடங்கிவிட்டது. நா.வா.வின் கட்டுரைகள் பல அப்போது படியெடுக்கப்பட்டிருந்தாலும், அவை முழுமையாக இல்லாததால் வெளியிடப் படவில்லை.

இதனையடுத்து, நா.வா.வின் மறைவையொட்டி, அவரது படைப்புகள் யாவற்றையும் திரட்டி முழுமையான தொகுப்புகளாக வெளியிடும் திட்டம் ஒன்று 1978ஆம் ஆண்டிலேயே *ஜனசக்தி, தாமரை* ஆகிய இதழ்களில் வெளியிடப்பட்டது. தமது பங்களிப்பினைப் பெரும்பாலும் தமிழில் வழங்கியிருந்த ஒருவரது முழுமையான படைப்புகளைத் திரட்டி, கால நிரலில் தொகுதிகளாக வெளியிடுவதில் முதலாவதாகத் தொடங்கப்பட்ட - அறிவிக்கப்பட்ட முன்னோடி முயற்சி-முனைப்பு என்று இதையே கூறமுடியும்.

நாட்டார் வழக்காற்றியல் என்றால் நா.வா.வின் பெயர் நினைவுக்கு வருமளவு ஆழமான பணிகளை ஆற்றியிருந்தாலும், தத்துவம், சமூக வரலாறு, பண்பாடு, இலக்கிய மதிப்பீடுகள், அரசியல், அறிவியல், குழந்தை இலக்கியம் என்பன போன்ற பல துறைகளில் அவருடைய பங்களிப்புகள் சற்றேனும் குறைந்தனவல்ல. எனவே, இத்துறைகள் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்ட- வெளியிடும் முற்போக்கு இதழ்கள் பலவற்றையும் பார்க்கவேண்டியிருந்தது. *ஜனசக்தி, சரஸ்வதி, தாமரை, சாந்தி* (எஸ்.ஏ. முருகானந்தம்) ஆகியன அப்போது ஓரளவு கிடைக்கக்கூடியதாக இருந்தன. இவையன்றி, *மணிக்கொடி* போன்ற பருவ இதழ்களிலும் எழுதியிருந்தார். வேறு இதழ்களில் எழுதியிருந்த விவரங்கள் முழுமை யாகவும் வேண்டிய அளவிலும் அப்போது கிடைக்கவில்லை.

குழந்தைகள் இலக்கியம் என்ற அளவில், *ரப்பரின் கதையில்* தொடங்கி *இரும்பின் கதை காகிதத்தின் கதை, பெட்ரோலியத்தின் கதை* என்பன போன்ற ஆறு நூல்களை நா.வா. எழுதியதாகத் தெரிகிறது. ஆனால், *ரப்பரின் கதை இரும்பின் கதை* தவிர பிற அப்போது கிடைக்கவில்லை.

நா.வா. பெருமளவு எழுதத் தொடங்கிய காலத்தில் *ஜனசக்தி* நாளிதழாக இருந்ததால் 1950களின் நடுப்பகுதியிலிருந்து தேடவேண்டி யிருந்தது. 1960களின் நடுப்பகுதியையொட்டி வார இதழ். இவ்வாறு சில கட்டுரைகள் எடுக்கப்பட்டன. கன்னிமாரா நூலகத்தில் ஒன்றிரண்டு கிடைத்தன. ஆனால், இவற்றைத் தேடுவதும் படியெடுப்பதும் பெருந்தொல்லையாக இருந்தது. அனைத்தையும் கைப்படவே எழுதி எடுக்கவேண்டிய நிலை அப்போது.

அந்தக் கட்டத்தில் இப்போது இருப்பது போன்று ஒளியச்சு (*செராக்சு*) வாய்ப்புகள் மேம்பட்டிருக்கவில்லை. ஒன்றிரண்டு அரசு நிறுவனங்களில் மட்டுமே இந்த எந்திரங்கள் இருந்தன. தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில்கூட இவை இருக்கவில்லை. துகள்களைப் பயன்படுத்தி நீண்ட செய்முறைகளுக்குப் பின்னர் படியெடுக்கும் எந்திரம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கொண்டிருந்தது. தனித்த வேதிமத் தாளில் மட்டுமே படியெடுக்கக்கூடிய எந்திரத்தினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெற்றிருந்தது. இவற்றின் இயக்குநர்களாக முறையே இருந்த டாக்டர் இரா. நாகசாமி, பேரா. சா.வே. சுப்பிரமணியம் இருவரும் சில கட்டுரைகளைப் படியெடுக்கப் பெருந்தன்மையுடன் ஒப்புதல் தந்தனர். அப்போதைய நிலையில் இது பேருதவியாகும்.

ஜனசக்தி, தாமரையில் வந்த அறிவிப்பிலேயே முன்னைய பருவ இதழ்களை வைத்திருப்போர் எவரும் அவற்றை அனுப்பவேண்டியதில்லை என்றும் கூறப்பட்டிருந்தது. முன்னர், இது போன்ற வேறு தொகுப்பு முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோர் சிலர், இதழ்களைப் பெற்றுக்கொண்டு, பயன்படுத்திய பின்னர் திருப்பியளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு

பலராலும் எழுப்பப்பட்டிருந்தது. இதனை மனத்தில் கொண்டுதான் இதழ்களை யாரும் அனுப்பவேண்டாம் என்பதை வலியுறுத்தியிருந் தோம். அவர்கள் இருக்கும் ஊருக்கே நேரில் சென்று அவர்கள் இடத்தில் இருந்தே எழுதிப் படியெடுத்துக் கொள்ளப்படும் என்றுதான் அறிவிப்பிலும் இருந்தது. ஒளியச்சு இல்லாத நிலையில், அவர்களையே கையால் எழுதி அனுப்புமாறு கேட்பதும் முறையன்று. இதனால், தங்கள் காப்பில் உள்ள முன்னைய பருவ இதழ் களுக்குக் கேடு வராது என்பதாலும் அவற்றை இழக்கும் நிலை ஏற்படாது என்பதாலும் பலர் தங்களிடம் உள்ள விவரங்களை எழுதினர். ஒருவர் தனது செலவில் ஒரு கட்டுரையைத் தட்டச்சு செய்துகூட அனுப்பினார்.

நா.வா. படைப்புகளின் தேடுதல் முயற்சிகளின் போது, உடன் நிகழ்வாக கே. பாலதண்டாயுதம், ஆர்.கே. கண்ணன், தொ.மு.சி. ரகுநாதன் போன்றோரது கட்டுரைகளையும் தொகுப்பது என்று திட்டமிடப்பட்டிருந்தது. பணிகளை இது மிகுவித்தாலும், தேடுதல் என்ற பெரு முயற்சியில் இன்னும் பலவாறு பயன் கிடைக்கட்டுமே என்ற எண்ணம்தான் மேலோங்கியிருந்தது.

திட்டத்தை விரிவாக்கிக் கொண்டதாலும், பெரிதும் கைப்படவே எழுதவேண்டி இருந்ததாலும் உரியவாறு பணிகள் நிறைவு பெறவில்லை.

இந்த நிலையில், 1980களின் இறுதிவரை தமிழில் தொகுப்பு முயற்சிகள் பெரிய அளவில் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், 1980களின் இறுதியில் பலவகைப்பட்ட தொகுப்பு முயற்சிகள் தமிழில் ஏற்படத்தொடங்கின. இவை இரண்டு வகைகளில் அமைந்தன. முதலாவது, தனியொருவரது படைப்புகளைத் திரட்டித் தொகுதிகளாக வெளியிட்டமையாகும். அடுத்தது, சிறப்புடன் வெளிவந்து, தமது பணிகளைத் தொடர முடியாமல் இடையில் நின்றுவிட்ட பருவ இதழ்களில் வெளியான தேர்ந் தெடுக்கப்பட்ட படைப்புகளைத் தொகுத்துப் பதிப்பித்தமையாகும்.

எழுத்தச்சு முறையில் அச்சகங்கள் தரும் 16 அல்லது 32 பக்கங்களை அன்றாடம் சிறிதுசிறிதாகப் பிழைதிருத்தி, அவ்வப்போது அச்சிட்டு வெளியிடும் நெடிய நடைமுறையில், சென்னை போன்ற நகரங்களில் இருந்த ஒரு சில அச்சகங்களையே எதிர்பார்த்திருக்க வேண்டியநிலை இருந்தது.

அன்றைய சுட்டத்தில், புதிய நுட்பமாக அறிமுகம் செய்யப்பட்டுப் பயன்பாட்டில் இருந்த தனியன் (*மோனோ*), வரியன் (*லைனோ*) போன்ற கோப்பு எந்திரங்களை ஒரு சில பெரிய அச்சகங்கள் மட்டுமே பெற்றிருந்தன. இந்த நிலையில் பெரும் பக்கங்களைக் கொண்ட நூல்களை வெளியிடுவதில் பல தடைகள் நீடித்திருந்தன. ஆனால், நூல் ஆக்கங்களுக்கும் தொகுப்பு முயற்சிகளுக்கும் இத்தகைய நடைமுறைப் பட்ட இடையூறுகளை மட்டுமே தடை என்று கூறிவிட முடியாது. இந்தக் காலகட்டத்திலும் இதற்கு முன்னைய காலப்பகுதிகளிலும், பெருமளவிலான நூல்வெளியீட்டு முயற்சிகள் தொடர்ந்தும் இடைவிடாமலும் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் மறுத்துவிட இயலாது.

இருப்பினும், கீழ்க்கண்ட புதிய நிலைமைகள் தொகுப்பு முயற்சிகளைப் பெரிதும் விரைவுபடுத்தின என்று கருத முடியும்:

1. கணினி அச்சுமுறையின் அறிமுகம், ஆயிரக்கணக்கான பக்கங்களை விரைந்து தரும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தது.

2. எந்த ஊராயினும், இருந்த இடத்தில் இருந்தவாறே கோப்பு செய்யவும் பிழைதிருத்தவும் முடிந்தது.

3. எழுத்தறிவின் வளர்ச்சியும் கல்விப் பெருக்கமும் வேறுபட்ட நூல்களின் வேண்டல்களை உறுதிப்படுத்தின. குறிப்பாக, அதுவரை கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்த மாறுபட்ட பகுதியினரின் அறிவுத் தேடல் மிகுந்து வந்தது.

4. ஏறக்குறைய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி வெளியான பல நூல்கள் கால இடைவெளியால் பயன்பாட்டுக்குக் கிடைக்கும் நிலை குறைந்தது. தமிழர்களின் இத்தகைய அறிவுச்செல்வங்களைக் காத்து மீண்டும் பதிவு செய்து அடுத்த தலைமுறையினருக்குத் தரவேண்டும் என்ற இன்றியமையாமை ஏற்பட்டது.

5. இலக்கியத் துறையில் மட்டுமல்லாது, சமூக-பொருளிய-வரலாற்று ஆய்வுகளும் வெவ்வேறு பார்வைகளுக்காகப் புதிய தரவுகளை எதிர்பார்த்து இருந்தன. இத்தகைய தேடல்கள், எளிதில் பெறமுடியாதனவாக இருந்த பல படைப்புகளை மீள்பதிப்புச் செய்ய வேண்டிய வற்புறுத்தலை உண்டாக்கின.

6. பல்கலைக்கழக மட்டத்திலான பங்களிப்பு அல்லது படித்த மேல்குடியினரின் பங்கேற்பு என்ற அளவில் மட்டுமே பெரிதும் முடங்கிக் கிடந்த ஆய்வு முயற்சிகள், இவர்களுக்கு அப்பால் இருந்த சமூக-பொருளியப் போராளிகள் உள்ளிட்ட பரந்துபட்ட ஆர்வலரையும் விரிவாகச் சென்றடைந்தது.

7. சமூகம், பொருளியல், வரலாறு, பண்பாடு, இலக்கியம் தொடர்பான முன்னைய

கருத்தாக்கங்கள் பலவும் கேள்விக்குள்ளாக்கப் பட்டன. இதனால், முன்னைய கருத்தாக்கங்களை மறுத்து, மாற்று நிலைப்பாடுகளை முன்மொழிய, ஏற்கனவே எழுதப்பட்டிருந்த படைப்புகள் பார்வைக்கு வேண்டப்பட்டன.

8. சமூக-பொருளிய-பண்பாட்டு-அரசியல் வளர்ச்சியின் ஒரு பகுதியாக, புதியதாக மேலெழுந்த பிரிவினருக்கு, வரலாற்று நிலைப்பட்ட போக்கு களையும் நோக்குகளையும் அறியவேண்டியதும், அவற்றைப் புரிந்துகொண்டு புதிய நிலைப்பாடுகளை உருவாக்கவேண்டியதும் கடமையாகக் காத்திருந்தது. இத்தகைய வேண்டல்களுக்கு முன்னைய படைப்புகளைப் பார்வையிடுவது இன்றியமை யாததானது. இதனால் தொகுப்பு முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன.

9. 1970களையடுத்து ஏற்பட்டுவந்த சமூக-பொருளிய-பண்பாட்டு-அரசியல் மாறுதல்களின் தாக்கங்களால் எழுந்த வேண்டல்களின் உந்துதல், பல அறிஞர்-எழுத்தாளரது படைப்புகளை நாட்டுடைமை ஆக்கவேண்டிய புதிய அழுத்தத்தினைத் தோற்றுவித்தது. நாட்டுடைமை யாக்கப்பட்ட இத்தகைய படைப்புகள், தொகுப்பு முயற்சிகளை விரைவுபடுத்தின.

10. நாட்டுடைமையாக்கப்பட்ட படைப்புகளை முதலாவதாக வெளியிட்டுவிடவேண்டும் என்ற விரைவுணர்வும் எதற்கும் பொறுப்பாக வேண்டியிராத நிலையும் செம்மையான பதிப்புகளைக் கொண்டுவருதலில் முனைப்புகளை ஏற்படுத்தவில்லை என்பது உண்மைதான். என்றாலும், இதுவரை காப்புரிமையாலோ வேறு சிக்கல்களாலோ முடங்கிக் கிடந்த பலரது படைப்புகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு உருவானது. இதனால், தொகுப்பு ஏற்பாடுகள் எளிமைப்பட்டன.

11. தமிழில் வெளிவரும் நூல்களைக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அரசு நூலகங்களுக்கு வாங்கும் வழமை ஓரளவுக்கு நிலைப்பட்டது. இதனால், விற்பனைக்காக என்றில்லாமல், நூலகங்களுக்காக மட்டுமே நூல்களை வெளியிடும் புதிய முறைமையும் தோன்றியது. இதன் ஆக்க விளைவாக, முன்னைய படைப்புகளைத் துணிவுடன் திரட்டும்-தொகுக்கும் சூழல் அமைந்தது.

12. நூலகங்களைச் சார்ந்து மட்டுமே பல புதிய வெளியீட்டு நிறுவனங்கள் தோன்றியதுடன், தனியார் பலரும் நூல்களை அச்சிடும் தொழிலுக்கு ஈர்க்கப்பட்டனர். இதனாலும் சில ஆக்கப் பயன்கள் அமைந்தன.

இத்தகைய பின்புலத்தில், தமிழகப் பொதுவுடைமை சார்ந்த முன்னோடிகளான சிங்காரவேலர், ஜீவா ஆகியோரது தொகுப்புகளைக் காணவேண்டும். சிங்காரவேலர், ஜீவா இருவருமே தாங்கள் வாழ்ந்த காலத்தின் சமூக-பொருளிய -பண்பாட்டு-அரசியல் நிலைமைகளைத் தங்களது எழுத்துக்களில் எதிரொலித்தனர். விடுதலை இயக்க அரசியல், சமூக சீர்திருத்தப் பரப்புரை, பொருளிய மேம்பாட்டுக்கான போராட்டம், பொதுவுடைமைக்கான அணி திரட்டல் என்ற நான்கு முனைகளிலும் இருவரும் சீரிய பங்காற்றியுள்ளனர்.

இவற்றுக்கு மேலாக, சிங்காரவேலர் அறிவியல் விளக்கத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆழமான-தெளிவான-எளியோருக்கும் புரியும்படியான அறிவியல் கட்டுரைகள் பலவற்றை அவர் வழங்கியுள்ளார். சமூக சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக விளங்கிய சாதி சமய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கை மறுப்பு ஆகியவற்றுக்கு இத்தகைய அறிவியல் விளக்கங்கள் அடித்தளமாக வேண்டியிருந்தன. கலை, இலக்கியத் துறைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்த ஜீவா, பல ஆக்கங்களை அளித்திருக்கிறார்.

சமூக இருப்பின் அடிப்படையான பல்வேறு பட்ட தளங்களில் சிங்காரவேலர், ஜீவா ஆகியோர் இயங்கியமை முன்னோடி முயற்சிகளாகவும் எடுத்துக்காட்டுகளாகவும் அமைந்திருக்கின்றன என்றுதான் கூறவேண்டும்.

ம. சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம் (மூன்று தொகுதிகள்; பதிப்பாசிரியர்கள் முத்து. குணசேகரன், பா. வீரமணி; தென்னக ஆய்வு மையம், 17 ஜானி ஜான் கான் சாலை, சென்னை 600 014; 2006) என்ற தொகுப்புகளில் சிங்காரவேலர் 1921 முதல் 1936 வரை எழுதியுள்ள 199 கட்டுரைகள் அடங்கியுள்ளன. பதிப்பாசிரியர்களே குறிப்பிட்டிருப்பது போன்று, இவை சிங்காரவேலரின் முழுமையான பதிவுகள் அல்ல. *நவசக்தி, தேசபக்தன், சமதர்மம், சுதேசமித்திரன்* போன்ற இதழ்களில் வெளியான பல கட்டுரைகள் இன்னும் கிடைக்கப் பெறாததால், அவை இத்தொகுப்புகளில் இடம்பெறவில்லை. பெருமளவில் எழுதிக் குவித்தவர் சிங்காரவேலர். இவற்றைத் தேடியெடுத்துச் சேர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இன்றும் இருக்கின்றன.

மூன்று தொகுதிகளிலும் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் கால நிரலிலும் வெளியான இதழ்களின் விவரங்களுடனும் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆயினும், *சுயராஜ்யம் யாருக்கு?* என்ற நூல் பற்றிய அடிக்குறிப்பில் 1922 என்று வெளியான ஆண்டு மட்டும் தரப்பட்டுள்ளதேயன்றி, முதலில் வெளியிட்டோர்

யார் என்ற விவரம் கொடுக்கப்படவில்லை. தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை வெளியிட்ட இதழ்கள் பற்றிய அடிப்படையான விவரங்களையும் சில நிகழ்வுகள் பற்றிய இன்றியமையா விளக்கங்களையும் இணைப்பாகச் சேர்த்திருந்தால், பயன்படுத்துவோருக்கு மேலும் துணையாக அமைந்திருக்கும். வெளியான இதழ்-ஆண்டு குறித்த விவரங்களைக்கூட, கட்டுரை முடிவுறும் இடத்திலேயே தந்திருக்கலாம். பக்கத்தின் அடிப்பகுதியில் கீழே தனித்து இருப்பது, தேடிப்பார்க்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்திவிடுகிறது.

இருப்பினும், தொகுப்பு முறையும் பிறவும் சிறப்பிக்கும்படியாகவே அமைந்திருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது.

ப. ஜீவானந்தம் ஆக்கங்கள் முழுத்திரட்டு (இரு பகுதிகள்; பதிப்பாசிரியர் வீ. அரசு; நியூ செஞ்சுரி நூல் நிறுவனம், சென்னை; 2007) ஜீவாவின் படைப்புகள் பெரும்பாலானவற்றை உள்ளடக்கியுள்ளன. முழுத் திரட்டு என்று பெயரிட்டிருந்தாலும், *குடியரசு, புது உலகம், ரிவோல்ட், புரட்சி, சமதர்மம், அறிவு, ஜனநாயகம், ஜனயுகம், ஜனசக்தி* போன்றவற்றில் வெளியான பல கட்டுரைகள் கிடைக்காததால் அவை இவற்றில் இடம்பெற முடியவில்லை. இதனைப் பதிப்பாசிரியரும் குறிக்கத் தவறவில்லை.

இத்தொகுதிகளில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் அனைத்தும் கால அளவிலும் இல்லாது, பொருள் வகையிலும் அமையாது, வடிவ நிலையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பாடல்கள் உள்ளிட்ட யாவற்றையும் தொடக்கத்தில் ஒரு முறையேனும் கால நிரலில் வெளியிடுதலே அடிப்படையான - முதன்மையான பதிவாக இருக்க இயலும். இதனையடுத்து, பொருள் அளவிலோ, வடிவ அளவிலோ வேண்டுதலுக்கு ஏற்ப எடுத்துக்கொண்டு எப்பொழுதாயினும் வெளியிட்டுக்கொள்ள முடியும்.

ஜீவா போன்று அனைத்து மக்களாலும் மதிக்கப்பெறும் பெருந்தலைவர் ஒருவருடைய படைப்புகளைத் திரட்டித் தொகுப்புகளாக வெளியிடும்போது திட்டமிட்டுச் செயல்பட வேண்டுவது இன்றியமையாததாகும்.

பாடல்கள், மடல்கள், கட்டுரைகள், பத்திகள், சொற்பொழிவுகள், செய்திகள், மொழிபெயர்ப்புகள் என்பன போன்ற தலைப்புகளில் ஆக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பகுப்பு, எத்தகைய முறைமைகளுக்கும் உள்ளடங்கவில்லை என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. தனித்தனியான நூல்களாக வெளியிடும்போது, இத்தகைய பகுப்பு ஏற்றதாக இருக்கக்கூடும். முழுத் திரட்டு என்ற பெயரில் அமையும்போது பொருந்தவில்லை. கடிதங்கள் என்ற தலைப்பில் உள்ள ஆக்கங்களில் ஒரு சில மட்டுமே வேறொருவருக்கு எழுதப்பட்டவையாகும். பிற யாவும், மடல் வடிவிலான கட்டுரைகள்தாம். அன்புள்ள என்பது போன்ற விழிப்புச் சொற்களையும் அன்பு என்பது போன்ற முடிப்புச் சொற்களையும் அகற்றிவிட்டால், இலக்கியம் அல்லது அரசியல் சார்ந்த கட்டுரைகளாகவே இவை இருக்கக் காணலாம். இதனால், இவற்றை யெல்லாம் கட்டுரைகளாகவே வகைப்படுத்தி அதனுள் அடக்கியிருக்க வேண்டும்.

அடுத்து, சொற்பொழிவுகள் என்ற பிரிவில் *ஜனசக்தி* செய்தியாளர் மொழியில் பதிவாகியிருப் பவற்றைத் தவிர்த்திருக்கலாம். கட்டுரைகள் என்ற பிரிவில் தரப்பட்டுள்ள *நான் நாத்திகன் ஏன்?, சீனாவைப் பார்* ஆகிய நூல்களுக்கான ஜீவாவின் மொழிபெயர்ப்புகளைஅவரது படைப்புகளாகவே கருதியிருக்க வேண்டியதில்லை. ஏனெனில், இவை ஜீவாவின் ஆக்கங்களாக எந்த அளவு கோல் கொண்டும் சேர்க்க முடியாதவை. இவற்றைப் பிற்சேர்க்கையாக வேண்டுமானால் இணைத்திருக்கலாம்.

மேலும், ஜீவா குறித்த இதழ் பதிவுகளான செய்திகள் என்ற பிரிவில் உள்ளனவும், *ப. ஜீவானந்தம் ஆக்கங்கள் முழுத்திரட்டு* என்ற பெயரில் அமைந்துள்ள தொகுப்புகளில் சேர்க்கத்தக்க பொருத்தம் உடையனவல்ல. இவற்றை ஜீவாவின் ஆக்கங்களாகக் கருதியிருக்க வேண்டியதில்லை.

தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஜீவாவின் படைப்புகளை வெளியிட்ட இதழ்களைப் பற்றிய விவரங்களையும் ஒரு சில நிகழ்வுகள் பற்றிய புரிதல் விளக்கங்களையும் இணைப்பில் கொடுத் திருந்தால் இன்னும் செம்மையாக இருந்திருக்கும். வெளியான இதழ் அல்லது ஆண்டு இல்லாத-தெரியாத படைப்புகள் எங்கிருந்து எடுக்கப்பட்டன, யாரிடமிருந்து பெறப்பட்டன என்பன போன்ற குறிப்புகளையும் கொடுத்திருக்கலாம்.

முன் குறிப்புகள், பின் குறிப்புகள் என்று படைப்புக்கு முன்னும் பின்னும் சில இடங்களில் தந்திருப்பதற்கு மாறாக, படைப்பின் நிறைவில் மட்டும் தெளிவாகக் கூறவேண்டியவற்றை குறித்திருக்கலாம். அத்துடன், இத்தகைய குறிப்புகளை, கட்டுரையில் உள்ள எழுத்துரு மற்றும் எழுத்தளவிலேயே அமைத்துள்ளதால், கட்டுரைகளும் குறிப்புகளும் எங்கு

தொடங்குகின்றன, எங்கு முடிகின்றன என்ற மயக்கமும் ஏற்படுகிறது. எழுத்துரு மற்றும் எழுத்தளவினை மாற்றியிருந்தால், வேறுபட்டுத் தெரிய வாய்ப்பிருந்திருக்கும்.

முதல் தொகுப்பின் தொடக்கத்தில், பதிப்பாசிரியர் உரைகள், மூன்றாக இடம் பெற்றுள்ளன. இவை யாவற்றையும் ஒன்றிணைத்திருக்கலாம்.

ஆயினும், ஜீவாவின் வரலாற்றுக் குறிப்புகளும் பொருள் சுட்டியும் பின்னிணைப்பில் வழங்கப்பட்டமை பயனுள்ளனவாகச் சிறப்புச் சேர்க்கின்றன.

ப. ஜீவானந்தம் கால ஜனசக்தி தலையங்கங்கள் 1937-1963 (இரு பகுதிகள்; பதிப்பாசிரியர் வீ. அரசு; நியூ செஞ்சுரி நூல் நிறுவனம், சென்னை; 2007) என்ற மற்றொரு வகைப்பட்ட தொகுப்புகளின் தலைப்பு குழப்பத்தையே விளைவிக்கிறது. நூலின் தலைப்பே, உள்ளடங்கியுள்ளவை முழுமையாக ஜீவாவினால் எழுதப் பெற்றவை அல்ல என்பதை உறுதிப்படுத்திவிடுகின்றது. இத்தொகுதிகளுக்கான தலைப்பினை *ஜனசக்தி தொகுப்புகள்* என்றே வைத்திருக்கலாம். அத்துடன், கட்சியின் பல்வேறு தலைவர்கள் *ஜனசக்தியில்* எழுதியிருந்த அன்றைய சமூக-பொருளிய-அரசியல் சார்ந்த வேறு கட்டுரைகளையும், கட்சியின் அறிக்கைகளையும் தீர்மானங் களையும் தேர்ந்தெடுத்துத் தொகுத்துக் கொடுத்திருந்தால், இன்னும் முழுமைபெற்ற ஆவணங்களைக் கொண்டவையாக அமைந்திருக்கும். அக்காலகட்டத்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலைப்பாடுகளை முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

சிங்காரவேலர், ஜீவா தொகுப்புகளுக்கு முன்னரே, *சரஸ்வதி* இதழ்களில் வெளியான தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளின் தொகுப்பு வெளிவந்துவிட்டது. 1950களின் இறுதியில் வ. விஜயபாஸ்கரனை ஆசிரியராகக் கொண்டு வெளியான இவ்விதழ், *'சரஸ்வதி காலம்'* என்று கூறத்தக்க அளவில் பெருமை கொண்டது. இதில், *நா.வா., ரகுநாதன், ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன், தி.க.சி.* போன்றோர் எழுதியிருந்தனர் என்பதும், அன்றைய இலக்கியப் போக்குகளை மாற்றியமைத்தது என்பதும் குறிக்கத்தக்கனவாகும். இந்தத் தொகுப்பு, *'சரஸ்வதி காலம்'* யாது என்பதை அடுத்த தலைமுறையினர் புரிந்துகொள்ளப் பேருதவியாக அமைந்துள்ளது.

சிங்காரவேலரோடும் ஜீவாவோடும் இப்பணிகள் நிறைவு பெற்றுவிடவில்லை. *சரஸ்வதியுடன்* இதழியல் பணிகளும் முடங்கிவிடவில்லை. ஆய்வுலகில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதுடன் நின்றுவிடாமல், தனக்குப் பின்னர் ஆய்வுத் தலைமுறையினர் பலரை உருவாக்கிச் சென்ற பேரா. நா. வானமாமலை எழுதிய அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும். இப்பணி தொடங்கப்பட்டுவிட்டது என்றாலும், கிடைக்கின்ற படைப்புகளை மட்டும் பதிப்பிப்பதுடன் நிறைவு கொண்டு நின்றுவிடக்கூடாது. கிடைக்காத வற்றையும் முனைப்புடன் தேடி எடுக்கவேண்டும். இத்தகைய கடமையும் பொறுப்பும், பதிப்பாளருக்கும் உள்ளது; பதிப்பாசிரியர்களுக்கும் உள்ளது. நா. வா. மாணவர்களுக்கும் இருக்கிறது.

நா.வா. குறித்த பதிவுகளில் மிகவும் இன்றியமையாதவை, அவர் பல நூல்களுக்குத் கொடுத்திருந்த அணிந்துரை, முன்னுரைகளும் பலருக்கு எழுதியிருந்த மடல்களும் ஆகும். ஒரு நூல் குறித்த அணிந்துரை, முன்னுரை என்ற எல்லைகளைத் தாண்டி, வளமிக்க இலக்கிய ஆய்வுரைகளாகவும் மதிப்பீடுகளாகவும் இவை அமைந்திருக்கின்றன. இதற்கெல்லாம் தெளிவான - விவரமான பட்டியல் யாரிடமும் இல்லை என்றே கூறலாம். இருப்பினும், உடன் இருந்த மாணவர்களும் தோழர்களும் இவற்றையும் மனத்தில் கொண்டு திரட்டவேண்டும்.

அப்போது தொலைபேசி அரிதாக இருந்ததால், பரவலாகப் பயன்படுத்த இயலாத நிலை இருந்தது. கைபேசிகளோ அறிமுகமே ஆகவில்லை. மடல் மட்டுமே தொடர்புக் கருவியாகவும் எளிதில் சென்றடையக்கூடியதாகவும் இருந்தது. இதனால், மூத்த ஆய்வறிஞர்கள், தோழர்கள், ஆய்வு மாணவர்கள் போன்ற பலருடன் மடல்வழித் தொடர்புகொள்வதை நா.வா. வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

பல வகைப்பட்ட - பல நிலைப்பட்ட பொருள்கள் குறித்த ஆழமான புலமைமிக்க கலந்துரையாடல்களை மடல்கள் வழியே நா.வா. நிகழ்த்தியிருக்கிறார். இதனால், வேறுபட்ட கருத்தோட்டங்களும் அவற்றில் பதிவு பெற்றிருக்கின்றன. அரசியல், தத்துவம், இலக்கியம் உள்ளிட்ட பல வினாக்களை, படிக்கும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட தோழர்கள் மடல்கள் வாயிலாகவே தொடுப்பார்கள். இவற்றுக்கெல்லாம், பொறுமையுடன் விரிவான மறுமடல்களை நா. வா. எழுதியுள்ளார்.

ஆய்வு மாணவர் பலருடன் நா.வா. கொண்டிருந்த மடல் தொடர்பும் இத்தகையதே. ஆய்வைத் தொடங்கியிருக்கும் மாணவர் சிலர், தகுந்த அடிப்படைப் புரிதலின்றி, மிகத்

தொடக்கநிலை வினாக்களைக் கேட்டு விளக்கங்களை எதிர்பார்ப்பார்கள். இவற்றுக்கும், விரிவான விளக்கங்களைக் கொடுக்க நா.வா. தயங்கியதில்லை. தலைப்புகளுக்கேற்ற வழிகாட்டுதலும் மடல்களிலேயே இடம் பெற்றிருக்கும். ஆய்வினை எப்படி அமைத்துக் கொள்ளவேண்டும், தொடர்பான நூல்களில் எவற்றையெல்லாம் படிக்கவேண்டும், அவற்றினை எவ்வாறு பொருள் கொள்ளவேண்டும், முடிவுகளைப் பெறுவது எப்படி என்பன போன்ற முழுமையான வழிகாட்டுதலை நா.வா. வழங்கியிருக்கிறார்.

நா.வா.வின் ஆய்வுக் கட்டுரைகளுக்கு இணையான சிறப்பை இத்தகைய மடல்கள் பெற்றிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், இத்தகைய மடல்களில் பல ஆய்வுக் கட்டுரைகளைப் போன்றே வடிவம் கொண்டிருந்தன.

இவை யாவும் முழுமையாகத் திரட்டப்பட்டால் தான், நா.வா. தொகுப்புகள் நிறைவு பெறும் என்பதை மனத்தில் இறுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழில் கலை, இலக்கியம் தொடர்பான மார்க்சிய ஆய்வுகளில் முன்னோடியாக விளங்கியதுடன், படைப்பிலக்கியத் துறைகளான சிறுகதை, புதினம், கவிதை போன்றவற்றிலும் சிறப்புடன் விளங்கியவர் ரகுநாதன். இவருடைய ஆக்கங்களும் தொகுக்கப் பெறவேண்டும்.

இதழ்கள் என்ற வகையில் ஆய்விதழான ஆராய்ச்சி, இலக்கிய இதழ்களான *சாந்தி* (ரகுநாதன்), *தாமரை*, *செம்மலர்*, தத்துவ இதழ்களான *மார்க்சிய ஒளி*, *மார்க்சிஸ்ட்*, அரசியல் இதழ்களான *ஜனசக்தி*, *தீக்கதிர்*, *சுதந்திரம்* (புதுவை; வ. சுப்பையா) *சாந்தி* (எஸ்.ஏ. முருகானந்தம்) ஆகியவற்றில் வெளியான படைப்புகள் அந்தந்தக் காலத்தின் வெளிப்பாடுகளாகும். மேலும் சேர்க்கவேண்டியன இருக்கலாம்.

குறிப்பாக, புதுவையின் விடுதலைப் போரைத் தலைமையேற்று நடத்திய வ. சுப்பையா அவர்களை ஆசிரியராகக் கொண்ட *சுதந்திரம்* இதழில் வெளியான படைப்புகள், விடுதலை இயக்கத்தின் மற்றொரு புறத்தைக் காட்டுவன. பிரெஞ்சு இந்திய விடுதலையின் அனைத்துப் போக்குகளையும் போராட்டங்களையும் பொதுவுடைமையினரின் முதன்மைப் பங்களிப்புகளையும் அதில் காணலாம். இவையன்றி, பொதுவுடைமைக் கட்சியினர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, புதுவை மாநிலத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அடிப்படைகளை அமைப்பதற்கு மேற்கொண்ட முனைப்புகளும் இவற்றுக்காக மக்களை நேர்படுத்து வதற்கான போராட்டங்களும் பதிவாகியுள்ளன. விடுதலை இயக்க அரசியல், சமூக சீர்திருத்தப் பரப்புரை, பொருளிய மேம்பாட்டுக்கான போராட்டம், பொதுவுடைமைக்கான அணி திரட்டல் என்ற நான்கு முனைகளிலும் பங்காற்றிய *சுதந்திரம்* இன்றும் தனது பணிகளைத் தொடர்கிறது.

இவை யாவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளைத் தொகுப்பது காலத்தின் வேண்டலாகும். நா.வா. நடத்திய *ஆராய்ச்சி* காலாண்டு ஆய்விதழில் வெளியான அனைத்துப் படைப்புகளையும் முழுமையாக அப்படியே வெளியிடுவது நல்லது.

இந்திய மொழிகளில் வெளிவந்த - வெளிவரும் நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் போன்ற அனைத்தையும் கொல்கொத்தாவில் உள்ள தேசிய நூலகத்தில் ஓரளவு முழுமையாகவும் முறையாகவும் போற்றிக் காத்துவருகிறார்கள். அங்கு கிடைக்கக் கூடிய மார்க்சிய - முற்போக்கு நோக்குடைய பருவ இதழ்கள் மற்றும் நூல்களைப் பட்டியலிட்டுக் கொண்டால், வேண்டியவாறு பொதுவுடைமை யாளரின் படைப்புகளையும் பருவ இதழ்களையும் எடுத்துக்கொள்ள இயலும்.

விடுதலைக்கு முன்னரும் பின்னரும் தமிழ்நாட்டின் சமூக-பொருளிய-பண்பாட்டு-அரசியல் களத்தில் பொதுவுடைமை இயக்கத்தினரின் பங்களிப்பு அளப்பறியதாகும். இவற்றை உரிய காலத்தில், உரிய கட்டத்தில் வெளிப்படுத்தாத பெரும் தவறு நிகழ்ந்திருக்கிறது. தவறு இன்னும் தொடர்வதாகவே தெரிகிறது. பங்களிப்புத் தொடர்பான ஆவணங்களை முழுமையாக வெளிப்படுத்தாமையும் இத்தகைய தவறுகளுக்கு அடிப்படையாகும்.

பொதுவுடைமையினரின் பங்களிப்புகளையும் பணிகளையும் ஆவணப்படுத்தும் செயல்பாடுகளின் ஒரு பகுதியாகவே இத்தகைய தொகுப்பு முயற்சிகள் பயன்படுகின்றன.

பிற்சேர்க்கை

முன்னரே பல முறை விரிவாகக் குறிப்பிட்டிருப்பது போன்று, இத்தகைய தொகுப்பு முயற்சிகளில், சோவியத் ஆட்சிக் காலத்தின்போது மாஸ்கோவிலிருந்து முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்ட மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் நூல்கள், சிறந்த - சீரிய எடுத்துக்காட்டுகளாகவும் வழிகாட்டுவனவாகவும் அமைந்துள்ளன. தமிழகச்

சூழலில் உள்ள நிலைமைகளையும் கணக்கில் கொண்டு, பதிப்பு முறைமைகளைச் சீராக்கிக்கொள்வதும் செழுமைப்படுத்திக்கொள்வதும் கடமையாகும்.

கீழ்க்கண்ட வழிமுறைகளைத் தொகுப்பு முயற்சிகளுக்கான அடிப்படைகளாக - அளவுகோல்களாக எடுத்துக்கொள்ளலாம்:

1. கிடைக்கின்ற படைப்புகளைக் கால நிரலை அடிப்படையாகக்கொண்டு பதிப்பித்தல்.

2. ஒவ்வொரு படைப்பின் நிறைவிலும், கட்டுரை முதலாவதாக வெளியான இதழ், ஆண்டு, திங்கள், நாள் போன்ற முழுமையான விவரங்களை ஏற்றவாறு பின்குறிப்பாக வழங்குதல். முதலாவதாக, நூல் வடிவில் வந்திருந்தால், பதிப்பு குறித்த விவரங்களை வழங்கலாம்.

3. வெளியான இதழ்; ஆண்டு போன்ற விவரங்கள் கிடைக்காவிட்டால், கட்டுரை எங்கிருந்து, எவ்வாறு எடுக்கப்பட்டது அல்லது யாரிடமிருந்து, எப்போது பெறப்பட்டது என்பன போன்ற விவரங்களைத் தருதல்.

4. படைப்பு ஏதேனும் ஒரு புனைப்பெயரில் எழுதப்பட்டிருந்தால், அது தொடர்பான தகவல்களையும் படைப்பின் பின்குறிப்பில் கொடுத்தல்.

5. படைப்பினை உருவாக்கிய அறிஞரது காலத்திலேயே, அந்தப் படைப்பு நூல் வடிவம் பெற்றிருந்தால், அது தொடர்பான விவரங்களையும் பின்குறிப்பில் சேர்த்தல்.

6. படைப்பாளரது வாழ்நாளில், ஓர் ஆக்கம் அல்லது நூல், ஒரு முறையோ பல முறைகளோ மீள்பதிப்புச் செய்யப்பட்டிருக்கலாம். அத்தகைய ஆக்கங்களைப் பொருத்தவரை, அவரது வாழ்நாளில் வெளியான அல்லது அவரால் செம்மைப்படுத்தப்பட்ட இறுதிநிலை வடிவத்தைத்தான் தொகுப்பில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

7. படைப்பாளர் ஒருவரது வாழ்நாளில், தனித்தோ தொகுதியாகவோ ஓர் ஆக்கம் நூல் வடிவம் பெற்றிருந்து, அதில் மாற்றம், திருத்தம், சேர்த்தல், நீக்கம் ஏதாவது செய்யப்பட்டிருந்தால், தொடர்பான விவரங்களைப் பின்குறிப்பில் இணைத்தல். ஒவ்வொரு திருத்தத்தையும் முழுமையாகத் தருவதற்கு இயலாவிட்டாலும், சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, சில வரிகள் அல்லது பத்திகள் சேர்க்கப்பட்டுள்ளன, நீக்கப்பட்டுள்ளன என்ற அளவிலாவது இருக்கவேண்டும்.

8. இத்தகைய நூலாக்கத்தின்போது, கொள்கை நிலை மாறுதல் எதையாவது படைப்பாளர் மேற்கொண்டிருந்தால், அது குறித்த விவரங்களைப் பின்குறிப்பில் தருவது நல்லது.

9. ஓர் இதழின் ஆசிரியராகவே படைப்பாளர் இருந்தால், ஒரே பெயரில் பல படைப்புகளை எழுதுதற்கு மாறாக, வெவ்வேறு புனைப்பெயர்களில் எழுதியிருக்க வாய்ப்புகள் மிகுதி. இந்த நிலையில், எழுதியது யார் என்பதைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுத்து முடிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

10. படைப்பாளர் ஒருவரது அச்சாகாத கையெழுத்துப் படி இருப்பின், அது அவரது கைப்பட எழுதப்பட்டிருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். படைப்பாளர் கூற வேறு ஒருவர் எழுதியதாகக் கூறப்பட்டால், அதனை ஒரு முறைக்குப் பல முறை வெவ்வேறு சான்றுகளுடன் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இது பற்றிய விவரங்களையும் பின்குறிப்பில் பதிவு செய்யவேண்டும்.

11. தலையங்கம் போன்ற பெயரில்லாத ஆக்கங் களைப் பொறுப்புடன் உறுதிசெய்துகொண்டு வகைப்படுத்த வேண்டும்.

12. கட்சி, இயக்க அறிக்கைகள், தீர்மானங்கள் போன்றவற்றின் முந்துபடியினை ஒரு தலைவர் எழுதியிருந்தார் என்பது வெளிப்படையாகவோ, தெளிவாகவோ அல்லது தகவலின் அடிப்படையிலோ தெரிந்தால், அவற்றையும் திரட்டவேண்டியிருக்கும்.

13. படைப்பாளர் ஒருவர் தனது நூலுக்கு அல்லது தொகுப்புக்கு முன்னுரை, பதிப்புரை என்று ஏதேனும் எழுதியிருந்தால், அது போன்றவையும் தொகுப்பில் இடம்பெறவேண்டும் என்பதைப் புறக்கணித்துவிடக்கூடாது.

14. பிறருடைய நூல்களுக்கு அணிந்துரை, முன்னுரை, மதிப்புரை என்று எழுதியிருந்தாலும் அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டும்.

15. எழுதப்படுவோரிடம் கருத்துக்களைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளும் போக்கில் பெரும்பாலான மடல்கள் அமைய வாய்ப்புகள் உள்ளதால், அவற்றை மிகச் சிறந்த ஆவணங்களாகவே கருதித் தொகுக்கவேண்டும்.

16. படைப்பாளர் தொடர்பாகக் கிடைக்கின்ற ஒளிப்படங்கள் அனைத்தையும் படைப்புகளின் ஒரு பகுதியாகவே எண்ணித் தேட வேண்டும்.

17. சொற்பொழிவுகளின் பதிவுகள் பலவாறு அமைந்திருக்கும். எழுதி வைத்துப் படித்தமை, பொழிவினை உள்ளது உள்ளவாறே வெளியிட்டமை, செய்தியாளர் மொழி நடையில் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு

எழுதப்பட்டவை என இவை அமையலாம். இவற்றுள் எதுவாக இருப்பினும், அந்த விவரத்தைப் பின்குறிப்பில் தெளிவாகக் கூறவேண்டும்.

18. இதழ்கள் அல்லது நூல்களில் வெளியான வடிவங்களில் எழுத்துப் பிழை, அச்சுப் பிழை போன்றவை இருக்க வாய்ப்புகள் உண்டு. பிழைகள் எவ்வாறு நேரிட்டிருக்கலாம் என்பதை மனத்தில் கொண்டு, தொகுப்புகளில் இடம்பெறும்போது, அவற்றை உரியவாறு திருத்திக்கொள்வது நல்லது.

19. தமிழ்ப் படைப்புகளில் வேறு சில சிக்கல்களும் எழுவது இயற்கை. குறிப்பாக, ஒற்றுப்பிழை மற்றும் ஒருமை-பன்மை மயக்கம் ஆகியன குறிக்கத்தக்கவை. எழுத்தச்சு முறையாக இருந்தாலும் கணினியின் ஒளியச்சு முறையாக இருந்தாலும், இத்தகைய தவறுகள் கோப்புச் செய்யப்படும் கட்டத்திலேயே எழுவதற்கு வாய்ப்புகள் மிகுதி என்பதைப் பட்டறிவாளர் அறிவர். படைப்புகளை உருவாக்கியோரின் இயல்பான நடை சிதைந்துவிடாமல் இருக்க வேண்டியதையும் கருத்தில் கொண்டு உரியவாறு செயல்பட வேண்டும்.

20. படைப்பாளர் தன் கைப்பட எழுதியனுப்பிய படைப்பில், கோப்பாளரும் பிழை திருத்துவோரும் சில எழுத்துக்களை அல்லது சொற்களைப் புரியாத மயக்கத்தில் தவறாகப் படித்து, அதற்கேற்ப அச்சிட்டுவிடுவர். பருவ இதழ்களில் வெளிவரும் படைப்புக்கள் பலவற்றைப் பிழை திருத்துதற்கான வாய்புகள், அவற்றை எழுதியோருக்குக் குறைவு என்பதால் இத்தகைய தவறுகள் நிகழ்ந்துவிடுகின்றன. இவற்றையும் உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும்.

21. படைப்பில் உள்ள சில சொற்கள் அல்லது வரிகள் கோப்புச் செய்யப்படும்போது விடுபடுதலும் உண்டு. இவ்வாறு விடுபட்ட சொற்கள் அல்லது வரிகளை உய்த்தறிந்து சேர்க்க இயலாது. எனவே, இவை குறித்து அடிக்குறிப்பில் கூறுவது நல்லது. இல்லையெனில், தொகுப்புகளது பதிப்பின் போதுதான் இத்தகைய தவறுகள் நிகழ்ந்துள்ள தெனப் படிப்போர் எண்ணவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

22. படைப்புகளை வெளியிட்ட பருவ இதழ்கள் மற்றும் நூலாக இருப்பின் அதனைப் பதிப்பித்தோர் பற்றிய அடிப்படையான விவரங்களைத் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும்.

23. படைப்பு அல்லது நூல் ஆகியவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெயர்கள், இயக்கங்கள், நிகழ்வுகள் போன்றவற்றைப் பற்றிய விவரக் குறிப்புகளையும் பின்னிணைப்பில் சேர்க்கலாம். ஏனெனில், முன்னைய காலத்தைப் பற்றிப் படிக்கும் புதிய தலைமுறையினர் பலருக்கு, அவற்றுள் பெரும்பாலானவை பற்றிக் கேள்விப்பட்டிருக்கக்கூட வாய்ப்புகள் குறைவு.

24. பல பத்தாண்டுகளுக்கு முன்னர் எழுதப் பெற்ற படைப்புகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அக்காலத்திய சில சொற்கள் பலருக்குப் புரியாமல் இருக்கலாம்.. அக்ராசனர், காரியதரிசி, சர்வகலாசாலை, உபஅத்யட்சகர் போன்ற வழக்கிழந்த முன்னைய சொற்களுக்கான தகுந்த மாற்றுச் சொற்கள், பின்னிணைப்பில் அல்லது உரிய இடங்களில் தரப்படலாம்.

25. தமிழில் பதிப்பு மரபுகளும் முறைமைகளும் இன்னும் முழுமையாக அறிமுகமாகவில்லை என்றே கூறலாம். பிற மொழிச் சொற்கள், பருவ இதழ்கள்-நூல்களின் பெயர்கள் போன்றவற்றை வேறுபடுத்திக் காட்டச் சாய்வெழுத்துக்களைப் பயன்படுத்தும் வழமை வரவில்லை. மாறாக, தடித்த எழுத்தக்களைச் சிலர் பயன்படுத்துகின்றனர். இதனைப் போன்று, எடுத்துக்காட்டுகள், பிறரது வரிகளின் மேற்கொள்கள், குறித்துக் காட்டும் சொற்கள் - சொற்றொடர்கள் போன்றவற்றுக்கு ஒற்றை அல்லது இரட்டைக் குறியீடுகளைப் பயன்கொள்வதும் முழுமையாகச் சீர்படவில்லை. இவையெல்லாம், படைப்பாளரைச் சார்ந்து மட்டுமே அமைவன அல்ல. படைப்பு அச்சாகும் கட்டத்தில், பதிப்பாளர் நிலையிலேயே செய்யப்படவேண்டிய பதிப்பு முறைமைகள். எனவே, தொகுப்பு முயற்சிகளை மேற்கொள்ளுபோது, சில பதிப்பு ஒழுங்குகளை உருவாக்கிக்கொள்ள மறந்துவிடக்கூடாது.

26. படைப்பாளர் தம் கைப்பட எழுதிய தாள்கள் அல்லது மடல்கள் ஏதாவது கிடைப்பின், அவற்றைப் படம் போன்று உள்ளவாறே வெளியிடலாம். படைப்புகளின் கையெழுத்துத் தாள்களைவிட, மடல்கள் கிடைக்க வாய்ப்புகள் மிகுதி.

27. படைப்பாளரது ஆக்கங்கள் முதலாவதாக வெளிவந்த இதழ்களின் பக்கங்கள், நூல்களின் அட்டை ஆகியவை கிடைத்தால், அவற்றில் ஒரு சிலவற்றையாவது பார்வைக்காக இணைக்கலாம்.

28. ஒரு படைப்பாளரின் ஆக்கங்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்டிருந்தால், முதல் தொகுதியிலும் நிறைவுத் தொகுதியிலும், அனைத்துத் தொகுதிகளுக்குமான எல்லாப் பொருளடக்க விவரங்களையும் தருவது நல்லது.

ஐந்து அல்லது ஆறு தொகுதிகளுக்குள் ஆக்கங்கள் அனைத்தும் அடங்கிவிடுமெனில், ஒவ்வொரு தொகுதியிலும், மற்ற தொகுதிகளுக்கான பொருளடக்க விவரங்களையும் சேர்க்கலாம்.

29. ஒரு படைப்பாளரின் ஆக்கங்கள், ஒன்றுக்கு மேற்பட்டுப் பல தொகுதிகளாக அமையுமெனில், ஒவ்வொரு தொகுதியிலும் தலைப்புப் பக்கம், பதிப்பு விவரப் பக்கம் போன்றவை இடம்பெற வேண்டும். முதல் தொகுதி அல்லாத பிற தொகுதி ஏதாவதொன்றை மட்டுமே ஒருவர் பார்க்க வாய்ப்புப் பெற்றால், அவருக்குப் பதிப்பு, வெளியான ஆண்டு போன்ற விவரங்கள் வேண்டியிருக்கலாம் - வேண்டியிருக்கும்.

30. பல தொகுப்புகளாக அமையும்போது, பக்க எண்கள் அடுத்தடுத்த தொகுதிகளில் தொடர்ச்சியாக இருக்கவேண்டியதில்லை. பக்க எண்கள் ஆயிரக் கணக்கில் நீண்டு செல்லும்போது சற்று நெருடலாகவே அமையும். படிக்கும்போது குறித்துக்கொள்வதிலும் தொல்லை மிகும். இதனால் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியே எண்களைத் தொடங்குவது சிறப்பாகும்.


31. தொகுப்பின் பக்கங்களைக் குறைக்கச் சிறிய எழுத்துக்களையும் பயன்படுத்தவேண்டியதில்லை; பக்கங்களை மிகுதிப்படுத்துப் பெரிய எழுத்துக்களும் வேண்டியதில்லை. ஏனெனில், தொகுப்புகள் யாவும் அகராதிகளும் அல்ல; சிறுவர் நூல்களும் அல்ல. படிக்கத்தக்க அளவிலான எழுத்தளவுகளே போதுமானவை.

32. தொகுப்பு நூல்களின் பக்கங்கள், அளவு ஆகியவை பயன்படுத்த ஏற்றதாக அமையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். ஆயிரக்கணக்கான பக்கங்களை ஒரே தொகுப்பில், ஒரே நூலாக அடக்க முயற்சிப்பதால், நூலின் கட்டு சிதைய வாய்ப்புகள் மிகுதி. கையில் வைத்துப் படிப்பதும் இடையூறாக அமையும். நூலின் அளவும் வழமையானதாகவே அமையவேண்டும். இல்லத்திலும் நூலகங்களிலும் பேழைகளில் இயல்பாகவும் எளிதாகவும் காக்கக்கூடியதாக நூலின் அளவு அமைதல் வரவேற்கத் தக்கது.


33. படைப்பாளர் ஒருவரது ஆக்கங்களை, நூற்றாண்டு விழா நடைபெறும்போதுதான் தொகுக்கவேண்டும் என்பதில்லை. மறைவுக்குப் பின்னர் கால இடைவெளி ஏற்பட்டால், பல விவரங்களும் குறிப்புகளும் கிடைக்காமல்போக வாய்ப்புகள் மிகுதி. படைப்பாளரது இல்லத்தினர் கூட இவற்றைப் பெரும்பாலும் பேணி வைக்க முடிவதில்லை. ஆனால், மறைந்தவுடன் தொகுக்க முற்படும்போது, அவருடன் பழகியோர் பலர் இருப்பர். ஆக்கங்கள் வெளியான இதழ்கள், நூல்களைப் பதிப்பித்தோர் போன்ற விவரங்களை அறிவதும் எளிதாக இருக்கும். படங்கள், மடல்கள் ஆகியனவும் கிடைக்கும். குறிக்கத் தக்க ஆக்கங்களை அளித்துள்ளோரது வாழ்நாளிலேயே, அவரது உதவியுடன் இப்பணிகளை மேற்கொள்ள முடிந்தால் மேலும் நல்லது.

இவை மட்டுமே முழுமையானவை அல்ல. மேலும், பதிப்பு தொடர்பான பிற நெறிமுறைகள் யாவற்றையும் கைக்கொண்டு ஒழுகுதல் செம்மையையும் செழுமையையும் தருவதாக அமையும்.

■







அண்ணா, கலைஞர், குத்தூசி குருசாமியார் தொகுப்புகள்

மு. சுதந்திரமுத்து

20ஆம் நூற்றாண்டுத் தமிழக மறுமலர்ச்சி உருவாக்கத்தில் திராவிட இயக்க எழுத்துகளுக்கும் பேச்சுகளுக்கும் அரசியல் கருத்தியலுக்கும் பெரும் பங்கு உண்டு. பகுத்தறிவும் தன்மானமும் தமிழரின் உந்து சக்தியாக ஆகும் வகையில் திராவிட இயக்கத்தினர் மேலைநாட்டுக் கருத்தியலாளர் களான இங்கர்சால், ரூசோ, ரசல், பெர்னார்ட்ஷா, வால்டேர் முதலானோரின் படைப்புகளைத் தமிழில் தந்தது முக்கிய அறிவுச் சூழலை உருவாக்கியது எனலாம். அவர்களின் மேடைப்பேச்சு, நாடகம், திரைப்படம், கவிதை, கட்டுரை, கடிதம், கதை ஆகிய படைப்புகளும் சட்டமன்ற உரைகளும் இதே கருத்தியலில் இயங்கின. இதிகாச புராணப் போலிமைகளை உரித்த பெரியாரின் சிந்தனைகள் தொடங்கி நிகழ்ந்த கருத்தியக்கம் படைப்புகள் வழி பதிவு பெற்றிருக்கிறது. உண்மையான விடுதலை என்பது காலங்காலமாக இருந்துவரும் அறியாமை, சாதி சமய உணர்வு, மூடநம்பிக்கை இவற்றிலிருந்து மக்களை விடுவிப்பதுதான் என்ற உணர்வின் அடிப்படையில் இப்படைப்புகள் இயங்கின. தமிழக மறுமலர்ச்சிக்குப் பணியாற்றிய திராவிட இயக்க முன்னோடிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, குத்தூசி குருசாமி ஆகியோர். இவர்களின் குறிப்

பிடத்தக்க படைப்புப் பதிவுகளின் தொகுப்புகள் வெளிவருகின்றன.

இவர்கள் பழந்தமிழ் நெறியில் தமிழகத்தை வழிநடத்தும் நோக்கத்தோடு பழைய இலக்கியங் களை மக்களுக்கு அறிமுகப்படுத் தினார்கள். ஒவ்வாத சமயச் சடங்குகள், மூடநம்பிக்கைகள், வருணப்பாகுபாடு ஆகியவற்றைச் சாடினார்கள். முன்னோடியான அண்ணா, ‘பழமை புதுமை என்ற இரு சக்திகளுக்கும் போர் நடக்கிறது. எழுத்தாளர்களின் பேனா முனைகளே அப்போரில் உபயோகமாகும் போர்க்கருவிகள்’ என்று குறிப்பிட்டிருப்பது இப்படைப்புகளுக்கு மிகவும் பொருந்தும். இவ்வகையில் இம்மூவர் தொகுப்புகள் முதன்மை பெறுகின்றன.

அண்ணா

மாணவப்பருவத்திலிருந்தே படைப்பாளராகவும் சிந்தனையாள ராகவும் அரசியல் கருத்திய லாளராகவும் திகழ்ந்தவர் அண்ணா. இளம் வயதிலேயே (1931) தமிழரசு வார ஏட்டில் எழுதியவர் அண்ணா. அவ்வயதிலேயே பாலபாரதி, நவயுகம் போன்ற ஏடுகளின் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய ஏடுகளில் துணையா சிரியராகவும் பணியாற்றினார். மாலைமணி, நம்நாடு, திராவிடநாடு, காஞ்சி, Home land முதலான ஏடுகளிலும் ஆசிரியராகத் திகழ்ந்தார். சிறுகதைகள், குறும் புதினங்கள், புதினங்கள், கவிதைகள், ஓரங்க நாடகங்கள், நாடகங்கள், திரைப்பட உரையாடல்கள், கடிதங்கள், தலையங்கங்கள், மொழிபெயர்ப்பு என அவருடைய படைப்புப் பரப்பு மிக விரிவானது. சிறந்த மேடைச் சொற்பொழிவாளராகத் திகழ்ந்த அவருடைய பேச்சுகளின் பதிவு மிகுதி. சட்டமன்ற உறுப்பினராகவும் மாநிலங்களவை உறுப்பினராகவும் தமிழக முதல்வராகவும் திகழ்ந்த அவருடைய உரைகளும் குறிப்பிடத்தக்க பதிவைக் கொண்டவை.

35 ஆண்டுகள் இவர் படைத்தவை சிறு நூல்களாகப் பல்வேறு பதிப்பகங்களாலும் கட்சி அமைப்புகளாலும் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வப்போது படைப்புகள் தொகுப்புகளாகவும் வெளிவருகின்றன. அண்ணாவின் படைப்புகள் 1995-ஆம் ஆண்டு (அவர் மறைந்து 25 ஆண்டு களுக்குப் பின்) நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அதன் பின்னர் பல பதிப்பகங்கள் அண்ணாவின் படைப்புகளைப் பல தலைப்புகளில் பலவிதமாகப் பிரித்து வெளியிட்டு வணிக வெற்றி அடைந்து வருகின்றன.

அண்ணாவின் பேச்சுத் தொகுப்புகள் மிகுதியாக வந்துள்ளன. அவரது பேச்சுகள் சுவையான பகுதிகளின் தொகுப்புகள் குறிப்பிட்ட வகைப்பாடு களில் அமைந்த தொகுப்புகள், பெருந்தொகுப்புகள் என வெளியிடப் பெற்றுள்ளன. சுவையான சிறு தொகுப்புகள் சொற்செல்வம், தேன்துளிகள், சிந்தனைவிருந்து, முத்துக்குவியல், அறிவுரைகள், உண்மைகள், மேம்படுத்தும் எண்ணங்கள், ஆலோசனைகள், சொல்லோவியம், பொன் மொழிகள், கருத்துப்பிழை, அமுதமொழிகள் என்ற தலைப்புகளில் வந்துள்ளன. இவை மேடைப் பேச்சாளர்களுக்கும் மேற்கோள் விரும்பிகளுக்கும், எளிய வாசிப்பை நாடுபவர்களுக்கும், பொது மக்களுக்கும் உதவக்கூடியவை. ஆய்விற்கு இவை பயன்படப் போவதில்லை.

அண்ணாவின் பேச்சுகளை வகைவகையாகத் தொகுத்த நூல்கள் வந்துள்ளன. மறுமலர்ச்சிச் சொற்பொழிவுகள், மேதின விழாச் சொற்பொழிவுகள், தலைசிறந்த சொற்பொழிவுகள், தலைமை உரைகள் எனத் தலைப்பிடப்பட்டு அவை தொகுக்கப் பட்டுள்ளன. பட்டமளிப்பு விழா உரைகள், அண்ணாமலைப் பேருரை, Yale University Speeches எனப் பல்கலைக்கழகங்களில் ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. பாட்டாளி பற்றி அண்ணா, மாணவர்கள் பற்றி அண்ணா மணமக்களுக்கு உறுதிப்பாடு என்று குறிப்பிட்ட பிரிவினர் குறித்த தொகுப்புகள் வந்துள்ளன. வானொலிப் பேச்சு தனியாக வெளியிடப்பட்டுள்ளது.

அண்ணாவின் பேச்சுகளின் பெருந்தொகுப்பு களை சாந்தி நிலையம், பூம்புகார் பதிப்பகம், பாரதி பதிப்பகம், ஆகியன வெளியிட்டுள்ளன. தமிழ் அரசி பதிப்பகம் அண்ணாவின் பேருரைகள் என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளை



மு. சுதந்திரமுத்து: தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது அண்ணா நூற்றாண்டு நூலக ஆலோசகராக உள்ளார்.

இவரின் நூல்கள்: ‘தமிழ் புதுக்கவிதைகளில் படிமம்’, ‘படைப்புக்கலை’, ‘தானாய் எல்லாம் மாறும் என்பது பழையபொய்யடா’.

வெளியிட்டுள்ளது. அண்ணாவின் மேடைப் பேச்சுக் குறித்த ஆய்வுகளில் பல கருத்துத் தொகுப்புகள் உள்ளன.

1957 முதல் சட்டமன்ற உறுப்பினராகவும் மாநிலங்களவை உறுப்பினராகவும். முதல்வராகவும் இருந்த அண்ணாவின் சட்டமன்ற மாநிலங்களவை உரைகள் பல வகைகளில் தொகுக்கப்பட்டுள்ளன. சட்டசபைச் சொற்பொழிவுகள் (திராவிடப் பண்ணை) முதல்வர் அண்ணா சட்டமன்ற உரைகள் (பூம்புகார்), சட்டமன்றத்தில் அண்ணா (மணிவாசகர்), சட்டமன்றச் சொற்பொழிவுகள் 1-2 (பாரதிபதிப்பகம், மணிவாசகர்) இராஜ்யசபையில் அண்ணா (பாரதி பதிப்பகம்), Anna speaks Rajyasabha, ராஜ்யசபையில் இனமுழக்கம் (சந்தியா) என்பன அத்தொகுப்புக்கள். சட்டமன்ற உரைகள் குறித்த ஆய்விலும் கருத்துத் தொகுப்புகள் உள்ளன.

அண்ணாவின் எழுத்துலகப்பயணம் கட்டுரையில்தான் தொடங்கியது. பல ஏடுகளில் ஆசிரியராகப் பணியாற்றிய அண்ணாவின் கட்டுரைப் படைப்புகள் மிகுதி. அண்ணா எழுதியவை 1620 கட்டுரைகள் என்று அண்ணா பரிமளம் குறிப்பிட்டிருக்கிறார். தலையங்கங்களும் கட்டுரைகளாகக் கொள்ளப்பட்டு வெளியிடப் படுகின்றன. அண்ணா கட்டுரைகளிலிருந்து குறிப்பிட்ட செய்திகளைத் தொகுத்துப் புதுவாழ்வுச் சிந்தனைகள், கருத்துப்பேழை, தத்துவங்கள், கற்பனைச் சித்திரங்கள், சிந்தனைச்செல்வம், கதம்பம், நகைச்சுவை நவமணிகள் என்று வெளியிட்டுள்ளனர். குறிப்பிட்ட வகைச் செய்திகளை உள்ளடக்கிய கட்டுரைகளைப் புத்தகங்கள், இலக்கியச் சோலை, வரலாற்று ஓவியங்கள், சிறை நினைவுகள், கல்விச்சிந்தனைகள் பயண இலக்கியம் என வெளியிட்டுள்ளனர். அண்ணாவைக் காணும் மனிதர்கள் குறித்த பதிவுகளைப் பெருமக்கள், மாமனிதர்கள், இந்திய விடுதலைத் தலைவர்கள், தமிழக விடுதலைத் தலைவர்கள் என்று வெளியிட்டிருக்கிறார்கள்.

அண்ணாவின் கட்டுரைகளின் பெருந்தொகுப்பாக 116 கட்டுரைகளை இரு தொகுதிகளாகப் பூம்புகார் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. 1938-48 காலப்பகுதியில் கட்டுரைகளைக் கௌமாரி எண்டர்பிரைசஸ் வெளியிட்டுள்ளது. அண்ணாவின் கட்டுரை 1-2 எனச் சோலைப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அண்ணாவின் கட்டுரை பல வகையாகப் பிரித்து அறிவூட்டும் கட்டுரைகள் 1-3, உள்ளம் மகிழ்ந்த நிகழ்ச்சிகள் 1-2, உள்ளம் வருந்திய நிகழ்ச்சிகள் 1-3, மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் 1-2 என ஏதோ ஒரு வகையில் வெளியிட்டுள்ளது. பாண்டியன் பாசறை அண்ணாவின் கருத்துக்களஞ்சியம் என்ற தலைப்பில் நான்கு தொகுப்புகளை வெளியிட்டுள்ளது. பெருந்தொகுப்புகள் பெரும்பாலும் அண்ணா படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர் உருவானவை.

1934 முதல் 1966 வரை அண்ணா படைத்த சிறுகதைகள் சிறுசிறு தொகுப்புகளாகவும் பெருந்தொகுப்புகளாகவும் வெளிவந்துள்ளன. பாரதி பதிப்பம், திராவிடப்பண்ணை, பாலாஜி பதிப்பகம், கௌரா ஏஜென்சீஸ் ஆகியன சிறு தொகுப்புகளை வெளியிட்டுள்ளன. பரிமளம் பதிப்பகம் சார்பில் 1969-இல் பெருந்தொகுப்பு வந்தது. தொடர்ந்து மணிவாசகர் பதிப்பகம், தமிழ்மண் பதிப்பகம், பூம்புகார் பதிப்பகம் ஆகியன பெருந்தொகுப்புகளை வெளியிட்டுள்ளன. பூம்புகார் பதிப்பகம் கால வரிசைப்படி 108 கதைகளைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளது. சிறுகதை குறித்த ஆய்வும் உள்ளது.

அண்ணா நாடக ஆசிரியராகவும் நடிகராகவும் திகழ்ந்தவர். அண்ணாவின் நாடகம் குறித்த ஆய்வும் உள்ளது. அண்ணாவின் நாடகங்களையும் ஓரங்க நாடகங்களையும். பூம்புகார் பதிப்பகம் 2 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. தமிழ் நிலையம் 2008-இல் பெருந்தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளது. திரைப்பட உரையாடல் தொகுப்பு இல்லை. அண்ணா அப்போது எழுதிய 76 கவிதைகள் பூம்புகார் பதிப்பகத்தால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. அண்ணா கவிஞர் என்ற வகையில் அறியப்படாமலேயே இருக்கிறார். அண்ணாவின் பொங்கல் வாழ்த்தையும் பூம்புகார் வெளியிட்டுள்ளது. அண்ணாவின் பேட்டிகள் தொகுப்பாக வந்துள்ளன.

அண்ணா இயக்கத்தவருக்காக காஞ்சி, திராவிடநாடு ஏடுகளில் எழுதிய 'தம்பிக்குக் கடிதங்கள்' என்ற கடித இலக்கியங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. இதுவரை 30க்கும் மேற்பட்ட தொகுப்புகள் உள்ளன. பூம்புகார் பதிப்பகம் காஞ்சி ஏட்டில் வந்த கடிதங்களை 9 தொகுதிகளாகவும் திராவிடநாடு ஏட்டில் வந்த கடிதங்களை 7 தொகுதிகளாகவும் வெளியிட்டுள்ளது. பாரிநிலையம் 21 தொகுதிகளை வெளியிட்டுள்ளது. தமிழ் அரசி பதிப்பகம் பெருந்தொகுப்பாக 2 தொகுதிகளை வெளியிட்டுள்ளது.

கலைஞர்

கலைஞர் மு. கருணாநிதி மாணவப் பருவத்திலேயே படைப்பிலக்கிய ஆர்வம் கொண்டு மாணவர் சங்கம், தமிழ்மாணவர் சங்கம் ஆகிய அமைப்புகளின் வழி படைப்புப் பயிற்சியையும் பகிர்வையும் மேற்கொண்டார். திராவிடர் கழகக்

கொடியைக் குருதியால் வண்ணப்படுத்தித் தன் தீவிரப்பற்றைக் காட்டித் தொடர்ந்து இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் என்ற வகையில் நாடகங்கள், திரைப்படங்கள், சிறுகதைகள், புதினங்கள், கவிதை, பேச்சு எனத் தன் படைப்புப் பயணத்தை மேற்கொண்டவர் கலைஞர். கடிதங்கள் வாயிலாக அவர் பரப்பிய கருத்துகள் பல. தமிழ் இலக்கிய ஆய்வுகளோடு இலக்கிய உரைகளும் படைத்துள்ளார். இதனால் கவிஞராகவும் முத்தமிழ் அறிஞராகவும் அறியப்பட்டிருக்கிறார். 1957 முதல் 11 முறை சட்ட மன்ற உறுப்பினராகவும் 1969 முதல் தி.மு.க. தலைவராகவும் ஒரு முறை மேலவை உறுப்பினராகவும் 5 முறை முதல்வராகவும் இருந்து ஆற்றிய சட்டமன்றப் பதிவுகள் பெரும்பரப்புடையவை.

கலைஞரின் மேடைப் பதிவுகள் நிறைய இருப்பினும் அவை அனைத்தும் தொகுக்கப் படவில்லை. பேச்சின் பகுதிகள் கருத்துரை, சொல்நயம், உவமைநயம், சிந்தனைச்சிதறல்கள், நகைச்சுவை, முதுமொழிகள், சின்னச் சின்ன மலர்கள், குட்டிக்கதைகள், பல்சுவைகள் என்ற தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வகைப்பாடாக மணமக்களுக்குக் கலைஞர் வாழ்த்து, அறிவியலில் கலைஞர் கருத்துகள் எனவும் தொகுக்கப்பட்டுள்ளன.

இதற்கு மாறாகச் சட்டமன்ற உரைகள் நிறையத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கலைஞரின் சட்டமன்ற உரைகளைப் பல வகைகளாகப் பிரித்துப் பூம்புகார் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. காவல்துறை பற்றி, ஆளுநர் உரைமீது (6 தொகுதிகள்), நிதிநிலை அறிக்கை மீது (2 தொகுதிகள்), தகவல் அறிக்கைகள் விளக்கங்கள் மீது (8 தொகுதிகள்), மானியம் துணைமானியம் நிதி ஒதுக்கீடுகள் மீது, ஒத்திவைப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மீது, அரசு தீர்மானம் முடிவுகள் மீது என்று பலவிதமாக வெளியிடப்பட்டுள்ளன. சட்டமன்றத்தில் கேள்விகள் பதில்கள் ஆகியவற்றில் கலைஞர் ஆற்றல் படைத்தவர் என்ற வகையில் அவரது சட்டமன்ற விவாதங்கள் 'தொகுத்த கணைகள்', 'துள்ளி வரும் வேலாக அள்ளிவரும் பதில்கள்' எனத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கலைஞரின் சிறுகதைப் படைப்புகள் மிகுதியாக இல்லை. கலைஞரின் சிறுகதைகள் எனப் பாரதி பதிப்பகம் தொகுத்ததும், 16 கதைகளிலே என்று திருமகள் பதிப்பகம் வெளியிட்டதும் தொகுப்புகள் என வந்துள்ளன.

கலைஞர் கவிஞர் என்ற நிலையில் படைத்தவை மிகுதி. கவி அரங்கிலும் ஏடுகளிலும் தொடர்ந்து நிறைய எழுதிவருகிறார். அன்றாட நிகழ்வுகள் குறித்த கவிதைப்பதிவுகள் நிறைய உண்டு. கவியரங்கில் கவிஞர், மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று எனவும் கவியரங்கக் கவிதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. காலப்பேழையும் கவிதைச்சாவியும், கலைஞரின் கவிதை மழை, கலைஞரின் கவிதைகள் என்ற தலைப்புகளில் தமிழ்க்கனி பதிப்பகம் தொகுப்புகளை வெளியிட்டுள்ளது. பாரதி பதிப்பகமும் 'கலைஞரின் கவிதைகள்' என்ற தொகுப்பை வெளியிட்டுள்ளது. ஒலிநாடாக்களிலும் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஆயினும் முழுமையான பதிவு இல்லை.

கலைஞர் எழுதிய கடிதங்கள் 'சேது சமுத்திரம் முரசொலி கடிதங்கள்' 'கடிதங்கள் கடிதங்கள் கண்ணீர்க் கடிதங்கள்', 'கண்ணீர்க் கடிதங்கள்' என்ற தலைப்பில் இயக்க அமைப்புகளால் வெளியிடப்பட்டுள்ளன. கலைஞர்கடிதம் என அஞ்சு அச்சகம் தொகுத்துள்ளது. கலைஞரின் கடிதம் (10 தொகுதிகள்) எனப் பெருந்தொகுப்பை அபிராமி நிலையம் வெளியிட்டுள்ளது.

குத்தூசி குருசாமி

குத்தூசி குருசாமி திராவிட இயக்கக் கொள்கை விரிவுரையாளர் எனப் போற்றப்பட்டவர். 'குத்தூசி விடுதலையில் வெளிவருவது நின்று விடுமானால் விடுதலைப்பத்திரிகை அலட்சியப்படுத்தப் பட்டுவிடும்' என்று தந்தை பெரியார் குறிப்பிடுமளவு அவருடைய கட்டுரைகள் ஆற்றல் மிக்கவை. ஆயினும் அவரது கட்டுரைகளில் குத்தூசி என்ற பெயரில் எழுதியவையே அறியப்பட்டிருக்கின்றன. 1948-இல் அவருடைய கட்டுரைத் தொகுப்பு ஒன்று வெளிவந்தது. சிங்கப்பூர் தமிழ் முரசு ஏட்டின் ஆசிரியர் சாரங்கபாணி 1946-53 காலப்பகுதிக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டார். நாத்திகம் ராமசாமி 184 கட்டுரைகளை மீண்டும் வெளியிட்டார். முழுதாக அவர் படைப்புகள் தொகுக்கப்பட வேண்டும்

தொகுப்பு நிலை

நமக்கு மிகப்பெரிய தொகுப்புப் பாரம்பரியம் உண்டு. அடியளவாக வகைப்படுத்திக் குறிப்புரைகள் எழுதித் தொகை பாட்டு என்றெல்லாம் பகுத்துப் பெயரிட்டுத் தொகுத்த தொகுத்தவர் தொகுப் பித்தவர் வழி வந்தவர்கள் நாம். சமய இலக்கியங் களிலும் அந்தத் தொகுப்புத் தொடர்ச்சி இருந்தது. இன்றைய எழுத்தாளர்களின் படைப்புத் தொகுப்புகள் குறித்த அக்கறை அண்மைக் காலத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. ஜீவா, பெரியார் தொகுப்புகள் இப்போதுதான் அக்கறை பெற்றிருக்கின்றன. கவிஞர்கள் தொகுப்புகளில் பாரதி பெற்ற வாய்ப்பைப் பாரதிதாசன் பெறவில்லை. பாரதிக்குக்கூட அவரது நூற்றாண்டில் கவிதை

கதை கட்டுரை என மூன்றாகத் தொகுத்து வெளியிடத் திட்டமிடப்பட்டுக் கவிதை ஆய்வுப் பதிப்பு மட்டுமே வந்துள்ளது. பாரதிதாசனுக்கு அவருடைய நூல்கள் அனைத்தையும் ஒருசேரச் சேர்த்துக் கல்லாடன் வெளியிட்ட தொகுப்பைத் தவிர முறையான தொகுப்பு இல்லை.

அண்ணா, கலைஞர், குத்தூசியார் ஆகியோருக்கு கட்சிசார் வாசகர் வட்டம் உண்டு என்ற வகையில் மட்டுமே அவ்வப்போது வணிக நோக்கில் தொகுப்புகள் வந்துள்ளன. முறையான தொகுப்புகள் இல்லை. 'கலைஞரின் களஞ்சியம்' தொகுக்கப் போவதாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஒரு துறையை உருவாக்கியது. ஆனால் இதுவரை அப்பணியில் எந்தவித விளைவும் இல்லை. (பாரதிதாசன் இருக்கையின் பாரதிதாசனின் முழுத்தொகுப்பும் இத்தகையதுதான்) அண்ணா படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பின்பு பல பதிப்பகங்களால் முறையின்றித் தலைப்பிடப்பட்டுத் தொகுக்கப்படுவதுதான் காணப்படுகிறது. பதிப்பகங்கள் தொகுப்புகளை மிகக் கவனத்தோடும் ஆய்வுநோக்கோடும் வெளியிட வேண்டிய தேவை இருக்கிறது என்பதையே இத்தொகுப்புகள் உணர்த்துகின்றன.

தொகுப்புமுறை

காலவரிசையில் தொகுப்பது, உள்ளடக்க அடிப்படையில் தொகுப்பது என இரு முறைகள் உள்ளன. பாரதிக்கு இருவகைத் தொகுப்புகளும் செய்யப்பட்டிருக்கின்றன. காலவரிசையில் தொகுப்பது சீனி. விசுவநாதனால் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்ட கவிதை ஆய்வுப் பதிப்பிலும் சீனி. விசுவாதன் காலவரிசையையே பின்பற்றினார். இப்போது அவரே அனைத்துப் படைப்புகளையும் காலவரிசையில் 10 தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். அண்ணாவின் கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள் ஆகியவற்றைப் பூம்புகார் பதிப்பகம் காலவரிசையில் வெளியிட்டுள்ளது. குத்தூசியார் கட்டுரைகள் காலவரிசையில் தரப்பட்டுள்ளன. கலைஞர் படைப்புகள் அவ்வாறு தொகுக்கப் படவில்லை. காலவரிசைத் தொகுப்பு மூலம் படைப்பாளியின் கருத்துவளர்ச்சியை உணரமுடியும் என்ற ஒரு பயன் மட்டுமே உண்டு. பிறவகைகளில் ஆய்விற்கு இம்முறை உதவாது. இதைக் கருத்தில் கொண்டு தொகுப்பு செய்யப்படவேண்டும்.

அண்ணா, கலைஞர், குத்தூசியார் முதலான அரசியல்வாதிகள் குறிப்பிட்ட கருத்தியலில் இயங்கியவர்கள். கருத்தியல் ரீதியாகத் தொகுத்தலே சரியானதாக இருக்கும். பெண் விடுதலை, சமய மறுப்பு, சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, அறியாமையைக் கண்டித்தல். சமுகத்தின் போலித் தன்மையைச் சாடுதல். பொருளியல் ஏற்றத்தாழ்வின் கேடு, மக்களாட்சியின் நன்மை, மொழிப்பற்றின் தேவை, சமுதாய நலன் பேணல், இலக்கியம் போற்றல், மாமனிதரைப் போற்றல் என்ற வகையில் மறுமலர்ச்சியூட்டும் கருத்தியல்களைக் கொண்டுள்ள இவர்கள் படைப்புகளை இவ்வகையில் தொகுத்தலே முறையானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

தொகுப்புகளை உருவாக்குகையில் படைப்புகள் ஆசிரியருடையவைதானா என்று ஆய்ந்து தொகுக்க வேண்டும். பாரதிதாசன் கிறுக்கன் என்ற பெயரில் எழுதிய 'பரமண்டலத்திலிருக்கும் பரமசிவனுக்குக் கடிதம்' என்ற படைப்பு குத்தூசி குருசாமியின் படைப்பாக வெளியிடப்பட்டது. ஆதிமூர்த்தி என்பவர் லோகோபகாரி என்ற ஏட்டில் எழுதிய 'லெனினுக்கு அஞ்சலி' கவிதை பாரதிதாசனின் 'புகழ் மலர்கள்' தொகுப்பில் சேர்க்கப்பட்டது. திராவிட நாடு ஏட்டில் அரங்கண்ணல் பெயரின்றி எழுதிய கட்டுரை அண்ணா படைப்பில் சேர்க்கப்பட்டது. இதுபோன்ற தவறுகளை நீக்கும் ஆய்வுநோக்கம் தொகுப்பில் வேண்டும்.


அனைத்துப் படைப்புகளையும் தேடித் தொகுத்து வெளியிடவேண்டும் பாரதி படைப்புகள் கிடைக்காதவை உள. தமிழ்ப்பல்கலை வெளியீட்டில் கூடப் புதிய கவிதை சேர்க்கப்பட்டது. அண்ணாவின் கட்டுரைகள் மிகுதி. ஆனால் வெளியானவை குறைவு. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசனின் நமது புதிய கவிதைகளைக் கண்டு 'பழம்புதுப்பாடல்கள்' என வெளியிட்டிருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

படைப்புகளின் சரியான வடிவம் கண்டறியப் பட்டு வெளியிடப்பட வேண்டும்.

ஆராய்ச்சிகள் இன்று மிகுதியாகி வருகின்றன. ஆனால் அவை துல்லியமாகவும் முறையாகவும் அமையத் துணையாகும் தொகுப்புகள் இல்லை. நம்பகத்தன்மை மாறாமல் தொகுக்க வேண்டும். ஆசிரியர் 'முன்னுரை' பழைய பதிப்பாசிரியர் குறிப்பு, பழையநூலின் வடிவம், கையெழுத்துப்படி இருப்பின் அவற்றின் நகல், ஆய்வுக் குறிப்புரைகள் எனத் தொகுப்பில் இடம்பெறச் செய்யவேண்டும். படைப்புகளின் காலப்பதிவும் வெளியீட்டு விவரமும் வேண்டும்.

கருத்துநிலை வளர்ச்சியையும் படைப்பாளியின் திறனையும் படைப்பின் பயனையும் புலப்படுத்தும் ஆய்வுப் பதிப்புகளாகத் தொகுப்புகள் அமைய வேண்டும்.

■



நாட்டார் வழக்காற்றுத் தொகுப்புகள்



வாய்மொழிக் கதைகளின் வாய்மொழி வரலாறு

கழனியூரன்

சைகை மொழியில் இருந்து தொடங்குகிறது சொல் கதைகளின் வரலாறு. மானுடத்தின் மூத்த மொழியாம் சைகை மொழியிலேயே கதைகள் உள்ளன.

வாய்பேச முடியாத மாற்றுத் திறனாளி ஒருவர் சொன்ன சைகைமொழிக் கதை ஒன்றை அண்மையில் கி. ராஜநாராயணன் அவர்கள் ஒரு வலைத்தளத்தில் காட்சி ரூபமாகப் பதிவு செய்துள்ளார். அந்தக் கதையின் பெயர் "ஊமை சாட்சி சொன்ன கதை" என்பதாகும்.

மானுடவியல் ஆய்வில் மிக முக்கியமானது. "மனிதன் தன்னுடைய உணர்ச்சிகளைப் பிறர்க்கு உணர்த்த என்னென்ன வழிமுறைகளைக் கையாண்டான்" என்பது.

ஒரு மனிதன் தான் நினைத்த கருத்தை மற்றொரு மனிதனுக்கு உணர்த்த முயலும் போது மொழி பிறந்து விடுகிறது. அக்கருத்தைச் சுவாரஸ்ய மாக உணர்த்த முயலும் போது 'கதை' பிறந்து விடுகிறது. சைகை மொழி பேசிய மனிதர்களின் நெஞ்சுக் கூட்டுக்குள்ளும் சொல்கதைகள் சிறைபட்டுக் கிடந்திருக்கலாம்.

சொல்கதை வரலாறு என்பது மானுட வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். உலகில் எந்த மூலையில் மனிதர்கள் வசித்தார்களோ அங்கெல்லாம் கதைகளும் அவர்களுடன் வசித்தன. பேச்சுமொழி வழக்கில் இருந்த காலத்தில் இருந்து 'சொல்கதை'களும் படைக்கப்பட்டன. பேச்சு மொழி வழக்கில் இருந்த காலத்தில் சொல் கதைகள் பரவத் தொடங்கின. எனவே நாட்டார் கதைகளின் வரலாறு என்பது மிகப் பழமையான தாகும். இவை எக்காலத்தில் பிறந்தன என்பதைக் கணக்கிட்டுக் கூறுவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

யுக, யுகமாகச் சொல்லப்பட்டும் கேட்கப்பட்டும் வந்த கதைகள் நாளாக நாளாக மெருகு கூடி ஒரு நிலைத்த வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆற்றுப்படுகைகளில் கிடக்கும் கரடு முரடான கற்கள், காலங்காலமாக நீரால் அடித்துச் செல்லப் பட்டு வெகுகாலத்திற்குப் பிறகு அதில் ஒருவித பளபளப்புத்தன்மை ஏறுவதைப் போல சொல் கதைகளும், ஒரு கால கட்டத்தில் முழுமையான வடிவம் பெறுகின்றன.

இன்றைக்கு நமக்கு கிடைத்திருக்கின்ற இதிகாசங்களும், காவியங்களும் ஒரு காலத்தில் மக்களின் நாவில் வாய்மொழிக் கதைகளாக உலவியவைகள்தான்.

பல்வேறுபட்ட உதிரிப்பாகங்கள் ஒரு தொழில் நுட்ப அறிவுடன் ஒன்று சேர்க்கப்படும் போது அது ஒரு கருவியாகவோ அல்லது வாகனமாகவோ மாறுகிறது. பல்வேறுபட்ட நாட்டார் கதைகளின் தொகுப்புதான் நமக்கு இன்றைக்குக் கிடைத்திருக் கின்ற மகா காவியங்களும், இதிகாசங்களும்.

மாகாபாரதத்தில் உள்ள கிளைக்கதைகளை ஆய்வு செய்தால் நான் மேலே சொன்ன உண்மையை உணரலாம் மகாபாரதத்தில் உள்ள கிளைக்கதைகளை மட்டும் தனியே தொகுத்தால் அது வேறொரு மாதிரியான பிரதியாகத் திகழும்.

இன்றைக்கு நமக்கு எழுத்து மொழியில் கிடைத்திருக்கின்ற மகாபாரதக் கதைகளில் உள்ள கிளைக் கதைகளைத் தவிர வேறுசில கதைகளும் வாய்மொழிக் கதைகளாகப் பாமர மக்களால் இன்றும் சொல்லப்படுகின்றன. எனது சேகரிப்பிலேயே அத்தகைய கதைகள் உள்ளன.

குறிப்பாக கர்ணன் என்ற பாத்திரப் படைப்பிற்கு வலுசேர்ப்பதைப் போன்று சில நாட்டுப் புறக்கதைகள் கதைசொல்லிகளால் சொல்லப் படுகின்றன. ராமாயணத்தைச் சுற்றியும் பல்வேறு நாட்டார் கதைகள் புழக்கத்தில் உள்ளன. குறிப்பாகச் சீதையை மையமாகக் கொண்டு, பல்வேறு நாட்டார் கதைகள் உலவுகின்றன.

பிற்காலத்தில் படைக்கப்பட்ட சிலப்பதிகாரமும், ஒருகாலத்தில் வாய்மொழிக் கதையாக மக்களின்

நாவுகளில் உலவிய கதைதான் என்பதை அக்காவியத்தைப் படைத்த இளங்கோவடிகளே கூறுகின்றார். தமிழில் மட்டுமல்ல, உலகத்தில் எத்தனை மொழிகள் உண்டோ அனைத்திலும் தோன்றிய காவியங்கள் யாவும் ஒரு காலத்தில் வாய்மொழிக் கதைகளாக உலவியவைகள்தான்.

வாய்மொழிக் கதைகள்தான் ஆதிகதைகளாகத் திகழ்கின்றன. மானிடவியல் சார்ந்த ஆய்வுகளுக்கு இந்த வாய்மொழிக் கதைகளும் ஒரு கருவியாகத் திகழ்கின்றது.

மனித சமூகம் தோன்றி வளர்ந்த போது சந்தித்த சிக்கல்கள் யாவும் சொல் கதைகளில் பதிவாகியுள்ளன. எழுத்துமொழி தோன்றிய பின்னரும் சொல்கதைகள் சொல்வழியாகவே கடத்தப்பட்டு வந்தன. சொல்கதைகள் பேச்சு வழக்கில் வட்டார மொழிகளில் உலவியதால்தான் அக்கதைகள் இன்றும் செவிவழிக்கதைகளாகவே திகழ்கின்றன.

தமிழில் செய்யுள் நடைதோன்றிய காலத்திலும் விருத்தங்கள் தோன்றிய காலத்திலும் ஒரு சில சொல் கதைகள் பல்வேறு மாற்றங்களுடன் எழுத்தில் சிற்றிலக்கியங்களாகப் பதிவு செய்யப்பட்டன.

இசைப்பாடல்கள் இயற்றப்பட்ட காலத்திலும் சில நாட்டார் கதைகள் இசைப்பாடல்வழி சொல்லப்படும் கதைகளாக வடிவமாற்றம் பெற்றன. நல்லதங்காள் கதை, மதுரைவீரன் கதை போன்றவை இசைப்பாடல்களாக மாற்றம் செய்யப்பட்டு மக்களால் பாடப்பட்டன.

ஒருபுறம் எழுத்து மொழியில் பதிவு செய்யப் பட்டாலும், இசைப்பாடல்களாகப் பரிணாமம் பெற்றாலும், இக்கதைகள் மறுபுறம் மக்களின் நாவுகளில் வாய்மொழிக் கதைகளாக அன்றும் உலவின; இன்றும் உலவுகின்றன; என்றும் உலவும்.

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலேயே சில நாட்டார் கதைகள் (பாலியல் கதைகள் உள்பட) எழுத்து மொழியில் நூல் வடிவம் பெற்றுள்ளன. சரன்றாக்க் கதைச் சாகரம் என்ற நூலைக் கூறலாம். அக்கதையின் மொழி மணிப்பிரவாள நடையில் உள்ளது. வெகுவான வடமொழிக் கலப்புடன் அக்கதைகளின் மொழி நடை காணப்படுகிறது. இந்த நூலின் அச்சுப் பிரதியும் என்னிடம் உள்ளது. அதைச் செம்மைப் படுத்தி இக்கால மொழி நடையில் அந்நூலை மறுபிரசும் செய்யும் திட்டம் ஒன்றும் என்னிடம் உள்ளது.

அதே கால கட்டத்தில், பிற தேசங்களைக் கதைக்களமாகக் கொண்ட குறிப்பாக பாரசீக, அரேபிய தேசங்களைக் கதைக் களமாகக் கொண்ட வாய்மொழிக் கதைகளும் நூல்களாக வெளிவந்துள்ளன.

நாடகங்கள் படைக்கப்பட்ட காலகட்டத்திலும் பல நாட்டார் சொல் கதைகள் நாடக வடிவம் பெற்றுள்ளன. பிற்காலத்தில் தெருக்கூத்து வில்லுப் பாட்டு கணியன் பாட்டு, பக்கிர்களின் பாட்டு போன்ற பல நிகழ்த்துதல் கலைகளின் அடிநாதமாக நாட்டுப்புறக் கதைகள் திகழ்ந்திருக்கின்றன.

திரைப்படங்கள் சிலவும் நாட்டுப்புறக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ளன. திரைப்பட உட்கதைகள் போன்றவை இன்றும் நாட்டுப்புறக் கதைகளில் இருந்து தழுவிப் படைக்கப்படுகின்றன.

அச்சுக்கலை இன்று வளர்ச்சியின் உச்சத்தில் இருந்தாலும் கிராமாந்தரங்களில் இன்றும் சில கதை சொல்லிகளால் நாட்டுப்புறக் கதைகள் சொல்லப்படுகின்றன.

சொல் கதைகள் எந்தக் காலத்திலும் வாய் மொழிக் கதைகளாகப் படைக்கப்படுகின்றன. அவை வாய்மொழியாகப் பரவிக்கொண்டும் இருக்கின்றன.

சொல் கதைகளைக் கதை சொல்லிகள் சொல்லச் சொல்ல அதை செவி வழியாகக் கேட்பது தனி சுகமாகும். அந்தச் சுகத்தை எழுத்து வடிவில் நாம் பெற முடியாது. எனவே சொல்கதைகளை ஒலி வடிவிலோ ஒளி-ஒலி வடிவிலோ பதிவு செய்தல் நலமாகும்.

நாட்டார் கதைகளை எழுத்து வடிவில் பதிவு செய்ய வேண்டும் என்று நம் முன்னோடிகள் பலர் முயன்றுள்ளார்கள். வை. கோவிந்தன், முல்லை முத்தையா போன்றோர் நாட்டார்



கழனியூரன் : நாட்டுப்புறவியலில் இளம் முனைவர் பட்டம் பெற்றவர். தற்போது முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார். எழுத்தாளர் கி.ரா.வுடன் இணைந்து ஏராளமான நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்திருக்கிறார். நாட்டுப்புறவியல் சார்ந்து இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். கதை சொல்லி என்ற இதழையும் நடத்தி வருகிறார்.

கதைகளைத் தொகுத்துச் சிறு சிறு நூல்களாக வெளியிட்டுள்ளார்கள்.

முல்லை முத்தையா அவர்கள் தொகுத்த 'கதைக்கடல்' என்ற தொகுப்பு நூல் குறிப்பிடத்தக் கதாகும். ஆனால் அவர் நாட்டார் கதைகளை செம்மையான மொழிநடையில் எழுத்தில் பதிவு செய்து உள்ளார்.

பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள்தான் தமிழில் முதன் முதலாக நாட்டார் கதைகளை, மக்கள் பேசும் மொழியிலேயே பதிவு செய்தார்கள். நாட்டார் கதைகள் தவிர, ஐவர்ராசா கதை போன்ற பல நாட்டார் கதைப் பாடல்களையும் பதிப்பித்தார்கள்.

நா. வா. வைத் தொடர்ந்து கி. ராஜநாராயணன் அவர்கள் நாட்டார் கதைகளைக் கரிசல் வட்டார வழக்கு மொழி நடையில் பதிவு செய்தார்கள்.

கி. ரா. அவர்கள் கேசரித்த ஒட்டு மொத்த நாட்டார் கதைகளும் அன்னம் பதிப்பகத்தின் வாயிலாக 'நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்' என்ற பெயரில் பெரும்தொகுப்பாக வெளிவந்துள்ளது.

கி.ரா. அவர்கள் நாட்டார் கதைகளைத் தொகுத்த காலத்தில் அவருக்கு கதைகள் சேகரிப்புப் பணியில் ஆரம்ப காலத்தில் உதவிய, தோழர் எஸ். எஸ். போத்தையா எழுத்தாளர் வீர. வேலுச்சாமி போன்றவர்களையும், பிற்காலத்தில் உதவிய எழுத்தாளர் பாரததேவி, சிலம்பு நா. செல்வராசு முதலியோரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்தப் பட்டியலில் எனது பெயரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வீர. வேலுச்சாமி அவர்கள் முதன் முதலாகக் குழந்தைகளுக்கான நாட்டுப்புறக் கதைகளை மட்டும் தொகுத்து நூலாகக் கொண்டு வந்தார்கள்.

பாரததேவி அவர்களும் பல தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளார்கள் நாட்டுப் புறக்கதைகள் பலவற்றைக் காவ்யா சண்முக சுந்தரம் பதிப்பித்துள்ளார்.

நாவலாசிரியர் பொன்னீலன் அவர்களும் தன் பங்கிற்கு இரண்டு தொகுப்பு நூல்களைப் பிரசுரித்துள்ளார். அ.கா. பெருமாள் போன்ற ஆய்வாளர்களும், நாட்டார் கதைகளுடன் தொடர்புடைய ஜனங்களின் சாமிகள் போன்ற தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளார்கள். நாட்டார் கதைகளை மையமாகக் கொண்டு ஆய்வுகள் நிகழ்த்திய பேராசிரியர் தே. லூர்து அவர்களை இங்கே நினைவு கூற வேண்டும். இன்று ஆ. சிவசுப்பிரமணியன், தனஞ்செயன் எம். இராமச்சந்திரன் போன்ற ஆய்வாளர்களும் இத்துறையில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பட்டியல் அறிவியல். என் நினைவில் இருந்து எழுதப்பட்டதுதான். நாட்டார் கதைக்களம் என்பது மிகவும் பரந்து பட்டதாகும் கடல் போல் விரிந்த பரப்பைக் கொண்டதாகும். அதை 'ஒரு சிறிய கட்டுரை' என்ற சிமிழுக்குள் அடைத்து விட முடியாது.

இன்றைக்கு மொழி பெயர்ப்பாகவும் பல நல்ல தொகுப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

நாட்டார் சொல் கதைகளைக் கதை சொல்லிகள் சொல்ல அதைக் கேட்கும் வாய்ப்பு இன்று கிராமங்களில் கூட இல்லை. கதை கேட்கும் காதுகளை இன்று தொலைகாட்சித் தொடர்கள் பிடித்துக் கொண்டுள்ளன.

மேல்நாடுகளில் நாடக அரங்குகளைப்போல, கதை அரங்குகளும் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக் கிறேன். அங்கே கதை சொல்லிகள் சொல்லும் கதைகளைப் பொதுமக்களும் மாணவர்களும் கேட்கிறார்கள். அத்தகைய அரங்குகள் தமிழகத்தில் அமைக்கப்பட்டால் நல்லது. கதைகேட்கும் மரபு அதனால் காப்பாற்றப்படும்.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் கதை சொல்லும் அரங்கமும் இருந்தது. அதில் கி. ரா. அவர்களும் தோழர் லெட்சுமணபெருமாள் அவர்களும் சொன்ன கதைகளும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. புதுவைப் பல்கலைக்கழகம் நாட்டுப்புற கதைகள் சேகரிக்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கி அதற்கு கி. ரா. அவர்களை மேலாண் இயக்குநராக நியமித்து புதுவை வட்டாரத்தில் உலவும் பல்வேறு நாட்டுப்புறக் கதைகளையும் தொகுத்தது.


புதுவை அரசை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழகஅரசும் நாட்டுப்புறக் கதைத்தொகுப்பு சேகரிப்பு என்று பல்கலைக்கழகங்களில் ஒரு பிரிவாகவோ, தனி அமைப்பாகவோ செயல் படுத்தலாம்.

கதை சொல்லிகளை அழைத்துக் கதைகளைச் சொல்லச் சொல்லி அவைகளைக் குறுந்தகடு களாகவும் வெளியிடலாம்.

தற்பொழுது சில நாட்டார் கதைகளும் கோட்டோவியத் (கார்டூன்) தொடர்களாக வெளிவந்துள்ளன.

கதை சொல்வதும், கதை கேட்பதும் கோடானுகோடி ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் ஒரு கலை. அது என்றும் அழியாது. என்றாலும் அக் கலையைப் பேணிக் காப்பது நம் கடமையாகும்.

■



பழமொழிகள் விடுகதைகள்– தொகு ப்பு வரலாறு

சி. இளங்கோ

பழமொழியும் விடுகதையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்று சொல்லும் வழக்கம் தமிழில் உள்ளது. மக்களின் பேச்சுவழக்கில் பழமொழிகளும் விடுகதைகளும் எளிதாக இடம்பெறுகின்றன. ஏட்டிலக்கியங்களிலும் இவை காலந்தோறும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. வெகுசன மக்கள் வழக்கில் இருந்த இவற்றைத் திரட்டித் தொகுக்கும் முயற்சிகள் ஐரோப்பியர்களின் வருகையின் ஊடாகவே நடைபெற்றன.

பழமொழி நானூறு, தண்டலையார் சதகம் ஆகிய இரண்டு நூல்களும் பழமொழி தொடர்பான பழைய நூல்களாக நமக்கு கிடைக்கின்றன. பழமொழியைப் போன்று விடுகதைகள் எதுவும் தனித்த நூல்களாக நமக்கு கிடைக்கவில்லை. உரையாசிரியர்களின் உதாரணங்களாக சில இடங்களில் மட்டும் பேசப்பட்டு வந்துள்ளன. இப்படியாக பழமொழிக்கும் விடுகதைக்குமான ஆரம்பகால வரலாறு அமைகிறது. ஆனால் காலப்போக்கில் பழமொழியும் விடுகதையும் பெரிய அளவில் தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டன. இவற்றின் தொகுப்பு வரலாறு மிகச் சுவையானது.

பழமொழிகள் தொகுப்பு வரலாறு

பழமொழிகளைத் தொகுக்கும் செயல்பாடுகள் மூன்று நிலைகளில் நடந்தேறியுள்ளன. அதன் தொகுப்பு வரலாற்றைப் பார்க்கும்போது இதனை அறியமுடிகிறது. ஒவ்வொரு காலகட்டத்தின் தேவைக்கு ஏற்ப பழமொழிகள் தொகுக்கப் பட்டுள்ளன. இதனைப் பின்வருமாறு பகுத்துப் பார்க்கலாம்,

- ஐரோப்பியருக்கு முந்தைய தொகுப்புகள்
- ஐரோப்பியர்களின் தொகுப்புகள்
- ஐரோப்பியர்களுக்குப் பிந்தைய தொகுப்புகள்

ஐரோப்பியருக்கு முந்தைய தொகுப்புகள்

வாய்மொழி மரபாக காலம் காலமாக பழமொழிகள் மக்களிடம் புழக்கத்தில் இருந்தாலும் முதல் தொகுப்பு நூலாக முன்றுரை அரையனார் தான் பழமொழி நானூறு என்ற பெயரில் அதனை எழுதினார். இவர் பாண்டிய அரசன் என்ற கருத்தும் உள்ளது. இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்த 400 பழமொழிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வெண்பாவிலும் பழமொழிக்கு விளக்கம் தரும் வகையில் இரு அடிகளும், அடுத்த அடியில் ஒருவரை விளிப்பதாகவும் கடைசி அடியில் பழமொழியை அமைத்தும் இயற்றப் பட்டுள்ளது.

இந்நூல் ஆசிரியர் பழமொழிகளை யாப்பு வடிவத்திற்கு ஏற்ப கையாண்டுள்ளார் என்ற கருத்தும் ஆய்வாளர்களிடம் உள்ளது. மேலும் பழமொழிகள் போன்ற தொடர்களும் இதில் எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நீதி புகட்டு வதற்காக ஆசிரியரால் செய்யப்பட்ட இந்நூலை பழமொழித் தொகுப்பு நூல்களுக்கான வரையறை களைக் கொண்டு மதிப்பிடத் தேவையில்லை. 400 பழமொழிகளைக் கொண்டு என்னென்ன நீதிகளைச் சொல்லமுடியுமோ அவற்றையே இந்நூல் ஆசிரியர் செய்துள்ளார்.

பழமொழி நானூறு என்ற நூலை அடுத்து நமக்கு கிடைப்பது பழமொழி விளக்கம் என வழங்கப்படும் தண்டலையார் சதகம் என்ற நூலாகும். இந்நூலில் மொத்தம் 109 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலிலும் பழமொழி எடுத்தாளப்பட்டுள்ளது. சில பாடல்களில் இரண்டு பழமொழிகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் உள்ள மொத்தப் பழமொழிகளில் 14 பழமொழிகளுக்கு மட்டும் விளக்கம் தரப் பட்டுள்ளது. இந்நூலில் சூழல் விளக்கும் தன்மையில் பழமொழிகள் அமைந்துள்ளன.

மேற்கண்ட இரண்டு நூல்களும் தமிழ்ப் புலவர் மரபில் வந்தவர்களால் செய்யப்பட்டவை. இந்நூல்களில் எவ்வித தொகுப்பியல் முறைகளும் இல்லை.

தொகுப்பியல் என்பது ஒரு கலை. அகரவரிசைப் படுத்துவது, காலவரிசைப் படுத்துவது, ஆசிரியர் அகரவரிசைப்படுத்துவது, பொருள் அடிப்படையில் தொகுப்பது என்ற முறைகள் எல்லாம் இன்றைய தொகுப்பியல் முறைகளில் கையாளப்படுகின்றன. இதில் எவ்வித முறைகளும் இந்த இரண்டு பழமொழி நூல்களிலும் இல்லை.

ஐரோப்பியர்களின் தொகுப்புகள்

ஐரோப்பியர்கள் பழமொழிகளை 19 ஆம் நூற்றாண்டில் தொகுக்க ஆரம்பித்தனர். இக்காலகட்டத்தில் தான் ஐரோப்பியர்கள் தமிழ், தமிழினம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர். இதுபோல் பழமொழிகளைத் தொகுப்பது இக்காலகட்டத்தில்தான் நடந்தது. இந்திய மொழிகளிலேயே முதலில் பழமொழிகள் தொகுத்து வெளியிடப்பட்டது தமிழ் மொழியில்தான். தமிழில் முதல் தொகுப்பு பீட்டர் பெர்சிவல் பாதிரியார் செய்த தொகுப்பாகும்.[1]

பெர்சிவல் பாதிரியார் 1842 இல் அச்சிட்டு 1843 இல் வெளியிட்ட தம் தமிழ்ப் பழமொழித் தொகுப்புக்கு 'திருட்டாந்த சங்கிரகம்' - 'Tamil proverbs with their Translation in English' என்று பெயர் கொடுத்தார். இவர் 1826 இல் இந்தியா வந்தபின் தாம் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுக்க ஆர்வம் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். இவர் தொகுப்பில் 1863 பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் அகர வரிசைபடுத்தப்பட்டு தொகுக்கப் பட்டுள்ளன. மேலும் இதில் தமிழ்ப் பழமொழி களுக்கு ஆங்கில விளக்கமும் தரப்பட்டுள்ளது. சில இடங்களில் தமிழ்ப் பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. [...]

இந்நூல் 1874 இல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. இதில் அகரவரிசைப்படுத்தப்பட்ட 6156 பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் பதிப்பு பற்றி பெர்சிவல் குறிப்பிடுகையில் தாம் 15000 பழமொழிகள் சேகரித்ததாகவும் அதில் பல திரும்பத் திரும்ப வந்ததாகவும், சில ஔவையாரின் வாசகங்களாகவும் சில சமஸ்கிருதப் பழமொழிகளாக இருந்ததாகவும் அவற்றை நீக்கிவிட்டு மீதம் இருந்தவற்றையே இப்பதிப்பில் சேர்த்ததாகவும் கூறுகிறார்.

பெர்சிவல்லைத் தொடர்ந்து ஜான் லாசரஸ் என்பவர் 1894 இல் A Dictionary of proverbs என்ற

நூலைத் தொகுத்து வெளியிட்டார். இந்நூல் 9,417 தமிழ்ப் பழமொழிகளை அகர வரிசையில் கொண்டுள்ளது. ஒவ்வொரு பழமொழிக்கும் ஓரிரு வரிகளில் குறிப்பும் அல்லது மொழிபெயர்ப்பும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. பல பழமொழி களை மக்கள் சொல்லும்போது உடனுக்குடன் குறித்துக் கொண்டதாகவும், பழந்தமிழ் அறிவைப் போற்றிப்பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் இந்நூலைத் தொகுத்து வெளியிட்டதாக ஜான் லாசரஸ் முன்னுரையில் கூறுகிறார். இவர் தன்னுடைய பழமொழி நூலுக்கு முன்னோடி நூலாக பெர்சிவல் பாதிரியாரின் பழமொழித் தொகுப்பைக் குறிப்பிடுகிறார்.

ஜான் லாசரஸ் பழமொழித் தொகுப்பில் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஒரே பழமொழிக்கு ஆங்கிலத்தில் இரண்டு விளக்கங்கள் கொடுத்து வேறு வேறு பழமொழியாக்கி உள்ளார். திருக்குறள் அடிகளையும் பழமொழிகளாகச் சேர்த்துள்ளார். சிறுபாடல்களும் பழமொழியாக இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. சிலேடைகளையும் பழமொழி களாகச் சேர்த்துள்ளார். இப்படியான குறைபாடு களுடன் இப்பழமொழி தொகுப்பு நூல் அமைகிறது.

ஹெர்மன் ஜென்சன் என்பவர் 1897 இல் A Classified collection of Tamil Proverbs என்ற பழமொழி நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் மொத்தம் 3,644 பழமொழிகள் உள்ளன. இந்நூல் 13 பிரிவுகளில் பொருள்வகைப் பாகுபாடாக செய்யப் பட்டுள்ளது. தமிழ்ப் பழமொழிகளுக்கு நேரான ஆங்கிலப் பழமொழிகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பழமொழிகளுக்கு விளக்கம் தருவதுடன், பழமொழியின் பொருள் விளங்க அது பயன்படுத்தப்படும் சூழலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் உட்தலைப்பிடுதல், சொல்லடைவு செய்தல் ஆகியன இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மேலும் மரபுத் தொடர்கள், தமிழ் சாராத பழமொழிகள் முதலானவற்றையும் நீக்கி செம்மையான பழமொழி நூலாக இந்நூல் செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பாதிரியார்களால் செய்யப்பட்ட மேற்கண்ட மூன்று நூல்கள் மட்டுமே நமக்கு இன்று கிடைக்கின்றன. மேலும் சென்சன் ஐயர் மற்றும் எச். டீபுள்யு. லாரி பாதிரியார்களும் பழமொழித் தொகுப்பு நூல்கள் செய்துள்ளனர்.[2] ஆனால் அவை கிடைக்கவில்லை. அத்தொகுப்புகள் கிடைக்குமாயின் ஐரோப்பியர்களால் உருவாக்கப் பட்ட பழமொழி நூல்களின் வரலாற்றை விரிவாக நம்மால் எழுத முடியும். எனினும் நமக்குக் கிடைத்த நூல்களைக் கொண்டு பின்வரும் முடிவுக்கு நாம் வரலாம். அவை,


- தமிழ் கற்ற ஐரோப்பியர்களுக்குப் பயன்பட இத்தொகுப்புகள் பயன்படுத்தப்பட்டன.
- பைபிள் கதைகளை விளக்க அதன் வழி நீதிகளைச் சொல்ல தமிழ்ப் பழமொழிகள் அவர்களுக்கு அதிகம் தேவைப்பட்டது.
- மதமாற்றம் மற்றும் போதனைகள் செய்ய ஐரோப்பிய பாதிரியார்களுக்குப் பயன்படும் என்ற நோக்கத்திற்காக ஆங்கிலம் கலந்து செய்யப்பட்டது.

இப்படியாக 19 ஆம் நூற்றாண்டில் உருவான ஐரோப்பியர்களின் பழமொழித் தொகுப்பு நூல்களில் உள்ள அரசியலை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஐரோப்பியர்களுக்குப் பிந்தைய தொகுப்புகள்

ஐரோப்பியர்களின் தொகுப்புகளைப் பார்த்த அன்றைய தமிழர்களும் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். இவ்வேலை 19 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. அதில் பல இன்று நமக்கு கிடைக்கவில்லை. நம்மவர்களின் தொகுப்புகள் சில பின்வருமாறு :

- 1873 தட்சிணாமூர்த்தி
  - Tamil Proverbs with their English Equivalents



சி. இளங்கோ: தற்போது சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத்துறையில் விருந்துநிலை விரிவுரையாளராக உள்ளார். இவரின் முனைவர் பட்ட ஆய்வுத்தலைப்பு 'தமிழகப் பண்பாட்டு அமைப்புகள்: வரலாறும் செயல்பாடும் (1850–1950)' என்பதாகும்.

இவரின் நூல்கள்: 'பழமொழித்தொகுப்புகள் 1842 – 2000'

'மார்க்ஸ் எங்கல்ஸ் மேற்கோள்கள்'

- 1874 எஸ். இராமசாமி ஐயங்கார் மாணவர் களுக்கான தமிழ்ப் பழமொழிகளும் ஒத்த ஆங்கிலப் பழமொழிகளும்
- 1877 எஸ். வேணுகோபால் நாயுடு பழமொழி புத்தகம்
- 1888 குப்புசாமி நாயுடு, த. கருப்பண்ணப் பிள்ளை பழமொழித் திரட்டு
- 1888 சத்திநேசன்
  - Hand Books of Tamil proverbs and phrases
- 1894 கிருஷ்ணசாமி செட்டியார் ஆங்கிலப் பழமொழிகளும் அவற்றிற்கு நேரான தமிழ்ப் பழமொழிகளும்
- 1899 தி. சபாபதி முதலியார்
  - Selected Tamil proverbs with their Appropriate English Version
- 1899 தி. செல்வக் கேசவராயர்
  - Parallel proverbs
- 1902 பார்த்தசாரதி பிள்ளை - பழமொழித் திரட்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட இத்தொகுப்புகள் அனைத்தும் தமிழ் கற்கும் ஐரோப்பியர்களுக்குப் பயன்படும் என்ற நோக்கிலேயே தமிழர்களால் செய்யப்பட்டன. ஐரோப்பியர் களின் தொகுப்புகளை முன்மாதிரி யாகக் கொண்டு இவை அனைத்தும் செய்யப் பட்டுள்ளன. தமிழ்ப் பழமொழிகள் அதற்கு நேரான ஆங்கிலப் பழமொழிகள் என அகராதி வகையில் இத்தொகுப்புகள் உள்ளன.

இத்தொகுப்புகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கவே சிலர் 1842 இல் பெர்சிவல் பாதிரியார் தொகுத்த பழமொழித் தொகுப்பில் இருந்து எடுத்து தம் பெயரில் அதனை தொகுப்புகளாக்கிக் கொண்டு வியாபாரம் பார்த்தனர். 1888 குப்புசாமி நாயுடு மற்றும் த. கருப்பண்ணப் பிள்ளை வெளியிட்ட பழமொழித் திரட்டுகள் இவ்வாறு தொகுக்கப்பட்டவையே. இதுபோல் 1902 இல் பார்த்தசாரதி பிள்ளை வெளியிட்ட பழமொழித் திரட்டும் இப்படியான நூலே. இரண்டு நூல்களும் ஒரே பெயரிலேயே வெவ்வேறு காலங்களில் வந்துள்ளன. இப்படியான போக்கு இதோடு நிற்காமல் 1912 இல் அனவரத வினாயகம் பிள்ளையும் தம் பழமொழித் தொகுப்பிற்கு பெர்சிவல் தொகுப்பில் இருந்து பல பழமொழிகளை அப்படியே எடுத்துத் தனதாக்கிக் கொண்டுள்ளதை அறிய முடிகிறது.

இப்படியாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்ப் பழமொழித் தொகுப்புகளின் வரலாறு அமைகிறது. ஆங்கிலமும் தமிழும் சேர்ந்த பழமொழித் தொகுப்புகள் உருவாக்கம் இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது. 1905 இல் எஸ். வி. ராமசாமி ஐயங்கார் Parallel proverbs in Tamil and English என்ற நூலையும் வெங்கடசாமி ஐயர் 1907 இல் Five hundred Instructive Tamil proverbs with their English equivalents என்ற நூலையும் வெளியிட்டனர். ஆனால் காலப்போக்கில் இதுபோன்ற தொகுப்புகள் மெல்ல மெல்ல மறையத்தொடங்கின.

1912 இல் வெளியிடப்பட்ட அனவரத விநாயகம் பிள்ளையின் பழமொழி அகராதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்யப்பட்ட முக்கியத் தொகுப்பாகக் கருதலாம். இந்நூல் இதற்கு முன்னுள்ள எல்லாப் பழமொழி நூல்களையும் பார்த்துத் தொகுக்கப்பட்டது. இதில் பழமொழிகள் அகரவரிசையில் அமைந்துள்ளன. மொத்தம் 12,270 பழமொழிகள் உள்ளன என்று கூறப்பட்டாலும் இதில் பழமொழிகளுக்கு எண் கொடுப்பதில் தவறு நேர்ந்துள்ளது. 3500 என்ற எண்ணுக்குப் பதிலாக 5010 என்று எண் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் 1510 பழமொழிகள் கூடுதலாக சேர்க்கப் பட்டுள்ளது. இதனை நீக்கிப் பார்த்தால் 10,760 பழமொழிகளே இந்நூலில் உள்ளன. ஆனால் இன்றுவரை இந்நூலில் 12,270 பழமொழிகள் இருப்பதாகவே பலரும் கூறிவருகின்றனர். சமீபத்தில்(2007) தமிழ்மண் அறக்கட்டளையால் வெளியிடப்பட்ட முதுமொழிக் களஞ்சியம் என்ற பழமொழித் தொகுப்பின் முன்னுரையிலும் இப்படித் தவறாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

'இத்தொகுப்பில் மரபுத் தொடர்கள், திருக்குறள் வரிகள், விடுகதைகள், திருவள்ளுவமாலை வரிகள், நாட்டார் கதைப்பாடலில் இறுதியில் வரும் வாழ்த்து முதலியவற்றையெல்லாம் பழமொழியாக இதன் ஆசிரியர் சேர்த்துத் தொகுத்துள்ளார்' என்று ஆய்வாளர் தே. லூர்து அவர்கள் தம் ஆய்வேட்டில்[4] குறிப்பிட்டுள்ளார்.

இக்காலகட்டத்திலேயே யாழ்ப்பாணத்தில் இருந்தும் சில பழமொழித் தொகுப்புகள் வெளியிடப்பட்டன. அவை தமிழ்ப் புராணங்க ளோடு பழமொழிகளைத் தொடர்புபடுத்தி விவரணப்படுத்தின. அவ்வகையில் அமைந்த நூலாக 1916 இல் வெளிவந்த வே. ஆ. சிதம்பரம் பிள்ளையின் பழமொழித் தீபிகையைக் குறிப்பிடலாம். பழமொழிக்கு நேரடிப் பொருளும் பின்னர் அதனை விளக்க, புராணங்களையும் ஆசிரியர் பயன்படுத்துகிறார்.

20 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த சில பழமொழி நூல்களைப் பார்ப்பதன் வழி அவற்றின் போக்கை நாம் அறிந்து கொள்ளலாம்.[5]

- 1931 இல் ப. சா. செங்கல்வராய முதலியார் - பழமொழிக் களஞ்சியம்
- 1932 இல் சபாரத்தின சிங்கம் - விவசாயம் பற்றிய பழ மொழிகள்
- 1936 இல் பெருநாழி. வெ. ஆ. குமரய்ய நாடார் - பழமொழி நீதிச் சதகம்
- 1938 இல் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் - தமிழ் நாட்டுப் பழமொழிகள் அகரவரிசைச் சுருக்கம்
- 1946 இல் கஸ்தூரி திலகம் - 1001 அபூர்வ பழமொழிகள்
- 1952 இல் திருவரங்க நீலாம்பிகை அம்மையார் - ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும்
- 1952 இல் கழக வெளியீடு - கழகப் பழமொழி அகரவரிசை
- 1955 இல் இராமசுப்பிரமணிய நாவலர்- பழமொழித் திரட்டு

இப்படியாக 1950ஆம் ஆண்டு வரையிலான நூல்கள் அமைந்துள்ளன. இந்நூல்களில் பழமொழிகள் செய்யுள் நடையிலும், எண் கொடுத்து அகரவரிசையில் வகைப்படுத்தும் படியும் உள்ளன. கழகம் வெளியிட்ட இரண்டு நூல்கள் மாணவர்களுக்காகச் செய்யப்பட்டவை. பள்ளி மாணவர்களை நோக்கி பழமொழித் தொகுப்புகள் 1950களில் நகரத் தொடங்கியதையே இது காட்டுகிறது. மேலும் பொருள் அடிப்படையிலான தொகுப்பு வேலைகளும் நடக்கத் தொடங்கிவிட்டதை வேளாண்மைப் பழமொழிகள், குடும்பப் பழமொழிகள், வேடிக்கைப் பழமொழிகள், இராணுவப் பழமொழிகள், கல்விப் பழமொழிகள் பெண்களைப் பற்றிய பழமொழிகள், வினாவிடை பழமொழிகள் ஆகிய நூல்கள் காட்டுகின்றன. இப்படியாக 20 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பழமொழி நூல்களின் தன்மைகள் மாற்றம் பெற ஆரம்பித்தன.

இதன் தொடர்ச்சியாகப் பலர் பழமொழிகளைத் தொகுக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். பேச்சாளர் ஜீவாவும் மேடைப் பேச்சுகளில் பயன்படுத்துவதற்காக பழமொழிகளைத் தொகுத்து வைத்திருந்தார். பின்னர் அது நூலாக வெளிவந்தது. இவரைப்போல் மொழி அறிஞர் பாவாணர் பழமொழிகளைச் சேகரித்த செய்தியை அவரது கடிதங்கள் வழி அறிய முடிகிறது. அவர் சேலம் நகராண்மைக் கல்லூரியில் பணியாற்றியபோது 'பழமொழி பதின்மூவாயிரம்' என்னும் பெயரில் பழமொழிகளைத் தொகுத்தார். அவற்றை அச்சகத்தில் அச்சடிக்கக் கொடுத்து ஏனோ அது வெளிவராமல் போனது. அது அச்சா காமைக்கான காரணத்தை அறிய முடியவில்லை. அவரின் கைப்பிரதியும் திரும்ப கிடைக்கவில்லை. இதுபோன்ற சம்பவங்களும் பழமொழித் தொகுப்பு வரலாற்றில் நடந்துள்ளன.

1989 இல் வெளிவந்த கி. வா. ஜகந்நாதன் அவர்களின் தமிழ்ப் பழமொழிகள் என்ற நூல் பழமொழித் தொகுப்பு நூல்களில் முக்கியமான நூலாகக் கருதப்படுகிறது. இதில் 25,000க்கும் மேற்பட்ட பழமொழிகள் உள்ளன. வாய்மொழியாய் கேட்டதை அப்படியே அம்மக்கள் மொழியிலேயே இந்நூல் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். நூலின் கடைசியில் அருஞ்சொற்பொருள் விளக்க அகராதியும் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழில் பழமொழித் தொகுப்புகளுக்கு ஒரு வழிகாட்டித் தொகுப்பாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற தொகுப்புகள் பல வெளிவந்தால் அவை பழமொழி தொடர்பான பரந்துபட்ட ஆய்வுகளுக்கு வழி வகுக்கும்.

> பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட இத்தொகுப்புகள் அனைத்தும் தமிழ் கற்கும் ஐரோப்பியர்களுக்கு, பயன்படும் என்ற நோக்கிலேயே தமிழர்களால் செய்யப்பட்டன. ஐரோப்பியர்களின் தொகுப்புகளை முன்மாதிரியாகக் கொண்டு இவை அனைத்தும் செய்யப் பட்டுள்ளன. தமிழ்ப் பழமொழிகள் அதற்கு நேரான ஆங்கிலப் பழமொழிகள் என அகராதி வகையில் இத்தொகுப்புகள் உள்ளன.

1990 களுக்குப் பிறகு பழமொழி நூல்கள் வணிகச் சிந்தனையில் தொகுக்கப்பட்டன. ஆய்வு முறையில் தொகுத்தல் என்ற நிலையில் இருந்து மாறி வணிக நோக்கில் பல நூல்களில் இருந்தும், தனக்குத் தெரிந்தவற்றைத் திரித்தும், சிதைத்தும் பல தொகுப்புகளைத் தொகுப்பாசிரியர்கள் செய்தனர். இதனை பல பதிப்பகங்கள் வெளி யிட்டன. சிறிய சிறிய நூல்களாக பல பழமொழி நூல்கள் வெளிவந்தன. எல்லாம் ஒன்றின் மாற்று வடிவங்களாகவே காட்சியளித்தனவே தவிர புதிய முயற்சிகள் எதுவும் நடக்கவில்லை. பழமொழிகளுக்கு

விளக்கம் தருகிற பெயரில் கொச்சையாகவும், ஆன்மீகமாகவும், இரு பொருளிலும் விளக்கங்களும் தொகுப்பாளர்களால் தரப்பட்டன. இதற்கு உதாரணமாக 1997இல் கே. ஜி. எஃப். பழனிச்சாமி என்பவர் செய்த பழமொழிகளும் பின்னணி நகைச்சுவைகளும் என்ற நூலைச் சொல்லலாம். இந்நூல் மணிமேகலைப் பிரசுரத்தாரால் வெளியிடப்பட்டது.

'சகோதரன் உடையான் படைக்கு அஞ்சான்' என்ற பழமொழிக்கு ஆசிரியர் தரும் விளக்கம் வருமாறு,

அவன் : உனக்கு படை நோய் வந்திருக்கு. அதுக்கு வருத்தப்படறியா?

இவன் : ஏன் வருத்தப்படணும்? என் தம்பிதான் தோல் டாக்டராச்சே! (ப.33)

இப்படியான போக்குகளில் பல நூல்கள் வர ஆரம்பித்துவிட்டன. பழமொழித் தொகுப்புகள் இன்று ஆரோக்கியமான சூழ்லில் இல்லை. புதிய புதிய கற்பனைக் கதைகளைப் பழமொழிகளுக்கு விளக்கம் தருகிறேன் என்ற பெயரில் பலர் ஏற்றிச் சொல்கின்றனர். இன்று சிவகாசியில் இருந்து அச்சடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பழமொழி நூல்கள் கூட ஓரளவு சரியாக உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

2007 ஆம் ஆண்டு செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார் மற்றும் முனைவர் பி. தமிழரசன் தொகுத்தளித்த 'முதுமொழிக் களஞ்சியம்' ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளது. கி. வா. ஜ. தொகுப்புக்கு அடுத்த நிலையில் வந்த விரிவான நூலாக இத்னைப் பார்க்கலாம். 21 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த முக்கிய பழமொழித் தொகுப்பான இதில் தூய தமிழ் நடையில் பழமொழிகள் மாற்றப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

நாட்டார் வழக்காறுகளில் ஒன்றான பழமொழிகளில் நாட்டார் மக்களின் அனுபவம், பண்பாடு, வட்டார மொழி, உவமை, வரலாறு என பல கூறுகளை உள்ளடக்கிய பழமொழிகளைச் சரியான முறையில் தொகுத்துப் பாதுகாப்பது நமது கடமை. இதனை தொகுப்பாளர் உணர்ந்து செயல்பட்டால் பல பழமொழிகள் காப்பாற்றப்படும். மேலும் வட்டார அடிப்படையில் பழமொழி தொகுப்புகள் அதிகம் வெளிவந்தால் அது முக்கியமான பண்பாட்டு ஆவணமாக அமையும். இன்று சிறு சிறு பழமொழி நூல்கள் மாணவர்களை மையப்படுத்தியும், பொது வாசகனுக்கு பொழுதுபோக்கு நூலாகவும் தயாரிக்கப்படுகின்ற நிலையில் உள்ளன. இதிலும் தொகுப்பியல் நேர்மை இருந்தால் இந்நூல்களும் சிறந்தவையாக மாறும்.

இப்படியாக பழங்காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் என பழமொழித் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு காலத்திலும் இந்நூல்களின் தேவையும் நோக்கமும் மாறுபட்டு வந்துள்ளதை மேற்கண்ட ஆய்வின் வழி அறியலாம்.

பழமொழிகளின் தொகுப்பு வரலாறு இவ்வாறு அமைகின்ற நிலையில், விடுகதையின் தொகுப்பு வரலாறு வேறு மாதிரியுள்ளது.

விடுகதைகள் தொகுப்பு வரலாறு

தமிழில் விடுகதைகள் தொகுப்பு நூல்களாக 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே வெளிவர ஆரம்பித்தன. சங்க இலக்கியத்தில் சில பாடல்கள் விடுகதைக்கான கூறுகளுடன் உள்ளன. பின்னர் உரையாசிரியர்கள் சிலர் தம் உரைகளில் ஒரு சில விடுகதைகளை எடுத்தாண்டுள்ளனர். இது தவிர தனித்த தொகுப்பு நூலாக பழமொழி களுக்குச் செய்ததுபோல் விடுகதைக்கு யாரும் செய்யவில்லை. இது தமிழ்ச் சமூகத்தில் விடுகதையை விட பழமொழி மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுகிறது. பழமொழிகளைப் போல் விடுகதையைக் கொண்டு வாழ்க்கைக்கான கருத்துக் களை வழங்க முடியாது என புலவர்கள் கருதினார் களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

விடுகதைகளைத் தொகுக்கும் வேலைகளில் ஐரோப்பியர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வில்லை. பழமொழிகளைப்போல் மதப்பிரச்சாரத் திற்கு அவற்றைப் பயன்படுத்த முடியாது என்ற காரணத்தாலே அவர்கள் விடுகதைகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால் அவர்கள் தொகுத்த பழமொழிகளில் சில விடுகதைகளும் உள்ளன என்பது சுவையான செய்தி. விடுகதை என்ற சொல் தமிழில் பிசி, புதிர், வெடி முதலான பெயர்களில் வழங்கப்பட்டாலும் 19 ஆம் நூற்றாண்டில் புலவர்கள் 'அலங்காரம்' என்ற பெயரை அதற்குச் சூட்டினர். சொல் அலங்காரம் என்ற பொருளிலே அவை பயன் படுத்தப்பட்டன. புதிர் பண்புடன் சொல் அலங்காரங்கள் இயற்றப்பட்டன.

இரண்டு கேள்விகளுக்கு ஒரு விடை தந்தால் அது இரு சொல் அலங்காரம். மூன்று கருத்து களுக்கு ஒரு விடை தந்தால் அது முச்சொல் அலங்காரமாகும். 1877 இல் வெளிவந்த அருணாசல முதலியாரால் இயற்றப்பட்ட இரு சொல் அலங்காரம் என்ற விடுகதை நூலே நமக்குக் கிடைக்கும் முதல் நூலாக உள்ளது.

விடுகதைத் தொகுப்புகளில் குளறுபடிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த விடுகதை நூல்களில் பின்வருபவையே நமக்கு கிடைக்கின்றன.

- 1877 இல் அருணாசல முதலியார் - இருசொல் அலங்காரம்
- 1888 இல் பெருமாள் நாடார் - இரு சொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம்
- 1892 இல் கங்கை முத்துப் பிள்ளை - இரு சொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம்
- 1897 இல் வினோத விடிகதை
- 1897 இல் கிறிஸ்துவ சபை - விவிலிய விடுகதைகள்
- 1899 இல் முனுசாமி முதலியார் - வினோத விடுகதை
- 1903 இல் பு. எ. பார்த்தசாரதி பிள்ளை - விநோத விடுகதை

ஆகிய நூல்களே ஆகும். இந்நூல்களின் பதிப்புகளில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளதை ஆய்வின் வழி அறிய முடிகிறது. மேற்கண்ட நூல்களில் பார்வைக்கு கிடைப்பது 1897 இல் வெளிவந்த வினோத விடிகதை என்ற நூலே. இந்நூல் தலைப்பில் 'விடுகதை' என்று இல்லாமல் 'விடிகதை' என்று உள்ளது. இந்நூலை யார் செய்தது என்ற குறிப்பு நூலில் இல்லை. இந்நூல் சென்னை புரசை சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது. 8 பக்கங்களே கொண்ட இந்நூலில் 47 விடுகதைகள் உள்ளன. முதல் விடுகதைக்கு விடையாக 'விநாயகர்' என்ற விடை வரும்படி கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அந்த மரபை 20 ஆம் நூற்றாண்டில் விடுகதை தொகுப்பவர்களும் 'கடவுள் வாழ்த்துப் போல்' பின்பற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் ஒவ்வொரு பாடலின் கடைசியடியிலும் வருணிக்கப்பட்டு, பின்னர் அவர்களை விளித்து விடையைக் கேட்பது போல இந்நூலில் விடுகதைகள் அமைந்துள்ளன.

இந்நூலைத்தான் 1899 இல் முனுசாமி முதலியார் தன் பெயரில் வினோத விடுகதை என்ற தலைப்பில் பதிப்பித்துக் கொண்டாரா? என்ற சந்தேகம் எழுகிறது. அவரின் விடுகதை நூல் கிடைத்தால்தான் இச்சந்தேகம் தீர்க்கப்படும். இப்படி சந்தேகம் எழுவதற்கு காரணம் உண்டு. விடுகதைத் தொகுப்புகள் மறுபதிப்பு செய்யப்படும் போது தொகுப்பாசிரியர் மற்றும் முதற்பதிப்பாசிரியர் மறைக்கப்பட்டு ஒவ்வொருவரும் தம் பெயரிலேயே அதனைப் பதிப்பிக்கின்றனர். இது தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

மேலும் விநோத விடுகதை என்ற நூல் 1903 இல் பு. எ. பார்த்தசாரதிப் பிள்ளை என்பவர் பரிசோதித்துப் பதிப்பாசிரியராக இருந்து சென்னை புரசை நாராயண சாமிப்பிள்ளையவர்களது நந்தமிழ் விலாச அச்சியந்திர சாலையின் வழி பதிப்பிக்கிறார். இந்நூலில் நூல்ஆசிரியர் மற்றும் முதற்பதிப்பு பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. இப்படியாக 1897 இல் வெளிவந்த வினோத விடுகதை நூலில் ஆசிரியர் பெயர் மறைக்கப்பட்டு, பல்வேறு பதிப்பாசிரியர்களால் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட வரலாற்றை நம்மால் அறிய முடிகிறது.

இதுபோல் இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் என்ற விடுகதை நூல் ஒவ்வொரு காலகட்டத்திலும் வேறு வேறு தொகுப்பாசிரியர் களால் வெளியிடப்பட்டுள்ளது. 1877 இல் அருணாசல முதலியார் இருசொல் அலங்காரம் என்ற நூலை வெளியிட்டார். இந்நூலைத்தான் 1888இல் பெருமாள் நாடார் எடுத்துக் கொண்டு அதில் முச்சொல் அலங்காரம் என்ற சில பாடல்களைச் சேர்த்து வெளியிட்டுள்ளாரா? என்ற கேள்வி எழுகிறது. இது போல் 1892 இல் கங்கை முத்துப்பிள்ளை அந்நூலைத் தன் பெயரில் பதிப்பித்துக் கொண்டாரா? என்ற கேள்வியும் எழுகிறது. இப்படி நாம் கருதுவதற்கு காரணம் 20 ஆம் நூற்றாண்டில் இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் என்ற நூல் மூன்று நபர்களால் தனித்தனியாக அவரவர்களின் பெயர்களிலேயே பதிப்பிக்கப்படுகிறது. அவர்கள் வெளியிடும் அந்நூல்கள் ஒரே செய்தியையே கொண்டுள்ளன. இதில் இருந்து 20 ஆம் நூற்றாண்டில் பதிப்பிக்கப்பட்ட இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம், 19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த நூல்தான் என்ற முடிவுக்கு நாம் வரலாம். இது குறித்துப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த விவிலிய விடுகதை என்ற நூல் கிடைக்காமல் போனது வருத்தமானதே. இது கிடைத்திருந்தால் கிறித்துவ மரபில் விடுகதை எவ்வாறு தொகுக்கப்பட்டு அல்லது செய்யப்பட்டு இருக்கும் என்பதை நாம் அறிந்திருக்கலாம்.

இப்படியாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் விடுகதைகள் தொகுப்புகள் உருவாக்கப்படுகின்றன. மக்களிடம் புழக்கத்தில் உள்ள விடுகதைகளைத் தொகுப்பது என்ற மரபு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றவில்லை. மேற்கண்ட நூல்கள்

எல்லாம் புலவர் மரபினரால் செய்யப்பட்டவையே. இங்கு நாம் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். பழமொழிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நேரடியாக மக்களிடம் இருந்து தொகுக்கப்பட ஆரம்பித்துவிட்டன ஆனால் விடுகதை இலக்கியத்திற்கு ஏன் அவ்வாறு நடைபெறவில்லை என்பதே அது. இது ஆய்வுக்குரிய ஒன்றாக உள்ளது.

இரு சொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் – தொகுப்பு அரசியல்

19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் என்ற விடுகதை நூல் தொடர்ச்சியாக பதிப்பிக்கப்பட்டது. 1903இல் புத்தக வியாபாரம் செய்யும் வே. சுந்தரம் பிள்ளை காரைக்காலில் இதனை பதிப்பித்தார்.[9] இதில் முந்தைய பதிப்பு பற்றிய எவ்வித குறிப்பும் இல்லை. இதே நூல் 1911இல் கும்பகோணம் புக்ஷாப் கோ. சீனிவாசப் பிள்ளை அவர்களால் சென்னையில் பதிப்பிக்கப் பட்டது.[10] இதிலும் முந்தைய ஆசிரியர், பதிப்பாசிரியர் பற்றிய குறிப்புகள் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் இப்பதிப்பில் கடைசியில் இரண்டு தனிச் செய்யுள்களைத் தொகுப்பாசிரியர் சேர்க்கிறார். இதற்கும் விடுகதைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. 1903ஆம் ஆண்டு பதிப்பில் இல்லாத ஒன்று புதிதாக இப்பதிப்பில் சேர்க்கப்பட்டது ஏன்? என்ற விளக்கத்தையும் பதிப்பாசிரியர் நமக்குத் தரவில்லை. மேலும் நூலில் இரண்டாம் பக்கத்தில் திருவள்ளுவர் படம் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் நூலின் பக்கங்களை நிரப்புவதற்கு என்பதை நம்மால் ஊகிக்க முடிந்தாலும் ஒரே நூலின் இரு வேறு பதிப்புகளைப் பார்க்கும் வாசகனுக்கு குழப்பமே மிஞ்சும்.

இதே நூல் 1941 இல் இரத்தின நாயக்கர் ஸன்ஸ் என்ற நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்டது.[11] இதில் முந்தைய பதிப்பாசியர் பெயரும் இல்லை. தற்போதைய பதிப்பாசிரியர் பெயரும் இல்லை. வெறும் வெளியீட்டு முகவரியுடனே நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 1911 ஆம் ஆண்டு பதிப்பில் பக்கத்தை நிரப்புவதற்காகச் சேர்க்கப்பட்ட தனிச்செய்யுட்கள் இப்பதிப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் படம் நீக்கப்பட்டுள்ளது. இப்படியாக இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் என்ற நூலில் நடந்த பதிப்பாசிரியர்களின் தொகுப்பு அரசியலை அறிந்து கொள்ள முடிகிறது. இதனை பின்வரும்படி புரிந்து கொள்ளலாம்.

1877 ஆம் ஆண்டின் இருசொல் அலங்காரம் ⟶ 1888ஆம் ஆண்டின் இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் (புதிய பதிப்பாசிரியர் தம் பெயரில் பதிப்பித்து முச்சொல் அலங்காரமாக சில பாடல்களைச் சேர்க்கிறார்)

(1) 1892 – இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம்
(அடுத்து ஒரு புதிய பதிப்பாசிரியர் தம் பெயரில் பதிப்பிக்கிறார்)

(2) 1903 – இருசொல்லலங்காரம் முச்சொல்லலங்காரம்
(அடுத்து ஒரு புதிய பதிப்பாசிரியர் தம் பெயரில் பதிப்பிக்கிறார்)

(3) 1911 – இருசொல்லலங்காரம் முச்சொல்லலங்காரம்
(அடுத்து ஒரு புதிய பதிப்பாசிரியர் தம் பெயரில் பதிப்பிக்கிறார், தனிப்பாடல் இரண்டைச் சேர்க்கிறார்)

(4) 1941 – இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம்
(பதிப்பாசிரியர் பெயர் இடம்பெறவில்லை, தனிப்பாடல் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது)

இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரத்தில் இடம் பெற்ற விடுகதைகள் சில வருமாறு :

1. அசுரர்குலமழிவதேன் - அறிவையர் துணிகள் கிழிவதேன் - வேலையிட்டு
2. அச்சுவண்டி - யோடுவதேன் மச்சானுறவாடுவதேன் - அக்காளையிட்டு
3. அந்தணர் சிறப்பதேன் ஆணிகள் கழல்வதேன் - மறையிருந்து

இவை இருசொல் அலங்காரத்திற்கான உதாரணங்கள். முச்சொல் அலங்காரத்திற்கான உதாணங்கள் வருமாறு,

1. ஆடோடோடிய காடும் - அரசனோடோடிய வூரும் அடிக்கடி தாய்வீடோடிய பெண்ணும் இம்மூன்றும் பேயோடாடிய கூத்தாம்.

2. நாளை நாளை யென்பவன் கொடையும் - நலமறியாக் காளையுடன் கலக்கலும் பூவிற் குவிந்த விதழில் விழுந்த ஈயும் இம்மூன்றும் கடலிற் கவிழ்ந்த கலம்.

மேற்கண்ட உதாரணங்களைப் பார்க்கும் போது முச்சொல் அலங்காரம் விடுகதைக்கான எவ்விதப் பண்பையும் பெற்று இருக்கவில்லை என்பது புலப்படும். திரிகடுகம், ஏலாதி நூல்களின் அமைப்பை ஒத்து முச்சொல் அலங்காரம் எழுதப்பட்டுள்ளது. இதில் இருந்து முச்சொல் அலங்காரம் வேறு ஒருவரால் எழுதிச் சேர்க்கப் பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். முச்சொல் அலங்காரம் 10 பாடல்கள் மட்டுமே கொண்டுள்ளது. இரு சொல் அலங்காரம் விடுகதைக்கான தன்மையுடன், புதிர் பண்புடன் உள்ளதைப் படிக்கும்போது உணரமுடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் என்ற விடுகதைத் தொகுப்பில் பல்வேறு செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கையில், மற்றொருபுறம் 'விடுகவி களஞ்சியம்' என்ற பெயரில் விடுகதைகள் சில பெண்களால் தொகுக்கப்பட்டன. இந்நூல் தொகுப்பு வரலாற்றின் வழி ஒரே காலகட்டத்தில் விடுகதை நூல்களின் இரு வேறு தொகுப்பு அரசியலைப் புரிந்து கொள்ள முடிகிறது.

விடுகவி களஞ்சியம் தொகுப்பு அரசியல்

விடுகவி களஞ்சியம்[12] என்ற பெயரில் விடுகதைத் தொகுப்பு நூல் ஒன்று 1928 இல் அம்மணியம்மாள் மற்றும் பிரபலாம்பாள் அம்மாள் ஆகியோரால் முதலில் தொகுத்து வெளியிடப்பட்டது. இதனை மதுராந்தகம் கண்ணம்மாள், முரஹரி அச்சுக்கூடம் வழி வெளியிட்டார். இந்நூலின் முகப்புப் பக்கத்தில் 'சிறுமியர்களுக்கு உபயோக மாகும்படி' என்று அடைப்புக் குறியில் போடப் பட்டு விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. மேலும் 'நூதன சித்ர விசித்ர விடுகவி களஞ்சியம்' என்று நூலின் தலைப்பு இடப்பட்டிருக்கிறது.

இந்நூல் எவ்வாறு தொகுக்கப்பட்டது என்ற குறிப்பை மேற்கண்ட பெண்மணிகள் மறந்தும் ஒரு இடத்திலும் தரவில்லை.ஆனால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் இந்நூல் பல நூல்களில் இருந்தும் சில மக்களிடம் புழக்கத்தில் இருந்தும் சேகரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. 1897 ஆம் ஆண்டு வெளிவந்த 'வினோத விடிகதை' என்ற நூலில் இருந்து அனைத்து விடுகதைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன என்பது ஆய்வின் வழி கண்டுபிடிக்கப்பட்டது. இந்நூலில் முதல் விடுகதைக்கு விடையாக விநாயகர் வரும்படியான கேள்வி அதாவது 'வினோத விடிகதை'யில் கேட்கப்பட்ட அதே கேள்வி அப்படியே கேட்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இந்நூலை அடுத்த ஆண்டே அதாவது 1929 ஆம் ஆண்டே சென்னையில் உள்ள ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை என்ற வெளியீட்டு நிறுவனத்தின் வழி மேற்கண்ட பெண்மணிகளே வெளியிட்டனர்.[13] இதன் முகப்புப் பக்கத்தில் சித்திரம்! விசித்திரம்! ஆனந்தம்! 352 விடிகள் அடங்கிய நூதன அற்புத விடுகவிக் களஞ்சியம் என்ற குறிப்புடன் 'வாலிபப் பெண்மணிகளுக்கு' உபயோகப்படும்படி என்ற குறிப்பும் இடம் பெறுகிறது. இப்பதிப்பில் சில விடுகதைகளை இவர்கள் புதிதாகச் சேர்க்கின்றனர்.

> ஐரோப்பியர்கள் பழமொழிகளை 19 ஆம் நூற்றாண்டில் தொகுக்க ஆரம்பித்தனர். இக்காலகட்டத்தில்தான் ஐரோப்பியர்கள் தமிழ், தமிழினம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர். இதுபோல் பழமொழிகளைத் தொகுப்பது இக்காலகட்டத்தில்தான் நடந்தது. இந்திய மொழிகளிலேயே முதலில் பழமொழிகள் தொகுத்து வெளியிடப்பட்டது தமிழ் மொழியில்தான். தமிழில் முதல் தொகுப்பு பீட்டர் பெர்சிவல் பாதிரியார் செய்ததாகும்.

இதற்கு அடுத்து 1937 இல் '356 விடிகள் அடங்கிய நூதன அற்புத விடுகவிக் களஞ்சியம்' என்ற தலைப்புடன் சென்னையைச் சேர்ந்த ஆர். ஜி. பதி கம்பெனி அந்நூலை வெளியிடுகிறது.[14] இப்பதிப்பகம் வெகுசன வியாபார பதிப்பகமாக அன்று செயல்பட்டது. இவ்விடுகதை நூலின் கடைசி அட்டை விளம்பரம் 'கொக்கோகம்' விளம்பரமாக உள்ளது. மேலும் 'முத்தத்தின்' மகிமை என்ற விளம்பரமும் உள்ளது என்பதன் மூலம் பதிப்பகத்தின் தரத்தை அறிய முடிகிறது.

ஆரம்பத்தில் இரண்டு பெண்கள் பெயரில் வெளிவந்த இந்த விடுகவிக் களஞ்சியம் இந்தப் பதிப்பில் ஒன்பது பெண்கள் பெயரில் வெளிவருகிறது. இதனை அந்தப் பதிப்பகம் ஸ்ரீமதிகள் நவப்பெண் ரத்தினங்கள் இயற்றியது என நூல் அட்டை முகப்பில் குறிப்பிடுகிறது. அந்த நவப் பெண்களின் பெயர்களும் அட்டையில் தொடுக்கப்படுகிறது. அவை வருமாறு

1. காரைக்குடி அம்மணி அம்மாள், 2. அரங்க நாயகி அம்மாள், 3. ம. மு. கண்ணம்மாள், 4. ம. மு. பாலதேவ குஞ்சரி அம்மாள், 5. நா. பிரபலாம்பாள், 6. பத்மாவதியாய், 7. தனலஷ்மி அம்மாள், 8. சரஸ்வதி பாய், 9. சுப்புலஷ்மி அம்மாள் ஆகியோராவர்.

1928 இல் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட பிரபலாம்பாள் அம்மாள் இந்தத் தொகுப்புகளில் ஐந்தாவது நபராக வைக்கப்படுகிறார். ஆனால் காரைக்குடி அம்மணி அம்மாள் முதல் இடத்திலேயே உள்ளார். இதன் மூலம் காரைக்குடி அம்மாள் தான் இந்த விடுகதைத் தொகுப்பில் யார் யாரைச் சேர்க்க வேண்டும், எந்த நிறுவனத்தில் வெளியிட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவராக இருக்கிறார் என்பதை யூகிக்க முடிகிறது. மேலும் முன் உள்ள தொகுப்பிற்கும் இந்தத் தொகுப்பிற்கும் 4 விடுகதைகளே அதிகம் உள்ள நிலையில் அதாவது 352, 356 ஆகவே உயர்ந்துள்ள நிலையில் கூடுதலாக ஏழு பெண்களைச் சேர்க்க வேண்டிய காரணம் என்னவென்று அறிய முடியவில்லை. இது தொகுப்பாளரின் அரசியலாக வெளிப்படுகிறது.

இந்த நூல் அதே வெளியீட்டு நிறுவனத்தால் 1940 இல் மறு பதிப்பு செய்யப்படுகிறது.[15] அதில் எவ்வித மாற்றமும் இல்லை. மேலும் 19-10-1945[16] மற்றும் 1959 இல்[17] இந்நூல் 16 பக்கமாகச் சுருக்கப்பட்டு வெளிவந்தது. இந்நூல் பல விடுகதைகளை நீக்கி சிறிய தொகுப்பாக ஆசிரியர்களால் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அதிகப் பக்கங்கள் கொண்ட ஒரு தொகுப்பாகவும், 16 பக்கங்கள் கொண்ட சிறிய தொகுப்பு நூலாகவும் இதன் பதிப்பாசிரியர்கள் தங்கள் விடுகதைத் தொகுப்பை பிற்காலத்தில் வெளியிட்டனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

(1897) வினோத விடுகதை மற்றும் பிற நூல்கள்

↓

1928 விடுகவி களஞ்சியம்
(இரண்டு பெண் ஆசிரியர்கள்)

↓

1929 விடுகவி களஞ்சியம் (352 விடுகதைகள் உள்ளன)
(இரண்டு பெண் ஆசிரியர்கள்)

↓

1937 விடுகவி களஞ்சியம் (356 விடுகதைகள் உள்ளன)
(ஒன்பது பெண் ஆசிரியர்கள்)

↓

1940 விடுகவி களஞ்சியம்
(ஒன்பது பெண் ஆசிரியர்கள்)

↓

1945 விடுகவி களஞ்சியம் (16 பக்கம்)
(ஒன்பது பெண் ஆசிரியர்கள்)

↓

1959 விடுகவி களஞ்சியம் (16 பக்கம்)
(ஒன்பது பெண் ஆசிரியர்கள்)

இப்படியாக இந்நூல் பல சிறிய பெரிய தொகுப்பாக மாற்றப்பட்டு வெளிவந்தாலும் எல்லாவற்றிலும் முதல் விடுகதைக்கு விடையாக 'விநாயகர்' வரும்படியே கேள்வி உள்ளது. மேற்கண்ட விவாதத்தின் ஊடாக காரைக்குடி அம்மணி அம்மாளால் தொகுக்கப்பட்ட விடுகவி களஞ்சியத்தின் தொகுப்பு வரலாற்றின் அரசியலை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இதனை பின்வரும்படி புரிந்து கொள்ளலாம்.

விடுகதைத் தொகுப்பு வரலாற்றில் மேற்கண்ட இரண்டு போக்குகளின் ஊடே சிலர் தனித் தனியாகவும் விடுகதைகளைத் தொகுத்து வெளியிட்டு வந்தனர்.

விடுகதைத் தொகுப்பில் சில போக்குகள்

விடுகதைத் தொகுப்புகளுக்கு பெயர் கொடுப்பதில் பல ஆசிரியர் பல்வேறு போக்குகளைக் கடைபிடித்தனர். விடுகதைக் களஞ்சியம், அலங்காரம், வினோத விடுகதைகள் போன்ற தலைப்புகளில் இவைகள் பதிப்பிக்கப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டில் இப்படியான போக்குகளின் ஊடே விடுகதை மஞ்சரி என்ற தலைப்புகளிலும் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. திரு எவ்வுளூர் வேங்கடாசல செட்டியாரவர்கள் குமாரர் இராமசாமி செட்டியார் அவர்கள் விடுகவி மஞ்சரி என்ற நூலை 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொகுக்கிறார். இந்நூல் 30 பாடல்களில் விடுகதைகளைக் கொண்டுள்ளது. இதே நூல் 1916 இல் விடுகவி மஞ்சரியும் விநோத விடுகதைகளும்[18] என்ற பெயரில் மறு பதிப்பாக வெளிவருகிறது. இதனை சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை பதிப்பிக்கிறது. விடுகவி மஞ்சரி என்ற பகுதியில் பழைய 30 பாடல் வடிவில் உள்ள விடுகதைகள் அப்படியே சேர்க்கப் பட்டுள்ளன. விநோத விடுகதை என்ற பகுதியில் 164 விடுகதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. புதிர் தன்மையில் இந்த விடுகதைகள் அமைந்துள்ளன. மேலும் அவை அந்நூலாசிரியராலேயே உருவாக்கப் பட்டுள்ளது என்பதை அதன் அமைப்பைக் கொண்டு அறிய முடிகிறது. உதாரணமாக,

1901 –ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தைக் காட்டிலும் ஏப்ரல் மாதம் மிகச் சிறியது, எதனால்?

1901 வருடம் பிப்ரவரி மாதம் வெள்ளிக்கிழமை பிறந்து வியாழக்கிழமை முடிகிறது. ஏப்ரல் மாதம் திங்கள் கிழமையில் ஆரம்பித்து செவ்வாய் கிழமையில் முடிகிறது.[19]

இப்படியான கேள்விகளைக் கொண்ட விடுகதைகள் நூல்களில் பல உள்ளன. இந்நூல் ஆசிரியரால் புதிர்போல் உருவாக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது என்பதை நூலை வாசிப்பதன் வழி அறியலாம்.

மேலும் இந்நூலின் கடைசியில் புதுருக்கள் அல்லது விடுகதைகள் என்ற தலைப்பில் சில விடுகதைகள் கொடுக்கப்பட்டுள்ளன. புதுருகள் என்ற பெயர் கொடுத்ததற்கு ஆசிரியர் சொல்லும் காரணம் வருமாறு : பிராமணக் குழந்தைகள் விடுகதைகளை புதுரு என்று சொல்வார்கள் என குறிப்பிடுகிறார். இதனாலேயே புதுருகள் என அவர் பெயர் கொடுத்ததை நம்மால் அறிய முடிகிறது. மேலும் இந்நூல் யாருக்காகச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் உணரலாம். இந்த புதுருகள் என்ற பகுதியில் 26 விடுகதைகள் உள்ளன. மேலும் நூலின் கடைசிப் பகுதியில் விசித்திரங்கள் என்ற பகுதி இடம்பெறுகிறது. இப்பகுதியில் 2 பக்க அளவில் கதை ஒன்றும் உள்ளது. விடுகதைத் தொகுப்பில் ஆசிரியர் ஏன் கதையைச் சேர்த்தார் என்று புரியவில்லை. இந்நூல் அமைப்பைப் பின்வரும்படி வரைபடத்தில் காணலாம்.

விடுகவி மஞ்சரி (19 ஆம் நூற்றாண்டு இறுதி

(30 பாடல்கள்)

↓

விடுகவி மஞ்சரியும் வினோத விடுகதைகளும் 1916

30 பாடல்கள் + 164 விடுகதைகள் + 26 புதுருகள் + 2 பக்கக் கதை

இப்படி ஒரு நூலுக்குள்ளே பல்வேறு தன்மைகளைக் கொண்ட விடுகதை நூல்கள் 20 ஆம் நூற்றாண்டில் வெளிவர ஆரம்பித்துவிட்டன. விடுகதைகள் தொகுப்பு வரலாற்றில் 1950 களுக்குப்பின் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. விடுகதைகளை மாணவர்களுக்காகத் தொகுப்பது பொழுது போக்கிற்காகத் தொகுப்பது என்ற முறைகளில் தொகுப்பு நூல்களின்

எண்ணிக்கை அதிகரித்தது. 1950 களுக்குப்பின் வெளிவந்த சில விடுகதை நூல்கள் வருமாறு :

1961, 1966- விடுகதைக் களஞ்சியம் - தொகுப்பாசிரியர் ரோஜா முத்தையா
1962- களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள் - வ. மு. இராமலிங்கம்
1962- வெளிநாட்டு விடுகதைகள் - அழ. வள்ளியப்பா
1975- தமிழில் விடுகதைகள் - ச. வே. சுப்பிரமணியம்
1977- சிறுவர்க்கான விடுகதைப் பாட்டுகள்
1982- காதலர் விடுகதைகள் - பதிப்பாசிரியர் ஆறு. இராமநாதன்.
1987- வேடிக்கை விடுகதைகள் - பதிப்பாசிரியர். லேனா தமிழ்வாணன்
1989- விடுகதைகள் 1000 - ஏ. எஸ்.
1991- வழித்துணைராமன்
1989- அறிவியல் விடுகதைகள் - மாலிறையன் துரை
1992- திறன் வளர்க்கும் விடுகதைகள்- மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு
2000- வித்தியாசமான விடுகதைகள் 2000 - ஸ்ரீமதி லஷ்மி
2000- விநோதமான விடுகதைகள் - கொ. மா. கோதண்டம், பா. முருகேசன்.
2001- பொது அறிவூட்டும் விடுகதைகள் - ராஜன் பாபு
2002- விடுகதை விளையாட்டு - இ. லிங்கசாமி
2004- விடுகதை பாணியில் 1000 ஐக்யூ புதிர்கள் - அப்பாஸ் மந்திரி
2005- குறும்பரின் விடுகதைகள் - வே. சிதம்பரநாத பிள்ளை
2006- வேடிக்கையான விடுகதைகள் - 1000 சிவமதி (எடையூர்)
2006- வியப்பூட்டும் விடுகதைகள் 1000 தொகுப்பு. சே. பெரியதம்பி
2006- விதவிதமான விடுகதைகள் - தொகுப்பு. விஜயவர்மன்
2007- விந்தையான விடுகதைகள் - டி. வி. பாலு

மேற்கண்ட பட்டியலைப் பார்க்கும் போது விடுகதைத் தொகுப்புகளுக்குப் பெயர் கொடுப்பதில் ஏற்பட்ட மாற்றங்களை அறிய முடிகிறது. இந்நூல்களில் 1961 ஆம் ஆண்டு ரோஜா முத்தையாவால் தொகுக்கப்பட்ட விடுகதைக் களஞ்சியம் நல்ல முறையில் தொகுக்கப்பட்டுள்ளது.[20] அகர வரிசைப் படுத்தப்பட்ட தொகுப்பாகவும் விடைகள் பொருள் அடிப்படையிலும் கொடுக்கப் பட்டுள்ளது. விடுகதைக்கான விடைகளை முதலில் பொருள் அடிப்படையில் தொகுத்துக் கொடுத்தது இந்நூலே ஆகும். இதற்கு அடுத்த நிலையில் 1975 இல் ச. வே. சு. வின் தொகுப்பான[21] தமிழில் விடுகதைகள் என்ற நூல் சிறந்த தொகுப் பாகக் கருதலாம். தொடக்கத்தில் விரிவான முன்னுரையுடன் இந்நூல் அமைந்துள்ளது. மேலும் அந்நூல் எவ்வாறு தொகுக்கப்பட்டது என்ற தொகுப்பு வரலாற்றையும் ஆசிரியர் முன்னுரையில் தெளிவாக விளக்குகிறார். இதற்குப் பின் குறிப்பிடும்படியான தொகுப்புகள் எதுவும் வெளிவரவில்லை.

நேரடியாக களஆய்வின் வழி திரட்டித் தரப் பட்ட தொகுப்பாக 2005 இல் வெளிவந்த குறும்பரின் விடுகதைகள் என்ற நூல் உள்ளது. மேற்கண்ட பட்டியலைப் பார்த்தால் இது போன்ற விடுகதைத் தொகுப்புகள் பெரிய அளவில் இல்லாதது புலப்படும்.

விடுகதைகளை வியப்பூட்டுவதாகவும், விந்தையாகவும் கற்பிக்கும் தொகுப்புகளே இக்கால கட்டத்தில் அதிகம் வெளிவருகின்றன. 1990களுக்குப் பின் விடுகதை நூல்களின் தலைப்புகள் எண் கொடுத்து விடுகதைகள் 1000, விடுகதைகள் 2000 என வந்துள்ளதை அறிய முடிகிறது. இது விடுகதை நூல்களுக்குப் பெயர் கொடுப்பதில் ஏற்பட்ட மாற்றங்களைக் காட்டுகிறது. 2004 இல் விடுகதை பாணியில் 1000 ஐக்யூ புதிர்கள்[22] என்ற விடுகதை நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் அறிவாற்றலைச் சோதிக்கும் நூலாகவே உருவாக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் விடுகதைகள் அறிவைச் சோதிக்கும் நூல்களாக இன்று மாற்றமடைகின்றன என்பதை உணரமுடிகிறது.

முடிவாக

விடுகதை நூல்கள் இன்று பொழுது போக்கு நூல்களாக மாற்றப்பட்டு சந்தைப்படுத்தப்படுகிறது. அதிலும் தொகுப்பாசிரியர்களிடம் நேர்மை இல்லை என்பதையே மேற்கண்ட ஆய்வின் ஊடாக அறிய முடிகிறது. தொகுப்பாசிரியர்கள் நேரடி களஆய்வின் வழி நாட்டார் மக்களிடம் விடுகதைகள் சேகரித்தால் அச்சில் ஏறாத பல விடுகதைகள் நமக்குக் கிடைக்கும். மேலும் வட்டார அடிப்படையில் தொகுப்பதன் மூலம்

அவை பரந்த ஆய்வுகளுக்கு வழி வகுக்கும். இதுபோன்ற முயற்சிகள் பழமொழித் தொகுப்புகளுக்கு நடந்துள்ள போதிலும் விடுகதைகளுக்கு நடைபெறவில்லை என்பதை தமிழ் விடுகதைத் தொகுப்பு வரலாற்றைப் பார்ப்பதன் வழி அறியலாம்.

சான்றுகள்

1. சி. இளங்கோ - பழமொழித் தொகுப்புகள், பல்கலைப் பதிப்பகம், சென்னை24, மு.ப. 2003.
2. மேற்படி,பக். 99-100, மு.ப. 2003.
3. மேற்படி,பக். 99-100, மு.ப. 2003.
4. தே. லூர்து - தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு (ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980.
5. சி. இளங்கோ - பழமொழித் தொகுப்புகள், பல்கலைப் பதிப்பகம், சென்னை24,பக் 101, மு.ப. 2003.
6. கே. ஜி. எஃப். பழனிச்சாமி - பழமொழிகளும் பின்னணி நகைச்சுவைகளும், மணிமேகலைப் பிரசுரம்,சென்னை, ப. 33, 1997.
7. வினோத விடிகதை, சென்னை புரசை சுந்தரவிலாச அச்சுக்கூடம், 1897.
8. பு. எ. பார்த்தசாரதிப் பிள்ளை - வினோத விடுகதை, சென்னை புரசை. நாராயண சாமிப் பிள்ளையவர்களது நந்தமிழ் விலாச அச்சியந்திர சாலை, 1903.
9. வே. சுந்தரம் பிள்ளை - இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம், காரைக்கால் முகம்மது சமதானி அச்சுக்கூடம், 1903.
10. கோ. சீனிவாசப் பிள்ளை, - இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம், சங்கநிதி விளக்க அச்சுக் கூடம், 1911.
11. இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம், பி. இரத்தின நாயகர் ஸன்ஸ், திருமகள் விலாச அச்சியந்திர சாலை, சென்னை, 1941.
12. அம்மணியம்மாள், பிரபலாம்பாள் - விடுகவி களஞ்சியம், முரஹரி அச்சுக்கூடம், மதுராந்தகம், 1928.
13. அம்மணியம்மாள், பிரபலாம்பாள் - விடுகவி களஞ்சியம், ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தக சாலை, பார்க் டவுன் போஸ்ட், சென்னை, 1929.
14. அம்மணியம்மாள், பிரபலாம்பாள் - (நவப்பெண் இரத்தினங்கள்) விடுகவி களஞ்சியம், ஆர். ஜி. பதி. கம்பெனி, சென்னை, 1937.
15. மேற்படி , 1940.

விடுகதைகளைத் தொகுக்கும் வேலைகளில் ஐரோப்பியர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. பழமொழிகளைப்போல் மதப்பிரச்சாரத்திற்கு அவற்றைப் பயன்படுத்த முடியாது என்ற காரணத்தாலே அவர்கள் விடுகதைகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால் அவர்கள் தொகுத்த பழமொழிகளில் சில விடுகதைகளும் உள்ளன என்பது சுவையான செய்தி.

16. மேற்படி ,1945.
17. மேற்படி , 1959.
18. எவ்வுளூர் இராமசாமிச் செட்டியார் - விடுகவி மஞ்சரியும் விநோத விடுகதைகளும், மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, 87, தம்பு செட்டி வீதி, சென்னை, 1916.
19. மேற்படி, பக்.149.
20. ரோஜா முத்தையா - விடுகதைக் களஞ்சியம், செல்விப் பதிப்பகம், காரைக்குடி, 1961.
21. ச. வே. சுப்பிரமணியன் - தமிழில் விடுகதைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 1975.
22. மு. அப்பாஸ் மந்திரி, விடுகதை பாணியில் 1000 ஐக்யூ புதிர்கள், சுரா புக்ஸ், சென்னை40, 2005.

■









கதைப்பாடல்கள்

கு.சுதாகர்

தமிழ்ச் சமூக வரலாற்றில் நாட்டார் வழக்காற்றியல் துறைக்கென்று தனித்ததொரு இடமுண்டு. நாட்டார் வழக்காறுகளில் தாலாட்டு, பழமொழி போன்ற எல்லாவற்றையும் விட கதைப்பாடலுக்குச் சிறப்பிடம் உண்டு. காரணம் ஒரு சமூகத்தின் வரலாற்றையும் பண்பாட்டு விழுமியங்களையும் கண்டறிவதற்கு நாட்டார் வழக்காறுகளில் மிகவும் உறுதுணையாக இருப்பது கதைப்பாடல்களே. கதைப்பாடல்களை வகைப்படுத்திய அறிஞர்கள் பலரும் சமூக வரலாற்று கதைப்பாடல்கள் எனும் பகுப்பு முறைமையில் கூறுவதைக் காணமுடிகின்றது. கதைப்பாடல்கள் வழங்கப்படும் வட்டாரம் சார்ந்து வாழும் மக்களின் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துவது மட்டுமின்றி அக்கால சமூக வரலாற்று நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் ஆவணமாகவும் திகழ்கின்றது.

கதைப்பாடல் குறித்து ஆராய்ந்த நா. வானமாமலை, மு.அருணாசலம், சு. சண்முகசுந்தரம் எனப் பலரும் கதைப்பாடலில் இருக்கும் வரலாற்றுத் தரவுகளை எடுத்துக்காட்டுகின்றனர். கதைப்பாடல்களில் வெளிப்படும் வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் காலத்தைக் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையிலுமானதாக அதன் காலத்தை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கதைப்பாடல்களின் முக்கியத்துவத்தை மு. அருணாசலம் குறிப்பிடும்போது,

'வரலாற்றுச் சான்றுகள் அழிந்துவிட்ட அல்லது அழிக்கப்பட்டுவிட்ட சமயங்களில் நாட்டுப்புறப்பாடல்கள், குறிப்பாக கதைப்பாடல்கள் வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவிபுரியும். தமிழிலுள்ள வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு கதைப்பாடல்கள் 17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்து 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தை மறுஆய்வு செய்வதற்கான வரலாற்று ஆதாரங்களை உள்ளடக்கியுள்ளன. (2003 : 14) என்று குறிப்பிட்டிருப்பதை ச. இரவி எடுத்துக் காட்டுகின்றார். நா. வானமாமலை ஐவர் நாடகங்கள் கதையின் பதிப்பு ஆராய்ச்சியில் கதைப்பாடலின் காலத்தை ஆராய்ந்து கி.பி 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்து தொடங்குவதைக் கூறுகின்றார்.

கதைப்பாடல்களில் இடைக்காலச் சமூகம் குறித்து ஆராய்ந்திருந்த வே. சுவாமிநாதன் குறிப்பிடும்போது.

'செவ்வியல் இலக்கியங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றுக்கு இணையாகக் கதைப்பாடல்களும் மிக முக்கியமான தடயங்களைக் கொண்டிருக்கின்றன. கல்வெட்டுகள், அரசு ஆவணங்கள் முதலியவற்றில் குறிப்பிடப்படும் செய்திகளை உறுதிசெய்வதற்கு ஏற்ற துணைச் சான்றுகளாகவும் கதைப்பாடல்கள் விளங்குகின்றன' (2003 : 15) என்று குறிப்பிடுவதிலிருந்து கதைப்பாடல்களின் முக்கியத்துவத்தை அறியலாம்.


தமிழகத்தில் வழங்கப்படும் கதைப்பாடல்களின் சிறப்பைக் குறிப்பிடும்போது, மேலைநாட்டு கதைப்பாடலுக்கும் நம்மிடத்தில் வழங்கப்படும் கதைப்பாடலுக்குமான வேறுபாடுகளை அறிவது அவசியமாகும். ஆங்கிலக் கதைப்பாடல்களில் மிகப் பெரியவையே நாலடிகளைக் கொண்ட 25 பாடல்களாக அமைந்திருக்க தமிழில் சிறிய கதைப் பாடல்களின் வரிகள் 2000 ஆக அமைந்திருக்கின்றன. அதிகமாக இருக்கும் அண்ணன்மார் சுவாமி கதைப்பாடல் காப்பியத் தன்மைக்கு உரிய அத்தனைக் கூறுகளையும் பெற்றிருக்கின்றது என்று மேலை நாட்டறிஞர் பிரெண்டா பெக் குறிப்பிடுவதாக தே. லூர்து (2000 : 117) எடுத்துக்காட்டுகின்றார்.

வரலாற்றுத் தரவுகளையும் வட்டாரம் சார்ந்து குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு அம்சங்களையும் கொண்டிருக்கும் கதைப்பாடல்கள் தொகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இதுவரையிலும் வந்துள்ள கதைப்பாடல்கள் பதிப்பு மற்றும் தொகுப்பு முறைமைகளைச் சுட்டிக்காட்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

தமிழ் நூல்களின் தொகுப்பு முறைமையைச் சங்க இலக்கிய காலத்தில் இருந்தே குறிப்பிட்டாலும் தமிழ் நூல்களைத் தொகுக்கும் முயற்சி முதன் முதலில் ஜான் மார்டாக் எனும் அறிஞரிடமிருந்தே தொடங்குகின்றது. தமிழில் அச்சாகியுள்ள நூல்களின் விவர அட்டவணை ஒன்றைக் கி.பி. 1865 இல் இவர் வெளியிட்டிருந்தார். இந்நூலில் தமிழ்மொழி - இலக்கியம் குறித்த 101 பக்கம் கொண்ட ஆராய்ச்சி முகவுரையும் எழுதியிருந்தார். தமிழ் நூல்தொகை பட்டியலில் இதனையே முதல் நூலாகக் கூறவேண்டும் என்று சுந்தர சண்முகனார் (1972-95) குறிப்பிடுகின்றார். இதனைத் தொடர்ந்து கர்னல் மெக்கன்சி சுவடித் தொகுப்பும் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை நூற்றொகைப் பட்டியலும் தந்துள்ளனர். தமிழக அரசு தமிழில் புதுப்பிக்கப்பட்ட நூல்களை ஆண்டுவாரியாகத் தொகுத்து அவற்றை வகைப் படுத்தியதோடு அதற்குள்ளும் உட்தலைப்புகளிட்டு நூல் பதிப்பின் விவரத்தைப் பட்டியலிட்டிருந்தது. ஏழு தொகுதிகளைக் கொண்ட தமிழ்நூல் விவர அட்டவணையில் தான் 'கதைப்பாட்டு' என்னும் தலைப்பின்கீழ் கதைப்பாடல்களின் பதிப்பு விவரங்கள் முழுவதையும் ஆண்டுவாரியாக அறிந்து கொள்ளவும் அப்பதிப்பில் ஈடுபட்டோர் குறித்து அறிந்து கொள்ளவும் வழி வகுத்தது.

அச்சு ஊடக வருகைக்குப்பின் சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள் எனத் தொடங்கி நவீன புனைகதை வரையிலும் தொகுத்து அவற்றைப் பதிப்பிக்கும் முறைகள் செயல்பட்டு வருகின்றன. புனைகதை எழுத்தாளர்களின் கதைகள், வட்டாரம் சார்ந்தும் தனிநபர் சார்ந்தும் தொகுக்கப்பட்டு காலவரிசையில் பதிப்பிக்கும் சூழல் உருவாகியிருப்பதாகக் காணமுடிகின்றது. சான்றாக, பாட்டும் தொகையும் - எஸ். வையாபுரிப்பிள்ளை, ஜீவானந்தம் ஆக்கங்கள் - வீ. அரசு, கரிசல் வட்டாரக் கதைகள் - கி. ராஜநாராயணன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாட்டார் வழக்காற்றியல் கூறுகளிலும் சிலவற்றை மட்டும் தொகுத்துப் பதிப்பித்திருக்கும் செயல்பாடு கவனிக்கப்பட வேண்டியவை. பழமொழி, தாலாட்டு போன்றவற்றைத் தொகுத்து வெளிக்கொண்டு வந்திருப்பதைக் காணலாம். சான்றாக, தமிழ்ப்பழமொழிகள் (பத்து தொகுதிகள்) - கி.வா. ஜகநாதன், தாலாட்டு தொகுப்புநூல் - தமிழண்ணல் மற்றும் பலவற்றைக் குறிப்பிடலாம்



கு. சுதாகர்: இவர் தற்போது சென்னை டி.ஜி. வைணவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இவரின் நூல்கள் 'இருபதாம் நூற்றாண்டு: தமிழ் ஊடகங்கள்' (தொகுப்பு), 'கண்ணகி கதைகள், கண்ணகி சிலை'.

ஆனால் கதைப்பாடலுக்கென்று தனியாக தொகுப்பு வந்துள்ளதா? என்றால் அவை ஆராயப்படவேண்டியதாகிறது.

கதைப்பாடல்களின் தொகுப்பு முறைமைகளை அறிந்து கொள்வதற்கு கதைப்பாடல் குறித்து தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும். பாடல் வடிவில் வழங்கப்படும் கதைகளையே கதைப்பாடல் (Balled) என்று குறிப்பிடுகின்றோம். கதைப்பாடல்கள் - கதை, அம்மானை, பாட்டு, மாலை, வெற்றி, ஏற்றம், கும்மி, குறவஞ்சி, காவியம், வனவாசம், சோபனம், மசக்கை, உபாக்கியானம், சரிதம், விருத்தம், பூசை, வாக்கியம், கீர்த்தனை, சண்டை, போர், படைப்போர், யாகம், குறம், சிந்து, தூது, வில்லுப்பாட்டு என்று வேறு பெயர்களிலும் வழங்கப்படுவதை சு. சக்திவேல் (1992-85) எடுத்துக் காட்டுகின்றார். இவ்வடிவங்களில் உள்ள எல்லாவற்றையும் கதைப்பாடல் என்று கூறிவிட முடியாது. இவ்வடிவங்களில் கதையோடு கூடிய பாடல்களை மட்டுமே கதைப்பாடலாகக் கூறமுடியும்.

தமிழின் பழமையான இலக்கிய, இலக்கணங்கள் பதிப்பிக்கத் தொடங்கிய காலகட்டத்திலேயே கதைப்பாடல்களும் பதிப்பிக்கப்படத் தொடங்கி விட்டன. கதைப்பாடல்களின் அச்சிடப்பட்ட வரலாற்றை மு. அருணாசலம் (1971: 75-80) ஐந்து வகையாகப் பகுத்துக் குறிப்பிடுகின்றார். (2202) - குஜிலி கடை பதிப்பு - பவானந்தம் பிள்ளை பதிப்பு

- வையாபுரிப்பிள்ளை பதிப்பு - சரஸ்வதி மஹால்

- மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்

என்று இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்தே மு. அருணாசலம் பகுப்பு செயல்பாட்டைக் குறிப்பிடுகின்றார். புகழேந்திப் புலவரின் பெயரால் வழங்கப்பட்ட கதைப்பாடல்கள் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலேயே பதிப்பிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. புகழேந்திப் புலவர் இயற்றியதாகப் பத்துக்கும் மேற்பட்ட கதைகளைக் காண முடிகின்றது. அவற்றில் நல்லதங்காள் கதை, கோவலன் கதை, காத்தவராயன் கதை, சிறுதொண்ட பக்தன் கதை ஆகியவை 19ஆம் நூற்றாண்டிலேயே பல பதிப்புகளைக் கண்டுள்ளன. கதைப்பாடல்கள் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்ட நா. வானமாலை தொடங்கி கு.நா.பெருமாள் வரையிலும் புகழேந்தி புலவரால் எழுதப்பட்டதாகக் கூறுவதை மறுத்தும் அவற்றின் விளக்கங்களை விசாரிப்பதாகவும் ஆய்வுகள் அமைந்தன.

பதிப்பு வரலாறு

கதைப்பாடல்களில் முதன்முதலில் பதிக்கப்பட்டவையாக 1868இல் வெளிவந்த அமராவதி கதையை சு. சண்முகசுந்தரம் சுட்டிக்காட்டுகின்றார். தமிழ் நூல் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள தகவலின் அடிப்படையிலேயே இக்கருத்தை முன்வைக்கின்றார். இதற்கு முன்பு வேறு ஏதேனும் கதைப்பாடல் பதிப்பிக்கப் பட்டிருக்குமா? என்பது ஆய்வுக்குரியது.

19ஆம் நூற்றாண்டில் பதிப்பிக்கப்பட்ட சில கதைப்பாடல்கள் குறிப்பிட்ட ஆண்டுகளில் தொடர்ச்சியானதொரு பதிப்பைக் கண்டுள்ளது. தமிழகத்தில் நல்லதங்காள் கதைப்பாடல் அம்மானை வடிவில் 1869 இல் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1873, 1874, 1875, 1879, 1880, 1887 என தொடர்ந்து பல பதிப்புகள் வந்திருப்பதாக சு. சண்முகசுந்தரம் (2004:4) குறிப்பிடுவார் என்று பரசுராம் உபி பெருமாள் எடுத்துக் காட்டுகின்றார். கோவலன் கதையும் 1873 இல் டி.கி. பரசுராம் முதலியார் - முத்திராஷர சாலையில் பதிப்பித்திருந் தார். அதனைத் தொடர்ந்து கோவலன் கதை ஏ. மொட்டைநாட்டான் என்பவரால் 1874-இல் பதிப்பிக்கப்பட்டது. அதன்பிறகு 1881, 1882, 1887, 1888 எனத் தொடர்ந்து பதிப்பிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கதையை ஒரே பதிப்பகம் வெளியிடவில்லை. இரத்தின நாயக்கர் சன்ஸ், கலைமகள் கம்பெனி, ஸ்ரீமகள் கம்பெனி, வித்திய வினோத அச்சுகூடம், ஆர்.ஜி. பதி கம்பெனி போன்ற பதிப்பகங்களின் பணி குறிப்பிடத்தக்கவை. இதன் ஊடாக மக்கள் மத்தியில் கதைப் பாடல் பெற்றிருந்த செல்வாக்கை விளங்கிக் கொள்ளலாம்.

19ஆம் நூற்றாண்டில் 60க்கும் மேற்பட்ட கதைகள் அச்சுவாகனமேறியதாகச் சுசண்முகசுந்தரம் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்த கதைப்பாடல்களின் பட்டியலைக் கொடுப்பது இவரே எனலாம். இருபதாம் நூற்றாண்டில் 20 கதைப்பாடல்கள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டிருப்பதாக (1980 களின் நிலவரப்படி) குறிப்பிடுகின்றார். மேலும் இந்நூற்றாண்டில் பதிப்பின் ஆண்டு அறியப்படாத கதைப் பாடல்களாக 19 கதைகளைச் சுட்டிக் காட்கின்றார் (1980-10). இதிலிருந்து 19 ஆம் நூற்றாண்டில் கதைப்பாடலுக்கு நிகழ்ந்த பதிப்பு முயற்சிகள் கூட 20 ஆம் நூற்றாண்டில் நிகழவில்லை என்பதை உணரலாம். 19ஆம் நூற்றாண்டில் கதைப்பாடல்களைப் பதிப்பிப்பதில் ஈடுபட்ட பதிப்பகங்களையும் (மேலே காட்டப் பட்டுள்ள பதிப்பகங்கள்) அதன் செயல்பாடுகளையும்

ஆராய்வதின் ஊடாக தொடக்காலப் பதிப்பு வரலாற்றில் கதைப்பாடலுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவமும் அந்நூற்றாண்டில் வெளிவந்த கதைப்பாடல்கள் பற்றிய ஓர் முழுமையான தொகுப்பினைக் கொண்டுவர வழிவகுக்கும்.

பட்டியல் இடுதல்

கதைப்பாடல்கள் குறித்த அறிமுகத்தோடு நூலில் விவாதிக்கப்பட்ட கதைப்பாடல்களின் பட்டியலை - முதன்முதலில் மு. அருணாசலம் 'Balled Poetry (1976) எனும் ஆங்கில நூலில் கொடுக்கின்றார். இந்நூலில் 170க்கும் மேற்பட்ட கதைப்பாடல்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். 20 ஆம் நூற்றாண்டு வரையிலும் பதிப்பில் வந்துள்ள கதைப்பாடல்களாக நூறுக்கும் குறைவாகவே சு. சண்முகசுந்தரம் எடுத்துக் காட்டுகின்றார். இதனைக் கருத்தில் கொள்ளும்போது பதிப்பிக்கப் படாத கதைப்பாடல்களையும் இணைத்தே மு. அருணாசலம் பட்டியலிட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

கதைப்பாடல் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு மு. அருணாசலத்தின் நூலே ஆதாரமாக இருந்தது. கதைப்பாடல்களைப் பட்டியல் இட்டுக் கொடுக்கும் இவரது முறைமையைப் பின்பற்றித் தமிழில் கதைப்பாடல் எனும் நூலெழுதிய க.நா.பெருமாள் அச்சில் வராத அல்லி கதையைப் பதிப்பித்த இ. சுந்தரமூர்த்தி (1989) ஆகிய இவ்விருவரும்தான் கதைப் பாடல்கள் குறித்த பட்டியலைக் கொடுக்கின்றனர். இவர்களைத் தொடர்ந்து பின்வந்தவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களா? என்பது அறியமுடியவில்லை.

மு. அருணாசலம் கதைப்பாடல்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பின்வந்த இருவரும் அதிகமாகவே கூறுகின்றனர். அ.கா. பெருமாள் கொடுத்துள்ள கதைப்பாடல்களின் பட்டியலுக்கும் அதன் பிறகு கதைப்பாடல் பட்டியல் கொடுத்துள்ள இ. சுந்தரமூர்த்திக்கும் இடையே இருவரும் குறிப்பிடும் கதைகள், ஒருவர் கூறி இன்னொருவர் கூறாது விட்ட கதைகள் என்று பகுத்துத் தொகுக்கும்போது 100க்கும் மேற்பட்ட கதைகளைக் கண்க்கிடமுடிகின்றது. மு. அருணாசலம் கூறிய கதைகள் சிலவற்றை இருவரும் கூறாமல் விட்டிருப்பதும் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் காணலாம். இவர்களிடமிருந்து தலைப்பு நோக்கி கதைப்பாடல்களின் பட்டியலைத் தொகுத்தபோது 300க்கும் மேற்பட்ட கதைகளை அடையாளம் காணமுடிகிறது.

கள ஆய்வில் கதைப்பாடல் திரட்டுதல்

கதைப்பாடல்கள் பதிப்பு 1950 இன் முன்பு வரையிலும் சுவடியில் இருந்து பெறப்பட்டவற்றை மட்டுமே அப்படியே அச்சில் கொண்டுவந்துள்ளன. 19ஆம் நூற்றாண்டில் பதிப்பிக்கப்பட்ட பல கதைப்பாடல்கள் சீர்பிரிக்காமலும் பிழைகளைக் கூட சரிவர களையாமலும் பதிப்பாகியுள்ளன. சுவடியில் உள்ளதை உள்ளபடியே ஆங்காங்கே ஐதீகப் படங்களுடன் பதிப்பிக்கும் போக்கே நிலவியது. அவற்றை நாம் இங்கே ஆராயவில்லை. 1951 இல் இராமப்பய்யன் அம்மானை என்னும் கதைப்பாடலை ஆராய்ச்சி உரையுடன் எஸ். வையாபுரிப்பிள்ளை சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாகக் கொண்டு வந்தார்.

> 'செவ்வியல் இலக்கியங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றுக்கு இணையாகக் கதைப்பாடல்களும் மிக முக்கியமான தடயங்களைக் கொண்டிருக்கின்றன. கல்வெட்டுகள், அரசு ஆவணங்கள் முதலியவற்றில் குறிப்பிடப்படும் செய்திகளை உறுதிசெய்வதற்கு ஏற்ற துணைச் சான்றுகளாகவும் கதைப்பாடல்கள் விளங்குகின்றன'

ஆராய்ச்சியுடன் கூடிய பதிப்புச் செயல்பாடு இவரிடமிருந்தே தொடங்குகின்றது எனலாம்.

1960களில் நா. வானமாமலை கதைப்பாடல் களைச் சுவடியிலிருந்து பெற்றதோடு கள ஆய்வினையும் மேற்கொண்டு ஒன்றிற்கும் மேற்பட்ட சுவடிகளைத் திரட்டி ஒப்புநோக்கி பதிப்பிக்கும் பணியை மேற்கொண்டார். கட்டபொம்மு கூத்து (1961) எனும் கதைப்பாடலை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் மூலம் நா. வானமாமலை பதிப்பித்திருந்தார். 2ம் பதிப்பு நூல் தற்போது கிடைக்காததால் அந்நூலில் எழுதியுள்ள முன்னுரையுடன் 1972 இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் வெளியிடுவதாக நா.வானமாமலை குறிப்பிடுகின்றார்.

நா. வானமாமலைக்கு முன்பே கட்டபொம்மு கதைப்பாடலை சிரஞ்சீவி என்னும் எழுத்தாளர் பகுதிபகுதியாகக் கதைப்போக்கோடு சேர்த்து உரைநடை வடிவில் வெளியிட்டிருந்தார். இரண்டாவது முழுமையான கதைப்பாடல்

ஆகாது (1972 : 5) என்று நா.வானமாமலை குறிப்பிடு கின்றார். அவர் கதையைப் பதிப்பிக்க வேண்டு மென்று முயற்சி மேற்கொண்டபோது அக்கதைப் பாடலுக்குள் கிளைக்கதையாக வழங்கப்பட்ட வீணாதி வீணன் கதையைத் தனியாக 1967 இல் என்.சி.பி.எச் நிறுவனத்தில் பதிப்பித்திருந்தார். இதற்குப் பின் நா. வானமாமலையால் பதிப்பிக்கப்பட்ட காத்தவராயன் கதைப்பாடல் (1971), முத்துப்பட்டன் கதை (1971) கான்சாகிபு சண்டை (1972) ஐவர்கதை (1974) ஆகியவை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டன. கதைப்பாடல்கள் பதிப்புச் செயல்பாட்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துக்கும் முக்கியப் பங்குண்டு. நிறுவனம் சார்ந்து வெளிவந்துள்ள கதைப்பாடல்களைத் திரட்டி- அரங்கவழி ஊடாகத் தமிழ்ச் சமூக வரலாற்றில் கதைப்பாடல்களின் முக்கியத்து வத்தினை உணரமுடியும்.

ஐவர் ராசாக்கள் கதையைப் பதிப்பிக்க, நா. வானமாமலை தனக்குக் கிடைத்த ஒரு பிரதியை மட்டும் கொண்டு பதிப்பிக்கவிரும்பவில்லை. இக்கதைப்பாடல் தொடர்பான வேறு பிரதிகளையும் தேடி அலைந்தார். அருணாசல கவுண்டர் அனுப்பிய ஏட்டுப் பிரதியில் (1828 இல் எழுதப்பட்ட குறிப்பு) முழுக் கதையும் இருந்தது என்று நா.வானமாமலை குறிப்பிடுகின்றார். தொடர்ந்து பத்து ஆண்டுகளாக இக்கதைப்பாடலைத் தேடியதாகவும் குறிப்பிடுகின்றார். ஆறுமுக பெருமாள் நாடார் என்பவரிடமிருந்து ஒரு பிரதியைப் பெற்று ஒப்புநோக்கி ஆராய்ச்சியுரையுடன் முழுமையான பதிப்பை 1974 இல் கொண்டு வந்தார். 'மாலையம்மன் கதை' என்று தலைப்பிடப்பட்ட பிரதி ஒன்று கிடைத்ததாகவும் அக்கதை ஐவர் ராசாக்களின் பிறப்பு மற்றும் அவர்களின் தாயார் மாலையம்மன் குறித்த செய்திகளையும் கொண்டிருந்தது. அதனைத் தனியாகப் பதிப்பிக் காமல் ஐவர் ராசாக்கள் கதையில் ஒரு பகுதியாகவே பதிப்பித்திருந்தது கவனிக்கத்தக்கது.

அல்லியரசாணி, பவளக்கொடிமாலை, பொன்னுருவி, மசக்கை, ஏணியேற்றம் போன்ற கதைகளை இதிகாசத் துணுக்குகள் எனும் வகைமையில் கதைகூறிச் சுருக்கத்தை மட்டும் கூறி, புராண கதாபாத்திரங்கள் தமிழ் பண்பாட்டுக்கு ஏற்றாற்போல் மாறி உருவாக்கப் பட்டுள்ளதாக நா.வானமாமலை (1992:130) கூறுகின்றார்.

சமூக நோக்கிலான கதைப்பாடல்களைப் பதிப்பிப்பதில்தான் நா.வானமாலை அதிகம் கவனம் செலுத்தினார். அதற்கான ஆராய்ச்சியிலும் தீவிரமாகச் செயல்பட்டார். காத்தவராயன் கதைப்பாடல் பதிப்பின் முன்னுரையில்

"சமூக சீர்திருத்த ஆற்றல் கொண்ட இலக்கியங்களை அழிக்கவும் மாற்றவும் சிதைக்கவும் மேல் சாதியினரும் சீர்திருத்தங்களால் தம் செல்வாக்கை இழக்கக் கூடியவர்களும் முயன்று வந்திருக்கிறார்கள். அதனைத் தடுக்க ஆராய்ச்சி யாளர்கள் முயன்றால் கதைப்பாடல்களில் நாட்டு மக்கள் படைப்பான பகுதியையும் அதற்கு முரணான இடைச்செருகல் பகுதியையும் எளிதில் அறியலாம்." (1971:6)

இவ்வாறு கூறுவதிலிருந்து சமூக நோக்கிலான வரலாற்றுத் தொடர்புடைய கதைப்பாடல்களைத் திரட்டிப் பதிப்பிக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டிருப்பதை விளங்கிக் கொள்ளலாம்.

ஐவர் ராசாக்கள் கதையைப் பதிப்பித்த நா. வானமாமலை, அக்கதையோடு தொடர்புடைய கதைகளாகப் பஞ்சபாண்டவர் கதை, வெட்டு பெருமாள் கதை, கன்னடியின் படைப்போர், மன்னன் மருப்பின் கதை, உலகம் முழுதுடையாள் கதை, வீணாதி வீணன் கதை போன்றவற்றையும் சுட்டிக்காட்டுகின்றார். இக்கதைப்பாடல்களில் இரண்டு மட்டுமே நா.வானமாமலையால் பதிப்பிக்கப்பட்டவை. இக்கதைப்பாடல்களின் பதிப்புப் பின்புலத்தை விரிவாகக் குறிப்பிட்டிருப் பதின் நோக்கம் ஒரு கதைப்பாடலோடு தொடர்புடைய பிற கதைப்பாடல்களையும் அறிந்து கொள்வதின் ஊடாக, ஓர் குறிப்பிட்ட காலகட்டத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்தி களையும் அதன் முழுமையையும் அறிந்துகொள்ள முடியும்.

வகைமை நோக்கிலான தொகுப்பு முறைமைகள்

தமிழில் கதைப்பாடல்களை வகைப்படுத்தும் போக்கு நா.வானமாமலை, செ. அன்னகாமு போன்றோரிடமிருந்து தொடங்குகின்றன. நா. வானமாமலை (1961) கதைப்பாடல்களை இதிகாசத் துணுக்குகள், கிராம தேவதைகளின் கதைகள், சமூகக் கதைகள், வரலாற்றுக் கதைகள் என்று நான்கு வகையாகப் பகுத்துக் குறிப்பிடுகின்றார். செ.அன்னகாமு (1966) கதைப்பாடல்களைப் புராண கதைப்பாடல், சரித்திரக் கதைப்பாடல், வீரஞ்சார்ந்த கதைப்பாடல், காதல் கதைப்பாடல் என்று பகுக்கின்றார். கதைப்பாடல்களை வகைப்படுத்தும் போக்கு இவர்களைத் தொடர்ந்து மு.அருணாசலம், சோமலெ, கோ. கேசவன் பூ. சுப்பிரமணியம், சு. சண்முகசுந்தரம் வரையிலும் அவரவர்களின் தேவைக்கேற்ப வகைப்படுத்திக் கூறுகின்றனர்.

கதைப்பாடல்கள் வகைப்படுத்தப்படும் நோக்கில்தான் தொகுக்கப்பட்டிருக்கின்றன என்பதும் இங்கே கவனிக்க வேண்டியவை. நா.வானமாமலை வகைப்படுத்திய அடிப்படையிலேயே அவரால் அறியப்பட்ட கதைப்பாடல்களின் குறிப்புகளைக் கொடுக்கின்றார். கதைப்பாடல்கள் குறித்து விளக்கமுறையில் அதன் அமைப்பு, வரலாற்று நம்பிக்கைகள் வகைமைகள் குறித்து ஓர் ஆராய்ச்சி நூலை மு. அருணாசலம் Ballad Poetry (1971) என ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். இந்நூலில் கதைப்பாடல்களை ஒன்பது விளக்கங்களாகக் குறிப்பிடுகின்றார். அவை புத்தார்வ கற்பனை கதைப்பாடல், வரலாற்றுக் கதைப்பாடல், புராண கதைப்பாடல், சமூகக் கதைப்பாடல், தத்துவக் கதைப்பாடல், இன்பியல் கதைப்பாடல், சமணர் கதைப்பாடல், முஸ்லீம் கதைப்பாடல் கிறித்துவக் கதைப்பாடல் என்று வகைப்படுத்துகின்றார். வகைப்படுத்தியதின் அடிப்படையில் வகைப்பாடல்களின் பட்டியலை நூலின் இறுதியில் 171 அடைவாக நூல்களைக் கொடுத்தார். வகைமை நோக்கிலேயே இக்கதையை இந்நூலில் ஆராய்ந்திருந்தார். மு. அருணாசலத்திற்கு முன்பு கதைப்பாடல்கள் ஒன்றைப் பதிப்பித்து ஆராய்ச்சிக் கட்டுரையையும் எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதியிருந்தார். நா.வானமாமலை (1960) கதைப்பாடல்களைப் பதிப்பித்ததோடு விரிவானதொரு ஆராய்ச்சியுரையை ஒவ்வொரு கதைப்பாடலுக்கும் எழுதியிருந்தார் தான் நடத்திய 'ஆராய்ச்சி' இதழில் தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவுகள் (1971) என்னும் தலைப்பில் கட்டுரையும் எழுதினார். பிறரையும் எழுதத் தூண்டினார். நா.வானமாமலை தான் பதிப்பித்த சில கதைகளின் சுருக்கத்தைக் கட்டுரை யாகவும் (சின்னத்தம்பி வில்லுப்பாட்டு) தாமரையில் 1959 இல் எழுதியிருந்தார்.

1980க்குப் பிறகு கதைப்பாடல் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் மேலே குறிப்பிட்ட அறிஞர்களின் ஆராய்ச்சி முறைமையை அடியொற்றியே கதைப்பாடல்களை வகைப் படுத்தியும் தொகுத்தும் ஆராய்ந்தனர். நா.வானமாமலை, மு.அருணாசலம் ஆகியோரின் வகைப்படுத்தலைக் கருத்தில் கொண்டு கோ.கேசவன் ஏழு வகைகளாகப் பகுத்துக் கூறுகிறார். புராணக்கதை, புராண சார்புகதை, தெய்வப் புனைகதை என்றும் புத்தார்வ கற்பனைக் கதை, சமூகக் கதை, வரலாற்றுக் கதை, இலக்கிய புராணக் கதை என்று பிரிப்பதைப் பார்க்கலாம். சு. சண்முக சுந்தரம் கதைப்பாடல்களைப் புராணம் தொடர் பானவை, வரலாற்றுத் தொடர்பானவை, சமூகம் தொடர்பானவை என்று மூன்றுவகையில் கூறுகின்றார். கதைப்பாடல்களை வகைப்படுத்தும் முறைமையில் ஒவ்வொருவரும் வேறுபட்டே காணப்படுகின்றனர். கதைப்பாடல்களை வகைப்படுத்தும் அளவிற்கு கூட, அவரவர்களின் காலகட்டத்தில் வெளி வந்துள்ள அறியப்பட்ட கதைப்பாடல்களைத் திரட்டித் தொகுத்துக் கொடுக்கும் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் நிகழவில்லை என்றே கூறலாம்.

சு. சண்முகசுந்தரம் ஆய்வு மாணவராக இருந்த காலகட்டத்திலேயே கதைப்பாடல்களைக் கள ஆய்வின் மூலமாகத் திரட்டிப் பதிப்பிக்கும் செயலில் ஈடுபட்டார். கதைப்பாடல்கள் சுவடிப்பதிப்பு / கள ஆய்வுப் பதிப்பு என இரு நிலைகளில் இருந்தும் பதிப்பிக்கும் போக்கு உருவானது. பழயனூர் நீல நாட்டுப்பாடல் (1978) இல் தொகுப்பு சண்முகப்பிரகதம், தேனாலை பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. மயிலேறிப் பாடிய மெச்சும் பெருமாள் பாண்டியன் கதையும் (வில்லுப்பாட்டு) இப்பதிப்பகத்தாலே வெளியிடப் பட்டது. ஆரம்ப காலங்களில் சு.சண்முகசுந்தரத்தின் கதைப்பாடல்கள் கொடுமுடி சண்முக பிரகதம் என்பவரே பதிப்பித்துள்ளார். அக்கதைப்பாடல்கள் 'கொங்கு வெளியீடு' என்று வெளிவந்துள்ளன. 1985இல் பூம்புகார் பிரசுர பதிப்பகம் நீலிக்கதை, தேசிங்குராஜன் கதை, மதுரை வீரன் கதை ஆகியவற்றைப் பதிப்பித்திருந்தது. இதனால் தொடர்ந்து சு.சண்முகசுந்தரம் காவ்யா, தன்னானே போன்ற சொந்தப் பதிப்பகத்தின் மூலமாகத் தனது கதைப்பாடல்களையும் பிறரின் கதைப்பாடல் களையும் பதிப்பித்து வந்துள்ளார் / வருகின்றார். 2001 இல் 'ஐந்து கதைப்பாடல்களைத் திரட்டி ஒரே நூலாகவும் கொண்டு வந்துள்ளார்.

கதைப்பாடல்கள் முதல்பதிப்பு தொடங்கி காலப்போக்கில் அடைந்துவரும் மாற்றங்களை ஆராய்ந்து அறிவதும் அவசியமாகும். ஒரே கதைப்பாடல் வேறு பதிப்பகத்தால் பதிப்பிக்கப் படும்போது 'முதற்பதிப்பு' என்ற அடையாளத்தோடு வெளிவருகின்றது. நகரப்பாடல்களைப் பதிப்பிப்பதில் ஆர்வம் காட்டிய பல பதிப்பகங்கள் காலப் போக்கில் மறைந்து போனதையும் காணலாம். அடையாளம் காண்பது வரலாற்று ஆய்வாளர்களான நமது கடமையாகும். (இது கதைப்பாடலுக்கு மட்டுமன்று. அரிய நூல்களைப் பதிப்பிப்பதில் ஈடுபட்ட பதிப்பகங்கள் குறித்த தொகுப்பும் நமக்கு அவசியமாகும்)

தனி நபர் முயற்சிகள்: கள ஆய்வு

கதைப்பாடல் பதிப்பு மற்றும் தொகுக்கும் தனிநபர்களின் பங்களிப்பும் கவனிக்கத்தக்கது.

ஆறுமுகபெருமாள் நாடார், ச. முருகானந்தம், தி. நடராசன், கே.ஏ. குணசேரன், ரீ. நசீம்தீன், தாயம்மாள் அறவாணன் ஆகியோரும் கள ஆய்வின் மூலமாகக் கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளனர். ஆறுமுக பெருமாள் நாடார் சுடலைமாடன் சுவாமி கதை, நீலியம்மன் கதை போன்ற கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளார். கள ஆய்வின் மூலமாக சுவடிகளைத் திரட்டுவதும் தன்னிடம் உள்ள சுவடிகளைப் பிறர் பதிப்பிக்கவும் செய்திருப்பது கவனிக்கப்பட வேண்டியவை. நா.வானமாமலைக்கு ஐவர் ராசாக்கள் கதைச் சுவடி கொடுத்திருப்பது இங்கே நினைவு கூறத்தக்கது. தி. நடராஜன் கள ஆய்வின் மூலமாகவும் சுவடியில் உள்ள கதைப்பாடல்கள் வழங்கும் வட்டாரம் சார்ந்த மக்களின் சடங்குகளையும் கருத்தில் கொண்டு பதிப்பித்து கதைப்பாடல் பதிப்பின் முன்னுரையில் விரிவாகக் கூறுகின்றார். உலகுடைய பெருமாள் கதை, வன்னிய மறவன் கதை, கோவலன் கர்ணன்கதை போன்ற பத்துக்கும் மேற்பட்ட நகரப்பாடல்களைப் பதிப்பித்துள்ளார்.

கே. ஏ. குணசேகரன் நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் என்று பத்துக்கும் மேற்பட்ட கதைகளைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். நகர் சார்ந்து வழங்கப்படும் கதைப்பாடல் குறித்து வெளிவந்த இவரது நூல் கவனிக்கத்தக்கது. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நகரத்தில் முக்கியமான சம்பவங்கள் பாடல்களாக அச்சிடப்பட்டன. அதனை 'குஜிலிப் பாடல்கள்' என்று குறிப்பிட்டுள்ளனர். கதைப்பாடல்கள் அச்சிடப்பட்ட வரலாற்றைக் கூறும்போது மு.அருணாசலம் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. இதனைப்பற்றி ஆ.இரா. வேங்கடாசலபதி ஆராய்ச்சி நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். இவ்வகையில் நகர் சார்ந்த கதைப்பாடல்களும் தொகுக்கப்பட வேண்டிய அவசியமுள்ளது. அவ்வாறு தொகுப்பின் ஊடாக நகரத்தில் காலந்தோறும் வந்துள்ள மாற்றங்களையும் வரலாற்றுச் செய்திகளையும் அறிந்துகொள்ள முடியும்.

புதுச்சேரியில் 16.02.1990 இல் 'நாட்டுப்புறக் கதைத் தொகுப்புத் திட்டம்' என்ற கருத்தரங்கைத் தமிழியல் துறை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கட்டுரை வாசித்த கே.ஏ. குணசேகரன் "மாறிவரும் இன்றைய கலாசார முறைகளில் தேவையான மரபுகளை வாழ்வில் உட்கொள்ளவும் நமது பாரம்பரியத்தின் எச்சங்களையும் அடையாளச் சின்னங்களையும் பார்த்து மதிப்பீடு செய்து மறுபரிசிலனை செய்து வாழவும் இளந்தலை முறையினருக்கு நமது மரபு வழிப்பட்ட பாதைகளை அடையாளங்காட்டவும் கதை, கதைப்பாடல்கள் மற்றும் நாட்டுப்புறக்கதை இலக்கியக் கூறுகளைத் தொகுக்கவேண்டிய சமூகத்தேவை இன்று நம்முன் உள்ளது" எனக் கூறுவதிலிருந்து தொகுப்பு முயற்சியின் தேவை உணரப்பட்டாலும் அத்தொகுப்பிற்கான செயல்பாடுகள் நிகழ்ந்துள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.

நகர்சார்ந்து கதைப்பாடல்கள் என்று தொகுக்கப் பட்டிருப்பதைப் போன்று வட்டாரம் சார்ந்து உருவான கதைகளைத் திரட்டி தொகுப்பின் ஊடாக எப்பகுதிகளில் மிகுதியாகக் கதைப் பாடல்கள் எழுந்துள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியும். ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு சென்று வழங்கப்படும் கதைகளை இனங்காண முடியும். சான்றாக கேரளத்தில் உள்ள இடுக்கி மாவட்டத்தில் மண்ணின் இன மக்களிடம் 'கோவலன் சரித்திரம்' எனும் கதைப் பாடல் வழங்கப்படுகின்றது. இக்கதை பெரும்பாலும் மதுரையைச் சார்ந்த வழக்காறுகளைக் கொண்டிருப் பதைக் காணமுடிகின்றது.

வாய்மொழியாகக் கதைப்பாடல்கள் சேகரிக்கப் பட்டுப் பதிப்பிக்கத் தொடங்கிய பின்னரும் சுவடிகளில் இருந்து பதிப்பிக்கும் பணியும் தொடர்ந்து நிகழ்ந்தது. சுவடிகளைச் சேகரித்து அட்டவணைகளை நிறுவனங்கள் (கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், ஆசியவியல் நிறுவனம் மற்றும் பிற) வெளியிட்டிருந்தன. நிறுவனத்தில் பணியாற்றிய அறிஞர்கள் சுவடிகளில் இருந்து தேர்வு செய்து கதைப்பாடல்களைப் பதிப்பிக்கும் சூ.நிர்மலாதேவி பதிப்புப்பணி குறிப்பிடத்தக்கவை.

நிறுவனங்கள் : சுவடிப்பதிப்பு:

19ஆம் நூற்றாண்டில் இருந்து 20ஆம் நூற்றாண்டு இடைப்பகுதி வரையிலும் கதைப்பாடல்கள் சுவடிகளில் இருந்து மட்டுமே பதிப்பிக்கப்பட்டது. அவ்வாறு பதிப்பிக்கப்பட்ட கதைப்பாடல்கள் எந்தப் பகுதிகளில் வழங்கப்பட்டவை? அக்கதை வாய்மொழியாக வழங்கப்படுகின்றதா? என்ற ஆய்வுக்குள் எல்லாம் செல்லவில்லை. 1960க்குப் பிறகுதான் நாட்டார் வழக்காற்றியல் துறையின் அவசியமும் கள ஆய்வின் முக்கியத்துவமும் உணரப்பட்டது.

நா.வானமாமலை காலகட்டத்தில் இருந்துதான் சுவடிக்கும் கள ஆய்விற்குமான தொடர்பு முக்கியத்துவம் பெற்றது. பதிப்புச் சூழலோடு சுவடிகள் சேகரிக்கும் போக்கும் தமிழ்ச்சூழலில் உருப்பெற்றது. சென்னைப் பல்கலைக்கழக கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சரஸ்வதி மஹால்,

ஆசியவியல் நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், கேரள கீழ்த்திசை சுவடிகள் நூலகம் போன்றவை சுவடிகள் குறித்த அட்டவணைகளை வெளியிட்டிருந்தது. இந்நிறுவனப் பின்புலத்தில் தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் பணியாற்றிய ஆ. தசரதன், மார்க்கண்டேயன் கதைப்பாடல், முப்பாரதிஅம்மன் கதைப்பாடல், ஒட்டக்கார சுவாமி கதைப்பாடல் போன்ற பத்துக்கும் மேற்பட்ட கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளார்.

வலங்கை சான்றோர் கதைப்பாடலைப் பதிப்பித்ததோடு ஆ. தசரதன் தமிழ்க் கதைப் பாடல்கள் சுவடிகளில் வலங்கையர் குறித்த வரலாற்று ஆய்வினைச் செய்தார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சூ. நிர்மலாதேவி சின்னத்தம்பி கதை, முத்தம்மன் கதை, கோவலன் கதை எனப் பத்துக்கும் மேற்பட்ட கதைப் பாடல்களைப் பதிப்பித்திருந்தார். இரா. வசுமதியால் குசலவர் சுவாமி கதைப்பாடல், த.பூமிநாகநாதனால் அமிர்த மதன கூத்து போன்றவை சுவடிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்டவையாகும். கதைப்பாடல்கள் குறித்து ஆராய்ச்சி நூலை மு. அருணாசலத்திற்குப் பிறகு சு.நா.பெருமாள் தமிழில் கதைப்பாடல் (1987) என்னும் தலைப்பில் எழுதியிருந்தார். இதனை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமே வெளியிட்டுள்ளது. இப்பதிப்புகள் சுவடி குறித்த தகவல்களை எல்லாம் குறிப் பிட்டதோடு கதைப்பாடல் குறித்த ஆராய்ச்சி யுரைடன் கூடிய பதிப்புகளாக வெளிவந்தன.

1990க்குப் பிறகு கதைப்பாடல்கள் பதிப்பில் ஏ.என்.பெருமாள், ஆ. சிவசுப்பிரமணியன், ச.முருகானந்தம் சிவ. விவேகானந்தன், நேச. ஸ்டீபன் சாம் மற்றும் பலர் ஈடுபட்டனர். ஏ.என். பெருமாள் குமரி மாவட்டத்தில் வில்லுப்பாட்டாக வழங்கப்பட்ட சேர்வைக்காரன் கதைப்பாடலை 1988 இல் பதிப்பித்திருந்தார். ஆ. சிவசுப்பிரமணியம் பூச்சியம்மன் வில்லுப்பாட்டு எனும் கதைப்பாடலைக் கள ஆய்விலிருந்து திரட்டி 1989 இல் பதிப்பித் திருந்தார். ச. முருகானந்தம் திண்டுக் கல்லுக்கு அருகே உள்ள மலையபுரம் எனும் ஊரில் ஆரவல்லி சூரவல்லி கதைப்பாடல், மன்னன் சின்னாண்டிக் கதைப்பாடல், அழகுத்தேவர் கதைப்பாடல் ஆகிய மூன்றையும் தனித்தனியாக 1991 இல் பதிப்பித்திருந்தார்.

நேச. ஸ்டீபன் சாம் நீலோடு நீலம் பொருத்திய நீலமாக்கரசி கதையை வாய்மொழியாக மீனவர்களிடமிருந்து திரட்டிப் பதிப்பித்திருந்தார். கடல்சார்ந்து வாழும் மக்களின் நம்பிக்கைகள் சடங்குகள் மற்றும் பல அரிய செய்திகளை இக்கதைப்பாடல் கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. மேலும் இவரால் திரட்டப்பட்ட நகரப் பாடல்களாகப் பிரம்மரசர் கதை, பிள்ளத்து கடம்பனார் கதை போன்றவற்றையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். இக்கதைப்பாடல் எழுத்து வடிவம் பெறாமலே இருந்தவை. இது போன்று பல கதைகள் வாய்மொழியாகவே வழங்கப்பட்டு அழிந்து போகும் நிலையில் உள்ளவை மிகுதி. அவற்றையெல்லாம் கேட்டறிந்து தொகுக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.கதைப் பாடல் பதிப்பில் தனிப்பட்டவர்களின் செயல் பாடுகளை இங்கே முழுமையாகக் கூறிவிடுவதென்பது சாத்தியமற்றது. இருப்பினும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருப்பதிலிருந்து சுவடிகளில் பதிப்பிக் கப்படாதவையும் கள ஆய்வில் வாய்மொழியாகத் திரட்டப்பட்டு பதிப்பிக்கப் படாதவையும் மிகுதி யாகவே உள்ளன. அவ்வாறு பதிப்பிக்கப்படாமல் இருப்பதை அழியும் முன் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். பதிப்பு முயற்சியில் ஈடு பட்டவர்கள் பதிப்பிக்கப்படாமல் இருப்பவற்றைச் சுட்டிக்காட்டுவதோடு அவற்றைப் பிறரால் பதிப் பிக்க முயற்சி மேற்கொள்வதும் அவசியமாகும்.

வில்லிசையில் தென்தமிழ்நாட்டில் பாடப்படும் கதைப்பாடல்களின் பட்டியலைச் சு.நா.பெருமாள் (1997) இதிகாசம் தொடர்பானவை, புராணத் தொடர்பானவை வரலாற்றுத் தொடர்பானவை, சமூகம் தொடர்பானவை என்று வகைப்படுத்தி அவற்றில் பதிப்பிக்கப்பட்டவை, படாதவை என்று பிரித்துக் காட்டுகின்றார். அவற்றில் 40 கதைகள் மட்டுமே பதிப்பிக்கப்படாதவை என்றும் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இப்பட்டியல் கதைப்பாடல்களின் எண்ணிக்கை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரே கதையின் பல வடிவங்கள்

ஒரே கதைப்பாடலை வெவ்வேறு பதிப்பகங்கள் பதிப்பித்திருக்கும் வரலாறு ஒருபுறமிருக்க ஒரே கதைப்பாடல் வெவ்வேறு வட்டாரம் சார்ந்து மாற்றமடைந்து வழங்கப்படுவதையும் அந்தந்தப் பகுதி மக்களின் நம்பிக்கைகளை உட்கொண்டிருப் பதையும் காணலாம். இதற்கு கோவலன் கதை, நல்லதங்காள் கதை, கட்டபொம்மு கதை போன்றவையே சான்றாக அமைகின்றது. (இக்கட்டுரையில் கோவலன் கதை மட்டும் சான்றாக எடுக்கப் பட்டுள்ளது) புகழேந்திப் புலவரால் எழுதப்பட்ட கோவலன் கதை பல பதிப்புகள் வெவ்வேறு பதிப்பகங்களால் அச்சாகியுள்ளது. இச்சூழல் ஒருபுறமிருக்க

கோவலன் கதை குமரி மாவட்டம், மதுரை, பூம்புகார், இடுக்கி போன்ற பகுதிகளில் எல்லாம் வெவ்வேறு பெயர்களில் சிற்சில மாற்றங்களுடன் அம்மக்களின் வழக்காறுகளுக்கேற்ப வழங்கப் படுவதைக் காணலாம். தமிழகத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட கண்ணகி தொடர்பான கதை வழங்கப்படுகின்றது. இவை தவிர்த்து ஈழத்திலும் கேரளத்திலும் கண்ணகி கதைகள் வழங்கப்படுவதைக் காணமுடிகிறது.

ஈழத்தில் வழங்கப்படும் கண்ணகி வழக்குரை, குறிஞ்சிப்பாட்டு போன்றவற்றை மட்டும் கதைப் பாடல்கள் பட்டியலில் நம்மவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். ஈழத்தில் பத்துக்கும் மேற்பட்ட கண்ணகி கதைகள் வழங்கப்படுகின்றன. இக்கதை மட்டுமன்றி ஈழத்தில் இருந்து பல கதைப்பாடல் களைத் திரட்டி ஆய்வு செய்துள்ளேன்.

தமிழகத்தில் மட்டும் புகழேந்திப் புலவரின் கோவலன் கதை (1973), தி. நடராசன் பதிப்பித்த கோவலன் கண்ணகி கதை (1979), பீ. நசீம்தீன் பதிப்பித்த கோவலன் கதை (2003), தாயம்மாள் அறவாணன் பதிப்பித்த கண்ணகி கோவலன் மாத நல்லி கதைப்பாடல், கோ.கே.நாராயணசாமி பதிப்பித்த மாதவி கூத்து (1986) என நீண்டதோர் பட்டியலைக் குறிப்பிடலாம். ஒரே கதை வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடம் சென்றிருப்பதின் ஊடாக அக்கதை பெற்றிருக்கும் செல்வாக்கையும் அறியலாம்.

கட்டபொம்மு கதைப்பாடல்கள் குறித்து விரிவான ஆராய்ச்சியை ச.கு.ரவி (2003) நிகழ்த்தியுள்ளார். இதுபோன்றே புகழேந்திப் புலவர் எழுதிய நல்லதங்காள் கதைப்பாடலையும் நல்லதங்காள் தோல்பாவைக் கூத்து, நல்லதங்காள் நாடகப்பிரதி மூன்று மூலங்களையும் தொகுத்து ஆராய்ச்சி முன்னுரையுடன் அ.கா.பெருமாள் (2004) பதிப்பித்துள்ளார். மேலும் ஒரே கதைப் பாடல் தொடர்பான வெவ்வேறு பிரதிகளையும் திரட்டி ஒரே தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும். அத் தொகுப்பின் ஊடாக அக்கதை தொடர்பான தனித்தன்மைகளையும் அதன் வரலாற்றையும் அறிந்து கொள்ள வழிவகுக்க வேண்டும். கதைப் பாடல்கள் குறித்த ஆய்வுகளும் மக்களிடத்தில் அதிகமாக அறியப்பட்ட கதைகள் குறித்தே வந்துள்ளன. அதற்கு முக்கிய காரணமாக இருப்பது வகைப்படுத்தும் நோக்கில் கதைப் பாடல்கள் சிலவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு ஆய்வு செய்வதேயாகும்.

கதைப்பாடல்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகவே காணப் படுகின்றது. புகழேந்திப் புலவரின் கதைகளில் கூறப்படும் நம்பிக்கைகள் சடங்குகள் (கோவலன் கதை, நல்லதங்காள்) வட்டாரம் சார்ந்து வழங்கப்படும் கதைகள் (மொழி, பழக்கவழக்கம்) ஒரு கதையின் தொடர்ச்சி பிற கதைகளில் இடம்பெறுதல் (ஐவர் ராசாக்கள் கதை, மெச்சும் பெருமாள் கதை, வீணாதிவீணன் கதை) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான கதைப்பாடல்கள் எல்லாம் தொகுக்கப்படுவதின் ஊடாகவே ஒப்பீட்டு நோக்கில் ஆராய்வதற்கும் நான்கு நூற்றாண்டு கால வரலாற்றை அறிவதற்கும் வழிவகுக்கும்.

அடைவின் அவசியம்

நாட்டார் வழக்காற்றியல் துறையில் ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு நாட்டுப்புறவியல் நூலடைவு (1988) எனும் சு. சக்திவேலின் தொகுப்பு நூல் முக்கியமான ஆவணமாகத் திகழ்கிறது. 1988 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை வெளிவந்த ஆய்வுகள், கட்டுரைகள் ஆகியவற்றை அவரால் முடிந்தவரை தொகுத்துக் கொடுத்திருப்பதைக் காணலாம். இதனைத் தொடர்ந்து நாட்டார் வழக்காற்றியல் துறையால் அடைவு குறிப்பிடப்படும் படியாக உருவாகவில்லை எனலாம்.

1980க்குப் பிறகு நாட்டார் வழக்காற்றியல் குறித்த ஆய்வுகள் விரிவடைந்துள்ளன எனலாம். நாட்டார் வழக்காற்றியலுக்கென்று முழுமையான அடைவு உருவாக்குவது கடினமான காரியம். தாலாட்டு, பழமொழிகள், விடுகதைகள் என்று ஒவ்வொரு கூறுக்கும் அடைவு செய்யவேண்டிய அளவிற்குத் தேவையுள்ளது. கி.பி. 16ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி 19ஆம் நூற்றாண்டு வரையிலும் அதன்பிறகும் தொடர்ச்சியைக் கொண்டுள்ள கதைப்பாடலுக்கென்று ஓர் அடைவு உருவாக்கவேண்டிய அவசியமுள்ளது. அச்சு ஊடக வருகைக்குப் பின் பல கதைப்பாடல்கள் அச்சுவாகனம் ஏறியுள்ளதைப் பதிப்பு வரலாறே நமக்கு உணர்த்துகின்றது.

- கதைப்பாடல்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதைக் கருத்தில் கொண்டு வட்டாரம் சார்ந்து கதைப்பாடல்களைத் தொகுக்கலாம்.

- இதுவரையிலும் பதிப்பிக்கப்பட்ட கதைப்பாடல்களின் மூலத்தைப் பல தொகுதிகளாகக் கொண்டு வரலாம்

சுவடியில் இருந்து பதிப்பிக்கப்பட்டவை, கள ஆய்வில் இருந்து திரட்டிப் பதிப்பிக்கப்பட்டவை எனத் தனித்தும் தொகுப்பு கொண்டு வரலாம்.

- தமிழில் பாரதக் கதைகளுக்கென்று தனித்தொகுப்பு கொண்டு வரலாம்.

- வெவ்வேறு வடிவங்களில் வழங்கும் ஒரே கதையை முழுமையாகத் திரட்டிப் பதிப்பிக்கலாம்.

பதிப்பிக்கப்படாமல் சுவடிகளில் இருக்கும் கதைப்பாடல்களையும் கள ஆய்வில் இருந்து திரட்டப்பட்ட / திரட்டவேண்டிய கதைப்பாடல் களையும் அறிந்து கொள்வதற்குக் கதைப்பாடல்கள் தொகுப்பு முயற்சிகள் அவசியமானதாகும். மேற்கொண்டு கதைப்பாடல்களில் நிகழ்த்தப்பட வேண்டிய ஆய்வுக் களங்களையும் அறிந்துகொள்வதற்குத் தொகுப்புநூல் அவசியமான ஒன்றாகும்.

(இதுவரையிலும் பதிப்பில் வந்துள்ள / அறியப்பட்டுள்ள கதைப்பாடல்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இவை முழுமையானதன்று; தொட்டுக்காட்டும் முயற்சியே. இக்கட்டுரைக்காக சேகரிக்கப்பட்டவை மட்டுமே. கதைப்பாடல் குறித்து ஆய்வு செய்பவர்களுக்கு கதைப்பாடல் தொகுப்பின் அவசியத்தை உணர்த்தவே இத்தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன)

பார்வை நூல்கள்

1. தமிழர் வரலாறும் பண்பாடும், நா. வானமாமலை, 1966, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.
2. நாட்டுப்புற இலக்கிய வரலாறு, சு. சண்முகசுந்தரம், 1980, மணிவாசகர் நூலகம்.
3. காத்தவராயன் கதைப்பாடல், நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக்கழகம், 1971.
4. ஐவர் ராசாக்கள் கதை நா. வானமாமலை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1974.
5. Ballad Poetry - M. Arunachalam. Gandhi Vidyalayam, 1976.
6. நாட்டுப்புற இயல் ஆய்வு சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், 1983.
7. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் தே. லூர்து, பாரிவேள் பதிப்பகம், 1981.
8. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் தே. லூர்து, நாட்டார் வழக்காற்றில் ஆய்வு மையம், 2000.
9. நாட்டுப்புறவியல் நூலடைவு சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், 1988.
10. தமிழில் கதைப்பாடல் அ.நா. பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
11. பூச்சியம்மன் வில்லுப்பாட்டு ஆ.சிவசுப்பிரமணியம், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், 1989.
12. தமிழில் நூல் தொகுப்புக் கலை சுந்தர சண்முகனார், பாரிநிலையம், 1972.
13. நாட்டுபுறவியல் கட்டுரைகள் கோ. கேசவன், புதுமைப்பதிப்பகம், 1987.
14. அல்லி கதை இ. சுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகம், 1989.
15. வலங்கைச் சான்றோரும் சோழரும் ஆ. தசரசன், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், 1995.
16. நல்லதங்காள் அ. நா. பெருமாள், தன்னானே 2004.
17. வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்கள் ச.இரவி. தன்னானே, 2003.
18. நாட்டுப்புறவியல் சிந்தனைகள்அ.கா. பெருமாள், முருகன் பதிப்பகம், 1996.
19. கதைப்பாடல்களில் இடைக்காலம் சமுகம் வே. சுவாமிநாதன் தி. பார்க்கர், 2003.
20. வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை அறிமுகமும் ஆய்வுகளும் ஆறு. இராமநாதன், தமிழ்ப்பல்கலைக் கழகம், 1988.
21. கோவலன் சரித்திரம் பீ. நீமிதீன், அன்னம் பதிப்பகம், 2001.
22. நகர் சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் கே. ஏ. குணசேகரன், அன்னம் பதிப்பகம், 1988.

மு. அருணாசலத்தைத் தொடர்ந்து அ.நா. பெருமாள் இ. சுந்தரமூர்த்தி தரும் கதைப்பாடல்கள் : 182

1. அசுவமேதயாகக் கதை
2. அஞ்சன சோரன் கதை
3. அண்ணன்மார் சுவாமி கதை
4. அபிமன்னன் சுந்தரிமாலை
5. அமிர்தவல்லி கதை
6. அரவான் அம்மானை
7. அரிச்சந்திரன் கதை
8. அல்லியரசாணி மாலை
9. அழகேசராசன் கதை
10. அன்னா பொன்னரு கதை
11. அனந்தன்காடு சரித்திரம்
12. ஆத்தி மாடன் கதை
13. ஆமையம்மானைக் கதை
14. இசக்கியம்மன் கதை
15. இந்திராயன் படைப்போர்
16. இராம கதை
17. இராமர் அம்மானை
18. இராமப்பய்யன் அம்மானை
19. இராமாயணப் பாட்டு
20. ஈனமுத்துப் பாண்டியன் கதை
21. உச்சிப் படைப்போர்
22. உச்சினி மாகாளி அம்மன்கதை
23. உத்திர கதை
24. உருக்குமாங்கதன் கதை
25. ஏணியேற்றம்
26. ஐவர் ராசாக்கள் கதை
27. ஒசியத்துக் கதை

28. கட்டப்பொம்மன் கதைப்பாடல்
29. கட்டப்பொம்மன் கூத்துப்பாடல்
30. கட்டையேறும் பெருமாள் கதை
31. கண்ணகி அம்மன் மாஞ்சல்
32. கபாலக்காரன் கதை
33. கர்ண மகாராஜன் சண்டை
34. கருங்கிடாக்காரன் கதை
35. கன்னடியன் படைப்போர்
36. கன்னிமார் கதை
37. காஞ்சி மன்னன் அம்மானை
38. கால கன்னியம்மன் கதை
39. காந்தி மகான் கதை
40. காமாட்சி அம்மன் தலமகிமை அம்மானை
41. காலசாமி கதை
42. கான்சாகிபு கதை
43. கிருஷ்ணன் கதை
44. கீசகன் கதை
45. குசலவ வாக்கியம்
46. குசலவன் கதை
47. குசலவர் அம்மானை
48. குயில் ராமாயணம்
49. குரக்காளஞ்சி கதை
50. குருசேத்திர மாலை
51. குசோமி கதை
52. குலை வாழை இசக்கிக் கதை
53. கூற்றை உதைத்த கதை
54. கோமதி அம்மன் தலமகிமை
55. கோவலன் கதை
56. கௌதலமாடன் கதை
57. சங்கிலி மாடன் கதை
58. சதமுக ராவணன் கதை
59. சந்தன மகாராசன் கதை
60. சந்தி மாடன் கதை
61. சராசந்தாதி அசுவமேதக் கதை
62. சாரங்கதரன் கதை
63. சாவித்திரி பதம்
64. சாஸ்தா கதை
65. சித்திரபுத்திரன் கதை
66. சித்திரலேகா கதை
67. சிந்தாமணி மாலை
68. சிறுத்தொண்டன் கதை
69. சின்னத்தம்பி கதை
70. சின்ன நாடான் கதை
71. சிகுணன் கதை
72. சுடலை மாடன் கதை
73. சுடலையாண்டி கதை
74. சுந்தரி கதை
75. சூரபத்ரன் கதை
76. செங்கிடாக்காரன் கதை
77. செய்தத்துப் படைப் போர்
78. சேத்திரபாலன் கதை
79. சேர்வைக்காரன் கதை
80. சோழன் பசுக்கதை
81. ஞான அம்மானை
82. ஞான சௌந்தரியம்மாள்
83. தக்கன் கதை
84. தசரதாரமன் கதை
85. தடிவீரன் கதை
86. தமிழறி மடந்தை கதை
87. தர்மாம்பாள் குறம்
88. திவான் வெற்றி
89. துருபத மகாராஜன் கதை
90. துரௌபதி சுயம்வரம் கதை
91. தேசிங்குராஜன் கதை
92. தேவமாதா கதை
93. தோட்டக்காரி அம்மன்கதை
94. நடிசு படைப் போர்
95. நல்லதங்காள் கதை
96. நளன் கதை
97. நளச்சக்கரவர்த்தி அம்மானை
98. நளாயினி கதை
99. நாசி கேது புராணக்கதை
100. நாலுமந்திரி கதை
101. நீலிகதை
102. பகவதியம்மன் கனவுமாலை
103. பச்சையம்மன் கதை
104. பஞ்சபாண்டவர் கதை
105. பத்திரகாளியம்மன் கதை
106. பலவேசக்காரன் கதை
107. பவளக்கொடிமாலை
108. பாமா ருக்மணி கதை
109. பார்வதியம்மன் சோபனம்
110. பாரதக் கட்டியம்
111. பாரதம் அசுவமேதக் கதைப்புராணம்
112. பாரிசேண குமாரர் கதை
113. பால நாகம்மாள் கதை
114. பிச்சைக்காலன் கதை
115. புலந்திரன் தூது
116. புலந்திரன் களவு மாலை
117. புருவராயன் கதை
118. புரூரவ சக்கரவர்த்தி கதை
119. பூம்புகார் பத்தினி
120. பூரண மகரிஷிக் கதை
121. பூலங்கொண்டாள் கதை
122. பூலுத்தேவன் சிந்து
123. பூவனேந்திரன் சிந்து
124. பெரியண்ணன் சின்னண்ணன்
125. பெருமாள் சாமிகதை
126. பெலமாடன் கதை
127. பேசா மடந்தை கதை
128. பொன்னிறத்தாள் கதை
129. போஜராகன் அம்மானை
130. மகாபாரத தலப்பாட்டு
131. மதன காமராஜன் கதை
132. மதுரை வீரசுவாமி கதை
133. மந்திர மூர்த்திக்கதை
134. மம்பட்டியான் கதை
135. மயில் ராவணன் கதை
136. மரிக் கருத்தாள் அம்மானை
137. மரியாதை ராமன் கதை
138. மருதுபாண்டியர் கதை
139. மன்மதன் கதை
140. மன்னன் கருங்காலிகதை
141. மாகாளி அம்மன் கதை
142. மாசான சாமிகதை
143. மார்க்கண்ட தவுசு கதை
144. மாரியம்மன் கதை
145. மாருதி விஜயம்
146. மாலையம்மை கதை
147. மீனாட்சி திக்விஜய அம்மானை
148. முத்தாரம்மன் கதை
149. முத்துப்பபட்டன் கதை
150. முனியம்மான் கதை
151. முனீஸ்வரன் கதை
152. மூட்டை சுமந்த முடிமன்னர் கதை
153. மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை
154. மைராவணன் கதை
155. யாத்தி காமம்
156. ராமாயணக் கதை
157. லலிதாம்பாள் சோபனம்
158. வண்டி மலைச்சி கதை
159. வயிரவ நாதன் கதை
160. வல்லிரக்கன் கதை
161. வலங்கையர் கதை
162. வல்லாள மகாராசன் கதை
163. வள்ளியம்மன் கதை
164. வன்னியடி மறவன் கதை
165. வன்னிராசன் கதை
166. வாலிமோட்சக் கதை
167. விநாயக சதுர்த்தி கதை
168. விநாயக புராணக் கதை
169. விருது கதை
170. வீர குமரன் கதை
171. வீணாதி வீணன் கதை
172. வீரதுங்கராசன் கதை
173. வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்
174. வீரயோக வசந்தராயர் கதை
175. வெங்கலராசன் கதை
176. வெட்டும் பெருமாள் கதை
177. வெள்ளைக்காரச் சாமி கதை
178. வேதப்பொருள் அம்மானை
179. வேதாகமப் புராணக் கதை
180. வேதாளக் கதை
181. வைகுண்டக் கதை
182. ஜகதீஸ்வரி அம்மன் கதை

மு. அருணாசலம் மட்டும் குறிப்பிடுபவை : 28

1. அபிமன்னன் சுந்தரி மாலை
2. அத்வைத கொட்டை முத்துக்கும்மி
3. அனந்தாயி கதை
4. டேவிட் அம்மானை
5. காந்தி சரித்திர கும்மி
6. காகுந்தன் கதை
7. கபிலர் அகவல்
8. கதர் விற்பனை
9. மாரியம்மன் தாலாட்டு
10. நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்பியம்
11. கண்ணகி அம்மன் மழைக்காவியம்
12. முருகர் ஒயில் கும்மி
13. பஞ்சபாண்டவர் வைகுண்டக் கும்மி
14. பார்வதி அம்மன் கதை
15. பைசலூர் பதிகம்
16. சின்னமலைக் கும்மி
17. சிரிதனம் சேர்த்த கும்மி
18. சிவகாமி கதைப்பாடல்
19. சுடலைமாடன் கதை வில்லுப்பாட்டு
20. சுகாதார இடம்
21. திருமண வாழ்த்து
22. உலகநீதி
23. வள்ளி அம்மன் கோப்பிப்பத்து
24. வள்ளி அம்மன் கும்மி
25. வள்ளி தேவயானி ஊசல்
26. வேதாந்த அம்மானை
27. வேதாந்தக் கப்பல்
28. வேதாந்தக் குறம்

2. அ.நா. பெருமாள் மட்டும் குறிப்பிடுபவை : 53

1. அடிரியர் அம்மானை
2. அரிச்சந்திரன் அம்மானை
3. அனகர் பெருமாள் கதை
4. ஆரவல்லி சூரவல்லி கதை
5. இசக்கி கதை
6. இபுனுயந்தன் படைப்போர்
7. இரவுசுல்கூடல் படைப்போர்
8. ஒட்டன் கதை
9. கஞ்சன் அம்மானை
10. கட்டப்பொம்மன் வில்லுப்பாட்டு
11. கண்ணகி அம்மன் ஊர் சுற்றுக் காவியம்
12. சுந்தர் அம்மானை
12a. கந்தபுராணக் கதை
13. கபிலை கதை
14. கருப்பண்ணசாமி கதை
15. காவெட்டி மாடன் கதை
16. கொட்டுக் கதை
17. சதமுருகன் ராவணன் கதை
18. சிவகங்கை கும்மி கதை
19. சிவனனைஞ்சு கதை
20. செலவன் கதை
21. ஞான சௌந்தரி அம்மானை
22. தடி வீரையன் கதை
23. தாதரம்மன் கதை
24. நந்தனார் கதை
25. நீலியம்மன் கதை
26. பகவதி நாச்சியார் திருப்பணிக் களவு மாலை
27. பளிச்சியம்மன் கதை
28. பாசற விலான் கதை
29. பார்வதியம்மன் கதை
30. பெருமாடன் கதை
31. பேச்சியம்மன் கதை
32. மகாபுராண அம்மானை
33. மணியம்மை கதை
34. மருதநாயகம் பிள்ளை கதை
35. மலை வளப்பம் கதை
36. மார்கண்டன் கதை
37. முப்பிடாரி கதை
37a. மாரியம்மன்
38. மூன்றுலகு கொண்ட அம்மன் கதை
39. மேரு மந்தர மாலை
40. லார்டெஸ் மாதா அம்மானை
41. வரங்கன் கதை
42. வல்குன்றி அம்மன் கதை
43. வல்லவர் கதை
44. வன்னியன் கதை
45. வில்வதையம்மன் கதை
46. வீரமாறன் கதை
47. வீராசன் கதை
48. வீரையன் கதை
49. வீரையன் அம்மானை
50. வேதாந்திரக் கப்பல்
51. வேதாந்தக் குறம்

இ. சுந்தர மூர்த்தி (அல்லிகதைப் பதிப்பில்) மட்டும் குறிப்பிடுபவை : 70

1. அகண்டவெளிக்குறம்
2. அண்ணன் சரிதை
3. அந்தோணி அம்மானை
4. அல்லி கதை
5. அனகர் காடு சரித்திரம்
6. அனந்தை கதை
7. ஆதிரையர் அம்மானை

8. கிடைச்சி கதை
9. இராமாயண் ஒடம்
10. இராமாயண சிந்து
11. கட்டபொம்மு பெட்டிவிருத்தம்
12. கண்டிராஜன் ஒப்பாரி
13. கண்ணகியம்மன் குறத்திப்பாட்டு
14. கண்ணகி வழக்குரை
15. கண்ணப்பர் அம்மானை
16. கப்பல் பாட்டு
17. கபில கதை
18. கபில காவியம்
19. கலியுக மகாகாவியம்
20. கள்ளழகர் அம்மானை
21. காகுத்தன் கதை
22. காஞ்சன் அம்மானை
23. காத்தவராயன் கதைப்பாடல்
24. சித்தேரியம்மாள் அம்மானை
25. கிருஷ்ணாவதார அம்மானை
26. குயில்பாட்டு
27. சிவகங்கை அம்மானை
28. சுசில வள்ளல் அம்மானை
29. சுந்தரர் வேடு பறி
30. சூலூர் சுப்பாராவ் சிந்து
31. சொட்டுக்கதை
32. ஞானரத்தினக் குறவஞ்சி
33. டேவிட் அம்மானை
34. தக்கைப்பாட்டு
35. தமிழறியும் பெருமாள் கதை
36. திரௌபதி குறம்
37. தேசிங்குராஜன் அம்மானை
38. நபி அவதார அம்மானை
39. பரசமயக் கோளரியார் அம்மானை
40. பாசவ விலாசன் கதை
41. பாஞ்சாலன் குறிச்சி சண்டை
42. பாஞ்சாலன் குறிச்சி சிந்து
43. பாடும் பரசி கதை
44. பாரத அம்மானை
45. பாரத ஏலப்பாட்டு
46. புவநேந்திரன் அம்மானை
47. பொன்னுமவி மடக்கை
48. மகாபாரத அம்மானை
49. மன்மதன் ஒப்பாரி
50. மன்னன் மாடிப்பன் கதை
51. மாணிக்கவாசகர் அம்மானை
52. மார்க்கண்டேயர் அம்மானை
53. மின்னொளியாள் குறம்
54. முப்பத்திரண்டு பதுமை கதை
55. முலைப்பாட்டு
56. மூவர் அம்மானை
57. ருக்மாங்கதன் அம்மானை
58. ரூத் அம்மானை
59. லூர்து மாதா அம்மானை
60. வல்குன்னி அம்மன் கதை
61. விக்கரமாதித்தன் அம்மானை
62. வித்வான் குறம்
63. விஜயராகவ நாயகர் முலைப்பாட்டு
64. வீமன் கதை
65. வீரய்யன் கதை
66. வேம்பத்தூர் அய்யா அம்மானை
67. வேளாளர் அம்மானை
68. வைகுண்ட அம்மானை
69. ஜீவரத்தினம்
70. ஹித்தாபஸன் கதை

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிக்கப்பட்டவை

1. இராமப்பய்யன் அம்மானை - எஸ்.வையாபுரி பிள்ளை, 1957
2. அல்லி கதை - இ. சுந்தரமூர்த்தி, 1989

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பதிப்பிக்கப்பட்டவை

(சூ. நிர்மலாதேவியால் பதிப்பிக்கப்பட்டவை)

1. சின்னதம்பி கதை
2. உஜ்ஜைனி மாகாளி கதை
3. குருக்குளாஞ்சி கதை
4. வெங்கலராசன் கதை
5. பலவேச சேர்வைகாரன் கதை
6. முத்தாரம்மன் கதை
7. தடி வீர சுவாமி கதை
8. வன்னிராசன் கதை
9. சின்னணைஞ்சான் கதை
10. அரசமுத்துக் கதை
11. கோவலன் கதை
12. தூண்டிமுத்து கதை, 1987

பிறர் பதிப்பித்தவைகள்

1. தேரையர் அந்தாதி - ம, புனிதா, 1995
2. நளன் அம்மானை - கா. பகவதி, 1986
3. தோட்டக்காரி கதைப்பாடல் - வ. அலமேலு, 1995
4. புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை மொ. மருதமுத்து, 1995
5. காத்தவராய நாடகம் - கு. இராஜேஸ்வரி, 1995
6. குசலவர் சுவாமி கதை - இரா. வசுமதி, 1995
7. அமிர்த மதன கூத்து நாடகம் - த. பூமிநாதன், 1996
8. மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல் - அ.ம. சத்தியமூர்த்தி, 1997
9. சின்னபாண்டிக் கதை - அ.ம. சத்தியமூர்த்தி, 1986

நா. வானமாமலை பதிப்பித்தவை :

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

1. கட்டபொம்மன் கதைப்பாடல்
2. வீணாதி வீணன் கதைப்பாடல்
3. காத்தவராயன் கதை
4. முத்துப்பட்டன் கதை

5. வீரப்பாண்டிய கட்டபொம்மன் கூத்து
6. ஐவர் ராசாக்கள் கதை

நா. வானமாமலையால் குறிப்பிடப்படும் கதைகள் :

சுருக்கம்

1. சின்னதம்பி வில்லுப்பாட்டு - தாமரை, 1959
2. வெள்ளையம்மாள் கதை - தாமரை 1959
3. சின்னநாடன் கதை - 1969
4. கௌதலமாடன் கதை - வரலாறும்பண்பாடும் 1989

சரஸ்வதி மஹால் நுலகத்தால் பதிப்பிக்கப்பட்டவை

1. ஆலம்நபி கதைப்பாட்டு - சி. சதாசிவம் 1989
2. மரியாதை ராமன் கதைகள் - ய. மணிகண்டன், 1991
3. இராமய்யன் அம்மானை - நா. இராமச்சந்திரன், 1978

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தால் பதிப்பிக்கப்பட்டவை

1. பெண்ணரசியாள் கதை - கி. ஜெயகுமார், 1995

உ.வே.சா நூல் நிலையத்தால் பதிப்பிக்கப்பட்டவை

1. சீவலமாறன் கதை - எஸ். கே. இராமராஜன், 1985.

தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தால் பதிக்கப்பட்டவை

ஆ. தசரதன் பதிப்பித்தவை

1. மார்க்கண்டேயன் கதைப்பாடல்
2. முப்பிடாரி அம்மன் கதைப்பாடல்
3. அய்யனார் கதைப்பாடல்
4. ஒட்டக்காரசுவாமி கதைப்பாடல்
5. கம்சன் கதைப்பாடல்
6. மாரியம்மன் கதைப்பாடல்
7. ஸ்ரீபத்மநாப சுவாமி கதைப்பாடல்
8. செண்பக நாச்சியார் கதைப்பாடல்
9. பெருமாள்சாமி தம்பிரான் கதைப்பாடல்
10. வலங்கையர் கதைப்பாடல்
11. கபாலகார சுவாமி கதைப்பாடல்
12. அருஞ்சுனை காத்த அய்யனார்

தனிநபரால் பதிப்பிக்கப்பட்டவை

ஆறுமுகப் பெருமாள் நாடார் பதிப்பித்தவை

1. இசக்கியம்மன் கதை
2. சுடலைமாடன் கதை
3. பிச்சைக்காரன் கதை
4. தோட்டக்காரி அம்மன் கதை
5. மாகாளி அம்மன் கதை
6. பழமை நல்லூர் நீலியம்மன் கதை

சு. சண்முகசுந்தரம் பதிப்பித்தவை

1. பழையனூர் நீலி கதை
2. தேசிங்குராஜன் கதை
3. மதுரைவீரன் கதை
4. சோணமுத்து பாண்டியன் கதை
5. சிவராமப் பாண்டியன் கதை
6. ஈனமுத்துப் பாண்டியன் கதை
7. பாலம்மாள் கதை
8. மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை

தி. நடராசன் பதிப்பித்தவை

1. உலகுடைய பெருமாள் கதை
2. குருசாமி கதை
3. வன்னியடி மறவன் கதை
4. கட்டபொம்மு கும்மிப்பாடல்
5. கோவலன் கர்ண்ணகை கதை
6. உடையார் கதை
7. கன்னடியன் போர்
8. பத்திரகாளியம்மன் கதை
9. தம்பிமார் கதை

ச. முருகானந்தம் பதிப்பித்தவை

1. ஆரவல்லி சுரவல்லி மாதரவல்லி கதைப்பாடல்
2. மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்
3. அழகுத்தேவர் கதைப்பாடல்

கே. ஏ. குணசேகரனால் தொகுத்து பதிப்பிக்கப்பட்டவை

1. கருவாய்த்தேவன் கதைப்பாடல்
2. மணிக்குறவன் கதைப்பாடல்
3. அரியலூர் ரயில் விபத்துக் கதைப்பாடல்
4. மைக்கேலம்மாள் கதைப்பாடல்
5. தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடல்
6. முத்துராமலிங்கத் தேவர் கதைப்பாடல்
7. சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்த கதைப்பாடல்
8. கோனார் கதைப்பாடல்
9. வைகை வெள்ளத்துயர் கதைப்பாடல்
10. ஸ்கைலாஸ் கதைப்பாடல்
11. பஞ்சுமில் கதைப்பாடல்

அரு. இராமநாதன் பதிப்பித்தவை

1. பழையனூர் நீலி கதை
2. மதன காமராசன் கதை
3. மரியாதை ராமன் கதை

சு. சக்திவேல் பதிப்பித்தவை

1. அண்ணன்மார் சுவாமி கதைப்பாடல்
2. ஆந்திரமுடையார் கதைப்பாடல்

3. பொன்னிறத்தாள் கதைப்பாடல்
4. புலமாடன் கதைப்பாடல்

சிவ. விவேகானந்தம் பதிப்பித்தவை

1. பிரம்ம சக்தியம்மன் கதை
2. பிரம்ம சந்தியம்மன் பிறவிகள்
3. செங்கிடக்காறன் கதை
4. குருக்கேத்திரன் கதை
5. கிருஷ்ணார்ச்சுன யுத்தம்
6. பார்வதியம்மன் வில்லுப்பாட்டு
7. வலைவீசு காவியம்

நேச. ஸ்டீபன் சாம் பதிப்பித்தவை

1. நிலோடு நிலம் பொருந்திய நீலமாக்காசி கதை
2. பிரம்ராசர் கதை
3. பள்ளத்து கடம்பனார் கதை
4. மன்னன் கருவேந்த இராஜிய பாலன் கதை
5. எங்கும் கலிநீதி அரசியாள் கதை

ஓரிரு கதைப்பாடல்களைப் பதிப்பித்தவர்கள்

1. கண்ணம்மா கதைப்பாடல் - அ. உலகநாதன், 1982
2. சிதம்பரநாடன் கதை - சு. தங்கத்துரை, 1982
3. சிவகங்கை சரித்திர கும்மியும் அம்மானையும் (இரு கதைகள்) - டி. சந்திரசேகரன், 1954
4. பூச்சியம்மன் வில்லுப்பாட்டு - ஆ. சிவசுப்பிரமணியம், 1989
5. வாசமுத்து கதை - கோமதி நாயகம், 1979
6. காமன் கதைப்பாடல் - சோ.வி. இராசகோபால், 1985
7. சேர்வைகாரன் கதை - ஏ. என். பெருமாள், 1988
8. சின்னண்ணன் சின்னச்சாமி கதைப்பாட்டு - இரா பன்னீர்செல்வம், 1981
9. குமாரசுவாமி நாடான் வில்லுப்பாட்டு - ப. யோ. தங்கசாமி, 1994
10. பக்கிரிஷாக்களின் கதைப்பாடல்கள் - கழனியூரன், 1996
11. சந்தனத்தேவன் கதைப்பாடல் - ஒ. முத்தையா, 2004

■